


வருடாந்த அறிக்கை 2022



சமூகத்தின் மிகவும் கவனிக்கப்படாதுள்ள மக்களுடன் இணைந்து பணியாற்றுகின்ற ஒரு வங்கி என்ற வகையில், மனதில் ஒரு நோக்கத்தைக் கொண்டே இவ்வாண்டின் சவால்களை நாம் எதிர்த்து நின்றோம். பொருளாதார அழுத்தங்கள் எவ்வாறிருப்பினும், வசதி குறைந்த எமது வாடிக்கையாளர்களின் இன்னல்களை நாம் கவனத்திற்கொண்ட அதேவேளை, கடினமான, விட்டுக்கொடுப்புகள் மற்றும் முன்மதிமிக்க நிதியியல் முகாமைத்துவம் என்பன ஊடாக வீழ்ந்து விடுவதிலிருந்து காப்பதற்கான வழிமுறைகளை எடுத்தோம்.

ஆண்டின் சவால்களின் விளைவாக, விடாப்பிடியான ஒருமுகப்படுத்தலுடன், நிதியியல் தடைகளுக்கான தீர்வுகளைத் தேடுவதற்கும், சவால்களை வெற்றி கொள்வதற்குமான நோக்கத்துடன், எமது செயற்பணியை நாம் திடப்படுத்தினோம். அதன் தனித்துவமான வாடிக்கையாளர் தளத்தின் தேவைகளைப் புரிந்து கொள்கின்ற ஒரு அணியினர் என்ற வகையில், பெறுமதி அடிப்படையில் அமைந்த உபாயங்கள் ஊடாக, பெறுமதிமிக்க சேவையைத் தொடர்ந்தும் வழங்கி - ஒன்றியாகவன்றி எமது வாடிக்கையாளர்களுடனும், எமது பங்குதாரர்களுடனும் இணைந்து, நாம் பின்னடைவுகளுக்கு மத்தியிலும் சாதனை படைப்போம் என்பதனை உறுதிசெய்தோம்.

அத்துடன், பின்னடைவுகளுக்கு மத்தியிலும், நாம் எவ்வாறு சாதனை படைத்தோம் என்பது, எமது நிதியியல் வலிமையின் அளவினால் தீர்மானிக்கப்பட்டதல்ல: ஆனால், அது, எமது துணிவு மற்றும் மனவுறுதியின் தீவிரம் என்பன மூலம் வரைவிலக்கணம் செய்யப்பட்டதாகும்.



# உள்ளடக்கம்


நோக்கு, பணிநோக்கு மற்றும் பெறுமானம் - 4
2022 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையின் முன்னுரை - 6


## எச்டீஎப்சீ வங்கி பற்றி


இலங்கையின் எச்டீஎப்சீ வங்கி - 10
ஆரம்பம் முதல் '22 வரை - 12
நிதி விபரக் குறிப்பு - 14
நிதிச் சொத்துப் பட்டியல் - 15
பொருளாதார பெறுமதி உருவாக்கமும் விநியோகமும் - 17
நிதி செயல்திறன் சிறப்பம்சங்கள் - 18


## மூலோபாயக் கட்டமைப்பு


பங்குதாரர் இணைவுகளும் ஈடுபாடும் - 22
பொருள் சார்ந்த விடயங்கள் - 29
மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு - 39
வர்த்தக மாதிரி - 42
மூலோபாயக் கட்டமைப்பு - 44


## தலைமைத்துவம்


தலைவரின் செய்தி - 50
பொது முகாமையாளர் / பிநிஅ யின் மீளாய்வு - 52
சபையின் பணிப்பாளர்கள் - 56
பணிப்பாளர் சபையின் சுய விபரங்கள் - 58
கூட்டுறவு முகாமைத்துவம் - 61
பிரிவுத் தலைவர்கள் - 66
பிராந்திய மற்றும் கிளை முகாமையாளர்கள் - 67


## முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்


வெளிப்புறச் செயற்பாட்டுச் சூழல் - 72
வர்த்தகப் பிரிவுகளும் செயற்திறனும் - 79


மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்:


பங்குதாரர்களின் சிறந்த நலனுக்கான நிதி முகாமைத்துவம் - 83
சேவைகள் வழங்குவதற்கான சமநிலை அணுகுமுறை - 90
எமது பணியாளர்களின் வளர்ச்சிக்கு உதவுதல் - 95
சாத்தியமான எல்லைகளை விஸ்தரித்தல் - 107
தனித்துவமான பெறுமதி உருவாக்கமும் பலப்படுத்தப்பட்ட உறவுகளும் - 112
நிலையான முயற்சிகள் - 121



## கூட்டுறவு ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்


கூட்டுறவு ஆளுகைத் தலைவரின் செய்தி - 126

கூட்டுறவு ஆளுகை - 127

கூட்டுறவு ஆளுகை குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை - 136

இடர் முகாமைத்துவம் - 169

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் அறிக்கை - 179

உள்ளக் கட்டுப்பாடுகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உத்தரவாத அறிக்கை - 181


சபையின் துணைக்குழு அறிக்கைகள்:


சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு - 183

சபையின் நியமனக் குழு - 186

சபை தொடர்பான கட்சிப் பரிவர்த்தனை மறுஆய்வுக் குழு - 188

சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை - 190

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை - 191

பணிப்பாளர்களின் அறிக்கை - 193

பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகியோரின் பொறுப்புடைமைக் அறிக்கை - 197


## நிதி அறிக்கைகள்


நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய அறிக்கை - 200

ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை - 2021 இல் இலங்கை HDFC வங்கியின் பணிப்பாளர் சபைக்கான சுயாதீன உத்தரவாத அறிக்கை - 201

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 203

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமான அறிக்கை - 211

நிதி நிலை அறிக்கை - 212

பங்குகளில் மாற்றம் பற்றிய அறிக்கை - 213

காசுப் பாய்ச்சல் அறிக்கை - 214

கணக்கியல் கொள்கைகள் - 215

நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் - 225


## துணைத் தகவல்கள்


தகவல் பரிமாற்றம் - 270

பெறுமதி கூட்டப்பட்ட அறிக்கைகள் - 273

10 வருட சாராம்சம் - 274

வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பு - 276

பதிலாள் படிவம் - 277

கூட்டிணைப்புத் தகவல்கள் - பின் உள் அட்டை



# நோக்கு

நிலையான வீட்டு வசதி
மற்றும் வாழ்க்கைத் தரங்களை
உறுதிப்படுத்துவதில் முதன்மையான
நிதிப் பங்காளராக இருத்தல்.



# பணிநோக்கு

நிலையான வாழ்க்கைத் தரத்திற்காக நிதித் தீர்வுகளை வழங்குவதற்கு, தொழில்முனைவோரின் பெறுமதி சேர்க்கையில் அர்ப்பணிப்புடன் செயற்படுதல்.

# பெறுமானம்

நெறிமுறைத் தன்மை

சுறுசுறுப்பு

நெகிழ்வுத் தன்மை

பன்முகத் தன்மைக்கு மதிப்பளித்தல்


வெளிப்படைத்தன்மை

# 2022 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையின் முன்னுரை

13ஆவது ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையினைப் பார்வையிடுவதற்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதற்கான வாய்ப்பொன்றாக நாம் இவ் அறிமுகத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றோம்.

தற்போது நீங்கள் வாசிக்கின்ற ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையானது, 2022 ஜனவரி 01 தொடக்கம் 2022 டிசம்பர் 31 வரையான வங்கியின் நிதியாண்டினை உள்ளடக்குவதுடன், ஆண்டு முழுவதும், எமது பணியினை அதாவது, தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் என்ற இரு நோக்குகள் இருந்தும் விரிவாக எடுத்துரைக்கின்றது.

அறிக்கையைத் தொகுக்கின்ற செயன்முறை முழுவதும், நாம் வங்கியின் வருடாந்த முன்னேற்றத்தினை மிகவும் செம்மையாகவும், வெளிப்படையாகவும் எடுத்துரைத்தலை எமது பங்குதாரர்களுக்கு வழங்குவதற்கு ஒவ்வொரு நோக்கிலிருந்தும் அறிக்கையினை மேம்படுத்தும் நோக்குடனும் அணி சேர்ந்திருந்தோம்.




## அறிக்கையினைப் பார்வையிடுதல்

### தொழிற்பாடுகள் பற்றிய கருத்துரை

இவ் அறிக்கையானது, ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையின் கட்டமைப்பின் (www.theiirc.org) தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவாக, ஆண்டின் பணி பற்றிய விரிவான விவரணத்தை வழங்குகின்றது. தொழிற்பாட்டுச் சூழலைத் திசைப்படுத்துவதில் (பேரண்டப் பின்னணி) வங்கியின் உபாயங்கள் மற்றும் நடவடிக்கைகளை உள்ளடக்குவதுடன், இது 2021 ஆம் ஆண்டின் அறிக்கையை ஒத்த தெளிவான கட்டமைப்பினைப் பின்பற்றுகின்ற அதேவேளை, ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடலின் (IR) தேவைப்பாடுகளை நிறைவு செய்கின்றது.

### தேடுவதிலும் இலகுவான உசாவுகை


அறிக்கையின் உள்ளடக்கம் 7 தொடர்புடைய அத்தியாயங்களுடன் கூடிய முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முக்கிய பிரிவுகளின்பால் வாசகர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கும், கட்புல நோக்குகைக்கும் படவுருக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.




## அறிக்கையிடும் எல்லை

அறிக்கையின் நிதியல்லாத தகவல்களானவை, அதன் தொழிற்பாட்டு அபிவிருத்திகள், மனித வள முகாமைத்துவம் தொடர்பிலான பெறுபேறுகள், நிதியியல் முகாமைத்துவம், தொழில் மற்றும் சமூக உறவுகள், புலமை வளங்கள், எமது சுற்றாடல் தாக்கங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. இவ் அபிவிருத்திகளும், பெறுபேறுகளும், வங்கியின் உபாயப் பணிப்புரை, பங்குதாரர் எதிர்பார்க்கைகள், மூலவள ஒதுக்கீடு, தொழிற்படுகின்ற சூழல், வாய்ப்புகள், இடர்நேர்வு முகாமைத்துவம் அத்துடன் ஆளுகை என்பவற்றை அவற்றின் ஒப்பீட்டு முக்கியத்துவத்தின் அடிப்படையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்ட நோக்குகளும், எமது தொழிற்பாடுகளின் முழுமையான கருத்தினை வழங்குவதை இலக்காகக் கொள்கின்ற, பெறுமதி உருவாக்க மாதிரி ஊடாகவும், சுருக்கமாகவும் பிரதிபலிக்கப்பட்டுள்ளன.

அறிக்கையானது, வங்கியின் நிதியியல் கூற்றுகள் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள், உறவுகள், செயலாற்றுகை மற்றும் எதிர்கால வாய்ப்பு என்பனவற்றையும் தன்னகத்தே கொள்கின்றது. நிதியியல் உள்ளீடுகளும், செயலாற்றுகையும், ஏனைய மூலவளங்கள் மற்றும் ஏனைய மூலதனங்களின் தாக்கங்கள் என்பவற்றுடன் சேர்த்து, முகாமைத்துவக் கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வு என்பதன் கீழ் கலந்துரையாடப்பட்டுள்ளன (பக்கங்கள் 72-121).



# 2022 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையின் முன்னுரை

## ஒருங்கிணைக்கப்பட்டதோர் ஒருமுகப்படுத்தல்

பட்டியலிடப்பட்ட நிறுவனம் என்ற வகையில், நாம் எமது பங்குதாரர்களுக்கும், முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்களுக்கும் பொறுப்புக் கூறத்தக்கவர்களாக விளங்குகின்றோம். வழங்குகின்ற தகவல்கள், அவர்களது தீர்மானம் மேற்கொள்கின்ற செயன்முறையில், பங்குதாரர்களுக்கும், முதலீட்டார்களுக்கும் நன்மை பயக்கச் செய்வதே எமது முயற்சியாகும். இவ் அறிக்கையானது, அனைவருக்கும், விசேடமாக, எமது பங்குதாரர்களுக்கும், முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்களுக்கும், பெறுமதியினை எய்துவதில் வங்கியின் தொழிற்பாட்டு மற்றும் உபாய பணிப்புரையையும், செயற்பாடுகளையும் மதிப்பிடுவதற்கு, அனைத்துப் பங்குதாரர்களுக்கும் உதவியளிப்பதில் எனது பெறுமதி உருவாக்க செயன்முறையின் தெளிவான மற்றும் செம்மையான எடுத்துக்காட்டலை வழங்குகின்ற தகவல்களை இவ் அறிக்கை வேண்டுமென்றே உள்ளடக்குகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்பினைப் பிரயோகிப்பதன் வாயிலாக, நாம் பங்குதாரர் எதிர்பார்க்கைகளைச் சிறப்பாக நிறைவு செய்வதற்கு, முக்கிய மூலதனங்கள் எவ்வாறு முகாமை செய்யப்படுகின்றன (நிதியியல், தயாரிக்கப்பட்ட, மனித, சமூக மற்றும் உறவு, புலமை மற்றும் இயற்கை மூலதனங்கள்) பற்றிய சிறந்த புரிந்துணர்வினை வழங்குகின்றோம்.

## அறிக்கையிடும் கோட்பாடுகள்

- உபாயத்தை ஒருமுகப்படுத்தலும், எதிர்கால நோக்குநிலையும் - 2021-2025 உபாயத் திட்டத்தின் பிரகாரம், வங்கியின் உபாய ரீதியான ஒருமுகப்படுத்தல் 39-41 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன. ஏற்புடையவிடத்து, நாம் பெறுமதி உருவாக்கத்திற்கு எமது உபாய மையப்படுத்தல் எவ்வாறு எம்மைத் தூண்டுகின்றது என்பதனை எடுத்துகாட்டுவதற்கு தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம்.
- பங்குதாரர் உறவுகள் - பக்கம் 22 - 28 பங்குதாரர்களுடன் நாம் எவ்வாறு ஈடுபடுகின்றோம், அவர்களது எதிர்பார்கைகள் பற்றிய எமது அறிவு மற்றும் எதிர்பார்க்கைகளை நாம் எவ்வாறு நிறைவு செய்துள்ளோம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.
- பொருட்பாடு - அறிக்கையின் ஒவ்வொரு அத்தியாயம் ஊடாகவும், வங்கியின் தொழிற்பாடுகளுக்கு முக்கியமான அனைத்து நோக்குகளையும், விடயங்களையும் உள்ளடக்குவதற்கு நாம் சிறப்பாகப் பணியாற்றியுள்ளோம். இந்நோக்கில், பொருட்பாட்டுப் பிரிவானது, பங்குடைமையாளர் எதிர்பார்க்கையுடன் தொடர்புடைய முக்கிய விடயங்கள் போன்ற தொடர்புகளை விவரிக்கின்றது.
- சுருக்கம் - ஏற்புடைய போதெல்லாம் அளவுசார் தகவல்களையும், கருத்துரைகளையும் சாத்தியமான அளவு குறைந்த பட்சம் பேணியுள்ளோம். எனினும், முழுமையான தரத்திற்காக நாம் தொழில் நடவடிக்கைகள்/விரிவான பெறுமதி உருவாக்கத்தை எவ்வாறு அணுகுகின்றோம் என்பது பற்றிய கருத்துரைகளையும், உண்மையான தகவல்களையும் எடுத்துரைத்துள்ளோம்.
- நம்பகத்தன்மையும் முழுமையும் - அறிக்கையானது, சுயாதீன கணக்காய்வுப் பங்காளர்களால் உறுதிப்படுத்தப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளையும், தகவல்களையும் உள்ளடக்குகின்றது. வெளிவாரி உத்தரவாதத்தின் கீழான, விரிவான தகவல்கள் 201-208 ஆம் பக்கங்களில் கிடைக்கப் பெறுகின்றன.
- அறிக்கையை உருவாக்குகின்ற பல்வேறுபட்ட நிலைகள் முழுவதும் தகவல்களின் செம்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. முதலாவதாக, திணைக்களங்களின் பிரதானிகள் ஊடாக, அதனைத் தொடர்ந்து நிதியியல் முகாமைத்துவத்தின் ஊடாக, அதன் பின்னர், அறிக்கை வங்கியின் கணக்காய்வு நிறுவனத்தினால் உட்படுத்தப்பட்டு மதிப்பிடப்படுகின்றது.
- ஒத்திசைவும் ஒப்பீடும் - தகவல்கள் கிடைக்கின்றவிடத்து, கடந்த 5 ஆண்டுகளுக்கான அளவுசார் தகவல்களை இவ் அறிக்கை வழங்குகின்றது. கடந்த ஆண்டறிக்கையை தொடர்புபடுத்துகையில் 2022 ஆம் ஆண்டின் அறிக்கையில் பல மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஒழுங்குமுறைப்படுத்தலுடன் இணங்குதல்

இவ் அறிக்கையானது, ஏற்புடைய அறிக்கையிடல் தர நியமங்களுக்கும், வழிகாட்டல்களுக்கும் மேலதிகமாக, ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கும், சட்டங்களுக்கும் ஒத்திசைவாகக் காணப்படுகின்றது. அத்தகைய வழிகாட்டல்களும், கடைப்பிடித்தலும் பல ஆண்டுகளாக அதன் அறிக்கைகளை மேம்படுத்துவதற்கு வங்கியை இயலச் செய்துள்ளன.

## நிதியல்லா அறிக்கையிடல் கட்டமைப்புகள்

- சர்வதேச ஒருங்கிணைப்பு அறிக்கையிடல் கட்டமைப்பு

## நிதியியல் தேவைப்படுத்தல்கள்

- இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS மற்றும் LKAS)
- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் திருத்தங்கள்
- 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
- 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம்.
- 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டம்.
- 2005 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க நிதிச் சட்டம்
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்

## நிலைபெறுதன்மை கட்டமைப்புகள்

- ஐக்கிய நாடுகள் நிலைபெறுதன்மை இலக்குகள்

## வெளிவாரி உத்தரவாதம்

209 - 266 ஆம் பக்கங்களில் இருந்து தொடங்கி எடுத்துரைக்கப்பட்ட ஆண்டறிக்கையின் நிதியில் தகவல்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. இவை, நிதியியல் கூற்று ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்களுக்கு அமைவாகவும், கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு சிறந்த நடத்தைகளுக்கு அமைவாகவும், பங்குதாரர்களுக்காக வெளிப்படுத்தப்பட்ட அனைத்து நிதியியல் கூற்றுகளையும், அனைத்து நிதியியல் தகவல்களையும் உள்ளடக்குகின்றது.

சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடும் கட்டமைப்பின் மூலமான (IIRC) கட்டமைப்பின் கோட்பாடுகள் மற்றும் கூறுகளின் வழிகாட்டல்களுக்கு இசைவாக, அறிக்கை காணப்படுகின்றது என ஏர்னஸ்ட் என்ட் யங் சுயாதீனமாக உத்தரவாதமளித்துள்ளது. மேலும், நிதியியல் அறிக்கையானது, வங்கியின் பிரதம நிதி அதிகாரி, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபைத் தலைவர் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. வங்கியின் பணிப்பாளர் சபையும், நிறைவேற்றுத் தலைமைத்துவமும், வங்கியின் சுயாதீன கணக்காய்வாளர்களாக அவர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வது தவிர, நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர்களுடன் எவ்விதத்திலேனும் ஈடுபடவில்லை.

## ஊடக மொழி

பல்வகை மொழிப் பின்னனிகளுடன் கூடிய பங்குதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கி, நாம் அறிக்கையினை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்துள்ளோம். இவை பங்குதாரர்களுக்காக அச்சிடப்பட்ட வடிவங்களில் வழங்கப்பட்டுள்ளன. அறிக்கையின் ஆங்கிலப் பதிப்பை https://hdfc.lk/pages/abt_us/annual_reports.jsp என்ற இணயத்தின் ஊடாக இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். பௌதீக ரீதியான அறிக்கையின் தற்காலிக நிலமைகளின் காரணமாக, மேசைக் கணினி அல்லது நடமாடும் சாதனங்கள் ஊடாக டிஜிடல் பதிப்பினைப் பெற்றுக்கொள்ளுமாறு பங்குதாரர்களையும், வாசகர்களையும் நாம் ஊக்குவிக்கின்றோம்.

## விமர்சனங்களும் பின்னூட்டலும்

இவ் அறிக்கை பற்றிய உங்களது சாதகமான மற்றும் ஆக்கபூர்வமான விமர்சனத்தை நாம் மதிக்கின்றோம். அனைத்துப் பின்னூட்டல்களையும் அனுப்பப்பட வேண்டியது:

பிரதம நிதித்துறை அதிகாரி
அனுர ஹெட்டியாராச்சி
மின்னஞ்சல்: anura.h@hdfc.lk
தொலைபேசி: +94 11 2356802, 2446241, 2447354

# இலங்கை எச்டீஎப்சீ வங்கி

## ஒரே பார்வையில்

எமது பயணம் 1988 இல் கட்டடச் சங்கமாக தொடங்கியதுடன், 2023 இல் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி என்ற அந்தஸ்திற்கு வங்கி மாறுதலடைந்தது. 2025 இல் நாம் கொழும்பு பங்குப் பரிவத்தனை மீதான வங்கி பட்டியலில் இடம்பெறுவதற்கு உபாய தீர்மானத்தை மேற்கொண்டு, எமது உபாயக் குறிக்கோள்களுக்கும், எமது வழமையான தொழிற்பாடுகளுக்கும் சக்தியளிப்பதற்கான புதிய நிதி உட்செலுத்தல் ஒன்றை கொண்டுவந்துள்ளோம்.

மேலும், அரசாங்க மற்றும் தனியார் துறைகளின் சொத்தாண்மை பங்குகளுடன், வங்கியானது, இரு துறைகளினதும் முகாமைத்துவ விதங்களை அனுபவிக்கின்றது. சிறப்பியல்பு வாய்ந்த வங்கி ஒன்றாக இருந்து வரும் நோக்கிற்கு நாம் கட்டுப்பட்டு இருக்கின்ற அதேவேளை, எமது பங்குதாரர்களுக்கு பெறுமதியினை சேர்ப்பதற்கு நாம் அர்பணித்துள்ளதுடன், அரசாங்கத்திற்கும், எமது பங்குதாரர்களுக்கும் சுமையின்றி இலாபமிக்கதாக இருந்து வருகின்றோம்.

வங்கியின் தொழிற்பாடுகள், நிதி திட்டமில் அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் காணப்படுவதுடன், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் வழிநடாத்தப்படுகின்றது.

சந்தை மூலதனம் ரூ. 1.8 பில்.

மூலதன இருப்பு ரூ. 6.7 பில்.

கிளைகள் 39 கிளைகள்

/பிட்ச் கடன் மதிப்பீடு BB+ (LKA)

மொபைல் பேங்கிங் அசோஸியேட்ஸ் 77

இலங்கையின் சிறந்த வர்த்தக நாமங்கள் (LMD) 74

ஊ.சே.நி கடன்கள் அங்கீகரிக்கப்பட்ட 2 LSB களில் ஒன்று

### பின்தங்கியோருக்குச் சேவை வழங்குதல்

தேசத்திற்கு நாம் வழங்கும் சேவை தனித்துவமானது. வாடிக்கையாளர்களின் வீட்டு இலக்குகளுக்கு மட்டுமே நிதியளிக்கும் நிறுவனமாக இருந்து, எமது வழிகாட்டுதல் மற்றும் ஆதரவைப் பொறுத்து, தனித்துவமான வாடிக்கையாளர் தளத்துடன் ஒரு சிறப்பு நிதி இடைத்தரகராக நாம் பரிணமித்துள்ளோம்.

எமது வாடிக்கையாளர்களில் பெரும்பாலானோருக்கு, அவர்களின் நிதி ஆதாரங்களுக்கு அப்பால் சென்று, வாழ்க்கைக்கு ஈடு கொடுக்கக்கூடிய மற்றும் நிலையான நிதித் தீர்வை வழங்கும் ஒரே நிதிப் பங்காளி நாங்களே.

வங்கித் தொழிற்துறையானது, நாட்டின் பொருளாதாரத்திலும், பிரசைகளின் சமூகப் பின்னடைவுகளைக் கட்டியெழுப்புவதிலும் தெட்டத்தெளிவான வகிபாகம் ஒன்றினை நிறைவு செய்கின்றது. இந்நோக்கத்தின் பங்குதாரர்கள் என்ற வகையில், நாம், எமது வாடிக்கையாளர்களுக்கு, நிதியியல் நிலைபெறு தன்மையினையும், எமது பங்குதாரர்களுக்கு நேரடியான மற்றும் நேரடியற்ற பொருளாதாரப் பெறுமதிகளையும் தொடர்ந்தும் வழங்கி வருகின்றோம். பல ஆண்டுகளாக அரசாங்கத்தின் மூலம் மாத்திரம் நிலை நிறுத்தப்பட்டவர்களாக நாம் தனியான நிதியியல் நிறுவனமொன்றாக தொடர்ச்சியாக இருப்பதற்கான எமது இயலுமை பற்றி தற்போது வினயமாகப் பெருமையடைகின்றோம். மிகச் சிறந்த வங்கி ஒன்றாக வளர்ச்சிடைவதற்கு, அதிக சந்தர்ப்பங்கள் காணப்படுவதுடன், உருவாக்குவதற்கு அதிக பெறுமதியும் முயற்சிக்கப்படாத அதிக வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

## வங்கியின் சொத்தாண்மை

1984 ஆம் ஆண்டில் நாம் தோற்றம் பெற்றதிலிருந்து, இலங்கை அரசாங்கம் பெரும்பான்மையான பங்குடமையாளராக இருப்பதுடன், பெரும்பாலும், அரசுக்குச் சொந்தமான வங்கியொன்றாக இருந்து வருகின்றோம். சொத்தான்மையில் 51 சதவீதமான பங்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் காணப்படுகின்றது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வகிபாகமும், முதன்மைப் பொறுப்பும் பிரசைகளுக்காக வீடமைப்பை வழங்குவதை ஊக்குவித்து, வழங்கி, ஒருங்கிணைப்பதாகும்.

அரச ஆதரவு 51% + தனியார் துறை 49% = எச்டீஎப்சீ வங்கி

## எம்மை அடைந்துகொள்ள

நாம் 06 பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்ட, 39 கிளைகள் ஊடாக வாடிக்கையாளர்களுக்குப் பணியாற்றி வருகின்றோம். ஒவ்வொரு பிராந்தியமும், பிராந்திய முகாமையாளரால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. 77 செல்லிட வங்கித் தொழில் அலுவலர்களைக் கொண்ட பிரத்தியேகமான அணி ஒன்றினை நாம் கொண்டுள்ளோம். இவ்வணி, கிராமிய மற்றும் நகரப் பிரதேசங்களில் அனைத்து வகையான நிதியியல் தேவையுடையவர்களிடம் இருந்து சகல வகையான வகுப்பினர்களிடம் இருந்து வருகின்ற வாடிக்கையாளர்களுக்கு வாசற்படி வங்கிச் சேவையினைக் கொண்டுசென்று குறைவாக சேவையளிக்கப்பட்டும் சமூகங்களுக்கு எமது சேவைகளைக் கொண்டும் சேர்க்கின்றனர்.

நேரடியாக எம்மை அடைந்துகொள்வதற்குப் புறம்பாக, நாம் எமது நிறுவன வலைத்தளம் ஊடாகவும், இலத்திரனியல் (www.hdfc.lk) இ-வங்கித் தொழில் தளம் https://hdfc.lk/pages/online_banking/ebank. தளி ஊடாகவும் வாடிக்கையாளர்களுடனும் பங்குதார்களுடனும் இணைக்கப்பட்டுள்ளோம்.

| பிராந்தியம் 1 | பிராந்தியம் 2 | பிராந்தியம் 3 |
|---|---|---|
| ஜா-எல<br>கொழும்பு<br>ஹைட் பார்க் கோணர்<br>பேலியகொடை<br>கிரிபத்கொட<br>சிலாபம் | பிலியந்தலை<br>அவிசாவளை<br>ஹோமாகம<br>ஹெரண<br>நுகேகொடை<br>இரத்தினபுரி | கேகாலை<br>கம்பஹா<br>குளியாப்பிட்டி<br>குருநாகல்<br>நிக்கவரெட்டிய<br>நிட்டம்புவ |
| **பிராந்தியம் 4** | **பிராந்தியம் 5** | **பிராந்தியம் 6** |
| காலி<br>அம்பலாங்கொடை<br>எம்பிலிப்பிட்டிய<br>களுத்துறை<br>மாத்தறை<br>தங்காலை<br>திஸ்ஸமஹாராம | அநுராதபுரம்<br>மட்டக்களப்பு<br>தம்புள்ள<br>யாழ்ப்பாணம்<br>பொலன்னறுவை<br>திருகோணமலை<br>வவுனியா | கண்டி<br>அம்பாறை<br>புத்தள<br>கம்பளை<br>மாத்தளை<br>மொனராகலை<br>நுவரெலியா |

## நிதியியல் பின்னணி

எமது மூலதன ஒதுக்கானது, பிடித்து வைக்கப்பட்ட இலாபங்கள் ஊடாக, துணை நிரப்பப்படுவதுடன், கடந்த காலங்களில் முறி வழங்கல் ஊடாக இடம்பெற்றது. நியதிச்சட்ட குறைந்தபட்சத்திற்கு நன்கு மேல் மூலதனப் போதுமை விகிதத்தினை உறுதி செய்து பேணுவதற்கு, நாம் அர்ப்பணித்துள்ளதுடன், ரூ. 457 மில்லியன் கொண்ட பற்றாக்குறை

ஒன்றுக்கு மத்தியிலும், கடந்த சில ஆண்டுகளாக குறிக்கோள்களை உறுதியாக எய்தியுள்ளோம். ரூ.7.5 பில்லியன் கொண்ட தேவையான மொத்த தொகையினை அடைவதற்கு 2023 இறுதி வரை முடிவுத் திகதியினை நீடித்ததன் ஊடாக, மூலதன இலக்கினை அடைவதற்கு நாம் பணியாற்றுகின்றோம்.

2022 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு வங்கியின் பொதுவான பங்குரிமை மூலமான அடுக்கு 1 மூலதன விகிதம் 25.54 சதவீதமாகக் காணப்பட்ட அதேவேளை, அடுக்கு 1 மூலதன மற்றும் அடுக்கு 2 மூலதன விகிதம் 26.56 சதவிதமாகவும், 27.61 சதவீதமாகவும் காணப்பட்டன. அத்துடன், முன்மதிமிக்க நிதியியல் முகாமைத்துவம் மற்றும் வேறு கண்டிப்பான நடவடிக்கைகள் ஊடாக நாம் ஏற்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் வரையரைகளுக்கு மேல் மூலதனக் காப்புகளைப் பேணி வருகின்றோம்.

தேசத்தை தொடர்ந்து அழுத்தத்திற்கு உள்ளாக்கிய பணவீக்கத்தில் சடுதியான அதிகரிப்பு மற்றும் ஏனைய பொருளாதார வீழ்ச்சிகள் என்பவற்றுக்கு மத்தியிலும், எமது நிதியியல் உறுதிப்பாடிற்கான எமது அர்ப்பணிப்புக்கு மத்தியில் பிட்ச் ரேட்டிங் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டவாறு வங்கி தொடர்ந்தும் BB+(lka) தரப்படுத்தலை அனுபவிக்கின்றது.

## எமது தனித்துவமான பின்னணி


அரச வங்கி என்ற வகையில், எமது பணி பிரதானமாக நிதியியல் ரீதியாகப் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கும், கவனிக்கப்படாதவர்களுக்கும் நிதியியல் ரீதியாக சக்தியளிக்கப்பட்ட தீர்வுகளை வழங்குவதாகும்.

எமது உபாயமானது, இந்நோக்குடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதுடன், எமது உபாயக் குறிக்கோள்கள் இவ் அபிலாஷையினை பின்தொடர்ந்து செல்வதற்கான சரியான தூண்டுதலினை வழங்குகின்றன. நிலைபெறத்தக்க வாழ்விற்குப் பங்களிக்கின்ற, வசதியான, அத்துடன், அனைவரையும் உள்ளடக்குகின்ற, கடன் வழங்கல் தீர்வுகளை நாம் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்ற அதேவேளை, பங்குதாரர்களின் எதிர்பார்க்கைகளை நிறைவு செய்கின்ற எமது தொழில் நடவடிக்கைகள், பெறுபேறுகளைத் தோற்றுவிக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தும், உறுதியானதுமான தொழிலைப் பேணுவதற்கு நாம் பொறுப்புக்கூற வேண்டியவர்களாவோம்.

இயல்பாகவே, தனிப்பட்ட நிதியியல் இயலளவுகளைச் சுற்றி, கட்டமைக்கப்பட்ட கடன் வழங்கல் ஊடாக, சமத்துவமின்மையைக் குறைப்பதற்கு, நாம் பங்களித்து, அனைவருக்கும் வங்கியின் உறுதிப்பாட்டையும், இலாபத்தன்மையையும் உறுதிசெய்கின்ற அதேவேளை, வாடிக்கையாளர்களினதும், நிதியியல் சுமைகளைக் குறைப்பதற்கு வளம் பெறக்கூடிய முயற்சிகளை ஆக்கி வருகின்றோம். நாம், தீர்வுகளை வழங்குகின்ற போது, ஒவ்வொரு வாடிக்கையாளரினதும், பொருளாதாரப் பின்னணியினை நாம் பரிசீலனையில் கொள்வதன் மூலம், வாடிக்கையாளர்களின் இயலளவுகளை நாம் மிகைப்படுத்தி மதிப்பிடுவதில்லை என்பதை உறுதி செய்கின்றோம்.

சில சந்தர்ப்பங்களில், இது, எமது தரமான கரிசனையாக இருக்கின்ற அதேவேளை, முன்மதிமிக்க செலவிடுதல்கள் மற்றும் முதலீகள் என்பவற்றுடன் ஒன்று சேர்த்து, நடைமுறைச் சாத்திமான நிதியியல் முகாமைத்துவத்தின் ஊடாக, ஆரோக்கியமான நிதியியல் தீர்மானமெடுத்தலை நாம் பேணி வருகின்றோம். மேலும், உறுதியான அரச நிறுவனம் ஒன்றாக விளங்குவதற்கான எமது வலிமைகள் மீதான இயலளவுகள் மற்றும் கொள்ளளவுகள் பற்றி நாம் அவதானமாக இருக்கின்றோம்.

வீடமைப்பு நிதியில் தலைமைத்துவம் வகிப்பதற்கு எமது பாதை நெடுங்கிலும் நாம் பல வகையான தனித்துவமான தொழிற்துறை நிலைகளையும், முன்மொழிவுகளையும் செதுக்கியுள்ளோம்.




## எமது தனித்துவமான வலிமைகள்

எமது வாய்ப்பினை வரைவிலக்கணம் செய்கின்ற பல மைய வலிமைகளை நாம் கொண்டுள்ளோம்.

- வளர்ச்சியை நோக்கி மாறுதலடைதல்

கடந்த பல வருடங்களாக வங்கி எதனை அடைய வேண்டும் என்பதனையும், எமது உபாய மையப்படுத்தலை நாம் எவ்வாறு எய்த வேண்டும் என்பதனையும், நாம் மீள வடிவமைத்துள்ளோம் (பக்கங்கள் 39 - 41). 2005 இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மீது வங்கி பட்டியலிடப்பட்டதன் மூலம், ஒப்பீட்டளவில் சிறியளவாக எமது தொழில் அளவுகளுக்கு மத்தியில் பரந்த திட்டங்களையும், இலக்குகளையும் பின்தொடர்வதற்கு எமக்கு உந்துவிசையளித்த மாறுதலடைதல் ஒன்றின் முன்னேற்றகரமான கட்டத்தினுள் நாம் நுழைந்தோம்.

- தொடர்ச்சியாக அரசாங்க ஆதரவு

எமது வலிமைக்கு இன்றியமையாத மூலமொன்றாக விளங்குகின்ற அரசாங்கத்தின் ஆதரவை நாம் தொடர்ந்தும் பெற்றுள்ளோம். நிதி திட்டமிடல் அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் நாம் வருவதனால், அரசாங்க ஆதரவு என்ற நியதிகளில் கிடைக்கின்ற நம்பிக்கை மற்றும் நம்பகதன்மை பற்றிய சேர்க்கப்பட்ட மட்டமொன்று காணப்படுகின்றது. கடன் பெறுனர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி பிணையளிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உரிமம் பெற்ற இரண்டே வங்கிகளில் ஒன்றாக நாம் காணப்படுவது இதற்கு சான்றாகும்.

- தேசிய வீடமைப்பின் பங்காளர்

வெறுமனே நிதியியல் இடையீட்டாளர் அன்றி, இலங்கையர்களுக்கான வசதியான வீடமைப்பினை உறுதி செய்யும் அரசாங்கத்தின் தொலைநோக்கிற்கு ஆதரவளிக்கும் நிறுவனமும் ஆவோம். நிதியியல் சுயாதீனம் மற்றும் சமூக முன்னேற்றம் என்பவற்றை நோக்கிய அபிலாஷை யுடன் வலிமையான வீடமைப்புக் கடன் சொத்துப் பட்டியலையும், வாடிக்கையாளர் தளத்தையும் இது வழங்குகின்றது.

- முன்மதிமிக்க செலவு முகாமைத்துவம்

எமது மிக நீண்டகால அடிப்படையிலமைந்த வீடமைப்புக் கடன்களைக் கொண்ட எமது உயர்வான திரட்சியில் ஈடுபட்டுள்ள எமது உயர்வான அளவு மற்றும் இடர் நேர்வுகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு, முன்மதிமிக்க செலவு முகாமைத்துவம் தீவிரமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. நோய்த்தொற்று அடிப்படையிலமைந்த கடனை காலம்தாழ்த்திச் செலுத்துதல் மற்றும் நாட்டின் வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை மற்றும் நிலைபேறற்ற படுகடன் என்பவற்றில் இருந்து தோன்றுகின்ற அண்மைய பொருளாதார இடையூறுகள் என்பன காரணமாக, நிதியியல் நடவடிக்கைகளைக் கையாள்வதற்கு, மிகவும் கண்டிப்பான மற்றும் நடைமுறைக்கேற்ற அணுகுமுறை அவசியமாக இருந்தது. மேலும், சிறியளவான பௌதீக ரீதியான பிரசன்னமும், சிறியளவான வேலைப்படையும், மூலவளங்களை உச்சளவு பயன்படுத்துவதற்கும், செலவினங்களைக் குறைப்பதற்கும், எம்மை இயலச்செய்த அதேவேளை, நிதியியல் முகாமைத்துவத்தின் மீது முழுக் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்க வழிவகுத்தன.

- பொறுப்புக்கூறத்தக்க மற்றும் தொழில்நுட்ப ரீதியாக திறமைமிக்க சபை

எமது பணிப்பாளர் சபையானது, எமது தொழில் நடவடிக்கைகள் மற்றும் வங்கித்தொழில் செயற்பாடுகள் என்பவற்றைப் பாதிக்கின்ற, முக்கிய நோக்குகளைக் கையாள்வதில் திறன்களையும், நிபுணத்துவத்தினதும் தனித்துவமான ஒன்றிணைவினைக் கொண்டுள்ளது. அவர்களது கூட்டான அறிவும், அதிகாரமுமே பங்குதாரர் எதிர்பார்க்கைகளை நிறைவு செய்வதற்கும், உபாயக் குறிக்கோள்களை நிறுவேற்றுவதற்கும் நிறைவேற்று தலைமைத்துவத்தை மற்றும் நிறுவன முகாமைத்துவத்தைத் தொடர்ந்தும் வழிகாட்டுகின்றன.

- வீடமைப்புக் கடன் மற்றும் ஊழியர் சேமலாப நிதி கடன் நிபுணத்துவம்

வீடமைப்பு மற்றும் ஊழியர் சேமலாப நிதி (ஊ.சே.நி) கடன் நிதிச் சொத்துப் பட்டியல்களை மேற்பார்வை செய்கின்ற எமது கடன் மற்றும் கொடுகடன் குழுக்கள், குறைந்த, நடுத்தர வருமான சந்தைக்கு சேவையளிப்பதில் ஒப்பற்ற உள்ளார்ந்த அறிவு மட்டத்தினைக் கொண்டுள்ளன. ஊழியர் சேமலாப நிதியக் கடன்களை அங்கீகரித்து, அனுமதியளிப்பதற்கான எமது தனித்துவமான இயலுமை, உள்ளார்ந்த அறிவின் தனித்துவமான வசதிப்படுத்தலை எமக்கு வழங்குகின்றது.

# ஆரம்பம் முதல் ‘22 வரை

1

1984

தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ், கட்டட அமைப்பாகப் பதிவு செய்யப்பட்டு கூட்டிணைக்கப்பட்டது.

2

1997

வீடமைப்பு நிதியை வழங்குவதற்கும், பொது வைப்புத் தொகைகளை ஏற்றுக்கொள்வதற்கும், பாராளுமன்றம், 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தை நிறைவேற்றி, பொதுக் கூட்டுத்தாபனம் ஒன்றை உருவாக்கியது.

3

2000

இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தை உருவாக்கும் வகையில், 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

4

2003

விசேட வங்கியாக உருவாக்குவதற்காக 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் திருத்தப்பட்டது. அப்போது, நிறுவனத்தின் பெயர் “இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி” எனப் பெயரிடப்பட்டது. (இதனகத்துப் பின்னர் “இலங்கையின் எச்டீஎப்சீ வங்கி” எனக் குறிப்பிடப்படும்.

5

2005

தனியார் துறையின் சாத்தியமான முதலீட்டாளர்களிடமிருந்து முதலீடுகள் பெறப்பட்டதன் விளைவாக, எச்டீஎப்சீ வங்கி கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியல்படுத்தப்பட்டது.

6

2011

வர்த்தக நடவடிக்கைகளின் எல்லைகளை விஸ்தரிக்கும் நோக்கில் எச்டீஎப்சீ சட்டம் மேலும் திருத்தப்பட்டது. இத்திருத்தம், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் அட்டவணை ஐஏ இல் குறித்துரைக்கப்பட்ட வியாபார வடிவங்களை நடத்துவதற்கு அதிகாரமளிக்கிறது.

## எமது வளர்ச்சிப் பயணம்

கடந்த 10 ஆண்டுகளாக, இலாபத்தை நேர்மறையான வேகத்தில் பராமரித்து வருவதனால், எமது வைப்புக்கள் மற்றும் கடன்களில் நிலையான வளர்ச்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம்.



7

2012

எமது சேவைகளை அடைவதற்காக, திறக்கப்படாத சந்தைப் பிரிவுகளை நோக்கி, வங்கி அதன் தயாரிப்புகளையும், சேவைகளையும் பன்முகப்படுத்தியது.

9

2017

டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு வினைத்திறன்கள் என்ற திசையை நோக்கிச் சென்று முக்கிய வங்கி முறைமையை அமுல்படுத்தியது.

11

8

2015

நிதி உள்ளீடுகளை வலுப்படுத்தும் நோக்கில், கூட்டுறவுகளுக்கு சேவை வழங்கும் வகையில், "கூட்டுறவு நிதி" என்ற விடயத்திற்குள் எச்டீஎப்சீ காலடி வைத்து அதற்கென பிரத்தியேகமான ஒரு பிரிவையும் ஸ்தாபித்தது.

10

2019

வங்கி வாடிக்கையாளர்களுக்கு இ-பேங்கிங் வசதியை அறிமுகப்படுத்தியது.

2020

வங்கி Just Pay மொபைல் பேங்கிங் தளத்தில் இணைந்து, அதன் சேவைகள் மற்றும் வாடிக்கையாளர் வசதிகளை மேலும் பல்வகைப்படுத்தியது.

# நிதிச் சிறப்பு வடிவம்

பொருளாதார நெருக்கடியில் இருந்து சவால்களை எதிர்கொண்ட போதிலும், 2022 ஆம் ஆண்டு முழுவதும் எமது நிதி நிலை தளம்பலற்றிருந்தது. கடன் ஒப்புதலுக்கான மையப்படுத்தப்பட்ட அணுகுமுறையை நாம் தொடர்ந்தும் பின்பற்றி வரும் அதேவேளை, எமது இடர்களைக் குறைப்பதிலும் நாம் உறுதி பூண்டுள்ளோம்.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில், எமது வைப்புத் தளம், நிறுவன ரீதியாக மீளப் பெறுவதிலிருந்து பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டது. எனினும், சவால் இருந்த போதிலும், சில்லறை வைப்புகளில் அதிக பகுதியைப் பாதுகாப்பதன் மூலம் இடைவெளிகளை நாம் திருப்திப்படுத்திக் கொண்டுள்ளோம். மேலும், ஊழியர்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான உறுதிப்பாட்டில் தளராத நம்பிக்கையுடன், அதிகரித்துள்ள சம்பளத்தின் மூலமும் மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் (CBEU) கூட்டு ஒப்பந்தத்தை கௌரவிப்பதன் மூலமும் கடமையுணர்வுள்ள தொழில் தருனர் என்ற வகையில் எமது கடப்பாடுகளைத் தொடர்ந்தும் நிறைவேற்றியுள்ளோம்.

அடிப்படைச் சொத்து
ரூ. 63 பில்.

வைப்புத் தளம்
ரூ. 50 பில்.

கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூ. 45 பில்.

வட்டி வருமானம்
ரூ. 8.4 பில்.

வீடமைப்புக் கடன்கள் ரூ. 41 பில்.

நிலையான வைப்புகள்
ரூ. 42 பில்.

மூலதன ஒதுக்கீடு
ரூ. 6.7 பில்.

வரிக்குப் பிந்திய இலாபம்
ரூ. 326 மில்.

வருடாந்த வருமானம்
ரூ. 8.9 பில்.

நிகர வட்டி எல்லை
4.4%

மொத்த மூலதன போதுமை
27.62%

சட்டப்பூர்வ திரவ சொத்து விகிதம்
31.52%

உந்து சக்தி விகிதம்
10.26%

சொத்துக்கள் மீதான திரும்பல்கள்
0.52%

பணப்புழக்க ஆற்றல் விகிதம் - 334

## எச்டீஎப்சீ சந்தைப் பங்குகள்

| சொத்துக்களும் பொறுப்புக்களும் | வங்கி | 2022 | % | 2021 | % | 2020 | % |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்தக் கடன்களும் முற்பணங்களும் | உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் (ரூ. பில்.) | 1,021 | 4.37 | 925 | 4.7 | 801 | 5.3 |
| | எச்டீஎப்சீ வங்கி (ரூ. மில்.) | 44,637 | | 43,572.00 | | 42,659.00 | |
| வைப்புகள் | உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் (ரூ. பில்.) | 1,856 | 2.70 | 1,747 | 2.8 | 1,538 | 3.1 |
| | எச்டீஎப்சீ வங்கி (ரூ. மில்.) | 50,245 | | 49,813.00 | | 47,947.00 | |
| மொத்த சொத்துக்கள் | உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் (ரூ. பில்.) | 2,191 | 2.87 | 2,103 | 2.9 | 1,837 | 3.2 |
| | எச்டீஎப்சீ வங்கி (ரூ. மில்.) | 62,889 | | 62,964.00 | | 61,030.00 | |

# நிதிச் சொத்துப் பட்டியல்


வீடமைப்பு சட்டத்தினால் ஆளப்படுகின்ற வங்கியாக தேசத்தின் வீடமைப்புத் தேவைகளுக்கு சேவையளிப்பதற்கு வங்கி வரலாற்று ரீதியாக நிதியங்களை வழங்குகின்றது. ஆனால், தற்போது, வங்கியின் நிதிச் சொத்து பட்டியலானது, நிதிக்கான குறைவான பெறுவழிகளுடன் கூடிய, மக்களின் நிதியியல் தேவைகளைத் தீர்ப்பதற்கு முனைகின்ற, வைப்புகள், கடன் உற்பத்திகள் என்வற்றின் பன்முகப்படுத்தப்பட்ட கலப்பொன்றாகக் காணப்படுகின்றது. இம்மையப்படுத்தலின் காரணமாக, வங்கியின் மைய வாடிக்கையாளர் வகுப்புகள், நடுத்தர வருமான வகுப்பினரைச் சேர்ந்த, தனிப்பட்டவர்களாகவும், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளாகவும் காணப்பட்டு, அவர்களின் நிதியியல் வலிமைகளுக்கு எதிராக, பங்கமின்றி சேவையளிக்கப்படுகின்றது. வங்கியானது, தற்போது ஒவ்வொரு வாடிக்கையாளரினதும், நிதியியல் இயலளவுகளுக்குப் பொருத்தக் கூடியவாறு, பலவகையான உற்பத்திகளை வழங்குகின்ற அதேவேளை, மீள்கொடுப்பனவு மற்றும் மறுசீரமைப்பு வசதிகளையும் வழங்குகின்றது.

## விசேடத்துவமும் பன்முகப்படுத்தலும்

ஈடு அடிப்படையிலமைந்த, வீடமைப்புக் கடன்கள் மற்றும் ஊழியர் சேமலாபநிதிக் கடன்கள் என்பன மீதான மைய ஒருமுகப்படத்தலுக்குப் புறம்பாக, தங்கக் கடன் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மற்றும் நிறுவன வாடிக்கையாளர்கள் போன்றவற்றுக்கான அபிவிருத்திக் கடன்கள் என்பன, உறுதியான வளர்ச்சி கண்டுள்ளன. எமது தற்போதைய நிதிச் சொத்துப்பட்டியலின் கீழ், நாம் கடன்கள் மற்றும் வைப்பு அடிப்படையிலான முழுமையான மற்றும் அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற பல வகையான உற்பத்திகளுக்கு, சில்லறை மற்றும் நிறுவனசார் வாடிக்கையாளர்களுக்கு பெறுவழியினை வழங்குகின்றோம்.

கேள்வி வளர்ச்சியடைந்து காணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ், வீடமைப்புக் கடன்களைப் பகிர்ந்தளிப்பதற்கு நான்கு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த பிரத்தியேகமான வங்கிகளில் ஒன்றாக வங்கியானது அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. சேம நிதியம் கடன் பிணை உறுதியாக வருவதனால் ஊ.சே.நி பிணையளிக்கப்பட்ட கடன்கள், முன்மதிமிக்க கடன் சாதனமாகக் காணப்படுகின்றது. கொடுப்பனவுகள் தவணை தவறுகின்ற சந்தர்ப்பத்தில், இது வாடிக்கையாளருக்கும், வங்கிக்கும் இடர்நேர்வினைக் குறைக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஊ.சே.நி பிணையளிக்கப்பட்ட கடன்கள் மீதான நிலுவைகள் மீது ஊ.சே.நி வங்கிக்கு மீளளிப்புக்களைச் செய்கின்றது. இது, நிதியியல் நெகிழ்வுத்தன்மையைப் பேணுவதற்கும், செயலாற்றமற்ற கடன்கள் ஊ.சே.நி பிணையளிக்கப்பட்ட கடன்கள் மீது குறைந்தபட்சமாக இருப்பதனை உறுதி செய்வதற்கும் வங்கியை இயலச்செய்கின்றது.

கடன்கள்: கடன்களைத் திட்டமிட்டு மறுசீரமைப்புச் செய்கின்ற போது, அனைத்து எமது வாடிக்கையாளர்களினதும், நிதியியல் இயலவு, வாழ்வாதாரங்கள் மற்றும் வாழ்க்கை முறைகள் என்பவற்றைப் பரிசீலனையில் கொள்கின்றோம். விசேட நோக்கங்களுக்கான கடன்களுக்கு மேலதிகமாக, வீட்டுக் கடன்கள், வாழ்க்கைமுறைக் கடன்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கடன்கள், தங்கக் கடன்கள் மற்றும் கல்விசார் கடன்கள் போன்றவற்றை எமது கடன் மற்றும் கடன் வழங்கல் உற்பத்திகள் உள்ளடக்குகின்றன.




## கடன் திட்டங்கள்

- கெதெல்ல
- சிட்டு செவன
- ஷிரம உதான
- எச்டீஎப்சீ லை/ப்ஸ்டைல் லோன்
- சிரிசர
- எச்டீஎப்சீ தங்கக் கடன்
- எச்டீஎப்சீ கல்விக் கடன்
- VIP கடன்கள்
- நிலையான வைப்புகளுக்கு எதிரான கடன்கள்
- LECO
- பொது நிறுவன ஊழியர்களுக்கான சிறப்புக் கடன்கள்
- மருத்துவர்களுக்கான சிறப்புக் கடன்கள்
- கல்விசார் நிபுணர்களுக்கான கடன்கள்
- ஆயுதப் படைகளுக்கான கடன்கள்

## அபிவிருத்திக் கடன்கள்

- அத்வெல (Athwela)
- சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் கடன்
- திரிமக
- தருண திரிய
- வர்த்தகக் கடன்கள்
- SEPI கடன் திட்டம்

## குத்தகை

- எச்டீஎப்சீ குத்தகை

## கடன் தயாரிப்புகள்

Kedella

SHRAMA UDANA

Development Loans

Sirisara


HDFC GOLD LOAN

HDFC EDUCATIONAL LOANS

HDFC LEASING

# நிதிச் சொத்துப் பட்டியல்

வைப்புக்களும் சேமிப்புக்களும்: வங்கியின் வைப்பு நிதிச் சொத்துப் பட்டியல் - கால வைப்பு, சேமிப்பு உற்பத்திகள் ஆகியவற்றுடன் வேறுபட்டது.




## வைப்புக்கள்

- எச்டீஎப்சீ மெக்ஸ்
- நிலையான வைப்புக்கள்

## சேமிப்புத் தயாரிப்புகள்

- பிரதிலாப
- திலின
- எச்டீஎப்சீ ஸ்மார்ட் கோல்ஸ்

## முதலீட்டுத் திட்டங்கள்

- எச்டீஎப்சீ வாழ்க்கைக்கான தொகுப்பு
- எச்டீஎப்சீ விஷ்ராம ரக்கவரண
- திலின ரக்கவரண

## டிஜிட்டல் மற்றும் ஏனைய சேவைகள்

- மொபைல் பாங்கிங் (பார்ம்டொப் டீம்)
- இ-பாங்கிங் - எச்டீஎப்சீ கிளிக்
- ஜஸ்ட்பே இணைப்பு
- SMS அலர்ட் சேவை

# பொருளாதார பெறுமதி உருவாக்கம் மற்றும் விநியோகம்


எமது பங்குதாரர்களிடையே பெறுமதியை எவ்வாறு உட்செலுத்துகின்றோம் என்பது பற்றிய தெளிவான கணக்கை பின்வருபவை வழங்குகின்றன.

| | 2022<br>ரூ. மில். | 2021<br>ரூ. மில். | மாற்றம்<br>% |
|---|---|---|---|
| திரண்ட அடிப்படையில் உருவாக்கப்பட்ட பெறுமதி | | | |
| வங்கிச் சேவைகளின் மொத்த வருமானம் | **6,840** | 5,831 | 17 |
| நிதி முதலீடுகளிலிருந்து வருமானம் | **2,038** | 1,173 | 74 |
| பகிர்ந்தளிக்கப்பட்ட பெறுமதி | | | |
| மொத்த செயற்பாட்டுச் செலவு | **6,213** | 3,954 | 57 |
| வாடிக்கையாளர்கள் | | | |
| வைப்பாளர்களுக்கான வட்டி | **5,134** | 3,125 | 64 |
| கடன் வழங்கியோருக்கான வட்டி | **546** | 431 | 27 |
| ஊழியர்கள் | | | |
| ஊழியர் சம்பளம் மற்றும் ஊதியம் | **980** | 944 | 4 |
| மொத்த பயிற்சி மற்றும் அபிவிருத்தி முதலீடு | **1** | 5 | -80 |
| மொத்த நன்மைகள் மற்றும் ஊக்குவிப்புத் தொகைகள் | **283** | 223 | 27 |
| மொத்த ஓய்வூதிய அனுகூலங்கள் | **280** | 219 | 28 |
| மூலதன வழங்குநர்கள் | | | |
| மூலதன வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | **-** | 16 | -100 |
| அரசாங்கம் | | | |
| அரசாங்கத்திற்குச் செலுத்தியமை (செலுத்திய வரிகள்) | **289** | 657 | -56 |
| அரசு உதவிகள் | | | |
| நிதி உதவிகள் | **-** | - | - |
| வரி நிவாரணம் | **-** | - | - |
| நிதி ஊக்குவிப்புக்கள் | **-** | - | - |
| ஏனைய அனுகூலங்கள் | **-** | - | - |
| தக்கவைக்கப்பட்ட பெறுமதி | | | |
| தக்கவைக்கப்பட்ட இலாபம் | **326** | 547 | -40 |
| தேய்மானம் மற்றும் கழிக்கப்படுதல் | **185** | 161 | 15 |
| கடன் இழப்பு ஏற்பாடு | **320** | 296 | 8 |


# நிதி செயற்திறன் சிறப்பம்சங்கள்

| | 2022<br>ரூ. மில். | 2021<br>ரூ. மில். | மாற்றம்<br>% |
|---|---|---|---|
| வருடத்திற்கான பெறுபேறுகள் | | | |
| வருமானம் | **8,878** | 7,004 | 27 |
| வரிக்கு முன்னரான இலாபம் | **612** | 1,199 | (49) |
| வரிக்கான ஏற்பாடு | **286** | 651 | (56) |
| வரிக்குப் பின்னரான இலாபம் | **326** | 547 | (40) |
| அரசாங்கத்திற்கான வருவாய் | **289** | 657 | (56) |
| மொத்த பங்குலாபங்கள் | | | |
| வருட இறுதியில் | | | |
| பங்குதாரர்களுக்கான நிதியம் | **6,716** | 6,354 | 6 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புகள் | **50,245** | 49,813 | 1 |
| மொத்தக் கடன்களும், வாடிக்கையாளர்களுக்கான முற்பணங்களும் | **44,637** | 43,572 | 2 |
| மொத்த சொத்துக்கள் | **62,882** | 62,964 | (0) |
| சாதாரண பங்கிற்கான தகவல் | | | |
| சம்பாத்தியங்கள் (அடிப்படை) (ரூபா) | **5.04** | 8.46 | (40) |
| நிதி விகிதங்கள் | | | |
| சராசரி பங்குதாரர் நிதியத்தின் மீதான திரும்பல் (%) | **4.99** | 9.02 | (4.03) |
| சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் (%) | **0.52** | 0.88 | (0.36) |
| மொத்த சொத்துக்களுக்கான பங்குதாரர் பங்குரிமை (%) | **10.68** | 10.09 | 0.59 |
| நியதிச்சட்ட விகிதங்கள் | | | |
| திரவச் சொத்துக்கள் (SLAR) (%)* | **31.52** | 26.60 | 4.92 |
| பணப்புழக்கம் ஆற்றல் விகிதம் (LCR) | **334.00** | 156.00 | 178.00 |
| நிகர நிலையான நிதிய விகிதம் (NSFR) | **199.00** | 122.00 | 77.00 |
| துணைவலு விகிதம் | **10.26** | 9.27 | 0.99 |
| பொது பங்குரிமை அடுக்கு 1-குறைந்தபட்ச தேவைப்படுத்துகை 7.00% | **25.54%** | 21.51% | 4.02% |
| மொத்த அடுக்கு 1 (%) - குறைந்தபட்ச தேவைப்படுத்துகை - 8.50 % | **26.56%** | 22.38% | 4.18% |
| மொத்த மூலதனம் (%) - குறைந்தபட்ச தேவைப்படுத்துகை -12.50 % | **27.61%** | 23.02% | 4.59% |
| ஏனைய தகவல்கள் | | | |
| கிளைகள் | **39** | 39 | - |
| பணியாட்கள் (பணியாட் தொகுதியின் எண்ணிக்கை) | **588** | 614 | (4) |
| கடன் விகிதம் - பிற்ஸ்/லங்கா விகிதம் | **BB+(lka)**<br>எதிர்மறை | BB+(lka)<br>நிலையான | |


## கோப்புமுறைமை வைப்பு





## இலாபமுடைமை





## வருமானம்




## வட்டி வருமானம் எள வட்டி செலவுகள்




## பங்கொன்றுக்கான உழைப்பு







ஒருங்கிணைந்த பெறுமதி உருவாக்க

# மூலோபாயக் கட்டமைப்பு


பங்குதாரர் இணைப்புகள் மற்றும் ஈடுபாடு - 22
முக்கியத்துவ விடயங்கள் - 29
மூலோபாய மற்றும் வள ஒதுக்கீடு - 39
வர்த்தக மாதிரி - 42
SDG களுக்கு எங்கள் பங்களிப்பு - 44


# பங்குதாரர் இணைவுகளும் ஈடுபாடும்

முழுமையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நோக்குடன், வங்கித் தொழில் வியாபாரத்தை அணுகுகின்ற போது, அது அனைத்தினதும் மையமாக நாம் பங்குதாரர்களை இடம்பெறச் செய்கின்றோம். தனிமைப்பட்டு இருப்பதையன்றி அனைத்துப் பங்குதாரர்களுடனும் தொடர்ச்சியாகத் தொடர்புகளைப் பேணுவதிலேயே நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். அனைத்து எமது பங்குதாரர்களுக்கும் நாம் பொறுப்புக் கூறத்தக்கவர்களாக விளங்குவதனால், வங்கிக்கான அவற்றின் முக்கியத்துவத்தின் மட்டத்தைப் பொருட்படுத்தாது இது கட்டாயமானதாகக் காணப்படுகின்றது.

முன்னைய பல ஆண்டுகள் போலன்றி, 2022 ஆம் ஆண்டானது, மிக இக்கட்டானதாகத் தோற்றம்பெற்று, பங்குதாரர்கள் எதிர்பார்க்கைகளை நிறைவு செய்வதற்கு நாம் தொடர்ச்சியாக எமது அர்ப்பணிப்பை மீள உறுதிப்படுத்த வேண்டி இருந்தது. பொருளாதார நெருக்கடி ஒன்றினைச் சந்தித்து, வங்கி உறுதியான பங்குதாரர் உறவுகளைப் பேணுவதற்கு தொடர்பாடலானது, மிக முக்கியமாக உருவெடுத்ததுடன், பல இடையூறுகளை வெற்றிகொள்வதற்கு பேராற்றல்மிக்க பணியையும் கொண்டிருந்தது.

## ஈடுபாட்டுச் செயன்முறை

எமது பங்குதாரர்களுடன் ஈடுபடும் செயன்முறையானது, பல ஆண்டுகளாக பரினாம வளர்ச்சி கண்டுள்ளது. பங்குதாரர்களுடன் ஈடுபடுகையில், அது, பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் பெறுமதியாகக் காணப்படுவதாயினும் சரி, எமது தீர்மானங்களையும், நடவடிக்கைகளையும் தொடர்பூட்டுவதாக இருந்தாலும் சரி, நாம் ஆக்கபூர்வமான மற்றும் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறைகள் பற்றி அவதானமாக இருக்கின்றோம்.




எமது பெறுமதி உருவாக்க மாதிரியின் பங்காளர்களாக, அனைத்துப் பங்குதாரர்களையும் இடம்பெறச் செய்வதன் மூலம், முழுமையான அணுகுமுறையொன்றை நாம் பின்பற்றினாலும் கூட, அவர்களது எதிர்பார்க்கைகளை நிறைவுசெய்கின்ற போது, ஒவ்வொரு பங்குதாரர் குழுவினதும் தேவைகளை மனதில் கொள்கின்றோம்.

1. பங்குதாரர் இனங்காணலும் வகைப்படுத்தலும்

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தானப வங்கியில் எமது பங்குதாரர்கள் 6 பரந்த வகைகளுக்குள் காணப்படுவதுடன், நீண்டகாலமாக அவர்கள் அதே வகையினுள் காணப்படுகின்றனர். எனினும், வங்கியும் அதன் செயற்பாடுகளும் படிப்படியாக வளர்வதற்கு ஏற்ப இவ்வகைப்படுத்தல்களினுள் குறிப்பான பங்குதாரர்கள் பரினாம வளர்ச்சியடைந்து மாறுபடலாம்.

| பங்குதார்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர்கள் | வாடிக்கையாளர் | ஊழியர்கள் | பங்குடமையாளர்கள் | ஒழுங்குமுறைப் படுத்துனர்கள் | சமூகம் |
| நிறுவனசார் மற்றும் பொதுவான தனிப்பட்ட பங்குதாரர்கள் | நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள், தனியார் மற்றும் அரச துறை சேவைநாடிகள் உள்ளடங்கலாக சில்லறை மற்றும் நிறுவனசார் சேவை நாடிகள் | கிளை மற்றும் தலைமை அலுவலர்கள், கையகப் கணிப்பொறி அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் மற்றும் இலங்கை வங்கித்தொழில் ஊழியர் சங்கம் | • வழங்குனர்கள்,<br>• தொழிற்துறை, உறுப்புரிமைகள்,<br>• நிதியியல் சேவை வழங்குனர்கள் | • நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு<br>• இலங்கை மத்திய வங்கி<br>• இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்<br>• பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு<br>• கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | சமூகம் மற்றும் சூழல் |

02. பங்குதாரர் முன்னுரிமைப்படுத்தல்

ஒவ்வொரு பங்குதாரர் குழுக்களினதும் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொள்கின்ற வேளையில், பொருத்தமான விதத்தில் அவர்களை அணுகுவதற்கு எம்மை இயக்குகின்ற, எமது தொழிலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற, அவர்களது வேறுபட்ட மட்டங்களைக் கருத்திற் கொள்கின்றோம். இந்நோக்கில், எமது உபாய குறிக்கோள்கள் தொடர்பில், பெறுமதி உருவாக்க மட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு குழுவுடனுமான ஈடுபாட்டு மட்டத்தினை நாம் முன்னுரிமைப் படுத்துகின்றோம்.

| பங்குதாரர்கள் | பங்குதாரர்களும் முதலீட்டாளர்களும் | வாடிக்கையாளர்கள் | ஊழியர்கள் | பங்காளர்கள் | ஒழுங்குபடுத்துநர் | சமூகம் |
|---|---|---|---|---|---|---|
| மூலோபாய நோக்கங்கள் தொடர்பாக பெறுமதி உருவாக்கத்தின் நிலை | உயர் | உயர் | உயர் | உயர் | உயர் | குறைந்த |
| முக்கியத்துவத்திற்கான காரணம் (வங்கிக்கு பங்குதாரர்களின் பெறுமதி) | செயற்பாடுகளை நிலைனிறுத்த நிதி மூலதனத்தை உட்செலுத்தும் திறன் | வாடிக்கையாளர்களின் வீட்டுத் தேவைகளைப் பராமரிப்பது எச்டிஎப்சி வங்கியின் நோக்கமாகும்.<br><br>வணிக வளர்ச்சி மற்றும் எமது விரிவாக்கத்திற்கான முக்கிய காரணத்தை செயற்படுத்துகிறது.<br><br>மறுசீரமைக்கப்பட்ட கடன்கள் மற்றும் வாடிக்கையாளர் தேவைகளைச் சுற்றி அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள்.<br><br>அவர்களின் பங்களிப்பு வங்கியையும் அதன் வளர்ச்சியையும் நிலைனிறுத்துகிறது. | இதன் மையப் பகுதி தொடர் மற்றும் ஒருங்கிணைந்த செயற்பாடுகள். அவர்களின் பங்களிப்புகள் வங்கியின் வளர்ச்சியை நிலை நிறுத்துகின்றன. | வங்கி நடவடிக்கைகளை எளிதாக்கும் சேவைகளைப் பெறுதல். | இணக்கம் செயற்படுவதற்கான உரிமத்தை உறுதி செய்கிறது. | இயங்குவதற்கான சமூக உரிமம் (ஒப்புதல்) |
| ஈடுபாட்டு முன்னுரிமை | உயர் | உயர் | உயர் | உயர் | உயர் | குறைந்த |

*சிறந்த சீராக்கத்திற்காக கடந்த ஆண்டின் உயர்வான, நடுத்தரமான, குறைவான வகைப்படுத்தலில் இருந்து உயர்வான, சராசரி, குறைவான என மாற்றப்பட்டுள்ளது.*

3. தேவைக்கு ஏற்றவாறான ஈடுபாட்டு முறைகள்

வங்கியின் தீர்மானங்கள், செயன்முறைகள் மற்றும் பெறுமதி உருவாக்க செயற்பாடுகள் மீதான காலமுறையான தகவல்கள் மற்றும் தொடர்பூட்டலுக்கான தேவையைப் பொருந்தச் செய்வதற்கு நாம் ஈடுபாட்டு மாதிரிகளையும், கால இடைவெளிகளையும் தேவைக்கேற்றவாறு அமைத்துள்ளோம். பங்குதாரர்களுடன் செயற்திறன் வாய்ந்த விதத்தில் இணைவதற்கும், இடைத் தொடர்புக்கும் இம்முறைகள் எம்மை இயலச் செய்துள்ளன.

ஈடுபாட்டு முறைகள் விசேடமாக பங்குதாரர்கள் / முதலீட்டாளர்கள், ஒழுங்கு முறைப்படுத்துனர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோருடனானவை 2021 தொடக்கம் கடந்த இரு ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படும் உபாயத் திட்டத்தை வகுப்பதற்கு முக்கிய விடயங்களைச் சேகரிப்பதற்கு எம்மை இயலச் செய்துள்ளன. எனினும், தற்போது உபாயத் திட்டமானது, புதிய பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி நியமனத்துடன், நிறைவேற்றுத் தலைமைத்துவத்தில் மாற்றத்தின் அடிப்படையில் ஆழ்ந்தாராயப்படுகின்றது.

04. ஈடுபாட்டினைப் பேணுதலும் மேம்படுத்தலும்

இனங்காணப்பட்ட, வகைப்படுத்தப்பட்ட, முன்னுரிமைப் படுத்தப்பட்ட மற்றும் உறுதி செய்யப்பட்ட ஈடுபாட்டு முறைகளுடன் பங்குதாரர்களுடனான அடுத்த படிமுறையானது, ஈடுபாட்டின் ஒத்திசைவான பாய்ச்சலைப் பேணுகின்ற அதேவேளை, பங்குதாரர் தேவைகள் அடிப்படையிலும், அத்துடன் படிப்படியாக தொடர்ந்து வளர்ச்சியடைகின்ற ஒழுங்குபடுத்தல் தேவைப்படுத்தல்களின் காலத்திலும் மாற்றங்களுக்கான வசதியைப் பேணுவதாகும்.

ஈடுபாட்டுப் பொறிமுறைகளை மேம்படுத்துகையில், நாம், அனைத்துப் பங்குதாரர்களுக்கும், செய்திகளும், தகவல்களும் தொடர்புடையதாக இருக்கக் கூடிய வகையில் தொடர்பூட்டல்களையும், ஈடுபாடுகளையும் ஒருங்கிணைப்பதற்கு எமது சிறந்த முயற்சிகளை செயற்படுத்துகின்றோம். இந்நோக்கில் எமது வலைத்தளம், சமூக வலைத்தளம் மற்றும் டிஜிடல் ரீதியாக வெளியிடப்படுகின்ற இடைக்கால அறிக்கைகள் என்பன பங்குதாரர்கள், முதலீட்டாளர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், ஒழுங்கு முறைப்படுத்தனர்கள், பங்குடமையாளர்கள் மற்றும் சமூகம் என்பவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட்ட தொடர்பூட்டல் மையமாகப் பேணுவதற்கு எம்மை இயலச் செய்கின்றன.

## எதிர்பார்க்கைகளையும், பங்குதார்கள் ஈடுபாட்டையும் முகாமைசெய்தல்

எமது பங்குதாரர் குழுக்கள் ஒவ்வொன்றுடனும் நாம் எவ்வாறு ஈடுபடுகின்றோம் என்பதனை பின்வருவன எடுத்துரைக்கின்றன. பங்குதாரர் எதிர்பார்க்கைகளையும், எமது பதிலிறுத்தலையும் இது குறித்துக் காட்டுகின்றது.


நோய்த்தொற்றின் நீடிக்கப்பட்ட தாக்கங்கள் கலைந்து செல்கையில், அத்துடன், தொழிற்பாடுகள் இயல்பு நிலைக்கு திரும்புவதற்கேற்ப பங்குதாரர்களுடனான எமது ஈடுபாடுகள் தொடர்ந்தும் இடைத் தடங்கலற்ற விதத்தில் முன்னெடுக்கப்பட்டன. எனினும், நிதியியல் இடையீட்டாளர் என்ற வகையில், எவ்வாறு அவர்களுடன் நாம் ஈடுபட்டோம் மற்றும் எம்மிடமிருந்தான அவர்களது எதிர்பார்க்கைகள் என்பன மீது பொருளாதார நெருக்கடி, அரசியல் உறுதிப்பாடின்மை, சமூக அமையின்மை என்பன சில தாக்கங்களைக் கொண்டிருந்தன.

| பங்குதாரர்கள்/முதலீட்டாளர்கள் | | |
|---|---|---|
| பங்குதாரர்களுடன்/முதலீட்டாளர்களுடன் ஈடுபடுதல் | | |
| ஈடுபாட்டு முறைகள் | ஈடுபாட்டு காலஇடைவெளி | 2022 இல் ஈடுபாடுகள் |
| • வருடாந்தப் பொதுக்கூட்டம் | ஆண்டுதோறும் | வருடாந்தப் பொதுக்கூட்டம் ஜூனில் இடம்பெற்றது |
| • ஆண்டறிக்கை | | ஆண்டறிக்கை மேயில் வெளியிடப்பட்டது |
| • ஆண்டு மற்றும் இடைக்கால நிதியியல் அறிக்கைகள் மற்றும் கூற்றுகள் | காலமுறையாக | காலமுறையாக வெளியிடப்பட்டு வலைத்தளத்தில் வெளியிடப்பட்டது |
| • நேரடியான கலந்துரையாடல்கள் மற்றும் சந்திப்புக்கள் | தேவைப்படுகின்றவாறும் தேவைப்படுகின்ற போதும் | ஏதுமில்லை |
| • வங்கியின் வலைத்தளம் | அடிக்கடி | காலமுறையாக இற்றைப்படுத்தப்பட்டது |
| • கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான அறிவித்தல் | தேவைப்படுகின்றவாறும் தேவைப்படுகின்ற போதும் | பணிப்பாளர்களில் மாற்றம் மற்றும் பொதுமுகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலர் மாற்றம் பற்றிய அறிவித்தல் |
| • கம்பனிச் செயலாளர் | தேவைப்படுகின்றவாறும் தேவைப்படுகின்ற போதும் | வருடாத்த பொதுக்கூட்டத்தின் முன்னர் மற்றும் கோரிக்கையின் மீது |
| • மின்னஞ்சல் | அடிக்கடி | தேவையின் அடிப்படையில் |

| எதிர்பாக்கைகளை முகாமை செய்தல் | | |
|---|---|---|
| பங்குதாரர் எதிர்பார்கைகளும், நலன்களும் | எமது பதிலிறுத்தல் | 2022 இல் பதிலிறுத்தல் |
| • நிதியியல் செயலாற்றமும் முதலீடுகள் மீதான ஆதாயமும் | • இலாபத்தன்மையயை உச்சப்படுத்தல் | இலாபத்தன்மை பேணப்பட்டது |
| • நிதியியல் உறுதிப்பாடு | • வருவாயை அதிகரித்தல் மற்றும் வருவாய் மார்க்கங்களை உச்சப்படுத்தல் | மொத்த வருவாய் அதிகரிக்கப்பட்டது |
| • உபாயக் குறிக்கோள்கள் மற்றும் தொழிற்பாட்டு இலக்குகளில் முன்னேற்றம் | • பொருளாதார நெருக்கடி காரணமாக கொடுகடன் அனுமதிக்கு கட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுறையைப் பின்பற்றுதல் | வேகம் குறைந்த கடன் பகிர்ந்தளிப்பு |
| • நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு நடத்தையில் வெளிப்படைத்தன்மை | • பொருளாதார நெருக்கடிக்கு பதிலிறுத்தி செலவு, முதலீடு மற்றும் நிதியியல் பற்றிய முன்மதிமிக்க முகாமைத்துவம் | செலவுகள் ஆரோக்கியமான மட்டங்களில் பேணப்பட்டன |
| • இடர்நேர்வு முகாமைத்தவ நடத்தைகள் | • மூலதனத் தொகையை அதிகரித்தல் | மூலதன காப்பினை ரூ. 326 மில்லியனால் அதிகரித்தல் |
| • நிறுவன ஆளுகைக் கருமங்கள் | • தூர நோக்குமிக்க நிதியியல் மற்றும் தொழிற்பாட்டுக் கொள்கைகள் | |
| • புத்தாக்கம் மற்றும் போட்டித்தன்மை மீது வங்கியின் ஒருமுகப்படுத்தலை மதிப்பிடுதல் | • கிரமமான அறிக்கையிடலும் வெளிவாரி உத்தரவாதமளிக்கப்பட்ட நிதியியல் கூற்றுகளும் | கணக்கீட்டு நியமங்கள், ஒழுங்கு விதிகள் நிதியியல் கூற்றுகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகள் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை வெளியீடுகள் என்பனவற்றுடன் இணங்கியொழுகுகின்றன |
| | • மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் | வெளிவாரி உத்தரவாதம் பெற்றுக்கொள்ளப்பட்டது |
| | • முழுமையாக விருத்திசெய்யப்பட்ட நிறுவன ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு | அனைத்து தேவைப்படுத்தல்களுடனும் இணங்கியொழுகப்பட்டது |
| | • அவசியமான மேம்படுத்தல்கள் மீது நடைமுறைக்கேற்ற முதலீடுகள் | மைய உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தல் மீது செலவிடுதல் |

| எதிர்பாக்கைகளை முகாமை செய்தல் | | |
|---|---|---|
| பங்குதாரர் எதிர்பார்கைகளும், நலன்களும் | எமது பதிலிறுத்தல் | 2022 இல் பதிலிறுத்தல் |
| தொடர்புடைய நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்   | | |


| வாடிக்கையாளர்கள் | | |
|---|---|---|
| வாடிக்கையாளர்களுடன் ஈடுபடுதல் | | |
| ஈடுபாட்டு முறைகள் | ஈடுபாட்டு கால இடைவெளி | 2022 இல் ஈடுபாடுகள் |
| • கிளை மற்றும் தலைமை அலுவலக வருகை தருதல் | தேவைப்படுகின்ற போது தேவைப்படுகின்றவாறு | இடைத்தடங்கலற்று நிகழ்ந்தது |
| • வாசற்படி வங்கித்தொழில் | நாளாந்தம் | எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மட்டுப்படுத்தப்பட்டது |
| • மின்னஞ்சல், வெப்தளம், யூரியூப், முகநூல் ஊடாக தகவல்களை தொடர்பூட்டல | அடிக்கடி | தகவல்களை கிரமமாக பதிவிடுதல் |
| • டிஜிடல் கொடுக்கல்வாங்கலுக்கான இ- வங்கிச் சேவை மற்றும் துரளவீயல | அடிக்கடி | அதிகரித்த ஈடுபாடுகள் |
| • வெளியிட மற்றும் கிளைகளில் ஊக்குவிப்பு பிரசாரம் | தீர்மானிக்கப்பட்டவாறு | தலைமை அலுவலகம் மற்றும் கிளைகள் மூலம் பல பிரச்சாரங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன |
| • வெகுசன ஊடக விளம்பரப் படுத்தல் | தீர்மானிக்கப்பட்டவாறு | தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மெல்லசைவு எழுத்துக்கள் |
| • நேரடியான சந்திப்புக்கள் | தேவைப்படுகின்றவாறும் தேவைப்படுகின்ற போதும் | வைப்புக்கள் மற்றும் கடன் தேவைப்பாடுகளுக்காக |
| • அழைப்பு நிலையம் | அடிக்கடி | விசாரணைகளை கையாளுதல், பின்னூட்டல் மற்றும் முறைபாடுகளை ஏற்றுக்கொள்ளல் |

| எதிர்பார்க்கைகளை முகாமை செய்தல் | | |
|---|---|---|
| பங்குதாரர் எதிர்பார்க்கைகளும் நலன்களும் | எமது பதிலிறுத்தல் | 2022இல் பதிலிறுத்தல்கள் |
| • கவர்சிகரமான வைப்பு வீதங்கள்<br>• செவிசாய்கின்ற மற்றும் நம்பகமான சேவை<br>• பாடுபட்டு உழைத்த வைப்புகளை பாதுகாத்தல் மற்றும் சிறந்த ஆதாயங்கள்<br>• உற்பத்திகள் பற்றிய விழிப்புணர்வு<br>• வைப்பாளர்களுக்கான நிதியியல் உறுதிப்பாடு<br>• டிஜிடல் / இணையவழி கொடுக்கல்வாங்கல்களில் பாதுகாப்பு | • மிதக்கும் வீதங்களை 20 சதவீதமாக உச்ச வரம்பிடல் | • அதிகரித்த வீட்டுக் கடன் பகிர்ந்தளிப்புகள்<br>• வாடிக்கையாளர்களுக்கு குறைவான இடர்நேர்வு காரணமாக உ.சே.நி கடன்கள் ஊக்குவிக்கப்பட்டன. |
| | • 2022 உடன் ஒப்பிடுகையில் வைப்புகள் மீது உயர்வான ஆதாயங்களை வழங்குதல் | • 20 சதவீதமாக உச்ச வரம்பிடல் |
| | • தொடர்சியாக சமூக வலைத்தள ஈடுபாடுகள் மற்றும் தகவல்களை பதிவிடுதல் | • ஒழுங்குமுறைப்படுத்துனரின் மூலம் அதிகரித்த வட்டி வீதங்களுடன் இணங்கியொழுகுதல் |
| | • உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு மூலதன காப்புகளை பேணுதல் | • செயற்பாடுகள் மற்றும் ஊக்குவிப்புகள் பற்றிய கிரமமான தொடர்பூட்டல்கள் |
| | • பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு முறைமைகளை இற்றைப்படுத்தல் | • மேம்படுத்தப்பட்ட வலைத்தளம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு |
| | | • செயற்பாட்டில் உள்ள திட்டங்கள் நிதியிடல்கள்<br>• தனிப்பட்டவர்களுக்கு நிதியிடலுக்கு நிறுவனசார் பங்குடமை |
| தொடர்புடைய நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்     | | |

# பங்குதாரர் இணைவுகளும் ஈடுபாடும்

| ஊழியர்கள் | | |
|---|---|---|
| ஊழிர்களுடனான ஈடுபாடு | | |
| ஈடுபாட்டு முறைகள் | ஈடுபாட்டு காலஇடைவெளி | 2022 இல் ஈடுபாடுகள் |
| • உள்ளக வலயமைப்பு | ஊழியர்கள் மூலம் அடிக்கடி நுழையப்பட்டது | கொள்கைத் தகவல்கள், வெற்றிடங்கள் மற்றும் வங்கி அபிவிருத்திகள் |
| • மின்னஞ்சல்கள் | அடிக்கடி | முறையான பணித் தொடர்பூட்டல்கள் மற்றும் பிறந்தநாள், ஓய்வு பெறுதல்கள் போன்ற விசேட நிகழ்வுகளுக்கானவை |
| • விட்டுவிடுதல் மட்டம் மற்றும் சமுதாய கூட்டங்கள் | அட்டவணைப்படுத்தப்பட்டவாறு | தலைமை அலுவலகத்திலும், கிளைகளிலும் முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கு இடையில் கிரமமான இடைத்தொடர்புகள் |
| • தொடக்க மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | அட்டவணைப்படுத்தப்பட்டவாறு | 65 இற்கும் மேற்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் (மெய்நிகர் மற்றும் நேரடி) |
| • எச்டீஎப்சீ செய்திக் கடிதம் | காலாண்டு | இரண்டு காலாண்டுகளுக்கு வெளியிடப்பட்டது |
| • விருது வழங்கல் நிகழ்ச்சி | வருடாந்தம் | 2022 இல் இரத்துச் செய்யப்பட்டது |
| • திருப்தி கணக்கெடுப்பு | வருடாந்தம் | ஒரு கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது |

| எதிர்பார்க்கைகளை முகாமை செய்தல் | | |
|---|---|---|
| பங்குதாரர் எதிர்பார்கைகளும் நலன்களும் | எமது பதிலிறுத்தல் | 2022 இல் பதிலிறுத்தல் |
| • சமத்துவமான கொடுப்பனவு மற்றும் தொழிற்துறை அளவீடப்பட்ட ஊதியம்<br>• சம்பள ஏற்றங்கள்<br>• பயிற்சி மற்றும் திறன் மேம்படுத்தல்<br>• தொழில் பாதுகாப்பு<br>• தொழில் வளர்ச்சி<br>• கடின உழைப்பை அங்கீகரித்தல்<br>• பரஸ்பர மரியாதை மற்றும் சிறந்த தொழில் தருனர் - ஊழியர் உறவுகள்<br>• கூட்டாகப் பேரம்பேசுதல்<br>• சம வாய்ப்புகள் மற்றும் பாகுபாடற்ற நடத்தை<br>• பணியிட ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு<br>• திறந்த மற்றும் தெளிவான தொடர்பூட்டல் | • மருத்துவம் தொடர்புபட்ட நலன்கள் உள்ளடங்கலாக ஊதியம் மற்றும் நன்மைகளை அதிகரித்தல் | • சம்பளங்கள் மற்றும் மிகை ஊதிய கொடுப்பனவுகளில் 4 சதவீத அதிகரிப்பு |
| | • கவர்சிகரமான மற்றும் போட்டிமிக்க நிதியியல் ஊக்கத்தொகைகள் மற்றும் நன்மைகள் | • நிரந்தர ஊழியர்களுக்கு 15 பல்வேறு வகையான நன்மைகள் வழங்கப்பட்டன<br>• தகுதிகான் அலுவலர்களுக்கு 09 நன்மைகள்<br>• ஒப்பந்த ஊழியர்களுக்கு 05 நன்மைகள்<br>• தொழில் ஊக்குவிப்பு பயிலுனர்களுக்கு 5 நன்மைகள் |
| | • அதிக எண்ணிக்கையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | • 2022இல் 65 நிகழ்ச்சித்திட்டங்கள் (2021:155)<br>• 2022இல் 5,351 பயிற்சி மணித்தியாலங்கள் (2021 : 20,399) |
| | • தொழிற்சங்கங்களுடன் சிறந்த உறவுகள் | • கூட்டு உடன்படிக்கை கைசாத்திடப்பட்டு சம்பள ஏற்றங்கள் நிறைவுசெய்யப்படப்டன. |
| | • நடுநிலையாக குறைகளைக் கையாளுதல் | • ஆண்டு காலப்பகுதியில் ஊழிர்கள் கரிசனைகள் கருத்தில் கொள்ளப்பட்டு ஆலோனைகள் செயற்பாடுளுக்குள் ஒன்றிணைக்கப்பட்டன. |
| | • தொழில் சட்டங்கள் மற்றும் மனித உரிமைகளை கடைப்பிடித்தல் | • அனைத்து நியதிச் சட்டங்களும் கடைப்பிடிக்கப்பட்டன. |
| தொடர்புடைய நிலைபெறு அபிவிருத்தி இலக்குகள் |  | |

| பங்குடமையாளர்கள் மற்றும் வழங்குனர்கள் | | |
|---|---|---|
| பங்குடமையாளர்களுடனான ஈடுபாடு | | |
| ஈடுபாட்டு முறைகள் | ஈடுபாட்டு காலஇடைவெளி | 2022 இல் ஈடுபாடுகள் |
| • விலைகோரல் அறிவித்தல்கள் மற்றும் செயன்முறை | வேண்டப்பட்டவாறும் வேண்டப்பட்டபோதும் | |
| • மின்னஞ்சல் | வேண்டப்பட்டவாறும் வேண்டப்பட்டபோதும் | |
| • நேரடியான சந்திப்புகள் | வேண்டப்பட்டவாறும் வேண்டப்பட்டபோதும் | |
| • தளங்களுக்கு வருகை தருதல் | வேண்டப்பட்டவாறும் வேண்டப்பட்டபோதும் | |
| முகாமைத்துவ எதிர்பார்க்கைகள் | | |
| பங்குதாரர் எதிர்பார்கைள் மற்றும் நலன்கள் | எமது பதிலிறுத்தல் | 2022 இல் பதிலிறுத்தல்கள் |
| • உரியகாலக் கொடுப்பனவுகள் | • இணங்கிய இடைவெளிகளில் கொடுப்பனவுகளை செய்தல் | உரிய காலத்தில் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டன |
| • சிறந்த தொடர்பூட்டல்கள் | • உரியகால அறிவித்தல்கள் | வேண்டப்பட்டவாறும் தொடர்பூட்டல்கள் இடம்பெற்றன |
| • ஒப்பந்த கடப்பாடுகளை நிறைவேற்றுதல் | • பொருட்கள் மற்றும் சேவைகளை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ளல் | கடமைப் பொறுப்புகள் நிறைவேற்றப்பட்டன |
| • புதிய வியாபார வாய்புகள் | • பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | ஆண்டு காலப்பகுதியில் எதுவும் செய்யப்படவில்லை |
| தொடர்புடைய நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள் |  | |
| ஒழுங்குமுறைப் படுத்துனர்களுடனான ஈடுபாடு | | |
| நுபெயபபை றவா சுநபரடயவழசள | | |
| ஈடுபாட்டு முறைகள் | ஈடுபாட்ட கால இடைவெளி | 2022 இல் ஈடுபாடுகள் |
| இடைக்கால அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை சமர்ப்பித்தல் | காலமுறையாக | அச்சுப் பிரதிகள் மற்றும் மென் பிரதிகளாக சமர்ப்பித்தல் அத்துடன் வலைத்தளம் வாயிலாக பார்வையிடத்தக்கது |
| நேரடியான சந்திப்புகள் | வேண்டப்பட்டவாறும் வேண்டப்பட்டபோதும் | இலங்கை மத்திய வங்கியில் முதன்மை நிறைவேற்று அலுவர்கள் கூட்டத்தில் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அலுவர் சமுகமளிக்கின்றார். |
| தொழிற்துறை மன்றங்கள் | அவ்வப்போது | ஆண்டிற்கு எதுவும் இல்லை |
| ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைகள் | வேண்டப்பட்டவாறு வேண்டப்பட்டபோதும் | இலங்கை மத்திய வங்கி தளத்திலான மேற்பார்வை ஓகஸ்டில் இடம்பெற்றது |
| கொள்கை திட்டமிடலில் பங்கேற்றல் | அவ்வப்போது | ஏற்புடையதல்ல |

| முகாமைத்துவ எதிர்பார்க்கை | | |
|---|---|---|
| பங்குதாரர் எதிர்பார்க்கைகள் மற்றும் நலன்கள் | எமது பதிலிறுத்தல் | 2022 இல் பதிலிறுத்தல்கள் |
| • ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கான எமது கடைப்பிடித்தல்<br>• வரிக் கொடுப்பனவுகள் மற்றும் தொடர்புடைய சமர்ப்பனங்கள்<br>• வெளிவாரி உத்தரவாதம்<br>• வாடிக்கையாளர் வைப்புகளை பாதுகாத்தல்<br>• கொள்கைகளுக்கு இசைவாக வைப்புகள் மீது வட்டிகளை வழங்குதல்<br>• கொள்கை அடிப்படையில் அமைந்த வீதங்களில் கடன் பெறுனர்களுக்கு நிலைபேறான மற்றும் நியாயமான தீர்வுகளை வழங்குதல்<br>• தொழிற்துறை மன்றங்களில் பங்கேற்றல் | • வங்கித் தொழில் முதலீடு, கணக்கீடு, நிதியியல் குற்றம் மற்றும் ஏனைய தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கி ஒழுகுதல் | இணங்கியொழுகப்பட்டது எனினும் மூலதனத் தேவைப்பாட்டின் 11 சதவீதம் இணங்கியொழுகப்பட வேண்டி உள்ளது. |
| | • உரிய காலத்தில் வரி சமர்ப்பனங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் | உரியகாலத்தில் சமர்பிக்கப்பட்டது |
| | • இடைக்கால மற்றும் ஆண்டறிக்கைகளையும் கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றுகளையும் உரிய காலத்தில் சமர்ப்பித்தல் | உரியகாலத்தில் சமர்பிக்கப்பட்டது |
| | • ஒழுங்குமுறைப்படுத்தல் நிறைவேற்றப்படாத சந்தர்பங்களில் ஒழுங்கு முறைப்படுத்தனர்களுடன் சந்தித்தல் | ஆண்டு காலப்பகுதியில் தேவைப்படவில்லை |

தொடர்புடைய நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்




| சமூகமும் சூழலும் | | |
|---|---|---|
| ஊழியர்களுடனான ஈடுபடுதல் | | |
| ஈடுபாட்டு முறைகள் (சமூகம்) | ஈடுபாட்டு இடைவெளி | 2022 இல் ஈடுபாடுகள் |
| • வலைத்தளம் | தொடர்ச்சியாக | ஆர்வமுடைய தரப்பினர்களுக்கு வலைத்தளம் ஊடாக தகவல்கள் வழங்கப்பட்டது |
| • விளம்பரங்கள் | முன்கூட்டி திட்டமிடப்பட்டது | விளம்பரங்கள் ஊடாக உற்பத்தி தகவல்கள் வெளியிடப்பட்டது |
| • சமூக வலைத்தளம் | தொடர்ச்சியாக | ஊக்குவிப்புக்கள், உற்பத்திகள் மற்றும் ஏனைய சேவைகள் அறிவிக்கப்பட்டது |

| எதிர்பார்க்கைகளை முகாமை செய்தல் | | |
|---|---|---|
| பங்குதாரர் எதிர்பார்க்கைகள் மற்றும் நலன்கள் | எமது பதிலிறுத்தல் | 2022 இல் பதிலிறுத்தல்கள் |
| • அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற மற்றும் வசதியான தீர்வுகள் | • சூழல் மீதான தாக்கத்தை குறைத்தல் | • நகர விவசாய கருத்திட்டம்<br>• பிளாத்திக்கு மீள்சுழற்சி கூடுகளை பொருத்துதல் |
| • அபிவிருத்தி மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சி கடன்கள் | • நுண், சிறிய நடுத்தர தொழில்முயற்சி மற்றும் சிறு உடமையாளர் நிதியிடல் ஊடாக சமூக அபிவிருத்தி | • சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மற்றும் நிறுவன நிதிக் கடன்களில் அதிகரிப்பு<br>• நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக 15 முனைப்பான கடன் திட்டங்கள் |

Related SDGs



# முக்கியத்துவ விடயங்கள்


பங்குதாரர்கள் எதிர்பார்க்கைகளின் உச்ச நிலை அத்துடன், வங்கியின் செயற்பாடுகள், பெறுமதி உருவாக்கச் செயன்முறை மற்றும் உபாய ஒருமுகப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கியமான நோக்குகள் என்பன முக்கியத்துவமான விடயங்களாகும். மேலும், பங்குதாரர்கள் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே முக்கிய விடயங்கள் காணப்படுவதுடன், பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் விழுமியங்களுடன் இணையப் பெற்றுள்ளன. இவ் எதிர்பார்க்கைகளே பல ஆண்டுகளாக வங்கியின் உபாயக் குறிக்கோள்களாகவும், இலக்குகளாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இவை பங்குதாரர் எதிர்பார்க்கைகளை திருப்திப்படுத்துகின்ற பெறுபேறுகளை நாடிச்செல்வதற்கும், செல்வதற்கும், அடைந்து கொள்வதற்கும் எம்மை இயலச் செய்துள்ளன, காலாகாலமாக பெறுமதி உருவாக்குகின்றன.

## முக்கியத்துவத்தை நிர்ணயித்தல் செயன்முறை

முக்கியத்துவ நிர்ணயித்தல் செயல்முறையானது, வங்கிக்கும், அதன் பங்குதாரர்களுக்கும் பெறுமதி உருவாக்கத்திற்கு முக்கியமாகக் காணப்படுகின்ற விரிவான, அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் செம்மையாக அனைத்து நோக்குகளையும் எடுத்துரைப்பதற்கு எம்மை இயலச் செய்துள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனை மற்றும் முக்கியத்துவக் கோட்பாடுகள் என்பவற்றின் தத்துவங்களின் அடிப்படையில், நாம் நிதியியல் மூலதனம் வழங்குனர்களுக்கு தொடர்புடையதாக மற்றும் முக்கியத்துவம் மிக்கதாகக் காணப்படுகின்ற அத்துடன், எமது வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்காளர்கள், ஒழுங்கு முறைப்படுத்துனர்கள் மற்றும் சமூகம் என்பனவற்றில் தாக்கம் செலுத்துகின்ற மக்களுக்கும், சூழலுக்கும் அவை தொடர்புடையனவாகக் காணப்படுகின்ற முக்கிய நோக்குகளை நிர்ணயித்துள்ளோம்.

## செயன்முறை



# முக்கியத்துவ விடயங்கள்

1. அடையாளப்படுத்தல்

முக்கியத்துவ விடயங்களை இனங்காணுகின்ற போது பல உள்ளீடுகள் கருத்திற் கொள்ளப்படுகின்றன. இதில் முதன்மை உள்ளீடு பங்குதாரர் ஈடுபாடுகளினூடாக வருகின்றது. ஏனைய குறிப்பிடத்தக்க உள்ளீடுகளானவை, சபை மற்றும் துணைக்குழு கூட்ட நடைமுறைகள் மற்றும் நாம் தொழிற்படுகின்ற தொழிற்பாட்டு சூழல் (நுண்பாக மற்றும் பேரண்ட) பற்றிய தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

2. மதிப்பிடுதலும் முன்னுரிமைப்படுத்தலும்

எமது உபாயம், பங்குதாரர்கள், செயலாற்றம் மற்றும் வாய்ப்புகள் அத்துடன், பொறுப்புடன் நாம் முன்னோக்கிச் செல்வதற்கான எமது இயலுமை என்பன மீதான முக்கிய நேரடித் தாக்கத்துடன் பெறுமதி உருவாக்கத்திற்கான எமது இயலுமையில் தாக்கம் செலுத்துகின்ற விடயங்களை நாம் மதிப்பிடுகின்றோம். பெறுமதி உருவாக்கம் மீதான அவற்றின் சாத்தியமான தாக்கத்தின் அடிப்படையில், அத்தகைய விடயங்களையும், முன்னுரிமைப்படுத்தலையும் நாம் அதனைத் தொடர்ந்து கருத்திற் கொள்கின்றோம். விடயங்களின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுகையில் நாம் பரிசீலனையில் கொள்வது அவற்றின்:

- வங்கிக்கான முக்கியத்துவம்
- பங்குதாரர்களுக்கான முக்கியத்துவ மட்டம்.


முக்கியத்துவ மட்டத்தின் அடிப்படையில், இந்நோக்குகள் அதன் பின்னர் முன்னுரிமைப்படுத்தப்பட்டு, ஒப்பீட்டு ரீதியாக உயர்வான தாக்கங்களுடன் கூடிய முக்கியத்துவ விடயங்கள் மீது தெளிவான கவனம் செலுத்தலை இயலச் செய்கின்றன. பங்குதாரர்கள் மீதும், வங்கி மீதும் ஒவ்வொரு முக்கிய நோக்கம் கொண்டுள்ள தாக்கத்தினை பின்வரும் முக்கியத்துவ அமைவுரு காண்பிக்கின்றது.

3. ஒருங்கிணைத்தல் (முகாமைத்துவ அணுகுமுறை)

தொழில் நடவடிக்கைகளுக்குள்ளும், பெறுமதி உருவாக்கச் செயன்முறையினுள்ளும் இந்நோக்குகளைக் கூட்டிணைப்பதற்கு பாடுபடுகின்ற முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடங்கி நாம் வங்கித் தொழில் நடவடிக்கைகளாக மற்றும் பெறுமதி உருவாக்க விடயங்களாக ஒருங்கிணைக்கின்றோம்.

4. வெளிப்படுத்தல்கள்

முக்கியமான முக்கியத்துவ நோக்குகளின் அடிப்படையில் தகவல் வெளிப்படுத்தலில் நாம் ஆராய்வுகளையும், சிறந்த தீர்மானத்தையும் பிரயோகிக்கின்றோம். ஒவ்வொரு நோக்கிலும் நாம் முக்கிய விடயங்கள் தொடர்பில் எவ்வாறு செயலாற்றியுள்ளோம் என்பது பற்றிய தகவல்களை வழங்குவதற்கு, பண்புசார் மற்றும் அளவுசார் வழிமுறைகளைப் பயன்படுத்தி, முடிந்தவரை அனைத்தையும் உள்ளடக்கி இருப்பதற்கு வழிமுறைகளை எடுக்கின்றோம்.



## முக்கிய தலைப்புகள்

காலப்போக்கில், வங்கிக்கும் எமது பங்குதாரர்களுக்கும் தாக்கம் செலுத்துகின்ற, வங்கிக்கு தொடர்புடைய முக்கிய விடயங்கள் கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ளன (குறுகிய - நீண்ட காலம்)

| முக்கிய தலைப்பு | முக்கியத்துவத்திற்கான காரணம் | வங்கியின் உபாய ஒருமுகப்படுத்தலுக்கான தொடர்பு | பங்குதாரர்கள் மற்றும் நிலைபெறத்தக்க அபிவிருத்தி என்பவற்றுக்கான தொடர்பு | நேரடி தாக்கத்துடன் கூடிய பங்குதாரர் | வங்கித் தொழில் நடவடிக்கைகளுக்குள் எவ்வாறு நாம் ஒருங்கிணைக்கின்றோம் (முகாமைத்துவ அணுகுமுறை | தொடர்புடைய வெளிப்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|
| 1. நிதியியல் உறுதிப்பாடு | பங்குதார்களின் / முதலீட்டாளர்களின் முதலீடுகளை பாதுகாத்தல் மற்றும் வாடிக்கையாளர்களின் வைப்புகளை பாதுகாத்தல்<br><br>வங்கி பற்றிய நல்லெண்ணத்தினை இது அதிகரித்து நிதியியல் ரீதியாக ஆற்றல் வாய்ந்த மற்றும் நம்பகமான வங்கி ஒன்றாக அதன் கீர்த்தியினை ஊக்குவிக்கின்றது. | உயர்வானது | உயர்வானது | பங்குதாரர்கள்<br><br>வாடிக்கையாளர்கள்<br><br>ஊழியர்கள் | அதிகரித்த வருவாய் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் என்பவற்றினை சமநிலைப்படுத்தல்<br>ஊடாக இலாபத் தன்மையினை உறுதி செய்தல்.<br>பிடித்து வைக்கப்பட்ட இலாபங்கள் மூலதன காப்புகளுக்கு துணையளிக்கின்றன.<br><br>சில்லறை வைப்புகள் மற்றும் நடுத்தர மற்றும் உயர் வருமான வகுப்பினர் மீது அதிகரித்த கவனம் செலுத்தல் | நிதியியல் மூலதன அறிக்கை<br><br>வியாபாரத் துறை மீளாய்வு<br><br>நிதியியல் கூற்றுகள் |
| 2. பொருளாதார செயலாற்றுகை | பொருதார செயலாற்றகை மீதான ஒருமுகப்படுத்தல் நேரடி பொருளாதார பெறுமதி உருவாக்கத்தினை இயக்குவதுடன் வாடிக்கையாளர்களுக்கான பகிர்ந்தளிப்பினை இயக்குகின்றது | உயர்வானது | உயர்வானது | பங்குதாரர்கள்<br><br>வாடிக்கையாளர்கள்<br><br>பங்காளர்கள் மற்றும் வழங்குனர்கள்<br><br>ஊழியர்கள் | பல்வேறு மார்க்கங்கள் ஊடாக வருவாயில் அதிகரிப்பு | நிதியியல் மூலதன அறிக்கை<br><br>வியாபாரத் துறை மீளாய்வு<br><br>நிதியியல் கூற்றுகள் |
| 3. முன்மதிமிக்க கொடுகடன் முகாமைத்துவம் மற்றும் ஆரோக்கியமான செயற்பாடற்ற கடன்கள் | கடன் வழங்குதலில் உரிய செயன் முறைகள் மற்றும் நெறிமுறைகளை பின்பற்றுவது எமது சொத்துத் தரத்தை உயர்வாக பேணுவதற்கு எம்மை இயலச் செய்வதுடன் எதிர்கால செயற்பாடற்ற கடன்களை வீழ்ச்சியடையச் செய்யும் | உயர்வானது | குறைவானது | பங்குதாரர்கள்<br><br>ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் | அடிப்படை அளவுகளுடனான மத்திய மயப்படுத்தப்பட்ட கொடுகடன் அனுமதிச் செயன்முறை | வியாபாரத் துறை மீளாய்வு<br><br>இடர் நேர்வு முகாமைத்துவம் |
| 4 உட்கட்டமைப்பு முதலீடுகள் | பௌதீக மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு முதலீடுகள் வியாபார விரிவுபடுத்தல் மற்றும் பெறுமதி உருவாக்கம் என்பவற்றுக்கு துணையளிக்கின்றன | உயர்வானது | மிதமானது | ஊழியர்கள்<br><br>வாடிக்கையாளர்கள்<br><br>பங்காளர்கள் மற்றும் வழங்குனர்கள் | தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீடுகள் தற்போது மட்டுப்படுத்தப்பட்டன கிளை விரிவுபடுத்தல்கள் தடுக்கப்பட்டு காணப்படுகின்றன | தயாரிக்கப்பட்ட மூலதனம்<br><br>புலமை மூலதனம் |
| 5. பணம் துரிதாக்கலுக்கு எதிரானவை | மோசடியான நடடிவக்கைகள் மற்றும் ஊழல் இடர்நேர்வை எதிர்கொள்ளலிருந்து வங்கியினை தடுப்பதற்கு | உயர்வானது | குறைவாளனது | ஊழியர்கள்<br>ஒழுங்கு முறைப்படுத்துனர்கள் | ஆற்றல் வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துடன் ஒன்றிணைந்து வாடிக்கையாளர் உரிய விழிப்பு கவனமும் உங்களது வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் செயன்முறைகளும் செயற்பாட்டிலுள்ளன | சமூக மற்றம் உறவு மூலதனம் |

# முக்கியத்துவ விடயங்கள்

| முக்கிய தலைப்பு | முக்கியத்துவத்திற்கான காரணம் | வங்கியின் உபாய ஒருமுகப்படுத்தலுக்கான தொடர்பு | பங்குதாரர்கள் மற்றும் நிலைபெறத்தக்க அபிவிருத்தி என்பவற்றுக்கான தொடர்பு | நேரடி தாக்கத்துடன் கூடிய பங்குதாரர் | வங்கித் தொழில் நடவடிக்கைகளுக்குள் எவ்வாறு நாம் ஒருங்கிணைக்கின்றோம் (முகாமைத்துவ அணுகுமுறை | தொடர்புடைய வெளிப்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|
| 6. நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் கலப்புமிக்க அனைவருக்குமான உற்பத்தி | உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று என்ற வகையில் வங்கியின் உறுதிப்பாட்டுக்கு ஊறு விளைவிக்காது நிதியியல் ரீதியாக பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு முடிந்தவரை நிதியியல் உறுதிப்பாட்டினை வழங்குவதற்கு நாம் பொறுப்புடையவராவோம்<br><br>வாடிக்கையாளர்களின் பல்வேறு நிதியியல் தேவைகளையும் நிறைவேற்றுகின்ற அதேவேளை அவர்களின் நிதியியல் இயலளவுகளுக்காக கட்டமைக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டங்களின் கீழ் கொடுகடனைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களை இயலச் செய்கின்ற பன்முகப்படுத்தப்பட்ட தீர்வுகளைக் கொண்டிருப்பது முக்கியமாகும். | உயர்வானது | உயர்வானது | வாடிக்கையாளர்கள் | வங்கியின் நிதிச் சொத்து பட்டியலானது பெரும்பான்மையாக குறைந்த வருமானம் உழைக்கின்ற மற்றும் நடுத்தர வருமானம் உழைக்கின்ற வாடிக்கையாளர்களுக்கு பணியாற்றுவதுடன் செயற்பாடற்ற கடன்களைக் குறைப்பதற்கும் சொத்து தரத்தினை உயர்வடையச் செய்வதற்கும் உயர் வருமானம் ஈட்டுபவர்கள் மீது அதிகரிக்கின்ற கவனம் செலுத்தலைக் கொண்டுள்ளது. மேலும், நிறுவன சார் வைப்புகள் மீது தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு நாம் சில்லறை மற்றும் நிறுவனசார் வைப்புகள் மீதும் கடன் பெறுநர் மீதும் கவனம் செலுத்துகின்றோம். | தொழில் பிரிவு மீளாய்வு - சிறிய, நடுத்தர தொழில் முயற்சி மற்றும் அபிவிருத்தி நிதி<br><br>சமூக மற்றும் உறவு மூலதனம் |
| 7. அதிகரித்த பெறுவழிக்காக பன்முகப்படுத்த தொடர்பு மையங்கள் | சிநேகம் மிக்க மற்றும் கவனிக்கின்ற வாடிக்கையாளர் சேவையுடன் ஒன்றிணைந்த பன்முகப்படுத்தப்பட்ட கலந்த வழிமுறை வாடிக்கையாளர்களை கவருவதற்கும் தக்க வைப்பதற்கும் அத்தியாவசியமானதாகும். வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்துவதும் வாடிக்கையாளர் உறவுகளும் வங்கி மீது சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற சேவைகளை வழங்குவதற்கு எம்மை இயலச் செய்கின்றன. | உயர்வானது | உயர்வானது | வாடிக்கையாளர்கள்<br><br>பங்காளர்கள் | பெறுவழிக்காக மறுசீரமைப்பு செய்யப்பட்ட வலைத்தளம், வாசற்படி சேவையணி கிளை வலையமைப்பு | சமூக மற்றும் உறவு மூலதனம்<br><br>தயாரிக்கப்பட்ட மூலதனம் |
| 8. வாடிக்கையாளர் அந்தரங்கமும் தரவுப் பாதுகாப்பும் | செயற்பாட்டிலுள்ள அதிகரிக்கின்ற டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமைகள் என்பவற்றுடன் வாடிக்கையாளர்களின் அந்தரங்கம் மற்றும் தரவுப் பாதுகாப்பு என்பவற்றுக்கான தேவை ஒன்றன்பின் ஒன்றாக அதிகரித்துள்ளது | உயர்வானது | உயர்வானது | வாடிக்கையாளர்கள் | தகவல் தொழில்நுட்ப திணைக்களம், அனைத்து பாதுகாப்பு நெறிமுறைகளும் செயற்பாட்டிலுள்ளன என்பதை உறுதி செய்வதுடன் அடிப்படை பாதுகாப்பு தர நியமங்களின் அடிப்படையிலமைந்த நியமங்களை தொடர்ந்தும் மேம்படுத்துகின்றது | புலமை மூலதனம்<br><br>இடர் நேர்வு முகாமைத்துவம் |
| 9. பங்குடமையாளர் தொடர்பூட்டலும் உரிமைகளும் | பொறுப்புக் கூறலையும் வெளிப்படைத் தன்மையினையும் பேணுதல். நிலைபெறத்தக்க தொழில் அபிவிருத்தி அனைத்து பங்குதாரர்களுக்கும் பொருளாதார பெறுமதி உருவாக்கத்தினை கொண்டிருப்பதன் மீது நாம் கவனம் செலுத்துகின்றோம். | உயர்வானது | உயர்வானது | அனைத்து பங்குதாரர்களும் | உறுதியான பங்குதாரர் ஈடுபாடு அனைத்து பங்குதாரர்களும் பொருளாதார பெறுமதியினை தோற்றுவித்தல். | மூலதன முகாமைத்துவ அறிக்கைகள், பங்குடமையாளர் தொடர்புகள் மற்றும் ஈடுபாடு |

| முக்கிய தலைப்பு | முக்கியத்துவத்திற்கான காரணம் | வங்கியின் உபாய ஒருமுகப்படுத்தலுக்கான தொடர்பு | பங்குதாரர்கள் மற்றும் நிலைபெறத்தக்க அபிவிருத்தி என்பவற்றுக்கான தொடர்பு | நேரடி தாக்கத்துடன் கூடிய பங்குதாரர் | வங்கித் தொழில் நடவடிக்கைகளுக்குள் எவ்வாறு நாம் ஒருங்கிணைக்கின்றோம் (முகாமைத்துவ அணுகுமுறை | தொடர்புடைய வெளிப்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|
| 10. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மாறுதலடைதல்கள் | அதிகரித்த செயன்முறை வினைத்திறன், காத்திருக்கும் நேரத்தை குறைத்தல் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியினை அதிகரித்தல் என்பவற்றை இது எமக்கு வழங்குகின்றது.<br><br>நிதியியல் தொழில்நுட்பத்திற்கு வங்கித் தொழில் சேவைகள் மாறுதலடைகின்றதுடன் தொழில்நுட்பமானது தொழிற்பாட்டு செலவினங்களை குறைக்கின்ற அதேவேளை, வாடிக்கையாளர்களுக்கு வசதியினையும் பெறுவழியினையும் அதிகரிக்கின்றன. | உயர்வானது | மிதமானது | ஊழியர்கள்<br><br>வாடிக்கையாளர்கள்<br><br>பங்காளர்கள் மற்றும் வழங்குநர்கள் | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பில் முதலீடுகள் | புலமை மூலதனம்<br><br>தயாரிக்கப்பட்ட மூலதனம் |
| 11. ஆளுகையும் இணங்குவித்தலும் | நாம் பங்குதார்கள், ஒழுங்குபடுத்துநர்கள், அரசு, எமது வாடிக்கையாளர்கள் ஆகியோருக்கு பதிலளிக்க வேண்டியவர்களாகவுள்ளோம். ஆகையினால் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய நெறிமுறை சார்ந்த நடத்தை, அவர்களின் முதலீடுகளைப் பாதுகாத்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பணிப்புடைகள் உள்ளடங்கலாக வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தான சட்டம் மற்றும் ஏனைய நியதிச்சட்டங்கள் அத்துடன் ஒழுங்கு விதிகள் என்பவற்றை கடைப்பிடித்தல் அகியவற்றை வலுவான தலைமைத்துவத்துடன் கூடிய முறையான ஆளுகை கட்டமைப்பு (ஆளுகை) உறுதி செய்கின்றது | உயர்வானது | மிதமானது | ஊழியர்கள்<br><br>ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் | பல்வேறு வலிமையான ஆளுகை கட்டமைப்புகள் மற்றும் ஒழுங்கு விதிகள் மூலம் வழிகாட்டப்படுதல்<br><br>தனியார் மற்றும் அரசாங்கத்துறை பின்னணியுடன் வலிமையான தலைமைத்துவம்<br><br>கிரமமான இணங்குவித்தல் பரிசோதனைகள் | நிறுவன ஆளுகை பணிப்பாளர் சபை மற்றும் துணைக்குழு அறிக்கைகள் |
| 12. இடர்நேர்வு முகாமைத்துவம் | நிதியியல் சேவைகளானவை பேரண்ட மற்றும் நுண்பாக சூழலிருந்து வரும் மோசமான நிலைகளுடன் இயல்பாகவே இணைந்துள்ளன. இடர்நேர்வுகளை தணிப்பதற்கும், வங்கியினதும் பங்குதாரர்களதும் நலன்களைக் காப்பதற்கும் செயலூக்கம் மிக்க இடர்நேர்வு முகாமைத்துவம் அவசியமாகும் | உயர்வானது | மிதமானது | பங்குதாரர்கள்<br><br>வாடிக்கையாளர்கள்<br><br>ஊழியர்கள்<br><br>பங்காளர்கள் மற்றும் வழங்குனர்கள்<br><br>ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் | இடர்நேர்வுத் திணைக்களமானது நியதிச்சட்ட அடிப்படை அளவுகளுடன் இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் இனங்குவித்தலை உறுதி செய்கின்றது | இடர்நேர்வு முகாமைத்துவம் |
| 13. நிதியியல் வாடிக்கையாளர் உரிமைகளும் தகவலுக்கான பெறுவழிகளும் | வாடிக்கையாளர்களின் பணத்திற்கும் கொடுகடன் நிபந்தனைகள் மீது வெளிப்படத் தன்மை மிக்கதாக இருப்பதற்கும் நாம் பொறுப்புக் கூறத் தக்கவர்களாவோம் | உயர்வானது | உயர்வானது | வாடிக்கையாளர் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள்<br><br>சமூகம் | சந்தைப்படுத்தல் திணைக்களமும் தகவல் திணைக்களமும் பௌதீக ரீதியாகவும் டிஜிட்டல் வாயிலாகவும் தகவல்களைப் பரப்புகின்றன. | சமூக மற்றும் உறவு மூலதனம் |
| 14. ஆக்கத்திறன் முகாமைத்துவம் (தொழில் / ஆட்சேர்ப்பு, பயிற்சி, அங்கீகரித்தல், வெற்றியடைதல் போன்றன) | ஊழியர்கள் வங்கியினை நிலைநிறுத்தி, அவர்களது அனுபவம். திறன்கள் மற்றும் கற்பதற்கான அத்துடன் வளர்ச்சியடைவதற்கான இயலளவு ஊடாக தொழில் விரிவடைவதை இயலச் செய்கின்றனர். | உயர்வானது | உயர்வானது | ஊழியர்கள் | கொள்கைகளுக்கு அமைவாக ஆக்கத்திறன் செயற்பாடுகளை மனித வளத் திணைக்களம் மேற்கொள்கிறது. | மனித மூலதனம் |

# முக்கியத்துவ விடயங்கள்

| முக்கிய தலைப்பு | முக்கியத்துவத்திற்கான காரணம் | வங்கியின் உபாய ஒருமுகப்படுத்தலுக்கான தொடர்பு | பங்குதாரர்கள் மற்றும் நிலைபெறத்தக்க அபிவிருத்தி என்பவற்றுக்கான தொடர்பு | நேரடி தாக்கத்துடன் கூடிய பங்குதாரர் | வங்கித் தொழில் நடவடிக்கைகளுக்குள் எவ்வாறு நாம் ஒருங்கிணைக்கின்றோம் (முகாமைத்துவ அணுகுமுறை | தொடர்புடைய வெளிப்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|
| 15. தொழில் சார் ஆரோக்கியமும் பாதுகாப்பும் | ஊழியர்களின் நிம்மதி மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றை உறுதி செய்தல் | உயர்வானது | உயர்வானது | ஊழியர்கள் | ஊழியர்கள் ஆரோக்கியத்திற்கும் பாதுகாப்பிற்கும் இடர் விளைவிக்கின்ற நடத்தைகள் எதுவுமில்லை | மனித மூலதனம் |
| 16. ஊழியர் உரிமைகளும் கூட்டாக பேரம் பேசுதலும் | அவர்களது நிதியில் கரிசனைகளும் பணி நிலமைகளும் தானாகவே நிலைபெறுவதற்கும் வளர்ச்சியடைவதற்கும் வங்கிக்கென பாதுகாக்கப்பட வேண்டும் | உயர்வானது | உயர்வானது | ஊழியர்கள் | இலங்கை வங்கித் தொழில் ஊழியர் சங்கத்துடனான உடன்படிக்கை | மனித மூலதனம் |
| 17. பன்முகப்படுத்தல், அனைவரையும் வசதிக்குட்படுத்தல் மற்றும் சமவாய்ப்புகள் | நிலைபெறத்தக்க அபிவிருத்தி மீதான எமது மையப்படுத்தலின் காரணமாக சமத்துவமான தொழில் தருநராக நாம் அங்கீகரிக்கப்பட வேண்டும். பாலினம், மதம், வயது மற்றும் மாற்றுத்திறன் என்பவற்றை பொருட்படுத்தாது எமது ஊழியர்கள் சமவாய்ப்பு கொண்டிருப்பதற்கான உரிமைகளை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.<br><br>பல கலாச்சார பின்னணிகள், பல்வேறு வயதுகள் மற்றும் பாலினங்களை பிரதினிதித்துவப்படுத்தும் பலதரப்பட்ட பணியாளர்களை நாங்கள் நிலைனிறுத்துகிறோம். | உயர்வானது | உயர்வானது | ஊழியர்கள் | பக்கச்சார்பற்ற ஆட்சேர்ப்பு ஊடாக | மனித மூலதனம் |
| 18. தொழில் தொடர்ச்சி | உலகளாவிய நோய்த் தொற்று ஏற்பட்ட போது அது தொழில் எதிர்பாரா நிலைக்கான தேவையினை எடுத்துக்காட்டியது. அத்தகைய திட்டங்கள் எதிர்கால இடையறுகளுக்கு தயாராக இருப்பதற்கு அவசியமானதாக காணப்படுகிறன | உயர்வானது | உயர்வானது | அனைத்துப் பங்குதாரர்களும் | தொழில் தொடச்சி திட்டங்கள் வங்கி ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்தவத்தை கிரமாக கணிப்பிடுகிறது<br><br>அனர்த்த மீட்பு ஒத்திகைகளை நாம் மேற்கொள்கின்றோம். | |
| 19. சந்தைப்படுத்தல் மற்றும் சுட்டுத்துண்டிடல் | வர்த்தகநாம விழிப்புணர்விற்கும் உற்பத்தி மற்றும் சேவை தகவல்களை பரப்புவதற்கும் முக்கியமானது. | உயர்வானது | மிதமானது | வாடிக்கையாளர்கள்<br><br>சமூகம்<br><br>பங்காளர்கள் மற்றும் வழங்குனர்கள் | பல எண்ணிகையான ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகநாம முயற்சிகளை சந்தைப்படுத்தல் அணி நடாத்துகின்றது | சமூக மற்றும் உறவு மூலதனம்<br><br>புலமை மூலதனம் |

| முக்கிய தலைப்பு | முக்கியத்துவத்திற்கான காரணம் | வங்கியின் உபாய ஒருமுகப்படுத்தலுக்கான தொடர்பு | பங்குதாரர்கள் மற்றும் நிலைபெறத்தக்க அபிவிருத்தி என்பவற்றுக்கான தொடர்பு | நேரடி தாக்கத்துடன் கூடிய பங்குதாரர் | வங்கித் தொழில் நடவடிக்கைகளுக்குள் எவ்வாறு நாம் ஒருங்கிணைக்கின்றோம் (முகாமைத்துவ அணுகுமுறை | தொடர்புடைய வெளிப்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|
| 20. அபிவிருத்தி நிதி மற்றும் சமூக அபிவிருத்தி | குறைந்த மற்றும் நடுத்தர வருமான வாடிக்கையாளர்களுடன் நெருக்கமாக பணியாற்றும் ஒரு சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாக, | உயர்வானது | உயர்வானது | வாடிக்கையாளர்கள்<br><br>சமூகம் | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் நிறுவன நிதி மீது கவனம் செலுத்தும் ஒரு தனியான திணைக்களம் | |
| 21. பசுமை சக்தி நிதியிடல் | காலநிலை மாற்றம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திக்கான தேவையுடன், நிலைபேறான நிதி மற்றும் பசுமைப் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் வாய்ப்புகளுடன் பசுமை சக்திக்கு நிதியளிப்பதை நோக்கிய பொறுப்பினை நாம் கொண்டுள்ளோம். | உயர்வானது | உயர்வானது | வாடிக்கையாளர்கள்<br><br>சமூகம் | பசுமைச் சக்தி அடிப்படையிலான கருத்திட்டங்களுக்கும் நிலைபேறான திட்டங்களுக்கும் நிதியளித்தல். | |
| 22. சக்தி மற்றும் நீர் நுகர்வு முகாமைத்துவம் | வளங்கள் குறைந்து போதல் மற்றும் காலநிலை மாற்றத்தின் அச்சுறுத்தலை நாம் எதிர்கொள்கிறோம். | மிதமானது | குறைவானது | ஊழியர்கள்<br><br>சமூகம் | தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளில் சூரிய மின்சக்தி உற்பத்தி மற்றும் அவதானத்துடனான நுகர்வு நடத்தை | இயற்கை மூலதனம் |
| 23. கழிவு முகாமைத்துவம் | செயற்பாடுகள் சுற்றுச் சூழலுக்கு பாதகமானவை அல்ல என்பதை உறுதி செய்தல் | மிதமானது | குறைவானது | ஊழியர்கள்<br><br>சமூகம் | உள்ளூர் நகராட்சி குப்பை சேகரித்தல் மூலம் கழிவுகளை சேகரித்தல். மீள் சுழற்சி நிறுவனம் மூலம் பிளாத்திக் கழிவு சேகரித்தல் | இயற்கை மூலதனம் |
| 24. பேரண்டச் சூழல் | நாட்டின் பொருளாதார நிலைமைகள் மற்றும் நாணய மற்றும் இறைக் கொள்கைகள் எனபன வங்கித் தொழில் முறைமையிலும் பரிவர்த்தனைகளை நடத்துவதற்கான வாடிக்கையாளர் இயலுமையிலும் பெரிதும் பாதிக்கின்றன. அரசியல் நகர்வுகள், தொழில் மாற்றங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றும் சமூகப் போக்குகள் அனைத்தும் வங்கியின் மூலோபாய கவனம் மற்றும் பங்குதாரர் பெறுமதி உருவாக்கத்திற்கான எமது இயலுமை என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. | உயர்வானது | உயர்வானது | அனைத்துப் பங்குதாரர்களும் | வெளிவாரி நிகழ்வுகளையும் மற்றும் நாணயக் கொள்கை மாற்றங்களையும் நாளாந்தம் கண்காணித்தல் | இயற்கை மூலதனம் வெளிவாரிச் சூழல் |

## உள்ளகத் தொழிற்பாட்டுச் சூழல்

வங்கியின் உள்ளகப் பணிச்சூழலை மதிப்பிடுவதன் மூலம், பெறுமதியை உருவாக்குவதற்கு, வலிமைகள் மற்றும் வாய்ப்புகளைப் பயன்படுத்தும் அதேவேளை, சாத்தியமான இடர் நேர்வுகளை ஏற்படுத்தக்கூடிய பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களைக் குறைக்க அல்லது இல்லாதொழிப்பதற்கு எமக்கு இயலுமாகவுள்ளது.

| வலிமைகள், பலவீனங்கள், வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் | தாக்கத்துடன் கூடிய முக்கிய தலைப்புகள் | முக்கிய விடயம் |
|---|---|---|
| வலிமைகள் | 1,6 | • பாராளுமன்ற சட்டத்தினால் பொறுப்பாணை அளிக்கப்பட்ட வீடமைப்பு வங்கியாக இருத்தல் |
| | 1,2 | • 51மூ அரசாங்க பங்குகள் வங்கிக்கு பல வழிகளிலும் ஊக்கவாற்றலளிக்கின்றன. |
| | 19 | • 36 ஆண்டுகளுக்கும் மேல் கட்டியெழுப்பப்பட்ட ஒப்பீட்டளவில் உயர்வான வர்த்தக நாமப் பெறுமதி |
| | 1,20 | • தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 49மூ பங்குகள் மற்றும் வீடமைப்பு அமைச்சுடனான உறவு |
| | 11 | • பட்டியலிடப்பட்ட நிறுவனமாக இருப்பதனால், ஏனைய அரச வங்கிகளை விட சிறந்த ஆளுகையின் உயர்வான மட்டத்தினையும், இணங்குவித்தல் தேவைப்பாடுகளையும் ஏற்படுத்துகின்றது. |
| | 1,2 | • கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடலானது, ஏனையவற்றை விடவும் நிறுவனத்திற்கு சுயாதீனமான பெறுமதியினை வழங்குகிறது |
| | 6 | • ஊழியர் சேமலாப நிதியம் பிணையளிக்கப்பட்ட வீட்டுக் கடன்களை வழங்குவதற்கு சிறப்புரிமை பெற்ற நான்கு நிறுவனங்களில் ஒன்றாக திகழ்தல் |
| | 1,2,3 | • ஈடு மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் பிணையளிக்கப்பட்ட கடன்கள் மீதான குறைந்த மூலதனப் போதுமைத் தேவைப்பாடானது, ஏனைய வங்கிகளுடன் ஒப்பிடும்போது எச்டிஎப்சி வங்கியைப் பெரிதும் ஊக்கவாற்றலளிக்கின்றது. |
| | 2,3 | • பெரும்பாலும், வதிவிட ஆதனங்கள் மூலம் பிணையளிக்கப்பட்ட நாட்டில் சராசரியாக நீண்ட நிதியியல் சொத்துக்களைத் தளமாகக் கொண்டிருத்தல் |
| | 14 | • போட்டியாளர்களை விட ஒப்பீட்டளவில் சிறந்த கற்ற மற்றும் இளைய ஊழியர்கள் |
| | 14 | • பணியாளர்களின் உயர்மட்ட அர்ப்பணிப்பு மற்றும் குறைந்தளவான பணியாளர் புரள்வு |
| | 7 | • 140 இற்கும் மேற்பட்ட நகரங்களில் பிரசன்னத்துடன் கூடிய கையடக்க கணனித் தொழிற்பாடு |

| | தாக்கத்துடன் கூடிய முக்கிய தலைப்புகள் | முக்கிய விடயம் | எமது அணுகுமுறை |
|---|---|---|---|
| பலவீனங்கள் | 6 | • குறைந்த வருமான வகுப்பினர் மற்றும் நடுத்தர வருமான வகுப்பினர் சந்தைகளில் உயர்வான திரட்சியாகக் காணப்படுதல் | பன்முகப்படுத்தல் ஊடாக உயர் வருமானம் ஈட்டுவோரை இலக்கு வைப்பதற்கான சாத்தியப்பாடு காணப்படுகிறது |
| | 6,20,21 | • உயர் மட்டத்திலான நிறுவனசார் வைப்புகள், குறைந்த சேமிப்புகள் மற்றும் மூலதனம் என்பன மூலம் நிதியங்களுக்கான உயர்வான செலவு ஏற்படுத்தப்படுகின்றது | ஏற்கனவே காணப்படுகின்ற உற்பத்திகளை மறுசீரமைத்தல் மற்றும் சேமிப்புகளை ஊக்குவித்தல் அத்துடன், வைப்பு அடிப்படையில் அமைந்த உற்பத்திகள் ஊடாக சில்லறை வைப்பு திரட்டலில் அதிகரிக்கப்பட்ட முயற்சி |
| | 6,20,21 | • மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான நிலையான வைப்பு வாடிக்கையாளர் மீது உயர்ந்த அளவில் தங்கியிருந்தல் | வெகுமதிகள் மற்றும் சலுகைகள் ஊடாக வைப்பு வாடிக்கையாளர்களைக் கவருவதற்கு கவனம் செலுத்தலை அதிகரித்தல் |
| | 19 | • மட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக நாம விழிப்புணர்வு | அதிகரிக்கின்ற ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் முயற்சிகள் |
| | 14 | • செயலாற்றல் அடிப்படையிலமைந்த வெகுமதிகள் மற்றும் ஊக்கத்தொகை கலாசாரம் காணப்படாமை | உயர்வான தக்க வைத்தல் வீதத்தினை தாக்கம் செலுத்தியுள்ள நன்மைகளை கவருதல் |
| | 2 | • தொழிற்துறையுடன் ஒப்பிடுகையில் உயர்வான தொழிற்பாட்டுச் செலவும் குறைவான உற்பத்தித் திறனும் | உற்பத்தித் திறனை மேம்படுத்தவதற்கு தொழில்நுட்ப உட்கட்டமைப்பைப் பயன்படுத்தல் மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகளைக் குறைத்தல் |
| | 7 | • மட்டுப்படுத்தப்பட்ட கிளை வலையமைப்பும் வாடிக்கையாளரைச் சென்றடைதலும் | இ-வங்கிச் சேவையினைப் பயன்படுத்துமாறு வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கும் அதேவேளை ஊக்குவித்தல் மற்றும் தூரப்பிரதேசங்களைச் சென்றடைவதற்கு கையடக்க கணனி அணியினைத் திரட்டுதல். |

| | தாக்கத்துடன் கூடிய முக்கிய தலைப்புகள் | முக்கிய விடயம் | எமது அணுகுமுறை |
|---|---|---|---|
| வாய்ப்புகள் | 6,24 | • நாட்டின் வீடமைப்பு நிதிச் சந்தையில் பாரியளவிலான வளர்ச்சிச் சாத்தியம் | நாடு பூராகவும் அமைவிடங்களுக்கு மத்தியில் பலநூறு இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புகளைப் பிரயோகித்தல் மற்றும் டுநுனு/டிஜிட்டல் பலகங்களைப் பயன்படுத்தல் |
| | 24 | • தொழிற்துறையில் இரு முழுமையாக வாக்குறுதியளிக்கப்பட்ட வீடமைப்பு நிதிச் செயற்பாட்டாளர்கள் மாத்திரம் | வீடமைப்பினை ஒருமுகப்படுத்தி, கொடுகடன் திட்டங்களைத் தொடர்ந்தும் வழங்குகின்ற அதேவேளை, சந்தையின் பல்வேறு துறைகளையும் இலக்கிடல் |
| | 6,20,24 | • வீடமைப்புக் கடன் சந்தையில் குறிப்பாக சேம நிதியத்தின் உயர்வாக சம்பளம் உழைக்கும் உறுப்பினர்கள் மத்தியில் பாரியளவு அணுகப்படாத ஊ.சே.நி பிணையளிக்கப்பட்ட சந்தை | நிதிச் சொத்தினுள் ஊ.சே.நி. அடிப்படையில் அமைந்த உற்பத்திகள், ஒருமுகப்படுத்தப்பட்ட தொடர்பூட்டல் மற்றும் சந்தைச் செயற்பாடுகள் ஊடாக ஊக்குவிக்கப்படுகின்றன. |
| | 6,20,24 | • பொருளாதார வளர்ச்சியின் முக்கிய இயக்கியாக வீடமைப்புத் துறை மீது அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது | இலக்கிடப்பட்ட வகுப்பினர்களுக்கு உதவுதொகை அளிக்கப்பட்ட கடன் வழங்கல் திட்டங்களை வாடிக்கையாளர்களுக்கு நாம் வழங்ககின்றோம் |
| | 6,24 | • வீடமைப்பு முதலீட்டுக்காக அதிகரிக்கின்ற கேள்வி | வீட்டக் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் நன்மைகளை தொடர்பூட்டுகின்ற உற்பத்தித் தகவல்கள் |
| | 6,20,21,24 | • உயர்வான நகரமயமாக்கல் நகரப் பிரதேசங்களில் அதிக வாய்ப்புக்களை தோற்றுவிக்கின்றது. | வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களைக் கவருவதற்கு இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புகள் |
| | 6,20,21,24 | • அதிகரிக்கின்ற கூட்டு ஆதனச் சந்தையானது நடுத்தர வருமான குடும்பங்கள் மத்தியில் வீடமைப்பு நிதிக்கான தேவையை அதிகரிக்கும் என எதிர்பார்க்கின்றது | வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களைக் கவருவதற்கு இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புகள் |
| | 6,,21,24 | • அதிகரிக்கின்ற நடுத்தர வருமான வகுப்பு மக்கள் தொகையின் பரந்தளவான வகுப்பினருக்கு முறையான வீடமைப்பு நிதிக்கான வசதி கிடைக்கப் பெறுகின்ற தன்மையினையும் அதிகரிகின்றது | வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களைக் கவருவதற்கு இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புகள் |
| | 6,24 | • நாட்டின் தொழில் விகிதத்தில் அதிகரிக்கின்ற போக்கு, சேமிப்புக்கள் மற்றும் கடன்பெறும் வாய்ப்புகளை அதிகரிக்கின்றது | வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களைக் கவருவதற்கு இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புகள் |
| | 3,20,21,24 | • பொருளாதாரமானது விவசாயத்திலிருந்து சேவைகளுக்கும், கைத்தொழில்களுக்கும் கட்டமைக்கப்பட்ட விதத்தில் மாறுதலானது பிணையளிக்கப்பட்ட கடன் வழங்கலுக்கான அதிக வாய்ப்பினைத் தோற்றுவிக்கின்றது. | தனியார் மற்றும் அரசாங்க சேவை துறைகளிலுள்ள வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களைக் கவருவதற்கு இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புகள் |
| | 6,20,21 | • உற்பத்தி பன்முகப்படுத்தல் மற்றும் ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுக்கான சேவை வழங்கல் என்பவற்றுக்கு அதிகம் எதிர்கால வாய்ப்புகள் | ஏற்கனவே காணப்படுகின்ற வாடிக்கையாளர்களுக்காக நிதியியல் உற்பத்திகள் மற்றும் டிஜிட்டல் சேவைகளின் வழங்கலுடன் கூடிய ஏனைய சேமிப்புகள், வைப்பு மற்றும் கொடுகடன் திட்டங்களாக தொடர்ந்தும் பன்முகப்படுத்தல் (உ-ம்) ர்னுகுஊ பற்று அட்டை, துரளவியல போன்றன. |
| | 13,19 | • வர்த்தக நாம ஊக்குவிப்புக்காக மிகுந்த வாய்ப்புகள் | மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் பல நூறு இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புக்கள நடாத்தப்பட்டன. வளர்ச்சியடைந்து வரும் சந்தை மற்றும் வர்த்தக நாம உபாயம் என்பவற்றின் பாகமாக நாம் பல எண்ணிக்கையான அமைவிடங்களில் டுநுனு/ டிஜிட்டல் பலகங்களை இடம்பெறச் செய்துள்ளோம். |
| | 7 | • கிளை வலையமைப்பு விரிவாக்கலுக்கான அதிக சந்தர்ப்பங்கள் | சில்லறை தொடர்பு நிலையங்களை விரிவுபடுத்தல் மீது தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட்டது, ஆயினும், மூலதன நிறைவு செய்தலுக்கு இரண்டாம் நிலையாகவே காணப்படுகிறது.<br><br>அனைத்து அவசியமான டிஜிட்டல் தொடர்பு நிலையங்களையும் நிறுவுவதற்கான மாற்று வழியினை நாம் பின்பற்றுகின்றோம். |

# முக்கியத்துவ விடயங்கள்

| | தாக்கத்துடன் கூடிய முக்கிய தலைப்புகள் | முக்கிய விடயம் | எமது அணுகுமுறை |
|---|---|---|---|
| அச்சுறுத்தல் (சாத்தியமான இடர் நேர்வுகள்) | 21,24 | • வீடமைப்பு நிதிச் சந்தையில் போட்டிமிக்க வட்டி வீதங்களில் புத்தாக்கமும், ஆற்றல் வாய்ந்ததுமான கடன் உற்பத்திகளுடன் கூடிய பல வங்கிகள் செயற்படுகின்றன | வாடிக்கையாளர் சேவையினை மேம்படுத்துவதற்கும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் பயிற்சியுடன் கூடிய வினைத்திறனுக்கும் நடவடிக்கை எடுத்தல்<br><br>இலக்கிடப்பட்ட ஊக்குவிப்பு சந்தை முயற்சிகள் ஊடாக நிதியியல் மட்டுப்பாடுகள் கூடிய வகுப்பினரை இலக்கிடல் |
| | 11,18 | • முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்பு மற்றும் ஒன்று சேர்த்தல்கள் பற்றிய அரசாங்கத்தின் கொள்கையிலிருந்து உருவாகின்ற நிறுவனத்தின் எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மை | அத்தகைய மாறுதல்களுக்கான தயார் நிலையில் இலாபத் தன்மையினை, முன்மதிமிக்க வள முகாமைத்துவத்தினை அத்துடன் தொழில் முயற்சி செயன்முறைகளை தொடர்ந்தும் பேணுதல் |
| | 1,2,6,20,24 | • செலவுச் சிக்கனமான நிதியிடல் மூலங்கள் ஒழுங்கு செய்யப்படவில்லையாயின், நடுத்தர வருமான வீடமைப்பு நிதிச் சந்தைக்குள் ஊடுருவதற்கு பாரிய வங்கிகள் கடுமையாக முயற்சிப்பது நடுத்தர காலத்தில் எச்டிஎப்சி வங்கியின் இலாபத்தினை அச்சுறுத்தும் | இலக்கிடப்பட்ட ஊக்குவிப்பு சந்தை முயற்சிகள் ஊடாக நிதியியல் மட்டுப்பாடுகள் கூடிய வகுப்பினரை இலக்கிடல் |
| | 2,4,10 | • பெரும்பான்மையான அரசாங்க உரித்துகள் உபாய சவால்களையும், தொழிற்பாட்டு முட்டுக்கட்டைகளையும் தோற்றுவிக்கின்றன. இவை, சந்தைப் போட்டி அனுகூலங்களை அனுபவிப்பதிலிருந்து எச்டிஎப்சி வங்கியினைத் தடுக்கின்றது. | அரச மற்றம் தனியார் துறை வைப்புகளின் ஆரோக்கியமான சமநிலையை வைத்திருப்பதற்கு வைப்புச் சமநிலையைப் பரவலாக்குதல் |
| | 1,2,12 | • நீண்டகால. குறைவான செலவிலான நிதியிடல் மூலங்கள் பற்றாக்குறை | வரிக்குப் பிந்திய இலாபத்தினை அதிகரிப்பதற்கு, வருமான வளர்ச்சி மற்றும் முன்மதிமிக்க நிதியியல் முகாமைத்துவத்தினைப் பின்பற்றுதல்<br><br>நிதியங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முறி வழங்கல் சாத்தியம் |
| | 12,24 | • உயர் தளம்பல் மிக்க நிதிச் சந்தையானது அடிக்கடி வட்டி வீதங்கள் பொருந்தாமைக்கு வங்கியினை உட்படுத்துகின்றன. | சந்தை இடர்நேர்வினை செயலூக்கத்துடன் முகாமை செய்வதை மையப்படுத்திய நிதியியல் இடர் நேர்வு முகாமைத்துவம் |
| | 1,2 | • பாசல் III இன் நடைமுறைப்படுத்தலுடன் மூலதனப் போதுமை தேவைப்பாட்டினை அதிகரித்தல். இது, ஏற்கனவே காணப்படுகின்ற நியதிச்சட்ட கட்டமைப்பினுள் நிறைவேற்றப்படுவதற்கு கடினமாக அமையலாம். | வரிக்குப் பிந்திய இலாபத்தினை அதிகரிப்பதற்கு வருமான வளர்ச்சி மற்றும் முன்மதிமிக்க நிதியியல் முகாமைத்துவத்தினைப் பின்பற்றுதல் மூலதன தேவைப்பாட்டினுள் இது உட்செலுத்தப்படலாம். |

# உபாயமும் வள ஒத்துக்கீடும்

2022 ஆம் நிதியாண்டு முழுவதும் தொடர்ந்தும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும், இலக்குகளையும், எமது உபாயத் திட்டம் வழிநடாத்தியது. உபாயத் திட்டமானது, தொழிற்துறையினுள், போட்டி மிக்கதாகவும், புத்தாக்கம் மிக்கதாகவும் விளங்குவதற்கான எமது விருப்பத்தினைப் பிரதிபலிக்கின்ற அதேவேளை, முன்மதிமிக்க இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் வலுவான நிறுவன ஆளுகை என்பன மீது கட்டியெழுப்பப்பட்டுள்ள ஆற்றல்மிக்க நிறுவன காலாசாரத்தினை உருவாக்குகின்றது. நிதியியல் இடையீட்டாளர் என்ற வகையில், வங்கித்தொழில் துறையினுள் நிலைபெறத்தக்க வளர்ச்சி மற்றும் உறுதிப்பாடு வாயிலாக நாம் இடர் உணர்வுத் தன்மைமிக்க கலாசாரம் மற்றும் வலிமையான ஆளுகை என்பவற்றைப் பின்பற்றுவதன் மீது, அதிகரிக்கின்ற ஒருமுகப்படுத்தலைக் கொண்டிருக்கின்றோம். நல்லெண்ணம் மற்றும் சிறந்த நன்மதிப்பு, சேவை மட்டங்களை மேம்படுத்தல் மற்றும் அனைவரையும் உள்ளடக்குகின்ற உற்பத்திகள் என்பன வாயிலாக மாத்திரமே வாடிக்கையாளர் நம்பிக்கையினை ஈட்டிக் கொள்ளலாம். இவை அனைத்தையும் மனதிற்கொண்டு, அளவு அடிப்படையிலமைந்த தொழிற்பாட்டு இலக்குகளைக் கொண்ட தொகுதி ஒன்றினால் இயக்கப்படுகின்ற உபாயக் குறிக்கோள்களைப் பின்பற்றிச் செல்வதன் வாயிலாக நாம் உபாய ரீதியான ஒருமுகப்படுத்தலை வடிவமைத்துள்ளோம்.

எமது உபாயமானது பின்வரும் குறிக்கோள்களால் இயக்கப்படுகின்றன.

எமது பார்வை மற்றும் பணியினால் செயற்படுத்தப்படும் பரந்த மூலோபாய கண்ணோட்டம்.

S1: வீட்டு நிதிச் சந்தையில் முன்னணி வகித்தல்

S2: நிலைபேறான மற்றும் தனி நிறுவனமாகத் திகழ்தல்

நாம் மேற்கொள்ள விரும்பும் மூலோபாய கண்ணோட்டம் மற்றும் நோக்கத்தை ஆதரிப்பதற்கான அணுகுமுறைகள்

S3: வலுவான மற்றும் ஆற்றல்மிக்க பணியாளர்கள்
S4: இடர் உணர்வு கலாசாரம்
S5: தொழில்நுட்ப ரீதியான பொருத்தம்
S6: ஒழுங்குமுறைத் தேவைகளுடன் முழுமையான இணக்கம்

குறுகிய காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கு

## பரந்தளவிலான உபாய ஒருமுகப்படுத்தலும் தொழிற்பாட்டு இலக்குகளும்

நிதியியல் ரீதியாக பாதிக்கப்படக் கூடியவர்களுக்கான நிலைபேறான தீர்வுகளை வழங்குகின்ற ஒப்பீட்டளவில் சிறிய வங்கி ஒன்றாக நாம் எமது தொழிற்பாட்டு இலக்குகளையும், நியதிச்சட்டக் கடப்பாடுகளையும் பேணுவதற்கான பொறுப்பொன்றினைக் கொண்டுள்ளோம். தொழிற்பாட்டு இலக்குகளைப் பேணுவதென்பது உபாய ஒருமுகப்படுத்தலை நாம் நிறைவு செய்ததை அளவிடுகின்ற அதேவேளை, பங்குதாரர் பெறுமதி உருவாக்கத்தினை நாம் தொடர்ந்து உச்சப்படுத்துவதை உறுதி செய்கின்ற அளவுகோல்களை வழங்குகின்றது.

அண்மைய பொருளாதார இடையூறுகளும், உலகளாவிய நோய்த்தொற்றில் இருந்து வந்த முந்திய தாக்கங்களும் விருப்பப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு சவால்களைத் தோற்றுவித்துள்ளன. இருந்தும், அனைத்து மூலதனங்களினதும் பிரதானமாக நிதியியல் மூலதனத்தினதும், ஏனைய முக்கிய மூலதனங்களினதும் முன்மதிமிக்க முகாமைத்துவத்தின் ஊடாக நாம் தொடர்ந்தும் இலாபகரமிக்கதாக இருக்கின்றோம்.

### செயற்பாட்டு இலக்குகள்

1. சில்லறை வைப்புத் தொகையை அதிகரித்தல்
2. அதிகரித்த சொத்துக்கள்
3. அதிகரித்த சமபங்கு
4. முதலீடுகள் மீதான இலாப அதிகரிப்பு
5. மூலதன இருப்பு அதிகரிப்பு
6. கடன் மதிப்பீட்டை மேம்படுத்துதல்
7. NPL அளவைக் குறைத்தல்
8. சந்தை பங்கு அதிகரிப்பு

## உபாய ஒருமுகப்படுத்தலை அடைந்துகொள்ளல்

### S1: வீட்டு நிதிச் சந்தையில் முன்னணி வகித்தல்

எமது 70% கடன் நிதிச் சொத்துப் பட்டியல் வீட்டுவசதி தொடர்பான கடன் வழங்குவதில், நாம் ஏற்கனவே வீட்டு நிதியில் வலுவான மையத்தைக் கொண்டுள்ளோம். சந்தை ஊடுருவல், சந்தை மற்றும் தயாரிப்பு மேம்பாடு மற்றும் பல்வகைப்படுத்தல் மூலம் டிஜிட்டல் ரீதியாக எமது இருப்பை விரிவுபடுத்துவதில் நாம் கவனம் செலுத்தி வருகிறோம்.

வள ஒதுக்கீடு

- நாடளாவிய ரீதியில் கூடுதல் கிளைகளுடன் எமது பௌதீக தடத்தை விரிவுபடுத்துவதற்கான முதலீடுகள்
- பல்வேறு வருமான நிலைகள் மற்றும் விருப்பங்களிலிருந்து வாடிக்கையாளர்களுக்கு வீட்டுக் கடன்களை வழங்குவதற்கான பயிற்சி பெற்ற ஊழியர்கள்
- இலக்கு சந்தைப்படுத்துதலில் முதலீடுகள், அதிக டிஜிட்டல்/ ஒன்லைன் மேம்படுத்தல்கள்
- தகவல் தொடர்பு தொழில்நுட்ப அமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் சேவையின் வேகத்தை அதிகரிப்பதற்கான தீர்வுகளை செயல்படுத்துதல் ஆகியன வாடிக்கையாளரின் தீர்மானத்திற்கு உதவும் முக்கிய மாறிகளாக மாறும்.
- வீடு மற்றும் வீட்டு மேம்பாட்டு நிதியை இலக்காகக் கொண்ட பல்வகைப்பட்ட தயாரிப்புகள்

### S2: நிலைபேறான மற்றும் தனி நிறுவனமாகத் திகழ்தல்

அதிக வருமானம் மற்றும் கூடுதல் இலாபம் என்பன இந்த நோக்கத்தை உறுதி செய்வதற்கான நிலையான வழியாகும். எவ்வாறாயினும், 2022 இன் கட்டுப்பாடுகள் ஆரோக்கியமான NPL அளவைப் பராமரிப்பதற்கும், இடர் வெளிப்பாடுகளை நிர்வகிப்பதற்கும் அழுத்தம் கொடுத்தன. இருப்பினும், 2022 ஆம் நிதியாண்டில் ரூ. 326 மில். (PAT) வட்டி வருவாயை ஈட்டக்கூடியதாக இருந்தது.

வள ஒதுக்கீடு

- வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு சந்தை முயற்சிகளை மேம்படுத்தல்.
- வைப்புத் தொகையைத் திரட்டுவதில் தலைமைத்துவம் மற்றும் பணியாளர்களின் அர்ப்பணிப்பு
- விவேகமான மீட்பு மற்றும் சேகரிப்பு உத்திகள் மூலம் அதிக வருமானம் ஈட்டுவதற்கான பணியாளர்களின் அர்ப்பணிப்பு

## S3: வலுவான மற்றும் ஆற்றல்மிக்க பணியாளர்கள்

மிகவும் திறமை வாய்ந்த மற்றும் ஆற்றல் மிக்க பணியாளர்களை தக்க வைத்துக் கொள்ள, ஊழியர்களுக்கு சரியான தகவல்களையும், அறிவையும் வழங்க வேண்டும். அதேவேளை, சுயாட்சி மற்றும் புதிய சிந்தனைக்கான வாய்ப்புகளையும் அளிக்க வேண்டும். மேலும், ஊழியர்களைத் தக்கவைப்பது, எச்டிஎப்சி பெறுமதிகள் மற்றும் உள்ளக வேலைப்பாடுகளைப் புரிந்து கொள்ளும் நம்பகமான பணியாளர் அணியை உருவாக்க உதவும்.

வள ஒதுக்கீடு

- பணியாளர் நலன் மற்றும் பயிற்சிக்கான முதலீடுகளை ஒதுக்கீடு செய்தல்
- பொது மற்றும் தேவை அடிப்படையிலான பயிற்சிக்கான வருடாந்தப் பயிற்சி அட்டவணை
- உகந்த செயற்திறனுக்கான தொழில்நுட்ப உள்கட்டமைப்பில் முதலீடுகள்

## S4: இடர் உணர்வு கலாசாரம்

கடன் ஒப்புதல் மட்டத்தில் இடர் வெளிப்பாடுகளைக் கட்டுப்படுத்த, வங்கியின் பரந்த அளவிலான இடர் உணர்வு கலாசாரம் முக்கியமானது. தற்போது, பல்வேறு ஒப்புதல் நிலைகளைக் கொண்ட எமது விவேகமான கடன் ஒப்புதல் உத்தியானது, சிறந்த கடன் தரத்தை விளைவித்துள்ளது. மேலும், இடர் மதிப்பீடு மற்றும் முகாமைத்துவ முறைகளை வலுப்படுத்தல் மற்றும் கிளைகள் மற்றும் தலைமை அலுவலகத் துறைகள் முழுவதும், இடர் விழிப்புணர்வு கலாசாரத்தை வளர்ப்பதில் பயிற்சிகளை வலுப்படுத்துதல் என்பனவே தற்போதைய தேவையாகும்.

வள ஒதுக்கீடு

- கடன் துறை மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவு ஆகியன, கடன் வரம்புகளை மதிப்பிடுவதிலும், கூடிய பெறுமதியுள்ள கடன் அனுமதிகளை மையப்படுத்துவதிலும் ஒருங்கிணைந்து செயல்படும்.
- சபை கடன் குழுவின் மேற்பார்வை
- வாடிக்கையாளர் நடத்தை மற்றும் கடந்த கால நிலுவைகள் மீதான கடன் தரத்தின் அடிப்படையில் இடரை மதிப்பிடவென கூட்டிணைந்த வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு கடன் பணியாளர்கள்.
- இடர்பாட்டுத் துறை, குறைந்த இடர்பாட்டுத் திறன் கொண்ட சொத்துக்களில் கவனம் செலுத்த வேண்டும் (உதாரணமட - ஊ.சே.நி மற்றும் அடைமான ஆதரவு கடன்கள்)
- இடர் முகாமைத்துவ அடிப்படையிலான இலக்கு பயிற்சி திட்டங்கள்

## S5: தொழில்நுட்ப ரீதியான பொருத்தம்

டிஜிட்டல் மற்றும் சைபர் பாதுகாப்புத் தீர்வுகள் உட்பட முக்கிய வங்கிக் கட்டமைப்புகளில் முதலீடு செய்தல் என சகல துறைகளிலும் தொழில்நுட்ப ரீதியாக பொருந்தும் வகையில் நாம் படிப்படியாக முயற்சி மேற்கொண்டு வருகிறோம்.

வள ஒதுக்கீடு

- புதிய தொழில்நுட்பங்களுக்கு நிதியளிக்கும் வகையில் நிதி ஒதுக்கீடுகள்
- திட்டங்கள், நிறைவுகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிர்வாகத்தை மேற்பார்வை செய்ய தகவல் தொழில்நுட்ப வழிகாட்டுதல் குழு
- தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் ஆளுகை தொடர்பான நடவடிக்கைகள் என்பனவற்றை மேற்பார்வை செய்ய திறமையான தகவல் தொழில்நுட்பத் துறை

## S6: ஒழுங்குமுறைத் தேவைகளுடன் முழுமையான இணக்கம்

இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவையான ரூ. 7. 5 பில்லியனுக்கு நாம் இதுவரை இணங்கவில்லை. இடைவெளியை அடைந்து கொள்வதில், அதிக இலாபத்தைப் பராமரிக்கும் உத்தியை நாம் பின்பற்றி வருகிறோம். இது, பொருளாதார நெருக்கடி, அதிக வட்டி விகிதங்கள் மற்றும் அதிக செயற்படாக் கடன்கள் காரணமாக ஆண்டு முழுவதும் கட்டுப்படுத்தப்பட்டது.

வள ஒதுக்கீடு

- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவின் செயற்பாடுகள்
- அதிக இலாபத்தைத் தக்கவைக்க சபை மற்றும் கூட்டுறவு முகாமைத்துவ உத்திகள்
- சேகரிப்பு, மீட்புகளில் மேம்படுத்தப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் கூடுதல் வருமானம்
- வட்டி அல்லாத வருமானத்தை உருவாக்கும் திறன் கொண்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்

## இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைத் திட்டங்கள்

| இலக்கு | உபாயம் | பொதுவான நடவடிக்கைத் திட்டம் | | |
|---|---|---|---|---|
| | | S | M | L |
| சந்தைப் பங்கினை மேம்படுத்தல் | சந்தை ஊடுருவல் மற்றும் அபிவிருத்தி | • குறைந்த - நடுத்தர வருமான வகுப்பினர்கள் தவிர்ந்த ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுக்கான சேவையும், சந்தையிலுள்ள வேறுபட்ட வகுப்பினர்களுக்கான சேவையும் | | |
| | | • வியாபார கொடுக்கல் வாங்கல்களை மேம்படுத்துவதற்கான துரித சேவை | | |
| | | • கிளைகளை விரிவுபடுத்தல் | | |
| | உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பன்முகப்படுத்தல் | • தங்கக் கடன் திட்டங்கள் | | |
| | | • வர்த்தக நாமத்தைக் கட்டியெழுப்புதல் | | |
| | | • இடர்நேர்வு அடிப்படையிலமைந்த விலையிடல் | | |
| | | • அபிவிருத்தி மற்றும் நிறுவன கொடுகடன் நிதிச் சொத்துப்பட்டியலை விரிவுபடுத்தல் | | |
| | | • மிதக்கும் கடன் வீதங்கள் | | |
| செயற்பாடற்ற கடன் அளவைக் குறைத்தல் | புதிய கடன் தரத்தை அதிகரித்தல் | • அதிகரிக்கப்பட்ட கொடுகடன் மதிப்பீடு | | |
| | | • ஒருமுகப்படுத்தப்பட்ட கொடுகடன் மதிப்பீட்டுப் பயிற்சி | | |
| | முன்மதிமிக்க கடன் சேகரித்தல்கள் | • கடன் பெறுனர்களுடன் சிநேகபூர்வ உறவு | | |
| | | • நெகிழ்வுமிக்க கொடுப்பனவுத் தெரிவுகள் | | |
| | | • மென்மையான அறவீட்டு அணுகுமுறை | | |
| சொத்துகள் மீதான ஆதாயத்தை மேம்படுத்தல் | வட்டியற்ற வருமானத்தின் வளர்ச்சி | • கையடக்க கணனித் தொழிற்பாட்டாளர்கள் ஊடாக அதிகரித்த உபயோக சேவைக் கொடுப்பனவுகள் | | |
| | | • அதிகரித்த இ- வங்கிச் சேவை மற்றும் மொபைல் செயலி பரிமாற்றங்கள் | | |
| | சேமிப்பு வளர்ச்சி | • சிறுவர் சேமிப்பு உள்ளடங்கலாக சேமிப்புகளை ஊக்குவித்தல் | | |
| | | • அதிக வைப்புகளை பெறுவதற்கு கையடக்க கணனித் தொழிற்பாடு | | |
| | தொழிற்பாட்டு உற்பத்திதிறனை மேம்படுத்தல் | • பணிப்பாய்ச்சல் மேம்படுத்தல்கள் | | |
| | | • காகிதங்களற்ற செயன்முறைகள் | | |
| | அலுவலர் உற்பத்தித்திறன் மற்றும் ஊக்குவித்தலை மேம்படுத்தல் | • பொதுவான பயிற்சி மற்றும் இலக்கிடப்பட்ட தேவை அடிப்படையிலான நிகழ்ச்சித் திட்டங்கள் | | |
| | | • பொறுப்புக்கூறலுக்கான பயிற்சி | | |
| | | • தொழில் வாய்ப்புகள் | | |
| | | • திறன்கள் கணக்காய்வு | | |
| | | • முகாமைத்துவ பயிலுநர் நிகழ்ச்சித் திட்டம் | | |
| அதிகரிக்கப்பட்ட சில்லறை வைப்பு | சந்தை மற்றும் உற்பத்தி அபிவிருத்தி | • அதிகரிக்கப்பட்ட வெகுசன ஊடாக விளம்பரப்படுத்தல் | | |
| | | • கையடக்க கணனி நேரடி விற்பனைகள் | | |
| | | • கிளை மேம்படுத்தல் மற்றும் வர்த்தக நாமத்தை சிறப்பாக காட்சிப்படுத்தல் | | |
| | | • மறுசீரமைக்கப்பட்ட வலைத்தளம் | | |
| | | • சமூக வளைத்தள ஈடுபாடுகள்/ சந்தைப்படுத்தல் | | |
| | | • சேமிப்பு வெகுமதிகள் | | |
| | | • புதிய சேமிப்பு உற்பத்திகள் | | |

S - குறுங் காலம் M - நடுத்தர காலம் L - நீண்ட காலம்

## முன்னோக்கிய பாதை

2023 இல் நிறைவேற்று தலைமைத்துவத்தின் மாற்றத்துடன் எவையேனும் கனிசமான மாறுபாடுகள் இன்றி முன்னர் பின்பற்றிய குறிக்கோள்களையும், இலக்குகளையும் குறை நிறப்புச் செய்கின்ற மாற்றங்களை நாம் எதிர்பார்க்கின்றோம். தொழிற்துறையில் உறுதியான மற்றும் வலிமையான நிதியியல் நிலைமையுடன் தொடர்ந்து போட்டிமிக்கதாக திகழ்வது எமது ஒருமுகப்படுத்தலாக இருக்கும்.

# வர்த்தக மாதிரி

வர்த்தக மாதிரி

## நிதி மூலதனம்

- பங்குதாரர் நிதியம்
- வைப்புத் தளம்
- மொத்த சொத்துக்கள்
- கடன் பெறுவனவுகளும் தொகுதிக் கடன்களும்
- முதலீடுகள்
- வட்டி மற்றும் வட்டி அல்லாத வருமானம்

## மனித மூலதனம்

- கொள்கைக் கட்டமைப்பு
- செயற்திறன் மதிப்பீடு
- ஆட்சேர்ப்பு மற்றும் தக்கவைத்தல்
- போட்டி ரீதியான அனுகூலங்களும் சம்பளங்களும்
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி

## புலமைச்சொத்து மூலதனம்

- நிறுவன ரீதியான அறிவு
- வீடமைப்பு நிதி அறிவு மற்றும் செயன்முறைகள்
- வாசற்படி வங்கிச் சேவை
- தனித்துவமான தயாரிப்புகள்
- வடிவமைக்கப்பட்ட தகவல் அமைப்புகள்

## சமூக மற்றும் தொடர்பு மூலம்

- பலதரப்பட்ட ஊடக டிஜிட்டல் தொடுகை முனைவுகள்
- புவியியல் ரீதியாக பன்முகப்படுத்தப்பட்ட வலையமைப்பு
- சில்லறை மற்றும் கையகக் கணிப்பொறி வங்கி
- பலதரப்பட்ட கடன் மற்றும் வைப்புத் தயாரிப்புகள்
- பங்குடமையாளர்கள்
- பலதரப்பட்ட விநியோகத்தர்கள்
- நிறுவனங்களுடனான பங்குடமை
- சிறு உரிமையாளர் மற்றும் சிறிய, நடுத்த தொழில்முனைவோரை விருத்தி செய்தல் மீதான கவனம்
- கிரமமான உறவுகள்
- ஆதரவளிக்கும் சமூகங்கள்/சிறிய, நடுத்தர தொழில்முனைவோர்
- அபிவிருத்தித் திட்டங்கள்
- கூட்டுறவு சமூகப் பொறுப்புகள்

## உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

- கிளைகள்
- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்
- தொழிலநுட்ப உட்கட்டமைப்பு
- தன்னியக்க இயந்திர வலையமைப்பு


## இயற்கை மூலதனம்

- பிளாஸ்டிக் கழிவுகளை மீள்சுழற்சி செய்தல்
- புதுப்பிக்கத்தக்க சக்தி
- பயன்பாட்டு நுகர்வு
- இயற்கையைப் பேணுதல்

வேளீயுகு முற்றும்

பெறுமதி உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் நடவடிக்கைகள்


நோக்கு




வெளியீடுகள்:

- வீடமைப்புக் கடன்கள் - அடகு வைக்கப்பட்ட
- வீடமைப்புக் கடன்கள் - ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான
- வீடமைப்புக் கடன்கள் - உத்தரவாதமளிக்கப்படுபவர்
- தங்கக் கடன்கள்
- சிறிய நடுத்தர தொழில் முயற்சி வியாபாரக் கடன்கள்

## பெறுமதி உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் நடவடிக்கைகள்




- கூட்டுறவு வர்த்தக் கடன்கள்
- குத்தகை
- நிலையான வைப்புகள்
- சேமிப்புகள்

## விரும்பத்தக்க பெறுபேறுகள்

### நிதி மூலதனம்

- தொடர்ச்சியான இலாபத்தன்மை
- இலங்கை அரசாங்கத்திற்கான வரி வருமானம்
- போதுமான மூலதன தளம்
- சிறந்த சொத்து தரம்
- கடன் தரம்

### மனித மூலதனம்

- அனைத்துப் பணியாட்களுக்குமான பயிற்சி
- தொழில்முறை வளர்ச்சி
- முன்னேற்றங்களும் வெற்றியளிப்புகளும்
- பன்முகப்படுத்தப்பட்ட திறன்கள்
- அதிகரிக்கப்பட்ட ஆக்கத்திறன்
- உயரிய தக்கவைப்பு விகிதம்
- சுயமாக உருவாக்கப்பட்ட முயற்சிகள்
- ஆக்கத்திறனுடைய சிந்தனை
- வங்கிச் செயற்பாடு மற்றும் தொழில்நுட்பத்தில் அதிகரித்த அறிவு
- ஒழுங்கு விதிகளுடனான இணக்கம்
- எச்டீஎப்சி யின் பெறுமதிகளுடன் பணிபுரிதல்
- உபாய நுட்ப இலக்குகள் மீதான கவனம்
- இலக்குகளை அடைதல்

### புலமைச் சொத்து மூலதனம்

- புதிய தொழில்நுட்பத் தீர்வுகள்
- பன்முகப்படுத்தப்பட்ட தயாரிப்புகள்
- கையக கணிப்பொறி வங்கி
- முக்கிய வங்கி அமைப்பு
- கடன் மற்றும் சேகரிப்பு முகாமைத்துவத் தீர்வுகள்
- வர்த்தகப் பெயர் பெறுமதி

### சமூக மற்றும் தொடர்பு மூலதனம்

- கையக கணிப்பொறி வங்கிச் சேவை ஊடாக நிதிச் சேர்க்கை
- பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்பாடுகள்
- புதிய நிதிக் கருவிகள்
- டிஜிட்டல் வங்கி மற்றும் நடமாடும் சேவைகள்

### தயாரிக்கப்பட்ட மூலதனம்

- அதிகரித்து வரும் சொத்துக்களும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும்
- வளர்ந்து வரும் கிளைகளும் ATM களும்
- அதிகரித்து வரும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

### இயற்கை மூலதனம்

- காகித மீள் சுழற்சி மற்றும் மீள் பயன்பாடு
- சூரிய சக்தி உருவாக்கம்
- வினைத்திறனான சக்தி நுகர்வு
- நடப்பட்ட மரங்கள்

# நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான எமது பங்களிப்பு

பரந்தளவிலான வங்கித் தொழிற் துறையினுள் அளவிலும் பருமனிலும் சிறியதாக இருக்கின்ற போதிலும், நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள் மீது வளர்ச்சியடைகின்ற தாக்கத்தினை நாம் உருவாக்குகின்றோம் என நம்புகின்றோம். ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள், ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தில் நிலைபெறத்தக்க அபிவிருத்தி அணுகுமுறைக்கான வழிகாட்டும் மையமாகவும், விரிவான கட்டமைப்பாகவும் தோற்றம் பெற்றுள்ளன. இவ் ஆண்டு நாம் பங்களிக்கின்ற ஒவ்வொரு பொதுவான இலக்கின் கீழும் தொடர்புடைய அடைவுகளை எடுத்துரைப்பதற்கு மேலதிக விபரங்களை விளக்க முனைகின்றோம்.




## இலக்கு 1 : வறுமை இன்மை

### 1.1

- ஒப்பந்த அல்லது தகுதிகான் மட்டங்களிலும் கூட, ஊழியர் சம்பளங்கள், தொழிற்துறைச் சராசரிகளுக்கு இணையாகக் காணப்படுகின்றன. பகுதி நேர அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் உள்ளடங்கலாக, ஊழியர்கள் பல வகையான நன்மைகளை பெற்றுக்கொள்ளுகின்றனர்.

### 1.4

- தற்காலிகமாக, பகுதி நேர அல்லது ஒப்பந்த அடிப்படையில் இணைந்து கொள்ளுகின்ற ஊழியர்கள், பாலினம் மற்றும் ஏனைய சமூக நிலமைகளைப் பொருட்படுத்தாது, அவர்களது வகைக்கு ஏற்புடைய சமமான கொடுப்பனவுகளையும், நன்மைகளையும் பெற்றுக் கொண்டனர்.
- எச்டிஎப்சி வங்கியில், நாம் வீடமைப்புத் தேவைப்பாடுகளுடன் கூடிய மக்களை, நிதியியல் ரீதியாக வலுவூட்டுகின்றோம். எமது கடன் திட்டங்கள், பொருளாதார இன்னல்களுடன் கூடியவர்களுக்கு நன்மையளிப்பதுடன், வீடமைப்புத் தேவைகளின் அடிப்படையிலமைந்த பல்வேறு வகையினருக்கும், நிதியியல் நிவாரணத்தை வழங்கி, பல்வேறு நோக்கங்களுக்கும் அத்துடன், நுண்பாக மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித் தேவைப்பாடுகளை நிறைவு செய்கின்றன.




## இலக்கு 3 : ஆரோக்கியமும் நல்வாழ்வும்

தூய, புகைத்தலற்ற பணியாற்றுச் சூழல் மற்றும் மருத்துவ நன்மைகளுக்கான பெறுவழி என்பன ஊடாக ஊழியரகளின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் நாம் உருவாக்குகின்றோம்.




## இலக்கு 4: தரமான கல்வி

தொழில் வளர்ச்சிக்காக அவர்களது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான இயலளவுடன், பயிற்சி மற்றும் அறிவு மேம்படுத்தலுக்காக, ஊழிர்களுக்கு நாம் சம வாய்ப்புகளை வழங்குகின்றோம். ஒவ்வொரு நிரந்தர ஊழியரும், புதிதாக ஆட்சேர்க்கப்பட்டவர்கள் உள்ளடங்கலாக, பாரபட்சமின்றி, சமத்துவமான திறனை கொண்ட பணிக்காக, சமமான கொடுப்பனவுகளுடன் சேர்த்து முறையான பயிற்சியினையும் பெற்றுக்கொள்கின்றனர். 2022 இல் ஊழியர்கள் மொத்தமாக 5,351 பயிற்சி மணித்தியாலங்களைப் பதிவு செய்தனர்.




## இலக்கு 5 : பாலின சமத்துவம்

### 5.1

அனைத்துப் பாலின ஊழியர்களுக்கும், சாதகமான பணிச் சூழலை இயலச் செய்கின்ற, சமமான பொருளாதார நன்மைகளையும், வசதிகளுக்கான பெறுவழியினையும் பெற்றுக்கொள்கின்றனர். பெண் ஊழியர்கள், பேறுகால விடுமுறைக்கு உரித்துடையவர்களாக இருக்கின்ற அதேவேளை, ஆண் ஊழிர்கள் கோரிக்கையின் பேரில் பெற்றார் விடுமுறையினைப் பெற்றுக்கொள்கின்றனர்.

### 5.5

வங்கியின் பதவியொழுங்கினுள் ஏதேனும் பதவிக்கு ஊழியர்களின் பாரபட்சமற்ற தெரிவினை நாம் உறுதிப்படுத்துகின்றோம். வங்கியினுள் பல நிறுவன முகாமைத்துவப் பதவிகளில் பெண் தொழில்சார் நிபுணர்கள் பிரதிநிதித்துவப்படுத்தி உபாயத் தீர்மானம் மேற்கொள்ளலுக்கும், வங்கித் தொழிற்பாடுகளுக்கும் தலைமைத்துவத்தை வழங்குகின்றனர்.




## இலக்கு 6 : சுத்தமான நீரும் சுகாதாரமும்

### 6.1, 6.2

அனைத்துக் கிளைகள் முழுவதும், எமது அனைத்து ஊழியர்களும், சுத்தமான குடிநீருக்கும், சுகாதார வசதிகளுக்கும் பெறுவழியினைக் கொண்டுள்ளனர். சுகாதாரத்தைப் பேணுவதற்கு, நாம் முறையான சுத்தப்படுத்தல் கருவிகளைப் பயன்படுத்துகின்ற அதே வேளை, நுகர்வதற்காக, சுத்தமான மற்றும் வடிக்கப்பட்ட நீரைப் பெறுவதற்கு ஊழிர்களுக்கு பெறுவழியினை வழங்குகின்றோம்.




## இலக்கு 8 : பண்பார்ந்த பணியும் பொருளாதார வளர்ச்சியும்

### 8.6/8.7

எமது தொழிற்படையினுள் அநேகமான ஊழிர்கள் 30 - 50 வயதுக்கு இடைப்பட்டவர்களாகக் காணப்பட்டு, தொழில் மற்றும் அறிவு வளர்ச்சிக்காக கல்வி மற்றும் பயிற்சியினைப் பெற்றுக்கொள்கின்ற ஒரேவிதமான இளையோரின் பங்கினை எடுத்துக் காட்டுகின்றனர். மேலும், சிரேஷ்ட மனிதவள முகாமையாளரினால் தலைமை வகிக்கப்படுகின்ற மனித வள அணி அனைத்து ஆட்சேர்ப்புகளுக்கும் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்பதை உறுதி செய்கின்றது.

### 8.8

அனைத்து அலுவலர்களினதும் தொழில்சார் ஆரோக்கியத்தினையும், பாதுகாப்பையும் முகாமைத்துவம் உறுதி செய்கின்றது. ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் என்பவற்றுக்கான பாதுகாப்பு மற்றும் சுத்தப்படுத்தல் பொறிமுறைக்காக சீசீடீவி கெமராக்கள் போன்ற வழிமுறைகள் செயற்பாட்டில் உள்ளன. நிதி நிறுவனம் என்ற வகையில், அனைத்துக் கிளைகளிலும், நாம் பாதுகாப்பு அலுவலர்களைப் பணிக்கமர்த்தியுள்ளோம்.

இலங்கை வங்கி ஊழியர்களின் சங்கத்துடனான கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கைகள் ஊடாக, முறையான ஊதியங்களுக்கான ஊழிர்களின் உரிமைகள் வலுவிலிருப்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம். 2022 இல் சம்பள ஏற்றங்கள் மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்குவதன் வாயிலாக 2021 - 2023 கூட்டு உடன்படிக்கையின் நிபந்தனைகளை நாம் நிறைவேற்றியுள்ளோம்.

### 8.10

எமது நிதியியல் சேவைகள், அனைவரும் அணுகத்தக்கதாகக் காணப்படுகின்றன. கடன் பெறுனர்களுக்கான எமது நிதிச் சொத்துப்பட்டியலானது, குறைவான இருந்து, வருமானம் ஈட்டுகின்றவர்களில் இருந்து, நடுத்தர, உயர்வான மீள்கொடுப்பனவு இயலளவுடன் கூடிய, சேவை நாடிகளையும் உள்ளடக்குகின்றது. வீடமைப்பு நிதி வழங்குவதன் மீதான எமது மையப்படுத்தல், தற்போது தனிப்பட்டவர்கள், அத்துடன் வியாபாரத் தேவைகளுக்கான கடன் வழங்குகின்ற வேறு வடிவங்களை நோக்கி, பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. உரிய காலத்தில் மீள் கொடுப்பனவுகளின் முக்கியத்துவம் மற்றும் அவர்களது மீள்கொடுப்பனவு இயலளவுகள், அவர்களது வாழ்வாதாரங்களைப் பிரதிபலிக்கும் வகையில் சரிசெய்தல் போன்றன மீது, அவர்களுக்கு அறிவூட்டுவதன் வாயிலாக, எமது வாடிக்கையாளர்கள் மத்தியில் நிதியியல் அறிவை அதிகரிப்பதற்கும் நாம் பாடுபடுகின்றோம்.




## இலக்கு 9 : தொழிற்துறை, புத்தாக்கம் மற்றும் உட்கட்மைப்பு

### 9.3

பல்வேறு கொடுகடன் திட்டங்கள் ஊடாக, அபிவிருத்தி நிதிக்கான பெறுவழியுடன் கூடிய நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சி வியாபாரங்களுக்கு வசதியளிக்கின்றோம். 2022 ஆண்டு காலப்பகுதியில், வேளாண்மை, உள்நாட்டுக் குடிசைக் கைத்தொழில், இறப்பர், ஆடை, கலைகள் மற்றும் ஒய்வுத்துறைகள், தொழில்சார் பணிகள் போன்றவற்றின் கீழ் ரூபா 430 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.




## இலக்கு 10 : சமத்துவமின்மையைக் குறைத்தல்

### 10.3

வங்கியானது, ஊழிர்களுக்கு தடைகளின்றி சமத்துவமான வாய்ப்புகளை வழங்குகின்றது. ஒவ்வொரு ஊழியரும், அவர்களது அனுபவம் மற்றும் தொழில் வகிபாகம் என்பவற்றுக்கு அமைவாக, முறையான ஊதியத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராவர். பகுதிநேர மற்றும் முழு நேர ஊழிர்களுக்கு இடையில், அப்படைச் சம்பளம் மற்றும் ஊதியம் என்ற வகையில் வேறுபாடு காணப்படுகின்றது. இது, உலக நடைமுறையாகும். எனினும், பகுதி நேர ஊழியர்கள், மருத்துவ மீளளிப்புகள் உள்ளடங்கலாக மேலும் பல நன்மைகளைப் பெறுகின்றனர்.




## இலக்கு 11: அபிவிருத்தியடையும் நகரங்களும் சமூகங்களும்

### 11.1

நிலைபேறான வீடமைப்பு மற்றும் வாழ்கைத் தரங்களுக்கான நிதியில் தீர்வுகளை வழங்கும் எமது வங்கியின் நிகழ்ச்சி நிரலுடன் இலக்கு 11.1 அணி சேர்கின்றது. அவர்களது பொருளாதார சகிப்பு மட்டங்களுடன் பொருந்தக் கூடிய தீர்வுகளை வழங்குவதற்கு, அனைத்து நிதியியல் பின்னணிகளில் இருந்தும், வாழ்வாதாரங்களைக் கொண்ட மக்களுடன் நாம் பணியாற்றுகின்றோம். 2022 இன் வீடமைப்புக் கடன்களாக நாம் ரூ. 5.6 பில்லியன் பகிர்ந்தளித்துள்ளதுடன், பொருளாதார நெருக்க மற்றும் பணவீக்கம் காரணமாக, மீள்கொடுப்பனவு சவால்களை எதிர்கொண்ட வாடிக்கையாளர்களுக்காக கடன்கள் மறுசீரமைக்கப்பட்டன.

# நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான எமது பங்களிப்பு




## இலக்கு 12 : பொறுப்புமிக்க நுகர்வும் உற்பத்தியும்

### 12.5

2022 ஆம் ஆண்டில், இலங்கையின் பாரிய பிளாத்திக்கு மீள் சுழற்சிக் கம்பனியான எகோ ஸ்பின் பிளஸ் நிறுவனத்துடன் நாம் பங்காளியானோம். பங்குடமையின் காரணமாக, பிளாத்திக்கு சேகரிக்கும் கூடைகள், பெரிய போத்தல்கள் மற்றும் மென்பான போத்தல்கள், கை சுத்தப்படுத்தும் பொருள், வெற்று பிளாத்திக்கு கொள்கலன்கள் உள்ளடங்கலாக மீள் சுழற்சி செய்யத்தக்க பிளாத்திக்குக் கழிவுகளை அகற்றுவதற்கு, வாடிக்கையாளர்களுக்கும், ஊழிர்களுக்குமென தெரிவுசெய்யப்பட்ட வங்கிக் கிளைகளில் தற்போது கூடைகள் வைக்கப்பட்டுள்ளன. பிளாத்திக்கு மீள் சுழற்சிச் செயன்முறைக்காக, வேறாக்கப்பட்டு தூரிகை மற்றும் நூல் போன்ற பிளாத்திக்கு அடிப்படையில் அமைந்த மூலப்பொருள் உற்பத்திக்கு வழிவகுகின்றன.

### 12.8

நிதியியல் இடையீட்டாளர் என்ற வகையில், எமது நிதியியல் தீர்வுகள், வைப்புகள் மற்றும் கொடுகடன் திட்டங்கள் பற்றிய தொடர்புடைய தகவல்களையும், விழிப்புணர்வையும் நாம் எமது ஊழிர்களுக்கு வழங்குகின்றோம். தகவல்களை அறிவிப்பதற்கு தெளிவான, சுருக்கமான வாசகங்களைப் பயன்படுத்தி, தகவல்களைப் பரப்புதற்கு நாம் பல வழிமுறைகளைப் பயனபடுத்தி வருகின்றோம்.




## இலக்கு 13: காலநிலை மாற்றத்தினை முறியடிப்பதற்கு அவசர நடவடிக்கை எடுத்தல்

### 13.1

வங்கியின் தொழிற்பாடுகள் சூழலில் ஏதேனும் அனர்த்த இடர் நேரவுகளைத் தோற்றுவிப்பதில்லை.




## இலக்கு 14: நீருக்கு அடியில் வாழ்க்கை

### 14.2

எச்டிஎப்சி வங்கியின் தலைமை அலுவலகம், பேரை வாவியை அண்மித்து அமைந்து, இந்து சமுத்திரத்துடன் இணையப் பெற்றுள்ளது. தலைமை அலுவலகம் மற்றும் கட்டத்தில் இருந்து வரும் கழிவுகள், கழிவு சேகரிப்புத் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு, மாநகர கழிவு சேகரிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. கழிவு நீர், தனியான தாங்கிகளுக்குச் சென்று, எமது நடவடிக்கைகள் மூலம் ஏரியின் நீர் மாசுபடுத்தப்படுவதில்லை என்பதை உறுதி செய்கின்றது.




## இலக்கு 16 : சமாதானம், நீதி வலிமையான நிறுவனங்கள்

### 16.1

அனைத்துக் கிளைகளுக்கும் இடையிலும் பாலின அடிப்படையில் அமைந்து வன்முறைக்கும், துன்புறுத்தலுக்கும் பூச்சிய சகிப்புத் தன்மையைக் கொண்டுள்ளோம். அத்தகைய நிகழ்வுகளைத் தீர்ப்பதில், ஊழிர்களுக்கு, முறையான மற்றும் வெளிப்படையான குறை கையாளுதல் செயன்முறை கிடைக்கப் பெறுகின்றன. இதில், அவர்களுக்கு ஆதரவுடன், நியாயமான தீர்ப்பிற்கு நாம் உறுதி செய்கின்றோம்.

### 16.5

வங்கியானது, இலஞ்சம் மற்றும் ஊழலை சகித்துக் கொள்வதில்லை என்பதுடன், எவரேனும் சூத்திரதாரிகளுக்கு எதிராக நேரடியான சட்ட நடவடிக்கையினைப் பயன்படுத்துகின்றது. எமது நிறுவன முகாமைத்துவம், முகாமையாளர்கள் மற்றும் சட்ட அலுவலர்கள், நிதியியல் குற்றத்தையும், முறைகோடுகளையும் கண்காணிப்பதுடன், பணம் தூய்தாக்குதலுக்கு எதிரான, கிரமமான பயிற்சிகளைப் பெறுகின்றனர். நாணய விதிச் சட்டங்கள், அத்துடன், கடன் வழங்குதல், கைமாற்றுதல்கள் பற்றிய சட்ட ரீதியான நோக்குகள் மீது நாம் வெளிவாரி மற்றும் உள்ளகப் பயிற்சியினை வழங்குகின்றோம். தொழில் வகிபாகங்களின் அடிப்படையில், நிதியியல் இடர் நேர்வுகளைக் கையாள்வதற்கான அறிவினை வழங்கி, நாம் இடர்நேர்வு முகாமைத்துவப் பயிற்சியினையும் பயன்படுத்துகின்றோம். ஆய்வுக்குரிய ஆண்டு காலப்பகுதியில் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய நிகழ்வுகள் எதுவும் இடம்பெற்வில்லை.

### 16.10

அனைத்து ஏற்புடைய வங்கித் தொழில் மற்றும் கணக்கீட்டு மற்றும் ஏனைய சட்டங்கள்/ஒழுங்கு விதிகள் என்பவற்றுடன் நாம் இனங்குவித்தலைப் பேணுவதுடன், 2022 இல், ஏதேனும் அபராதங்களை அல்லது தடைகளை எதிர்கொள்ளவில்லை. அனைத்து வாடிக்கையாளர் தொடர்பூட்டலுடன் தொடர்புடைய கோவைகளுடனும், ஒழுங்கு விதிகளுடனும் நாம் இணங்கியொழுகியுள்ளோம். பங்குதாரர்களின் நம்பிக்கையினை விட்டுக் கொடுக்கின்ற ஏதேனும் போட்டி நடத்தைகளில் இருந்தும், ஏகபோக உரிமையிலிருந்தும் நாம் தவிர்ந்துள்ளோம்.

முன்னைய ஆண்டுகளில் வாடிக்கையாளர் அந்தரங்கம் மற்றும் தரவுகள் பற்றிய மீறல்கள் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகளை நாம் எதிர்கொள்வில்லை. எச்டிஎப்சி சட்டத்தின் ஏற்பாடுகளுடன் மற்றும் சபைக்கும் இணங்கியொழுகுவதற்கும் நீதிமன்றத்தில் வெளிப்படுத்துவற்கு வேண்டப்பட்டால் ஒழிய, வாடிக்கையாளர்களின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் இரகசியமாகப் பேணுவதற்கு பணிப்பாளர்களும், முகாமைத்துவமும் வாக்குறுதியளித்துள்ளன.

## 16.6

பொறுப்புக் கூறலையும், வெளிப்படைத் தன்மையையும் உறுதிப்படுத்தும் வகையில், வங்கி, சிறந்த ஆளுகை நடத்தைகளுடனும், ஒழுங்கு முறைப்படுத்தல் வழிகாட்டல்களுடனும் இணங்கிக் காணப்படுகின்றது. மேலும், தொடர்புடைய தரப்பினர், கொடுக்கல் வாங்கல் குழுவானது, ஆர்வ முரண்பாடு காணப்படவில்லை என்றும், அத்தகைய சந்தர்ப்பங்களில், தொடர்புடைய தரப்பினர், வெளிப்படுத்தல் கொள்கை நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு விபரங்களை வழங்குவர் என்றும் உறுதி செய்கின்றது.

தலைவர் மற்றும் சபை உறுப்பினர்கள் மூலம், வேறு நிறுவனங்களில் வகிக்கப்படும் மேலதிகப் பதவிகள் பற்றி வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதுடன், அனைத்து சபை உறுப்பினர்களும், நிறைவேற்றுத் தலைமைத்துவப் பொறுப்புக்களைகக் கொண்டிருக்கவில்லை. சபை, துணைக் குழுக்கள் மற்றும் ஆளுகை தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் என்பவற்றுக்கு 124 - 166 ஆம் பக்கங்களை பார்க்க.




# இலக்கு 17 : இலக்குகளுக்கான பங்குடமை

## 17.1

பொருளாதாரத்தினை மீட்பதற்கு அரசாங்கத்திற்கு ஆதரவளித்து, வங்கியானது, வரி விதிக்கத்தக்க வருமானத்தின் அடிப்படையில் வரிக் கொடுப்பனவுகளை உரிய காலத்தில் செலுத்தி வருகிறது.

## முன்னோக்கிய பாதை

விசேடமாக, நிலைபெறுத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கு அளவுசார்ந்த எமது பங்களிப்பினை அளவிடுவதில் நிறைவு செய்யப்பட வேண்டிய குறிப்பிடத்தக்க இடைவெளிகள் காணப்படுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்கின்றோம். எனினும், குறுகிய காலப்போக்கில், தொழிலுக்குள் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை முழுமையாக ஒருங்கிணைப்பது என்பது, படுகடன் காலம் தாழ்த்திச் செலுத்தல் மற்றும் பேரண்ட பொருளாதார சவால்கள் என்பவற்றின் தாக்கங்களில் இருந்து வழிநடாத்துவதற்கு உடனடி கவனம் செலுத்தலுடன், நாம் தொடர்ந்தும் கையாள்வதனால் இச்சவால்களை வெற்றிகொள்வதாக அமையும்.

## நீண்டகால அணுகுமுறைகள் (இடைவெளிகளைத் தீர்த்தல்)

- நிலைபெறத்தக்க ஆளுகைக் குழுவொன்றினை தாபித்தல்
- எமது தொழிற்பாடுகள் ஊடாக சாதகமான மற்றும் எதிர்மறையாக தாக்கத்தினை மதிப்பிடுவதில், சுயாதீன பங்காளர் ஒருவருடன் (கல்விமான்) எமது தொழிற்பாடுகள் - பணி பற்றிய தாக்க மதிப்பீட்டை நடாத்துதல்
- நிலைபெறத்தக்க அபிவிருத்தி பற்றி பங்குதாரர் பின்னூட்டலைச் சேகரித்தல்
- பொதுவான இலக்குகளின் கீழ், பல வகையான அடைவுகளுக்கும் பங்களித்தல்.
- தரவு சேகரித்தல் மற்றும் நிலைபெறத்தக்க அறிக்கையிடல் என்பவற்றுக்கு ஆதரவளிப்பதற்கு தகவல் முகாமைத்துவ முறைமைகளை மாற்றுதல்
- தொழில் உபாயத்தினுள் நிலைபெறத்தக்க அபிவிருத்தியினை ஒருங்கிணைத்தல்.



# தலைமைத்துவம்

தலைவரின் செய்தி - 50

பொது முகாமையாளரின்/பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு - 52

பணிப்பாளர்கள் சபை - 56

பணிப்பாளர்கள் சபையின் சுய விபரங்கள் - 58

கூட்டுறவு முகாமைத்துவம் - 61

பிரிவுத் தலைவர்கள் - 66

பிராந்திய மற்றும் கிளை முகாமைத்துவம் - 67

# தலைவரின் செய்தி



அன்பார்ந்த பங்குதாரர்களே,

எச்டிஎப்சி வங்கியின் 38 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு, பணிப்பாளர் சபை சார்பில் உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். 2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற நிதி ஆண்டுக்கான வங்கியின் ஆண்டறிக்கையினை, பணிப்பாளர் சபையின் சார்பில், உங்களுக்கு சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்காக, பங்குதாரர்களுக்காக உங்களது அனுமதியுடன் இதனை வாசிப்பதற்கு எடுத்துக் கொள்கின்றேன்.

எனக்கு முன்னர் பதவி வகித்த திருமதி வசந்தி மஞ்சநாயக்க, 2023 பெப்ரவரியில் பதவி விலகியதை தொடர்ந்து, 2023 ஏப்ரலில் சபைக்கு நான் நியமிக்க- ப்பட்டேன். வங்கியின் கடந்த ஆண்டு செயலாற்றல் பற்றிக் கருத்து தெரிவிக்கின்ற போது, முடிந்தவரை தெளிவாக இருப்பதற்கு நான் முயற்சிக்க வேண்டும்.

மீளாய்வுக்கு உட்படுகின்ற காலப்பகுதியில், உங்களது வங்கி, பிரதானமாக, பொருத்தமான சந்தையொன்றில், தொழிற்பட்டதுடன், உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சூழலின் தாக்கங்களில் இருந்து வந்த தொடர்ச்சியான பொருளாதாரப் பின்னடைவுகளுக்கு மத்தியில், தொடர்ச்சியான பேரண்டப் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சவால்கள் என்பவற்றுக்கு எதிராக தாக்குப்பிடிக்கத்தக்கதாகவும், தொடர்புடையதாகவும் இருந்தோம். நோய்த் தொற்றுக்குப் பிந்திய

பொருளாதார நிலமைகள் மற்றும் உயர்வான பண வீக்கம், சமாளிக்க முடியாத நிலைகளில் அத்தியவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் அரசியல் குழப்பநிலை காரணமாக, தொடர்ந்து வந்த சமூக அமைதியின்மை என்பன காரணமாக, முன்னர் ஒரு போதும் இல்லாதளவில் தடுமாற்றத்தையும், இடையூறுகளையும் இலங்கையர்கள் அனுபவித்தனர்.

கடந்த கால பொருளாதார சவால்கள், துறை ஊடாக இன்னும் எதிரொலிக்கின்ற காலப்பகுதிக்கு மத்தியில் இச்செய்தி எழுதப்படுகின்றது. எவ்வாறாயினும்,

இறைசார்ந்த இடையூறுகள், தடைபட்டுள்ள வர்த்தகம் மற்றும் நிலைபேறற்ற படுகடன் மட்டங்கள் அத்துடன், பலவகையான நாட்டுக்கான தரக்குறைப்புகள் என்பவற்றைக் கொண்ட ஆண்டுகளை அனுபவித்ததன் பின்னர், பொருளாதார உறுதிப்பாடு பற்றிய படிப்படியான நிலைநிறுத்தலுடன், சில சாதகமான சமிக்ஞைகளை நாம் காணுகின்றோம். 2022 இல் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி என்பவற்றின் ஒன்றுபட்ட தாக்கத்தினால், இலங்கையின் பொருளாதாரமானது, முதன்மையாகத் தூண்டப்பட்டு, சுதந்திரம் பெற்றதில் இருந்து, உயர்வான பொருளாதார சுருக்கத்தைப் பதிவுசெய்தது.

வங்கித்தொழிற் துறை உறுதிப்பாடானது, ஆண்டு முழுவதும் குறைபாடின்றிக் காணப்பட்ட அதேவேளை, குறைவடைகின்ற கொடுகடன் தரம், திரவத்தன்மை மீதான கடுமையான அழுத்தம், உயர்வான சேத இழப்பு காணரமாக, மெதுவடைகின்ற இலாபங்கள் மற்றும் மூலதன ஒதுக்குகள் சரிவடைகின்றமை போன்ற, கடுமையான முக்கிய சவால்களை எதிர்த்து நின்றது. எது எவ்வாறிருப்பினும், சொத்துக்கள் மற்றும் வைப்புகளில் வங்கித் தொழில்துறை வளர்ச்சியடைந்த அதேவேளை, ஒழுங்குமுறை- ப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் சிறந்த விதத்தில் இணங்கிக் காணப்படுகின்றது.

உங்களது வங்கி நன்கு செயலாற்றி, உறுதியான ஐந்தொகையுடன் ரூ. 326 மில்லியன் கொண்ட வருடாந்த வரிக்குப் பிந்திய இலாபத்தைப் பிரகடனப்படுத்தியது. எமது வாடிக்கையாளர்களும், பங்குதாரர்களும், குழப்பமிக்க இவ் ஆண்டு முழுவதும் வங்கியில் தொடர்ந்து அவர்களது நம்பிக்கையினை பேணி வந்துள்ளனர்.

நெகிழ்வுத் தன்மையும், முன்மதிமிக்க நிதியியல் முகாமைத்துவமும், அழுத்தமிக்க சூழலில், வாடிக்கையாளர்களின் இன்னல்களுக்கு உரிய கவனம் செலுத்தி, ஆற்றல் வாய்ந்த மற்றும் பாதுகாப்பான தொழில் தொடர்ச்சியினை உறுதிசெய்தன. வங்கியானது, வளர்ச்சி, உத்வேகம் மற்றும் போதுமான திரவத்தன்மை என்பவற்றை சமநிலையாகப் பேணக்கூடியதாக இருந்தது. எவ்வாறிருப்பினும், நிதி ஆண்டுக்கான மையப்படுத்தலானது, சாதகம் குறைவான சூழலில், வாடிக்கையாளர்களுக்கு வசதியளி-

ப்பதையும், தக்கவைப்பதையும் கொண்டிருந்த அதேவேளை, நிலைபெறு தன்மையினைக் கட்டியெழுப்புவதாக அமைந்திருந்தது.

வங்கியானது, உயர் செறிவுமிக்க ஆயினும், ஊழியர் சேமலாப நிதிய (ஊ.சே.நி) உத்தரவாதாமளிக்கப்பட்ட திட்டம் மற்றும் வீடமைப்பு ஆதன ஈடு மூலம் பிணையளிக்கப்பட்ட கொடுகடன் நிதிச் சொத்துப்பட்டியலினை எடுத்துக் கொள்கின்றது. முன்மதிமிக்க சேத இழப்பு ஏற்பாடு செய்தல் அத்துடன், போதுமான திரவத்- தன்மையைப் பேணுதல் மீது, எமது கவனம் செலுத்தல் அமைந்திருந்த அதேவேளை, தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் ஆற்றல் வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவம் என்பன ஊடாக, இலாபத்தன்மையை அடைவதை மையப்படுத்தியிந்தது.

நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் நிதியிடல் தேவைகளுக்கு வசதியளிப்பதன் மூலம், பொருளாதார உறுதிப்பாட்டுக்கும், வளர்ச்சிக்குமான தேசிய நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவளித்து, தேசிய வளர்ச்சிக்கு, அவர்களின் பெறுமதி மதிக்க முடியாத பங்களிப்புக்கு ஆதரவளிப்பதற்கு முகாமைத்துவம் அர்ப்ப- ணித்துள்ளது. அபிவிருத்தி வங்கித் தொழிலில் வளர்ச்சி உபாயத்தினை வங்கி பின்பற்றிச் செல்லும் என்பதுடன், பொருத்தமான நிதியிடல் துறைகளைக் கண்டுபிடித்து, தேவைப்படுத்தலுக்கு மேல் நிறைவு செய்வதற்கு வேண்டப்பட்ட செயன்முறைப்படுத்துனர்களுடன் தொடர்ந்தும் பணியாற்றும்.

குறுகிய காலத்தில் நிதிச் சொத்துப்பட்டியல் தரம் சீர்குலைவதில் இருந்து தோன்றுகின்ற அதிகரிக்கின்ற சேத இழப்புகள் மற்றும் அரசாங்க பிணைங்களின் முதலீகள் காரணமாக, வங்கியின் செயலாற்றுகை மீது நாம் எதிர்பார்க்கின்ற பேரண்ட பொருளாதார சவால்கள் தீவிரப்படுத்தப்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

நிச்சயமற்ற பொருளாதார சுற்றுச் சூழலைக் கருத்தில் கொண்டு, நிலமை எவ்வாறு படிப்படியாக மாறுபடும் என்பதை எதிர்வுகூறுவது கடினமாக இருக்கின்ற அ- தவேளை, பொருளாதார மீட்சி பற்றி நாம் எச்சரிக்கைமிக்க சாதக மனப்பான்மையுடன் இருக்கின்றோம்.

பல ஆண்டுகளாக வங்கிக்கு அவரது பொறுமதிமிக்க அர்பணிப்பினையும், வழிகாட்டல்களையும், பங்களிப்பினையும் வழங்கியமைக்காக ஆய்வுக்குரிய ஆண்டு காலப்பகுதியில் பதவிவிலகிய முன்னால் தலைவி திருமதி மஞ்சநாயக்க அவர்களுக்கும், ஆய்வுக்குரிய ஆண்டு காலப்பகுதியில் பதவி விலகிய திரு. சுதந்த சில்வா அவர்களுக்கும் அவர்களது பெறுமதிமிக்க பங்களிப்பிற்காக சபை சார்பில் நன்றி தெரிவிப்பதற்கு நான் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கின்றேன்.

2022 ஜூன் மாதத்தில் எம்முடன் இணைந்து கொண்ட திரு. ரஜீவ சூரியாராச்சி மற்றும் கலாநிதி பீ. ஏ. கிரிஷாந்த அவர்களையும் சபையின் திறன் மற்றும் அனுபவத்தை மேலும் அதிகரித்துக் கொள்வதற்காக சபைக்கு அவர்களை வரவேற்கின்றேன்.

முன்னாள் பிரத நிறைவேற்று அதிகாரி திரு. பாலித்த கமமே மற்றும் முன்னாள் பிரதம தொழிற்படுத்தல் அதிகாரி திரு. ஏ.ஜே. அத்துகோரல ஆகியே- ர்களது அர்ப்பணிப்பையும், கடமைப் பொறுப்பையும் பாராட்டுவதில் சபையுடன் இணைந்து கொள்கின்றேன்.


சவால்மிக்க ஆண்டை நாம் நிறைவு செய்து, மற்றுமொரு ஆண்டில் நாம் காலடி பதிக்கின்றோம் என்ற வகையில், எமது அனைத்துப் பங்குதாரர்களுக்கும், பெறுமதியைச் சேர்ப்பதிலும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், அதிவிசேட சவால்கள் ஊடாக வங்கியை இட்டுச் செல்வதிலும், எச்டிஎப்சி வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும், ஒட்டுமொத்த அணி மூலம் எடுத்துக் காட்டப்பட்ட கடின உழைப்பு மற்றும் ஒப்பற்ற கடமைப் பொறுப்பு என்பவற்றுக்கும் நன்றி கூறி பாராட்டுவதற்கும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றேன்.

இவ் ஆண்டு காலப்பகுதியில் இன்றியமையாததாகவிருந்த கூட்டான நிபுணத்துவத்திற்கும், தொழில்சார் அனுபவத்திற்கும், அத்துடன், வரவிருக்கும் ஆண்டில் நான் மிகுந்தளவில் தங்கியிருக்கின்ற சபை மீதான எனது சக உறுப்பினர்களுக்கும், எனது இதயபூர்வமான பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும்,

வங்கிக்கான சபையின் நிகழ்ச்சி நிரலைச் செலுத்துவதில் அவர்களின் வகிபாகங்களில் அனைத்து சபை துணைக்குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புக்களையும் நான் பாராட்டுகின்றேன்.

இலங்கையில் நிதியியல் சேவைகளில் நீண்ட மற்றும் சிறந்த தொழிலைத் தொடர்ந்து 2023 ஜனவரியில் எமது அணியுடன் இணைந்து கொண்ட எமது பொது முகாமையாளர்/ பிரத நிறைவேற்று அதிகாரி திரு. நிஷ்மன் கருணாபால அவர்களை வரவேற்பதில் சபையுடன் இணைந்து கொள்கின்றேன்.

பணிப்பாளர் சபையுடன் ஒன்றிணைந்து, சவால்மிக்க இவ் ஆண்டுக் காலப்பகுதியில், வங்கியின் உறுதிப்பாட்டின் முக்கிய பாகமாக இருந்து வருகின்ற இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கும், நிதி அமைச்சிற்கும், எமது பெறுமதிக்க வாடிக்கையாளர்களுக்கும், தொழில் பங்காளர்களுக்கும், ஏனைய அனைத்துப் பங்குதாரர்களுக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதில் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.



டீ. சூசைப்பிள்ளை
தலைவர்

# பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு



எமது பங்குதாரர்களே,

புதிதாக நியமிக்கப்பட்ட உங்களது பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற வகையில், உங்களுக்கு உரையாற்றுவதும், ஆண்டின் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு செயலாற்றுகை மீளாய்வுடன் சேர்த்து 2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை உங்களுக்கு சமர்ப்பிப்ப- தும் எனக்கு மகிழ்ச்சியும், கௌரவமுமாகும்.

வங்கியானது, 2022இல் எச்சரிக்கை மிக்க அணுகுமுறை ஒன்றைப் பின்பற்றிய அதேவேளை, ஆய்வுக்குட்பட்ட ஆண்டு முழுவதும் எதிர்கொண்ட பல்வேறு சவால்கள் பற்றி அவதானமாகவிருந்தது. எவ்வாறிருப்பினும், சிறந்த தரத்திலான வளர்ச்சி, மிகவும் ஆற்றல் வாய்ந்த மைய மூலதனம் அத்துடன் உறுதியான திரவத்த- ன்மை நிலை என்பவற்றுடன் நாம் ஆண்டினை நிறைவு செய்துள்ளோம். எனினும், பல்வேறு சவால்கள் காரணமாக, பங்குதார்களுக்கான இலாபத்தன்மையும், ஆதாயமும் சீர்குலைந்த அதேவேளை, ஐந்தொகை வளர்ச்சியும் தடைப்பட்டது.

கூட்டாகச் சேர்ந்த பாதகமான சூழ்நிலைகளுக்கு மத்தியில், பங்குதார்களின் கரிசனைகளுக்கு தோள் கொடுப்பதன் மூலம், தேசத்தின் அபிவிருத்திக்கான பங்காளராக நாம் விளங்கினோம். கடன்களை காலந்தாழ்த்திச் செலுத்துதல், வட்டி வீதங்களின் குறைந்த பட்ச மேல் நோக்கிய திருத்தம் மற்றும் கடன்களை மீள அட்டவணைப்படுத்தல் என்பன ஊடாக கடன்பெறுநர்களின் துயரங்களை நாம் தீர்த்தோம். இது, வசதியான விதத்தில், நிதியங்களைப் பெற்றுக்கொள்வதில், அதி- கரித்த செலவுகளை வங்கி தாங்கிக்கொள்ள வேண்டிய நிலைக்கு வழிவகுத்தது. எவ்வாறிருப்பினும், ஊழியர் சேமலாப நிதிய பிணையளிக்கப்பட்ட கடன் வழங்கலை மேற்கொள்கின்ற நான்கு வங்கிகளில் ஒன்றாக இருந்து அரசாங்கத்திடமிருந்து எமக்கு கிடைக்கப் பெற்ற ஆதரவுடனும் மற்றும் வீடமைப்புக் கடன் நிதிச் சொத்- துபட்டியலைப் பெற்றுக்கொண்டும், ஆண்டு முழுவதும், வலுவான நம்பிக்கையினை நிலைநிறுத்தியதாக செயற்பட்டோம் என்பதனைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடை- கின்றேன்.

## பொருளாதரப் பின்னணி

அண்மைய வரலாற்றில், 2022 ஆம் ஆண்டானது, ஒருவேளை மிகவும் சவால்மிக்க ஆண்டாக அமைந்திருக்கலாம். பல்வேறு காரணிகளின் விளைவாக, பொருளா- தார சூழ்நிலை கடுமையான தடங்கலுக்குள்ளானது. கணிசமாக இலங்கை ரூபா பெறுமதி இழந்தமை அத்துடன், மோசமான வெளிநாட்டு நாணய நெருக்கடி என்பன நிலக்கரி மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் உள்ளடங்கலாக, அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு நாட்டை இயலாமற் செய்வதற்கு வழிவகுத்து. நாடளாவிய மின் துண்டிப்புகள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறைகளை விளைவித்தது. பொது மக்கள் கிளர்ந்தெளுந்தமைக்கு மத்தியில், சமூக அமைதியின்மை மற்றும் அரசியல் குழப்பநிலை என்பவற்றினுள் நாடு தள்ளப்பட்டமையினால், உயர்வடைகின்ற பணவீக்கம் மிகவும் தளம்பல் மிக்க நிலைமையை மோசமாக்கியது.

சர்வதேச நிதியிடல் முகவராண்மைகளில் இருந்து கிடைத்த ஆதரவு உள்ளடங்கலாக, நாட்டின் பொருளாதாரம், பல்வேறு நிச்சயமின்மைகளை எதிர்கொண்டது. நாட்டை மீட்டெடுப்பதற்கான பொதியினைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல் மிகவும் அவசியமான தேவையாகவிருந்தது. இருந்தும், சமூக ரீதியான வரவேற்கப்பட- ாத சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியினை, நியமிக்கப்பட்ட நாட்டின் தலைவர்கள் பெற்றுக்கொண்டனர். மேலும், படுகடன் மறுசீமை- த்தல், அத்துடன், அரசியல் நிலமை என்பன உறுதியற்றுக் காணப்பட்டு, 2023 இன் அநேகமான பகுதியினை நோக்கியும், ஆண்டின் நீடித்த காலத்திற்காக நிச்சயமின்மை தொடர்ந்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.8% த்தினால் சுருக்கமடைந்தது. இதில், கைத்தொழில் துறையில் சுருக்கம் அதிகமாக (16.2%) காணப்பட்ட அதேவேளை, விவசாய மற்றும் சேவைகள் துறை முறையே 4.6 மற்றும் 2% களால் சுருக்கமடைந்ததுடன், எரிபொருள் பற்றாக்குறை, மின் துண்டிப்புகள் மற்றும் சமூக அமைதியின்மை என்பன இதற்குப் பிரதான காரணமாக அமைந்தன. இலங்கை அரசாங்கமானது, பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்காகவும், மீட்சிப்பாதையினுள் நுழைவதற்காகவும், சர்வதேச நாணய நிதியத்துடன் ஈடுபடுவதற்கு வலுவாக அர்ப்பணித்தது. சர்வதேச நாணய நிதியத்தின் மீட்பினை நிச்சயப்படுத்துவதற்கான முன்மொழியப்பட்ட நி- கழ்ச்சித் திட்டமானது, குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டு வந்ததுடன், உயர்வான வரிகள், அதிகரிக்கப்பட்ட வட்டி வீதங்கள். திரவத் தன்மையை இறுக்கமாக்குதல், செலவுப் பிரதிபலிப்பு உத்தரவாதப்படுத்தல், தனியார் மயமாக்கல் போன்ற வடிவங்களில் மறுசீரமைப்பினையும், மாற்றத்தையும் கொண்டு வந்தது.

இவற்றின் தாக்கம் மக்கள் தொகையின் அனைத்து வகுப்பினர்களாலும், குறிப்பாக, குறைவான மற்றும் நிலையான வருமானம் உழைப்பவர்கள் மூலம் கடுமையாக உணரப்பட்டு, புலம்பெயர்தல் மற்றும் வெளிநாட்டுத் தொழில் என்பவற்றை நோக்கிய குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு இட்டுச் சென்றது. எவ்வாறிருப்பினும், வர்த்தகப் பற்றாக்குறை கணிசமாக ஒடுங்கியமையுடன், பொருளாதார அடிப்படைகளில், குறிப்பாக, நடைமுறைக் கணக்கு நிலையில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

எமது கடன் வழங்கல் தொழிலுடன் நேரடியான தொடர்புடைய நிர்மாணத்துறை 20.9% கொண்ட எதிர்மறையான வளர்ச்சியினைப் பதிவு செய்தது. மேலும், அரசாங்கத்- தினால் பிணையளிக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் 2022இல் மந்தமானதாகக் காணப்பட்டு, ஆய்வுக்குட்பட்ட வருட காலப்பகுதியில் நிர்மாணத் துறையில் இறுக்கமான இடைவெளி அத்துடன், மூலப்பொருட்கள் வளங்கள் பற்றாக்குறை அதேபோன்று, உள்ளீடுகள் செலவில் உயர்வு என்பவற்றைப் பிரதிபலித்தது.

## பொருளாதாரத்திற்கான வங்கியின் ஆதரவு

எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட ஆதரவு, பொருளாதாரத்திற்கு உதவியளிப்பதற்கான எமது ஆதரவை எடுத்துக்காட்டுகிறது. தொழிலின் அனைத்து நோக்குக- ளிலும் கண்டிப்பான அணுகுமுறையினைப் பின்பற்றியமைக்கு மத்தியிலும், இக்கட்டான காலங்களுக்கு மத்தியிலும், திரவத்தன்மைக்கான உயர்ந்தபட்ச பெறுவழியினை எமது கடன் பெறுநர்களுக்கு நாம் வழங்கினோம்.

ஆண்டின் ஆரம்பப் பகுதியில், பற்றாக்குறையான சுற்றுலாப் பயணிகள் வருகையை எதிர்கொண்ட சுற்றுலாத்துறைக்கு நாம் கடனை காலந்தாழ்த்திச் செலுத்தும் வசதியினை வழங்கினோம். எனினும், உயர்வடைகின்ற வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில், எமது வாடிக்கையாளர்கள் மீள் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு, குறிப்பிடத்தக்க ஒதுக்கீடுகளைப் பேணி கொள்வதற்காக அவர்களுக்கு உதவுவதன் வாயிலாக நாம் வீடமைப்புக் கடனை காலந்தாழ்த்திச் செலுத்தும் வசதிகளை வழங்கினோம்.

வாடிக்கையாளர்களினதும், வங்கியினதும் நலன்களை சமநிலைப்படுத்துவதற்கான, முறையான அணுகுமுறைகளுடன் ஆண்டு முழுவதும், தெரிவு செய்யப்பட்ட கடன்களை நாம் தொடர்ந்தும் மீள அட்டவணைப்படுத்தினோம். உறுதியற்ற வட்டி வீதங்களுக்கு ஈடுகொடுப்பதற்கு நிதியிடலை சிறப்பாகப் பயன்படுத்துவதன் வாயிலாக நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதன் மீது நாம் கவனம் செலுத்தினோம்.

# பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

## நிதியில் செயலாற்றல்

உயர்வடைந்த வட்டி வீதங்கள் காரணமாக, ஆய்வுக்குட்பட்ட ஆண்டு காலப்பகுதியில், எமது வருவாய் அதிகரித்தது. எனினும், கடன் ஏட்டின் தாமதமடைந்த மீள் விநியோகம் காரணமாக, இது வரையறுக்கப்பட்டுக் காணப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமான மூலங்கள், அவற்றின் முழுமையான உள்ளார்ந்த இயலளவுகளை எட்டியிருக்காத அதேவேளை, நிதியிடலுக்கு வங்கி பெறுவழியினைப் பேணியமையினால், வட்டிச் செலவுகள், சிறப்பான வளர்ச்சியினையும் விஞ்சிச் சென்றன. மொத்த வருமானம், முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூபா 7 பில்லியனிலிருந்து, ரூபா 8.9 பில்லியனாக 27% னால் அதிகரித்தது. இவ் அதிகரிப்பிற்கு மத்தியில், வரிக்கு முந்திய இலாபம் 2001 இல் அறிக்கையிடப்பட்ட 1.2 பில்லியனிலிருந்து ரூபா 6.12 பில்லியனுக்கு குறைவடைந்தது. எது எவ்வாறிருப்பினும், நாம் இலாபம்மிக்க தேறிய வருமானத்தைப் பேணி, 2022 ஆம் நிதியாண்டுக்காக ரூபா 326 மில்லியனாக அறிக்கையிட்டோம்.

தொழிற்படுத்தல் செலவினமானது, எமது ஊழியர்கள் மீதான பணவீக்கத்தின் தாக்கத்தினை முறியடிப்பதற்கு, அதிகரிக்கப்பட்ட ஊழியர் ஊதியங்கள், அதேபோன்று, பணவீக்க தாக்கங்கள் மூலம் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தது. செயற்பாடற்ற கடன் விகிதம் உயர்வாக இருந்த போதிலும், தொழிற்துறையுடன் ஒப்பிடுகையில், அதிகம் பிணையளிக்கப்பட்ட கொடுகடன் நிதிச் சொத்துப்பட்டியலை வங்கி கொண்டிருந்தது என்பதனைக் குறிப்பிடுவது முக்கியமாகும். 18% பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சேர்க்கை அத்துடன், 2.5% வீதம் கொண்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) மற்றும் 30% நிறுவன வருமான வரி ஆகிய உயர்வான வரிப் பரிபாலனமானது, இலக்கு மட்டத்தைப் பாதித்து, மேலும் வேகம் தளரச் செய்தது.

மூலதனப் போதுமை விகிதத்தினை வங்கி நியதிச்சட்ட அடிப்படை அலகிற்கு நன்கு மேல் பேணிய அதேவேளை, ரூபா 7.5 பில்லியன் கொண்ட மூலதன தள தேவைப்பாடு நிறைவு செய்ய வேண்டிக் காணப்படுகிறது. வங்கியானது, நிச்சயமற்ற பின்னணிக்கு மத்தியில், ஆண்டு முழுவதும் உயர்வான திரவத்தன்மையையும் பேணியது, இதன் பயனாக சொத்து மீதான ஆதாயம் மீது இது தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

## எமது மக்கள்

அர்ப்பணிப்பு மிக்க தசாப்தகால விசுவாசமிக்க சேவையுடன் கூடிய பல ஊழியர்களைக் கொண்ட எமது ஊழியர்கள், மிகவும் பெறுமதிமிக்க சொத்தாகும். 2022 இல் உறுதிப்பாடானது, அவர்களது கடின உழைப்பின் ஊடாகவும், வங்கியினதும், பங்குதாரர்களினதும் சிறந்த நலனை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்கள் ஊடாகவும், உறுதியான ஆண்டாகத் திகழ்ந்தது என்பதை வலியுறுத்த வேண்டும். எமது ஊழியர்களின் வளர்ச்சிக்கும், உறுதிப்பாட்டிற்குமான எமது கடமைப் பொறுப்பை நாம் விட்டுக்கொடுக்காமையினால், 2022 இல் ஊழியர் வளர்ச்சியினை உறுதிப்படுத்துவதற்கான உபாயங்கள், சாதமான உத்வேகமாக விளங்கின. 2022 இல் வாழ்க்கைச் செலவின் உயர்வைச் சமாளிப்பதற்கு உதவுவதற்காக, உரிய கால ஊதியம் மற்றும் மிகை ஊதியக் கொடுப்பனவுகளுடன் எமது ஊழியர்களில் நாம் உயர்ந்தளவிலான முதலீடுகளை மேற்கொண்டோம். நிதியியல் நன்மைகளையும், அதிகரித்த ஊதியத்தினையும் நாம் வழங்கினோம். நன்கு திட்டமிடப்பட்ட பயிற்சி, அட்டவணை ஒன்றின் ஊடாக ஊழியர் திறன்கள் மற்றும் அறிவினை ஒன்று சேர்த்தல் என்பவற்றுடன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், மைய ஒருமுகப்படுத்தலாக உருவாகின.

## எதிர்கால எதிர்பார்க்கை

கடந்த சில ஆண்டுகளில், எம்மீதான இடர் நேர்வு அழுத்தத்தின் முழுமையான உள்ளார்ந்தத்தை நாம் அவதானித்தோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், உலகளாவிய நோய்த் தொற்று, சமூக - அரசியல் அமைதியின்மை மற்றும் பொருளாதார நெருக்கடி என்பவற்றிலிருந்து அவை அனைத்தையும் வெறும் கடந்த மூன்று ஆண்டுகளிலேயே நாம் அவதானித்தோம். தாக்குப்பிடிக்கத்தக்க தொழில் மாதிரி ஒருபோதும் மிகவும் முக்கியமாக இருந்ததில்லை.

இதற்கு மேலதிகமாக, அதிகளவான தேவையுடைய வாடிக்கையாளர்களை அடைந்து கொள்வதற்கு, சந்தை மற்றும் சேவை வழங்கும் வழிகள், அத்துடன், உற்பத்தி வழங்கல்கள் என்பவற்றை விரிவுபடுத்துவதை உறுதிசெய்வது அத்தியாவசியமாகும். நிதியியல் உறுதிப்பாட்டைப் பேணுவதில் செலவுச் சிக்கனங்களை நாடுவது அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது. வங்கி என்ற வகையில், கடன் ஏடுகளின் தரத்தை மேம்படுத்தவதன் மூலம், பொருளாதார அழுத்தங்களை திசைப்படுத்துவது சமத்துவமான முக்கியத்துவம் மிக்கதாகக் காணப்படுகிறது.

சுற்றலுாத்துறை மீள்ளெச்சியடைவது, குறுகிய காலத்தில் பொருளாதார தூண்டல் ஒன்றாக அமைந்திருக்கும். எனினும், பொருளாதாரத்தை மீளத்திரும்பச் செய்வதில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவருவதும், ஏற்றுமதி ஊக்குவிப்பு மாத்திரமே வளம்பெறத்தக்க நீண்டகால தீர்வுகளாக விளங்குகின்றன. சிறிய, நுண், நடுத்தர அளவிலன தொழில் முயற்சிகளுக்கு வசதியளிப்பதற்கு சந்தையினால் தூண்டப்படும் புதிய பொறுப்பு மற்றும் கொடுகடன் சாதனங்களை அறிமுகப்படுத்தவதன் வாயிலாக, பொருளாதாரம் மீண்டு வர உதவுவதில் எச்டிஎப்சி வங்கி அர்ப்பணிக்கப்பட்ட பங்காளராக இடம்பெறும். மிக முக்கியமாக, தேசிய தேவைகளை முன்னுரிமைப்படுத்துவதன் மூலம், முதலீடு மற்றும் அபிவிருத்தி வங்கித் தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு வங்கி பணிக்கப்படும்.

## பாராட்டுதல்கள்

தமது வளர்ச்சிப் பாதையில் எச்டிஎப்சி வங்கிக் குடும்பத்துடன் பங்காளராகி தொடர்ந்தும் எம்முடன் இருக்கின்ற எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு நன்றிகூற நான் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கின்றேன். பரஸ்பர நன்மைகளை அவர்கள் பெறுவதனால், தொடர்ந்தும் அவர்களது நீண்ட பயணத்தை முன்னெடுக்கின்ற அனைத்து எமது சேவை வழங்குனர்களுக்கும் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை மத்திய வங்கி, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, நிதி அமைச்சு மற்றும் கொடுகடன் தகவல் பணியகம் என்பவற்றின் தொடர்புடைய ஊழியர்களுக்கு, எமது தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அவர்கள் வழங்கிய ஆதரவுக்கும், வழிகாட்டலுக்கும் முகாமைத்துவத்தின் சார்பில் நன்றி கூறுகின்றேன்.

பொருளாதாரத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய காலப்பகுதியில், வங்கியை வழிநடாத்துவதற்கும், அவர்களது வழிகாட்டலுக்கும், எனது இயலளவுகள் மீது அவர்கள் நம்பிக்கை வைத்ததற்காகவும், பணிப்பாளர் சபைக்கு நன்றிகூற இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கின்றேன். வெளியில் செல்கின்ற தலைவி திருமதி டப்ளியூ. மஞ்சநாயக்க அவர்களுக்கும் நான் நன்றி கூறுவதுடன், தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஈ.டீ.பி.சூசைப்பிள்ளை அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரது அறிவும், மையத்திறன்களும், அனுபவங்களும், துரிதமான வளர்ச்சிக்கான அதன் பாதையில் வங்கிக்கு ஏதுவாக அமையும் என நான் நம்புகின்றேன்.

வங்கிக்கு வழங்கிய அவர்களது பெறுமதிமிக்க பங்களிப்புக்காக, பதவி விலகிச் செல்லும் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. பி.கமகே மற்றும் பிரதம தொழிற்படுத்தல் அதிகாரி திரு. ஏ.ஜே.அத்துகோரல ஆகியோருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கடமைகளை பொறுப்பேற்றதிலிருந்து அயராது ஆதரவளிக்கின்ற நிறுவன முகாமைத்துவம், பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களது அர்ப்பணிப்புடன், வங்கிக்கும், எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கும், பங்குடமையாளர்களுக்கும், ஏனைய பங்குதாரர்களுக்கும், வலுவான வளர்ச்சி உத்வேகத்துடன் கூடிய நிதியாண்டை எதிர்பார்க்கின்றேன்.



நேஷாமன் கருணாபால
பிநிஅ/பொது முகாமையாளர்

# பணிப்பாளர்கள் சபை



இடமிருந்து வலம் :

1. திரு. ஈ.டீ.பீ. சூசைப்பிள்ளை - தலைவர்
2. திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி - பணிப்பாளர்
3. கலாநிதி கிரிஷாந்த பத்திராஜ - பணிப்பாளர்
4. திரு. ரஜீவ் சூரியாராச்சி - பணிப்பாளர்
5. திரு. பீ.ஏ. லயனல் - பணிப்பாளர்



இடமிருந்து வலம் :

6. சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா - பணிப்பாளர்
7. திரு. டீ.எம்.எம்.எம். விஜயரத்ன - பணிப்பாளர்
8. திரு. டப்ளியூ.எம். ஆனந்த - பணிப்பாளர்
9. திரு. பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி - பணிப்பாளர்

# பணிப்பாளர்கள் சபையின் முகக்குறிப்புகள்

## திரு. ஈ. டி. பி. சூசைப்பிள்ளை

(தலைவர்/ நிறைவேற்று தரமற்ற, சுயாதீனப் பணிப்பாளர்)

திரு. ஈ. டி. பி. சூசைப்பிள்ளை 2023 ஏப்பிரல் 12 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் எச்டிஎப்சி வங்கியின் பணிப்பாளராகவும், தலைவராகவும் நியமிக்க- ப்பட்டார்.

திரு. ஈ. டி. பி. சூசைப்பிள்ளை, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினதும், இலங்கை சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தினதும் சக உறுப்பினராவார். தொழிற்பாட்டு மற்றும் உபாயம் என்ற இரு மட்டங்களிலும் நிதியியல் ஆளுகை மற்றும் அறிக்கையிடல் முறைமைகள் என்பவற்றில் 35 ஆண்டுகளுக்கு மேல் தொழில்புரிபவர். திரு. சூசைப்பிள்ளை, இடர்நேர்வு அடையாளப்படுத்தலில், மையத் தகைமை, தொழிற்பாட்டு மட்டங்களில் மதிப்பீடு மற்றும் முகாமைத்துவம் அத்துடன், உபாய மட்டத்தில் முன்னோக்கிய இடர்நேர்வு மதிப்பீடு என்பவற்றில் மையத்திறன்களையும், நிதியியல் சேவைகள் தொழி- ற்துறையில் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் மூன்று (03) தசாப்தகால அனுபவத்தினையும் சபைக்குக் கொண்டு சேர்க்கின்றார்.

அவரது ஒன்றரை தசாப்தகால அத்துடன் சபை மட்ட நிறைவேற்றுத்தர அனுபவமானது, நிதிப் பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் முகாமைத்- துவப் பணிப்பாளர் என்ற பதவிகளில் பல முன்னணி சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளிகளில் இடம்பெறுகின்ற அதேவேளை, நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளராக அவரது அனுபவம், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், முறைமை ரீதியாக முக்கியத்துவம்மிக்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் என்பவற்றின் சபைகளை உள்ளடக்குகின்றது.

2012 இல் பரந்த பொது நிதி முகாமைத்துவக் கருத்திட்டமொன்றின் பாகமாக, மாலைதீவுகளில் செலுத்தப்படத்தக்க மதிப்பீட்டுப் பணியொன்றுக்கான குறுகிய கால ஆலோசகர் ஒருவராக சிறிய காலப்பகுதிக்கு உலக வங்கியினால் அவர் ஈடுபடுத்தப்பட்டார்.

சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா (நிறைவேற்றுத் தரமற்ற, சுயாதீன பணிப்பாளர்)
சிரேஷ்ட பேராசிரியர் ஜயமஹா, 2020 ஒக ஸ்ட் 10 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் எச்டிஎப்சி வங்கியின் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். சிரேஷ்ட பேராசிரியர் ஜயமஹா, களனிப் பல்கலைக் கழகத்திலிருந்து 1982 இல் அவரது வணிகமானி விசேட பட்டப் படிப்பினை நிறைவு செய்துள்ளதுடன், 1992
இல் வணிக முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார். 2005 இல் இவர், தனது கலாநிதி கற்கைகளை தொடர்வதற்கு அவுஸ்திரேலியாவின் தெற்கு குயின்ஸ்லாந்து பல்கலைக்- கழகத்திற்குச் சென்றதுடன், 2010 இல் கணக்கீடு மற்றும் நிதியியலில் அவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. அவுஸ்திரேலியாவின் தெற்கு குயின்ஸ்ல- ாந்து பல்கலைக் கழகத்தில் அவரது கலாநிதிப் பட்டத்திற்கான ஆராய்ச்சியானது 'இலங்கையில் கணக்கீடு மற்றும் நிதியியல் நடைமுறைகள், அத்துடன், சிறிய நிதியியல் நிறுவனங்களின் வினைத்திறன்" பற்றியதாக அமைந்திருந்தது. அவரது பணி, இலங்கையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளின் வினைத்திறனை மையப்படுத்தியிருந்தது. அவர் கண்டறிந்தவை, தேசிய மற்றும் சர்வதேச சமவாயங்களில் எடுத்தரைக்கப்பட்டதுடன், பல சம தகமையுடையே- ார் மீளாய்வு செய்த, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சஞ்சிகைகளில் வெளியிடப்பட்டதுடன், உலகம் முழுவதும் பல ஆராய்ச்சிகளிலும் வெளிவந்தது.

சிரேஷ்ட பேராசிரியர் ஜயமஹா, களனி பல்கலைக் கழகத்தின் மனித வள முகாமைத்துவ திணைக்களத்தின் தலைவர், கணக்கியல் திணைக்களத்தின் தலைவர், வணிக மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் வர்த்தக முதுமானி கற்கை நெறியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் பட்டதாரி கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி போன்ற பதவிக-ளில் பணியாற்றி களணி பல்கலைகழகத்தில் 40 அண்டுகளுக்கு மேற்பட்ட சேவையினைக் கொண்டுள்ளார்.

சிரேஷ்ட பேராசிரியர் ஜயமஹா, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சக உறுப்பினரும், ஜயமஹா, புஷ்பகுமார அன்ட் கம்பனியில் தொழில் புரிபவரும் முன்னின்று நடாத்துபவரும் ஆவார். தகமை பெற்ற பட்டயக் கணக்காளர் என்ற வகையில், இவர், பல்வேறு வகையான விரிவாக்க கற்கை நெறிகளுக்கான ஆலோசகராக அவரது கடமைகளை முன்னெடுத்துள்ளார். இலங்கையின் தேசிய மதிப்பீட்டு முறைமைக்கான கொள்கை வகுத்தல் முயற்சிகளுக்கு இதனூடாக பங்களிப்புச் செய்- துள்ளார். மேலும், சிரேஷ்ட பேராசிரியர் ஜயமஹா, 2021 இலிருந்து இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுக் கண்காணிப்பு சபையில் உறுப்பினர் ஒருவராக
இருந்து வருகின்றார்.

## திரு. டப்ளியூ.எம். ஆனந்த

(நிறைவேற்றுத் தரமற்ற, சுயாதீனப் பணிப்பாளர்)

திரு. டப்ளியூ.எம். ஆனந்த, 2021 பெப்ரவரி 24 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், எச்டிஎப்சி வங்கியின் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

திரு. ஆனந்த (இலங்கை நிருவாக சேவை விசேட தர அலுவலர்), தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் மேலதிகப் பணிப்பாளராகப் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) பணியாற்றி வருகிறார். அவர், தனது தொழிலை 1988 இல் பொது நிருவாக அமைச்சின் தாபனங்கள் உதவிப் பணிப்பா- ளராக தொடங்கினார்.

கண்டி மாவட்டத்தில் பஸ்பாகே கோரளே மற்றும் தொலுவ பிரதேசத்தின் உதவிப் பிரதேச செயலாளர் போன்ற பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். பின்னர்,
இவர், மத்திய மாகாண சபைக்கு இணைக்கப்பட்டு, மத்திய மாகாணத்தின் உதவிச் செயலாளர் மற்றும் கூட்டுறவு ஆணையாளர் போன்ற பல்வேறு பதவிகளை வகித்தார். அதன் பின்னர், அவர், மாத்தளை மாவட்டத்தில் வில்கமுவ மற்றும் பள்ளேபொல பிரதேசங்களிலும், நுவரெலியா மாவட்டத்தில், நுவரெலியாவிலும் பிரதேச செயலாளராக பதவி வகித்தார். பின்னர் ஊவா மாகாணத்தில் செயலாளராகப் பணியாற்றினார்.

இவர், பேராதனை பல்கலைக் கழகத்திலிருந்து விஞ்ஞானமாணி பட்டத்தினையும், பேராதனை பல்கலைகழகத்தில் முகாமைத்துவ கற்கைகளில் பட்டப் பின்படிப்பு டிப்ளோ- மாவையும், களனி பல்கலைக் கழகத்திலிருந்து கலை முதுமாணி (சமூகவியல்) பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

## திரு. பி.ஏ. லயனல்

(நிறைவேற்று தரமற்ற, சுயாதீன பணிப்பாளர்)

திரு. பி.ஏ. லயனல், 2021 செப்டெம்பர் 17 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், எச்டிஎப்சி வங்கியின் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

திரு. லயனல், இலங்கை வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளராகக் கடமையாற்றியுள்ளார். இவர், கொழும்பு பல்கலைக் கழகத்திலிருந்து பட்டதாரி பட்டம் பெற்றதுடன், முகாமைத்துவ பயிலுநராக 1983 இல் இலங்கை வங்கியுடன் இணைந்து கொண்டார். இவர், வங்கித் தொழில் மற்றும் நிதியியல் சேவைகளில் ஏறத்தாழ 41 ஆண்டுகளுடன் கூடிய தொழில்சார் வங்கியாளர் ஒருவராவார். சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையார் (திறைசேரி, முதலீடு மற்றும் சர்வதேச தொழிற்பாடு), பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்), மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (முதலீட்டு வங்கித் தொழில்) ஆகிய பதவிகளை

இவர், இலங்கை வங்கியின் வகித்துள்ளார். 2011 தொடக்கம் 2014 வரை இலங்கை வங்கியின் முதலீட்டுக் குழுவின் தலைவராகவும் இருந்துள்ளார்.

1988 தொடக்கம் 1989 வரை லண்டனில் திறைசேரி முகாமைத்துவம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் பரந்த அனுபவத்தையும், விரிவான பயி- ற்சியையும் பெற்றுக் கொண்டார். மேலும், 1998 தொடக்கம் 2001 வரை கராச்சி, இலங்கை வங்கியின் திறைசேரிக்கு இவர் தலைமை வகித்தார். இவர் 10 ஆண்டுகளாக கொடுகடன் குழு மற்றும் சொத்து

அத்துடன் பொறுப்பு முகாமைத்துவக் குழு உறுப்பினராக இருந்ததுடன், நாடு கடந்த நிதியிடல் மற்றும் நிதியியல் நிறுவனங்களில் எற்கனவே காணப்படும் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குதல் என்பவற்றில் விசேடத்துவம் பெற்றுள்ளார். அரசாங்க பிணையங்கள் முதனிலை மற்றும் இரண்டாம் தரச் சந்தை என்பவற்றில் 20 ஆண்டுகால அனுபவத்தையும் இவர் பெற்றுள்ளார். மேலும், இலங்கை வங்கியின் முதனிலை வணிகர் பிரிவின் பிரதம நிறைவேற்று அலுவலர் பதவியினை இவர் வகித்தார்.

இவரது தலைமைத்துவத்தின் கீழ், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஐ.அ. டொலர் 500 மில்லியன் முறிகள் வழங்கல் உள்ளடங்கலாக, இலங்கை வங்கியின் திறைசேரி பல மைற்கற்களை எட்டியது. இலங்கையின் வங்கியொன்றின் மூலம் முதன்முதல் பாரிய சர்வதேச முறி வழங்கல் இதுவாகும். இலங்கையில் முதன் முதல் ஐ. அ. டொலர் தொகுதிக்கடன் மற்றும் அரசாங்க நிறுவனத்திற்கான (நகர அபிவிருத்தி அதிகார சபை) பாரிய முறி வழங்கல் என்பனவும் இவர் மூலம் கட்டமைக்க- ப்பட்டன. அக்காலப் பகுதியில், இலங்கைக்கு வெளிநாட்டு நிதியங்களைத் திரட்டுவதற்கு பல வெளிநாட்டு வங்கிகளுடன் பாரிய வெளிநாட்டு நாணய கூட்டுக் கடன்களை இவர் கட்டமைத்துள்ளார்

திரு. லயனல், இலங்கை வங்கியில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர், 2015 இல் தேசிய சேமிப்பு வங்கியின் நிறுவன முகாமைத்துவத்துடன் இணைந்து மூன்று (03) ஆண்டுகளாக பல திறைசேரி மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவின் பிரதானியாக பணியாற்றினார். அவரது வழிகாட்டலின் கீழ், தேசிய சேமிப்பு வங்கியின் திறைசேரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகள் நிறுவப்பட்டு, வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் அவற்றின் பிரசன்னத்தை காண்பித்தன.

திரு. லயனல், 2013இல் இலங்கையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளின் உச்சமட்ட வெளிநாட்டுச் செலாவணி வணிகர்கள் நிறுவனமான இலங்கை வெளிந- ாட்டுச் செலாவணி அமைப்பின் தலைவரகவும் இருந்துள்ளார். இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணி சந்தையினை மேம்படுத்தவதற்கு ஆதரவளிப்பதில் இவர் முக்கிய ஏதுவாக அமைந்தார். வெளிநாட்டுச் செலாவணி வணிகர்கள் மற்றும் பணம் தரகுக் கம்பனிகளுக்காக பயிற்சி மற்றும் கல்விசார் வாய்ப்புகளை விரிவுபடுத்தவதில் 10 ஆண்டுகளுக்கு மேல் அமைப்பில் பல பதவிகளை வகித்து உதவியளித்தார்.

இவர் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் (பிரைவட் லிமிட்டெட் மற்றும் லங்கா டயக்னோசிஸ் லிமிட்டெட் சபைகளில் ஆறு அண்டுகளாக நிறைவேற்று தரமற்ற பணிப்பா- ளராக இருந்துள்ளார். சி பேங் யுனிட் ட்ரஸ்ட், லங்கா செக்கியுரிட்டீஸ் லிமிட்டெட், புரொப்பேர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டெட் மற்றும் கெலந்தெனிய நீர் மின்சாரக் கருத்திட்டம் என்பவற்றின் பணிப்பாளராகவும் இவர் இருந்துள்ளார். இவர், 2010 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில், இலங்கையின் வங்கியாளர் கற்கைகள் நிறுவனத்தின் ஆளுகை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். இவர், 2013 தொடக்கம் 2015 வரை இலங்கை பெற்றோலியக் கூட்டு- த்தாபனத்தின் அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவின் உறுப்பினர் ஒருவராகவும் கடமை புரிந்துள்ளார். தற்போது இவர், இடருக்குள்ளான நிதிக் கம்பனியெ-ான்றுக்காக, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ குழாத்தின் உறுப்பினராவார். திரு லயனல் 1980 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து அவரது கல்வியியல் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார்.

## திரு டி. எம். எம். எம். விஜயரத்ன

(நிறைவேற்றுத் தரமற்ற, சுயாதீன பணிப்பாளர்)

திரு டி. எம். எம். எம். விஜயரத்ன, 2021 டிசம்பர் 07 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் எச்டிஎப்சி வங்கியின் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

திரு. மதுரங்க விஜரத்ன (சட்டமானி கௌரவ - கொழும்பு பல்கலைக்கழகம்) தற்போது இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு, கம்பனிச் செயலாளர், சத்தியப்பிரமாண ஆணையாளராகப் பணிபுரிகின்றார். இவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சபை உறுப்பினரும், மொறட்டுவை சட்டத்- தரணிகள் அமைப்பின் முன்னாள் செயலாளரும் ஆவார்.
இலங்கை இளம் சட்டத்தரணிகள் அமைப்பின் தலைவர் என்ற வகையில் இவர் தொழில்சார் மற்றும் சமூக ஏற்பாட்டாளராக முக்கிய சிவில் மற்றும் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்று ஈடுபடுவதுடன் தற்போது நீதிக்கான சட்டத்தரணிகள் அமைப்பின் துணைத் தலைவர் பதவியினை வகித்து வருகின்றார்.

## திரு. பி.எம்.கே. ஹெட்டியாராச்சி

(நிறைவேற்றுத் தரமற்ற, சுயாதீன பணிப்பாளர்)

திரு. மஞ்சுள ஹெட்டியாராச்சி, 2022 ஏப்பிரல் 28 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், எச்டிஎப்சி வங்கியின் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

திரு. மஞ்சுள ஹெட்டியாராச்சி, இலங்கை திட்டமிடல் சேவையின் உதவிப் பணிப்பாளராக 2002 இல் தொடங்கி 20 ஆண்டுகளாக இலங்கையின் நிதி அமைச்சின் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக, ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் தொடர் கடன் கருத்திட்டத்திற்கான கருத்திட்டப் பணிப்பாளராகவும், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் கடமைகளை மேற்கெ- காண்டு வருகிறார்.

திரு. மஞ்சுள ஹெட்டியாராச்சி, ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச அபிவிருத்திப் பொருளியலில் முதுமாணி பட்டத்தையும், இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவத்தில் இளமாணி (விஞ்ஞானமாணி) பட்டத்தினையும் பெற்றுள்ளார். மேலும், இவர், இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்தும், ஜப்பான் சிபாவின் அபிவிருத்தி பொருளியல் நிறுவனத்திலிருந்தும் இரு பட்டப்படிப்பு பின் டிப்ளோமாக்களையும் பெற்றுள்ளார். மேலும், இவர் வங்கித்தொழில் கற்கைகள் நிறுவனத்திலிருந்து இடைநிலை வங்கித்தொழில் கற்கைகள் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

## கலாநிதி கிரிசாந்த பத்திராஜ

(நிறைவேற்றுத் தரமற்ற, சுயாதீன பணிப்பாளர்)

கலாநிதி கிரிசாந்த பத்திராஜ, 2022 ஜூன் 30 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், எச்டிஎப்சி வங்கியின் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

கலாநிதி கிரிசாந்த பத்திராஜ, இலங்கையின் பெருந்தோட்ட அமைச்சின் பனை அபிவிருத்தி சபைத் தலைவராக 2004 இல் தொடங்கி 19 ஆண்டுகளாக தனியார் மற்றும் அரசாங்கத் துறைகளில் பணியாற்றியுள்ளார். அவர், கீர்த்திமிக்க தனியார் துறை நிறுவனங்களில் ஆலோசகராக, மதியுரைஞராக பணியா- ற்றியுள்ளதுடன், தற்போது பனை அபிவிருத்தி சபையின் தலைவராகவும், லக்சலவின் வர்த்தக நாம பிரதிநிதியாகவும் பணியாற்றி வருகின்றார். மேலும்,
இவர் யாழ்பாண அபிவிருத்திக் குழுவிற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஜனவரி 10 அன்று இந்தியாவின் தமிழ்நாட்டில் டி.கே.சர்வதேச ஆராய்ச்சி மன்றத்திற்கான விஞ்ஞான ஆலோசனைச் சபை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

கலாநிதி கிரிசாந்த, வர்த்தக நிருவாகம், உபாய முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றில் விசேடத்துவம் பெருகப் பெற்றவர். இவர் கலிபோர்னியாவின் அரச பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தக நிருவாகத்தில் கலாநிதி பட்டத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன், ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னிய அரசாங்க பல்கலைக்கழகத்தின் சக உறுப்பினருமாவார்.

அத்துடன், இந்தியாவின் உலகளாவிய சமாதான பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் கலாநிதி (கௌரவ) பட்டத்தையும்,

# பணிப்பாளர்கள் சபையின் முகக்குறிப்புகள்

கம்போடியாவின் ஐசிசி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திலிருந்து உபாய முகாமைத்துவத்தில் கலாநிதி (கற்கின்றார்) பெற்றுள்ளார். இதற்கு மேலதிகமாக, ஐக்கிய இராச்சியத்தின் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டய நிறுவனத்தின் ஐக்கிய இராச்சியத்தின் பிரித்தானிய கணனிச் சங்கத்தின் தொழில்சார் உறுப்பினராவதுடன், ஐக்கிய இராச்சியத்தின் தேசிய கணனி நிலையத்தின் உறுப்பினருமாவார்.

## திரு. ரஜீவ் சூரியாராச்சி

(நிறைவேற்றுத் தரமற்ற, சுயாதீனமற்ற பணிப்பாளர்)

திரு. ரஜீவ் சூரியாராச்சி, 2022 யூன் 30 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் எச்டிஎப்சி வங்கியின் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

திரு. ரஜீவ் சூரியாராச்சி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராவார். இதற்கு மேலதிகமாக, இவர், நகர அபிவிருத்தி அதிகார சபையினதும், நகர குடியிருப்பு அதிகார சபையினதும் பணிப்பாளர் சபை உறுப்பினருமாவார்.

இவர், 2019 டிசம்பரில் வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான சேவைகள் (இலங்கை ) நிறுவனத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். காப்புறுதி, வாடி- க்கையாளர் இலத்திரனியல் மற்றும் சர்வதேச வர்த்தக நிறுவகம் போன்ற தொழிற்துறைகளில் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தையும், பரந்த அறிவையும் கொண்டவராவார். இவர், தற்போதைய பதவிக்கு 2019 டிசம்பரில் நியமிக்கப்பட்டு, அப்போதிருந்து, வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான சேவைகள் (இலங்கை ) நிறுவனத்தின் கீழ் அனைத்து விமான நிலையங்களினதும் நிருவாக மற்றும் தொழிற்பாட்டுக் கடமைகளை மேற்பார்வை செய்வதில் முக்கிய பங்காற்றி வருவதுடன், தலைவர் தவிர்ந்த வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான சேவைகள் (இலங்கை ) நிறுவனத்தின் ஒரே ஒரு முழுநேர நிறைவேற்றுப் பணிப்பாளர் வகிபாகத்தினை இவர் வகிப்பதனால், ஊடக நிறுவனங்களுடனான தொடர்புகளில் வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான சேவைகள் (இலங்கை ) கம்பனிக்கான முக்கிய பேசுவல்ல அதிகாரியாகவும் செயற்படுகின்ற அதேவேளை, உள்நாட்டு சர்வதேச இருவகையான தொழிற்துறை முக்கிய பங்காளர்களுடனும் நெருங்கிப் பணியா- ற்றுகின்றார். இவர், வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான சேவைகள் (இலங்கை ) நிறுவனத்தின் மனிதவள மற்றும் ஊழியர் சபைக்குழுவின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான சேவைகள் (இலங்கை ) நிறுவனத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், திரு.ரஜீவ் 2010 - 2015 காலப்பகுதியில் புத்தளம் சோல்ட் லிமிட்டெட் நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றினார். 2011 - 2022 காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட கம்பஹா
கூட்டுறவு கிராமிய வங்கி ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றினார். 2022 இலிருந்து இவர் கூட்டுறவு ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் துணைத்தலைவராக பணியாற்றியதுடன், 2016 தொடக்கம் கூட்டுறவுக் காப்புறுதி கம்பனி லிமிட்டெட்டிலும் 2007 - 2010 தொடக்கம் வீதி அபிவிருத்தி அதிகார சபையிலும் பணிப்பாளர் பதவிகளை வகித்துள்ளார்,

## திரு. பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி

(நிறைவேற்றுத் தரமற்ற, சுயாதீன பணிப்பாளர்)

திரு. பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி, 2023 ஏப்பிரல் 12 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், எச்டிஎப்சி வங்கியின் சபை உறுப்பினராக நியமி- க்கப்பட்டார்.

திரு. சந்திரகீர்த்தி, இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்திலான அலுவலராகவுள்ளதுடன், அரசாங்கத் துறையில் 23 ஆண்டுகள் சேவையை கொண்டவராவார். தற்போது இவர், தொழில் திணைக்களத்தில் ஆணையாளர் நாயகமாகக் கமையாற்றி வருகிறார். இவர், தேசிய தொழிற்பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய நிறுவகத்திலும், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்திலும் துணைத் தலைவர் பதவிகளை வகித்து வருகிறார்.

திரு. சந்திரகீர்த்தி, இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்திலிருந்து கலைமானி (1998) பட்டத்தைப் பெற்றுக் கொண்டதுடன், 2002 ஆம் ஆண்டில், அரசாங்க

சேவையுடன் இணைந்து கொண்டார். பின்னர் இவர், பொருளியலில் முதுமாணிப் பட்டத்தையும் (2008), இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து சட்டமாணி பட்டத்- தையும், 2014 இல் இலங்கை சட்டக் கல்லூரியிலிருந்து சட்டத்தரணி பட்டத்தையும் நிறைவு செய்துள்ளார். அத்துடன், ரஷ்யாவின் சர்வதேச அடிப்படைக் கற்கைகளுக்கான பல்கலைக்கழகத்திலிருந்து இவர் கலாநிதி (கரையோர வளங்கள் முகாமைத்துவம்) பெற்றுள்ளார் (2016).

திரு. சந்திரகீர்த்தி, மேற்குறித்த பதவிகளுக்கு மேலதிகமாக, கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தில் பணிப்பா- ளர் நாயகம் பதவியையும் வகித்துள்ளார். 2010 தொடக்கம் 2015 வரை இவர் பாராளுமன்றத்தின் சபைத் தலைவர்கள் அலுவலகத்தில் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பணியாற்றியதுடன், 2006 தொடக்கம் 2010 வரை பாராளுமன்றத்தின் சபைத் தலைவர்கள் அலுவலகத்தின் உதவிச் செயலாளராகவும் இருந்துள்ளார். அத்துடன், 2003
- 2006 வரை இவர் பியகம பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளராகப் பணியாற்றினார். 2000 தொடக்கம் 2003 வரை திரு. சந்திரகீர்த்தி, ஊவா மாகாண சபையின் கல்வி மற்றும் சுற்றுலா அமைச்சின் உதவிச் செயலாளராகப் பணியாற்றினார்.
திரு. சந்திரகீர்த்தி, சுற்றுலா முகாமைத்துவம், பொது முகாமைத்துவம், பொது நிருவாகம் போன்றவற்றில் இரண்டு தசாப்தத்திற்கும் மேற்பட்ட தொழில்சார் அனுபவத்துடன் கூடிய உயர்வாக கற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த தொழில்சார் நிபுணராவார். இவர் பாராளுமன்ற நடைமுறைகள் பற்றிய வலுவான புரிந்துணர்வையும், கரையோரப் பாதுகாப்பு முகாமைத்துவம் பற்றியும் சிறந்த அறிவினை விருத்தி செய்துள்ளார்.

இவரது தொழில் வாழ்க்கை முழுவதும், திரு. சந்திரகீர்த்தி ரஷ்யா, ஜப்பான், ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, மலேசியா, இந்தோனேசியா, ஐக்கிய அரபு இராச்சியம், தென் கொரியா, ஐக்கிய அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் உள்ளடங்கலாக, பல்வேறு நாடுகளுக்கும் அதிகளவு பயணிப்பதற்க- ான வாய்ப்பினைக் கொண்டிருந்தார். இந்நாடுகளில் இவர் வேறுபட்ட கலாசாரங்கள், சிறந்த நடத்தைகள் பற்றிய பெறுமதிமிக்க ஆழமான அறிவினையும் பெற்றுக் கொண்டார்.

திரு. சந்திரகீர்த்திக்கு இலங்கையின் டிரான்ஸ்பேரன்ஸ் இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா மூலம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் 'பிருத்வி பிரணாம", மற்றும் 'திறமை மிக்க அரசாங்க அலுவலர்" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

# நிறுவன முகாமைத்துவம்



## திரு. நிஷாமன் கருணாபால

பிரதம நிறைவேற்று அதிகாரி /பொது முகாமையாளர்

திரு. டி.எம்.என்.பி. கருணாபால, நிதியியல் சேவைகள் தொழிற்துறையில், குறிப்பாக, நிறுவன உபாயம், முறைமைகள் மற்றும் செயன்முறைகள் அபிவ- ிருத்தி, இடர்நேர்வு முகாமைத்துவம், வர்த்தக அபிவிருத்தி, வர்த்தக மற்றும் கருத்திட்ட நிதி, குத்தகைக்கு விடுத்தல் மற்றும் கடன் தீர்த்தல் நிதி போ- ன்றவற்றில் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டவராவார்.

இவர், மெல்ஸ்ரா கோப் பிஎல்சியின் முன்னாள் துணை நிறுவனமொன்றான மெல்ஸ்ரா ரீகல் பினான்ஸ் லிமிட்டெட்டின் தாபகப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமாவார். மெல்ஸ்ரா ரீகல் நிறுவனத்தில் இவரது பதவிக்காலம், வெளிநாட்டு மற்றும் தனியார் பங்குரிமை முதலீட்டாளர்களின் கூட்டிணைப்பினால் அது கையகப்படுத்தப்படுவதற்கு முன்னர், 5 ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியாகும். நூதனம்மிக்க உற்பத்தி வழங்கலுடன், தொழிற்துறையில் புரட்சிகரமான செயற்பாட்டாளரொருவராக நிறுவனத்தின் உபாயப்படுத்தல் மற்றும் நிலைநிறுத்தல் என்பவற்றுக்கு திரு. நிஷாமன் தலைமை வகித்தார். அதனைத் தொடர்ந்து, இலங்கை மேர்ச்சன்ட் வங்கி மற்றும் பினான்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அலுவலராகவும், எம்பிஎஸ்எல் லிமிட்டெட்டின் பணிப்பாளராகவும் இவர் பணியாற்றினார்.

இவர், நிதியியல் நிறுவனங்கள் அமைப்பின் துணைத்தலைவராக இருந்ததுடன், இலங்கை குத்தகைக்கு விடும் அமைப்பின் தலைவராகவும் பணியாற்றினார். வர்த்தகச் சங்கத்தின் குழு உறுப்பினராகவும், இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் முன்னால் பணிப்பாளராகவும், இலங்கை கொடுகடன் முகாமைத்துவ நிறுவனத்தின் சபை உறுப்பினராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

திரு. நிஷாமனின் 35 ஆண்டு கால தொழில் வாழ்க்கை ஏ பவர்ஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட், ஆன்சல் லங்கா போன்ற கீர்த்திமிக்க பல்தேசிய கம்பனிக- ளில் தொடங்கியது. நிதியியல் சேவைகள் தொழிற்துறையில் இவர் 2023 இல் ஒரியன்ட் பினான்ஸ் பிஎல்சியின் தாபனத்திற்கு தலைமை வகித்ததுடன், அவர், பிரதிப் பொது முகாமையாளராக வெளியேறுவதற்கு முன்னர், 09 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். செலான் மேர்ச்சன்ட் வங்கி மற்றும் மேர்க்கன்டைல் லீசிங் லிமிட்டெட் ஆகியவற்றில் பல முக்கிய பதவிகளையும் வகித்தார். ஐக்கிய இராச்சியம், அயர்லாந்து, இந்தியா, ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் அவரது பயிற்சியும், தேர்ச்சிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அவரது பணி, கீர்த்திமிக்க கூட்டு நிறுவனங்கள் மற்றும் நித- ியியல் நிறுவனங்களின் முறைமைகள் மற்றும் தொழிற்பாட்டு நடைமுறைகள் பற்றி கவனம் செலுத்துவதாகவும் இருந்தது.

தற்போது, இவர் லஸ்ஸன புளோரா குழுமத்தில் பணிப்பாளர் பதவியை வகிப்பதுடன், முகாமைத்துவ ஆலோசகராகவும் பணியாற்றுகின்றார். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கொடைகளைப் பெற்றுக்கொள்ளல், படுகடன் நிதியளித்தல் போன்ற துறைகளில் இ-வர்த்தகம், விவசாயம், தயாரித்தல், விருந்தோம்பல் ஆகிய துறைகளில் நிறுவனங்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். ஆளுகை, தொழிற்பாட்டு செயலாற்றுகை என்பவற்றை வலுப்படுத்துவ- தற்கும், வெளிநாட்டு பங்குரிமை மூலதன நிதியிடலை வசதிப்படுத்துவதற்கும் இவர் உபாய ரீதியான வழிகாட்டலையும் வழங்கியுள்ளார்.

இவர் பட்டப் பின்படிப்பு முகாமைத்துவ நிறுவனத்திலிருந்து வங்கித் தொழில் மற்றும் நிதி என்பவற்றில் தனது வியாபார நிருவாகத்தில் முதுமாணி பட்ட-

த்தையும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் விஞ்ஞானமாணி விசேட பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் பட்டப் பின்ப- டிப்பு முகாமைத்துவ நிறுவனத்திலிருந்து நவீன வர்த்தக வங்கித் தொழிலில் பட்டப் பின்படிப்பு மட்ட டிப்ளோமாவையும் பெற்றுள்ளதுடன், சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்களின் (அவுஸ்திரேலியா) உறுப்பினர் ஒருவருமாவார்.



## திரு. சீ.ஆர்.பி. பாலசூரிய

பிரதிப் பொதுமுகாமையாளர் - திறைசேரி மற்றும் சந்தைப்படுத்தல்

நிதியியல் மற்றும் முகாமைத்துவத்தில் முதுமாணி, வணிகமாணி (விசேடம்), ஆயுயுவு
நியமனத் திகதி - 2004 மார்ச் 22

திரு. பாலசூரிய, வங்கித் தொழிற்துறையில் 35 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவர். திரு. பாலசூரிய, 1988 இல் பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் வங்கியில் தனது வங்கித்தொழில் வாழ்க்கையை தொடங்கினார். பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் வங்கியில் அவர் கொடுகடன், கணக்கீடு மற்றும் திறைசேரி முகாமைத்- துவம் மற்றும் நிறுவன நிதி என்பவற்றில் பல சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளில் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து, அவர் 2004 இல் எச்டிஎப்சி வங்கியுடன் இணைந்து கொண்டார். அப்போதிருந்து அவர், கணக்காளர் - நிதி, கணக்காளர் - திறைசேரி. சிரேஷ்ட முகாமையாளர் - திறைசேரி, பிரதம முகாமையாளர் - திறைசேரி, உதவிப் பொது முகாமையாளர் - திறைசேரி ஆகிய பதவிகளை வகித்ததுடன், 2020 இல் திறைசேரி பிரதிப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. பாலசூரிய, தனது தொழில் வாழ்க்கையின் போது, பல்வேறு வங்கித்தொழில் நோக்குகளையும் உள்ளடக்கி, பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயி- ற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும் செயலமர்வுகளிலும் கலந்து கொண்டுள்ளார். இவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிகமாணி (விசேட) பட்டத்தையும், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து நிதி மற்றும் பொருளியலில் முதுமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர், இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியல- ாளர்கள் அமைப்பு நிறுவனத்தின் இணை உறுப்பினர் ஒருவருமாவார்.



## திருமதி. டப்ளியூ.டப்ளியூ.டி.எஸ்.சி. பெரேரா

பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம் மற்றும் அறவீடுகள்

சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு நியமனத் திகதி - 1992 நவம்பர் 16

திருமதி. பெரேரா, எச்டிஎப்சி வங்கியில் சட்ட அலுவலராக அவரது தொழிலை தொடங்கினார். அப்போதிருந்து அவர், உறுதியாக முன்னேற்றமடைந்து, 2020 இல் சட்ட மற்றும் அறவீடுகள் பிரதிப் பொது முகாமையாளர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். இவர், சட்டத்துறையில் விசேடமாக வீடமைப்பு நிதி வங்கித் தொழில் மற்றும் வழக்காடல் விடயப் பரப்புகளில் 33 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொழில்சார் அனுபவத்தைப் பெற்றுள்ளார்.



## திருமதி. கே.ரீ.டி.டி. சில்வா

உதவிப் பொது முகாமையாளர் - மனித வள முகாமைத்துவம்

சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தரிசு
வியாபார நிருவாகத்தின் முதுமாணி (ஆடீயு), சட்ட முதுமாணி (டுடுஆ) மற்றும் வங்கித்தொழில், நிதி மற்றும் காப்புறுதி உயர் டிப்ளோமா நியமனத் திகதி - 1999 செப்டெம்பர் 01

திருமதி டி. சில்வா, சட்டத்தரணியாக 29 வருட கால அனுபவத்தை கொண்டுள்ளதுடன், 1999 இல் சட்டத் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்ட சட்டத்தரணியாக அவரது தொழிலை எச்டிஎப்சி வங்கியில் தொடங்கினார். அதன் பின்னர் அவர், 2006 இல் கம்பனிச் செயலாளராக நியமிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து, உதவிப் பொது முகாமையாளர், மனித வள முகாமைத்துவம் பதவிக்கு பதவி உயர்வு பெற்றார்.



## திரு. எச்.ஏ. அநுர
பிரதம நிதியியல் அலுவலர்

வர்த்தக நிருவாகத்தில் முதுமாணி (ஆடீயு), முகாமைத்துவத்தில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா (ரஜரட்ட), விஞ்ஞானமாணி கணக்கீடு விசேடம் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), குஜீயு (யுர), குகுயு(ருமு)இ ஆயுயுவுஇ இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலை.
நியமனத் திகதி- 2004 ஒக்டோபர் 01

திரு. அநுர, வங்கித் தொழில், கொடுகடன், அறவீடு. நிதியம் திரட்டுதல், கிளைத் தொழிற்பாடுகள், கணக்கீடு, நிதியியல் முகாமைத்துவம், வரி விதிப்பு, கணக்காய்வு, திறைசேரி முகாமைத்துவம், இணங்குவித்தல், நிறுவன நிதியியல் அறிக்கையிடல் மற்றும் ஆண்டறிக்கைகள், வரவு செலவுத் திட்டம் தயாரித்தல் மற்றும் நிதி திட்டமிடல் என்பவற்றில் இரண்டரை தசாப்த பணி அனுபவத்தை கொண்டவராவார். இவர், நிறுவன மட்ட முகாமைத்துவத்தில் பல உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களில் கலந்து கொண்டுள்ளார்.

இவர், தனது தொழில் வாழ்க்கையை 1996 இல் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் கணக்காளராகத் தொடங்கி, இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்தில் பணியா- ற்றியதுடன், 1988 இல் பிரதேச அபிவிருத்தி வங்கியில் இணைந்து கொண்டு கணக்காய்வு / நிறைவேற்று அதிகாரி மற்றும் உதவி முகாமையாளர் பதவிகளில்

பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து, எச்டிஎப்சி வங்கியில் கம்பஹா பிரிவின் முகாமையாளராக 2004 இல் இணைந்து கொண்டார். 2007 இலிருந்து இவர், கணக்காளர் திறைசேரி, கணக்காளர் நிதி மற்றும் சிரேஷ்ட முகாமையாளர், நிதி அத்துடன் பிரதம முகாமையாளர் நிதி பதவிகளில் பணியாற்றியுள்ளார்.



## திருமதி டப்ளியூ.என்.டீ. பொதேஜு
உதவிப் பொது முகாமையாளர் - நிருவாகம்

விஞ்ஞானமாணி வர்த்தக நிருவாகம் (விசேட)
CBA (CA Sri Lanka), CBF
நியமனத் திகதி - 1995 யூலை 01

திருமதி பொதேஜு, ஏனைய துறைகளுக்கு மேலதிகமாக, முகாமைத்துவம், நிதி மற்றும் மனித வள துறைகளிலும், தனியார் மற்றும் வங்கித் தொழில் துறைகளிலும் 31 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவராவார். எச்டிஎப்சி வங்கியில் இணைந்து கொள்வதற்கு முன்னர், இவர், ஏற்றுமதித் துறையில் கணக்காளரா-கப் பணியாற்றினார். கொடுகடன் அலுவலராக இவர் 1995 இல் எச்டிஎப்சி வங்கியுடன் இணைந்து கொண்டார். அப்போதிருந்து இவர் கணக்காளர் திறைசேரி, முகாமையாளர் - கணக்குகள் கட்டுப்பாடு சிரேஷ்ட முகாமையாளர் (மனித வளங்கள்) மற்றும் பிரதம முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) பதவிகளில்

பணியாற்றியுள்ளதுடன், 2020 இல் உதவிப் பொது முகாமையாளராக (நிருவாகம்) நியமிக்கப்பட்டார்.



## திரு. ஐ. நிஷாந்த

பிரதம முகாமையாளர் - இடர்நேர் முகாமைத்துவ மற்றும் இணக்க அதிகாரி (பதில்)

MBS, விஞ்ஞானமாணி வர்த்தகம் (விசேடம்), யுஐடீஇ டுஜஊயு
நியமனத் திகதி - 2000 யூன் 26

திரு. நிஷாந்த, இலங்கை வங்கித்தொழில் நிறுவனத்தின் இணை உறுப்பினராவதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகக் கற்கைகளில் தனது முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். எச்டிஎப்சி வங்கியுடன் இணைந்து கொண்டதன் மூலம், 2000 ஆண்டில் தனது வங்கித்தொழில் வாழ்க்கையை தொடங்கியதுடன், கடந்த 21 ஆண்டுகளுக்கு மேல் அறவீடுகள், நிதி, கொடுகடன் முகாமைத்துவம் மற்றும் வங்கிக் கிளைத் தொழிற்பாடுகள் போன்ற பதவிகளில் பணியாற்றி, 2011 டிசம்பரில் இடர்நேர்வு முகாமைத்துவ பிரதானியாக நியமிக்கப்பட்டார். 2017 இல் நிறைவு பெற்ற புதிய மைய வங்கி நடைமுறைப்படுத்தல் செயன்முறையில் இவர் முக்கிய பங்காற்றினார்.



## திரு. ஏ. எம். நீலச்சந்திர

பிரதம முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம்

விஞ்ஞானமாணி ஜேடீஆஇ ஊஊளீளூ
நியமனத் திகதி - 1997 டிசம்பர் 01

திரு. நீலச்சந்திர, வங்கித் தொழில் மற்றும் அரசாங்கத் துறைகளில் தகவல் தொழில்நுட்ப தொழில்சார் நிபுணராக 26 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவர். ருஜேஓ - அடிப்படையிலமைந்த முறைமைகள் பலவற்றில் விரிவான அனுபவத்தைப் பெற்றுள்ளதுடன், இரு ஆண்டுகளாக கணனி மற்றும் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றியுள்ளார்.



## திருமதி. ஜி. பி. பிரியதர்ஷனி

பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

குஊயுஇ யுஊஆயுஇ ஆயுயுவுஇ இலங்கை வங்கித் தொழில் நிறுவகத்தின் உறுப்பினர், பொருளியல் முதுமாணி வர்த்தக நிருவாகமாணி டீடீயு (கணக்கீடு) விசேட பட்டம் நியமனத் திகதி - 2021 ஒக்டோபர் 25

திருமதி பிரியதர்ஷனி, கணக்காய்வுத் துறையில் 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டவர். எச்டிஎப்சி வங்கியுடன் இணைந்து கொள்வதற்கு முன்னர் அவர், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு கண்காணிப்பாளராகப் பணியாற்றினார். அவரது கணக்காய்வுத் தொழில் வாழ்க்கையில், இத்தொழிற்- துறை, அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் என்பவற்றில் அனுபவத்தை பெற்றுள்ளார்.



## திருமதி. என். கே. டீ. எம். டப்ளியூ. நாரங்கொட

கம்பனிச் செயலாளர்,

சட்டமாணி (கௌரவ) லண்டன் பல்கலைக்கழகம், சட்டத்தரணி, பட்டயம் பெற்ற மற்றும் கூட்டு நிறுவன நிறுவகத்தின் பட்டயம் பெற்ற செயலாளர் மற்றும் பிரசித்த நொத்தாரிசு
நியமனத் திகதி - 2022 யூலை 07

திருமதி மனோரி நாரங்கொட, வங்கித் தொழிற்துறையில் 13 ஆண்டு கால அனுபவத்தைக் கொண்டவர். இவர், ஒரு சட்டத்தரணி என்பதுடன், இலங்கை பட்டயம் பெற்ற கூட்டு நிறுவன செயலாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர் ஒருவருமாவார். எச்டிஎப்சி வங்கியில் இணைவதற்கு முன்னர் இவர் அமானா வங்கி பீஎல்சியில் உதவிச் செயலாளர் பதவியை வகித்துள்ளார்.

# பிரிவுத் தலைவர்கள்ண



திருமதி எம். ஆர். எஸ். பெர்னாண்டோ
பிரதம முகாமையாளர் - சட்டம்



திரு. டப்ளியூ. டீ. கே. செனவிரத்ன
பிரதம முகாமையாளர் - அறவீடுகள்



திரு. ரீ. எச். கே. பீ. டீ சில்வா
பிரதம முகாமையாளர் - தகவல் பாதுகாப்பு



திரு. டீ. என். தர்மரத்ன
பிரதம முகாமையாளர் - கடன்கள்



திருமதி சீ.பீ.கே. ஹேவகே
சிரேஷ்ட முகாமையாளர் (மனித வளங்கள்)



திருமதி எல். டீ. எஸ். எச். லியனகே
சிரேஷ்ட முகாமையாளர் - கொடுப்பனவு



திருமதி எம். யூ. எஸ். டீ கொஸ்தா
சிரேஷ்ட முகாமையாளர் - செயற்பாடுகள்



திரு. டி. எம். ஏ. திசாநாயக்க
சிரேஷ்ட முகாமையாளர் - கூட்றவு மற்றும் அபிவிருத்தி நிதி



திரு. ஜீ. டீ. கே. எச். பெரேரா
முகாமையாளர் - வைப்புகளும் வர்த்தக அபிவிருத்தியும்



திரு. பி. எம்.பீ. பெரேரா
முகாமையாளர் - கடன் நிர்வாகம்



திருமதி கே. எச். டீ. பிரியங்கா
முகாமையாளர் - சந்தைப்படுத்தல்



திருமதி என். எல். விஜேசிரி
முகாமையாளர் - தொழில்நுட்ப மற்றும் வளாகப் பராமரிப்பு



திருமதி ஜே.ஏ.எல்.கே. ஜயலத்
அலகு முகாமையாளர் - தங்கக் கடன்கள்

# பிராந்திய மற்றும் கிளை முகாமைத்துவம்

## பிராந்திய முகாமையாளர்கள்



திரு. ஆர். ஏ. ஜே. என். ரணசிங்க
பிராந்தியம் 1



திரு. பி. டப்ளியூ. எம். சீ. குமாரசிரி
பிராந்தியம் 2



திரு. ஐ. கே. தெவடங்க
பிராந்தியம் 3



திரு. எச். எம். யூ. சமரவீர
பிராந்தியம் 4

## கிளை முகாமையாளர்கள்



திரு. பீ.ஜீ.எச்.பீ. டில்ஷான் - அம்பலாங்கொடை



திரு. பீ. ராஜராஜன் - அம்பாறை



திருமதி ஆர். ஏ. பிலபிட்டிய - அநுராதபுரம்



திரு. டீ. ஆர். ஜீ. டி. பி. ஜயதிலக - அவிசாவலை



திருமதி எம். ஜி. டீ. பீ. சேனவிரத்ன - பதுளை



திரு. எல். ஜயசங்கர் - மட்டக்களப்பு



திரு. டீ. கே. பீ. டீ சில்வா - கொழும்பு



திரு. டீ. எஸ். ஆர். திசாநாயக்க - தம்புள்ள

# பிராந்திய மற்றும் கிளை முகாமைத்துவம்



திரு. எச். டீ. எஸ். சேனாரத்ன - எம்பிலிப்பிட்டிய



திரு. ரீ.வீ.டீ. நயனஜித் - காலி



திருமதி டப்ளியூ. பி. எம். ஏ. பொன்னாண்டோ - கம்பஹா



திருமதி என். ஏ. ஏ. என். எஸ். நிஸ்ஸங்க - கம்பளை



திருமதி டீ. ரீ. ஏ. ஜயசிங்க - ஹோமாகம



திரு. பீ. ஏ. விராஜ் சம்பத் - ஹொரண



திரு. ஏ. ஐ. கிரியெல்ல - ஹயிட் பார்க்



திரு. கே. ஏ. ஏ. பீ. எஸ். குமார - ஜா-எல



திருமதி எஸ். சுயனியா - யாழ்ப்பாணம்



திருமதி ஆர். எஸ். ஐ. சில்வா - களுத்துறை



திரு. எல். எஸ். பீ. ரத்நாயக்க - கண்டி



திரு. ஆர். ஏ. சீ. எஸ். புஷ்பகுமார - கேகாலை



திரு. எச். ஏ. எஸ். எல். ஹப்பன்கம - கிரிபத்கொட



திரு. ஏ. எம். யூ. எஸ். பீ. அத்தநாயக்க - குளியாப்பிட்டி



திரு. டீ.ஏ.என்.பீ.கே. பியதாச - குருநாகல்



திரு. ரீ. ஜீ. ஆர். எம். ஆர். எம். ரத்நாயக்க - மாத்தளை



திரு. பீ. ஏக்கநாயக்க - மாத்தறை



திரு. ஏ.எம்.பிரபாஷ் - மொனராகல



திரு. ஜீ.ஜீ.என்.ரீ. நில்கல - நிக்கவரட்டிய



திருமதி எஸ். கே. பீ. சமந்தி - நிட்டம்புவ



திருமதி ஏ. யூ. ரீ. பொன்னாண்டோ - நுகேகொட



திருமதி எச். ஆர். எஸ். பீ. சேனாநாயக்க - நுவரெலிய



திரு. ரீ. எச். எம். ஏ. ஹேவகே - பேலியகொட



திரு. எச். என். ஜே. பெரேரா - பிலியந்தல



திரு. எச். ஆர். எம். தாரக - பொலன்னறுவை



திரு. எம். ஏ. எஸ். தேசப்பிரிய - தங்காலை



திரு. எம். எல். என். அநுராத - திஸ்ஸமஹாராம



திரு. ஏ. ஜி. ஸ்ரீபன் - திருகோணமலை



திரு. ரீ. வேல்ஷ்குமா - வவுனியா

புகைப்படங்கள் கிடைக்காதவர்கள்

திரு. எஸ்.எச்.கே. கமகே - சிலாபம்
திரு. எஸ். எம். எஸ். கே. பண்டார - இரத்தினபுரி

# முகாமைத்துவப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

வெளிவாரி தொழிற்பாட்டுச் சூழல் | 72

தொழிற் பிரிவுகளும் செயலாற்றமும் | 79

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்:

பங்குதாரர்களின் சிறந்த நலனுக்கான நிதி முகாமைத்துவம் | 83

சேவைகள் வழங்குவதற்கான சமநிலை அணுகுமுறை | 90

எமது பணியாளர்களின் வளர்ச்சியைப் பேணுதல் | 95

சாத்தியமான எல்லைகளை விரிவுபடுத்துதல் | 107

தனித்துவமான பெறுமதி உருவாக்கம் மற்றும் பலப்படுத்தப்பட்ட உறவுகள் | 112

நிலையான முயற்சிகள் | 121

# வெளிவாரி தொழிற்பாட்டுச் சூழல்

## உலகளாவிய பொருளாதாரம்

உயர்வடைகின்ற உலகளாவிய பணவீக்கத்தின் அலைகள் மற்றும் யுக்ரேன் போர் போன்ற புவிசார் அரசியல் போர்நிலை என்பன இவ்வாண்டை இயக்கியமையினால், 2022 ஆம் ஆண்டானது, பொருளாதாரத்திற்கு அதீத தளம்பல் மிக்க ஆண்டாகவிருந்தது. ஆண்டின் மைய எடுத்துக்காட்டுகளாக இவை தோற்றம் பெற்று சீன பொருளாதாரத்தில் மெதுவடைதலின் மூலம் துணையளிக்கப்பட்டது. 2023 சனவரியின் இற்றைப்படுத்தப்பட்ட உலகளாவிய பொருளாதார எதிர்பார்க்கையானது, 2022 உலகளாவிய வளர்ச்சி (உலகளாவிய வெளியீடு) முன்னேற்றகரமான நாடுகளில் 3.4 சதவீதமாகவும், முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் 2.7 சதவீதமாகவும், வளர்ச்சியடைகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 3.9 சதவீதமாகவும் இருக்குமெனவும் கூட்டிக்காட்டுகின்றது.

2022 இல் யுக்ரேனில் போர் காரணமாக, உணவு மற்றும் எரிபொருள் என்பன பணவீக்கத்தை விடாப்பிடியான மட்டத்திற்குக் கொண்டு சென்று, புதிய உச்சங்களைத் தொட வைத்தன. உலகளாவிய நோய்த் தொற்றின் விளைவுகளுக்குப் பின்னரும், நோய்த் தொற்றினால் தூண்டப்பட்ட அரசிறை ஆதரவு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தமையினால், தொடர்ந்தும் பொருளாதாரங்களைப் பாதித்தன. உலகின் பாரிய பொருளாதாரத்தின் பூச்சிய கொவிட் (zero COVID) கொள்கைகளுடனான கரிசனைகள் 2022 உலகளாவிய பொருளாதாரத்தையும் பாதித்தன, ஆயினும், தற்போது இறுதியினைச் சந்தித்துள்ளன. எனினும், சக்திக்கான உலகளாவிய விலைகளில் யுத்தமும் பாதிப்பை ஏற்படுத்தியதன் காரணமாக, வழங்கல் சங்கிலிகள் மீது உபாயமான அழுத்தங்களைச் சேர்த்த அதேவேளை, யுத்தம் காரணமாக, ஐரோப்பாவிற்கான எரிவாயு வழங்கல் இடையூறுகளுக்குள்ளாகின. மேலும், இலங்கையில் உயர்வான வட்டி வீத பரிபாலனமும், கடன் பெறுதல் செலவும் உள்நாட்டுக்குரிய விடயமாக மாத்திரம் இருக்கவில்லை இது, இறுக்கமாக்கப்பட்ட நாணயக் கொள்கைகளுடன் ஒன்றிணைந்து, ஐக்கிய அமெரிக்கா போன்ற பொருளாதாரங்களிலும் காணக்கிடைத்தது.

## உள்நாட்டுப் பொருளாதாரம்

2022 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கமடைந்தது. 2022 இல் வர்த்தக மற்றும் சிவில் வாழ்க்கை இயல்புநிலைக்குத் திரும்பியதனால், நோய்த்தொற்று பற்றிய அச்சங்கள் தொடர்ந்தும் குறைவடைந்தன. எனினும், 2022இன் அபிவிருத்திகளும், பொருளாதார சரிவுகளும், பொருளாதாரத்திற்கு மாத்திரமின்றி, ஆண்டின் அநேகமான காலப்பகுதியில் அரசியல் மற்றும் சமூக சரிவுகளாகவும் காணப்பட்டன. ஒரே பார்வையில் நோக்குகையில், செலவிடத்தக்க வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறையானது, நேரடியான மற்றும் நேரடியற்ற தாக்கங்களுடன் 2022இன் பாரிய பொருளாதாரப் பின்னடைவுகளாகக் காணப்பட்டன. மருந்து, எரிவாயு, மற்றும் எரிபொருள் பற்றாக்குறைகளை, குறைவடைந்த வெளிநாட்டு ஒதுக்கு தீவிரப்படுத்திய அதேவேளை, சமூக வாழ்க்கைக்கான இடையூறுகள் தவிர்க்க முடியாதவையாகக் காணப்பட்டன. விடயத்தை மேலும் மோசமாக்கிய இலங்கையின் சுற்றுலாத் தொழிற்துறை, ஆண்டின் இரண்டாம் அரையாண்டு வரை, நன்கு செயலாற்றி இருக்காத அதேவேளை, பல்வேறு காரணங்களினால் வெளிநாட்டு பண வரவுகளும் தடைப்பட்டன. 2022இல் ஏற்றுமதி வருவாய் அதிகரித்து, வர்த்தகப் பற்றாக்குறை குறைவடைந்த போதிலும், குறைவடைகின்ற ஒதுக்கு நிலைமையினை குறைநிரப்புச் செய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் போதாதிருந்தது.

## உள்நாட்டு வங்கித் தொழிற்துறை (1)

2022 முழுவதும், வங்கித் தொழிற்துறை உறுதியானதாகக் காணப்பட்டு, நிதியியல் துறையை வழிநடாத்தியது. ஆயினும், சீர்குலைகின்ற கொடுகடன் தரம், திரவத் தன்மை கரிசனைகள், குறைவான இலாபம் மற்றும் உயர்வான சேத இழப்புகள் மற்றும் மூலதனக் காப்புகள் குறைவடைதல் போன்ற பல தடைகளை எதிர்கொண்டது. இறுக்கமான நாணயக் கொள்கை, பேரண்ட பொருளாதார எதிர்மறைக் காரணிகள் என்பவற்றுக்கு மத்தியில் கொடுகடன் வளர்ச்சி வேகம் குறைந்தது. 2022இல் பின்வரும் பொதுவான அபிவிருத்திகள் இடம்பெற்றன.

- பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களுக்கு தொழில்களுக்கும் ஆதரவளிப்பதற்கு நீண்டகால சலுகைகள் மற்றும் கடனை காலம்தாழ்த்திச் செலுத்தல்
- பாரிய அளவில் மூலதனத் தேவைப்பாடுகளுடன் துறை இணங்கியொழுகியது.
- உயர்வான சேத இழப்புகள், இலாபத்தன்மை குறைவடைவதற்கு வழிவகுத்தன.
- துறையின் மொத்த சொத்துகள் அதிகரித்தன.
- அதிகரிக்கின்ற துறை முழுவதுமான சேதஇழப்பு மாற்றங்கள் இக்காலப்பகுதியினுள் குறைவடைந்த இலாபத்தன்மையினைக் கொண்டு சேர்த்தன.

## உலகளாவிய வங்கித் தொழிற்துறை

(2) வங்கிகளின் நோய்த்தொற்றுக்குப் பிந்திய வருவாயில், மீளத்திரும்பல்கள், நோய்த்தொற்றின் நீடித்திருந்த தாக்கங்களையும் 2022இன் புவிசார் அரசியல் பதற்றங்களையும் சந்தித்தன. வங்கிகளின் அரைவாசிக்கு மேல் உயர்வடைகின்ற வட்டி மற்றும் பங்குரிமை மூலதனச் செலவை விஞ்சிய பங்குரிமை மீதான ஆதாயத்துடன், தேறிய இலாப எல்லைகள், உலக அளவில் அதிகரித்தன.


(1) நிதித்துறைச் செயற்திறன் மற்றும் கணனி முறைமை நிலைத்தன்மை, இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2022 ஐப் பார்க்க.

(2) McKinsey இன் குளோபல் பேங்கிங் வருடாந்த மீளாய்வு 2022 ஐப் பார்க்க.

பொதுவாக, தொழில் மற்றும் சமூக சூழல் நிலைகளைப் பாதித்த வெளிவாரிச் சூழலை ஆராய்கின்ற PESTEL பகுப்பாய்வு பின்வருமாறு:


| PESTEL | உள்நாடு | உலகம் |
|---|---|---|
| அரசியல் | நாட்டின் பொருளாதார நெருக்கடி மீதான சமூக திருப்தியின்மையின் காரணமாக, அரசியல் நெருக்கடி தூண்டப்பட்டு ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுத்தது | • உக்ரேன் - ரஷ்ய யுத்தத்தின் காரணமாக, புவிசார் அரசியல் பதற்றங்கள் உயர்வடைந்து, சக்தி மற்றும் உணவு விலை அதிகரிப்புகளுக்கு தூண்டுதலளித்தன.<br>• புவிசார் அரசியல் பதற்றங்கள், ஒழுங்கு முறைப்படுத்தல் இடர்நேர்வுகளுக்கு வர்த்தகங்களை உட்படுத்தின. |
| பொருளாதாரம் | • சென்மதி நிலுவை மற்றும் நாட்டுக்கான படுகடன் நெருக்கடி இரட்டிப்பானது. படுகடன் கொடுப்பனவு ஸ்தம்பிதம் ஏப்ரலில் அறிவிக்கப்பட்டது.<br>• ஏற்றுமதிகள் உயர்வடைந்த அதேவேளை, இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்ததுடன், வர்த்தக நிலுவை சுருக்கமடைந்தது.<br>• சர்வதேச நாணய நிதியம் - இலங்கை ரூ. 2.9 பில்லியனுக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதிக்கான (நுகுகு) அலுவலர் மட்ட இணக்கப்பாட்டை எட்டின.<br>• உள்நாட்டு உற்பத்தியானது (GDP) 2001 இன் 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. | • தென் ஆசியாவில் நிதியியல் நிலைமைகள் இறுக்கமாக்கப்பட்ட அதேவேளை, சில நாடுகளில் வெளிநாட்டு ஒதுக்குகள் குறைவடைந்து, நேபாளம், இலங்கை மற்றும் பாக்கிஸ்தான் போன்ற நாடுகளில் இறக்குமதித் தடைகளுக்குத் தூண்டுதலளித்தன.<br>• இலங்கை, இந்தியா, பாக்கிஸ்தான் போன்ற நாடுகளில் கொள்கை வீதங்கள் உயர்வடைந்தன |

**GDP** வளர்ச்சி வீதி




மூலம்: ஆசிய அபிவிருத்தி வங்கி

உலக நிஜ **GDP**





மூலம்: உலகளாவிய பொருளாதார எதிர்பார்க்கைகள், (2023 ஜனவரி) உலக வங்கி

| PESTEL | உள்நாடு | உலகம் |
|---|---|---|

- உலகளாவிய பண்ட மற்றும் சக்தி விலைகளால் ஏற்படுத்தப்பட்ட இறக்குமதிப் பணவீக்கத்தின் காரணமாக, பணவீக்கம் வரலாற்றிலேயே அதியுயர் மட்டங்களை எட்டியது.


பணவீக்கம் (இலங்கை)




மூலம்: ஆசிய அபிவிருத்தி வங்கி

- உணவு மற்றும் சக்தி விலை உயர்வுக்கு மத்தியில் உலகளாவிய பணவீக்கம் 8.8% தை எட்டியது.

உலகளாவிய பணவீக்கம்





மூலம்: சர்வதேச நாணய நிதியம்

- (3) 2022 இன் இறுதியளவில் இலங்கை ரூபா ஐ.அ டொலருக்கு எதிராக 44.8 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்தது.
- (4) அதிகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி வீதங்கள், தொலைத் தொடர்பூட்டல் அறவீடு, மிகைக் கட்டண வரி மற்றும் சமூக பாதுகாப்புப் பங்களிப்புகள் விதிக்கப்பட்டதற்கூடாக திரட்சிப்படுத்தல்.
- (5) உயர்வான உள்நாட்டு நிதியிடல் மற்றும் எதிர்மறையான பங்குரிமை மூலதனச் சந்தை எண்ணப்பாங்குகள் காரணமாக, அரசாங்க பிணையங்கள் அதிகரிக்கப்பட்ட சந்தை விளைவு வீதங்களை அனுபவித்தன.

(3) நிதித்துறைச் செயற்திறன் மற்றும் கணனி முறைமை நிலைத்தன்மை, இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2022 ஐப் பார்க்க.

(4) பொருளாதார செயற்திறன் மற்றும் எதிர்கால வாய்ப்பு, சமீபத்திய பொருளாதார வளர்ச்சிகள், பார்க்க, இலங்கை மத்திய வங்கி ப.3

(5) நிதித்துறைச் செயற்திறன் மற்றும் கணனி முறைமை நிலைத்தன்மை, சமீபத்திய பொருளாதார வளர்ச்சிகள், இலங்கை மத்திய வங்கி.

| PESTEL | உள்நாடு | உலகம் |
|---|---|---|
| சமூக | • உயர் வாழ்க்கைச் செலவு பலரை வறுமையை நோக்கித் தள்ளியது.<br>• மின்சார நெருக்கடியால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட அதேவேளை, எரிபொருள் பற்றாக்குறையால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.<br>• போக்குவரத்துப் பிரச்சினைகளால் கல்வி தடைபட்டது.<br>• பசி மற்றும் கல்வி இடையூறுகளுக்கு இடையிலான தொடர்பு<br>• கொவிட் - 19 விதிமுறைகளின் படிப்படியான மாற்றம் | • அதிக உணவுப் பாதுகாப்பின்மை<br>மில்லியன் கணக்கான மக்கள்<br><br><br>மூலம்: FSIN மற்றும் GNAFC (2022); உலக வங்கி<br>• புதிய மாறுபாடுகள் மற்றும் திடீர் அச்சுறுத்தல், அதாவது ஓமிக்ரோன் மற்றும் தென்னாப்பிரிக்காவின் ஐந்தாவது அலை |
| தொழில்நுட்பம் (நிதித் தொழில்) | • 2005 ஆம் ஆண்டின் கட்டணம் மற்றும் தீர்வு முறைகள் சட்டம் 28 ஆம் இலக்க சட்டத்தின் விதிகளை திறம்பட செயல்படுத்தவும், நிர்வகிக்கவும் மற்றும் செயல்படுத்தவும் வழங்கப்பட்ட பொதுவான வழிகாட்டுதல். | 6. சேவைகளின் டிஜிட்டல் மயமாக்கல் துரிதப்படுத்தப்பட்டமை. செயற்கை நுண்ணறிவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வுகளின் பயன்பாடு. |

(6) பார்க்க - EY உலகளாவிய ஒழுங்குமுறைக் கண்ணோட்டம் 2022

# வெளிவாரி தொழிற்பாட்டுச் சூழல்

| PESTEL | உள்நாடு | உலகம் |
|---|---|---|
| சுற்றாடல் | • வங்கியியல் துறை வினைத்திறனாக சுற்றாடல் சமூக மற்றும் ஆளுகை இடர்களை வினைத்திறனாகக் கையாள நிலையாதார நிதி நடவடிக்கைகளைப் பின்பற்றத் தூண்டல் திறன்களைப் பெற்றுக் கொண்டதுடன், பசுமை, சுற்றாடல் நட்பு சார்ந்த மற்றும் சமூக ரீதியான உள்ளடக்கத்தைக் கொண்ட வர்த்தகங்களை வழங்க அனுசரணை வழங்குகிறது. | • (7) கென்யாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சுற்றாடல் கூட்டத்தில் பிளாஸ்டிக் மாசடைதலை நிறுத்துவதற்கு சர்வதேச உடன்பாடு எட்டப்பட்டது.<br>• ஐக்கிய நாடுகள் ஆரோக்கியமான சுற்றாடலை மனித உரிமை ஒன்றாக பிரகடனப்படுத்தியது.<br>• 2022 ஆம் ஆண்டு சுற்றாடல் தொடர்பான முக்கியமான அணுகுமுறைகள் பற்றி பலதரப்பட்ட நாடுகளுக்கு இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. |
| சட்ட (ஒழுங்குபடுத்தல் அமைவிடம்) | • பாரிய பொருளாதாரக் கொள்கைகள்:<br>- ஏப்ரல் 2022 மற்றும் ஜூலை மாதங்களில் முறையே SDFR மற்றும் SLFR என்பன 700 அடிப்படைப் புள்ளிகளினால் 13.50 மற்றும் 14.50 வீதங்களுக்கு உயர்த்தப்பட்டு, இன்னும் 100 புள்ளிகளினால் உயர்த்தப்பட்டன.<br>- சௌபாக்கிய வட்டி வீதம் 9 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. விவசாயம், கால்நடை, மீன்பிடித்துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களுக்கு, குறைந்தபட்சம் 80 சதவீதம் புதிய கடன்கள் வழங்கப்பட்டன.<br>• வங்கியியல் சட்ட் வழிகாட்டிகள்:<br>- வைப்பாளர்களின் தனித்தன்மை வாய்ந்த அடையாள இலக்கங்களை கட்டாயமாக பதிவு செய்தல்.<br>- பொருத்தமான திரவத்தன்மை மற்றும் மூலதன இடையகங்களைப் பேணுவதற்கு உதவி செய்ய பங்கிலாபக் கொடுப்பனவுகளை ஒத்தி வைத்தல்.<br>- குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டிற்கான இறுதித் திகதி 31.12.2023 வரை நீடிக்கப்பட்டது.<br>- இலங்கை மத்திய வங்கியினால் நிதியியில் நுகர்வோர் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் பரிந்துரைக்கப்பட்டன.<br>• ஒவ்வொரு சம்பவ அடிப்படையில், பாரிய பொருளாதார சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களுக்கும், வர்த்தக ஸ்தானங்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட்டன. (2022 ஜூலை சுற்றறிக்கை)<br>• மூலதனப் பாதுகாப்பு இடையகத்தைத் தொடர்ந்து இழுக்க வேண்டிய தேவை (CCB) 2.5% ஆக்கப்பட்டது. | • டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் கிரிப்டோ நாணயங்கள் மற்றும் பொருத்தமான ஆளுகைகள் என்பனவற்றை நிவர்த்திக்க, மாறுபட்ட ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் உள்ளடக்கப்பட்டன. தரவுப் பாதுகாப்பு, பணம் தூய்தாக்கல் மற்றும் விவேகமான இடர் வகைகள். |

(7) 2022 ஐப் பார்க்க: சுற்றுச்சூழல் மைல்கற்களின் ஆண்டு. UNEP

## இடர்நேர்வுகளும் வாய்ப்புகளும்

| | குறுகிய காலத் தாக்கங்கள் | நடுத்தர காலத் தாக்கங்கள் | நீண்ட காலத் தாக்கங்கள் | எமது அணுகுமுறை |
|---|---|---|---|---|
| குறிப்புகள் | இறுக்கமாக்கப்பட்ட நிதியியல் நிலமைகள் | | | பாரிய முதலீடுகளுக்கு உறுதியான அணுகுமுறையினை எடுத்தல் மற்றும் செலவினங்களை உகப்பாக்கம் செய்தல். வைப்பு தளத்தை அதிகரிப்பதற்கும் செயற்பாடற்ற கடன்களைக் குறைப்பதற்குமான உபாயங்கள் |
| | நாணயப் பற்றாக்குறை மற்றும் பெறுமானத் தேய்வுகள் | | | வெளிநாட்டு வழங்குநர்களுடன் கொடுப்பனவு நியதிகளையும் தொகைகளையும் பேசித்தீர்த்தல் |
| | மூலதனக் காப்புகள் மீது பேரண்ட பொருளாதார கொந்தளிப்புகளின் தாக்கம் | | | வருவாயை அதிகரிப்பதற்கான உபாயங்கள், இதனூடாக இலாபங்கள் மூலதன காப்புகளுக்கு துணையளித்தல் |
| | மோசமடைகின்ற பணவீக்க இடர்நேர்வும், குறைவடைகின்ற செலவிடத்தக்க வருமானமும் வைப்புகளை மோசமாகப் பாதிக்கக்கூடும். | | | மீள்கொடுப்பனவு இயலளவுகளை மதிப்பிடுவதற்கு ஆரம்ப அளவுகளை அடிப்படையாகக் கொண்டு மத்திய மயப்படுத்தப்பட்ட கொடுகடன் அனுமதிகள் |
| | கடன்பெறுதலின் உயர்வான செலவுகள் செயற்பாடற்ற கடன்களைப் பாதிப்பதுடன், படுகடன் மறுசீரமைப்புக் காரணமாக நீண்டகால மீள் கொடுப்பனவுகள் | | | கொடுகடன் தரத்தினையும், கடன்பெறுநர்களின் கடன் நம்பகத்தன்மையையும் உறுதிசெய்வதற்கு, முன்மதிமிக்க மற்றும் மத்திய மயப்படுத்தப்பட்ட கொடுகடன் பகிர்ந்தளிப்பு |
| | பாரியளவான வருமான வரி ஊழியர் மனவுறுதியைக் குறைவடையச் செய்து, தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் புலம்பெயர்வதற்கு வழிவகுக்கலாம். சம்பளவேற்றங்கள். | | | மிகை ஊதியங்கள் மற்றும் பலவகையான வேறு நிதிய நன்மைகளை வழங்குதல். |
| | அதிகரித்த கொடுகடன் வீதங்கள் காரணமாக, தவணை தவறிய மீள்கொடுப்பனவுகளிலிருந்து விளைவுகின்ற அதிகரித்த கொடுகடன் இடர்நேர்வு | | | கடன் பெறுநர்களை விடயத்திற்கு விடயம் என கண்காணித்தல் மற்றும் மீள் கடன்களை வசதிப்படுத்துவதற்காக கடன் மறுசீரமைப்புகள் |
| | மரபுசார்ந்த முறைமைகளுடன் கூடிய வங்கிகள், விரைவூக்கத்தைப் பாதிக்கக்கூடிய மற்றும் அதிகளவான முதலீடுகளை வேண்டுகின்ற இடையூறுகளை ஏற்படுத்தக்கூடிய தொழில்நுட்பங்களையும் பிந்திய பின்பற்றல்களிலில் இருந்து தோன்றுகின்ற போட்டி அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டன. | | | அடிப்படை முறைமைகள் செயற்பாட்டிலுள்ளன. படிப்படியாக மேலதிக பின்பற்றல்கள் மீது வங்கி கவனம் செலத்தும். |
| | தொழிற்பாட்டு தாக்குப்பிடிக்கும் தன்மையினை கேள்விக்குள்ளாகின்ற நம்பிக்கை இழக்கச் செய்யும் சூழ்நிலைகள் | | | தொழில் தொடர்ச்சி திட்ட மதிப்பீடு |
| | முடக்கல்களின் நீண்டகால தாக்கங்கள் | | | தொடர்ச்சியான தொழிற்பாட்டுக்கு துணையளிப்பதற்கான தொழில் தொடர்ச்சி திட்டம் |
| | வரி மறுசீரமைப்புகள், இலாப நட்ட எல்லைகளில் தாக்கம் ஏற்படுத்தி வளர்ச்சியைத் தடுக்கலாம் | | | |
| | இலங்கையின் காலநிலையை அடிப்படையாகக் கொண்ட நிகழ்வுகள் உயர்வடைகின்றமை நிதியியல் உறுதிப்பாட்டினை பாதிக்கின்றன. காலநிலை மாற்றம் அடிப்படையிலமைந்த தரநியமங்கள் மற்றும் அதிகார எல்லைகளுக்கான உலகளவில் ஒரே மாதிரியான கட்டமைப்பு காணப்படாமை. | | | ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களை தொடர்ச்சியாகக் கண்காணித்தல் |
| | வெளிநாட்டு ஒதுக்கு பற்றாக்குறைகளும், ரூபாவின் பெறுமானத் தேய்வுகளும் உயர்வான இறக்குமதி விலைகளைத் தூண்டுகின்றன. | | | நேரடியாக எமக்கு தாக்கம் செலுத்தாது |
| | புதிய COVID திரிபுகள் மற்றும் பரவல்கள் பற்றிய அச்சுறுத்தல் | | | பாதுகாப்பு வழிமுறைகள் பின்பற்றப்படும் |

| | | |
|---|---|---|
| வாய்புகள் | உயர்வான வட்டி வீதங்கள் | சந்தைப்படுத்தல் உபாயங்கள் ஊடாக உயர்வான வட்டி வீதத் திட்டங்களுக்காக வைப்புகளை கவருதல்.<br><br>உயர்வான கடன்படுதல் செலவுகள் காரணமாக கடன்பெறுதலைக் குறைத்தல் |
| | சிறிய, நடுத்தர தொழில் முயற்சித்துறை நிதியிடல் தேவைகள் மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சித் துறையில் வளர்ச்சி | சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கான நிறுவனசார் பங்குடமை |
| | பசுமை நிதியிடல் | ஆண்டுக் காலப் பகுதியில் தொடங்கப்பட்டது |
| | முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தைப் பின்பற்றுதல் (செயற்கை நுண்ணறிவு, தரவுப் பகுப்பாய்வு) | முன்மதியுடன் நாடப்படும். |

## பசுமை நிதி பற்றிய எதிர்கால எதிர்பார்க்கை

பசுமை நிதிக்கான சந்தையானது, இலங்கை மத்திய வங்கியின் இலங்கை பசுமை நிதி வகைபிரித்தலின் பிரகாரம், மாசாக்கலைத் தடுத்தல் மற்றும் உயிர்ச்சூழலின் பாதுகாப்பு என்பவற்றுடன் இணைந்த காலநிலை மாற்ற தணிப்பு மற்றும் முக்கிய குறிக்கோள்களாக இருக்கின்ற ஏற்ற நிலமைகள் என்பன மூலம் இலங்கையில் உத்வேகம் பெற்றுள்ளது. (10)

- மீளப் புதுப்பித்தல் கருத்திட்டங்கள் மற்றும் சூரிய சக்தி பலகங்களைப் பொருத்துதல் என்பவற்றை மேற்கொள்வதற்கு வீட்டுக் கடன் வாடிக்கையாளர்களுக்கு நிலைபெறத்தக்க பசுமை நிதி வழங்குவதற்கான வாய்ப்பு.
- நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக நிதியியல் ரீதியாக, குறைவாக சேவையளிக்கப்படுகின்ற தனிப்பட்டவர்களுக்கும், சமூகங்களுக்கும் தேவைக்கேற்றவாறான, வசதியான நிதியியல் உற்பத்திகள் கிடைக்கப்பெறும் தன்மையினை மேம்படுத்துதல் மற்றும் உற்பத்திகளை வழங்குதல்.
- நிலைபெறத்தக்க முறிகளை உருவாக்குதலும் நிலைபெறத்தக்க முறிகளின் முதலீடும்.
- நிலைபெறு தன்மைத் திட்டங்களை மெய்ப்பிப்பதற்கு முதலீடுகளை வேண்டுகின்ற பல்வேறு தொழிற்துறைகளுக்கும் நிலைபெறத்தக்க நிதியின் உற்பத்திகளை வழங்குவதற்கான வர்த்தக வாய்ப்புகள்.
- பசுமை நிதி பற்றிய பொதுமக்கள் அறிவினை அதிகரிக்கச் செய்யும் வாய்ப்புகள்.
- தரமிக்க உற்பத்திகள் மற்றும் சலுகைகளுக்காக உள்நாட்டு வழங்குனர்களுடன் பங்குடமைகளை உருவாக்குதல்.
- வாய்ப்புமிக்க துறைகள்: மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் சக்தி வினைத்திறன், பசுமை கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு, திறன்மிக்க விவசாயம் அத்துடன் பசுமை வீட்டுக் கடன்கள் போன்றன.
- நிலைபெறத்தக்க நிதியியல் உற்பத்திகளை உருவாக்குவதற்கும், பசுமை நிதியியல் உற்பத்திகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆதரவு.
- துறையினால் பேணப்படுகின்ற போதுமான காப்புகள் தொழிற்பாட்டு சவால்களைத் தீர்ப்பதற்கு உதவும்.

காலநிலை மாற்றம் மற்றும் நிலைபெறத்தக்க நிதி என்பற்றிலிருந்து தோன்றுகின்ற நிதியியல் இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்காக அழைப்பு விடுக்கின்ற இயலளவினைக் கட்டியெழுப்பவதற்கான தேவையினை நிலைபெறத்தக்க நிதியிடல் கொண்டுசேர்க்கின்றது. இது நிதியியல் நிறுவனங்களுக்குள் சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை இலக்குகளை ஒருங்கிணைப்பதனையும் விரிவான பயிற்சியினையும் வேண்டுகின்றது.

மேலும், வங்கித்தொழில் துறையின் மரபு ரீதியான பாகம் நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சி நிதியிடல் மற்றும் வங்கித் தொழில் என்பற்றுக்கான வளர்ச்சியடைகின்ற எதிர்பார்க்கைகளை வழங்குகின்றது. நிலைபெறத்தக்க கருத்திட்டங்கள் அல்லது நிதியிடல் தேவைகளுக்கான அடிப்படைக்காக முன்மொழியப்பட்டது. வங்கிகளும், நிதியியல் நிறுவனங்களும், உள்நாட்டு தொழில்களின் 80மூ திற்கு வகைகூறுகின்ற நாட்டின் பாரியளவிலான வியாபாரத்துறைக்கு பெறுவழியினைக் கொண்டுள்ளன.

- வைப்பாளர்களைக் கவருவதற்கு கொள்கை வீதங்களின் அதிகரிப்பு வாய்ப்பினைக் கொண்டுள்ளது.
- அதிக டிஜிற்றல் மயமாக்கல் என்பது அதிகரித்த பெறுவழியும் தொழில் வளர்ச்சியும் என அர்த்தப்படும்.
- தேறிய பூச்சிய காபன் வெளியேற்றத்தினை அடைந்துக் கொள்வதற்கான இலங்கையின் முயற்சிகள் பசுமை சக்தி, பசுமை கட்டடங்கள் மற்றும் சூழல் நட்புமிக்க கருத்திட்டங்களென பல தொழிற்துறைகள் முழுவதும் பாரிய முதலீடுகளுக்கு வழிவகுக்கக் கூடும்.
- உயர்வான வைப்பு வீதங்கள் அதிகரித்த வைப்புகளைக் கவரும்
- இலாபத்தைத் தக்க வைத்தல்
- சிறந்த வாடிக்கையாளர் போக்குகளையும் தேவைகளையும் புரிந்துகொள்வதற்கான பகுப்பாய்வாகும்.

(10) இலங்கை பசுமை நிதிய வகை பிரித்தல். பார்க்க. மே, 2022. இமவ


(11) இலங்கையின் நிலையான நிதிக்கான பாதை வரைபடம்.

# வர்த்தகப் பிரிவுகளும் செயற்திறனும்

## மொத்த வைப்புகள்

மொத்த வங்கி வைப்புகள் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் சிறிதளவு வளர்ச்சியடைந்துள்ளன. முன்னைய ஆண்டிலிருந்து ரூ. 49.8 பில்லியனிலிருந்து ரூ. 50.2 பில்லியன் வரை வைப்பு நிதி சொத்துப் பட்டியல் அதிகரித்தது. சதவீத அடிப்படையில் இது 0.87% கொண்ட தொகையாகும்.


மொத்த வைப்புகள்




ஆண்டுக் காலப்பகுதியில் மொத்த வைப்புகள் ரூ. 432 மில்லியனால் அதிகரித்தன.

வங்கியின் வைப்பு நிதிச் சொத்துப் பட்டியலானது, சேமிப்பு மற்றும் நிலையான வைப்புகளின் ஒன்றுசேர்த்தல் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. வைப்புச் சொத்துப் பட்டியலின் பெரும்பலானவை, மொத்த வைப்பு நிதிச் சொத்துப் பட்டியலின் 16% த்தை மாத்திரம் உருவாக்குகின்ற சேமிப்புகளுடன் 84% மாக நிலையான வைப்புகளை உள்ளடக்குகின்றது.


சேமிப்புகள் எதிர் நிலையான வைப்புகள்




## சேமிப்புகள்

மொத்த சேமிப்புகள், மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டுக்காக அறிக்கையிடப்பட்ட ரூ. 8.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூ. 7.9 பில்லியனாக இருந்தது. இது ரூ. 599 மில்லியன் (7%) கொண்ட வீழ்ச்சியாகும். சேமிப்புகளில் இக்குறைவடைதலுக்கு பணவீக்கம் மற்றும் மக்களின் செலவீடுகளை இயற்கையாகவே கட்டுப்படுத்துகின்ற துரிதமான அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவு என்பன காரணமாக அமைந்தன. இத்தகைய பின்னணியானது, சேமிப்புகளுக்காக வட்டி வீத உயர்வுகளிலிருந்து நன்மையடைவதை விடுத்து அதிகரித்த மீளப்பெறுதலுக்கு வழிவகுக்கின்றது.


சேமிப்புகள்




## நிலையான வைப்புகள்

மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டு காலப்பகுதியில் வங்கியின் நிலையான வைப்பு சொத்துப்பட்டியல் கடந்த ஆண்டின் ரூ. 41.3 பில்லியன் சொத்துப்பட்டியல் பெறுமதியிலிருந்து ரூ. 42.3 பில்லியனாக 2.5% தினால் அதிகரித்தது. சேமிப்பில் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில், இது, திருப்திகரமான அதிகரிப்பாகக் காணப்படுவதுடன், நிலையான வைப்பு வீதங்களில் விசேடமாக எச்டிஎப்சி மெக்ஸ் வைப்பு வகைகளில் அதிகரிப்புக் காரணமாக அமைந்திருக்கலாம்.

நிலையான வைப்புகள்



## அபிவிருத்தி மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சி நிதி

பெரும்பான்மையாக அரசுக்குச் சொந்தமான வங்கி என்ற வகையில், நாம் உள்நாட்டு வியாபாரங்களையும், தொழில்முயற்சிகளையும் விசேடமாக, பொருளாதார வரையரையறைகளுடன் கூடியவற்றை தரமுயர்த்துவதற்கு பாடுபடுகின்றோம். நாட்டின் சிறிய, நடுத்தர தொழில்முயற்சி மற்றும் நிறுவன சேவை நாடிகளுக்கு சேவையளித்து, சிறந்த, சாத்தியமான வளர்ச்சியினையும், உறுதிப்பாட்டையும் அடைவதற்கு, அவர்களின் வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கு நிறுவன மற்றும் அபிவிருத்தி அத்துடன், சிறிய, நடுத்தர தொழில்முயற்சி நிதிப்பிரிவு நிதியியல் சேவைகளைப் பன்முகப்படுத்துகின்றது.

மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில், பல்வேறு அபிவிருத்தி மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சி நிதியிடல் திட்டங்களின் கீழ் நாம் ரூ. 430.25 மில்லியன் கொண்ட தொகையினைப் பகிர்ந்தளித்துள்ளோம். 2022 டிசம்பர் 31இல் முடிவடைகின்ற நிதியாண்டின் இறுதியளவில், அபிவிருத்தி மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சி நிதி அடிப்படையிலமைந்த கடன்கள் பகிர்ந்தளிப்பு முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூ. 3.4 பில்லியனிலிருந்து வீழ்ச்சியடைந்து ரூ. 3.1 பில்லியனாக காணப்பட்டது.

## தேசத்தின் குடும்ப நலனுக்காக உழைப்போருக்காக சேவையளித்தல்

அனைத்து இலங்கையர்களின் தொழில்முயற்சிகளும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளைக் கொண்ட 75% வீதத்திற்கு மேல் காணப்படுவதுடன், அவர்களின் தொழில்முயற்சிகளை வளர்ச்சியடையச் செய்வதில் நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். அபிவிருத்தி மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சிப் பிரிவின் ஊடாக நாம் ஊக்குவிக்கின்ற நிதித் திட்டங்களானவை, நிறுவன மட்ட கம்பனிகள் மீதான அதிகரித்த கவனம் செலுத்தலுடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதன் மீது நாம் கவனம் செலுத்துகின்றோம்.

நிறுவன வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்ட நிறுவனக் கடன் வழங்கல், எமது அபிவிருத்திக் கொடுகடன் திட்டங்களின் 35% சதவீதத்தினை உருவாக்குவதுடன், அதனைத் தொடர்ந்து நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான வியாபார கடன்கள் 29% சதவீதமாகவும் நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான அபிவிருத்திக் கடன்கள் 28% சதவீதமாகவும் காணப்படுகின்றன. இந்த மூன்று உற்பத்திகளும், ஒட்டுமொத்த அபிவிருத்தி, சிறிய, நடுத்தர தொழில்முயற்சி, நிதிச் சொத்துப்பட்டியலின் 92மூ சதவீதத்தை உருவாக்குகின்றன. மேலும், சௌபாக்கியா மொத்த சொத்துப்பட்டியலின் 2.52% வீதத்தை மாத்திரம் கொண்டமைகின்றது.

Chen C. Mitra S. இலங்கையின் சிறு வணிகங்களை உலகளாவிய பெறுமதி சங்கிலிகளுடன் இணைக்க ஐந்து வழிகள். ஆசிய அபிவிருத்தி வலைப்பதிவு. ஆசிய அபிவிருத்தி வங்கி (டிடழபள.யனடி.ழசப)

| 2022 | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | பெறுமதி (ரூ. மில்.) | % பங்கு (2022) | % பங்கு (2021) | % பங்கு (2020) |
| சௌபாக்ய | 82.81 | 2.52% | 2.84% | 3.24% |
| NADeP | 4.25 | 0.14% | 0.13% | 0.12% |
| SEPI | 1.81 | 0.06% | 0.12% | 0.18% |
| தருணதிரிய | 1.67 | 0.05% | 0.06% | 0.08% |
| ஸ்வசக்தி | 9.24 | 0.30% | 0.39% | 0.31% |
| READ | 1.75 | 0.06% | 0.06% | 0.11% |
| CSDDLS | 53.48 | 1.72% | 2.29% | 3.43% |
| ஜயஇசுர | 0.00 | 0.00% | 0.01% | 0.04% |
| அபிவிருத்திக் கடன் | 877.54 | 28.17% | 25.70% | 19.33% |
| மொத்த நுண் நிதி | 2.17 | 0.07% | 0.20% | 0.24% |
| கூட்டுறவுக் கடன்கள் | 1,083.17 | 34.77% | 31.51% | 35.75% |
| திரிமக | 47.60 | 1.53% | 1.51% | 1.49% |
| வர்த்தகக் கடன் | 900.58 | 28.90% | 32.95% | 34.65% |
| COVID 19 சஹூபாக்ய | 4.19 | 0.13% | 0.78% | 1.05% |
| மொத்தம் | 3,070.26 | 100% | 100% | 100% |

## தயாரிப்புகளின் முறிவு

வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் நிதித் திட்டங்களில் செயலில் உள்ள 15 தயாரிப்புகளும் அடங்கும். எவ்வாறாயினும், COVID-19 காலத்தில் சௌபாக்யா, ஸ்வசக்தி மற்றும் மொரட்டோரியம் ஆகிய கடன்கள் 2020 - 2021 COVID தொற்று நோய் உச்சத்தில் இருக்கும் போது, இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டன. தொற்று நோய் காரணமான பொருளாதார இடையூறுகளால் மோசமாக பாதிக்கப்பட்ட வர்த்தகங்களுக்கு நிதி நிவாரணம் அளிக்கும் வகையில், கூறப்பட்ட திட்டங்கள் தொடர்ந்தும் செயலில் உள்ளன.

| நிதித் தயாரிப்பு | வாடிக்கையாளர் பிரிவு | செயல் நோக்கம் |
|---|---|---|
| சௌபாக்ய | MSME | விவசாயம், கால்நடைகள், நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குக் கடன் வசதிகளை வழங்குதல் |
| NADeP | நுண் மட்ட வாடிக்கையாளாகள் | விவசாயம், கால்நடைகள், நுண் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல் |
| SEPI | NVQ தகைமையுடைய MSME | NVQ அல்லது TVEC அல்லது NAITA அல்லது DTET அல்லது VTASL அல்லது MSDVT அல்லது NYSC இல் சான்றிதழ் அல்லது டிப்ளோமா முடித்த பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு நிதி உதவி வழங்குதல் |
| தருணதிரிய | நுண் மட்ட வாடிக்கையாளாகள் | இளைஞர்களுக்கு நாடு முழுவதும் அதிகாரமளித்தல் மற்றும் வேலைவாய்ப்பு வசதிகள் |
| ஸ்வசக்தி | நுண் மட்ட வாடிக்கையாளாகள் | இளைஞர்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரை கிராமங்களில் உள்ள வளங்களின் அடிப்படையில் புதிய வணிக யோசனைகளுடன் மேம்படுத்துதல் |
| READ | வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட MSME | எந்தவொரு பேரழிவினாலும் பாதிக்கப்பட்ட, எந்தவொரு பொருளாதார நடவடிக்கையையும் மீண்டும் ஆரம்பிக்க நிதி வசதிகளை வழங்குதல் |
| CSDDLS | பால் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் - நுண் மட்டம் முதல் கூட்டுறவு வரை | வர்த்தக மயமாக்கப்பட்ட பால் நடவடிக்கைகளில், நடுத்தர முதல் பெரிய அளவிலான பால் உற்பத்தியாளர்களுக்கு வசதியளித்தல். |
| ஜயஇசுர | MSMEs | குறிப்பாக, விவசாயம், கால்நடை, நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு ஆதரவளித்தல். |
| அபிவிருத்திக் கடன் | MSMEs | விவசாயம், கால்நடை, நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு சொந்த நிதியிலிருந்து கடன் வசதிகளை வழங்குதல் |
| மொத்த நுண் நிதி | நுண் நிதி நிறுவனங்கள் | நிதிச் சொத்துப் பட்டியல் வளர்ச்சிக்காக நுண் நிதி நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குதல் |
| கூட்டுறவுக் கடன்கள் | நுட்டுறவு மட்ட வாடிக்கையாளாதளம் | கூட்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குதல் |
| திரிமக | நுண் நிதி வாடிக்கையாளர்கள் | பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுண் அளவு (Micro Scale) நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குதல் |
| வர்த்தகக் கடன்கள் | MSMEs | நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு சொந்த நிதியிலிருந்து கடன் வசதிகளை வழங்குதல் |
| COVID 19 சஹூபாக்ய | COVID 19 ஆல் பாதிக்கப்பட்ட MSMEs கள் | COVID-19 பரவலினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு புத்துயிர் அளித்தல் |

## மேலே காட்டப்பட்ட திட்டங்களினால் வழங்கப்படும் தொழில்கள்

| தொழில்கள் | கடன்களின் பங்கு % |
|---|---|
| விவசாயம், வனவியல் மற்றும் மீன்பிடி | 7.64 |
| உணவு மற்றும் பானங்கள் பதனிடல் | 3.91 |
| உள்நாட்டு குடிசைத் தொழில் | 0.11 |
| இறப்பர் மற்றும் இறப்பர் உற்பத்திப் பொருட்கள் | 0.14 |
| ஆடை தயாரிப்புகள் | 1.86 |
| மர உற்பத்திப் பொருட்கள் | 0.61 |
| சுரங்கம் மற்றும் கல் உடைத்தல் | 0.54 |
| கட்டுமானம் | 7.29 |
| சுற்றுலாத் துறை | 3.18 |
| போக்குவரத்து மற்றும் சேமித்து வைத்தல் | 0.98 |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | 11.52 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பு சாதனம் | 0.09 |
| தொழில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் | 0.92 |
| கலை, கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு | 0.10 |
| தொலைதூரக் கல்வி வசதிகளின் வளர்ச்சி | 1.12 |
| ஆரோக்கியம் மற்றும் உடல்நலம் | 2.29 |
| ஏனைய (நிதி) | 17.95 |
| ஏனைய | 39.76 |

## கூட்டாண்மை

நிறுவனங்களுடனும், கம்பனிகளுடனும் நாம் பங்குதாரர்களாக இருக்கிறோம், அவர்களின் பங்குதாரர்கள் தங்கள் வணிகங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை அதிகம் பயன்படுத்திக்கொள்ள உதவுகிறோம், நிதி உதவி தேவைப்படும் இடங்களில் அதனை நாம் வழங்குகிறோம்.

- ஜெட் - எச்டீஎப்சி

நிறுவனத்தின் "JAT Pinthaaroo-Shilpee Abhiman" திட்டத்தின் ஓவியர்களை வலுப்படுத்த JAT ஹோல்டின்ஸ் பீஎல்சி உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. JAT ஹோல்டிங்ஸின் சிந்தனையில் உருவான இந்தத் திட்டம், மரவேலை கலைஞர்கள் மற்றும் தொழில்முறை ஓவியர்களுக்குப் பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சிகளை வழங்கும் தனித்துவமான நோக்கத்தை நிலைநிறுத்த உதவுவதோடு, எமது அதிகாரிகளிடமிருந்து நிதிப் பயிற்சியைப் பெறுவதன் மூலம் தொழில் சார்ந்த உபகரணங்கள் மற்றும் தேவைகளுக்கான கடன் வசதிகள் என்பன பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படும். இது அவர்களின் வர்த்தக அறிவையும், திறமையையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது,

- IDB-HDFC

கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் இணைந்து, "ஒரு செல்வமிக்க தேசத்திற்காக புதிய தொழில்களின் ஆரம்பம்" என்ற தேசிய வேலைத்திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. இந்த வேலைத்திட்டத்திற்கு ஆதரவாக, இலங்கையில் MSME ஐ வலுப்படுத்தும் நோக்கில், கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் (IDB) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

## கடன் நிதிச் சொத்துப் பட்டியல்


31.12.2022 ஆம் நிதியாண்டின் முடிவில், மொத்த சில்லறைக் கடன் நிதிச் சொத்துப் பட்டியல் ரூ.45 பில். ஆகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது. ரூ. 44 பில். ஆக் காணப்பட்டது.

சில்லறை கடன்கள் ரூ. 41,571 மில்.

SME நிதி மற்றும் மேம்பாட்டுக் கடன்கள் (கூட்டுறவுக் கடன்கள் உட்பட) ரூ. 3,066 மில்.

ஊழியர் கடன்கள் ரூ. 1,753 மில்.

கடன் (இணைப் பிரிவு மூலம்)




2022 இல் கூட்டுறவுக் கடன்கள் மற்றும் ஊழியர்கள் கடன்கள் முறையே ரூ.250 மில். மற்றும் ரூ.414 மில். என்ற அளவில் ரூ. 10.8 பில். வழங்கப்பட்டுள்ளது.

## கடன்களின் கலவை

மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில், வங்கி, அதனுடைய மொத்தக் கடன் நிதிச் சொத்துப் பட்டியலில் இருந்து வேறு எந்தத் துறையைப் போன்றும் அன்றி 33% ஊ.சே.நி கடன்களையும், 29% ரொக்கப் பணத்தை அடிப்படையாக கொண்ட கடன்களையும், 15% ஈட்டுக் கடன்களையும் (வீட்டுக் கடன்கள்) வழங்கியுள்ளது. குத்தகைக் கடன்கள் 2% இல் அமைந்திருந்தன.

நிதி வருட இறுதியின் போது ஊ.சே.நி கடன்கள் ரூபா 3.6 பில்லியனாகவும், ரொக்கப் பண கடன்கள் ரூ. 3.1 பில்லியனாகவும் அமைந்திருந்தது. இதனை அவதானிக்கின்ற போது, மார்ச் மாதத்தில் கடன் அளிப்புகளில் அதிகரிப்பு ஏற்பட்ட அதேவேளை, ஜூன் மாதத்தில் சரிவு ஒன்றைக் காணக்கூடியதாக இருந்தது. ஜனவரி, பெப்ரவரி மாதங்களிலும் இதே போன்று அமைந்திருந்தன.

## சில்லறைக் கடன்கள்

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், வங்கியானது கடன்களுக்கான நடைமுறை அணுகுமுறையை ஆண்டு முழுவதும் ஏற்றுக்கொண்டது. அதிக வட்டி விகித சூழல் இந்த சரிவில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இவ்வருட காலம் முழுவதுமாக கடன்களுக்கு வங்கி ஒரு நடைமுறை ரீதியான அணுகுமுறையைக் கடைப்பிடித்ததன் காரணமாக, வங்கியின் கடன் கட்டணங்களில் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது வீழ்ச்சி ஏற்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு உயர் வட்டி வீத சூழ்நிலை முக்கிய காரணியாக அமைந்தது. மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில், சில்லறை நிதிச் சொத்துப் பட்டியல் (கூட்டுறவு மற்றும் எனைய கடன்கள் நீங்கலாக) ரூபா 41,571 மில்லியனாக இருந்ததோடு, கடந்த வருட தொகையான ரூபா 39,875 மில்லியனுடன் ஒப்பிடும் போது இது அதிகரிப்பாக அமைந்தது.

# மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

## பங்குதாரர்களின் சிறந்த நலனுக்காக நிதியியல் முகாமைத்துவம்



## நிதி மூலதனம்

| உள்ளீடுகள் | பெறுமதி மேம்படுத்தும் அணுகுமுறை | விளைவு |
|---|---|---|
| • பங்குதாரர் மூலதனம்<br>• மூலதன இருப்பு<br>• வைப்பாளர் நிதியம்<br>• கடன் பட்டோர் | • பேரியல் பொருளாதார நிச்சயமற்ற நிலையை எதிர்கொள்வதற்கான செலவினக் கட்டுப்பாடு உள்ளிட்ட நிதி திட்டமிடல்<br>• திருப்பிச் செலுத்தல்களை மீண்டும் திட்டமிடுவதில் கவனம் செலுத்துதல்<br>• சேகரிப்பை மேம்படுத்துவதற்கான உத்திகள்<br>• கடுமையான கடன் ஒப்புதல் செயல்முறை உட்பட கடன் வழங்குவதில் கவனமான அணுகுமுறை | • நிலையான இலாபம்<br>• வட்டி வருமானத்தில் வளர்ச்சி |

எச்டிஎப்சி வங்கியில் எமது முதன்மைப் பொறுப்பு எமது பங்குதார்கள், வைப்பாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் போன்றோரின் சிறந்த நலனுக்காக ஆற்றல்வாய்ந்த மற்றும் பொறுப்புக்கூறத்தக்க நிதியியல் முகாமைத்துவத்தை முகாமை செய்வதாகும்.

### எமது நிதியியல் மூலதனம்

எமது நிதியியல் மூலதனமானது, அதிகரித்த வருவாய்களையும், இலாபங்களையும் தூண்டுவதற்காக முகாமை செய்யப்படுகின்ற பல நிதியியல் பிரிவுகளின் ஒன்றிணைவாகும்.

### நிதியியல் மூலதனம் ஏன் எமக்கு முக்கியத்துவம் மிக்கது?

வர்த்தக நலன்களுடன் கூடிய நிதியியல் நிதியில் இடையீட்டாளரொருவர் என்ற வகையில் நிதியியல் மூலதனமானது, வளர்ச்சியினையும், தொழிற்பாட்டின் தொடர்ச்சியினையும் பேணுவதற்கு உதவுகின்றது. அனைத்துக்கும் மேலாக, எச்டிஎப்சி வங்கியானது, 51% அரசுக்குச் சொந்தமான நிதியியல் இடையீட்டாளரொருவராக இருப்பதனால், அரசுக்கு பொறுப்புக் கூறத்தக்கதாக விளங்குகின்றது. மேலும், வெளிப்படைத்தன்மையாகவும், பொறுப்புக் கூறத்தக்கதாகவும், முன்மதியுடனும் எமது நிதியியல் மூலதனத்தை முகாமை செய்வதற்கு நாம் நியதிச்சட்ட ரீதியாக கடமைப்பட்டுள்ளோம்.

# நிதி மூலதனம்

எமது நிதி மூலதனத்தை வெளிப்படையாகவும், பொறுப்புடனும், விவேகமாகவும் நிர்வகிக்க நாம் சட்டப்பூர்வமாகக் கடமைப்பட்டுள்ளோம்.


| 27% மொத்த வருமான அதிகரிப்பு | 27% வட்டி வருமான அதிகரிப்பு | வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 326 மில். (2021: ரூ. 547 மில்.) |
|---|---|---|

## சிறந்த தரத்திலான செயலாற்றம்

### வருமானம்

வங்கியின் மொத்த வருமானம் 2021இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 7 பில்லியனிலிருந்து 2022 நிதியாண்டுக்கு ரூ. 8.9 பில்லியனாக உயர்வடைந்தது. வருமானத்தில் இவ்வுயர்வு 27 சதவீதமாகும்.


வருமானம்





### வட்டி வருமானமும் வட்டியல்லா வருமானமும்

2022இல் வட்டி வருமானது 2021இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 6.6 பில்லியனிலிருந்து 27 சதவீதத்தினால் ரூ. 8.4 பில்லியனாக உயர்வடைந்தது. எனினும், உயர்வான வட்டிச் செலவுகள் காரணமாக, வட்டி வருமானம் வீழ்ச்சியடைந்து ரூ. 2.7 பில்லியனாக காணப்பட்டது. இது 2021இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 3 பில்லியனிலிருந்து வீழ்ச்சியொன்றாகும்.


வட்டி வருமான கலவை





வட்டி வருமானம் எள வட்டி செலவுகள்




வட்டி வருமானம் மற்றும் வட்டி அல்லாத வருமானம்




நிகர வட்டி வருமானம் மற்றும் நிகர வட்டி எல்லை




வட்டி வருமானத்தில் அதிகரிப்பானது, கடன்கள், முற்பணங்கள் மற்றும் அதிகரிக்கப்பட்ட படுகடன் ஏனைய சாதனங்கள் (அரசாங்க பிணையங்கள்) இருந்து கிடைத்த குறிப்பிடத்தக்க பங்களிப்பின் நேரடிப் பெறுபேறாக அமைந்தது. இது 2021இன் ரூ. 369 மில்லியனிலிருந்து 2022இல் ரூ. 1.4 பில்லியனாக 282 சதவீதத்தினால் உயர்வடைந்தது. ஒழுங்கு முறைப்படுத்துனர் மூலம் மேல் நோக்கிய வீத சீர்திருத்தத்தின் காரணமாக, கடன் வழங்கலிருந்து கிடைத்த வட்டி வருமானம் ரூ. 5.4 பில்லியனிலிருந்து 17சதவீதத்தினால் 6.4 பில்லியனாக அதிகரித்தது.

வட்டியல்லா வருமானம் ஆண்டு காலப்பகுதியில் ரூ. 452 மில்லியனாக 16 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, வங்கியின் மொத்த வருமானத்திற்கு பங்களித்தது. தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் 2022இல் 3 சதவீதத்தினால் ரூ. 353 மில்லியனாக உயர்வடைந்தது. மேலும், வட்டியல்லா


வருமானது, முதலீட்டு ஆதனங்களின் சீர்மதிப்பு பெறுமதியின் மாற்றம் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண விற்பனை மீதான பெறுகை என்பவற்றை உள்ளடக்குகின்றது. - இது கூட்டாக 2021 இன் ரூ. 49 மில்லியனிலிருந்து வளர்ச்சியடைந்து 2022 இல் ரூ.99.6 மில்லியன் தொகையுடையதாகவிருந்தது.

உயர்வான வைப்பு வீத திருத்தத்தின் காரணமாக, வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டியாக வட்டிச் செலவுகள் உயர்வடைந்தமை ரூ. 5.1 பில்லியனாக 64 சதவீதத்தினால் அதிகரித்தது. வைப்பு நிதிச் சொத்துப் பட்டியலில் சிறிய அதிகரிப்பொன்றுக்கு மத்தியிலேயே இது இடம்பெற்றது. கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்து கிடைத்த வங்கியின் வட்டி வருமானம் வைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட வட்டியை விஞ்சிச் சென்றது. தேறிய வட்டி வருமானம் ரூ.2.7 பில்லியனாகவிருந்தது ஆனால், முன்னைய ஆண்டிலிருந்து 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## செலவுகள்


## தொழிற்பாட்டு வருமானமும் தொழிற்பாட்டு செலவுகளும்

தொழிற்பாட்டு வருமானமும்
தொழிற்பாட்டு செலவுகளும்




தேறிய தொழிற்பாட்டு வருமானம் ஒரு ஆண்டுக்கு முன்னர் அறிக்கையிடப்பட்ட ரூ. 3.1 பில்லியனிலிருந்து 2022 நிதியாண்டுக்கு ரூ. 2.8 பில்லியனாக 8.7சதவீதத்தினால் குறைவடைந்தது - உயர்வான வட்டிச் செலவுகள் காரணமாக, குறைவான தேறிய வட்டி வருமானத்தின் விளைவாக இது அமைந்தது. எனினும், முதலீட்டு ஆதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியில் மாற்றம் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையின் சிறிய இலாபம் என்பவற்றின் விளைவாக ஏனைய தொழிற்பாட்டு வருமானம் ரூ.99 மில்லியனாக 103 சதவீதத்தால் அதிகரித்தது.

செலவுகள்





2022இற்கான மொத்தச் செலவுகள், முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 1.9 பில்லியனிலிருந்து ரூ.2.3 பில்லியனாக 16 சதவீதத்தினால் அதிகரித்தது. 2022க்கான ஆளணிச் செலவுகள் ஒட்டுமொத்த செலவுகளின் 68 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் அதனைத் தொடர்ந்து ஏனைய செலவுகள் 24 சதவீதமாக இருந்தன.

தொழிற்பாட்டுச் செலவினத்தில் திடீர் அதிகரிப்பானது, 2021 இன் ரூ. 1.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இன் ரூ. 1.5 பில்லியன் தொகையுடையதாகவிருந்த ஆளணிச் செலவுகளில் 11சதவீதத்தின் அதிகரிப்பின் முக்கிய பாகமாக அமைந்தது. சம்பளங்களும் மிகை ஊதிய கொடுப்பனவுகளும் முன்னைய ஆண்டின் ரூ. 944 மில்லியனுக்கெதிராக ரூ. 980 மில்லியனாக அதிகரித்தன. ஊதியம் தவிர்ந்த செலவுகள் முன்னைய ஆண்டின் ஏனைய ஆளணிச் செலவுகளைவிட 27 சதவீத அதிகரிப்பாகவிருந்த ரூ. 564 மில்லியனாகக் காணப்பட்டன.

பெறுமானத் தேய்வு மற்றும் மதிப்பிழப்புச் செலவுகள் மொத்த செலவுகளில் 8 சதவீதத்தை தோற்றுவித்து முன்னைய ஆண்டைவிட 15 சதவீத அதிகரிப்புடன் ரூ. 185 மில்லியனாகவிருந்தது. ஆதனம். பொறித்தொகுதி மற்றும் உபகரண பெறுமானத் தேய்வு 8 சதவீத அதிகரிப்பை காண்பித்த அதேவேளை, குத்தகைச் சொத்துக்களைப் பயன்படுத்தவதற்கான உரிமையின் பெறுமதிக்குறைப்பும், அருவச் சொத்துக்களின் பெறுமதி குறைப்பும் முறையே 5 சதவீத்தினாலும் 49 சதவீதத்தினாலும் அதிகரிப்புகளை காண்பித்தன.

ஏனைய செலவுகள் மொத்த செலவினத்தின் 24 சதவீதத்தை உள்ளடக்குவதுடன், முன்னைய ஆண்டின் செலவுகளைவிட 33 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தன. ஏனைய செலவுகள் முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூ. 404 மில்லியனுக்குகெதிராக ரூ. 536 மில்லியன் தொகையுடையதாகவிருந்தது.

ஏனைய செலவுகள்




## வரிச் செலவுகள்

குறைவடைந்த வரிக்கு முந்திய இலாபத்தின் அடிப்படையில் வருமான வரி மற்றும் நிதிப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ஆகிய இரண்டுடனும் வருமான வரி மொத்தமாக ரூ. 286 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது. 2021 இன் ரூ. 651 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வரிச் செலவு 56 சதவீதத்தினால் குறைவடைந்தது.


## அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று

ஆண்டுக்கான வரிகளுக்குப் பிந்திய ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ரூ.36 மில்லியனாக இருந்தது- இது முன்னைய ஆண்டுக்கு எதிரான வீழ்ச்சியொன்றாகும். ஆண்டுகான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் 2021இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 588 மில்லியனிலிருந்து குறைவடைந்து 363 மில்லியன் தொகையுடையதாகவிருந்தது: இலாபம் குறைவடைந்தமை இவ்வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. மேலும், தொழிலுக்குப் பிந்திய நலக்கடப்பாட்டின் மீள் அளவீடானது 2021 இன் ரூ. 62 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 42.9 மில்லியனாக அறிக்கையிடப்பட்டது.

## இலாப நட்ட எல்லை


வருமானம் மற்றும் செலவுகளை தொடர்ந்து, வங்கிக்கு ரூ. 612 மில்லியன் கொண்ட வரிக்கு முந்திய இலாபம் ஏற்பட்டது. இது 2021 இன் ரூ. 1.2 பில்லியனிலிருந்து குறைவானது - 49 சதவீதம் வீழ்ச்சியொன்றாகும். வரிக்கு பிந்திய இலாபமானது 2021இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 547 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 326 மில்லியன் தொகையுடைதாக இருந்தது- இது நேரொத்த நிதியாண்டுகளை விட 40 சதவீதம் குறைவாகும்.

இலாபமுடைமை




சாதாரண பங்குரிமை உடமையாளர்களுக்குப் பகிர்ந்தளித்த இலாபத்தில் குறைவின் காரணமாக ஆண்டுக் காலப்பகுதியில் பங்கொன்றுக்கான உழைப்பு 2021 இல் ரூ. 8.04 ஆக இருந்து ரூ. 5.04 ஆக வீழ்ச்சியடைந்தது. இலாபத் தன்மையின் வீழ்ச்சிக்கு இசைவாக 2022 இன் இறுதியளவில் பங்குரிமை மீதான ஆதாயம் ஆண்டு காலப்பகுதியில் 4.99 ஆக சீர்குலைந்தது. சொத்துக்கள் மீதான ஆதாயமும் நிதியாண்டின் இறுதியளவில் 0.52 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

பங்கொன்றுக்கான உழைப்பு




## சேத இழப்பு

ஆண்டுக்கான சேத இழப்புச் செலவு, 2021 இன் ரூ. 296 மில்லியனிலிருந்து 2022 இல் ரூ. 320 மில்லியனாக 8 சதவீதத்தினால் அதிகரித்தது.

ஏற்பாட்டு உள்ளடக்க விகிதம் - 4.5%

ஆண்டுக் காலப் பகுதியில் கட்டம் 1 மற்றும் கட்டம் 2 ஏற்பாடுகள் அதிகரித்ததுடன் 2022இல் கட்டம் 3 ஏற்பாடுகளும் அதிகரித்தன. தனிப்பட்ட சேத இழப்பு ஏற்பாடு 2021இன் ரூ.1,055 மில்லியனிலிருந்து, ஆண்டுகாலப் பகுதியில் 1,116 மில்லியனாக 5.7 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, கூட்டான சேத இழப்பானது 2021இன் ரூ. 680 மில்லியனிலிருந்து ரூ. 891 மில்லியனாக 31 சதவீதத்தினால் அதிகரித்தது.

## வங்கியின் ஐந்தொகை


ஆண்டுக் காலப்பகுதியில் வங்கியின் ஐந்தொகை 0.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஆயினும், எதிர்பார்க்கைகளை விடவும் அத்துடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையிலும் குறைவாக காணப்பட்டது.

## சொத்துக்கள்

மொத்த சொத்துகள், முன்னைய ஆண்டு அறிக்கையிடப்பட்ட ரூ. 62.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 62.8 பில்லியனாக காணப்பட்டது. பல சொத்துக்களிலும் அதிகரிப்புகள் அறிக்கையிடப்பட்டதற்கு மத்தியில் ஆண்டு காலப்பகுதியில் வங்கியுடனான இருப்புகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. இது 2021 இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 8.1 பில்லியனிலிருந்து ரூ. 30 மில்லியனுக்கு 99.6 சதவீதத்தினால் சடுதியாக வீழ்ச்சியடைந்தது.

குறிப்பிடத்தக்க அதிகரிக்கப்பட்ட சொத்துக்கள் மத்தியில் 2021 இல் ரூ. 126 மில்லியனிலிருந்து (225 சதவீதத்தினால்) ரூ. 409 மில்லியனாக அதிகரித்த பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் காணப்பட்டன. காசும் காசுக்கு சமமானவையும் ஆண்டு காலப்பகுதியில் ரூ. 340 மில்லியனாக அதிகரித்து 31 சதவீத அதிகரிப்பை பதிவு செய்தன. ஆதனம், பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்கள் ரூ. 243 மில்லியனாக 8.4 சதவீதத்தினால் அதிகரித்தன. ஏனைய சொத்துகள் 405 மில்லியனாக 74 சதவீதத்தினால் அதிகரித்தன. மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டில் முதலீட்டு ஆதனங்கள் 9.3 வீதத்தினால் வளர்ச்சியடைந்து ரூ. 1.2 பில்லியனை எட்டியது. நிதியியல் சொத்துக்கள் (கடன்கழிக்கப்பட்ட செலவில்) ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்தமைக்கு அரசாங்க பிணையங்கள் முதலீடுகள் ரூ. 7 பில்லியனிலிருந்து ரூ. 15 பில்லியனாக அதிகரித்தமை காரணமாக அமைந்தது.


நிதி நிலை, வைப்பு மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்கள்




## கடன்களும் முற்பணங்களும் அத்துடன் ஏனைய நிதியியல் சொத்துக்களும்

தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஆண்டுக்கு முன்னர் இருந்த ரூ. 41.8 பில்லியனிலிருந்து ரூ. 42.6 பில்லியனாக உயர்வடைந்து மொத்த சொத்துக்களின் 68 சதவீதத்திற்கு வகைகூறின. கடன் நிதிச் சொத்துப் பட்டியலானது, நீண்ட கால கடன்களில் ரூ. 42 பில்லியனை (மொத்தத்திலிருந்து 93%) உள்ளடக்குவதுடன், அதனைத் தொடர்ந்து கிடைக்கப் பெறத்தக்க குத்தகை வாடகையுடன் அலுவலர் கடன்களில் ரூ. 1.7 பில்லியன் காணப்பட்டதுடன், அடகு எஞ்சிய மொத்த கடன்கள் முற்பணங்களில் 1.27 பில்லியனை உருவாக்கியது.

மொத்தக் கடன்களும் முற்பணங்களும்




கைத்தொழில் மூலமான கடன்களும் முற்பணங்களும்





மொத்தக் கடன்களில் 59% மானவை நிர்மாண நோக்கங்களுக்காக வழங்கப்பட்டிருந்த அதேவேளை, மற்றுமொரு 17% மான புதிய பொருளாதார கடன்களாக வழங்கப்பட்டன. கடன்களில் மேலும் 10% விவசாயம் மற்றும் கடற்தொழில் நோக்கங்களுக்காக சேவை நாடிகளுக்கு வழங்கப்பட்டன.

பிணை உறுதி வாரியாக வங்கியானது ஊழியர் சேமலாப நிதிய பிணையளிக்கப்பட்ட கடன்களில் ரூ. 3.6 பில்லியன் பகிர்ந்தளித்துள்ளது. அதனைத் தொடர்ந்து காசுக் கடன்களில் ரூ. 3.1 பில்லியனும், ஈட்டுக் கடன்களில் 1.6 பில்லியனும் காணப்படுகின்றன. மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் மொத்தமாக ரூ. 10.8 பில்லியன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

கடன்கள்

ரூ. மில்.





கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பானது (ECL), முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 1.7 பில்லியனிலிருந்து ஏறத்தாள ரூ. 2 பில்லியனாக 16% னால் அதிகரித்தது. கட்டம் 1 கடன்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஒதுக்கீடானது 56% னால் ரூ. 246 மில்லியனாக அதிகரித்துள்ளது. கட்டம் 2 கடன் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறு 280% னால் அதிகரித்த அதேவேளை, கட்டம் 3 கடன்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஒதுக்கீடானது 2.5% னால் சிறிதளவு அதிகரித்துள்ளது.

## வங்கியின் ஏனைய நிதியியல் சொத்துக்கள்

வங்கியின் ஏனைய நிதியியல் சொத்துக்களானவை, காசு மற்றும் வங்கிகளுடனான இருப்புகள், படுகடன் மற்றும் கடன்கழிப்பு தொகையின் வேறு சாதனங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. 2022 இல் இவை ரூ. 18 பில்லியன் தொகையுடையதாவிருந்து 2021 இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 19 பில்லியனிலிருந்து சிறிதளவு குறைவடையச் செய்தது.

## பொறுப்புகள்

2022 இற்கான பொறுப்புகள் 2021 இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 56.3 பில்லியனிலிருந்து ரூ. 55.9 பில்லியனாக சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. அனைத்து பொறுப்புகளிலிருந்தும் வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை 2021 இல் ரூ. 2.1 பில்லியனிலிருந்து மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டில் ரூ. 1 பில்லியனாக 50% னால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியினை காண்பிக்கின்றது. ஏனைய பொறுப்புக்கள், முன்னைய நிதியாண்டினை விட 4% னால் சிறிதளவு அதிகரித்து, 2021 இன் ரூ. 4.4 மில்லியனுக்கெதிராக 2022 இற்கு 4.6 பில்லியனைப் பதிவு செய்துள்ளது.




## வைப்பாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவையும் ஏனைய நிதிப் பொறுப்புகளும்

வைப்பாளருக்கு செலுத்தப்பட வேண்டியவை ரூ. 50 பில்லியனாக பாரிய பொறுப்புக் காரணியாக காணப்படுகிறது. இது 2021 இல் ரூ. 49.8 பில்லியனிலிருந்து சிறிதளவு அதிகரித்துள்ளது. மொத்த செலுத்தப்பட வேண்டியவைகளின் 7% னைக் கொள்கின்ற சேமிப்பு வைப்புகள், ஆண்டுகாலப் பகுதியின் குறைவடைந்த அதேவேளை, நிலையான வைப்புகள் 2022 இல் சுமார் 01 பில்லியனால் அதிகரித்து, மொத்த நிலையான வைப்புகளை ரூ. 42 பில்லியனாக உருவாக்கியது. முதிர்ச்சி வாரியாக வைப்பாளர்களுக்குச் செலுத்தப்பட வேண்டியவை ஒரு வருடத்தினுள் ரூ. 41 பில்லியனையும் ஒரு வருடத்திற்கு பின்னர் 09 பில்லியனையும் கொண்ட செலுத்தப்பட வேண்டியவற்றை உள்ளடக்குகின்றது.

## பங்குரிமை மூலதனம்

மொத்தப் பங்குரிமை மூலதனம் 2021இன் ரூ. 6.3 பில்லியனிலிருந்து ரூ. 6.7 பில்லியனாக 6% அதிகரிப்பொன்றைக் காண்பிக்கின்றது. பிடித்து வைக்கப்பட்ட உழைப்புகள் 6% அதிகரிப்பும் ஏனைய ஒதுக்குகளின் 18% அதிகரிப்பும் அதேபோன்று நியதி ஒதுக்கு நிதியத்தின் 6மூ அதிகரிப்பும் இவ் அதிகரிப்புக்குப் பங்களித்தன.

## திரவத்தன்மை நிலை

வங்கியின் காசுப்பாய்ச்சல் நிலைக்கான இடையூறுகளில் உடனடி திரவத்தன்மை தேவைப்பாடுகளுக்கு உதவுவதற்கு வங்கி திரவத்தன்மை சாதனங்களின் முன்மதிமிக்க கலப்பினைப் பேணுகின்றது. எவ்வாறிருப்பினும், 2022 இன் இறுதியளவில் 8% மாக அதிகரித்த கடன்/வைப்பு விகிதமானது, திரவத்தன்மை விரிவடைந்தள்ளது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. அதிகரித்த வைப்பு மீளப் பெறுதல்கள் இத்தாக்கத்தை எற்படுத்திய அதேவேளை, கால வாரியாக நீண்டகால கடன் ஏடுகள் மற்றும் குறுகிய கால வைப்புத் தளங்கள் தொடர்ந்தும் திரவத்தன்மை கரிசனைகளை அதிகரித்தன.

வங்கியானது, அதன் திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தை (LCR) 334% மாகப் பேணி ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேல் காணப்பட்டதுடன், வங்கியின் அண்மையகால தாக்குப்பிடிக்கும் தன்மையினை பிரதிபலித்தது.

போதுமான திரவத்தன்மை சொத்துக்கள் ஊடாக வங்கியின் 30 நாள் திரவத்தன்மை தாக்குப்பிடிக்கும் தன்மை பாசல் III தேவைப்பாடுகளின் பிரகாரம் பேணப்படுகிறது. வங்கியின் திரவத்தன்மை சொத்துக்களானவை காசு மற்றும் காசுக்கு சமமானவை, குறுகிய கால வங்கி வைப்புகள் மற்றும் திரவத்தன்மை படுகடன் பிணையங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

திரவத்தன்மை சொத்து விகிதத்தை வங்கி 20% ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சத்திற்கு மேல் பேணியது. 2022 ஆண்டுக்காக வங்கி 31% கொண்ட விகிதத்தை பேணியது. திரவத்தன்மை உள்ளடக்க விகிதமானது 334% மாகவிருந்து, 2021 இல் அறிக்கையிடப்பட்ட 156% திலிருந்து மேம்பட்டது.

இடர்நேர்வு நிறைவேற்றப்பட்ட சொத்துக்கள் ரூ. 62 பில்லியனாக இருந்தன இவை 2021 இலிருந்து சிறிதளவு உயர்வடைந்தன. இவ்வரைபடம் இடர்நேர்வு சீராக்கப்பட்ட கடன் அளவுகளை உள்ளடக்குகின்றன.

## மூலதன ஒதுக்குகள்

வங்கியின் மைய மூலதனம் நிறைவுசெய்யப்பட வேண்டிய ரூ. 456 மில்லியன் இடைவெளியுடன் ஆண்டு காலப்பகுதியில் ரூ. 6.71 பில்லியனை எட்டியது. 2021இன் குறைவான இலாப அளவானது 2021இன் மைய மூலதனத்திற்கு உட்செலுத்தப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில், ஆண்டு காலப்பகுதியில் விரும்பப்பட்ட மூலதன மட்டத்தினை அடைவதற்கு எமக்கு சவால்களை ஏற்படுத்தின. 2023/2024 நிதியியல் ஆண்டுகளில் அதன் மைய மூலதனத் தேவைப்பாட்டை உறுதி செய்வதற்கு வங்கி எதிர்பார்க்கின்றது. மொத்த அடுக்கு I மூலதனம் ரூ. 6.5 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை அடுக்கு II மூலதனம் ரூ. 6.7 பில்லியனாக மூலதன தளத்தை உயர்த்தியது.

| இடர்நேர்வு சீராக்கப்பட்ட மூலதன விகிதங்கள் | 2022 | 2021 |
|---|---|---|
| பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதன விகிதம் * | 25.54% | 21.51% |
| அடுக்கு 1 (மொத்த அடுக்கு 1 மூலதனம் / மொத்த இடர் சீராக்கப்பட்ட நிலுவைகள்) ** | 26.56% | 22.38% |
| அடுக்கு II (மூலதன அடிப்படை / மொத்த இடர் சீராக்கப்பட்ட நிலுவைகள்) *** | 27.61% | 23.02% |

*குறைந்தபட்சம் 7.00 **குறைந்தபட்சம் 8.50% ***குறைந்தபட்சம் 12.50%

## காசுப் பாய்ச்சல்கள்

தொழிற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசு 2021இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 1.1 பில்லியனிலிருந்து ரூ. 143 மில்லியனை அடைந்தது. இவ் வீழ்ச்சியானது, உயர்வான வட்டிக் கொடுப்பனவுகள் (ரூ. 4.9 பில்லியன்) மற்றும் ஊழியர் கொடுப்பனவுகள் (1.4 பில்லியன்) என்பன உள்ளடங்கலாக பல்வேறு காரணிகளின் பெறுபேறாகவிருந்தது. ஆய்வுக்குரிய ஆண்டு காலப்பகுதியில், வட்டிக் கிடைப்பனவுகள் 2021இன் ரூ. 6.3 பில்லியனிலிருந்து ரூ. 8.8 பில்லியனாக அதிகரித்த அதேவேளை, வட்டிக் கொடுப்பனவுகளும் 2021இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 3.2 பில்லியனிலிருந்து ரூ. 4.8 பில்லியனாக அதிகரித்தன. ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள், நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி சேர்வரி மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு, ஏனைய தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான கிடைப்பனவுகள் மற்றும் ஏனைய தொழிற்படுத்தல் செலவுகளிலிருந்தான கொடுப்பனவுகள் அனைத்தும் அதிகரித்து, தொழிற்படுத்தல் செயற்பாடுகளிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்களைப் பாதித்தன.

முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல், 2021இன் ரூ. (1.5) பில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ரூ. 234 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலை காண்பித்தது. முதலீட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் ஒரு வருடத்துக்கு முன்னர் ரூ. 1 பில்லியன் இழப்பிற்கு மாறாக ரூ. 377 மில்லியன் பெறுகையினை காண்பித்தது. முதலீட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப் பாய்ச்சலுக்கு பங்களித்த பாரிய காரணியாக இது தோற்றம் பெற்றது. மேலும், நிதியியல் நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல், ஒரு ஆண்டுக்கு முன்னர் அறிக்கையிடப்பட்ட ரூ. 7.7 மில்லியனுடன் ஒப்பிடுகின்ற போது ரூ. 9.1 மில்லியன் கொண்ட வெளிப்பாய்ச்சலை காண்பித்தது.

## நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான பங்களிப்பு










| | | |
|---|---|---|
| • ஊழியர்கள் நிதியியல் ரீதியாகவோ, தொழில்சார் ரீதியாகவோ கவனிக்கப்படுகின்றனர் என்பதனை மனித மூலதன அபிவிருத்தி மீதான முதலீடுகள் உறுதி செய்கின்றன.<br>• குறைந்த வருமான வகுப்பினர் தொடக்கம் நடுத்தர வருமான வகுப்பினர் வரையான கடன் பெறுநர்களுக்கான நிதி வழங்குகின்றமை மூலம் நாம் நேர்த்தியான பணி மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்காக சமூகத்தின் சேவையளிக்கப்படாத வகுப்பினருக்கு நிதியளிக்கப்படுகின்றது என்பதை உறுதி செய்கின்றோம். | • அதிகம் தேவையைக் கொண்டுள்ள நிதியியல் மூலதனத்திற்கு உட்செலுத்துவதன் வாயிலாக - விசேடமாக பொருளாதார பெறுமதியினை பங்குதாரர்களுக்கு வழங்குவதனூடாக நாம் சமமின்மைகளைப் குறைப்பதை நோக்கி பங்களிக்கின்றோம் | • அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடனான பங்குடமைகள் தெளிவான நிதியியல் சவால்களுடன் கூடிய அவற்றின் உறுப்பினர்களுக்கு நிதியளிப்பதற்கு எம்மை இயலச் செய்கின்றன. |

## ஏனைய மூலதனங்கள் மீதான தாக்கம்

ஏனைய மூலதனங்களின் பெறுமதியினை மாறுதலடையச் செய்து மேம்படுத்தவதில் நாம் எவ்வாறு முதலிட்டுள்ளோம் என்பது பற்றி தயவுசெய்து 83 - 121 ஆம் பக்கங்கள் மீதான மூலதன அறிக்கைகளைப் பார்க்க.

| | |
|---|---|
|  | ஊழியர்களின் தேர்ச்சி மற்றும் அறிவினை உயர்த்துதல், அலுவலர் புத்தாக்கத்திற்கும் நடைமுறைசார்ந்த சிந்தனையை பின்பற்றுவதற்கும் அலுவலர்களை ஊக்குவித்தல் என்பவற்றுக்கு ஊதியம் மற்றும் அபிவிருத்தியில் முதலீடு செய்தல். |
|  | சேவை குறைவாக வழங்கப்படுகின்ற தனிப்பட்டவர்களுக்கு/வியாபாரங்களுக்கு நிதியங்கள் வழங்கப்படுகின்ற போது எமது உறவுகளையும் சமூக எண்ணப் பாங்குகளையும் அது உயர்வடையச் செய்கின்றது. |
|  | ஊழியர் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளில் முதலீடுகள் புத்தாக்கம்மிக்க மற்றும் வினைத்திறனான உற்பத்தி மற்றும் சேவையினை இயலச் செய்கின்றது. |
|  | ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீதான செலவினம் தொழிற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதுடன் வளர்ச்சிக்கும் ஆதரவளிக்கின்றது. பௌதீக சொத்துக்களில் முதலீடுகள் வங்கியின் சொத்து தளத்தை அதிகரிக்கக் கூடியது. |

### வர்த்தகப் பரிமாற்றங்கள்

ஏதேனும் முதலீடுகளைப் போன்று, ஏனைய மைய மூலதனங்களை உருவாக்குவதற்கான தேவையான முதலீடுகளையும் செலவினத்தையும் நாம் மேற்கொள்கின்ற போது, நிதியியல் மூலதனங்களில் விட்டுக்கொடுப்புகள் காணப்படும். இம்முதலீடுகள் மீதான ஆதாயங்கள், வங்கியினால் தனிப்பட்ட ரீதியாக அளவிடப்படுவதில்லை ஆனால், அதிகரிக்கப்பட்ட வருமான வடிவில் நாம் எதிர்பார்ப்பதுடன் இலாபம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

## நிதியியல் மூலதனத்தின் எதிர்காலம்

இதற்கிடையில் செயலாற்றமற்ற கடன் அளவினைக் குறைப்பதற்கு, வங்கி எதிர்பார்க்கின்ற அதேவேளை, குறைந்தபட்ச மூலதனத் தேவைபாட்டினை நிறைவு செய்வதில் கவனம் செலுத்தகின்றது. பேரண்ட தளம்பல்களை விஞ்சிச் சென்று பண வீக்கமும், உயர்வான வட்டி வீதச் சூழலும் மீண்டும் ஒரு தடவை வளர்ச்சிக் குறிக்கோள்களை நாடிச் செல்வதற்கு முக்கியத்துவம் மிக்கவையாகத் தோற்றம் பெற்றுள்ளன.

| கால வரையறை | எதிர்கால ஒருமுகப்படுத்தல் |
|---|---|
| குறுகிய காலம் | ரூபா 456 மில்லியன் மூலதன தேவைப்பாடு நிறைவு செய்யப்பட வேண்டும் |
| நடுத்தர காலம் | சில்லறை விரிவுபடுத்தல்களை வசதிப்படுத்துவதற்கு பயனுறுதிமிக்க திட்டமிடலின் அடிப்படையிலான முதலீடுகள் |
| நீண்ட காலம் | தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஏற்ப முதலீடுகள் |

# மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்:

# சேவைகளை வழங்குவதற்கான சமநிலையான அணுகுமுறை



## தயாரிக்கப்பட்ட மூலதனம்

### உள்ளீடுகள்

- கிளைகள் உட்பட சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் அடிப்படையில்
- ATM கள் போன்ற ஏனைய உடல் தொடு புள்ளிகள் அடிப்படையில்
- தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு

### பெறுமதி மேம்படுத்தும் அணுகுமுறை

- உடல் விரிவாக்கங்களுக்கான கணக்கிடப்பட்ட அணுகுமுறை
- உடல் தொடு புள்ளிகள் மற்றும் சொத்துக்களைப் பராமரித்தல்
- இணையப் பாதுகாப்பு உட்பட தொழில்நுட்ப அமைப்புகள்/உட்கட்டமைப்புகளில் முதலீடுகள்
- டிஜிட்டல் தொடு புள்ளிகள்/சேவையின் வளர்ச்சி

### விளைவு

- தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக 39 கிளைகள் பராமரிக்கப்படுகின்றன
- வாடிக்கையாளர்கள் டிஜிட்டல் டச் பொயின்ட் மூலம் சேவை பெறுகின்றனர்
- குறைக்கப்பட்ட மூலதனச் செலவுகள்
- 04 புதிய ATM தொடு புள்ளிகளை அதிகரித்தது
- விவேகமான முதலீடுகள் மற்றும் செலவுகள் வங்கியின் நிதி நிலையைப் பாதுகாக்கின்றன


நிதியியல் சேவை வழங்குனர் என்ற வகையில் தயாரிக்கப்பட்ட மூலதனமாக நாம் எதனைக் கருத்திற் கொள்கின்றோம் என்பது எமது தலைமை அலுவலகம் மற்றும் கிளை வலையமைப்பு அத்துடன், நாளாந்த தொழிற்பாட்டு செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து உருவ மூலவளங்கள் என்பன உள்ளடங்கலாக எமது பௌதீக சொத்துக்களை உள்ளடக்குகின்றது. எமது தொழிற்பாடுகளுக்கும், சேவைகளுக்கும் மிக முக்கியமாக விளங்குகின்ற தொழில்நுட்பவியல் முறைமைகளையும், தீர்வுகளையும் அவை உள்ளடக்குகின்றன. ஏனைய நிறுவனங்கள் மூலம் அவை உருவாக்கப்பட்டுள்ளன என்பதும், நேரடிக் கொள்வனவு அல்லது குத்தகை/வாடகை அடிப்படை ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.

### ஏன் அது எமக்கு முக்கியத்துவம் வாய்ந்தது?

பௌதீக சொத்துக்களும், தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பும், தொழிற்பாடுகளுக்கும், விரிவுபடுத்தல்களுக்கும் இடமளிப்பதற்கான வழிகளை வழங்குகின்றன. அத்தகைய கூறுகள், சேவைகளை வழிப்படுத்துவதற்கு எம்மை இயலச் செய்வதுடன் வாடிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் நிதியியல் சேவைக்கான பெறுவழியினை உறுதிசெய்கின்றன. பௌதீக சொத்துகள் எமது அடைவினை விரிவுபடுத்துவதற்கு எம்மை இயலச் செய்கின்ற அதேவேளை, வாடிக்கையாளர் தளத்தையும், வருவாயினையும் வளரச் செய்கின்து, டிஜிட்டல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கட்டமைப்பு, இணையவழி சேவை வழங்குதலை அதிகரித்து, ஊழியர் வினைத்திறனை இயக்குகின்றது.

## எமது அணுகுமுறை

தயாரிக்கப்பட்ட மூலதனத்தின் எமது இருப்பை வளர்ச் செய்வதன் மீதான ஒருமுகப்படுத்தலுடன், பௌதீக சொத்துக்கள், கிளை விரிவாக்கங்கள், டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பவற்றில் நாம் தொடர்ந்தும் நடைமுறை சார்ந்த முதலீடுகளை மேற்கொள்கின்றோம். நிதியியல் ரீதியாக வளம்பெறத்தக்க தன்மை மற்றும் ஆதாயங்கள் என்பன மீது நாம் கவனம் செலுத்தகின்ற போதே இதனை நாம் செய்கின்றோம். மூலதனச் செலவினங்களுக்கு விசேடமாக, பொருளாதார நெருக்கடி மற்றும் உயர்வடைகின்ற நிதியிடல் செலவுகள் என்பவற்றுக்கு மத்தியில் 2022இல் முன்னோக்கிய சிந்தனை அணுகுமுறை ஒன்றினை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்தோம்.




## வரையறைகளும் வாய்ப்புகளும்

| எல்லைகள் | வாய்ப்புகள் |
|---|---|
| • குறைந்தபட்ச மூலதனத் தேவையை பூர்த்தி செய்யும் வரை நாம் முதலீடுகளை கவனமாக அணுகி வருகின்றோம்.<br>• அதிகரித்த வட்டி விகிதங்கள் குறிப்பிடத்தக்க முதலீடுகளை ஊக்குவித்தன.<br>• கணிசமான பணவீக்கம் கிளை விரிவாக்கங்கள் மற்றும் பராமரிப்பு செலவுகளை ஏற்படுத்தின. | • டிஜிட்டல் சேவை வழிமுறைகள் மந்தமான கிளை விரிவாக்கங்களை ஈடுசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன<br>• ஐஊவு உள்கட்டமைப்பு திறமைக்கு வழி வகுக்கிறது. |

## பௌதீக ரீதியான தொடர்பு நிலையங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சொத்துக்கள்

### கிளைகளும் தலைமை அலுவலகமும்

எமது தொழிற்பாடுகளின் நோக்கலை தொடர்பில் எச்டிஎப்சி வங்கியானது, 39 - கிளை வலையமைப்பின் ஊடாக தொழிற்படுகின்றது. எமது கிளை வலையமைப்பும், தலைமை அலுவலகமும், ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுக்கான பெறுவழியினையும் சௌகரியத்தையும் உறுதி செய்கின்றன. நகரல்லாத பின்னணியைக் கொண்ட அத்துடன், டிஜிட்டல் சேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பெறுவழியைக் கொண்ட, வாடிக்கையாளர்களுடன் எமது கிளைகள் எமது சேவைகளில் நேரடியாக ஈடுபடுவதற்கு இயலச் செய்வதன் வாயிலாக இன்றியமையாத வகிபாகத்தினை நிறைவேற்றுகின்றன.

எமது கிளைகளும், பிராந்திய ரீதியாக ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு எம்மை இயலச்செய்து, தொடர்புடைய நகரங்கள் மற்றும் உள்ளூர் மட்டங்களிலிருந்து மக்களுக்கு தொழில் வாய்ப்பினை உருவாக்குகின்றன. மேலும், எமது கிளைகளும், தலைமை அலுவலகமும், வாடிக்கையாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் தேவையான அனைத்து வசதிகளுடனும், சௌகரியமாக வசதியளிக்கும் விதத்தில் தொழிற்படுகின்றன என்பதனை நாம் உறுதி செய்துள்ளோம்.

எமது கிளைகளும், தலைமை அலவலகமும், கொழும்பிலும், அண்மித்த பிரதேசங்களிலும், வெறும் 105,000 சதுர அடி பரப்பில் மாத்திரம் இடம்பெறுவதுடன், சேர்த்து மொத்தமாக 138,000 சதுர அடி பரப்பிற்கு மேல் மொத்த இடப்பரப்பை உருவாக்குகின்றன. எமது தலைமை அலவலகம், சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில், 29,000 சதுர அடி இடப்பரப்பிற்கு மேல் அமைந்திருக்கின்றது. மேலும், எமது களஞ்சியம் 3,500 சதுர அடியினை உள்ளடக்குகின்றது.

எமது கிளைகள், 6 பிராந்தியங்களாக ஒழுங்கமைக்கப்பட்டு, பிராந்திய முகாமையாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. கிளைகள் அனைத்து 09 மாகாணங்கள் முழுவதும் அமையப்பெற்று, மேல் மாகாணத்தில் உயர்வான செறிவுடன் காணப்படுகின்றன. கிளைகள் ஒவ்வொரு வார நாட்களிலும் 9 - 5 மணித்தியாலங்கள் சாதாரணமாக பணியாற்றுகின்றன. 2022 முழுவதும் தலைமை அலுவலகமும், கிளைகளும் வழமை போன்று தொழிற்பட்டு 2020, 2021 இல் COVID கட்டுப்பாடுகளுக்குப் பின்னர் தொழிற்பாட்டு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளன.


எமது கிளைகள் பௌதீக ரீதியாகப் பேணப்பட்டு வருகின்றன என்பதனை உறுதிசெய்வதில் வேண்டப்படுகின்ற போது நாம் கிளைகளில் திருத்தப் பணிகளை மேற்கொள்கின்றோம். 2022இல் தொழில் நிலைபெறு தன்மையினை உறுதி செய்வதற்கு நாம் திருகோணமலை கிளையினை இடமாற்றியுள்ளோம்.

தற்போது காணப்படுகின்ற எமது கிளை வலையமைப்பு பின்வரும் மாகாணங்களை உள்ளடக்குகின்றது.

# தயாரிக்கப்பட்ட மூலதனம்

1. கொழும்பு
2. ஹோமாகம
3. ஹொரண
4. ஹயிட் பார்க்
5. நுகேகொட
6. பிலியந்தல
7. அவிசாவல
8. கம்பஹா
9. ஜா-எல
10. கிரிபத்கொட
11. நிட்டம்புவ
12. பேலியகொட
13. பதுளை
14. மொனராகல
15. திஸ்ஸமஹாராம
16. இரத்தினபுரி
17. அம்பாறை
18. மட்டக்களப்பு
19. நுவரெலியா
20. களுத்துறை
21. அம்பலாங்கொடை
22. காலி
23. மாத்தறை
24. தங்காலை
25. எம்பிலிப்பிட்டிய
26. யாழ்ப்பாணம்
27. வவுனியா
28. சிலாபம்
29. குளியாப்பிட்டி
30. நிக்கவரெட்டிய
31. அநுராதபுரம்
32. பொலன்னறுவை
33. திருகோணமலை
34. தம்புள்ள
35. கேகாலை
36. மாத்தளை
37. குருநாகல்
38. கண்டி
39. கம்பஹா

| | |
|---|---|
| மத்திய | - 5 |
| கிழக்கு | - 3 |
| வடக்கு | - 2 |
| தெற்கு | - 5 |
| மேற்கு | - 13 |
| வட மேல் | - 4 |
| வட மத்திய | - 2 |
| ஊவா | - 2 |
| சப்ரகமுவ | - 3 |




## நிறைவான பண மீளெடுப்பு இயந்திர (ATM) பெறுவழி

பொதுவான பண மீளெடுப்பு இயந்திர ஆளியுடனான தொடர்புகை நாடு முழுவதும் பரந்து காணப்படுகின்ற 4,000 த்துக்கும் மேற்பட்ட பண மீளெடுப்பு இயந்திரங்களுக்காக எமது வாடிக்கையாளர்களுக்கான பெறுவழியினை வழங்குகின்றது. பண மீளெடுப்பு இயந்திரங்களின் புவியியல் ரீதியான இச்செறிவான பரம்பல் தடைகளின்றி நாளின் எல்லா நேரங்களிலும் பண மீளெடுப்பிற்கும் கணக்கு மீதிகளைப் பரீட்சிப்பதற்கும் எமது அட்டை உடமையாளர்களுக்கு வசதியளிக்கின்றது.

## வங்கியின் ஆதனம், பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மொத்தத் தொகை ரூ 243 மில்லியன் ஆகும். தொழிற்பாட்டு நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட மூலதனத்தின் பெறுமதியின் உச்ச பயன்பாட்டைப் பெறுவதற்கு வங்கி, மூலதனச் செலவினமாக முன்னைய ஆண்டில் எற்பட்ட ரூபா 68 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வுகுட்படுகின்ற ஆண்டில் ரூ 79 மில்லியன் கொண்ட தொகையினை செலவிட்டது.

## காணி மற்றும் கட்டடங்கள் - கிளைகளும் தலைமை அலுவலகமும்

எமது கிளைகளும், தலைமை அலவலகமும், கொழும்பிலும் அண்மித்த பிரதேசங்களிலும் வெறும் 100,000 சதுர அடி பரப்பில் மாத்திரம் இடம்பெறுவதுடன், சேர்த்து மொத்தமாக 130,000 சதுர அடி பரப்பிற்கு மேல் மொத்த இடப்பரப்பை உருவாக்குகின்றன. எமது தலைமை அலவலகம், சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் 29,000 சதுர அடி இடப்பரப்பிற்கு மேல் அமைந்திருக்கின்றது. மேலும், எமது களஞ்சியம் 3,500 சதுர அடியினை உள்ளடக்குகின்றது.


எமது கிளைகள் 6 பிராந்தியங்களாக ஒழுங்கமைக்கப்பட்டு, பிராந்திய முகாமையாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. கிளைகள் அனைத்து 09 மாகாணங்கள் முழுவதும் அமையப் பெற்று மேல் மாகாணத்தில் உயர்வான செறிவுடன் காணப்படுகின்றன. 2022 முழுவதும் தலைமை அலுவலகமும், கிளைகளும் வழமை போன்று தொழிற்பட்டு 2020, 2021 இல் ஊழஏஐனு கட்டுப்பாடுகளுக்கு பின்னர் தொழிற்பாட்டு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளன.




## டிஜிட்டல் ரீதியான தொடர்பு மையங்களும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பும்

எமது டிஜிட்டல் பயணமானது இன்னும் குறைவான ஆண்டுகளிலேயே காணப்படுகின்றது. எவ்வாறாயினும், நாம் ஒப்பீட்டளவில் திடமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அதேவேளை, எமது வாடிக்கையாளர்களின் உண்மையான தேவைகள் மீது ஒருமுகப்படுத்துகின்றோம். டிஜிட்டல் நிலையங்களானவை, டிஜிட்டல் சேவைகளை வழங்குகின்ற வசதியினை மேம்படுத்துவதுடன், கூடிய வாடிக்கையாளர்களுக்கு வங்கித் தொழில் சேவைகளை வழங்குவதற்கு எம்மை இயலச் செய்கின்றன. இந்நோக்கில் இணையவழி மற்றும் டிஜிட்டல் உலகுடன் வாழ்க்கையை இணைத்துள்ள எமது மிகவும் இளமையான வாடிக்கையாளர்களின் குடித்தொகையை நாம் தொடர்புபடுத்துகின்றோம்.

## டிஜிட்டல் பெறுவழி



## வலைத்தள பிரசன்னம்

எமது வலைத்தளமானது, எமது பிரதான மத்திய டிஜிட்டல் தொடர்பு மையமாக விளங்குகின்றது. சேவைகள் மற்றும் உற்பத்திகள் பற்றிய தகவல் மற்றும் வங்கி விபரங்கள் என்பவற்றை நிறுவன வைப்புத்தளம் (றறற.ானகஉ.டம) தொடர்ந்தும் மேம்படுத்துகின்றது. 2022இல் அதன் தோற்றத்தையும், தொழிற்பாடுகளையும் மேம்படுத்தும் நோக்குடன், நாம் அதன் இடைமுகத்தை மேம்படுத்தினோம். 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வலைத்தளத்தை தரமுயர்த்தல் தொடர்ந்தும் இடம்பெற்றது. இவ் அறிக்கை எழுதப்படும் நேரத்தில் இது, அதன் இறுதிக் கட்டத்தை எட்டியிருந்தது. புதிய தோற்றத்துடன் கூடிய மறுசீரமைக்கப்பட்ட வெப்தளம் 2023இல் மீள தொடங்கப்படவுள்ளது.

## இலத்திரனியல் வங்கிச்சேவை மற்றும் பாதுகாப்பான கொடுக்கல் வாங்கல்கள்

எச்டிஎப்சி கிளிக் என்பது, கொடுப்பனவுகளுக்கும், கொடுக்கல் வாங்கல்களுக்கும் மாத்திரமான எமது பிரத்தியேகமான இலத்திரனியல் வங்கி நுழைவாயிலாகும். இவ்வாயில் மீதான வாடிக்கையாளர் அனுபவத்தை நாம் தொடர்ந்தும் மேம்படுத்திய அதேவேளை, தரவுகளினதும், கொடுக்கல் வாங்கல்களினதும் பாதுகாப்பினை தொடர்ச்சியாக உறுதி செய்கின்றோம். மேலும், 2001 ஆம் ஆண்டுக்கு பின்னர் எமது இலத்திரனியல் வாயில் ஊடாக நாம் CEFT வசதியினை வசதிப்படுத்தியுள்ளோம். நெறிமுறைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஒரு தடவை கடவுச் சொற்களுடன் கூடிய பாதுகாப்பான அம்சங்களை எமது இலத்திரனியல் வங்கிச் சேவை உட்கட்டமைப்பு கொண்டுள்ளது. ஏனையவற்றுக்கு மத்தியில் முக்கிய கொடுக்கல் வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கான அனைத்து எமது தெரிவுகளும் வங்கியிலிருந்து வங்கிக்கான கொடுக்கல் வாங்கல்களையும் உபயோகச் சேவை கொடுப்பனவுகளையும் வசதிப்படுத்துகின்றன.

## மொபைல் கொடுக்கல்வாங்கல்கள்

நிகழ்நேர மொபைல் கொடுப்பனவுகளையும், கொடுக்கல் வாங்கல்களையும் வசதிப்படுத்துவதற்கு, மொபைல் சில்லறைக் கொடுப்பனவுகளுக்காக 2021இல் லங்காபேயின் துரளவீயல உடன் நாம் பங்குடமையாளர்களானோம். துரளவீயல உடன் இணைந்து கொள்கின்ற வாடிக்கையாளர்கள் தற்போது ரூ 50,000 வரையான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும். எமது முதலீடுகளை உச்ச பயன்பாட்டுடனும், ஆரோக்கியமான மட்டத்திலும் பேணுவதற்கு இது எம்மை இயலச்செய்கின்ற அதேவேளை, வாடிக்கையாளர்கள் டிஜிட்டல் கொடுப்பனவுகளுடன் முழுநிறைவான அனுபவத்தினைப் பெறுவதற்கு இது இயலச் செய்கின்றது.

## அருவச் சொத்துக்கள் (மென்பொருள்)

மென்பொருள் தீர்வுகள் செயன்முறைச் செயற்பாடுகளும், தொழிற்பாடுகளும் கொடுகடன் மற்றும் வைப்புகளைக் கருத்திற்கொள்கின்றன. வினைத்திறன் மிக்கதாக விளங்குவதற்கும், கைகளாலான செயற்பாடுகளின் பின்னடைவுகளை இல்லாமற் செய்வதற்கும் மென்பொருள் எம்மை இயலச்செய்து சேவை வழங்கலையும், வாடிக்கையாளர் அனுபவங்களையும் மேம்படுத்துகின்றது.

மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டு காலப்பகுதியில், வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை மற்றும் கொடுப்பனவுக் கட்டுப்பாடு காரணமாக, வெளிநாட்டு வழங்குனர்களுடாக கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருளுக்கான கொடுப்பனவுகளில் வங்கி சவாலை எதிர்கொண்டது. இதன் விளைவாக, முக்கிய தன்மையிலான கொள்வனவுகளைத் துரிதப்படுத்துவக்கான முன்னுரிமைமிக்க அணுகுமுறையினை நாம் மேற்கொண்டோம்.

## டிஜிட்டல் பயணம் (ஐந்து ஆண்டுகள்)

| | |
|---|---|
| 2022 | • ஒராகில் தரமுயர்த்தல் காரணமாக மைய வங்கித்தொழில் செயலி மாற்றப்பட்டது.<br>• தொடர்ந்தும் வலைத்தள மேம்படுத்தல்கள் முன்னெடுக்கப்பட்டன. |
| 2021 | • வினைத்திறன்மிக்க செயலிகளின் பயன்பாட்டிற்காக மைய வங்கித் தொழில் வன்பொருள் மாற்றப்பட்டது.<br>• மேலதிக வசதிகளையும், உயர்வான பாதுகாப்பினையும் வழங்குவதற்கு இலத்திரனியல் வங்கிச் சேவை முறைமை சீரமைக்கப்பட்டது.<br>• 4 புதிய பண மீளெடுப்பு இயந்திரங்கள்<br>• வழங்குனராக லங்காபே பொதுவான விற்பனை நிலைய (POS) முறைமையுடன் இணைந்து ஜேசிபி சான்றுபடுத்தப்பட்ட விற்பனை நிலைய இயந்திரங்களைப் பயன்படுத்தவதற்கு எச்டிஎப்சி பற்று அட்டைகளை இயலச் செய்தது |
| 2020 | • தலைமை அலுவலகத்துடன் கிளைகளை தங்குதடையின்றி இணைக்கின்ற SD-WAN (மென்பொருள் வரையறை பரந்தர பிரதேச வலையமைப்பு) வலையமைப்புக்கு மாறுதல்<br>• உட்கட்டமைப்பும் அனர்த்த மீட்பு முறைமையினை தானியக்கப்படுத்துகிறது. |
| 2019 | • 3 புதிய பண மீளெடுப்பு இயந்திரங்கள்<br>• செயற்பாடற்ற கடன்களை கண்காணிப்பதற்கும், உரிய காலத்தில் தொடர்புடைய கடிதங்களை உருவாக்கி, வாடிக்கையாளர்களுக்கு அறிவிப்பதற்கும், கடமை தவறுதல் முகாமைத்துவ முறைமை (DMS) நடைமுறைப்படுத்தல் தொடங்கப்பட்டது.<br>• காகிதங்களற்ற சபை மற்றும் குழுக்கூட்டங்களுக்காக இலத்திரனியல் கூட்ட முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.<br>• வட்டி வீதங்கள் மற்றும் எச்டிஎப்சி உற்பத்திகளை ஊக்குவிப்புகளை காட்சிப்படுத்துவதன் மூலம் கிளைகளில் வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்வதற்கு மத்திய ரீதியாக நிருவகிக்கப்படுகின்ற டிஜிட்டல் காட்சிப்படுத்தல் முறைமை |
| 2018 | • EMV - இயலச் செய்யப்பட்ட சிப் (CHIP) அட்டைகளைக் (பற்று அட்டைகள்) கையாளுவதற்கு பண மீளெடுப்பு இயந்திர ஆளி மென்பொருள் தரமுயர்த்தப்பட்டது. |

## நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

தயாரிக்கப்பட்ட மூலதனம் தொடர்பிலான பெறுமதி மேம்படுத்தல் செயற்பாடுகள் ஊடாக நாம் பல நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கு பங்களிக்கின்றோம்.




நிதியியல் சேவைகளுக்கான பெறுவழிக்காக கிளை வலையமைப்பு மற்றும் டிஜிட்டல் தீர்வுகள்




கிளைகள் ஊடாக உள்ளூர் தொழில் வாய்ப்பு




பொறுப்புமிக்க வங்கித்தொழிற் செயற்பாடுகள்

## ஒன்றையொன்று சார்ந்திருத்தலும் விட்டுக்கொடுப்புகளும்

தயாரிக்கப்பட்ட மூலதனத்திற்கான பெறுமதி உருவாக்க செயற்பாடுகள், எமது மூலதனங்கள் மாறுதலடைவதற்கு உதவுகின்ற அதேவேளை, சில விட்டுக் கொடுப்புகளை அவசியப்படுத்துகின்றன.

| மூலதனம் ஒன்றையொன்று சார்ந்திருத்தல் | |
|---|---|
|  | கிளை விரிவுபடுத்தல்களுக்கான இறுக்கமான அணுகுமுறையானது, பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில் நிதியியல் விடயங்கள் மீது எடுத்துக் காட்டப்பட்டது.<br><br>டிஜிட்டல் தீர்வுகள் தொழிற்பாட்டுச் செலவுகளை காலப்போக்கில் குறைக்கின்றது. அதாவது, பௌதீக வளங்கள், சக்தி, காகிதம் போன்றவற்றைக் குறைவாகப் பயன்படுத்தல். |
|  | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கட்டமைப்பு மேம்படுத்தல்கள், ஊழியர்களின் வசதி, விசுவாசம் மற்றும் வினைத்திறன் என்பவற்றை இயலச்செய்கின்றது. |
|  | நாடாளவிய கிளை வலையமைப்பு, சமூகத்தில் தொழில்வாய்ப்பிற்குப் பங்களிப்புச் செய்கிறது.<br><br>டிஜிட்டல் தீர்வுகள், தூர இடங்களிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு பெறுவழியினை மேம்படுத்துவதுடன், அனுபவங்களை உயர்த்துகின்றது.<br><br>நாடளாவிய கிளைகள் வங்கிக்கான பெறுவழியினை வழங்குகின்றன. |
|  | எச்டிஎப்சி நோக்காக கொண்ட தொழில்நுட்பக் கட்டமைப்பு அறிவுத்தளத்தையும், தொழில் தேர்ச்சிகளையும் உயர்த்துகின்றது. |
|  | டிஜிட்டல் சுவடுகளில் வளர்ச்சி சுற்றாடல் மீதான பௌதீக தாக்கத்தினைக் குறைப்பதற்கு எம்மை இயலச்செய்கிறது.<br><br>சூரிய சக்திகளுடன் கூடிய மூன்று கிளைகள் சூழலுக்கு சாதகமான தாக்கத்தை விளைவிக்கின்றன. |
| விட்டுக்கொடுப்புகள் | |
|  | ஆதனம், கிளை, ஏனைய சொத்துக்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளிலிருந்து தோன்றுகின்ற நிதியியல் விட்டுக் கொடுப்புகள் |
|  | சில்லறை தொழிற்பாட்டு விரிவுபடுத்தல், மூலவள நுகர்வினையும் காபன் சுவடுகளையும் அதிகரிக்கின்றன. |

## எதிர்காலத்திற்கான திட்டங்கள்

எமது பௌதீக சொத்துக்களுக்கான எதிர்காலம் ஒதுக்கப்பட்ட அணுகுமுறை ஒன்றின் மீதே காணப்படுகின்றது. நாட்டின் பொருளாதார வீழ்ச்சி மற்றும் இன்னும் நிறைவு செய்யப்பட வேண்டிய குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு என்பவற்றின் அடிப்படையில் உரிய காலத்தில் இந்நிலையிலிருந்து விரிவுபடுத்துவது, வலுவாக கருத்திற் கொள்ளப்படவில்லை. எனினும், நாடு முழுவதும் 15 புதிய கிளைகளைத் திறக்கும் நீண்டகால திட்டத்தை நாம் கொண்டுள்ளோம்.

அதேவேளை, தயாரிக்கப்பட்ட மூலதனத்தின் சொத்துக்கள் ஊடாக, உத்தேசிக்கப்பட்ட நிதியியல் மற்றும் நிதியல்லா செயலாற்றுகையினை நாம் பெற்றுக்கொள்கின்றோம் என்பதனை உறுதிசெய்யும் பொருட்டு, அரசாங்க, தனியார் தொழில் முயற்சிகளின் நன்கு முகாமை செய்யப்படுகின்ற சொத்துப்பட்டியலைப் பேணுவதிலும், அதிகரிப்பதிலும் எமது கவனத்தை நாம் செலுத்துவோம்.

வங்கியின் வளர்ச்சிக்கு இடமளிப்பதற்கும், வியாபாரத்தினை விரிவுபடுத்துவதில் எமது இலக்குகளுக்கு நிறைவளிப்பதற்கும் நாம் தொடர்ந்தும் புதிய தீர்வுகளை அறிமுகப்படுத்தி, முன்மதிமிக்க மற்றும் உரியகால விதத்தில் புதிய முறைமைகளைப் பின்பற்றுவோம்.

| கால வரையறை | எதிர்கால கவனம் செலுத்தல் |
|---|---|
| குறுகிய காலம் | புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட தீர்வுகளுடன் டிஜிட்டல் சுவடுகளை விரிவுபடுத்தலும் மேம்படுத்தலும்<br><br>வலிமைப்படுத்தப்பட்ட முறைமை உத்வேகத்திற்காக தகவல் தொழில்நுட்ப ஆளுகையினை மேம்படுத்தல் |
| நடுத்தர காலம் | இணையத்தளம் மற்றும் மொபைல் சேவைகள் ஊடாக டிஜிட்டல் பெறுவழியினை விரிவுபடுத்தலும் பேணுதலும் |
| நீண்டகாலம் | அதிக வாடிக்கையாளர்களுக்கு வசதியளிப்பதற்கு பௌதீக மற்றும் டிஜிட்டல் அடைவினை விரிவுபடுத்தல்<br><br>தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கும் இணைய பாதுகாப்பு உள்ளடங்கலாக அதிகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆளுகைக்கும் ஆதரவளிப்பதற்கான முதலீடுகள்<br><br>புதிய கிளைகள் |

# மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்:

# எமது தொழிற்படை வளர்ச்சியினை பேணி வளர்த்தல்



## மனித மூலதனம்

| உள்ளீடுகள் | பெறுமதி மேம்படுத்தும் அணுகுமுறை | விளைவு |
|---|---|---|
| • ஊழியர்கள் மற்றும் அவர்களின் திறன்கள், தனித்துவங்கள், அனுபவங்கள் போன்றவை.<br>• பாலினம், வயது மற்றும் தொழில் வகை ஆகியவற்றில் பலதரப்பட்ட பணியாளர்கள் | • ஆட்சேர்ப்பு உத்தி<br>• சமமான ஊதியம் மற்றும் நிதி அனுகூலங்கள்<br>• பதவி உயர்வுகள்<br>• சமமான மற்றும் சாதகமான பணிச்சூழல்<br>• தொழில் வாழ்க்கை சமநிலை<br>• சமமான பணிச்சூழல்<br>• திறன்களை மேம்படுத்தும் பயிற்சி மற்றும் மேம்பாடு<br>• ஊழியர்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் கொள்கைகள்<br>• பணியாளர்களுடனான ஈடுபாடு<br>• தொழிற்சங்கங்களுடனான உறவுகளைப் பேணுதல் | • உறுதியான பணியாளர்கள்<br>• பணியாளர்களின் திருப்தியை உறுதிப்படுத்தல்<br>• சம்பள உயர்வுகள்<br>• சிறந்த தக்கவைப்பு விகிதம் |


மனித மூலதனமானது, எமது பெறுமதி உருவாக்க மாதிரியின் மையமாகக் காணப்படுவதுடன், எமது ஊழிர்களின் தகைமைகள், இயலுமைகள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. எமது ஊழிர்கள் அணியானது, தொழில்சார் அபிவிருத்தியினை நோக்கி தேர்ச்சிகள், அறிவு மற்றும் வேறுபட்ட தொழில்நுட்ப நிபுணத்துவம், கடின உழைப்பு மற்றும் நடைமுறை சார்ந்த சிந்தனை என்பவற்றைக் கொண்ட தனித்துவமான பங்கினை ஊக்கத்துடன் கொண்டு சேர்கின்றது.

### ஏன் இது எமக்கு முக்கியத்துவம் வாய்ந்தது

மனித மூலதனமானது, செயன்முறைகளை மேம்படுத்துவதில் இன்றியமையாததாக விளங்கி, எதிர்பார்க்கப்பட்ட பெறுமதிகளுடன் தொழிற்பாட்டு வினைத்திறன்களை அதிகரித்து, ஏனைய பங்குதாரர்களுக்கு காலப்போக்கில் எதிர்பார்க்கப்பட்ட பெறுமதிகளை வழங்குகின்றது. எச்டிஎப்சி வங்கியில் ஊழியர் வளர்ச்சியிலும், நலநோன்புகைகளிலும், முதலிடுதலானது இருவழி பெறுமதி உருவாக்கத் துறைகளையும் இயக்குவதற்கு எம்மை இயலச்செய்யும். - முதன்மையாக ஊழியர்களின் அறிவையும், இயலளவுகளையும் விருத்தி செய்வதற்கு, அவர்களை அது இயலச்செய்யும். இரண்டாவதாக, எமது கடமைகளையும், குறிக்கோள்களையும் செயற்திறன் வாய்ந்த விதத்தில் நிறைவேற்றுவதற்கு ஊழியர் அபிவிருத்தி எம்மை இயலச்செய்யும்.


## சரியான அணி உருவாக்கம்

மொத்த ஊழியர்கள்




எச்டிஎப்சி அணி அதன் பணிக்கும், நிறுவசார் வளர்ச்சிக்கும் அர்ப்பணித்துள்ள 588 ஆட்களைக் கொண்ட ஒன்றுபட்ட பிரிவொன்றாகும். 2021 இன் தொழிற்படையிலிருந்து இருந்த 614 ஊழியர்களை விட இது குறைவானதாகும்.

ஊழியர் வகை அடிப்படையில் ஊழியர்கள்




## ஊழியர் வகை அடிப்படையில் ஊழியர்கள்

| | 2022 | | 2021 | | 2020 | | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| நிரந்தர | **297** | **211** | 304 | 213 | 308 | 221 | 309 | 230 | 299 | 224 |
| தகுதகாண் | **9** | **5** | 9 | 3 | 12 | 4 | 12 | 2 | 26 | 8 |
| ஒப்பந்த | **59** | **7** | 58 | 8 | 64 | 5 | 54 | 8 | 19 | 10 |
| பயிலுநர் | **-** | **-** | 19 | | 19 | | 31 | 1 | 53 | 1 |

## தொழில் கடமை அடிப்படையில் ஊழியர்கள்

| | 2022 | | 2021 | | 2020 | | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| நிறுவன முகாமைத்துவம் | **5** | **5** | 7 | 3 | 8 | 3 | 9 | 4 | 8 | 4 |
| பிரதம / சிரேஷ்ட முகாமையாளர்கள் | **8** | **14** | 9 | 15 | 9 | 17 | 4 | 8 | 6 | 7 |
| பிராந்திய முகாமையாளர்கள் | **5** | **1** | 5 | 1 | 5 | | 5 | - | 6 | 1 |
| நிறைவேற்று அதிகாரிகள் | **127** | **151** | 133 | 149 | 127 | 152 | 83 | 115 | 85 | 117 |
| நிறைவேற்று அல்லாத அதிகாரிகள் | **131** | **51** | 136 | 55 | 148 | 57 | 171 | 110 | 168 | 110 |
| வர்த்தக ஊக்குவிப்பு உதவியாளர்கள் | **12** | **1** | 12 | 1 | 12 | 1 | 46 | 3 | 46 | 3 |
| கனிஷ்ட வர்த்தக ஊக்குவிப்பு உதவியாளர்கள் | **28** | **-** | 22 | - | 22 | - | 22 | - | 25 | - |
| வர்த்தக ஊக்குவிப்பு பயிலுநர்கள் | **22** | **-** | 27 | - | 27 | - | 31 | 1 | 53 | 1 |
| சிறிய மடிக்கணனி உதவியாளர்கள் | **27** | **-** | 39 | - | 45 | - | 35 | - | - | - |

## பிராந்திய அடிப்படையில் ஊழியர்கள்

| பிராந்தியம் | ஊழியர்கள் | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| பிராந்தியம் 1 | 42 | 29 |
| பிராந்தியம் 2 | 40 | 24 |
| பிராந்தியம் 3 | 46 | 32 |
| பிராந்தியம் 4 | 57 | 29 |
| பிராந்தியம் 5 | 43 | 9 |
| பிராந்தியம் 6 | 57 | 24 |
| தலைமை அலுவலகம் | 80 | 76 |

## மாகாண அடிப்படையில் ஊழியர்கள்


| மாகாணம் | ஊழியர்கள் | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| வடக்கு | 11 | 3 |
| வட மத்திய | 13 | 5 |
| வட மேல் | 39 | 16 |
| கிழக்கு | 20 | 2 |
| மத்திய | 38 | 20 |
| மேற்கு | 162 | 141 |
| ஊவா | 18 | 3 |
| சப்ரகமுவ | 27 | 10 |
| தெற்கு | 37 | 23 |

## பல்வகைமைமிக்க குழு

## பாலினம்

எமது தொழிற்படையில் 38% மானோர் பெண் தொழில்சார் நிபுணர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஆண் தொழில்சார் நிபுணர்கள் தொழிற்படையின் ஏறத்தாழ 62% சதவீதத்தை தோற்றுவிக்கின்றது. நிரந்தர அலுவலர்களில் 41% சதவீதமானோர் பெண் தொழில்சார் நிபுணர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அதேவேளை, தகுதிகான் மற்றும் ஒப்பந்த அலுவலர்களில் 85% ஆண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளது. மேலும், நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட மட்டங்களில் பெண் பிரதிநிதித்துவம் 54% மாகவும், ஆண் பிரதிநிதித்துவம் 46% மாகவும் காணப்படுகின்றது.


2022 இல் பாலினம் அடிப்படையில் ஊழியர்கள்





## வயது

எமது தொழிற்படையின் 65% பெரும்பான்மையான பங்கு 30 - 50 வயதுக்கு நடுத்தர வயதிற்கு இடைப்பட்டவர்களாகும். அதனை தொடர்ந்து, 50 வயதுக்கு மேல் 18% ஊழியர்களும் 30 வயதிற்கு கீழ் 17% ஊழியர்களும் காணப்படுகின்றனர்.

2022 இல் வயது அடிப்படையில் ஊழியர்கள்




வயது அடிப்படையில் ஊழியர்கள்




## மனித மூலதனத்தை முகாமை செய்தலும் பெறுமதியினை அதிகரித்தலும்

## ஆட்சேர்ப்பு உபாயம்

2022 இல் தொழிற்பாட்டு செலவினத்திற்கான கட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுறைகளின் அடிப்படையில், ஓய்வுபெற்ற மற்றும் பதவிவிலகிய ஆளணிக்கான பொருத்தமான மாற்றீடுகளை தெரிவுசெய்யும் விதிவிலக்குகளுடன் கணிசமான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கான எமது தீர்மானத்தை நாம் மட்டுப்படுத்தியுள்ளோம். எவ்வாறிருப்பினும், உயர்வான தக்கவைத்தல் வீதம் மற்றும் உடன் நிகழ்கின்ற குறைந்த புரள்வு வீதம் என்பவற்றின் அடிப்படையில், ஆட்சேர்ப்பு காலங்கடந்த தாக்கத்தைப் பெற்றிருந்தது. ஆயினும், திருப்திகரமான தொழிற்படையினைக் கொண்டிருக்கும் தாக்கத்தை பிரதிபலித்தது.

# மனித மூலதனம்

பொருந்துகின்ற பதவிக்காக சரியான ஊழிர்களை ஆட்சேர்க்கையில், நாம் நடுநிலையான அணுகுமுறையினை மேற்கொள்ளும் அதேவேளை, வெளிவாரி தரப்பினர்களில் இருந்து வருகின்ற ஏதேனும் செல்வாக்கினை ஊக்கமிழக்கச் செய்கின்றோம். நாம் தெரிவு அட்டவணைப்படுத்தி தெரிவு செய்கின்ற அபேட்சகர்கள், அவர்களது பாலினம், மதம், இனம் என்பவற்றைப் பொருட்படுத்தாது, புத்தாக்கமாக சிந்திக்க மற்றும் வினைத்திறனுடன் பணியாற்றுவதற்கு அர்பணிக்க இயலுமாக இருந்தவர்களுக்கு சரியான வாய்ப்பினை வழங்கியது. எமது ஆட்சேர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடித்து, ஏற்கனவே காணப்படுகின்ற தொழிற்படையில் இருந்து சரியாக பொருந்துபவர்களை தேடுவதுடன், கூடிய அலுவலர்களைத் தேடும் செயன்முறையினை நாம் தொடங்கியுள்ளோம். பதவி வெற்றிடங்களை உள்ளக வலையமைப்பு போன்ற வழிகளில் உள்ளக ரீதியாக நாம் தொடர்பூட்டி, பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குகின்றோம். உள்ளக ஆட்சேர்ப்புகள் ஊடாக பதவிகளை நாம் நிரப்ப முடியாமல் இருக்குமாயின், நாம் வெளிவாரியாக ஆட்சேர்ப்பதற்கான மாற்றுவழியினை நாடுகின்றோம். முன்னணி தொழில் தேடும் தளங்கள் மற்றும் செய்தித் தாள்கள் மீது விளம்பரங்களை வழங்குவதன் வாயிலாக இது செய்யப்படுகின்றது. அதன் பின்னர், ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவுச் செயன்முறை முறைசார்ந்து தொடங்குகின்றது.


வேண்டப்படும் பதவிக்கான சரியான அனுபவம் ஆற்றல் மற்றும் பதவியுடன் தொடர்புபடுகின்ற அறிவு என்பவற்றின் அடிப்படையில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும். முகாமைத்துவத் தலைவர்களைக் கொண்ட குழாம் மூலம் நேர்முகப் பரீச்சையினை அபேட்சகர்கள் எதிர்கொள்வர்.

ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 13 புதிய ஊழியர்களை நாம் ஆட்சேர்த்துள்ளோம். புதிதாக ஆட்சேர்க்கப்பட்டவர்களில் 77மூ நிறைவேற்றுதரமற்ற வகிபாகங்களாகும்.

| புதிய ஊழியர்கள் | 2022 | | 2021 | | 2020 | | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| நிறுவன முகாமைத்துவம் | **-** | **1** | - | 1 | - | - | - | - | 2 | - |
| நிறைவேற்று அதிகாரிகள் | **2** | **-** | - | 1 | - | - | 1 | - | 1 | 2 |
| நிறைவேற்று அல்லாத அதிகாரிகள் | **3** | **5** | 7 | 6 | 2 | - | 6 | 2 | 2 | 3 |
| சிறிய மடிக்கணனி உதவியாளர்கள் | **2** | **-** | 3 | - | 15 | - | 35 | 1 | 16 | - |

## சமத்துவமான ஊதியமும் நிதியில் நன்மைகளும்

நியாயமான மற்றும் அனைவரையும் உள்ளடக்குகின்ற நிதியியல் ஊக்கத்தொகைகள், ஊழியர்களை நாம் எவ்வாறு தக்கவைக்கின்றோம் என்பது பற்றிய முக்கிய நோக்காகும். வங்கியானது, கவர்ச்சிகரமான மற்றும் தொழிற்துறைக்குப் பொருத்தமான எமது நிரந்தர அலுவலர்கள் மூலம் அனுபவிக்கப்படுகின்ற ஊதிய மட்டத்தைக் கொண்டுள்ளது. முழுநேர நிரந்தர அலுவலர்கள் அவர்களது நியமனக் கடிதங்களின் மற்றும் சேவை ஒப்பந்தங்களின் உறுதிப்படுத்தல்களின் அடிப்படையில் பல நன்மைகளை அனுபவிக்கின்றனர். எமது வங்கித் தொழில் அலுவலர்களும், ஏனைய தொழிற்பாட்டு பதவி வகிபாகங்களில் ஈடுப்பட்டுள்ள ஊழியர்களும், வங்கித் தொழிற்துறைக்கு, குறிப்பான சம்பளக் கட்டமைப்பை அனுபவிக்கின்றனர். கூட்டு ஒப்பந்த நிபந்தனைகளுக்கு அமைவானது.




| நன்மை | நிரந்தரம் | தகுதிகாண் | ஒப்பந்தம் | வர்த்தக ஊக்குவிப்பு பயிலுநர்கள் |
|---|---|---|---|---|
| மருத்துவ மீளளிப்பு | √ | √ | - | - |
| வீடமைப்புக் கடன் | √ | - | - | - |
| இடர் கடன் | √ | - | - | - |
| உத்தரவாதி கடன் | √ | √ | - | - |
| மோட்டார் சைக்கில் குத்தகை | - | - | - | √ |
| மிகை ஊதியம் | √ | √ | √ | √ |
| விடுமுறையை பணமாக்கல் | √ | √ | √ | - |
| வாழ்க்கைப்படிகள் | √ | √ | √ | √ |
| இடர்நேர்வு கொடுப்பனவு (காசாளர் மற்றும் உள்ளங்கை கணனி அணி மாத்திரம்) | √ | √ | √ | √ |

| நன்மை | நிரந்தரம் | தகுதிகாண் | ஒப்பந்தம் | வர்த்தக ஊக்குவிப்பு பயிலுநர்கள் |
|---|---|---|---|---|
| தரகு | - | - | - | √ |
| வாகனக் கடன் | √ | - | - | - |
| பண்டிகைக் கால கடன் | √ | √ | √ | - |
| கஷ்டப் பிரதேச கொடுப்பனவு | √ | - | - | - |
| சேவை கௌரவிப்பு கொடுப்பனவு | √ | - | - | - |
| திறப்பை கையாளும் கொடுப்பனவு (பாதுகாப்பு திறப்பு) | √ | - | - | - |
| கிளை முகாமையாளர் கொடுப்பனவு | √ | √ | - | - |
| இரண்டாம் நிலை அலுவலர் கொடுப்பனவு | √ | √ | - | - |

ஏற்பாடுகள் மற்றும் ஏனைய செலவுகள்

2022 இல் அனைத்து ஊழியர்களுக்கும் ஊதியமாக ரூபா 1,544 மில்லியனை வங்கி செலவிட்டது. இது, முன்னைய ஆண்டில் இருந்து 11% அதிகரிப்பாகும்.

எமது அனைத்து ஊழியர்களும் குறைந்தபட்ச சம்பள மட்டங்களுக்கு மேல் சம்பளங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். சம்பளங்கள் அது வங்கித் தொழில் ஆயினும், வங்கித்தொழில் அற்றதாயினும் சரி தொழிலிலைச் சார்ந்தாகும் என்பதுடன், தொழிற்துறை சாராசரிகளின் மீது தீர்மானிக்கப்படுவதுடன் தனிப்பட்ட ஊழியர் தகைமைகள், தேர்ச்சிகள் மற்றும் அனுபவங்களை சார்ந்திருக்கும்.

## தொழில் வளர்ச்சிக்கான பதவியுயர்வுகள்

பதவியுயர்வுகள் என்பது, உழியர்களின் சுயமாக தூண்டப்பட்ட அர்ப்பணிப்பு மற்றும் தொழில்சார் பண்பு என்பவற்றின் குறிகாட்டியொன்றல்ல, வழிமுறையுரிமைக்கும், தொழில்சார் வளர்ச்சிக்கும் சமத்துவமான நியாயமான வாய்ப்புகளை அனைத்து ஊழியர்களும் பெற்றுக்கொள்கின்றனர் என்பதனை நாம் எவ்வாறு உறுதிப்படுத்துகின்றோம் என்பதையும் அது எடுத்துக் காட்டுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஊழியர் செயலாற்றுகை மற்றும் தெரில்சார் பண்பு மற்றும் வங்கியுடனான அவர்களது சேவையின் காலப்பகுதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, பதவியுயர்வுகளை நாம் பரிசீலனையில் கொள்கின்றோம். முக்கிய முகாமைத்துவ ஆளணி உள்ளடங்கலாக, ஊழியர்கள், 2019 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுக் கொள்கையின் கீழ் நியாயமான பதவியுயர்வு சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

ஆண்டு தோறும் வரிசைப்படுத்தப்பட்ட வெற்றிடங்களின் அடிப்படையில் உள்ள பதவியுயர்வுகளுக்கு நாம் முன்னுரிமையளிக்கின்றோம். பதவி விலகள், ஓய்வு பெறுதல்கள் அல்லது வேறேதேனும் காரணத்தின் அடிப்படையில் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேவை காணப்படுமாயின், முதலில் நாம் வங்கியில் உள்ள வலையமைப்பைப் பயன்படுத்தி, வெற்றிடத்தை உள்ளக ரீதியாக வெளியிடுகின்றோம். ஆர்வமுடைய ஊழியர்கள், பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், வேண்டப்படும் பதவிக்கு உரியதாக காணப்படுகின்ற முன் தேவைப்பாடுகளுக்கு எதிராகவும், பதவி வகிபாகத்திற்கு கோரப்படுகின்ற தொழில்நுட்ப தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையிலும் விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்படும்.

## இயக்கவாற்றல் மிக்க அணிக்கான பயிற்சியும் விருத்தியும்


எமது ஊழியர்களின் அறிவுத்தளங்களைப் பேணுகின்ற அத்துடன், திறமைகளை மேம்படுத்துகின்ற முக்கிய பணியினை நாம் கொண்டுள்ளோம். பிரதானமாக, துரிதமாக மாற்றமடைந்து வரும் பொருளாதாரம், கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், தோற்ற அமைப்பினுள் ஊழியர்கள் அத்தகைய அபிவிருத்தி பற்றி இற்றைவரையாக அறிந்திருக்க வேண்டும். எமது ஊழியர்களின் அறிவு தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு, அவர்களது தொழிலில் மற்றும் தொழிற்துறையின் கேள்விகளுடன் இசைந்து காணப்படுகின்றது என்பதனை உறுதிசெய்வதற்கு நாம் நன்கு திட்டமிடப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைக் ஆண்டு தோறும் நடாத்துகின்றோம்.

அறிவு இடைவெளிகளை நீக்கி, வங்கியின் தேவைகள் பற்றி ஊழியர்களிடம் இருந்தான கோரிக்கைகளுக்கும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நாம் விருத்தி செய்கின்றோம். பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைக்கின்ற மனித வள அணியானது, பல்வேறு திணைக்களங்கள் மற்றும் ஆளணி என்பற்றின் பயிற்சித் தேவைகளைக் கருத்திற் கொள்கின்றது. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொழில்சார் விருத்திக்கு மேலதிகமாக, பல்வேறு வங்கித் தொழிலில் தொடர்புபட்ட தொழில்நுட்பவியல் கருமங்கள், தொழிற்பாட்டு நோக்குகள், ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் சட்ட ரீதியான விடயங்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. அத்தகைய தொழில்நுட்ப விடயப் பரப்பு மீதான பயிற்சி மீது கவனம் செலுத்தலுடன் குறிப்பாக, வங்கித் தொழிலுடன் தொடர்புபட்ட தேவைகளுக்கு ஊழியர்களின் கவனத்தை திருப்புவதற்கு நாம் இயலுமாகவுள்ளவர்களாக விளங்குகின்றோம். அறிவுத் தீவிரமிக்க தொழிற்துறையினுள் இது அவர்களுக்கு சக்தியளிப்பது மாத்திரமின்றி, பரினாம வளர்ச்சியடைகின்ற தேவைப்பாடுகளுக்கு இசைவாக அவர்களது சேவைகளை நிறைவேற்றுவதற்கும் அவர்களை இயலச் செய்கின்றது.

ஊழியர்கள் பல எண்ணிக்கையான உள்ளக மற்றும் வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்கின்றனர்.

1. உள்ளக நிகழ்ச்சித் திட்டங்கள் - திணைக்கள பிரதானிகள் மற்றும் நிறுவன அலுவலர்கள் மூலம் நடாத்தப்படுகின்றன.
2. வெளிவாரி நிகழ்ச்சித் திட்டங்கள் - ஒழுங்கு முறைப்படுத்தல் நிறுவனங்கள், தொழில்நுட்ப ஒழுங்கமைப்பாளர்கள் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்ற மன்றங்கள் மற்றும் பயிற்சி அமர்வுகளில் ஊழியர்கள் பங்கேற்றல்.

2022இல் ஊழியர்கள் 36 உள்ளகப் பயிற்சி நிகழ்சித் திட்டங்களிலும், 29 வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும் பங்கேற்றனர். மொத்தமாக 5,351 மணித்தியாலங்கள் பயிற்சிக்குச் செலவிடப்பட்டதுடன், பல்வேறு சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப தலைப்புகள் தொழில்சார், மென்திறன் விருத்தி உள்ளடங்கலாக பல நோக்குகளில் 497 ஊழியர்கள் பயிற்சிகளை பெற்றுக்கொண்டனர்.



| வெளிவாரி | தொழி வகை | பங்கேற்பு | உள்வாரி | தொழில் வகை | பங்கேற்பு |
|---|---|---|---|---|---|
| 32 ஆவது ஆண்டுநிறைவு விழா 2022 | முகாமையாளர்கள் | 3 | வாடிக்கையாளர் மதிப்பீடு | கிளை அலுவலர்கள் | 107 |
| வங்கி ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவம் | பிரதம முகாமையாளர் | 1 | நிதிப் பகுப்பாய்வு | கிளை அலுவலர்கள் | 103 |
| வங்கி மற்றும் நிதித் துறைக்கான டிஜிட்டல் கையொப்பங்களை நடைமுறைப்படுத்தல் | நிறுவன முகாமைத்துவம் | 6 | உள்ளங்கை கணனி அலுவலர்கள் மூலம் கடன்களை அறவிடுதல் | உள்ளங்கை கணினி அலுவலர்கள் | 48 |
| நிதி நிறுவனத்திற்கான பணம் துய்தாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நியதியளித்தலை ஒழித்தல் இணங்குவித்தல் | நிறுவன முகாமைத்துவம் | 1 | கடன் பிரிவுக்கான விசேட பயிற்சி - எக்செல் | கடன் பிரிவு ஊழியர்கள் | 11 |
| ஊ.சே.நி, ஊ.ந.நி, பணிக்கொடைச் சட்டம் மற்றும் கடை மற்றும் அலுவலகச் சட்டத்தின் நன்மைகள் | நிறைவேற்று அலுவலர்கள், முகாமையாளர்கள் | 2 | கடன் பிரிவுக்கான விசேட பயிற்சி - எக்செல் | கடன் பிரிவு ஊழியர்கள் | 8 |
| இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16- (SLFRS 16) குத்தகைகள் பற்றிய கருத்தரங்கு | முகாமையாளர்கள் | 4 | கடன் பிரிவுக்கான விசேட பயிற்சி - எக்செல் | கடன் பிரிவு ஊழியர்கள் | 5 |
| பெண்கள் மற்றும் பணியிடம் | நிறுவன முகாமைத்துவம் | 1 | கருத்திட்ட முகாமைத்துவத்திற்கான அறிமுகம் | முகாமையாளர்கள் / நிறைவேற்று அலுவலர்கள் | 14 |
| வட்டி வீத இயக்கவாற்றல்: வங்கிச் செயற்பாடுகளில் தாக்கம் | நிறைவேற்று அலுவலர்கள் | 1 | LMS பயிற்சி | நிறைவேற்று / நிறைவேற்றுத் தரமற்ற அலுவலர்கள் | 25 |
| வங்கிக் கடன் வழங்குவதற்கான சட்ட விடயங்கள் | சட்ட அலுவலர்கள் | 1 | வங்கித் தொழிற்பாடுகளுக்கான இணங்குவித்தல் மற்றும் ஒழுங்குமுறை முறைப்படுத்தல் தேவைகள் | நிறைவேற்று / நிறைவேற்றுத் தரமற்ற அலுவலர்கள் | 75 |
| பெறுகை முகாமைத்துவம் மற்றும் விலைக்கோரல் நடைமுறைகள் | வங்கி உதவியாளர்கள் - நிர்வாகம் | 1 | கடன் சுற்றறிக்கைகள் பற்றிய பயிற்சி | கடன் அலுவலர்கள் | 70 |
| தரவுகளின் அந்தரங்கமும் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பும் | பிரதம முகாமையாளர் | 1 | கடன் மறுசீரமைப்பு பற்றிய பயிற்சி | கிளை முகாமையாளர், உதவி முகாமையாளர்கள், அறவீட்டு அலுவலர்கள் | 92 |
| இலங்கைப் பசுமை நிதி பற்றிய வகை பிரித்தல் அறிமுகம் | முகாமையாளர்கள் | 2 | அறவீடு பற்றிய செயலமர்வு | அறவீட்டு அலுவலர்கள் | 2 |
| நிதித் துறையில் மூலோபாய மனித வள முகாமைத்துவம் | முகாமையாளர்கள் - மனித வளம் | 3 | அடகு வைப்பது பற்றிய விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் | அடகு வைத்தல் அதிகாரிகள் | 49 |
| பிரிவு முகாமையாளர்களுக்கான தொழில் சட்டம் பற்றிய செயலமர்வு | மனித வள - ஊழியர்கள் | 6 | வங்கித் தொழில் ஆய்வு நிலையப் பயிற்சி | அபிவிருத்தி உதவியாளாகள் | 47 |
| நிதி நிறுவனங்களுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு | நிறுவன முகாமைத்துவம் | 1 | மைக்ரோசொப்ட் ஒப்பீஸ் | நிறைவேற்று / நிறைவேற்றுத் தரமற்ற அலுவலர்கள் | 5 |
| நிதி நிறுவனங்களுக்கான பணம் துய்தாக்கலுக்கு எதிரான/ பயங்கரவாத நியதியளித்தலை ஒழித்தல் இணங்குவித்தல் | நிறைவேற்று அலுவலர்கள், முகாமையாளர்கள் | 4 | LMS மற்றும் LOS பற்றிய பயிற்சி | கிளை முகாமையாளர்கள் | 46 |
| வங்கித்தொழில் நிறுவனத்திற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்பு முகாமைத்துவம் | நிறைவேற்று அலுவலர்கள், மற்றும் மேற்பட்டவர்கள் | 2 | தங்கக் கடன்களை எவ்வாறு ஊக்குவிப்பது | அடகு வைத்தல் அதிகாரிகள் | 52 |
| வங்கி ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவம் | முகாமையாளர்கள் | 2 | பண மீளெடுப்பு பிரச்சினைகள் பற்றிய பயிற்சி | உதவி முகாமையாளர்கள் | 71 |
| தொழில்சார் முறை எழுதுதல் மற்றும் மின்னஞ்சல் நெறிமுறை | நிறைவேற்று / நிறைவேற்றுத் தரமற்ற அலுவலர்கள் | 29 | வங்கி தொழிற்பாடுகளில் இணக்குவித்தல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகள் | கிளை அதிகாரிகள் | 32 |

| வெளிவாரி | தொழி வகை | பங்கேற்பு | உள்வாரி | தொழில் வகை | பங்கேற்பு |
|---|---|---|---|---|---|
| நாணயக் கொள்கை மற்றும் நாணயத் தொழிற்பாடுகள் | முகாமையாளர்கள் | 5 | வங்கி தொழிற்பாடுகளில் இணக்குவித்தல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகள் | அபிவிருத்தி உதவியாளர்கள் | 37 |
| கொடுகடன் வசதிகள் மற்றும் ஏனைய நிதிச் சொத்துக்களின் வகைப்பாடு, இனங்காணல் மற்றும் அளவீடு பற்றிய வங்கித் தொழில் சட்டப் பணிப்புரைகள் | நிறைவேற்று அலுவலர்கள் | 4 | உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வுக் கரிசனைகள | கிளை அதிகாரிகள் | 100 |
| நாணய விதிச் சட்டம் மற்றும் மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் | நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முகாமையாளர்கள் | 5 | ஒழுக்கக் கோவை மீதன பயிற்சி | அபிவிருத்தி உதவியாளர்கள் | 36 |
| இடமாற்றங்கள் மற்றும் இணைப்புகள் மீதான சட்ட ரீதியான உள்ளார்ந்தங்கள் | நிறுவன முகாமைத்துவம் | 1 | தொழில்சார் வங்கியாளருக்கான ஆளுமை விருத்தி | அபிவிருத்தி உதவியாளர்கள் | 40 |
| உண்மையான நாணயத்தாள்களில் உள்ள பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் போலி நாணயத்தாள்களை அடையாளம் காணுதல் | கிளை முகாமையாளர்கள் | 1 | எம்எஸ் எக்செல் | நிறைவேற்று அலுவலர்கள், மற்றும் மேற்பட்டவர்கள் | 18 |
| இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பு நெருக்கடிகள், ஊஆயு மாநாடு 2022 | நிறுவன முகாமைத்துவம் | 1 | எம்எஸ் ஒப்பீஸ் மற்றும் எம்எஸ் எக்செல் | நிறைவேற்று அலுவலர்கள் | 38 |
| நொதரிசு கட்டளைச் சட்டம் பற்றிய கருத்தரங்கு | சட்ட அலுவலர்கள் | 5 | தங்கத்தை அடையாளம் காண்பதற்கான நடைமுறைசார் அமர்வு | அடகு அலுவலரகள் | 31 |
| 2023 வரவு செலவுத் திட்ட கலந்துரையாடல் | முகாமையாளர்கள் | 2 | எம்எஸ் எக்செல் | நிறைவேற்று அலுவலர்கள் / தலைமை அலுவலகம் | 11 |
| மனித வள / IR மன்றம் | முகாமையாளர்கள் - மனித வளம் | 3 | வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கான சந்தைப்படுத்தல் திறன்களை விருத்தி செய்தல் | கிளைகளில் உள்ள நிறைவேற்று மற்றும் ஏனைய அலுவலர்கள் | 14 |
| தனிப்பட்ட சேத இழப்பு பற்றிய தொழில்நுட்ப அமர்வு | முகாமையாளர்கள் | 2 | அறவீட்டு நடவடிக்கைகளை சீரமைத்தல் மற்றும் துரிதப்படுத்தல் | அறவீட்டு அலுவலர்கள் | 26 |
| | | | கிளை முகாமையாளர்களுக்கான விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - R1, R2 | கிளை முகாமையாளர்கள் | 12 |
| | | | எம்எஸ் ஒப்பீஸ் மற்றும் எம்எஸ் எக்செல் | நிறைவேற்று அலுவலர்கள | 5 |
| | | | அறவீட்டு நடவடிக்கைகளை சீரமைத்தல் மற்றும் துரிதப்படுத்தல் | அறவீட்டு அலுவலர்கள் | 37 |
| | | | உதவி முகாமையாளர்களுக்கான விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - R1, R2 | உதவி முகாமையாளர்கள் | 10 |
| | | | புதிதாக பணியமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கு பயிற்சி | நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் மேற்பட்டோர் | 8 |
| | | | உதவி முகாமையாளர்களுக்கான விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - R3, R4 | உதவி முகாமையாளர்கள் | 15 |
| | | | கிளை முகாமையாளர்களுக்கான விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - R3, R4, R5, R6 | கிளை முகாமையாளர்கள் | 24 |

## ஊழியர் அர்பணிப்புக்கு வெகுமதியளித்தலும் அங்கீகரித்தலும்

2022 ஆண்டு முதலரைக் காலப்பகுதியில் செயற்பாடற்ற கடன் விகிதத்தை தொழிற்துறை மட்டத்தில் பேணுவதற்கு கடினமாக உழைத்தமையைப் பாராட்டி கௌரவித்து எமது ஹைட்பார்க் மற்றும் பேலியகொட கிளைகளில் உள்ள அலுவலர்களுக்கு பாராட்டுக் கடிதங்களை நாம் வழங்கினோம். ஒவ்வொரு கிளையினதும் முகாமையாளர்கள், தலைவரிடம் இருந்தும், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பொது முகாமையாளரிடமிருந்தும் கோட்டை தலைமை அலுவலகத்தில் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

## சமத்துவமான மற்றும் பாரமட்சமற்ற பணியாற்றும் சூழல்

நாளாந்த அடிப்படையில் நாம் பணியாற்றுகையில், அனைவரையும் சமத்துவமாக நடாத்துதல் என்பது உத்தரவாதக் கூற்றாகும். எமது தலைமை அலுவலகத்திலும், கிளை அலுவலகங்களிலும், எமது ஊழியர்கள் ஏனையோரை மரியாதையாக நடாத்துகின்ற அதேவேளை, ஏதேனும் சமூக மற்றும் தொழில்சார் வாழ்கை நோக்கிலும் வேறுபாடுகள் மற்றும் முரண்படுகின்ற கருத்துக்களுக்கு மத்தியில் ஏதேனும் பாரபட்சமான நடத்தையில் இருந்து தவிர்ந்திருப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இணக்கப்பாடின்மை அல்லது முரண்பாடுகள் தோன்றுகின்ற நிகழ்வில் தொடர்புபட்ட ஊழியர்களுக்கும் அத்துடன் அவற்றுடன் இணைந்தவர்களுக்கும் பகைமையான பணியாற்றுச் சூழலை தோற்றுவிக்கும் நிலைமைக்கு இடமளிக்காது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உறுதியான ஆயினும் நியாயமான தலையீட்டை நாம் மேற்கொள்கின்றோம்.

## வேலை வாழ்க்கைச் சமநிலை

எமது ஊழியர்கள் தமது கடமைகளையும், பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு போதுமான நேரத்தை அர்ப்பணித்தும் அவர்களது குடும்பங்களுடன் நேரத்தை நன்கு செலவிட்டும், நன்கு சமநிலையான வாழ்க்கை முறைக்கான பாராட்டினை பெற்றவர்களாகும். சமநிலையான தனிப்பட்ட தொழில்சார் வாழ்க்கையானது சிறந்த தேக, உள ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும் என்றும், இது இரண்டு நோக்குகளிலும் இருந்து தோன்றுகின்ற மன அழுத்த மட்டங்களையும், தேவைகளையும் முகாகை செய்வதற்கு எமது ஊழியர்களை இயலச்செய்கின்றது என நாம் புரிந்து கொள்கின்றோம்.

2021 இல் ஊழியர்கள் அவர்களது தனிப்பட்ட மற்றும் பணி - வாழ்க்கைக் கடப்பாடுகளின் போக்கினைச் சீர்செய்வதற்கு அவர்களுக்கு உதவுவதற்கு நெகிழ்ச்சிமிக்க பணி அட்டவணையை அறிமுகப்படுத்தினோம். நெகிழ்ச்சிமிக்க பணி நேரங்கள், அவர்களது காலம் மற்றும் வேலைப்பழு அட்டவணைகளை நன்கு கட்டுப்படுத்துவதற்கு அவர்களை இயலச்செய்வது மாத்திரமன்றி விசேடமாக தனிப்பட்ட கடமைப் பொறுப்புகள் மிகவும் வேண்டத்தக்கதாக வருகின்ற வேளையில் நெகிழ்ச்சியற்ற வழமையான பணியை இனிமேலும் பின்பற்றத் தேவையில்லை என அறிவதிலிருந்து வருகின்ற திருப்தி உணர்வைத் தோற்றுவிக்கின்றது.

நெகிழ்ச்சிமிக்க நேர ஒழுங்கேற்பாடுகள்: அதிகம் சமநிலைப்படுத்தப்பட்ட பணி - வாழ்க்கை அனுபவத்திற்கு ஆதரவளித்து நாம் 2021 இல் நெகிழ்வுமிக்க பணி ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தினோம். ஏற்பாட்டின் பாகமாக அலுவலக நேரங்கள் 8 மணித்தியாலய தொகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் மாறுபடுகின்ற காலப்பகுதியில் தொடங்கி முடிவடைகின்றது.

வேலைச் சுழற்சி : ஊழியர்களைப் பயன்படுத்த முடியாமை மீது கவனம் செலுத்தி பணிச் சுழற்சிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. நாம் தற்காலிகமாக ஊழியர்கள், அவர்கள் குறித்தொதுக்கப்பட்ட விடயம் தவிரந்த பதவிகளுக்கு அவர்களை தற்காலிகமாக நியமித்துள்ளோம். பணிச் சுழற்சிகள் மூலம் ஊழியர்கள் அவர்களது நிபுணத்துவத்திற்கும், அனுபவத்திற்கும் வெளியில் வகிபாகங்களை ஆற்றுவதற்கான பணித் திறமைகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

## ஊழியர் திருப்தி

2022 இல் டிஜிடல் வடிவத்திலான ஊழியர் திருப்தி கணக்கெடுப்பு அனைத்து திருப்தி மட்டங்களினதும் பெறுபேறாக மேற்கொள்ளப்பட்டது. நாம் பின்பற்றுகின்ற ஒட்டுமொத்த ஆற்றல் முகாமைத்து அணுகுமுறைகளில் செயல்திறன்வாய்ந்த வகையில் இது பிரதிபலிக்கின்றது என நாம் நம்புகின்றோம்.

## வங்கியின் மனித வள முகாமைத்துவக் கொள்கைகளைக் கடைப்பிடித்தல்

மனிதவள முகாமைத்துவத்தின் முழுமையான நோக்கெல்லையினையும் உட்படுத்துகின்ற முறையாக தாபிக்கப்பட்ட மனித வள முகாமைத்துவக் கொள்கைகளை நாம் கடைப்பிடிக்கின்றோம். எமது உபாய ஒருமுகப்படுத்தல் மற்றும் ஆட்சேர்ப்பு தேவைகள் என்பவற்றுடன் அவை அணிசேர்ந்துள்ளன மற்றும் நிறைவழிக்கின்றன, அதேபோன்று நாம் பணிக்கமர்த்துவதற்கு திட்டமிடுகின்ற மனித மூலதன முகாமைத்துவ உபாயங்களுடன் இசைந்து காணப்படுகின்றன என்பதனை உறுதிசெய்வதற்கு எமது கொள்கைகள் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் இற்றைப்படுத்தப்படுகின்றன.

தற்போது செயற்பாட்டில் உள்ள கொள்கைகள் பின்வரும் விடையங்களை உள்ளடக்குகின்றன.

| | | |
|---|---|---|
| பயிற்சி மற்றும் அபிவிருத்தி | ஆட்சேர்ப்பு | குறைகளைக் கையாளுதல் |
| இடமாற்றங்கள் | மரபுரிமை | ஊதியம் |

2022 ஆண்டு காலப்பகுதியில் வேண்டப்பட்ட திருத்தங்களுடன் கொள்கைகளை நாம் மீளாய்வு செய்து அதற்கேற்றவாறு இற்றைப்படுத்தியுள்ளோம்.

வங்கியின் மனிதவள முகாமைத்துவக் கொள்கைகளின் செயன்முறைகளையும், நடைமுறைகளையும் கடைப்பிடிப்பதன் மூலம், வங்கியின் முகாமைத்துவமானது, மனித வள முகாமைத்துவம் தொடர்புபட்ட தொழிற்பாடுகளில் முறையான மற்றும் உரிய செயன்முறையைப் பின்பற்றுகின்றது என்பதற்கான உத்தரவாதத்தினை ஊழியர்கள் பெற்றுக்கொள்கின்றனர். முறையாக பின்பற்றப்படுகின்ற கொள்கைகளைக் கொண்டிருப்பதன் வாயிலாக, மாறுபாடுகள் நிகழ்வதற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவும் அரிதுமாகக் காணப்படுகின்றன. தொழில்சார் பண்பு, முகாமைத்துவத்திற்கும், ஊழியர்களுக்கும் இடையில் முரண்பாடுகள், அத்துடன், எதிர்மறையான கரிசனைகளைக் குறைப்பதற்கான தொனியொன்றினை கொள்கைகள் நிர்ணயிப்பதற்கு இது வழிவகுக்கின்றது.

## ஊழியர்களுடனான ஈடுபாடு

## ஊழியர் தொடர்பூட்டல்

எமது ஊழியர்களுடன் செயற்திறன் வாய்ந்த விதத்தில் நாம் தொடர்பாடலை மேற்கொண்டு வருகின்றோம் என்பதை உறுதி செய்வதற்கு திறந்த, இருவழித் தொடர்பாலை வசதிப்படுத்துகின்ற பல வழிமுறைகளில் இருந்து நாம் அநுகூலமடைகின்றோம். இவ்வழிமுறைகளைப் பயன்படுத்துவதன் ஊடாக, வங்கியின் பல்வேறு நோக்குகள் பற்றியும் ஊழியர்கள் நன்கு அறிந்து கொள்வதற்கு நாம் முயற்சிப்பதுடன் அதேவேளை, எமது உபாயம் மற்றும் தொழிற்பாட்டு நாடுதல்கள் மீது நேரடியான தாக்கத்தைக் கொண்டுள்ள தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் பற்றி அவர்களது பின்னூட்டல்கள் மற்றும் கூற்றுகளை, ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்கின்றோம்.

ஊழியர் தொடர்பாடலானது, டிஜிடல் வழிகளில் அனேகமாக இடம்பெறுகின்றன. ஆயினும், துயர் கையாளுதல், தனிப்பட்ட மற்றும் தொழில்சார் கருமங்களைக் கையாள்வதில் கரிசனைகளைப் பயந்துகொள்ளுதல் போன்ற தனிப்பட்ட விடயங்களுக்காக நேரடியாக ஒருவருக்கொருவர் இடைத்தொடர்புகள் பற்றி நாம் ஊழியர்களை ஊக்குவிக்கின்றோம்.

| வங்கி விடயங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு பற்றிய தொடர்பு | பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் | தனிப்பட்ட மற்றும் தொழில்முறை விடயங்கள் |
|---|---|---|
| • இணையம்<br>• மின்னஞ்சல்கள்<br>• வங்கி இணையதளம்<br>• சுற்றறிக்கைகள் மற்றும் அறிவிப்புகள்<br>• சந்தர்ப்பங்களில் முறையான கடிதங்கள்<br>• பணியாளர் சந்திப்புகள்<br>• காலாண்டு செய்திமடல்கள் | • இணையம்<br>• பயிற்சி மற்றும் கூட்டங்களுக்கான ணுழழஅ தளம்<br>• நபர் பயிற்சி<br>• நேர்காணல்கள்<br>• மின்னஞ்சல்கள்<br>• முறையான தனிப்பட்ட கடிதங்கள் | • குறைகளைக் கையாளும் நடைமுறைகள்<br>• தகவல் தெரிவித்தல் கொள்கை<br>• நிர்வாகத்துடன் நேரில் சந்திப்பு |

## துயர் கையாளுதலும் ஒழுக்காற்று நடவடிக்கையும்

ஊழியர்களின் துயர்களைத் தீர்த்தலானது, ஊழியர் திருப்தியினையும், பணியிடத்தில் மன நிம்மதியையும் உறுதி செய்கின்றது. ஆகையினால், துயரங்களை வெளிப்படையான விதத்தில் விரைவாகவும், நியாயமாகவும் தீர்ப்பதற்கு, எமது துயர் கையாள்கின்ற கொள்கைகளுக்கு இசைவாக நாம் சரியான வழிமுறைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்பதை உறுதி செய்கின்றோம். மேலும், ஒழுக்காற்று மீறல்களைத் தீர்ப்பதில் நாம் ஒழுக்காற்றுக் கோவையினைப் பின்பற்றுகின்றோம். பூர்வாங்க விசாரணையொன்றின் பின்னர், தீர்மானமொன்றுக்காக அத்துடன், அவசியமான நடவடிக்கைக்காக ஒழுக்காற்றுக் குழுவிற்கு சமர்ப்பணம் ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது.

## தகவல் தெரிவித்தல் கொள்கை

2017 இல் வங்கி தகவல் தெரிவித்தல் மீதான கொள்கையினை ஏற்றுக்கொண்டது. முறையான ஆளுகைத் தரநியமங்களில் இருந்து விலகியுள்ள, வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களில் நடத்தை மற்றும் ஒழுக்க நெறிசார் நடத்தையில் இருந்து விலகுகின்ற ஆட்களை வெளிப்படுத்துவதற்கான ஊழியர்களின் உரிமையை இக்கொள்கை உறுதிப்படுத்துகின்றது.

ஏதேனும் முறையற்ற நடத்தை பற்றிய தகவல்களை ஏற்றுக்கொள்வதற்கு, பொறுப்பான அலுவலராக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதியியல் அறிக்கைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்களில் முறையற்ற பிரச்சினைகளை இக்கொள்கை தீர்க்கின்றது. செயன்முறைகளைக் கையாள்வதற்கு பொறுப்பான அலுவலர்கள் - முறையற்ற நடத்தை மற்றும் நிதியியல் முறைபீடுகள் பற்றிய பக்கச்சார்பற்ற அத்துடன், சுயாதீனமான விசாரணை நடாத்துவதற்கு முறையான படிமுறைகள் செயற்பாட்டில் உள்ளன என்பதனை உறுதி செய்கின்றது.

## முகாமைத்துவம் - ஊழியர் ஈடுபாடு

எமது முகாமைத்துவமானது, பின்னூட்டல், வழிகாட்டல் மற்றும் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதிலும், வழங்குவதிலும் ஊழிர்களுடன் வெளிப்படையான தொடர்பாடலையும், ஈடுபாட்டையும் பேணுகின்றது.

| தலைவர், பிரத நிறைவேற்று அலுவலர் / பொது முகாமையாளர் உடனான உயர் முகாமைத்துவம் | அலுவலர்களுடனான நிறுவன முகாமைத்துவம் | முகாமைத்துவமும் பிராந்திய முகாமையாளர்களும் | உயர் முகாமைத்துவமும் முகாமைத்துவம் |
|---|---|---|---|
| வாராந்தம் | மாதத்திற்கு இரு தடவை | காலாண்டு | காலாண்டு |

## மகப்பேற்று விடுமுறை

புதிதாக குழந்தை பிறக்கின்ற சந்தர்ப்பத்தில், ஊழியர்களுக்கு மகப்பேற்று விடுமுறைக்கான உரிமையினை நாம் வழங்குகின்றோம். இத்தகைய தனிப்பட்ட மைற்கற்கள் தொழில்சார் கடமைப் பொறுப்புகள் மீது முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை நாம் புரிந்து கொண்டு எமது ஊழியர்கள் பணியில் இருந்து விலகியிருந்து, போதுமான நேரத்தை பெற்றுக் கொள்கின்றனர் என்பதனை உறுதி செய்கின்றோம். 84 நாட்கள் கொடுப்பனவுடன் கூடிய மகப்பேற்று விடுமுறையினை எமது பெண் ஊழியர்கள் வேண்டுகின்ற அதேவேளை, புதிதாக பிறந்த குழந்தையினை வரவேற்கின்ற ஆண் ஊழியர்கள் அவர்களது புதிய பிறப்புடன் காலத்தைச் செலவிடுவதற்கு மூன்று நாட்கள் கொடுப்பனவுடன் கூடிய விடுமுறையினை பெற்றுக்கொள்ள முடியும்.

| | 2022 | | 2021 | | 2020 | | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| பெற்றோர் விடுப்பு/ மகப்பேறு விடுப்பு எடுத்த பணியாளர்களின் எண்ணிக்கை | **8** | **17** | 17 | 5 | 12 | | 23 | | 8 | |

## தொழிற்சங்க உறவுகள்

இலங்கையின் வங்கி ஊழியர்கள் தொழிற்சங்கத்தில் எமது ஊழியர்களுடன் இணக்கமான உறவுகளை நாம் தொடர்ந்தும் பேணி வருகின்றோம். எமது பதவியணி அலுவலர்களில் 85மூ மானோர் தொழிற்சங்க உறுப்புரிமையைக் கொண்டுள்ளதுடன், ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் ஒரு முறை மீள் புதுப்பிக்கப்படுகின்ற பல நிறுவன முகாமைத்துவ உறுப்பினர்கள் உள்ளடங்கலாக நிரந்தர, தகுதிகான் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களை அது உள்ளடக்கியுள்ளது.

2022 ஆம் ஆண்டு முழுவதும் நிலவிய வீழ்ச்சியடைகின்ற பொருளாதார மற்றும் இடையூறுகள் நிச்சயமின்மைகளுக்கு மத்தியிலும் கூட கூட்டு உடன்படிக்கையின் நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாக, சம்பளங்கள் மற்றும் ஏனைய நன்மைகளுக்கான எமது கடமைப் பொறுப்புகளை நாம் நிறைவேற்றியுள்ளோம். வங்கி முகாமைத்துவத்திற்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 - 2023 கூட்டு உடன்படிக்கைக்கு அமைவாக இது செய்யப்பட்டது.

# மனித மூலதனம்

தொழிற் சங்கங்களுடனான எமது உறவானது, அவர்கள் பற்றிய எமது எதிர்பார்க்கைகளை தெளிவாகப் புரிந்துகொள்கின்ற அதேவேளை, கூட்டாகக் கையாளப்பட வேண்டியவ வங்கியின் உபாய அபிலாஷைகளையும், தொழிற்பாட்டு சவால்களையும் வெளிப்படையாக தொடர்பூட்டுவதற்கான வாய்ப்பினை எமக்களிப்பதை முகாமை செய்கின்ற முக்கிய கேவையாக விளங்குகின்றது. தொழிற்சங்களுடனான கூட்டங்கள், எமது எதிர்பார்க்கைகள் பற்றி வெளிப்படைத்தன்மையாக இருக்கும் மன்றம் ஒன்றாகக் காணப்படுகின்றது.

| தொழில் வகையின் அடிப்படையில் தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கை | எண்ணிக்கை |
|---|---|
| நிறுவன முகாமைத்துவம் | 5 |
| பிரதம / சிரேஷ்ட முகாமையாளர்கள் | 20 |
| பிராந்திய முகாமையாளர்கள் | 6 |
| நிறைவேற்று அதிகாரிகள் | 274 |
| நிறைவேற்று அல்லாத அதிகாரிகள் | 159 |
| வர்த்தக ஊக்குவிப்பு உதவியாளர்கள் | 13 |
| கனிஷ்ட வர்த்தக ஊக்குவிப்பு உதவியாளர்கள் | 14 |
| வர்த்தக ஊக்குவிப்பு பயிலுநர்கள் | - |
| உள்ளங்கை கணனி உதவியாளர்கள் | - |

கூட்டு உடன்படிக்கையில் உள்ளடக்கப்படும் முக்கிய நன்மைகள்:

- சம்பளங்கள்
- இடரற்றக் கொடுப்பனவு
- கஷ்டப் பிரதேச கொடுப்பனவு
- இடர்கொடுப்பனவு
- செலவிட்ட பணத்திற்கான சலுகை
- திறப்பு கையாளுதல் கொடுப்பனவு
- படி மற்றும் இணைந்தவை, பிரயாணக் கொடுப்பனவு
- பிராந்திய மற்றும் கிளை முகாமையாளர்களின் அத்துடன் இரண்டாம் தர அலுவலர்களின் கொடுப்பனவு
- மருத்துவ நன்மைகள்
- அலுவலர் வீடமைப்பு மற்றும் கடன் வசதி
- வாகனக் கொள்வனவு கடன்கள்
- இடர் கடன்கள்

## உயர்வான தக்கவைத்தலும் குறைவான புரள்வும்

எச்டிஎப்சி வங்கியில் பொறுப்புக்கூறல், விசுவாசம் மற்றும் அர்பணிப்பு என்பவற்றைக் கொண்ட கலாசாரமொன்றினை எமது அணி அனுபவிக்கின்றது. 4.98% கொண்ட நேரொத்த புரள்வுடன் 2022 இல் நாம் 98.98% வீதத்தை கொண்டிருந்தமை எமது உயர்வான தக்கவைத்தல் வீதத்தைப் பிரதிபலிக்கின்றது.

| | 2022 | | 2021 | | 2020 | | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சேவைக் காலம் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ஐந்து வருடங்களுக்குக் குறைந்த | **39** | **10** | 60 | 16 | 123 | 43 | 133 | 49 | 139 | 50 |
| 5 முதல் 10 வருடங்கள் | **123** | **43** | 163 | 63 | 138 | 55 | 176 | 67 | 161 | 68 |
| 11 முதல் 15 வருடங்கள் | **124** | **65** | 85 | 38 | 66 | 23 | 22 | 10 | 16 | 9 |
| 16 முதல் 20 வருடங்கள் | **19** | **12** | 31 | 22 | 28 | 22 | 33 | 23 | 35 | 23 |
| 21 முதல் 25 வருடங்கள் | **25** | **18** | 19 | 24 | 21 | 27 | 21 | 31 | 31 | 49 |
| 26 முதல் 30 வருடங்கள் | **31** | **62** | 32 | 57 | 27 | 58 | 21 | 60 | 15 | 43 |
| 30 வருடங்களுக்கு மேல் | **4** | **13** | | 4 | | 2 | | 1 | | 1 |

2022 இன் இறுதியளவில் ஊழியர்களில் 32% மானோர் வங்கியில் 11 மற்றும் 15 ஆண்டுகளுக்குள் பணியாற்றி இருந்துள்ளதுடன், 28% மானோர் பணியில் 5 - 10 ஆண்டுகளுக்கு இடையில் காணப்பட்டனர். 30 ஆண்டுகள் சேவையினைக் கொண்டவர்களில் 76.5% மானோர் பெண்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

2022 இல் அறிக்கையிடப்பட்ட தொழில் முடிவுறுத்தல் எதுவும் இல்லாமையுடன், ஓய்வு பெறுதல் மற்றும் பதவி விலகல்கள் போன்ற வழமையான நிகழ்வுகள், சிறிய அளவிலான புரள்வினை ஏற்படுத்தின.

| | 2022 | | 2021 | | 2020 | | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ஊழியர்களின் ஓய்வு | **3** | **1** | 3 | 6 | 2 | 7 | 7 | 1 | 3 | 3 |

## தக்கவைப்பு விகிதம்

| | 2022 | | 2021 | | 2020 | | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| தக்கவைப்பு விகிதம் | **94** | **97** | 97 | 98 | 97 | 99 | 94 | 98 | 95 | 98 |

## புரள்வு மற்றும் பகுப்பாய்வு

COVID-19 தொற்றுக்கு எதிரான தடுப்பு மருந்தும் மற்றும் இடையூறுக்குள்ளாகாத தொழிற்பாடுகள் என்பன நோய்த் தொற்றுக்கு முன்னரைப் போன்று பணிக்கு ஊழியர்கள் அறிக்கையிடுவதை விளைவித்ததனால், மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டில் சமூகளிக்காதோர் 2021 ஆம் ஆண்டை விடக் குறைவாகவே காணப்பட்டது.

| | 2022 | | 2021 | | 2020 | | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| மொத்தம் | **23** | **7** | 13 | 4 | 13 | 3 | 22 | 5 | 19 | 5 |
| 30க்குக் கீழ் | **15** | **3** | 10 | 2 | 10 | 1 | 21 | 4 | 18 | 3 |
| 30-50 | **7** | **2** | 3 | 2 | 2 | 2 | 1 | 1 | | 1 |
| 50க்கு மேல் | **1** | **2** | | | 1 | | | | 1 | 1 |
| % | **3.13** | **6.07** | 1.76 | 3.29 | 1.28 | 3.19 | 2.07 | 5.51 | 2.06 | 4.79 |

## நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான பங்களிப்பு




வாழும் நியமத்தையும் வாழ்க்கை தரத்தையும் உயர்த்துவதற்கு நிதியியல் தடைகளை இல்லாதொழிக்கின்றது.





சரியான மருத்துவ சிகிச்சையினை பெற்றுக்கொள்வதற்கு மருத்துவ ஊதியம் ஊழியர்களை ஊக்குவிக்கின்றது.




நாம் எமது அனைத்து அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்கின்றோம்.




ஆண்களும், பெண்களும் தொழில் மற்றும் நிதியியல் வளர்ச்சிக்கான சமமான வாய்ப்புகளை பெற்றுக்கொள்கின்றனர்.




ஊழியர்கள் நேர்த்தியான பணிகளையும், நிதியியல் வளர்ச்சியினையும் அனுபவிக்கின்றனர்.

# மனித மூலதனம்

எமது அலுவலகங்களுக்குள் பாராபட்சமான நடத்தை காணப்படவில்லை என்பதையும் நாம் உறுதி செய்கின்றோம்.

## மூலதன மாற்றங்கள்

ஊழியர் பயிற்சியும், விருத்தியும் வங்கியின் குறிப்பான அறிவுத் தளத்தினை உயர்த்தி, புதிய புலமைச் சொத்துக்களை இயலச்செய்கின்றது.

தகைமையுடைய தொழிற்படை பங்குதாரர்களுக்கான பெறுமதியாக இருப்பதற்கு ஊழியர்களை இயலச்செய்கின்றது.

உற்பத்தித் திறன் மிக்க, அர்பணிப்பு மிக்க மற்றும் திருப்பதியடைந்த தொழிற்படை செயலாற்றமற்ற கடன்களைக் குறைப்பதற்கும், வட்டி வருமானத்தை அதிகரிப்பதற்கும், வழிமுறைகளை எடுத்தல் போன்ற வங்கியின் நிதியியல் குறிக்கோள்களுக்குப் பங்களிக்கின்ற அதேவேளை, வைப்புத் திரட்டல்களை ஊக்குவிக்கின்றது

விட்டுக்கொடுப்பு

ஊழியர் தொடர்புபட்ட செலவுகள் நிதியியல் மூலதனத்துடன் கூடிய விட்டுக்கொடுப்புகளை வேண்டுகின்றது.

## மனித மூலதனத்தின் எதிர்காலம்

வங்கியின் குறிக்கோளுடன் அணிசேர்ந்துள்ள அவர்களது வளர்ச்சியினையும், தேவைகளையும் மனதிற் பேணி, ஒரே மாதிரியான அணுகுமுறைகள் ஊடாக மனித மூலதனத்தை நாம் தொடர்ந்தும் மேம்படுத்துவோம்.

# மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்:

# உள்ளாந்த ஆற்றலின் வரையறைகளை விரிவுபடுத்தல்



## புலமைச் சொத்து மூலதனம்

| உள்ளீடுகள் | பெறுமதி மேம்படுத்தும் அணுகுமுறை | விளைவு |
|---|---|---|
| • நிறுவனத்தின் குறிப்பான அறிவு<br>• டிஜிட்டல் தீர்வுகள்<br>• வர்த்தக நாம மூலதனம்<br>• எச்டீஎப்சி கலாசாரம் | • பணியாளர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையிலான பயிற்சித் திட்டங்கள்<br>• உள்ளடக்கப்பட்ட கடன் திட்டங்களை வழங்குதல்<br>• டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துதல்<br>• ர்னுகுஊ வர்த்தக நாமத்தை உருவாக்குதல் | • வங்கிகளில் உள்ள ஊழியர்களுக்கான பல்வேறு தொழில்நுட்ப பயிற்சி திட்டங்கள்<br>• புதிய வாடிக்கையாளர்களுக்கு நிதி மூலதனத்திற்கு அமைய குறிப்பிட்ட திருப்பிச் செலுத்தும் திட்டங்களுடன் ஊ.சே.நி மற்றும் வீட்டுக் கடன்கள் |

புலமைச் சொத்து மூலதனமானது, வங்கியை அதன் பெறுமதி உருவாக்கச் செயன்முறையில் இயலச்செய்கின்ற அனேகமாக புலப்படாத பிரதானமாக அருவச்சொத்துகளை கொண்டதாகும்.


### எமது புலமைச் சொத்து மூலதனம்

நிறுவனத்தின் குறிப்பான அறிவு, நிதியியல் வசதிக்குட்படுத்துகின்ற நிதியியல் உற்பத்திகள், தனித்துவமான டிஜிட்டல் தீர்வுகள், தொழில்நுட்ப முறைமைகள், எச்டீஎப்சி வர்த்தக நாமம், வங்கியின் கலாசாரம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த பெறுமதியாக புலமைச் சொத்து மூலதனத்தை நாம் கருதுகின்றோம். எமது ஆளுகையினையும், இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புகளையும் எமது தொழிற்பாட்டுப் பின்னணிக்கு தனித்துவமானதாக நாம் கருதுகின்றோம்.

### ஏன் இது எமக்கு முக்கியத்துவம் வாய்ந்தது

பெறுமதி உருவாக்கத்திற்கான புலமைச் சொத்து மூலதனத்தின் முக்கியத்துவமானது, எச்டீஎப்சி பெறுமதி பணிக்கான இவ் அருவச் சொத்துக்களின் தனித்துவமான கூட்டு மூலம் கோடிட்டுக் காட்டப்படுகின்றது. வீடமைப்பு மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் அத்துடன் எமது அனைவரையும் உள்ளடக்குகின்ற உற்பத்தித் தளம் பற்றிய எமது அறிவிலிருந்து கிடைக்கும் அனைத்தும் காலங்காலமாக பெறுமதி உருவாக்கத்திற்குத் துணையளிக்கின்றன. 40 ஆண்டுகளாக, அதிக போட்டிமிக்க துறை ஒன்றில் உறுதியாக இருப்பதற்கான எமது இயலுமை எச்டீஎப்சி விழுமியங்களினால் இயக்கப்படும் தனித்துவமான உற்பத்திகள் மற்றும் சேவைகள் அத்துடன், தொழிற்படைக் கலாசாரம் என்பவற்றை தற்போது எடுத்துக்காட்டுகின்ற வர்த்தக நாமத்தில் உட்பொதிந்துள்ளது. நிதியியல் ரீதியாக கவனிக்கப்படாதவர்கள் உள்ளடங்கலாக, வாடிக்கையாளர்களுக்கும், சமூகத்திற்கும் பெறுமதியினை உருவாக்குவதற்கு இவ் அனைத்து நோக்குகளும் எம்மை இயலச் செய்கின்றன.

## நிறுவனசார் குறிப்பான அறிவினை மேம்படுத்தலும் தக்கவைத்தலும்




வங்கியின் நிறுவனசார் அறிவானது, அதன் கூட்டான உற்பத்திகளினதும், வங்கிக்கு குறிப்பான சேவைகளினதும், தனித்துவமான வைப்பகமாகும். குறிப்பான ஊழியர் அறிவினைப் பேணி வளர்த்துள்ள எச்டிஎப்சி வங்கிக்கு, குறிப்பான உற்பத்திகளின், சேவைகளின், செயன்முறைகளின் அமைப்பு முறையொன்றினை நாம் கொண்டுள்ளோம். முக்கியமாக, வீடமைப்பு நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதிய கடன் என்பவற்றிலான எமது அணி, எமக்கு மிகப் பொருத்தமான சேவை நாடிகளுக்காக நாம் கட்டமைக்கின்ற நிதியியல் தீர்வுகளுக்கான தனித்துவமான அறிவுடனும், அனுபவத்துடனும் எங்கள் வாடிக்கையாளருக்கு வசதியளித்துள்ளது.

மேலும், உள்நாட்டு வீடமைப்புச் சந்தை, காணியின் தன்மை மற்றும் ஆரம்பப் பெறுமதி, அத்துடன், வகைப்படுத்தல் பற்றிய எமது அறிவும், இலங்கையின் சிறப்பியல்பு வாய்ந்த உரிமம் பெற்ற வங்கிகளினுள் அனுபவத்தை எமக்கு வழங்குகின்றது. இதன் விளைவாக, தமது வீடமைப்பு அபிலாஷைகளை நிறைவு செய்வதற்கு அல்லது அவர்களது தொலைநோக்கினை நோக்கி பணியாற்றுவதற்கு, ஆயிரக்கணக்கான இலங்கையர்களுக்கு நாம் உதவியுள்ளோம். எமது அறிவினையும், எமது அனுபவத்தையும் மேலும் தனித்துவமிக்கதாக்குவது யாதெனில், பாரியளவு நிதியியல் பணி வழங்குனர்கள் மூலம், கவனிக்கப்படாத மக்களுக்கு நிதியளித்தலை வழங்குவதாகும். வேறுபடுகின்ற நிதியியல் இயலளவுகளுடனும், பெருமளவில் நிச்சயமற்ற வாழ்வாதாரங்களுடன் கூடிய சரியான சந்தை வகுப்பினருக்குப் பணியாற்றுவது, இலங்கையின் பிரத்தியேகமான வீடமைப்பு நிதி நிறுவனங்களில் ஒன்றாக அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட அறிவுடன் எமக்கு வசதியளித்துள்ளது.

தொழில் மீதான அனுபவம், சந்தைகளினதும், நாம் வழங்குகின்ற உற்பத்திகளினதும், இக் குறிப்பான புரிந்துணர்வுக்கு தொடர்ந்தும், தொடர்ந்தும் சேர்ப்பதனால், பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ஊழியர்களின் அறிவினை செழிப்புறச் செய்வதற்கு நாம் பணியாற்றுகின்றோம். எமது பயிற்சி முயற்சிகள், அண்மைய ஆண்டுகளில் வளர்ச்சி பெற்று, தொழில்நுட்ப மதிநுட்பம் மற்றும் கணனி நிபுணத்துவம் என்பவற்றுடன் எமது ஊழியர்களை வசதிப்படுத்துகின்றன.

## 2022 இல் நாம் எவ்வாறு அறிவினை அதிகரித்தோம்

| 85% | 36 | 29 |
|---|---|---|
| பயிற்சி பெற்ற மொத்தப் பணியாளர்கள் | உள்ளகத் திட்டங்கள் | வெளிப்புறத் திட்டங்கள் |

## குறிப்பான அறிவினையும் பெறுமதி உருவாக்கத்தினையும் இயக்குகின்ற தொழிநுட்பம்

அண்மைய ஆண்டுகளில் நாம் பல தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தீர்வுகளைப் பின்பற்றி, வங்கித் தொழில் சேவைகளை நாம் எவ்வாறு வழங்கலாம் என்பதற்கு வினைத்திறனையும், பெறுமதியினையும் சேர்த்துள்ளோம்.

எமது மைய வங்கித்தொழில் முறைமையானது, கைகளால் ஆன நடவடிக்கைகளில் இருந்து விரைவுத் திறனுக்கு எம்மை இயலச் செய்கின்ற மைய வங்கித்தொழில் செயன்முறைகளை நாம் எவ்வாறு நடாத்துகின்றோம் என்பதற்கு சேர்க்கப்பட்ட பெறுமதியினைக் கொண்டுள்ளன. கடன், கொடுகடன் அனுமதிகள் மற்றும் முகாமைத்துவம், அறவீடுகள் மற்றும் சேகரிப்பு அத்துடன் வைப்புகளைத் திரட்டுதல் போன்ற எமது தொழிற்பாடுகளுக்கு, இம்முறைமைகள் அபரிமிதமான பெறுமதியினைச் சேர்த்துள்ளன. மேலும், அத்தகைய தொழிற்பாடுகளுக்காக தகவல் தொடர்பாடல் முறைமையினைப் பயன்படுத்துவதன் வாயிலாக, எமது ஊழியர்களின் குறிப்பான அறிவு தொடர்ந்தும் மேம்படுகின்றது.

- ஆண்டு காலப்பகுதியில் மைய வங்கித்தொழில் தரவுத் தளத்தை மிகவும் வினைத்திறன் மிக்க ஓராகில் பதிப்பிற்கு நாம் தரமுயத்தினோம்.
- மைய வங்கித்தொழில் முறைமையுடன் தொடர்புடைய முக்கிய சேவையகங்களை நாம் மாற்றீடு செய்துள்ளோம்.

## கடன் முகாமைத்துவமும் உருவாக்கமும்

2019 இல் முன்னோடியாக இயக்கியதன் பின்னர், 2020 இல் நாம் தீர்மானமொன்றினை ஏற்றுக்கொண்டோம். இதன் நடைமுறைப்படுத்தலின் காரணமாக, எமது கடன் முகாமைத்துவ செயன்முறையை தற்போது நாம் மிகவும் சீரமைத்துள்ளதுடன், அதிகாரமளிக்கப்பட்ட தலைமை அலுவலக மற்றும் கிளை அலுவலர்களுக்கு இணைய வழியிலான பெறுவழியுடன் கூடிய வினைத்திறனை நாம் கொண்டுள்ளோம்.

## கடமை தவறுதல் முகாமைத்துவ முறைமைகள்

நான்கு கூறுகளை உருவாக்கியுள்ளோம். 2022 இல் சட்ட ரீதியான கூறு உருவாக்குதல் முடியுறாதுள்ள நிலையில், கடமைதவறுதல் முகாமைத்துவ முறைமைகளின் அறிக்கைக் கூறுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. செயற்பாடற்ற கடன் மட்டங்கள் மற்றும் தவணைக் கொடுப்பனவுகளின் அறவீடு என்பவற்றை இம் முறைமை, தானியக்கப்படுத்தி கண்காணிக்கின்றது. தங்கக் கடன் உள்ளடங்கலாக, குத்தகை மற்றும் அடிப்படைக் கடன்களை ஈடுபடுகின்ற அறவீட்டுத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் இம்முறைமையினால் கையாளப்பட்டு, தவணை தவறுகின்ற கொடுப்பனவுகளைக் கண்டுபிடிப்பதற்கும், செயற்பாடற்ற கடன்களை முகாமை செய்வதற்கும் (NPL) அது வசதியினை ஏற்படுத்துகின்றது.

## டிஜிடல் தீர்வுகள் ஊடாக சேவை மேம்படுத்தல்கள்

எச்டிஎப்சி வங்கியில், டிஜிடல் தீர்வுகளை நடைமுறைப்படுத்துகின்ற எமது வேகமானது, கடந்த காலங்களில், விசேடமாக வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடுகள் மற்றும் எமது மூலதனத் தளத்தைப் பாதுகாப்பதற்கான தேவை என்பன கட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுறையினைப் பின்பற்றுவதற்கு எம்மை நிர்பந்தித்தமையினால், பல சவால்களை எதிர்கொண்டது. எவ்வாறாயினும், டிஜிடல் மற்றும் இலத்திரனியல் வங்கிச் சேவைகளைப் பின்பற்றுவதன் பல்வேறு நன்மைகளின் அடிப்படையில், விரைவான மற்றும் மிகவும் வினைத்திறன் மிக்க விதத்தில் சேவைகளை வழங்குவதற்கு, எமது அணியினை இயலச்செய்கின்ற பல தீர்வுகளை நாம் நடைமுறைப்படுத்தியுள்ளோம். இத்தீர்வுகளைக் கொண்டு, முன்னர் அணுக முடியாதிருந்த வாடிக்கையாளர்களை நாம் அணுகக்கூடியதாக உள்ளதுடன், சிறிதான சென்றடைவுடன் கூடிய வங்கியொன்றாக டிஜிடல் வங்கிச் சூழலுக்குள் நாம் நுழைந்தமை இதனை எமக்குச் சாத்தியமாக்கியுள்ளது.

## உள்ளங்கைக் கணனி மென்பொருள் (வாசல்படி மென்பொருள் வங்கிச்சேவை)

எமது வாடிக்கையாளர்களுக்கு அருகாமையில் சேவையினை எடுத்துச் செல்லும் முயற்சியில் எச்டிஎப்சி உள்ளங்கை கணனி மென்பொருளானது, வழமையான வங்கிச் சேவைக் கொடுக்கல் வாங்கல்களில் கிளைகளுக்கு வருவதில் மட்டுப்பாடுகளுடன் கூடிய வாடிக்கையாளர்களுக்கு வாசற்படி வங்கிச் சேவைக்கு எமது உள்ளங்கைக் கணனி அலுவலருக்கு அது வசதியளிப்பதனால், இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. எமது உள்ளங்கை கணனி மென்பொருளானது, எமது வாசற்படி வங்கிச் சேவை அணியின் குறிப்பான தொழிற்பாடுகளைச் சூழவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்ளங்கை கணனி மென்பொருளானது, எச்டிஎப்சி வங்கியின் குறிப்பான நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி உள்ளக ரீதியாக தேவைக்கேற்றவாறு உருவாக்கப்பட்ட கருவி ஒன்றாகும். தற்போது இத்தனித்துவமிக்க நோக்கத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட செல்லிட சாதனங்களில் 80 இற்கு மேற்பட்ட ஆளணியினர் இச்செயலியினை பயன்படுத்துகின்றனர்.

## எச்டிஎப்சி கிளிக்

தனித்துவமான பெயரைக் கொண்டு வர்த்தக நாமமிடப்பட்ட எச்டிஎப்சி கிளிக் என்பது, எமது டிஜிடல் சேவைகளையும் வசதிகளையும் நாடுகின்ற வாடிக்கையாளர்கள் அனைவருக்குமான உத்தியோகபூர்வமான இலத்திரனியல் வங்கிச்சேவை வாயிலாக 2018 தொடங்கப்பட்ட இவ்வாயில் தற்போது வருடாந்தம் ஆயிரக்கணக்கான கொடுக்கல் வாங்கல்களை செயலாற்றுகின்றது.

## அனைவரையும் வசதிற்குட்படுத்துகின்ற நிதியியல் உற்பத்திகள்

எமது கடன் நிதியியல் சொத்துப்பட்டியல், நாம் சேவையளிக்கின்ற வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பிரதிபலிக்கின்றது. அநேகமாக, தனிப்பட்டவர்களையும் மட்டுப்படுத்தப்பட்ட கொள்வனவு இயலளவுகளுடனும் நிதியியல் ரீதியாகப் பாதிக்கப்படும் வியாபாரங்களாகவும் எமது வாடிக்கையாளர்கள் காணப்படுவதனால், அவர்களின் நிதியியல் இயலளவுகளுக்கு இடமளிக்கும் விதத்தில் எமது கடன் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தனித்துவமிக்க சேவைநாடிகளுக்கான தனித்துவமிக்க தீர்வுகள்

ஊழியர் சேமலாப நிதியம் பிணையளிக்கப்பட்ட எமது கடன் திட்டங்கள் இலங்கையின் முறைமை சார்ந்த தொழிற்படைக்கான வசதிக்குட்படுத்துகின்ற தீர்வொன்றாகும். அனைத்து சமூகப் பின்னணியில் இருந்து வரும் வாடிக்கையாளர்களுக்காக, ஊழியர் சேமலாப நிதியத்தை அடிப்படையாகக் கொண்ட கடன்களைக் கையாள்வதில் புலமை, இயலளவு, ஊழியர் அனுபவம் என்பவற்றுடன் கூடிய நிதியியல் இடையீட்டாளர்கள் சிலரில் நாம் ஒருவராக விளங்குகின்றோம்.

"அரும்பு" என்பது, எமது தமிழ் பேசும் சமூகத்திற்கான பிரத்தியேகமான அத்துடன், வழமையான முதலீட்டு மற்றும் சேமிப்பு உற்பத்திகளுக்கு மேலதிகமான தனித்துவமிக்க பிரத்தியேகமான தீர்வினை அவர்களுக்கு வழங்குகின்றது. சமூகத்திற்கு பிரத்தியேகமாக அறிமுகப்படுத்தப்பட்ட அத்தகைய உற்பத்திகளில் முதலாவதாக இனங்காணப்பட்டுள்ளது.

## மேம்படுத்தப்பட்ட வர்த்தக நாமப்பெறுமதி

வர்தக நாமத்தைக் கட்டியெழுப்புவது என்பது, வர்த்தக நாமம் பற்றிய எண்ணப்பாங்கினை வலிமைப்படுத்தி, வங்கியின் இயலளவுகள் பற்றி பங்குதாரர்களின் மனப்பான்மையைத் தூண்டுகின்றது என நாம் நம்புகின்றோம். வலிமையான வர்த்தக நாமமானது, வங்கியின் உறுதிப்பாட்டை மீள வலிமைப்படுத்தி, பங்குதாரர்களுக்கான பெறுதியை உருவாக்குவதில் எமது இயலளவினை எடுத்துக் காட்டுகின்றது.

நாம் உருவானதில் இருந்து, இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமாக அறியப்பட்டோம். தற்போது, இலங்கையின் எச்டிஎப்சி வங்கியாக அழைக்கப்பட்டு, குறைந்த - நடுத்தர வருமான வகுப்பினர் மத்தியில் வளர்ச்சியடைகின்ற வங்கி நிதிச் சொத்துப் பட்டியலுடன் அவ்வகுப்பு நிதிச் சந்தையினுள் தொடர்ந்தும் நிதியியல் பங்காளராக அங்கீகரிக்கப்பட்டுள்ளோம்.

2022 இல் ப்ராண்ட்ன் பைனான்ஸ் எச்டிஎப்சி வங்கியினை 74 ஆவது நிலைக்கு தரப்படுத்தியது, இது 2021 இல் இருந்து இரு நிலைகள் கூடியதாகும். எமது வர்த்தக நாமம், தற்போது ரூ.763 மில்லியாக பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2021 இல் ரூ.758 மில்லியனில் இருந்து அதிகரிப்பொன்றாகும். இவ்வர்த்தக நாமப் பெறுமதியுடனான வலிமையினை பயன்படுத்தி, எமது சந்தை நிலையினை, விசேடமாக வீடமைப்பு நிதித் துறையினுள் வளர்த்துக் கொள்வதற்கான இயலுமையை நாம் காண்கின்றோம். எமது பெயரின் வலிமையினைப் பயன்படுத்தும் வாயிலாக, வீடமைப்பு நிதியினைத் தேடுகின்ற வாடிக்கையாளர்களுக்கு நிலைபெறத்தக்க நிதியியல் தீர்வுகளை நாம் தொடர்ந்தும் வழங்கி, எமது அடையாளத்திற்கு உண்மையாக நாம் திகழ்கின்றோம்.

## வர்த்தக நாமத்தைக் கட்டியெழுப்புதல்

| டிஜிடல் ரீதியான வர்த்த நாமம் |
|---|
| 02 TAGS விருதுகள் வெளிப்புற இடைப்பலகம் - தெஹிவளை, வெள்ளவத்தை |
| அரசாங்க நிறுவனங்களில் 27 டிஜிடல் பலகங்கள் |
| அனைத்து வைத்தியலைகளிலும் 35 டிஜிடல் பலகங்கள் |
| உடற்பயிற்சி நிலையங்களில் 20 பலகங்கள் |

ஆண்டு காலப்பகுதியில் இலங்கிடப்படுத்தப்பட்ட விளப்பரப்படுத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புப் பிரசாரங்களை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடாத்துவதன் வாயிலாக, எமது வர்த்தக நாமப் பெறுமதியினை அதிகரிப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

## வுயுபுளு விருதுகள்

இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் எற்பாடு செய்யப்பட்ட வுயுபுளு விருதுகள் 2022 நிகழ்வில், அரசாங்கத்திற்குரித்தான வங்கி என்ற வகையில், இணங்குவித்தல் விருது எச்டிஎப்சி வங்கிக்கு வழங்கப்பட்டது.

இவ்விருது வழங்கும் வைபவமானது, அனைத்துத் துறைகளினதும் நிறுவனங்கள் மூலம் பொறுப்புமிக்க, ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடலை அங்கீகரிப்பதுடன், எமது முயற்சிகளுக்கான பாராட்டுதலாக இவ்விருதைப் பெற்றுக்கொள்வதில் நாம் மிகவும் கௌரவமடைந்துள்ளோம்.

இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் 2022 TAGS விருதுகளை எற்பாடு செய்திருந்தது. பன்முக தொழிற்துறைகளுக்கு மத்தியில் நாட்டில் மிகவும் கௌரவமிக்க மற்றும் உறுதியான நிறுவன நிகழ்வுகளிலொன்றாக இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தலைசிறந்த மற்றும் தொடர்ந்து 57 வருடங்களுக்கு மேல் முன்னிலை வகிக்கின்ற இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகம் 2020 வுயுபுளு விருதுகளில், மிகவும் கௌரவமிக்க வருடாந்த ஆண்டறிக்கை விருதுகளை மீள எண்ணக்கருவாக்கி, மீள வர்த்தக நாமம் இடுவதன் வாயிலாக வெளிப்படைத்தன்மை, பொறுப்புகூறல், ஆளுகை, நிலைபெறுதன்மை என்பவற்றை அதன் தேடலில் பெற்றுக்கொண்டு, நாட்டிலுள்ள நிறுவன அறிக்கையிடலில் புதிய அத்தியாயம் ஒன்றினைத் தொடக்கி வைக்கின்றது.




## எச்டிஎப்சி கலாசாரம் - தேசத்திற்குப் பணியாற்றுவதற்கான நேர்த்தி

எச்டிஎப்சி கலாசாரமானது, பல ஆண்டுகளாக, விசேடமாக கடந்த 10 ஆண்டுகளாக எம்முடன் இணைந்துள்ள 403 ஊழியர்களுடன் கூடிய எமது மிகவும் சிரேஷ்ட ஆளணியின் அனுபவத்தையும், அறிவையும் எடுத்துக்காட்டுகின்றது. வங்கியுடன் இணைந்து கொண்டதிலிருந்து, அவர்களது நடத்தை, வலுவான ஆளுகை மற்றும் மக்களுக்கும், அரசாங்கத்துக்கும் பொறுப்புகூறல் என்பன மூலம் தூண்டப்படும் கலாசாரத்தில் பொதிந்துள்ளது.

நிதியியல் இடையீட்டாளர் என்ற வகையில், வங்கியின் கீர்த்தியை உறுதி செய்கின்ற, அத்துடன், பங்குதாரர்களின் நலனைப் பாதுக்காக்கின்ற பொறுப்புமிக்க நடத்தையாக பிரிவுகள் முழுவதும் இப்பண்புகள் மனதில் பதிக்கப்பட்டுள்ளன. எமது ஊழியர்கள் மத்தியில் இவ்விழுமியங்களைக் கொண்டிருப்பது 40 ஆண்டுகளாக எமது வர்த்தக நாமத்தை நிலைநிறுத்துவதற்கு உதவியுள்ளது. எமது கலாசாரமானது, எமது கொடுகடன் நிதிச் சொத்துப்பட்டியலை சமநிலைப்படுத்தி, மேம்படுத்தும் நோக்குடன் செயன்முறைகளுடனும், அறிவுடனும் கூடிய இடர்நேர்வு ஒத்திசைவினை நோக்கியே தற்போது அதிகம் பரிணாம வளர்ச்சியடைகின்றது. மேலும், அதிகரித்த பயிற்சி முயற்சிகள் ஊடாக எவ்வாறு என்பதை அறிந்து கொள்ளும் தொழில்நுட்பத்திற்கு மாறுதலடைவதை நோக்கி தொழிற்படை தொழில்நுட்ப ரீதியாக நகர்வதைத் தேர்ந்தெடுப்பதற்கு நாம் பாடுபடுகின்றோம்.

## எமது விழுமியங்கள்

**நெறிமுறை**

உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் நிறுவப்பட்ட செயல்முறைகள், குறிப்பாக எமது கடன் ஒப்புதல் செயல்முறை ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் எமது ஊழியர்கள் நெறிமுறை நிதி பரிவர்த்தனைகளை உறுதி செய்கின்றனர்.

**துரிதம்**

மனிதர்களை இயக்குவதற்கும், விரைவுத் தன்மையைச் செயலாக்குவதற்கும் நாம் புதிய தொழில்நுட்பங்களை பின்பற்றுகிறோம்.

**நெகிழ்ச்சி**

எமது ஊழியர்களும், உயர் அனுபவம் வாய்ந்த நிர்வாகக் குழுவினரும், செயற்பாட்டின் பின்னடைவை உறுதிப்படுத்த விவேகமான முடிவுகளை மேற்கொள்கிறது.

**பன்முகத்தன்மைக்கு மரியாதை**

எமது பணியே எமது பெருமை. நடுத்தர வருமானம் பெறும் வாடிக்கையாளர்களுக்கு, மிகக்குறைந்த சேவைகளை வழங்கியதன் மூலம், பல்வேறு சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணியில் உள்ள வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளை நாம் மதிக்கிறோம்.

**வெளிப்படைத் தன்மை**


கணக்கியல் நெறிமுறைகள், ஒழுங்குமுறை மற்றும் சட்டத் தேவைகளுக்குக் கட்டுப்பட்டு, நிதி அறிக்கையிடலில் நாம் வெளிப்படைத்தன்மையுடன் உள்ளோம்.

## ஆளுகையும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புகளும் எமது பின்னணிக்கு தனித்துவமானவை

எமது ஆளுகைக் கட்டமைப்பானது, எச்டிஎப்சி சட்டம், ஆளுகையின் சிறந்த நடத்தைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பவற்றைச் சூழ்ந்து உருவாக்கப்பட்டுள்ளது. இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது, பணம் பற்றாக்குறையாகவுள்ள சந்தை வகுப்பினருக்குப் பெரும்பான்மையாக சேவையளிக்கின்ற ஒரு வங்கியாளராக நாம் எதிர்கொள்கின்ற இடர் நேர்வுக்குள்ளாகின்ற அளவுகளைச் சுற்றியே வடிவமைக்கப்பட்டுள்ளன. பங்குதாரர் எதிர்பார்க்கைகளுடன் அணிசேர்ந்துள்ள எமது தொலைநோக்கை நோக்கிப் பணியாற்றுவதற்கான ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புகளுக்கு நாம் தொடர்ந்தும் ஆதரவளிக்கின்றோம்.

எமது ஆற்றல் வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ அணுகுமுறைகளும், இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகளும், விசேடமாக, ஏனைய வங்கித் தொழில் சேவை வழங்குநர்கள் மூலம் கவனிக்கப்படாத ஒட்டுமொத்தமான தனித்துவமான மற்றும் வேறுபட்ட சந்தை வகுப்பினர்களுக்கு நாம் சேவையாற்றுகின்றோம் என்பதனால், இடர்நேர்வு ஒத்திசைவினை தொடர்ச்சியாக மேம்படுத்தவதற்கு எம்மை இயலச்செய்கின்றன. (விரிவாக அறிந்து கொள்வதற்கு தயவு செய்து நிறுவன ஆளுகை இடர் முகாமைத்துவ அறிக்கைகளைப் பார்க்க).

## நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான பங்களிப்பு

| | |
|---|---|
|  | குறைந்த - நடுத்தர வருமான வகுப்பினருக்கான அனைவரையும் உள்ளடக்குகின்ற தனித்துவமான உற்பத்திகள் |
|  | அறிவு வரையறைகளை விரிவுபடுத்தல் மற்றும் தொழில்நுட்பத் திறன்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புதல் |
|  | குறைந்த - நடுத்தர வருமான வகுப்பினர்கள் மத்தியில் தொழில்நுட்பப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு டிஜிட்டல் தீர்வுகளில் கவனம் செலுத்துதல் |
|  | பல்வேறு தேவைகளுக்காகவும், நிதியளிப்பதற்குக் குறைந்த - நடுத்தர வருமானம் சம்பாதிப்போருக்கு பெறுவழியினை வழங்குதல் (வீடமைப்பு, கல்வி போன்றன) மற்றும் முதலீட்டுத் தீர்வுகள் |
|  | எமது ஆளுகைக் கட்டமைப்புகளானவை, வங்கி ஊழலைத் தவிர்ப்பதையும், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதை உறுதி செய்வதற்கும் எம்மை இயலச்செய்கின்றன. மேலும், பொறுப்புக்கூறுகின்ற கலாசாரமொன்றினை மனதில் பதியச் செய்வதற்கும், கம்பனியின் நேர்மைகளை கேள்விக்குள்ளாக்குகின்ற நிலமைகளைத் தவிர்பதற்கும் அது எமக்கு உதவுகின்றது. |

## மூலதன மாறுதல்கள்

| | |
|---|---|
|  | ஊழியர்களது இயலளவுகளையும், மனித மூலதனத்தையும் பயிற்சி உயர்வடையச் செய்கின்றது. |
|  | அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற தீர்வுகள் சமூகத்தில் சேவையளிக்கப்படாதோருக்கு உதவுவதற்காக வாடிக்கையாளர்களுக்கு அருகாமையில் எம்மைக் கொண்டு செல்வதுடன், சமூகத்தில் உள்ள சேவையளிக்கப்படாதோருக்கு உதவுவதற்கு எம்மை இயலச் செய்கின்றது. |
|  | மாற்றங்கள் இல்லை |
|  | அதிகரித்த டிஜிட்டல் சேவைகள் ஊடாக, கடதாசி நுகர்வு மற்றும் மூலவளங்களில் தங்கியிருப்பதைக் குறைத்தல். |

விட்டுக்கொடுப்புகள்

பயிற்சி, டிஜிட்டல் தீர்வுகள், வர்த்தக நாமத்தினைக் கட்டியெழுப்புதல் என்பவற்றில் முதலீடுகள் நிதியியல் மூலதனத்திலுள்ள இடைவெளியினை தற்காலிகமாக (குறுகிய காலம்) உருவாக்குகின்றன. ஆயினும், வங்கியின் வளர்ச்சிக்கும், இலாபத்திற்கும் பங்களிக்கின்றன.

## புலமைச் சொத்து மூலதனத்திற்குப் பெறுமதி சேர்த்தல்

டிஜிட்டல் தீர்வுகளை படிப்படியாகப் பின்பற்றுகின்றமையுடன் எமது புலமை மூலதனத்திற்கு நாம் தொடர்ந்தும் பெறுமதியினைச் சேர்ப்போம். வங்கியின் வளர்ச்சிக்கு இடமளிப்பதற்கும், குறிப்பான அறிவினை மேம்படுத்தவதற்கும், தொழிலை விரிவுபடுத்துவதில் எமது இலக்குகளை நிறைவளிப்பதற்கும், முன்மதியுடனும் உரியகாலத்திலும் புதிய தீர்வுகளை நாம் தொடர்ந்தும் அறிமுகப்படுத்தி புதிய முறைமைகளைப் பின்பற்றுவோம்.

நிதியியல் இடையீட்டாளர் என்ற வகையில், எதிர்காலத்தில் புதிய நிதியியல் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதை நாம் கண்டறிவோம். இது, வினைத்திறனை அதிகரித்து, வாடிக்கையாளர்களுக்கு வசதிகளை வழங்கும். மேலும், பல்வேறு இலக்கு பிரிவினரின் தேவைகளை நிறைவு செய்வதற்கு புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் மற்றும் ஏற்கனவே காணப்படுகின்ற உற்பத்திகளை மறுசீரமைத்தல் என்பன பற்றி நாம் சிந்திக்கின்றோம்.

| கால வரையறை | எதிர்கால நோக்கு |
|---|---|
| குறுகிய காலம் | நிறுவன வலைத்தளத்தின் இடைமுக அம்சங்களை மேம்படுத்தல்.<br><br>பல்வேறு தொழில்கள் மற்றும் தனிப்பட்டவர்களின் தேவைகளை இலக்கு வைத்து புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் |
| நடுத்தர காலம் | வலிமையான இடர்நேர்வு பற்றிய விழிப்புணர்வுடன் கூடிய நிறுவன கலாசாரத்தை வலுப்படுத்தல் |
| நீண்ட காலம் | சேவை அனுபவத்தினை அதிகரிப்பதற்கும், தொழில் வளர்ச்சிக்கு இடமளிப்பதற்கும், முன்னேற்றகரமான புதிய டிஜிட்டல் வங்கித் தொழில் தீர்வுகளில் முதலீடு செய்தல். |

# மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்:

## தனித்துவமான பெறுமதி உருவாக்கமும் வலுப்படுத்தப்பட்ட உறவுகளும்



## சமூக மற்றும் உறவு மூலதனம்

| உள்ளீடுகள் | பெறுமதி மேம்படுத்தும் அணுகுமுறை | விளைவு |
|---|---|---|
| • வாடிக்கையாளர்களுடனான உறவு<br>• நிறுவனங்களுடனான கூட்டு<br>• கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பு<br>• சமூகத்துடனான தொடர்புகள் | • வாடிக்கையாளர்களுடன் சிறந்த தீர்வுகள் மற்றும் உறவுகளை உருவாக்குதல்<br>• பங்குதாரர்களுடன் பரஸ்பரம் பகிரப்பட்ட பெறுமதியை உருவாக்குதல்<br>• ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல் மற்றும் பராமரித்தல்<br>• சமூகம் எம்மைப் பற்றிய எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொள்ளல் | • வாடிக்கையாளர் தளம், வைப்புத் தொகை மற்றும் வட்டி வருமானத்தை அதிகரித்தல்<br>• பங்குதாரர் பரஸ்பர பெறுமதி உருவாக்கம்<br>• சமூகத்திற்கான நிதிச் சேவைகள்<br>• சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைக் கடமைகள் மற்றும் அரச வருமானப் பங்களிப்புக்கான உறுதி<br>• சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான பங்களிப்புகள் |

### எமது சமூக மற்றும் உறவு மூலதனம்

எமது சமூக மற்றும் உறவு மூலதனத்தைச் சுற்றி வாடிக்கையாளர்கள், பங்காளர்கள், ஒழுங்கு முறைப்படுத்துனர்கள், சமூகம் ஆகியோருடனான நீண்டகாலம் இடம்பெறுகின்ற உறவுகள் காணப்படுகின்றன. பங்குதாரர்களுடன் எமது உறவுகளை நாம் எவ்வாறு பேணுகின்றோம் என்பதனையும், பெறுமதி உருவாக்கத்தில் நாம் எடுக்கின்ற அணுகுமுறைகளையும் இது எடுத்துக்காட்டுகின்றது.

### ஏன் இது எமக்கு முக்கியத்துவம் வாய்ந்தது

உறவுகள் எந்த நிறுவனத்தினதும் நடவடிக்கையை வரைவிலக்கணம் செய்கின்றன. நிதியியல் இடையீட்டாளராக இருக்கின்றமையினால், பல ஆண்டுகளாக, நாம் உருவாக்கியுள்ள உறவுகள், நாம் வழங்குவதை மேம்படுத்துவதற்கு எம்மைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்தி திசைப்படுத்துகின்றன. எமது பங்குதாரர்களுடன் நாம் பேணுகின்ற உறவுகள், நாம் செய்யும் அனைத்திற்கும் உயிரூட்டுவதுடன், எமது வர்த்தக நாமம், எமது பாரம்பரியம், எமது வளர்ச்சி ஆகியவற்றை நாம் உருவாக்கியுள்ள அத்திவாரமாக அவை விளங்குகின்றன. ஆகையினால், வாடிக்கையாளர்களுடனும், ஏனைய சமூகப் பங்காளர்களுடனுமான எமது உறவுகள் எம்மைப் பற்றிய அவர்களது எதிர்பார்க்கைகளும், நாம் யார் என்பதையும், நாம் எதை நோக்காகக் கொண்டிருக்கின்றோம் என்பதற்கும் உறுதுணையளிக்கின்றன. பங்குதாரர்களின் எதிர்பார்க்கைகளைக் காண்பதற்கு தயவுசெய்து 22 - 28 ஆம் பக்கங்களைப் பார்க்க.

## வாடிக்கையாளர்கள் - நிலைபெறத்தக்க நிதியியல் தீர்வுகளும் உறுதியான உறவுகளும்


மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டு முழுவதும், எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நாம் தொடர்ந்தும் அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற நிதியியல் தீர்வுகளை வழங்கி, அவர்கள் சரியான நிதியியல் உதவியினைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்தோம். எமது சிறிய தொழிற்பாட்டு நோக்கெல்லையினைக் கருத்திற்கொண்டு, வைப்புகள் மற்றும் கடன்கள் மீது செறிந்துள்ள வாடிக்கையாளர் வகுப்பினருடன் கூடிய 649,008 சேவை நாடிகளைக் கொண்ட தளத்துடன் பணியாற்றுகின்றோம்.

| | | |
|---|---|---|
| வைப்பாளர்கள்<br>503,870<br>(2021:495,625) | மொத்த வாடிக்கையாளர்கள்<br>649,008<br>(2021: 633,989) | கடன் பட்டோர்<br>86,146<br>(2021: 90,591) |
| நிலையான வைப்பு கணக்குகளின் எண்ணிக்கை<br>20,427<br>(2021: 23,380) | சேமிப்புக் கணக்குகளின் எண்ணிக்கை<br>668,869<br>(2021: 655,473) | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை<br>15,805<br>(2021: 19,852) |

## பல்வகைமையான, அனைவரையும் உள்ளடக்குகின்ற மற்றும் பொறுப்புமிக்க உற்பத்திகள்

எச்டிஎப்சி வங்கியில் நிதியியல் ரீதியாக வாடிக்கையாளர்களை வலிமைப்படுத்துவதை நாம் மையப்படுத்தியுள்ளோம். சிக்கனமாக இருக்கும் பழக்கத்தை மனதிற் பதியச் செய்வதாயினும் சரி, வாழ்க்கை இலக்குகளை நிறைவு செய்வதாயினும் சரி - எமது உற்பத்திகள், பிள்ளைப் பராயம் தொடக்கம் ஓய்வு பெறுகின்ற வரை ஒட்டுமொத்த உற்பத்தி வகையினையும் உள்ளடக்குகின்றன.

தேசத்தின் சமூக அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் நோக்குடன், குறைந்த மற்றும் நடுத்தர வருமானக் குழுக்களுக்கு நாம் தொடர்ந்தும் கடன் திட்டங்களை வழங்குகின்றோம். இதன் விளைவாக, வைப்பாளர்களின் நிதியங்களைப் பாதுகாப்பதற்கு எமது தொழிற்பாட்டுச் செலவினமானது, வருவாய் வளர்ச்சியுடன் இணைந்து பயனளிக்கும் மட்டத்தில் காணப்படுகின்றது என்பதனை நாம் உறுதி செய்கின்றோம். இவை இரண்டும், இலாபத் தன்மையை நோக்கி பங்களிக்கின்றன. குறைந்த வருமான மற்றும் நடுத்தர வருமானக் குழுக்களுக்கு நிதி வழங்குவதன் மூலம், நாம் ஈர்க்கின்ற இடர் நேர்வுகளுக்குக் காப்பளிப்பதற்கு இது உதவுகின்றது.



## கொடுகடன் திட்டங்களின் வசதியான தன்மை

| தயாரித்து விநியோகம் - கடன்கள் | 2022 | % மாற்றம் | 2021 |
|---|---|---|---|
| குடியிருப்புச் சொத்துக்களுக்கு மேல் முதன்மை அடமானத்தால் பாதுகாக்கப்படும் வீட்டுக் கடன்கள் | 11,437 | -5% | 11,995 |
| ஊ.சே.நி க்கு எதிரான வீட்டுக் கடன்கள் | 13,633 | 9% | 12,476 |
| உத்தரவாததாரர்கள் மற்றும் ஏனையோர் மீதான வீட்டுக் கடன்கள் | 7,261 | -6% | 7,728 |
| வர்த்தகக் கடன்கள் | 3,066 | -17% | 3,698 |
| தங்க நகைக் கடன்கள் | 437 | 1% | 434 |
| பெறவேண்டிய குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவுகள் | 762 | -19% | 942 |
| ஊழியர் கடன்கள் | 1,869 | 9% | 1,709 |
| பண எல்லைக் கடன்கள் | 2,637 | 57% | 1,678 |
| வட்டி மற்றும் ஏனைய பெற வேண்டியவை | 3,535 | 21% | 2,912 |
| மொத்தம் | 44,637 | 2% | 43,572 |
| வாடிக்கையாளர் வாரியான தயாரிப்பு விநியோகம் - வைப்புக்கள் | 2022 | % change | 2021 |
| சேமிப்புகள் | 7,942 | -7% | 8,542 |
| நிலையான வைப்புக்கள் | 42,302 | 2% | 41,271 |

எமது நிதியியல் உற்பத்திகளானவை, நிதியியல் ரீதியாக பாதிக்கப்படக் கூடியவர்களை மனதிற் கொண்டு உருவாக்கப்பட்டு வருகின்ற தனித்துவம் மிக்கவையாகும். எச்டிஎப்சி உற்பத்தி பட்டியலானது, பல வகையான பிணை உறுதிகளுக்கு எதிராக நிதியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் தொடக்கம், நடுத்தர வருமானம் ஈட்டுபவர்கள் வரை இயலச் செய்கின்ற பலவகையான பிணை உறுதி அடிப்படையிலமைந்த கடன்களை உள்ளடக்குகின்றது.

மலிவு விலையை நாம் எவ்வாறு உறுதி செய்கிறோம்.

- கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் அல்லது தொடர்ந்து திருப்பிச் செலுத்தாத நிலையில் மீள் கடன்கள்.
- தொடர்ச்சியான கொடுப்பனவுகளைத் தக்கவைப்பதற்காக கடன் காலத்தின் மூலம் கடன் தவணைகளைக் குறைத்தல்

ஊ.சே.நி கடன்கள் (வழிரம உதான)

இந்த ஆண்டில், ஊ.சே.நி கடன்களை நாம் தொடர்ந்து ஊக்குவித்து வந்துள்ளோம். இது குறைந்த கடன் இடர் மற்றும் ஏனைய வகையான கடன்களாக குறைந்த இடர் வருமானத்தை வழங்குகிறது. ஊழியர் எதிர்கால வைப்பு நிதிக்குப் பங்களிப்பு செய்தவர்களுக்கும், முன்னர் ஊழியர் எதிர்கால வைப்பு நிதியில் மையப்படுத்தப்பட்டவர்களுக்கும், சம்பளத்தில் ஒரு பகுதியை கடன் தவணையாகக் கொண்டு வேலை செய்யாதவர்களுக்கும் ஊ.சே.நி கடன்கள் வழங்கப்படுகின்றன. ஊழியர் எதிர்கால வைப்பு நிதியின் எந்தவொரு உறுப்பினரும், வீட்டு வசதி தொடர்பான பல்வேறு குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஊ.சே.நி கடன்களை அணுகலாம். அவையாவன:

- வீடு கட்டுதல் அல்லது கொள்வனவு செய்வதற்காக
- வீடு கட்டுவதற்கான நிலத்தைக் கொள்வனவு செய்வதற்காக
- வீட்டை மேலும் பெரிதாக்குவதற்காக
- ஓரளவு கட்டப்பட்ட வீட்டை நிறைவு செய்வதற்காக
- குடிநீர், சுகாதாரம் மற்றும் மின்சார வசதிகளைப் பெறுவதற்காக
- வீட்டை மீட்டெடுப்பதற்காக

## பெறுவழியினை மேம்படுத்தல்

சமூக நிலையினைப் பொருட்படுத்தாது, எமது சேவைகளையும், மூலதனத்தையும் பெற்றுக்கொள்வதற்கு அனைத்துப் பிரஜைகளுக்கும் சமமான பெறுவழி காணப்படுவதை நாம் உறுதி செய்கின்றோம். இதனை மெய்ப்பிப்பதற்கு நாம் எமது கிளை வலையமைப்பினை விரிவுபடுத்தவதில் மெதுவான போக்கிற்கு மத்தியில் ஏற்கனவே காணப்படுகின்ற எமது டிஜிட்டல் சேவை வழங்கல் வழிகளை நாம் தொடர்ந்தும் மேம்படுத்துவதுடன் பௌதீக ரீதியாக பண மீளெடுப்பு இயந்திரப் பெறுவழியினை வலுப்படுத்துவதற்கு மேலதிகமாக அண்மைய ஆண்டுகளில் பல புதிய டிஜிட்டல் சேவைகளைப் பின்பற்றி வருகின்றோம்.

| வாடிக்கையாளர் அணுகல் | 2022 | 2021 | 2020 |
|---|---|---|---|
| கிளைகள் | 39 | 39 | 39 |
| ATM களை அணுகுதல் | 5,845 | 5,526 | 5,075 |

## இலத்திரனியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்

இணைந்து கொள்கின்ற செயன்முறையில், வாடிக்கையாளர்களுக்குச் சிறப்பாகச் சேவையாற்றுவதற்கு, 2022 ஆம் ஆண்டில் ஆட்பதிவுத் திணைக்களத்துடன் நாம் கூட்டிணைந்துள்ளோம். ஆட்பதிவுத் திணைக்கள இணைய வாயில் ஊடாக, அடையாள அட்டை, ஆவணம் மற்றும் முகவரி உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் மூலம் டிஜிட்டல் வாடிக்கையாளர் சரிபார்ப்பு செயன்முறையை மேற்கொள்ள இக்கூட்டாண்மை எமக்கு உதவுகிறது. மேலும், சிறந்த அம்சங்களுடன் இயங்குவதற்கும், எச்டிஎப்சி இணையதளத்தை மேம்படுத்தவும், தகவல் தொழில்நுட்பப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## ஊக்குவிப்புக்களும் அன்பளிப்புகளும்

வாடிக்கையாளர்களுடன் ஆக்கபூர்வமான மற்றும் ஈர்க்கக்கூடிய தருணங்களை உருவாக்குவதில், அவர்களின் உத்வேகத்தின் சிறிய செயற்பாடுகளையும் வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவும் வகையில் "திலின இன்ஸ்பைரிங் கிட்ஸ்" நிலையத்தை நாம் நிறுவியுள்ளோம்.

## வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான நடத்தைக் கோவை

வாடிக்கையாளர்களுடன் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும்போது, குறிப்பாக, வைப்பாளர்களின் முதலீடுகள் தொடர்பில், பொறுப்புக் கூறலையும், முன்மதியையும் நாம் தீவிரமாக எடுத்துக் கொள்கிறோம். நியாயமான வங்கி நடைமுறைகளுக்கான வழிகாட்டியாக, இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உரிமம் பெற்ற வங்கிகளுக்கான வாடிக்கையாளர் சாசனத்தைப் பின்பற்றுகிறோம். பொறுப்பான மற்றும் நெறிமுறையான, நிதியியல் நடத்தையை செயற்படுத்துவதில், வாடிக்கையாளர் கடமைகளை சாசனம் குறிப்பிடுகிறது.

## வாடிக்கையாளர் முறைப்பாட்டு முகாமைத்துவம்

வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளை நியாயமான முறையில் தீர்த்து வைக்கும் உரிமையை நாம் ஆதரிக்கிறோம். முறையான பிணக்குத் தீர்த்தல் நடைமுறை மூலம், வாடிக்கையாளர் முறைப்பாடுகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. முறைப்பாடுகளைத் தீர்ப்பதில் முடிந்தவரை விரைவாக இருக்க முயற்சி செய்கிறோம். வங்கியின் தொழிற்பாடுகள் பிரிவானது, தலைமை அலுவலகம் மற்றும் கிளைகள் முழுவதும் முறைப்பாடு கையாளுதல் மற்றும் தீர்த்து வைத்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கிறது, அதேவேளை, கிளை மட்டத்தில் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு கிளை முகாமையாளர்கள் பொறுப்பானவர்கள். செயன்முறையின் ஒவ்வொரு படியும் முறையாக செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படுகிறது.

## தகவல்களுக்கான மற்றும் சரியான நேரத்தில் தொடர்புகொள்வதற்கான உரிமை

முறையான தகவல் தொடர்பு வழிகள் மற்றும் ஈடுபாட்டு வழிமுறைகள் மூலம், உற்பத்தி மற்றும் சேவைத் தகவலைப் பெறுவதற்கான வாடிக்கையாளர்களின் உரிமையை நாம் நிலைநாட்டுகிறோம். குறிப்பாக, உற்பத்தி விழிப்புணர்வு, நிதியியல் அறிவு மற்றும் நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு இணங்குவதில், இது வாடிக்கையாளர்களுக்கான எமது பொறுப்புக்கூறலின் ஒரு முக்கிய அம்சமாகும்.

- வலைத்தளம்

எமது வலைத்தளம், வாடிக்கையாளர்களுக்கான உற்பத்தி மற்றும் வங்கி தகவல்களின் களஞ்சியமாகும். வட்டி வீத விபரங்களை நாம் தொடர்ந்தும் இற்றைப்படுத்தி வருகின்றோம்.

- டிஜிட்டல் சமிக்ஞை முறைமை

கிளைகள் ஊடாக வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்வதில் நாம் மத்தியமயப்படுத்தப்பட்ட முறைமையை நிர்வகிக்கிறோம். அனைத்து வைப்பு மற்றும் கடன் வீதங்களையும், டிஜிட்டல் சமிக்ஞை பலகைகள் காண்பிக்கின்றன மற்றும் எச்டிஎப்சி விளம்பரங்கள் ஊடாக எச்டிஎப்சி தயாரிப்புகள் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

- சமூக வலைத்தள தொடர்பூட்டல்

2022 ஆம் ஆண்டு முழுவதும், உற்பத்தி பற்றிய தகவலைப் பரப்புவதற்கு மட்டுமன்றி, சரியான நேரத்தில் மீள் கொடுப்பனவுகளைச் செலுத்தவும், வாடிக்கையாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் எமது சமூக வலைதளங்களை நாம் பயன்படுத்தியுள்ளோம்.டியவகழசஅள ழெவ ழடெல கழச ிசழனரஉவ கைெழசஅயவழைெ னளைளநஅயெவழைெ - டிரவ யடளழ வழ ிசழயஉவளைநடல நஎொழரசயபபை உரளவழஅநசள ழெ வஅைநடல சநியலஅநவெள.

## பொறுப்புமிக்க வங்கித்தொழில்

வாடிக்கையாளர்களை நியாயமாக நடாத்துவதனை உறுதி செய்வதில், பல்வேறு வங்கித்தொழில் மற்றும் வர்த்தக நோக்குகளைச் சுற்றியும் கட்டமைக்கப்பட்ட பல கொள்கைகளையும், நடைமுறைகளையும் நாம் பின்பற்றுகின்றோம்.

| | |
|---|---|
| கட்டாய மற்றும் தன்னார்வ ஒழுங்குபடுத்தலும் நடைமுறைகளும் | வாடிக்கையாளர் சாசனம் (இலங்கை மத்திய வங்கி) |
| | பணம் தூய்தாக்கலுக்கு எதிரான ஒழுங்கு விதிகள் |
| | உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் கொள்கை |
| | அனைத்து வீதங்கள் மற்றும் கட்டணங்கள் காட்சிப்படுத்தப்படுவதை பேணுதல் |
| | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மூலம் வழங்கப்பட்ட சிறந்த நடத்தைக் கோவைகள் |

## தகவல் தெரிவித்தல்

வாடிக்கையாளர்கள் எவையேனும் சந்தேகங்கள் பற்றி அவர்கள் விழிப்படைவார்களாயின், அவர்களது கணக்குகள் மற்றும் வைப்புகள் தொடர்பிலான மோசடியான செயற்பாட்டை அறிக்கையிடலாம். பின்னர், ஏதேனும் சந்தேகத்திடமான நிதியியல் செயற்பாட்டினை விசாரணை செய்வதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## தரவுகளின் அந்தரங்கமும் பாதுகாப்பும்

இலத்திரனியல் அட்டைகளுடன் பணம் மீளெடுப்பு இயந்திரங்களைப் பயன்படுத்துகின்ற (ATM) போது, இலத்திரனியல் வங்கிச் சேவை மற்றும் மொபைல் கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற போது, தனிப்பட்ட அடையாள இலக்கங்கள் (PIN) கடவுச் சொற்கள் போன்ற தனிப்பட்ட மற்றும் பாதுகாப்புத் தகவல்களைப் பயன்படுத்துகையில், வாடிக்கையாளர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வாடிக்கையாளர் தரவுகளின் மற்றும் அந்தரங்கத்தின் இலத்திரனியல் ரீதியான மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கான அனைத்து வழிமுறைகளையும் வங்கி எடுத்துள்ளது.

- இலத்திரனியல் வங்கிச் சேவைக்கு நுழைகின்ற போது, ஒரு தடவை கடவுச் சொல் (OTP) வழங்கப்படுகின்றது.
- பண மீளெடுப்பு இயந்திரங்களுக்கான பெறுவழியினைப் பாதுகாப்பதற்காக இரகசிய தனிப்பட்ட அடையாள இலக்கம்
- கட்டுப்பாடுகள் மற்றும் பயனர் விழிப்புணர்வு ஊடாக பாதுகாப்பு ஆளுகை, இடர்நேர்வுக் கணிப்பீடு மற்றும் முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்குகின்ற தகவல் பாதுகாப்பு உபாயம் பற்றி பணியாற்றுகின்றது.
- தகவல்கள் காப்பெடுப்பதனை உறுதிசெய்கின்ற அனர்த்த மீட்பு
- கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் சட்டம் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் அந்தரங்கம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றைக் கடைப்பிடித்தல்.

## பெறுபேறுகள்

எமது வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கைமிக்க சேவையினை வழங்குவதன் மூலம், நாம் எமது வாடிக்கையாளர் தளத்தை தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ளும் அதேவேளை, பல்வேறு சாதனைகளையும் எய்துகின்றோம்.

- வைப்புத் தளத்தில் சிறிதளவு வளர்ச்சி
- வட்டி வருமானத்தில் 27% அதிகரிப்பு
- வைப்பு வாடிக்கையாளர் தளத்தின் 1% அதிகரிப்பு
- வாடிக்கையாளர்களுக்கான வட்டி கொடுப்பனவில் ரூ. 5,134 மில்லியன் (64% வளர்ச்சி)

## பங்காளர்கள்

எமது தொழில்ப் பங்காளர்கள், வங்கியின் தொழிற்பாடுகளை நிலைநிறுத்துவதற்கும், வேறு மூலதனங்களின் பெறுமதியினை உயர்த்துவதிலும், சில நேரடியான மற்றும் நேரடியற்ற வடிவிலும் உதவுகின்றனர். தொழில் குறிக்கோள்களை நிறைவு செய்வதற்கு உதவியளிக்கின்ற, குறிப்பான நோக்கங்களின் அடிப்படையில், எமது தொழில் பங்காளர்களுடன் நாம் முறையான ஈடுபாட்டினையும், உடன்படிக்கைகளையும் பேணி வருகின்றோம்.

## விநியோகத்தர்களும் சேவை வழங்குனர்களும்

எமது தொழில்பாடுகளை நாம் எவ்வாறு நிலைநிறுத்தி வளர்ச்சியடைச் செய்கின்றோம் என்பதில் விநியோகத்தர்களும், சேவை வழங்குனர்களும் இன்றியமையாத வகிபாகத்தினை ஆற்றுகின்றனர். நிலையான மற்றும் குறுகிய கால சொத்துக்களை, உபகரணங்களை வழங்குவதன் மூலம், வழங்குனர்கள் தயாரிக்கப்பட்ட மூலதனத்தை அதிகரிக்கின்ற அதேவேளை, இடைத்தடங்கல்களின்றி அவர்களது தொழிற்பாடுகளை செயற்திறன் வாய்ந்த விதத்தில் செயலாற்றுவதற்கு எமது ஊழியர்களை இயலச்செய்கின்றனர். இதற்கு மேலதிகமாக, பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புப் தீர்வுகள்/சேவைகள் என்பன தொழிற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு முக்கியமாக விளங்குகின்றன.

| மனித வளங்கள் | நிதி அல்லாத சேவை வழங்குநர்கள் | நிதி மற்றும் தொழில்முறை சேவை வழங்குநர்கள் |
|---|---|---|
| • அலுவலக உபகரணங்கள்<br>• தளபாடங்களும் பொருத்துக்களும்<br>• தகவல் தொழில்நுட்ப வன்பொருள்<br>• காகிதாதிகள்<br>• சொத்துக்கள்<br>• மோட்டார் வாகனங்கள்<br>• கருவிகளும் இயந்திரங்களும்<br>• ஏனையவை | • தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் மற்றும் சேவைகள்<br>• விளம்பரம், ஊடகம் மற்றும் ஊக்குவித்தல்<br>• உரிமங்கள்<br>• அச்சிடுதல்<br>• பயன்பாடுகள்<br>• போக்குவரத்து<br>• சுத்தம் செய்தல்<br>• உணவு மற்றும் பானங்கள்<br>• பாதுகாப்பு<br>• பராமரிப்பு<br>• கட்டுமானம் | • அதிகாரப்பூர்வ வங்கியாளர்கள்<br>• வெளியகக் கணக்காளர்<br>• கணக்காய்வாளர் நாயகம்<br>• காப்புறுதி<br>• சட்டம் |

## சுமூகமான மற்றும் திடமான பங்குடமையாளர் உறவுகள்

கொடுப்பனவுகளை உரியகாலத்தில் செலுத்தி, தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், தெளிவான தொடர்பூட்டலுக்குமான அணுகுமுறை பின்பற்றப்படுகின்ற அதேவேளை, அவர்களது உரிமைகளுக்கு மதிப்பளித்தல், எமது ஒருமுகப்படுத்தலாக காணப்படுகின்றது. மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டு காலப்பகுதியில் வழங்குனர் - வங்கி நம்பிக்கை விட்டுக்கொடுக்கப்பட்ட நிகழ்வுகள் ஏதேனும் காணப்படவில்லை.

## பெறுகையும் பரிசோதித்தலும்

எமது வழங்குனர்களுடன் நாம் பேணுகின்ற உறவுகள், பல்வேறு குறிக்கோள்களுக்கும் வழங்குனர்களை நாம் எவ்வாறு பெற்றுக் கொள்கின்றோம் என்பதில் தொழில்சார் பண்பு, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை என்பவற்றின் அடிப்படையில் அமைந்து காணப்படுகின்றது. வழங்குனர் தகவல்களைச் சேகரிப்பதில் கேள்விதாரர்களுடன் தொடங்கி நாம் நியமமான பெறுகை நடைமுறைகளைப் பயன்படுத்துகின்றோம். விலைக்குறிப்புகளின் மதிப்பீட்டின் அடிப்படையில் பொருட்களை மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர், வழங்குனர்களை நாம் பதிவு செய்கின்றோம். கொழும்பிலிருந்து வழங்குனர்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நாம் முயற்சியினை மேற்கொண்டு வருகின்றோம்.

எமது விநியோகத்தர்களினதும், சேவை வழங்குனர்களினதும் பெரும்பான்மையானவர்கள் உள்நாட்டிலேயே தோற்றம் பெறுவதுடன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்புபட்ட கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதில் சில வெளிநாட்டு நிறுவனங்களுடன் நாம் பணியாற்றி வருகின்றோம்.

ஆண்டில் உள்நாட்டு விநியோகத்தர்களுக்கும், சேவை வழங்குனர்களுக்குமான கொடுப்பனவாக ரூ. 534 மில்லியனை நாம் செலுத்தியுள்ளோம்.

## நிறுவனசார் தொழில் பங்காளர்கள்

அரசாங்க மற்றம் தனியார் துறைகளைச் சேர்ந்த நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள் மற்றும் கூட்டு நிறுவனங்கள் உள்ளடங்கலாக பல எண்ணிக்கையான தொழில் நிறுவனங்களுடன் நாம் பணியாற்றுகின்றோம். முக்கியமாக, பிரபல நிறுவனங்களுடனான எமது தொடர்புகள், எமது வியாபார பிரிவுகளை வளர்ச்சியடையச் செய்வதற்கு எம்மை இயலச் செய்கின்ற அதேவேளை, இந்நிறுவனங்களுக்கும், நாம் சேவையாற்றுகின்ற மக்களுக்கும் மறைமுகமாகவும், நிதி மற்றும் சமூக பெறுமதி இரண்டினையும் வழங்குகின்றது.

பரஸ்பர பொருளாதார மற்றும் சமூகப் பொருளாதார நன்மைகளைப் பகிர்ந்து, நாம் பல நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளோம். தெரிவு செய்யப்பட்ட தொழில்களில் வாழ்வாதாரங்களை உருவாக்கிக் கொள்வதை நோக்கிய அபிலாஷை யைக் கொண்டுள்ளவர்களுக்கு தொழில்சார் மற்றும் தொழில் முயற்சிசார் ஆதரவினை இந்நிறுவனங்கள், வழங்குகின்றன. நாம் வழங்குவது என்னவெனில், இவ்வாட்கள் உபகரணங்களையும், தேவையான மூலவளங்களையும் பெற்றுக்கொள்வதற்கு எமது பல்வேறு கடன் திட்டங்கள் ஊடாக நிதியியல் ஆதரவை வழங்குவதாகும்.

ரூ. 534 மில்.
(2021: ரூ. 402 மில்.)

விநியோகத்தர்களின்
பொருளாதாரப் பெறுமதி

- ஆட்பதிவுத் திணைக்களத்தினுடான பங்குடமை

வாடிக்கையாளர் அடையாளத்தை டிஜிட்டல் ரீதியாக உறுதிப்படுத்துவதற்கு, ஆட்பதிவுத் திணைக்களத்துடன் நாம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளோம். டிஜிட்டல் மற்றும் இலத்திரனியல் வழி ஊடாக இணைந்து கொள்கின்ற வாடிக்கையாளர்களை இனங்கண்டு உறுதிப்படுத்துவதில், இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களில் கடப்பாடாக இது செய்யப்பட்டது. முன்னாள் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. பாலித கமகே மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆகியோருக்கிடையில் இப்பங்குடமை கைச்சாத்திடப்பட்டது.

- JAT ஹோல்டிங் பீஎல்சி யுடனான உடன்படிக்கை

ஈடுபட்டுள்ள மரவேலைக் கைவினைஞர்கள் மற்றும் தொழில்சார் வர்ணந் தீட்டுபவர்களையும் வலுப்படுத்துவதற்கு உதவுவதற்காக விசேட குறைந்த வட்டியுடன் கூடிய கடன் திட்டங்களை வழங்குவதற்கு விசேட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை துயுவு ர்ழடனபௌள உடன் நாம் கைச்சாத்திட்டுள்ளோம். கம்பனியுடன் ஈடுபாடுள்ள ஆட்கள், தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையிலிருந்து ஏஞ மட்டம் ஜஜஜ தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக்கொண்டவர்களாக இருக்க வேண்டும். நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சித் துறையில் உள்ள உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்துவதற்கான முயற்சியொன்றாக அவர்களின் தொழில்களை முன்னெடுப்பதற்கு நாம் அவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்கி, நிதியியல் ஆதரவளிக்கின்றோம். மரவேலைக் கைவினைஞர் மற்றும் வர்ணம் தீட்டும் தொழிற்துறைகளைத் தரமுயர்த்துவதற்கு ஆதரவினை வழங்குவதற்கும் நீண்ட காலத்தில் தேசத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்குப் பங்களிப்பதற்கு உதவுவதற்கான முயற்சியொன்றாகவும் இது அமைந்துள்ளது.

- கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடனான பங்குடமை

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2022 ஒக்டோபரில் இடம்பெற்ற தேசிய நிகழ்ச்சித்திட்டமான "செழிப்பான தேசத்தினை உருவாக்குவதற்குத் தயாராவோம்" நிகழ்வு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கூட்டிணைப்புடன், கைத்தொழில் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கையிலுள்ள நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளை வலுப்படுத்துவதற்கு எச்டிஎப்சி வங்கி மற்றும் கைத்தொழில் அதிகார சபை என்பவற்றிற்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இப்பங்குடமையானது, கைத்தொழில் அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் ஊடாக புதிய வியாபார வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு எமது கிளைகளை இயலச் செய்யும்.




## பெறுபேறுகள்

எமது பங்காளர் உறுவுகளுடனான பெறுபேறுகள் பலவகைப்படுவதுடன், பொருளாதார நலன்களையும், வளர்ச்சியையும் பகிர்ந்து கொள்வதை நோக்கிச் செல்கின்றது.

- வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் - உரிய காலத்தில் கொடுப்பனவுகள்
- வங்கித் தொழில் பங்காளர்கள் - தொழில்சார் சேவை வழங்குனர்களுக்காக வட்டிச் செலவுகள் மற்றும் கொடுப்பனவு ஏற்பாடு ரூ 234 மில்லியன்

## பங்காளர்களாக ஒழுங்குமுறைப்படுத்துனர்கள்

நிதியியல் இடையீட்டாளராகவும், பட்டியலிடப்பட்ட நிறுவனம் என்ற வகையிலும், வைப்பாளர்களின் பணத்திற்கும், பங்குடமையாளர்களின் முதலீட்டுக்கும் நாம் பொறுப்பினைக் கொண்டுள்ளோம். மேலும், பெரும்பான்மையான அரச பங்குச் சொத்தாண்மையுடன் கூடிய வங்கி என்ற வகையில், எமது நடவடிக்கைகளுக்காக பங்கு முதன்மையாளர்களுக்கு நாம் நேரடியாக. பதிலளிக்கத் தக்கவர்களாவோம். ஒழுங்கு முறைப்படுத்தும் அதிகாரிகளுடனான எமது உறவுகள் - வங்கித் தொழிற்துறையுனுள் உறுதிபெறுவதற்கு எம்மை இயலச்செய்கின்ற அதேவேளை, எமது தொழிலின் பல்வேறு நோக்குகளையும் மேம்படுத்துவதன் மீதான வழிகாட்டலை பெற்றுத்தருகின்றது.

பொறுப்புக் கூறத்தக்கவர்களாக இருப்பது என்பது, ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பன உள்ளடங்கலாக நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள், ஒழுங்கு முறைப்படுத்தும் மூலதனம், கணக்கீட்டு நடைமுறைகள், தொழில் நடத்தைகள் போன்றவற்றைப் பாதிக்கின்ற ஒழுங்கு முறைப்படுத்தல் பணிப்புரைகளை, சட்டங்களைக் கடைப்பிடிப்பதை

உள்ளடக்குகின்றது. எச்டிஎப்சி வங்கியில் இவ் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் சட்டரீதியான தேவைப்பாடுகளை நிறைவேற்றுகின்ற அதேவேளை, ஒவ்வொரு ஒழுங்கு முறைப்படுத்தல் பங்காளர்களுக்கும், எமது கடைப்பிடித்தலை தொடர்பூட்டுவதை எமது முயற்சிகள் உச்ச நிலையை அடையச் செய்கின்றன.

இலங்கையின் நிதியியல் மற்றும் வங்கித் தொழிற்துறைச் சூழலினுள் காணப்படுகின்ற ஒழுங்கு முறைப்படுத்தல் பங்காளர்கள், எமது தொழிற்பாடுகளுடன் வலுவான இணைப்பினைக் கொண்டுள்ளனர். நாம் பேணிவருகின்ற அத்துடன், இப்பங்காளர்களுடன் தொடர்ந்தும் மேம்படுத்துகின்ற உறவு, எமது சமூக உறவு மூலதனத்திற்குப் பெறுமதி சேர்க்கின்றது.

### 1. நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு (அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிறது)

வங்கி 2019 முதல் அமைச்சின் கீழ் கீழ் இயங்கி வருகிறது.

எச்டீஎப்சி வங்கி, நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் மூலம் அரசாங்கத்தினால் ஆதரவளிக்கப்படுகிறது.

### 2. இலங்கை மத்திய வங்கி

வங்கியின் நடவடிக்கைகள் மற்றும் முதன்மை கட்டுப்பாட்டாளர் மற்றும் ஒழுங்குமுறை மூலதனத் தேவைகளையும் இலங்கை மத்திய வங்கி மேற்பார்வை செய்கிறது.

எச்டீஎப்சி வங்கி, இலங்கை மத்திய வங்கியின் விதிமுறைகள், வங்கியின் சட்ட விதிகள் மற்றும் அவற்றின் திருத்தங்களை கடைபிடிக்கிறது.

நிதிநிலை அறிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் வடிவங்களுக்கு அமைய தயாரிக்கப்படுகின்றன.

### 3. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம்

பகிரங்கமாகக் கோரப்பட்ட வங்கி என்ற வகையில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடல் விதிகளுடன் நாம் இணங்கியொழுகுவதுடன், 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்திற்கு உட்பட்டுள்ளோம்.

இலங்கை பங்குப் பரிவர்த்தனையும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான ஆளுமை விதிகளை நிர்ணயிக்கின்றது.

### 4. இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள்

தேசிய நிபுணத்துவ கணக்கியல் அமைப்பான, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், நிதி அறிக்கை மற்றும் கணக்கியல் தரத்திற்கான வழிகாட்டுதல்களை அமைக்கிறது.

## ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவித்தலையும் வெளிப்படைத்தன்மையினையும் நாம் எவ்வாறு உறுதி செய்கின்றோம்.

2022 காலப்பகுதியில் அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைகளுடனும் இணங்குவித்தலை நாம் உறுதிசெய்தோம். அரசாங்கம் துணையளிக்கப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கி என்ற வகையிலும், பட்டியலிடப்பட்ட நிறுவனம் ஒன்றாகவும், எமது தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கான பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கு ஆற்றல்மிக்க ஆளுகைக் கட்டமைப்பை நாம் கடைப்பிடித்து, கூட்டிணைக்கப்பட்ட எச்டிஎப்சி சட்டத்திற்கமைவாக, கீழே ஏற்பாடு செய்யப்பட்டவாறு, உள்ளகக் கட்டுப்பாடுகளையும், வெளிவாரி ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் ஒழுங்கு விதிகளுடனான இணங்குவித்தலையும் நாம் கொண்டுள்ளோம்.

### நிதி மற்றும் பொருளாதார, கொள்கை அபிவிருத்தி அமைச்சு

- எச்டிஎப்சி சட்ட விதிகளுக்கு இணங்குதல்
- மனிதவள மற்றும் ஊதியக் குழு, ஊதியம் தொடர்பான அமைச்சு வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதை உறுதி செய்கிறது
- வழிகாட்டுதல்களின்படி பரிவர்த்தனைகளைக் கண்காணித்தல்

### இலங்கை மத்திய வங்கி

- ஒழுங்குமுறை மூலதனத் தேவைகளைப் பராமரித்தல் மற்றும் உறுதிப்படுத்துதல்
- முடிவுகளின் தாக்கங்களை மதிப்பிடுதல் மற்றும் மூலதன தாக்கங்களை கருத்தில் கொள்ளுதல்
- இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களின் கீழ் வங்கியின் நிதி இடர் வெளிப்பாடுகளை விவேகத்துடன் கட்டுப்படுத்தல்
- இலங்கை மத்திய வங்கியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் இடைவெளிகளைச் சீர் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

### கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம்

- சபையுடன் தொடர்புடைய தரப்பின் பரிவர்த்தனை மீளாய்வுக் குழு ளுநுஊ மற்றும் இலங்கை பங்குப் பரிவர்த்தனை விதிகளுடன் நிலைத்தன்மையை உறுதி செய்தல்.
- வழிகாட்டுதல்களின்படி பரிவர்த்தனைகளைக் கண்காணித்தல்.

### இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள்

- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மீதான ஆய்வுகளை மேற்கொள்ள, இலங்கையின் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உதவுதல்

## பெறுபேறுகள்

எமது ஒழுங்குமுறைப்படுத்தல் கடப்பாடுகளின் பெறுபேறுகள் பற்றிய பொதுநோக்கு கீழே தரப்பட்டுள்ளது.

- ஆண்டினுள் அனைத்து அவசியமான வெளிப்படுத்தல்களும் செய்யப்பட்டு அனைத்து ஒழுங்குவிதிகளுடனும் இணங்குதல்
- சட்டங்களுடனும், ஒழுங்குவிதிகளுடனும் இணங்காமை பற்றிய நிகழ்வுகள் எதுவும் அறிக்கையிடப்பட்டிக்கவில்லை என்பதுடன் தண்டப்பணங்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை, தடைகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரி கணக்காய்வும் ஏனைய நியதிச்சட்ட கணக்காய்வுகளும் நடாத்தப்பட்டன.
- இடைக்கால மற்றும் ஆண்டு நிதியியல் கூற்றுகளை உரிய காலத்தில் சமர்ப்பித்தல்
- வரிகளாக அரசாங்கத்திற்கு ரூ. 289 மில்லியன் கொடுப்பனவு
- ஆளுகை மீதான இணங்குவித்தல் நிறுவன ஆளுகை அறிக்கையின் 124 - 166 பக்கங்களில் அறிக்கையிடப்பட்டுள்ளன.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் இவ் அறிக்கையின் 201 - 266 வரையான பக்கங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## சமூகத்திற்கான சேவை

சமூகத்துடனான எமது உறவு, தொழிற்படுவதற்கு எமது சமூக உரிமத்தை மேம்படுத்துகின்ற அதேவேளை, பொதுமக்கள் சேவைகள் மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகள் ஊடாக சமூக ரீதியான பொறுப்புமிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எம்மை இயலச்செய்கின்றது.

நிதியாண்டின் 2022க்கான செயற்பாடுகள்

- ஆய்வுக்குரிய வருடத்தில், நுஉழ ளுநினைடநள இன் கழிவு சேகரிப்பு அலகுகள் மூலம் பொதுமக்களுக்கு முறையான பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் அகற்றலைச் செயல்படுத்துவதற்கு நுஉழு ளுநினைடநள உடன் கூட்டு சேர்ந்துள்ளமை
- இயற்கையைப் பராமரித்தல் மற்றும் சுற்றாடலைப் பேணுதல் என்பன குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- குறைந்த அல்லது நிலப்பரப்பு இல்லாத இடங்களில் நடுகை செய்வதை ஊக்குவிப்பதற்கான நகர்ப்புற விவசாயத் திட்டம். விவசாயத் துறையின் மாவட்ட விவசாய ஆலோசகர் மூலம் தொழில்நுட்ப உதவிகள் பற்றி கலந்தாராயப்பட்டன. இந்நிகழ்வில் உரம் மற்றும் செடிகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன.
- இத்திட்டம், கடினமான பொருளாதார நிலைமைகளிலும், உணவுப் பற்றாக்குறை குறித்த அச்சம் ஏற்படும் போதும், உணவு விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம் ஒரு பொதுச் சேவை முயற்சியாக இடம்பெற்றது. நகர்ப்புற விவசாயத்தின் முக்கியத்துவத்தை பொதுமக்களுக்கு உணர்த்துவதற்காக, பல்வேறு சமூக ஊடக விழிப்புணர்வு விளம்பர நிகழ்ச்சியும் மேற்கொள்ளப்பட்டது.

## சமூக ரீதியாக பொறுப்புடைய வங்கிச் சேவையும் நிதியியல் வசதிக்குட்படுத்தலும்


நாட்டின் குறைந்த மற்றும் நடுத்தரமான வருமான வகுப்பினரின் மீது கவனம் செலுத்துவதற்கும், வசதியான வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்கு நியதிச்சட்ட ரீதியாக பொறுப்பாகவிருப்பதற்கும் நாம் பொறுப்புடையவர்களாவோம். அத்தகைய ஆட்களின் அல்லது குடும்பங்களின் வகுப்பினர் வீடமைப்பு நிதிக்கு இலகுவான பெறுவழியினைக் கொண்டிருப்பதில்லை, ஆகையினால், அத்தகைய ஆட்களுக்கு குறைந்த செலவு வீடமைப்பு நிதியினை வழங்குவது எமது கடமையாகும். நிதியங்கள் மற்றும் வீடமைப்பு என்பவற்றுக்கான பெறுவழியினைக் கொண்டு, அவர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு நாம் உதவக்கூடிய அதேவேளை, இலங்கையின் சமூக அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யலாம்.

கிராமிய பிரதேசங்களிலுள்ள வாடிக்கையாளர்களுக்கும், குறைவான நிதியியல் அறிவுடையோருக்கும் அருகாமையில் எமது சேவைகளைக் கொண்டு செல்வதன் மூலம், எமது மொபைல் வங்கிச் சேவைகள் தொழிற்பாடுகளுடாக (உள்ளங்கை கணினி வங்கிச்சேவை அணி) நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிக்கின்றோம்.

## நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான பங்களிப்பு

| | |
|---|---|
|  | குறைந்த செலவு கடன்கள் (வீடமைப்பு, அனைத்து நோக்கு அபிவிருத்தி நிதி) அத்துடன் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் என்பன ஊடாக வறுமையினை இல்லாதொழிப்பதற்கு உதவுதல் |
|  | நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும், நிறுவனசார் சேவை நாடிகளுக்கும் அபிவிருத்தி நிதியூடாக நிலைபெறத்தக்க வாழ்க்கை, வாழ்வாதாரம், பொருளாதாரம், சமூக வளர்ச்சி, சிறந்த வாழ்க்கைத்தரம் என்பவற்றுடன் அவர்களை இயலச்செய்வதற்கு நாம் பாடுபடுகின்றோம். |
|  | குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கும், குடும்பங்களுக்கும், நிதியளிப்பதன் வாயிலாக பொருளாதார சமமின்மைகளையும், சமூக இடைவெளியினையும் குறைத்தல் |
|  | எமது அலுவலர்கள் மற்றும் சமூகம் மத்தியில் பொறுப்பு மிக்க நுகர்வினை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். |
|  | பணம் தூய்தாக்கலுக்கு எதிரான மற்றும் மோசடி தொடர்புபட்ட சட்டங்களுடன் இணங்குவித்தல் அத்துடன் தொழிற்துறை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு, மத்திய வங்கியின் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுதல் |
|  | பொறுப்புமிக்க வரி சமர்ப்பணங்களைப் பின்பற்றுதல் மற்றும் நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கு நிதியளித்தல். |

## மூலதன மாறுதலடைதல்களும் விட்டுக் கொடுப்புகளும்




விட்டுக்கொடுப்புகள்

வாடிக்கையாளர், சேவை வழங்குனர்கள், பங்காளர்கள், சமூகம் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் பொருளாதார பெறுமதி நிதியியல் விட்டுக் கொடுப்பினை வேண்டுகின்றது.

## எதிர்காலத்திற்கான உறவுகளை மேம்படுத்தல்

காலப்போக்கில் அவர்களுக்கு நாம் எவ்வாறு பெறுமதி உருவாக்குகின்றோம் என்பதை ஒவ்வொரு பங்குதாரர்களுடனான உறவும் நாடியிருக்கின்றது. எச்டிஎப்சி வங்கியானது, அவர்களது தேவைகளை தொடர்ந்தும் நிறைவு செய்கின்ற அதேவேளை, மாற்றமடைகின்ற பங்குதாரர்களின் எதிர்பார்க்கைகளுக்கு இடமளிப்பதற்கு வசதியளிக்கின்றது.

| கால வரையறை | எதிர்கால ஒருமுகப்படுத்தல் | | | |
|---|---|---|---|---|
| | வாடிக்கையாளர்கள் | பங்காளர்கள் | ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் மற்றும் அரசு | சமூகம் |
| குறுகிய காலம் | நிதியியல் வசதிக்குட்படுத்துகின்ற உற்பத்திகள், வசதியான சேவைகள் மற்றும் சிநேகம்மிக்க சேவை ஊடாக சேவை நாடிகளை தக்கவைத்தல் | உரிய காலத்தில கவனம் செலுத்துதல் மற்றும் ஒப்பந்தக் கடப்பாடுகள் ஊடாக உறவுகளை மேம்படுத்தல் | ரூ. 7.5 பில்லியன் கொண்ட குறைந்த பட்ச மூலதன தேவைபாட்டை நிறைவு செய்தல் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குதல் | சமூகத்திற்கான பொதுமக்கள் சேவைகள் |
| நடுத்தர காலம் | புதிய உற்பத்திகள் மற்றும் டிஜிட்டல் சேவைகள் | | உறுதிப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆளுகைக்காக இலங்கை மத்திய வங்கியின் தள பாதுகாப்பு தர நியமங்களுக்கு இசைந்திருத்தல் | பசுமை நிதியிடல் உள்ளடங்கலாக அபிவிருத்தி நிதி |
| நீண்ட காலம் | நாடு முழுவதும் புதிய அமைவிடங்களுக்கு கிளைகளை விரிவுபடுத்தல் | | வங்கித் தொழில் சட்டம், நிறுவன ஆளுகை, சிறந்த நடத்தைக் கோவை, கணக்கீட்டு மற்றும் கணக்கீட்டு தர நியமங்கள் என்பவற்றுக்கு அமைவாக ஒழுங்குவிதிகளை தொடர்ந்தும் கடைப்பிடித்தல் | அதிகரிக்கப்பட்ட சமூக பங்களிப்புகளும், சமூக ரீதியாக வசதிக்குட்படுத்தப்பட்ட கருத்திட்டங்களும் |

# மூலதன முகாமைத்துவ அறிக்கை

## நிலைபெறத்தக்க முயற்சிகள்



## இயற்கை மூலதனம்

| உள்ளீடுகள் | பெறுமதி மேம்படுத்தும் அணுகுமுறை | விளைவு |
|---|---|---|
| • சக்தி (மின்சாரம்)<br>• நீர்<br>• உக்கக்கூடிய மற்றும் உக்காத பொருட்கள் | • புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் படிப்படியான முதலீடுகள்<br>• எச்சரிக்கையான மின்சாரம் மற்றும் நீர் நுகர்வு<br>• முறையான கழிவு நீக்கம் மற்றும் மீள்சுழற்சி | • மீள்சுழற்சிக்கான கழிவுகளை அகற்றுதல்<br>• எமது செயற்பாடுகளில் சுற்றாடல் பாதிப்பைக் குறைப்பதில் சிறிய ஆனால் தொடர்ச்சியான படிமுறைகள் |

இயற்கை மூலதனம் என்பது, எமது தொழிற்பாடுகளை நிலைநிறுத்துவதற்குப் பயன்படும் மீளப்புதுப்பிக்கத்தக்க மற்றும் மீளப்புதுப்பிக்க முடியாத மூலவளங்களை உள்ளடக்குகின்றது.

### நாம் உபயோகிக்கும் இயற்கை மூலதனம்

சேவை வழங்குனர் என்ற வகையில், நேரடியாக இயற்கை மூலவளங்களின் எமது பயன்பாடு உண்மையான உபயோகத்திற்கு அடுத்தே காணப்படுகின்றது. எனினும், மீள்புதுப்பிக்க முடியாத மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க மூலவளங்களைப் பயன்படுத்தி செயன்முறைப்படுத்தப்படுகின்ற பல மூலவளங்களை நாம் உபயோகிக்கின்றோம். கடதாசி, பிளாத்திக்கு, கண்ணாடி மற்றும் உணவுக் கழிவுகள் போன்ற வழமையான தொழிற்பாடுகளில் பயன்படுத்தப்படும் உக்கக்கூடிய மற்றும் உக்காத பொருட்களுக்கு மேலதிகமாக மின்சாரம் (சக்தி) மற்றும் நீர் என்பவற்றை இவை உள்ளடக்குகின்றன.

### ஏன் இது எமக்கு முக்கியத்துவம் வாய்ந்தது

சுற்றாடலில் இருந்து வருகின்ற கூறுகள் எமது தொழிற்பாடுகள் மீது நேரடியற்ற தாக்கத்தினைக் கொண்டுள்ளன. அவை நேரடியற்ற உள்ளீடுகளாகக் காணப்படுகின்ற போதிலும், மூன்று கிளைகளில் பயன்படுத்தப்படுகின்ற மீள்புதுப்பித்தக்க சூரிய சக்திக்கு விதிவிலக்காக எமது கிளைகள் மற்றும் தலைமை அலுவலகம் முழுவதும் எமது வழமையான தொழிற்பாடுகளை வசதிப்படுத்துவதற்கான பயன்பாட்டுச் சேவைகளாக அத்தகையை கூறுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

இயற்கை மூலதனம் பற்றிய எமது முகாமைத்துவத்தை நாம் எவ்வாறு அணுகுவது என்பதில் இடைவெளிகள் காணப்படுகின்ற போதிலும், சூழல் மீதமான எமது தாக்கத்தினை படிப்படியாகக் குறையச்செய்வதற்கு, உறுதியான மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களை நாம் பயன்படுத்துகின்ற போதெல்லாம், மூலவளங்களை கவனமாகவும், பாதுகாப்பாகவும் பயன்படுத்துவதற்கு நாம் பல வழிமுறைகளை மேற்கொண்டுள்ளோம்.

- உச்ச பயன்மிக்க மற்றும் எச்சரிக்கையான சக்தி மற்றும் நீர் நுகர்வு

வங்கியின் கிளைகள் மற்றும் தலைமை அலுவலகம் முழுவதும் நாம் கவமான சக்தி நுகர்வை அணுகுகின்றோம். வினைத்திறன்மிக்க டுநுனு விளக்குகள் ஊடாக சக்தி நுகர்வு உகப்பான விதத்தில் பயன்படுத்தப்படுவதுடன், உகப்பான பயன்பாட்டிற்கும் செலவிற்கும் வாயுச் சீராக்கிகள் 24 பாகையில் தொழிற்படுகின்றன. அதேபோன்று எச்சரிக்கையான விதத்தில் நீர் நுகரப்படுகின்றது.

## நுகர்வுகள்

| | கிளைகள் | | | | தலைமை அலுவலகம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021 | | 2022 | | 2021 | | 2022 | |
| | அலகுகள் | செலவு | அலகுகள் | செலவு | அலகுகள் | செலவு | அலகுகள் | செலவு |
| மின்சாரம் (kWh) | 38,356 | 14,094,016 | **38,597** | **15,531,834** | 426,500 | 8,359,328 | **388,900** | **9,815,322** |
| நீர் (லீற்றர்கள்) | 429,000 | 129,446 | **486,000** | **1,014,792** | 1,800,000 | 20,648 | **1,300,000** | **161,867** |

சில முயற்சிகளுக்கு மத்தியில் கிளை மட்டத்தில் நீர் மற்றும் மின்சார நுகர்வு அதிகரித்துள்ளது. தலைமை அலுவலகத்தில் மின்சாரம் மற்றும் நீர் நுகர்வில் குறைவு காணப்படுகின்றது.

- மீள்சுழற்சி செய்யப்பட்டு மற்றும் மீளப் பயன்படுத்தப்படும் பொருட்கள்

தலைமை அலுவலகத்திலும், கிளைகளிலும் பயன்படுத்தப்படும் கடதாசிகள் மீள்சுழற்சி செய்யப்படுகின்றன. ஆகையினால், புதினப் பத்திரிகைகளும் பயன்படுத்தப்பட்ட கடதாசிகளும் மீளப் பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை, அச்சுப்பொறி கார்றிஜ்கள் மீள்சுழற்சி செய்யப்பட்டு அவற்றின் முறையான அகற்றுதல் உறுதி செய்யப்படுகின்றன.

- மூலவளங்களில் தங்கியிருத்தலைக் குறைப்பதற்கான தொழில்நுட்பம்

அண்மைய ஆண்டுகளில் எமது மைய வங்கித் தொழில் தளமும், தொடர்புடைய முறைமைகளும், கடதாசிகள் மற்றும் ஏனைய பொருட்களின் எமது நுகர்வைக் குறைப்பதற்கு எம்மை இயலச்செய்துள்ளன. இலத்திரனியல் வங்கிச்சேவை போன்ற டிஜிடல் சேவைகள் மூலம், அத்தகைய மூலவளங்களின் பயன்பாடு மேலும் குறைக்கப்பட்டு, எதிர்காலத்தில் பூச்சிய கழிவு கலாசாரமொன்றை உருவாக்குவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். சூழல் மீதான எமது தாக்கதினை முகாமை செய்வதற்கு, வலிமையான நிலைபெறத்தக்க அணுகுமுறை ஒன்றினை நாம் கட்டியெழுப்புவதில் இது முக்கியமானதாக விளங்குகின்றது.

நோய்த்தொற்று காலப்பகுதியில் இணையவழி தொடர்பூட்டலுக்கு மாறுதலடைதல், இணையவழி நிகழ்ச்சித் திட்டங்களை அதன் பின்னரும் பேணுவதற்கு எம்மை இயலச்செய்கின்ற சூழ்நிலையைத் தோற்றுவித்தது. தற்போது, பங்குதாரர்களுடனும், ஊழியர்களுடனும் இ-கூட்டங்களையும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்துவதற்கு நாம் தொடர்ந்தும் ஷ ”ம் மற்றும் ஏனைய இணையவழி தொடர்பூட்டல் தளங்களைப் பயன்படுத்தி வருகின்றோம்.

2022 இல் நாம் பாரிய எண்ணிக்கையிலான இணையவழி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி, பொருட்கள் மற்றும் சக்தி பயன்பாட்டைக் குறைத்துள்ளோம். மேலும், நோய்தொற்று உச்சமடைந்த காலப்பகுதியில், இலத்திரனியல் கூட்டங்கள் மற்றும் பின்பற்றப்பட்ட கடன் உருவாக்க முறைமை போன்ற தெரிவுகள், அச்சிடப்பட்ட ஆவணங்களைக் குறைந்தளவில் பேணுவதற்கு எம்மை இயலச்செய்துள்ளன. மேலும், கடன் உருவாக்க முறைமையும், போக்குவரத்தினைக் குறைவடையச் செய்வதுடன், இது எரிபொருள் நுகர்வினைக் குறைத்துள்ளது. நேரடியற்ற விதத்தில், குறைவான வாகன நடமாட்டங்கள் ஊடாக, சில புகை வெளியேற்றங்களுக்கு இது பங்களிப்புச் செய்கிறது.

- மீள்புதுப்பிக்க சக்தியில் மூதலீடுகள்

நாம் ஹைட்பார்க் கோணரில் அமைந்துள்ள எமது கிளையில் சூரிய சக்தியை உருவாக்கும் பலகங்களைப் பொருத்தியுள்ளோம். 2019 இல் கிளையின் மீள்புதுப்பிக்க முடியாத சக்தி மீது தங்கியிருப்பதனைக் குறைக்கும் வழிமுறையாக நாம் 84 பலகங்களை பொருத்தினோம். பொருத்தியதுடன், அதன் செயல்திறன்வாய்ந்த விதத்தையும் பரீச்சித்தோம். களுத்துறை, அப்பாறை கிளைகிலும் பலகங்களைப் பொருத்தி, தேசிய மின் கட்டமைப்பில் தங்கியிருக்கும் நோக்கினைக் குறைப்பதுடன், மீள்புதுப்பிக்கத்தக்க சூரிய சக்தியை நாம் பயன்படுத்துவதை அதிகரித்து, சூழலுக்கான எமது தாக்கத்தைக் குறைவடையச் செய்துள்ளோம்.

- கழிவு முகாமைத்துவம்

கடதாசி கழிவகற்றல், கொழும்பிலும், சூழ உள்ள பிரதேசங்களிலும், தீவிரமான சவாலாகக் காணப்படுகின்றது. இச்சவாலைத் தீர்ப்பது மாநகர சபைக்கும், அரசுக்கும் பாரிய செலவினை உருவாக்குகின்ற அதேவேளை, முறையான கழிவகற்றல் மற்றும் முகாமைத்துவத்தினை நோக்கி பங்களிப்பதற்கு நாம் சிறிய வழிமுறை ஒன்றை மேற்கொண்டுள்ளோம். ஆய்வுக்குரிய ஆண்டு காலப்பகுதியில், தெரிவுசெய்யப்பட்ட அமைவிடங்களுக்கு கழிவு வாளிகளை வழங்குவதற்கு பிளாத்திக்கு கழிவு சேகரிப்பு வாளிகளை வழங்குகின்ற கம்பனியான எகோ ஸ்பிரிடன்லெஸ் (நுஊழு ளுனினைடநள) நிறுவனத்துடன் நாம் பங்காளியானோம்.

| வகை | கழிவுகளை நாம் எவ்வாறு கையாள்கின்றோம் |
|---|---|
| உணவுக் கழிவு | வெவ்வேறாகச் சேகரித்து, கொழும்பு மாநகர சபை கழிவு சேகரிப்பாளர்களிடம் கையளித்தல் |
| பொலித்தீன் கழிவு | வெவ்வேறாகச் சேகரித்து, கொழும்பு மாநகர சபை கழிவு சேகரிப்பாளர்களிடம் கையளித்தல் |
| பிளாத்திக் கழிவு | பிளாத்திக்கு சேகரித்தல் வாளிகளில் சேகரித்து, எக்கோ ஸ்பிரிடன்லெஸ் நிறுவனத்திடம் கையளித்தல். |
| கண்ணாடிக் கழிவு | வெவ்வேறாகச் சேகரித்து, கொழும்பு மாநகர சபை கழிவு சேகரிப்பாளர்களிடம் கையளித்தல் |

- நகர விவசாயம்

“சிறந்த தொடக்கத்திற்கான சிறிய படிமுறை” - அறிவைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் மரக்கன்றுகள் மற்றும் விதைகளை விநியோகித்தல் ஊடாக, நகர விவசாயத்தை ஊக்குவிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை நாம் ஆரம்பித்துள்ளோம். பல வழிகளிலும், வெகுமதியளிக்கப்படுகின்ற நகர விவசாயத்தை மேற்கொள்வதற்கு வசதியான விதத்தில் மக்களை இயலச்செய்வதற்கு இது மிக முக்கியமானதாகும்.

இந்நிகழ்ச்சித்திட்டம், முன்னாள் தலைவி திருமதி மஞ்சநாயக்க அவர்களின் வழிகாட்டலின் கீழ், அத்துடன், வங்கியின் சிரேஷ்ட தலைமைத்துவத்தின் பங்களிப்புடன் ஹைட்பார்க் கோணர் கிளையில் தொடக்க நிகழ்வு இடம்பெற்றது. கமத்தொழில் திணைக்களத்தின் அதிதிகள், மேல் மாகாணத்திற்கான மாவட்ட விவசாய ஆலோசகர் திரு. சமித்த மதுசங்க, பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சமன்மலி பெர்னாந்து மற்றும் உதவி மாகாண விவசாயப் பணிப்பாளர் சுபாஷினி பிரேமரத்ன ஆகியோர் அழைக்கப்பட்டவர்களில் உள்ளடங்கி இருந்தனர்.

## நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

மேற்குறித்த அணுகுமுறைகள் ஊடாக, சூழலுடன் தொடர்புபட்ட பல நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கு நாம் பங்களிக்கின்றோம்.

| | |
|---|---|
|  | மீள்புதுப்பிக்கத்தக்க சக்திப் பயன்பாடு |
|  | பொருட்களை பொறுப்புடன் நுகர்த்தல் மற்றும் பொறுப்புமிக்க அகற்றும் முறைகள் |
|  | மூலவளங்களின் எமது நுகர்வானது, மூலவளங்கள் அழிந்து போவதைக் குறைப்பதற்கும், காபன் சுவடுகளைக் குறைப்பதற்கும் உதவுவதற்கு மேலும் குறைக்கப்பட வேண்டும். |

## மூலதன மாறுதலடைதல்களும், விட்டுக்கொடுப்பும்

பொறுமதி உருவாக்குகின்ற சில செயற்பாடுகள், ஏனைய மூலதனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் செலவு மட்டமொன்றைக் கொண்டவை. பின்வரும் பெறுமதி உருவாக்கச் செயற்பாடுகள், சாதகமான மற்றும் பாதகமான இரு வழிகளிலும் குறுகிய காலத்திலும், நீண்ட காலத்திலும் நிதியியல் மூலதனத்தையும், இயற்கை மூலதனத்தையும் பாதிக்கின்றன.



காகித பயன்பாட்டை மாற்றியமைக்கும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, ஊழியர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கிறது



மீள்சுழற்சி மற்றும் மீண்டும் பயன்படுத்தப்படும் பொருள்கள், சமூக மற்றும் தனிநபர்களுக்கு வாழ்வாதாரமாக மாறும்.

நகர்ப்புற விவசாயம் நேர்மறையான சமூக உணர்வுகளை உருவாக்குவதோடு, சிறு விவசாயிகளின் விவசாயத்திற்கு ஆதரவுகளையும் வழங்குகிறது

தனியார் கூட்டாண்மை, புதிய பங்குதாரர்களையும், விநியோகத்தர்களையும் கொண்டுவருவதன் மூலம் தொடர்புடைய மூலதனத்தை வளப்படுத்துகிறது



தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, வளங்களின் பயன்பாட்டைக் குறைவடையச் செய்து, பரிமாற்ற சொத்துத் தளத்தை அதிகரிக்கிறது.



மேலே குறிப்பிட்டுள்ள தொழில்நுட்பத் தீர்வுகள், தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மேம்பாட்டில் வங்கியின் அறிவுசார் தளத்தை அதிகரிக்கச் செய்கிறது.

விட்டுக்கொடுப்புகள்

தொழில்நுட்பத் தீர்வுகள், மீள்புதுப்பிக்கதக்க சக்தி உற்பத்திகளில் என்பவற்றில் முதலீடு செய்யும் போது, நிதியியல் மூலதன விட்டுக்கொடுப்பு

## உபாயரீதியான பெறுமதி உருவாக்கம்

வங்கி, பசுமைச் சக்தி கருத்திட்டங்களுக்கு கடன்களைப் பகிர்ந்தளிக்கத் தொடங்கியுள்ளது. சூரிய சக்தி மற்றும் ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க, நிலைபெறத்தக்க தீர்வுகளில் வளம் பெறத்தக்க அத்துடன், பெறுமதி வாய்ந்த மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி கருத்திட்டங்களுடன் கூடிய தொழில்களுக்கு நிதி பகிர்ந்தளிப்பை நாம் துரிதப்படுத்வுள்ளோம்.

இயற்கை மூலதனத்தை முகாமைசெய்வதற்கு, கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை கிடைக்கப்பெறாமை, நிலைபெறுதன்மைக்கான எமது அணுகுமுறையில் மேசமான குறைபாடகக் காணப்படுகின்றது என்பதை நாம் புரிந்து கொள்கின்றோம். இதன் விளைவாக, மீள்புதுப்பிக்கத்தக்க மற்றும் மீள்புதுப்பிக்க முடியாத சக்தி மூலங்கள், நீர் மற்றும் உக்காத அத்துடன் உக்கத்தக்க மூலவளங்களின் நுகர்வுக்கு ஒருவர் பொறுப்புக் கூறத்தக்கதாகவிருக்கும் முறையான முகாமைத்துவ அணுகுமுறையினைக் கூட்டினைப்பதற்கு எமக்கு உதவக் கூடிய வழிகளை நாம் தற்போது தேடி வருகின்றோம்.

எமது தொழிற்பாடுகள் இயற்கை மூதனம் மீது நேரடித் தாக்கங்களைக் கொண்டிருப்பதனால், நுகர்வினை அடையாளப்படுத்துவதன் வாயிலாக, இத்தாக்கங்களை படிப்படியாக மதிப்பிடுகின்ற செயன்முறையினை தற்போது நாம் முன்னெடுத்து வருகின்றோம். எவ்வாறிருப்பினும், சிறியளவிலான வங்கி வலயமைப்பு என்ற வகையில், எமது வங்கித் தொழில் செயற்பாடுகள் தொழிற்துறையுடன் ஒப்பிடுகையில், சூழலுக்கு ஒப்பீட்டளவில் குறைவான தாக்கத்தினையே கொண்டுள்ளன.

| காலவறையறைஎதிர்கால ஒருமுகப்படுத்தல் | |
|---|---|
| குறுகிய காலம் | • “நிலைபெறத்தக்க சூழல்” என்பதனைப் பின்பற்றுவதற்கு, ஊழியர்களை ஊக்குவித்தல், வாடிக்கையாளர்களுடன் வெளிவாரியாக அத்துடன், உள்ளக நிருவாகம் இரண்டிற்கும் காகிதங்களற்ற செயன்முறையை நோக்கி நகருதல். |
| நடுத்தர காலம் | • பசுமை நிதியளித்தல்.<br>• முறையான தரவு அளவீட்டுப் பொறிமுறையுடன் கூடிய இயற்கை மூலதனத்தை முகாமை செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை (நுகர்வைக் கண்டுபிடித்தல்) |
| நீண்ட காலம் | • வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்குவதில் இயற்கை மூலவளங்களை உபயோகித்தல் (பசுமையான கிளைகள் மற்றும் மீள்புதுபிக்கத்தக்க சக்தி) |





# கூட்டுறவு ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்


நிறுவன ஆளுகை பற்றிய தலைவரின் செய்தி | 126

நிறுவன ஆளுகை | 127

நிறுவன ஆளுகை மீதான
கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை | 136

இடர் முகாமைத்துவம் | 169

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான
பணிப்பாளர்களின் கூற்று | 179

உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான கணக்காய்வாளர்
நாயகத்தின் உத்தரவாத அறிக்கை | 181

சபையின் உப குழு அறிக்கைகள்:

சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு | 183

சபையின் நியமனக் குழு | 186

சபையின் தொடர்புடைய தரப்பினருடனான பரிவர்த்தனை
மீளாய்வுக் குழு | 188

சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை | 190

சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக்குழு
அறிக்கை | 191

பணிப்பாளர்களின் அறிக்கை | 193

பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரியின்
பொறுப்புக் கூற்று | 197

# நிறுவன ஆளுகை பற்றிய தலைவரின் செய்தி

எமது நிறுவன ஆளுகை அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் அளவற்ற மகிழ்ச்சியடைகின்றேன். பங்குதாரர் நலன்களுக்கிடையில் பொருத்தமான சமநிலையினைப் பேணுகின்ற அதேவேளை, வங்கியில் பொறுப்புமிக்க வளர்ச்சியினைச் செலுத்துவதற்கு ஆற்றல்வாய்ந்த நிறுவன ஆளுகைக்கான தேவை பற்றி சபை கூட்டாக விழிப்புணர்வுடன் இருக்கின்றது.

## எமது அணுகுமுறை

எமது தலைமைத்துவம் வகித்தலானது, நிறுவன ஆளுகை பற்றிய உயர்வான தரநியமங்களை நிலைநிறுத்துவதற்கும், உறுதிப்படுத்தவதற்கும் அவசியப்படுத்துவதுடன், வங்கி முழுவதும், பொறுப்புக் கூறலையும், நியாயத்தன்மையினையும், வெளிப்படத்தன்மையினையும் உறுதி செய்கின்றது. வங்கியின் நிறுவன ஆளுகைக் கட்டமைப்பானது, கடுமையாக ஒழுங்குமுறைப்படுத்தப்படும் தொழிற்துறையொன்றில் அத்துடன், சவால்மிக்க தொழிற்சூழலில் உத்வேகம்மிக்கதாகவும், தொடர்புடையதாகவும் விளங்குகின்றது. ஆளுகைக் கட்டமைப்புக்கு துணையளிக்கின்ற தொழிற்துறை ஒழுங்குவிதிகளும், உள்ளகக் கொள்கைகளும், உள்ளக அபிவிருத்திகளுக்கு ஏற்றவாறு, சர்வதேச சிறந்த நடத்தைகளுக்கெதிராக, கிரமமாக மீளாயப்படுவதுடன், சர்வதேச நடத்தைகளுக்கெதிராக அளவிடப்படுகின்றன.

வங்கியின் நிறுவன ஆளுகை நடத்தைகள் மீதான வெளிப்படுத்தல்களை அதிகரிப்பதற்கு, கம்பனியின் விவகாரங்கள் பற்றிய பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நிறுவன ஆளுகை மீதான மிகவும் விரிவான அறிக்கையானது, ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பொருத்தப்பாட்டின் பாகத்தினை உருவாக்குகின்றது.


அதற்கமைய, எச்டிஎப்சி வங்கியானது, கட்டாய அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கு ஏற்புடையவாறான 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையினை (அத்துடன் தொடர்ந்து வந்த அதற்கான திருத்தத்தினை) பின்பற்றியது. எமது இணங்குவித்தல் நிலமைகள் நிறுவன ஆளுகை அறிக்கையின் முதலாம் பிரிவில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, 2017 ஆம் ஆண்டில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் என்பன மூலம் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவையினையும் எச்டிஎப்சி பின்பற்றியது. எமது இணங்குவித்தல் நிலமைகள் நிறுவன ஆளுகை அறிக்கையின் இரண்டாம் பிரிவில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

மேலும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை பட்டியலிடல் விதிகள் (7.10 ஆம் பிரிவின் கீழ்) எமது இணங்குவித்தல் நிலமைகள் நிறுவன ஆளுகை அறிக்கையில் 3 ஆம் பிரிவில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

## சுயாதீன உத்தரவாதம்

மேலும், மத்திய வங்கியின் இணங்குவித்தல் தொடர்பிலான நிறுவன ஆளுகைப் பணிப்புரைகளுடன் வெளிவாரி கணக்காய்வாளர் கண்டறிந்தவைகளை நாம் அறிக்கையிடுகின்றோம். தொடர்புடைய சேவைகள் நடத்தைகள் கூற்று 4400 (SLSRS 4400) மீதான இலங்கை தரநியமத்தின் கீழ் வழங்கப்பட்ட கணக்காய்வாளர்களின் உண்மையாக கண்டறிந்தவைகள், அறிக்கையின் கண்டறியப்பட்டவைகள் அனைத்தும் இவ்வறிக்கையினுள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.



டீ.சூசைப்பிள்ளை
தலைவர்

கொழும்பு, இலங்கை.

# நிறுவன ஆளுகை

## அறிமுகம்

பின்வரும் ஆளுகை அறிக்கையானது, வங்கியின் முறையான தொழிற்பாட்டுக்கு முக்கியமான நோக்குகளை எடுத்துக்காட்டுவதுடன், பணிப்பாளர்கள், நிறைவேற்றுத் தலைவர்கள் மற்றும் முகாமைத்துவம் என்ற வகையில், தலைமைத்துவமானது எவ்வாறு அதன் கடமைகளைப் பொறுப்புடன் செயலாற்றுகின்றது என்பது பற்றிய முக்கிய செயன்முறைகளை எடுத்துரைக்கின்றது. எச்டிஎப்சி சட்டம், இலங்கை மத்திய வங்கிப் பணிப்புரைகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மூலமான சிறந்த நடத்தைக் கோவைகள் என்பன மூலம் வேண்டப்பட்டவாறு, வங்கியின் ஆளுகை நடத்தைகளைக் கடைப்பிடித்தலை எடுத்துக்காட்டுகின்ற முக்கிய தலைப்புகளிலும் கவனம் செலுத்துகின்றது (124 - 166 ஆம் பக்கங்கள்).

## எமது ஆளுகை கட்டமைப்பின் நோக்கம்

வங்கியின் நிறுவன ஆளுகைக் கட்டமைப்பானது, வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை, இணங்குவித்தல் என்பவற்றைப் பேணுவதில் தலைமைத்துவத்தின் பொறுப்புக்கூறலை உறுதிசெய்கின்றது. ஆளுகைக் கட்டமைப்பின் ஊடாக, உபாய மற்றும் தொழிற்பாட்டுத் தீர்மானங்கள் மீதான தத்துவம் மற்றும் அதிகாரத்தின் ஒதுக்கீட்டை வங்கி நிறைவேற்றுகின்ற அதேவேளை, விதிகளுடனும், சட்டங்களுடனும் ஊழியர்களின் இணங்குவித்தல் பற்றிய செயற்திறன்வாய்ந்த மேற்பார்வையினைச் செயற்படுத்துகின்றது. மேலும், பொறுப்புகளைப் பொருத்தமானவாறு ஒப்படைப்பதன் ஊடாக, நிறுவன ஆளுகை பங்குதாரர்களிடமிருந்து சமூகத்திற்கான பங்குதாரர் எதிர்பார்க்கைகளை நிறைவேற்றுவதற்கு நிறுவன ஆளுகை தலைமைத்துவத்தை இயலச்செய்கின்றது.


வங்கியின் அதியுயர் ஆளுகை அமைப்பு (சபை) சபைத் துணைக்குழுக்கள் மற்றும் நிறைவேற்றுக் குழுக்களுடன் ஒன்றிணைந்து வங்கித்தொழில், நிதி, ஆளுகை மற்றும் தொழிற்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்களைக் கொண்ட தொகுதியுடனான இணங்குவித்தலை உறுதிசெய்கின்றது.

## ஆளுகைக்கான அணுகுமுறை

மீளாய்வுகள் மற்றும் அவசியமான சீராக்கங்களைக் கொண்ட ஆண்டுகளாக வங்கியானது அனைத்தையும் உள்ளடக்கிய ஆளுகை கட்டமைப்பொன்றினை ஏற்றுக்கொண்டுள்ளது. இது, எமது பங்குடமையாளர்கள், ஒழுங்குமுறைப்படுத்துனர்கள், அரசாங்கம், வாடிக்கையாளர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் என்போருக்கு நிதியியல் மற்றும் தொழிற்பாட்டுப் பொறுப்புக்கூறலை உறுதிசெய்கின்ற, முறையான ஆளுகைக் கட்டமைப்பு, பரந்த சாசனம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

## ஆளுகைக் கட்டமைப்பு

வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பானது, சிறந்த ஆளுகை தரநியமங்கள். வெளிவாரி ஒழுங்குவிதிகள் மற்றும் சபை சாசனம் என்பற்றின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. அதன் மையத்தில் மூன்று முக்கிய தலைமைத்துவ மட்டங்கள் காணப்படுகின்றன. அவை: சபை, பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் முகாமைத்துவக் குழுக்களுடனான முக்கிய முகாமைத்துவ ஆளணி. பங்குதாரர் நலன்கள் பேணப்படுகின்றன என்பதனையும் காலப்போக்கில் பெறுமதி தொடர்ந்தும் உருவாக்கப்படுகின்றது என்பதையும் உறுதிசெய்வதன் முக்கியத்தை வங்கியின் தலைவரும், அலுவலர்களும் அறிந்துள்ளனர்.



# நிறுவன ஆளுகை

## சபை

வங்கியின் உபாயம் மற்றும் அதனைச் சூழவுள்ள குறிக்கோள்கள் என்பவற்றை எய்துவதை நோக்கிய பொறுப்புடன் கூடிய கூட்டான தலைமைத்துவ வகிபாகத்தை சபை ஆற்றுகின்றது. வங்கியின் உயர்மட்ட படிநிலை மட்டமாக சபையானது, அதன் உபாயம், கொள்கைகள், நிறுவன கலாசாரம் உள்ளடங்கலாக, வங்கியின் பணிப்புரையினை நிர்ணயிக்கின்றது. சபையானது, செயற்திறன் வாய்ந்த ஒழுக்கநெறி சார்ந்த, வெளிப்படையான நிதியியல் முகாமைத்துவ நடத்தை மற்றும் பங்குதாரர்களின் சிறந்த நலனுக்காக இலக்குகளுக்கு எதிரான செயலாற்றம் என்பவற்றை மேற்பார்வை செய்வதை முதன்மையாக மேற்கொள்வதுடன், பங்குதாரர்களின் சிறந்த நலனுக்காக நிறைவேற்றுத் தலைவர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுகின்றனர் என்பதனை உறுதி செய்கின்றது. முகாமைத்துவத்தை வழிநடாத்துவதற்கு அவர்கள் பொறுப்புடையவர்களாவர். ஆயினும், பங்குதாரர்களையும், ஏனைய பங்குதாரர் நலன்களையும் பாதுகாத்தல் தவிர, வங்கியின் கருமங்கள் மீது தேவையற்ற செல்வாக்குச் செலுத்தாது அதிகாரத்தையும் தத்துவங்களையும் சமநிலையாக அவர்கள் பேணுகின்றனர் என்பதை உறுதிசெய்கின்றது.

## சபையின் உள்ளமைப்பு

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரகாரம் சபையானது, வங்கியின் நாளாந்த தொழிற்பாடுகளுக்கு நிறைவேற்று மேற்பார்வை அல்லது பொறுப்பு இன்றி நிறைவேற்றுத் தரமில்லாத பணிப்பாளர்களை மாத்திரம் உள்ளடக்குகின்றது. 2022 முழுவதும் சபை 11 பணிப்பாளர்களை உள்ளடக்கி இருந்தது. 2022 இல் நியமிக்கப்பட்ட மற்றும் விலகிச் சென்ற பணிப்பாளர்களை பின் வருபவை எடுத்துக்காட்டுகின்றன.

| நியமனம் | பதவி விலகல் | இராஜினாமா |
|---|---|---|
| திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி<br>(2022.04.28 இலிருந்து நியமனம்) | கலாநிதி எஸ்.என்.மொராயஸ்<br>(2022.06.29 முதல் சபையிலிருந்து ஓய்வு பெற்றார்) | திரு. பீ.ஏ.எஸ்.ஏ. குமார<br>(2022.03.02 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) |
| கலாநிதி பீ.ஏ. கிருஷாந்த<br>(2022.06.30 இலிருந்து நியமனம்) | | திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாபா பத்திர<br>(2022.04.28 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) |
| திரு. ஆர். சூரியாராச்சி<br>(2022.06.30 இலிருந்து நியமனம்) | | திரு. டீ.எம்.ஏ.கே.திசாநாயக்க<br>(2022.06.13 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) |
| திரு. ஆர்.பீ.ஏ. விமலவீர<br>(2022.11.14 இலிருந்து நியமனம்) | | திரு. ஆர்.பீ.ஏ. விமலவீர<br>(2022.11.28 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) |

## சபை நியமனங்கள், பதவிவிலகல்கள் மற்றும் பணிப்பாளர்களை அகற்றல்

வங்கியானது, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் உள்ளடங்கலாக, ஏற்புடைய ஆளுகைப் பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பணிப்பாளர்களை நியமிக்கின்றது. பதவிவழி பணிப்பாளர்களாக அதாவது, வீடமைப்புக்குப் பொறுப்பான அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதிநிதி ஒருவர், அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படுவதுடன், திறைசேரிக்கான செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி, இலங்கை மத்திய வங்கியினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நான்கு பணிப்பாளர்கள் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். வீடமைப்புக்குப் பொறுப்பான அமைச்சரின் பிரதிநிதி, நிதிக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் தொழில் அமைச்சரின் பிரதிநிதி அத்துடன், ஐந்து பங்குடமைப் பணிப்பாளர்கள் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். அனைத்து நியமனங்களும் மத்திய வங்கியின் பொருத்தமான, முறையான பிரமாணத்திற்கு உட்பட்டவையாகும். அதன் பின்னர், சபைக்கு பெயர் குறிக்கப்பட்டவர்கள் மீதான அவசியமான பரிந்துரைகளை பெயர் குறித்தல் குழு வழங்குகின்றது. அனுமதியளிக்கப்பட்டதன் பின்னர், பொருத்தமான மற்றும் முறையான ஆவணங்கள், அனுமதிக்காக இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்படும். அனைத்து புதிய நியமனங்களையும் வங்கி, கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கும், இலங்கை மத்திய வங்கிக்கும் அறிவிக்கின்றது. அதேபோன்று, அவர்களை அகற்றுவதையும் அறிவிக்கின்றது. நியமிக்கப்பட்டவுடன் ஒவ்வொரு பணிப்பாளரும் வேண்டப்பட்டவாறு பொருத்தமான பயிற்சியினைப் பெற்றுக்கொள்கின்றனர்.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பணிப்பாளர்களை மீளத்தெரிவு செய்வதற்கு பெயர் குறித்தல் குழு பரிந்துரைக்கின்றது. மீளத்தெரிவு செய்வதற்காக கருத்திற் கொள்ளப்படுகின்ற போது, சபையின் பொறுப்புக்களுக்கான செயலாற்றுகையும், பங்களிப்பையும் குழு கவனத்தில் கொள்கின்றது.


## தேர்ச்சிகள், தகைமைகள் மற்றும் அனுபவங்கள்

எமது பணிப்பாளர் சபையானது, வயது, தொழில்சார் அனுபவம், நிபுணத்துவம் என்பவற்றில் பன்முகத்தன்மை கொண்டது. வங்கித்தொழில், நிதி, உபாயரீதியான தலைமைத்துவம் மற்றும் கொள்கை வகுத்தல் போன்றவற்றில் வேறுபடுகின்ற உள்நோக்கு மற்றும் அனுபவங்களுடன் கூடிய பல்வேறு தொழில்நுட்பத் தொழிற்துறை விடயப் பரப்புகளில் அவர்கள் நிபுணர்களாக விளங்குகின்றனர். அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் இருந்து கூட்டான அனுபவங்களின் பின்னணியை அவர்கள் கொண்டுள்ளார்கள்.


எமது பணிப்பாளர்களின் தொழில்சார் தகைமைகளும், அறிவும், வலிமையான உச்சமட்ட தலைமைத்துவ அணியொன்றினை உருவாக்குகின்ற அனைத்து பண்புக் கூறுகளையும் குறைநிரப்பல் செய்கின்றன. வங்கித் தொழிலில், அபிவிருத்தி நிதி, கணக்கீடு, கணக்காய்வு, பொருளியல், சட்டம், அரசாங்க சேவைகள், முகாமைத்துவ சேவைகள் மற்றும் நிருவாக விவகாரங்கள், மனிதவள முகாமைத்துவம் மற்றும் கைத்தொழில், பங்குரிமை மூலதனம், திறைசேரி போன்றவற்றில் பணிப்பாளர்கள், கூட்டான தொழில்சார் புத்திக்கூர்மையினைக் கொண்டிருக்கின்றனர்.

எமது பணிப்பாளர்களின் அனுபவம் மற்றும் தொழில்சார் தகமைகள் பற்றிய மேலதிக தகவல்கள் 58 - 60 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### வயது அடிப்படையிலான பன்முகத்தன்மை



## தொழில்சார் அனுபவம்




## சபையின் அதிகாரங்கள்

சபையின் அதிகாரங்கள் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன கூட்டிணைப்புச் சட்டம் மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த திருத்தங்கள் என்வற்றில் இருந்து பெறுவிக்கப்படுகின்ற அதேவேளை, வகிபாங்கள் மற்றும் பொறுப்புக்கள், அதேபோன்று, கடமைகளை நிறைவேற்றுவதற்கான சபையின் அதிகாரங்கள் என்பவற்றை சபை சாசனம் விவரிக்கின்றது. நிறுவன முகாமைத்துவத்தின் (முக்கிய முகாமைத்து ஆளணி) செயலாற்றத்தை சபை மேற்பார்வை செய்வதுடன், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம், வங்கித்தொழில் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கிப் பணிப்புரைகள், வழிகாட்டல்கள் மற்றும் கம்பனிச் சட்டம், கொழும்பு பங்குப் பரிவர்தனை பட்டியலிடுதல் மற்றும் நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவைகள் என்பவற்றுடன் அவர்கள் இணங்கி காணப்படுகின்றனர் என்பதையும் உறுதிசெய்கின்றது.

கடமைகளை நிறேவேற்றுவதில் கடன்களை வழங்குதல், ஆதனங்களை கையகப்படுத்தல், கையுதித்தல், ஒப்பந்தகளை கைசாத்திடுதல், ஆளணியை தொழிலுக்கமர்த்தல் அத்துடன், அவர்களது ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் உள்ளடங்கலாக முகாமைத்துவத்திற்கும், ஊழியர்களுக்கும் விதிகளை நிர்ணயித்தல் என்பவற்றிற்கான அதிகாரத்தை சபை கொண்டுள்ளது. மேலும், பிணையங்களில் கூட்டுத்தாபன நிதியங்களை முதலீடு செய்வதற்கும் அவர்கள் அதிகாரத்தைக் கொண்டுள்ளதுடன், கடன் பெறுவதற்கும், நிதியங்களைத் திரட்டுவதற்கும் அவர்களுக்கு அதிகாரமுள்ளது. எனினும், வங்கியின் வழமையாக தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு உரித்தளிக்கப்பட்ட ஏதேனும் நிறைவேற்று அதிகாரத்தை அல்லது தத்துவத்தை சபை கொண்டிருக்கவில்லை.

## சபையின் வகிபாகங்களும் பொறுப்புக்களும்

சபையின் முதன்மை வகிபாகமானது, வங்கியின் குறிக்கோள்களை அடைவதற்கான அதன் கடமைகளை நிறைவேற்றுகின்ற அதேவேளை, அதன் உபாயத்தினை நிர்னயித்து திருத்துவதாகும். சபை தொழிற்பாடுகளை நடாத்துகின்ற அதேவேளை, நியதிச்சட்டங்கள், ஆளுகை மற்றும் வங்கித்தொழில், சிறந்த நடத்தைகள் மற்றும் சட்டவாக்க அத்துடன், ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளால் எடுத்துரைக்கப்பட்டவாறான விதிகள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்கள் மூலம் நிர்ணயிக்கப்பட்டவாறான சபையின் வரையறைசெய்யப்பட்ட பொறுப்புக்களை அங்கீகரிப்பதற்கு அவர்கள் பொறுப்புடையவர்களாவர். சபையின் முக்கிய பொறுப்புக்களாவன :

| | |
|---|---|
| வங்கி உபாயம் மற்றும் விழுமியங்கள் | • வங்கியின் உபாயக் குறிக்கோள்கள் மற்றும் நிறுவன விழுமியங்களை அனுமதித்து மேற்பார்வை செய்கின்ற அதேவேளை, அவற்றை வங்கிக்கு தொடர்பூட்டுதல் அத்துடன், கிரமமான சபைக் கூட்டங்களை நடாத்துதல். |
| தொழில் உபாயம், இடர்நேர்வு முகாமைத்துவம், கொள்கைகள் | • வங்கியின் தொழில் உபாயத்தை அனுமதித்தல், இடர்நேர்வுகளை அடையாளப்படுத்தல், இடர்நேர்வுக் கொள்கை மற்றும் முகாமைத்துவப் பொறிமுறைகளை அனுமதித்தல், இடர்நேர்வுகளை முகாமை செய்வதற்கு முறையான நடைமுறைகளையும், முறைமைகளையும் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்தல்,<br>• வேண்டப்படுகின்ற போது கொள்கைகளை முக்கிய முகாமைத்துவத்துடன் முகாமை செய்தல், தொடர்பூட்டல் இணைப்புகளை ஸ்தாபித்தல் மற்றும் குறிக்கோள்களின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல். |
| முகாமைத்துவ ஆட்சேர்ப்பு | • தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி, முக்கிய முகாமைத்துவ ஆளணி, கம்பனியின் செயலாளர் ஆகியோரை இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரையின் பிரகாரம் நியமித்தல் மற்றும் அவர்களது பொறுப்புகளை வரைவிலக்கனம் செய்தல்.<br>• முக்கிய முகாமைத்துவத்திற்கான முறையான பதவி உரிமைத்திட்டத்தினை உறுதிசெய்தல். |
| செயலாற்றமும் மதிப்பீடும் | • பணிப்பாளர்கள், அவர்களது ஆளுகை நடத்தைகள் பற்றிய காலாந்தர மதிப்பீடு உள்ளடங்கலாக அவர்களது செயலாற்றத்தை ஆண்டுதோறும் மதிப்பிட வேண்டும்.<br>• பொது முகாமையாளரின் / பிரதம நிறைவேற்று அலுவலரின் அத்துடன் முகாமைத்துவ ஆளணியின் செயலாற்றத்தை கண்காணித்து மதிப்பிடுதல். |
| உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகள் | • கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் முகாமைத்துவக் கட்டுப்பாட்டு முறைமைகள் என்பவற்றின் வலிமையினை மீளாய்வு செய்தல்.<br>• சபைக் கொள்கைக்கு அமைவாக முக்கிய முகாமைத்துவ ஆளணி மூலமான வங்கி விவகாரங்களில் முறையான மேற்பார்வையினை உறுதிசெய்தல்.<br>• வெளிவாரி கணக்காய்வாளர்களை நியமிப்பதில் உரிய விழிப்புக் கவனம். |
| மூலதனப் போதுமை | • நியதிச்சட்ட நிபந்தனைகளால் வேண்டப்பட்டவாறு வங்கி நன்கு மூலதனமிடப்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்துள்ளது. |
| பங்குதாரர் உறவுகள் | • பங்குதாரர் தொடர்பூட்டல் கொள்கையை நடைமுறைப்படுத்துவதை அனுமதித்தல்.<br>• ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலை மதிப்பிடுதல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துனர்களுடன் செயல்திறன்வாய்ந்த உறவினைப் பேணுதல். |

## சபை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் குழு

வங்கியின் இடநேர்வு முகாமைத்துவம் மற்றும் தணிப்பின் முக்கிய பொறுப்பும், மேற்பார்வையும் சபையிடமே காணப்படுகின்றது. சபை பொறுப்புக்களை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கு ஒப்படைத்துள்ளது. குழுவின் ஆய்வெல்லை இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுடன் அணி சேர்ந்துள்ளது. குழு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணியின் உள்ளமைப்பு மற்றும் தன்மையினை நிர்ணயிப்பதில் சபை இதைக் கடைப்பிடிக்கின்றது. குழு, தலைவர் உள்ளடங்கலாக, வங்கியின் பணிப்பாளர்களை உள்ளடக்குவதுடன், ஏற்கனவே காணப்படுகின்ற இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை வலுப்படுத்தல், அதனை மீளாய்வு செய்தல் மற்றும் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுதல் என்பவற்றுக்கு மீள் உத்தரவாதமளிப்பதற்கு கிரமமாகக் கூடுகின்றது.

வங்கியின் இடர்நேர்வுகள் மற்றும் முகாமைத்துவத்தை உறுதி செய்வதற்கு முக்கிய முகாமைத்துவ ஆளணியுடன் நெருங்கிப் பணியாற்றுகின்ற குழுவிடம் இருந்து சபை கிரமமான தொடர்பூட்டலையும், அறிக்கைகளையும் பெற்றுக்கொள்கின்றது. சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளுக்கு அமைவாக, கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் எல்லைகளின் பிரகாரம் சபை சார்பில் குழு தீர்மானங்களை மேற்கொள்கின்றது.

சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, தொடர்புடைய முகாமைத்துவத் தகவல்களைப் பெற்றுக்கொண்டு, இடர்நேர்வு ஏற்றுக்கொள்ளும் அளவை உன்னிப்பாகக் கண்காணிக்கின்ற அதேவேளை, அனைத்து உள்ளக மற்றும் வெளிவாரி இடர்நேர்வுகளுக்கும் எதிராக வங்கியின் வலிமையை மதிப்பிடுவதில் குழுவிடம் இருந்து அறிக்கைகளைக் கோருகின்றது. பொருத்தமான இடர்நேர்வு மட்டங்களை முகாமைத்துவம் கடைப்பிடிப்பதை குழு மதிப்பிட்ட அதேவேளை, சாத்தியமான அல்லது நடைமுறை இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு, குறித்துரைக்கப்பட்ட படிமுறைகளை முகாமைத்துவம் பின்பற்றுவதை உறுதிசெய்தது. இலாபத்தன்மை மிக்கதாக இருப்பதற்கும், நிதியியல் ரீதியாக உறுதியாக இருப்பதற்குமான வங்கியின் இயலுமையினை இடர்நேர்வுக்குள்ளாகுதல் தடைப்படுத்துவதில்லை என்பதை உறுதி செய்வதற்கு மேலதிகமாக, சபையும், சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவும், அதன் செயலாறமற்ற கடன்களைக் குறைப்பதற்கான வங்கியின் இயலுமையுடன் ஒருங்கிணைந்த அத்தகைய இடர்நேர்வுகளை மதிப்பீடுசெய்த அதேவேளை, சொத்துக்களின் ஆரோக்கியமான மட்டத்தையும் பேணி வருகிறது.

## சபையின் நிகழ்சிநிரல் 2022

பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களைக் குறைத்தல் மற்றும் அதன் கடன் பெறுனர்களுடனான வங்கி எதிர்கொள்கின்ற தளம்பல்கள் பற்றிய அவற்றின் மதிப்பீடு மற்றும் கலந்துரையாடல் என்பவற்றுக்குப் புறம்பாக, சபை 2022 இல் பல கருமங்களில் கவனம் செலுத்தியது. கடன் அனுமதி மற்றும் அறவீட்டு முயற்சிகளை வலுப்படுத்துகின்ற அதேவேளை, வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான நிவாரணத்தை வழங்குவதன் மீது கவனம் செலுத்துவதற்கான சபையின் தேவையை பொருளாதார நெருக்கடி வலியுறுத்தியது.

## தகவல்களும் மதியுரையும்

ஏதேனும் தொழிற்பாட்டு மற்றும் தொழில்சார் கருமங்கள் பற்றி முக்கிய முகாமைத்துவ ஆளணி மற்றும் சபைக் குழுக்கள் மூலம் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை, கூற்றுகளை மற்றும் தகல்களை சபை பெற்றுக்கொள்ளலாம். அவர்களது கடமைகளை செயல்திறன்வாய்ந்த விதத்தில் நிறைவேற்றுவதற்கு அவசியமான தகவல்களுக்கும், மூலவளங்களுக்கும் அவர்கள் பெறுவழியினைப் பெற்றுக்கொள்கின்றனர். மேலும், நியாயமான கோரிக்கைகளின் மீது சுயாதீன தொழில்சார் மதியுரையினை வங்கியின் செலவில் சபை பெற்றுக்கொள்ள முடியும்.

சபைப் பத்திரங்கள் போன்ற கூட்டங்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு, டீழுயசன ீயுஊ மொன்பொருள் அவர்களை இயலச்செய்கின்றது, இது, கூட்டங்களுக்கு முன்னர், அவசியமான தயார்படுத்தல்களை ஆராய்வதற்கும், மேற்கொள்வதற்கும் போதுமான காலத்தை அவர்களுக்கு வழங்குகின்றது.

சபைக் கூட்டக் குறிப்புகள் பதிவு செய்யப்பட்டு, கூட்ட நடைமுறைகளைக் கலந்துரையாடுவதற்கு, சபைக்கு போதியளவு விபரங்கள் வழங்கப்படுவதுடன், அவசியமான நடவடிக்கைகளை, தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவர்களை இயலச்செய்கின்றது. சபைக்கான கலந்துரையாடல்கள், சபையின் தீர்மானங்கள் மற்றும் தீர்வுகள், கலந்துரையாடப்பட்ட விடயங்கள், முரண்பாடான பிரச்சினைகள், இடருக்குள்ளாகும் தன்மை மற்றும் இடர்முகாமைத்து வழிமுறைகள் என்பவற்றைக் கூட்டக்குறிப்புகள் உள்ளடக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக, ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அத்துடன், சபை மூலம் பொறுப்பாணையளிக்கப்பட்ட உபாயங்கள் மற்றும் கொள்கைகள் என்பவற்றை அவர்கள் கடைப்பிடிப்பதன் மீது, நிறைவேற்றுத் தலைமைத்துவத்தின் உறுதிப்படுத்தல்களை உள்ளடக்க வேண்டும்.

## அக்கறை முரண்பாடுகள்

வங்கிக்கு அல்லது தொடர்புடைய தரப்பினர்களுக்கு, தொடர்புபட்ட செயற்பாடுகள் மற்றும் கடமைப் பொறுப்புகளில் பணிப்பாளர்கள், வங்கியின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய முரண்பாட்டை ஏற்படுத்தும் சாத்தியம் உள்ள ஏதேனும் நிகழ்வுகளை அல்லது நோக்கைத் தவிர்க்க வேண்டும். வாக்களிப்பை வேண்டுகின்ற ஏதேனும் விடயத்தில், பணிப்பாளர் ஒருவர் அல்லது நெருங்கிய உறவினர், கணிசமான அக்கறையினைக் கொண்டிருப்பாராயின், விடயத்துடன் தொடர்புப்பட்ட பணிப்பாளர்/ பணிப்பாளர்கள் ஏதேனும் தீர்மானத்தில் வாக்களிப்பதில் இருந்து விலகியிருக்க வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, பணிப்பாளர்கள் மூலமான தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து தோன்றக்கூடிய ஏதேனும் முரண்பாட்டை, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக்குழு கண்காணித்து, நிர்வகித்து, வங்கியின் நலன்களைப் பாதுாப்பதற்கு, வெளிப்படையான மற்றும் ஒழுக்கநெறி சார்ந்த நடத்தையினை உறுதிசெய்கின்றது. ஒப்பந்தங்களில் ஏதேனும் நலனுடன் கூடிய பணிப்பாளர்கள், அவர்களின் நலனில் நன்மையை சபைக்கு வெளிப்படுத்தி அதனை கூட்டக் குறிப்புகளில் பதிவுசெய்ய வேண்டும்.

அத்தகைய ஆர்வ முரண்பாடு நிகழுகையில், முரன்பாட்டில் ஈடுபாடு எதனையும் கொண்டிராத பணிப்பாளர்களின் பங்கேற்புடன், சபைக் கூட்டத்தின் போது விடயம் முக்கியத்துவம்மிக்கதா என்பதை சபை பரிசீலிக்கும். வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம், இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை விதிகளின் ஏற்பாடுகளுக்கு இசைவாக இது காணப்படுகின்றது.

ஏனைய கம்பனிகளில் பணிப்பாளர்களின் பதவிகள்
பின்வரும் பணிப்பாளர்கள் வேறு நிறுவனங்களில் தலைமைத்துவ / சபை பதவிகளையும் வகிக்கின்றனர்.

| பெயர் | நிறுவனங்கள் | பதவிகள் | நியமனத்தின் தன்மை |
|---|---|---|---|
| சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்) | இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு கண்காணிப்பு சபை | பணிப்பாளர் | நிர்வாகம் சாராத |
| கலாநிதி பீ.ஏ.கிருஷாந்த (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்) | பனை அபிவிருத்தி சபை | தலைவர் | நிறைவேற்று |
| திரு. ஆர். சூரியாராச்சி (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | தலைவர் | நிறைவேற்று |
| | நகர அபிவிருத்தி அதிகார சபை | சபை உறுப்பினர் | நிர்வாகம் சாராத |
| | நகர்ப்புற குடியேற்ற அபிவிருத்த அதிகார சபை | சபை உறுப்பினர் | நிர்வாகம் சாராத |
| | கோப் லை/ப் இன்ஷுவரன்ஸ் கம்பனி லிமிட்டெட் | உப தலைவர் | நிர்வாகம் சாராத |

## சபையின் கூட்டச் செயன்முறை

ஒரு ஆண்டில் குறைந்தது 12 தடவைகள் இடம்பெறுகின்ற கூட்டங்களில் கிரமமாக சபை சந்திக்கின்றது. சபைக் கூட்ட பஞ்சாங்கத்திற்கு அமைவாக, ஒவ்வொரு கூட்டத்திற்கும் முன்னர், 14 நாட்களில் அல்லது கூட்டம் மாற்றப்படவில்லையாயின் 07 நாட்களுக்குள் பெற்றுக்கொள்கின்ற பெரும்பான்மையான பணிப்பாளர்களின் முனைப்பான பங்கேற்புடன் கூட்டங்கள் இடம்பெறுகின்றன. அவசர சபைக் கூட்டங்களுக்கு விதிவிலக்காக இது இடம்பெறுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் 14 நாள் முறையான அறிவித்தல் தள்ளுபடி செய்யப்படும்.

கூட்டத்தின் போது தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றிய நிகழ்ச்சி நிரல், கூட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய பத்திரங்களுடன் சேர்த்து பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும். இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் வியாபார ஊக்குவிப்பு தொடர்பில் நிகழ்ச்சி நிரலில் முன்மொழிவுகளையும், விடயங்களையும் பணிப்பாளர்கள் உள்ளடக்கலாம். நிகழ்ச்சி நிரலானது, ஒன்றில் அச்சிடப்பட்ட பிரதிகளாகப் பகிரப்படும் அல்லது டீழயசன ீயுஊ மொன்பொருளில் பதிவேற்றம் செய்யப்படும். பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய முன்மதிமிக்க செயலாற்றுகையினை ஆராய்வதற்கு கூட்டக் குறிப்புக்கள் பதிவு செய்யப்படும். பணிப்பாளர்களின் ஆராய்வுகளை மதிப்பிடுவதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கான உசாத்துணைவு மையம் ஒன்றாக இது செயற்படுகின்றது.

## சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்தல்

ஒவ்வொரு பணிப்பாளரும் நிதியாண்டினுள் அனைத்துக் கூட்டங்களிலும் குறைந்தது மூன்றில் இரண்டிற்கு சமுகமளிக்க வேண்டும். கணிசமான சமுகமளிக்காமை காணப்படுமாயின், அவரது சமுகமளிக்காமைக்கான விளக்கங்களுடன், பணிப்பாளர் தலைவருக்கு மேன்முறையீட்டினைச் சமர்பிக்க வேண்டும். சபை சாசனத்தின் பிரகாரம், அத்தகைய மேன்முறையீடுகளை ஏற்றுக்கொள்வதா நிராகரிப்பதா என்பது பற்றிய இறுதி அதிகாரத்தை இலங்கை மத்திய வங்கியே கொண்டுள்ளது.

| சபைக் கூட்டங்களில் கலந்துகொள்ளல் - 2022 | | | |
|---|---|---|---|
| பெயர் | 31.12.2022 இல் பணிப்பாளர் நிலை | கூட்டங்களின் எண்ணிக்கை | பங்களித்த கூட்டங்கள் |
| திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க | தலைவர் மற்றும் பணிப்பாளர் (சுயாதீன, நிறைவேற்று அல்லாத) | 16 | 16 |
| திரு. எல்.ஈ. சுசந்த சில்வா | பணிப்பாளர் (சுயாதீன, நிறைவேற்று அல்லாத) | 16 | 16 |
| சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா | பணிப்பாளர் (சுயாதீன, நிறைவேற்று அல்லாத) | 16 | 15 |
| திரு. டப்ளியூ.எம். ஆனந்த | பணிப்பாளர் (சுயாதீன, நிறைவேற்று அல்லாத) | 16 | 15 |
| திரு. பீ.ஏ. லயனல் | பணிப்பாளர் (சுயாதீன, நிறைவேற்று அல்லாத) | 16 | 16 |
| திரு. டீ.எம்.எம்.எம். விஜயரத்ன | பணிப்பாளர் (சுயாதீன, நிறைவேற்று அல்லாத) | 16 | 13 |
| திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி (2022.04.28 இலிருந்து நியமனம்) | பணிப்பாளர் (சுயாதீன, நிறைவேற்று அல்லாத) | 10 | 10 |
| கலாநிதி பீ.ஏ. கிருஷாந்த (2022.06.30 இலிருந்து நியமனம்) | பணிப்பாளர் (சுயாதீன, நிறைவேற்று அல்லாத) | 7 | 6 |
| திரு. ஆர். சூரியாராச்சி (2022.06.30 இலிருந்து நியமனம்) | பணிப்பாளர் (சுயாதீனம் அல்லாத, நிறைவேற்று அல்லாத) | 4 | 4 |
| கலாநிதி எஸ்.என்.மொராயஸ் (2022.06.29 முதல் சபையிலிருந்து ஓய்வு பெற்றார்) | பணிப்பாளர் (சுயாதீன, நிறைவேற்று அல்லாத) | 8 | 8 |
| திரு. டீ.எம்.ஏ.கே.தசநாயக்க (2022.06.13 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | பணிப்பாளர் (சுயாதீனம் அல்லாத, நிறைவேற்று அல்லாத) | 7 | 7 |
| திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாபா பத்திரண (2022.04.28 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | பணிப்பாளர் (சுயாதீன, நிறைவேற்று அல்லாத) | 6 | 6 |
| திரு. பீ.ஏ.எஸ்.ஏ. குமார (2022.03.02 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | பணிப்பாளர் (சுயாதீன, நிறைவேற்று அல்லாத) | 2 | 2 |

## பணிப்பாளர்களின் ஊதியம்

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மீதான 3/2015 ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சி சுற்றறிக்கை மற்றும் அதனைத் தொடர்ந்த திருத்தங்கள் என்பவற்றுக்கு அமைவாக பணிப்பாளர் கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றன.

## ஊதிய மட்டங்களை நிர்ணயித்தல்

நிறைவேற்றுத் தலைமைத்துவ மட்டம், முக்கிய நிறைவேற்று ஆளணி மற்றும் ஊழியர்கள் விடயத்தில் ஊதிய மட்டங்களை நிர்ணயிப்பதில் மனித வளங்கள் மற்றும் ஊதியக்குழு முக்கிய பங்காற்றுகின்றது. பொது முகாமையாளர் / முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணி ஊதியங்களை நிர்ணயிப்பதில் சபைக்கு அவசியமான பரிந்துரைகளை அவர்கள் வழங்குகின்றனர். ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் புதுப்பிக்கப்படுகின்ற கூட்டு உடன்படிக்கையை அவர்களின் தீர்மானம் அடிப்படையாகக் கொண்டது. ஊதிய மட்டங்களை நிர்ணயிப்பதில் ஊழியர்களின் பொறுப்புகள், தொழிற்துறை நியமங்கள் மற்றும் அவர்களது செயலாற்றம் என்பவற்றைப் பிரதிபலிக்கின்ற அடிப்படை அளவு மட்டங்களின் நியாயமான மற்றும் சமத்துவமான மட்டங்களை குழு பரிசீலனையில் கொள்ளும். சிறந்த செயலாற்றுகைக்கான உரிமை ஊக்கத்தொகைகளையும் தலைமைத்துவத்தையும் ஊழியர்களுக்கு வழங்கவேண்டும் என்பதை குழு புரிந்துகொள்கின்றது.

விரும்பப்பட்ட ஊதிய மட்டங்களுக்கான இறுதி அனுமதியினைப் பெற்றுக்கொள்வதில் நிறைவேற்று தலைமைத்துவத்திற்கும் முக்கிய முகாமைத்து ஆளணியினருக்கும் சரியான நிதியியல் ஊக்கத்தொகைகளை குறித்தொதுக்குகின்ற வங்கியின் பணிப்பாளர் சபைக்கும், தொடர்புடைய அமைச்சருக்கும் குழு அதன் பரிந்துரைகளை முன்வைக்கின்றது.

## சபை குழு மதிப்பீடு

சபையானது, ஆண்டு தோறும் சுய மதீப்பீட்டை மேற்கொள்கின்றது. மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டில், சபை அதன் செயலாற்றத்தை மதிப்பீடு செய்தது. ஒவ்வொரு உறுப்பினரும், அவரது செயலாற்றத்தை மதிப்பீடு செய்து கண்டறியப்பட்டவற்றை சபைக்குச் சமர்ப்பித்தனர்.

## சபையின் செயலாளர்

சபையின் செயலாளர் என்பது, வங்கிக்கும் அதன் பங்குதாரர்களுக்கும் இடையிலான மிக முக்கிய இணைப்பாகும். செயலாளர், பணிப்பாளர்களுக்கு ஆலோசனையையும், மதியுரையையும் வழங்குவதில் உயர் அனுபவமும், தகைமையும் பெற்றவராக இருக்கின்ற அதேவேளை, தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கான அவர்களது கடைப்பிடித்தலினை உறுதிசெய்கின்றார். நிறுவன விடயங்கள் தொடர்பில் தொழில்சார் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு சபை கம்பனியின் செயலாளரை நியமிப்பதுடன், அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் அணுகத்தக்கவராகவும் காணப்படுகின்றார்.

சபையானது, இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கு இணங்க செயலாளரிடம் இருந்து செயல் பணிகளைப் பெற்றுக்கொள்கின்றது. சபைக் கூட்டங்களின் கூட்டக் குறிப்பைப் பேணுவதும் செயலாளரின் பொறுப்பாகும். தலைவரின் வழிகாட்டல்களுக்கு அமைவாக கம்பனியின் செயலாளர் கம்பனி நிகழ்ச்சி நிரலையும் வரைகின்றார்.

சபையின் செயலாளர், வருடாந்த மற்றும் அதிவிசேட பொதுக் கூட்டங்களையும் ஏற்பாடு செய்கின்ற அதேவேளை, அனைத்து தொடர்புடைய நோக்குகளும் நிறைவு செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கு தலைவருக்கும் உதவுகின்றார். இணங்குவித்தல் தொடர்புடைய நோக்குகள், தொடர்பூட்டப்பட்டு, உறுதிப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு வங்கி சார்பில் ஒழுங்குமுறைப்படுத்துனர்களுடன் தொடர்பாடலை பேணுவதும் செயலாளரின் பொறுப்பாகும்.

## சபைக் குழுக்கள்

வங்கியின் உபாய அத்துடன் தொழிற்பாட்டு செயல்திறன் வாய்ந்த தன்மையினை உறுதிசெய்வதற்கு பொறுப்புக்களுடன் கூடிய மற்றும் சிறந்த தீர்மானத்துடன் செயற்படுவதற்கான அதிகாரத்துடன் கூடிய குழுக்களை நியமிப்பதற்கு வங்கிக்கு அதிகாரமுள்ளது. சபை அதன் நம்பிக்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதில், துணைக்குழுக்கள் உதவியளித்து வங்கியின் உபாயப் பணிப்புரையினை மேற்பார்வை செய்வதற்கு சபையை இயலச் செய்கின்றன. ஏதேனும் குழுவுக்கு அதிகாரங்களையும், கடமைகளையும் சபை பொறுப்பளிக்கலாம். இருந்தும், அத்தகைய பொறுப்பளித்தலுக்கு மத்தியில், அத்தகையை கடமைகளையும், அதிகாரங்களையும் சபை பெறுப்பேற்கலாம். குழுக்கள் சபைக்கு பதிலளிக்கத்தக்கவை என்பதுடன், அவை கண்டறிந்தவை மற்றும் பரிந்துரைகள் பற்றி சபைக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற அதேவேளை, குழுக்களின் தீர்மானங்கள் மற்றும் அவற்றின் செயலாற்றங்கள் மீதும் சபை அதிகாரத்தை கொண்டுள்ளது. மேலும், சபை கணக்காய்வுக் குழு தவிர ஒவ்வொரு துணைக் குழுவிற்கும் செயலாளராக சபையின் செயலாளர் தொழிற்படுகின்றார்.

சபை துணைக்குழுக்களின் நோக்கலை மீதான தெளிவான எல்லைகளை சபை சாசனம் நிர்ணயிக்கின்ற அதேவேளை, குழுக்களின் பொறுப்புக்கள் மற்றும் அவர்களது கடமைகளை நிறைவேற்றுகையில், அவர்கள் பிரயோகிக்கத்தக்க தீர்மானத்தின் மட்டம் என்பவற்றை தொடர்பு நியதிகள் குறித்துரைக்கின்றன.

வங்கி ஐந்து துணைக் குழுக்களைக் கொண்டுள்ளது. அவை, சபைக் கணக்காய்வுக் குழு, சபை மனிதவள மற்றும் ஊதியக் குழு, சபை பதவி குறித்தல் குழு, சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, சபை தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல் மீளாய்வுக் குழு என்பனவாகும். இலங்கை மத்திய வங்கி நிறுவன ஆளுகை விதிகளின் கீழான பணிப்புரைகளின் பிரகாரம் வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஒவ்வொரு குழுவினதும் செயலாற்றத்தை வங்கி அறிக்கையிட வேண்டும்.

## சபைக் கணக்காய்வுக் குழு (குழுவின் அறிக்கை 188 ஆம் பக்கத்தில்)

| | |
|---|---|
| தலைவர் | சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜெயமஹா - நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர்<br>திரு. எல். ஈ. சுசந்த சில்வா - நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர் (2023.02.20 அன்று சபையிலிருந்து பதவிவிலகினார்) |
| உள்ளமைப்பு | 04 நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர்கள் |
| பொறுப்புகள் | • வெளிவாரிக் கணக்காய்வு, சேவைக் காலம் மற்றும் தொடர்புடைய நோக்குகளைப் பரிந்துரைத்தல்.<br>• கணக்காய்வாளர்களுக்கான தொடர்புடைய இலங்கை மத்திய வங்கி வழிகாட்டுதல்களை செயற்படுத்துதல்<br>• கணக்கீட்டு தரநியமங்களைப் பிரயோகித்தல் மற்றும் வங்கியின் நிதி அறிக்கை நடைமுறைகளை மீளாய்வு செய்தல்<br>• உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டை மேற்பார்வை செய்தல்: அதன் நோக்கெல்லை, வளங்கள், உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறை மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயலாற்றுகை ஆகியவற்றை மீளாய்வு செய்தல் |

## மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு (குழுவின் அறிக்கை 181-183 ஆம் பக்கங்களில்)

| | |
|---|---|
| தலைவர் | திரு. பி.ஏ. லயனல் - நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர்<br>திருமதி ஆர்.எம்.ஆர்.டபிள்யூ. மஞ்சநாயக்க - நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர் (2023.02.27 அன்று சபையிலிருந்து பதவிவிலகினார்) |
| உள்ளமைப்பு | 04 நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர்கள் |
| பொறுப்புகள் | • ஊதியக் கொள்கையைத் தீர்மானித்தல்<br>• உயர் தலைமைத்துவத்திற்கு குறிக்கோள்களை அமைத்தல்<br>• பிரத நிறைவேற்று அலுவலரின் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியின் செயலாற்றத்தை மதிப்பிடுதல்<br>• ஊதியம் மற்றும் நிதி ஊக்குவிப்புகளை திருத்துதல் |

## பதவிகுறித்தல் குழு (குழுவின் அறிக்கை 184-185 ஆம் பக்கங்களில்)

| | |
|---|---|
| தலைவர் | திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி - நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர்<br>திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க - நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர் (2023.02.27 அன்று சபையிலிருந்து பதவி விலகினார்) |
| உள்ளமைப்பு | 03 நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர் மற்றும் 01 நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளர் |
| பொறுப்புகள் | • பணிப்பாளர்கள் மற்றும் உயர் முகாமைத்துவ ஆளணியினரை தெரிவு செய்தல், நியமனம், மீள் தெரிவு ஆகியவற்றை மேற்பார்வை செய்தல்<br>• வழிமுறை உரிமைத் திட்டமிடலுக்கான பரிந்துரைகளை மேற்கொள்ளல் |

## ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு (குழுவின் அறிக்கை 189-190 ஆம் பக்கங்களில்)

| | |
|---|---|
| தலைவர் | திரு. பி.ஏ. லயனல் - நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர் |
| உள்ளமைப்பு | 04 நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர்கள் |
| பொறுப்புகள் | • கொடுகடன், திரவத்தன்மை, தொழிற்பாடுகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் உபாய இடர்நேர்வுகள் தொடர்பான அனைத்து இடர்நேர்வுகள் தவறாமல் மதிப்பிடுதல்<br>• முகாமைத்துவ மட்டக் குழுக்களின் மீளாய்வு |

## தொர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு (குழுவின் அறிக்கை 186-187 ஆம் பக்கங்களில்)

| | |
|---|---|
| தலைவர் | திரு. டப்ளியூ.எம். ஆனந்த நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர்<br>திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க - நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர் (2023.02.27 அன்று சபையிலிருந்து பதவி விலகினார்) |
| உள்ளமைப்பு | 03 நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர் மற்றும் 01 நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளர் |
| பொறுப்புகள் | • தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான மீளாய்வுகள், விளம்பரப்படுத்துதல், நியாயமற்ற அல்லது நெறிமுறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்தல்.<br>• இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஒழுங்கு விதிகளுக்கு இணங்க, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் கொள்கையுடன் இணங்கிப் பணியாற்றுதல். |

## குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளல்

| குழு | உறுப்பினர்கள் | 2022 நிதியாண்டுக் கூட்டங்களும் சமூகமளித்தலும் | | |
|---|---|---|---|---|
| | | கூட்டங்கள் | உரிமம் பெற்ற | சமூகம் |
| சபையின் நியமனக் குழு கூட்டம் | திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க | 4 | 4 | 4 |
| | திரு. டப்ளியூ.எம். ஆனந்த | 4 | 4 | 4 |
| | திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி (24.08.2022 அன்று குழுவிற்கு நியமிக்கப்பட்டார்) | 4 | 2 | 2 |
| | திரு. ஆர்.சூரியாராச்சி (24.08.2022 அன்று குழுவிற்கு நியமிக்கப்பட்டார்) | 4 | 1 | 1 |
| | திரு. பீ.ஏ.எஸ்.ஏ. குமார (2022.03.02 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 4 | 1 | 1 |
| | திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாபா பத்திரண (2022.04.28 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 4 | 2 | 2 |
| சபையின் மனிதவள மற்றும் ஊதியக் குழுக் கூட்டம் | திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க | 4 | 4 | 4 |
| | சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா | 4 | 4 | 4 |
| | திரு. பீ.ஏ. லயனல் | 4 | 4 | 4 |
| | கலாநிதி பீ.ஏ. கிருஷாந்த (24.08.2022 அன்று குழுவிற்கு நியமிக்கப்பட்டார்) | 4 | 2 | 2 |
| | திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாபா பத்திரண (2022.04.28 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 4 | 2 | 2 |
| | திரு. பீ.ஏ.எஸ்.ஏ. குமார (2022.03.02 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 4 | 1 | 1 |
| சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு கூட்டம் | திரு. பீ.ஏ. லயனல் (24.08.2022 அன்று குழுவிற்கு நியமிக்கப்பட்டார்) | 5 | 2 | 2 |
| | சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா | 5 | 5 | 5 |
| | திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி (24.08.2022 அன்று குழுவிற்கு நியமிக்கப்பட்டார்) | 5 | 2 | 2 |
| | கலாநிதி பீ.ஏ. கிருஷாந்த (24.08.2022 அன்று குழுவிற்கு நியமிக்கப்பட்டார்) | 5 | 2 | 2 |
| | திரு. எல்.ஈ. சுசந்த சில்வா (குழுவின் மறுசீரமைப்பு 24.08.2022) | 5 | 3 | 3 |
| | திரு. பீ.ஏ.எஸ்.ஏ. குமார (2022.03.02 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 5 | 0 | 0 |
| | கலாநிதி எஸ்.என்.மொராயஸ் (2022.06.29 முதல் சபையிலிருந்து ஓய்வு பெற்றார்) | 5 | 2 | 2 |
| சபையின் தொடர்புடைய தரப்புடனான பரிவர்த்தனை மீளாய்வுக் குழு கூட்டம் | திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க | 4 | 4 | 4 |
| | சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா | 4 | 4 | 4 |
| | திரு. டப்ளியூ.எம். ஆனந்த | 4 | 4 | 4 |
| | திரு. ஆர்.சூரியாராச்சி (24.08.2022 அன்று குழுவிற்கு நியமிக்கப்பட்டார்) | 4 | 1 | 0 |
| | திரு. டீ.எம்.ஏ.கே.தசநாயக்க (2022.06.13 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 4 | 2 | 1 |
| | திரு. எல்.ஈ. சுசந்த சில்வா (குழுவின் மறுசீரமைப்பு 24.08.2022) | 4 | 3 | 3 |
| சபையின் கணக்காய்வுக் குழுக் கூட்டம் | திரு. எல்.ஈ. சுசந்த சில்வா | 4 | 4 | 4 |
| | சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா | 4 | 4 | 4 |
| | திரு. பீ.ஏ. லயனல் | 4 | 4 | 4 |
| | திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி (24.08.2022 அன்று குழுவிற்கு நியமிக்கப்பட்டார்) | 4 | 2 | 2 |
| | கலாநிதி எஸ்.என்.மொராயஸ் (2022.06.29 முதல் சபையிலிருந்து ஓய்வு பெற்றார்) | 4 | 2 | 2 |
| | திரு. பீ.ஏ.எஸ்.ஏ. குமார (2022.03.02 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 4 | 1 | 1 |

## பங்குதாரர் ஈடுபாடு

பெறுமதி உருவாக்கச் செயன்முறைக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைக் கொண்ட அவர்களது எதிர்பார்க்கைகளைப் புரிந்துகொள்வதற்கு வங்கி பங்குதாரர்களுடன் ஈடுபடுகின்றது. ஒவ்வொரு பங்குதாரர் குழுவுடனும் வங்கி எவ்வாறு ஈடுபடுகின்றது என்பது பற்றிய விரிவான மீளாய்வை நாம் 22-28 வரையான பக்கங்களில் வழங்கியுள்ளோம்.

## நிறைவேற்றுக் குழுக்கள்

முக்கிய தொழிற்பாட்டுத் துறைகளின் செயற்திறன் வாய்ந்த தன்மையினை மேற்பார்வை செய்வதற்கு வங்கி முகாமைத்துவ மட்டக் குழுக்களையும் நியமித்துள்ளது. அவையாவன - நிறுவன முகாமைத்துவக் குழு, சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு, கொடுகடன் குழு, தகவல் தொழில்நுட்ப வழிநடாத்தல் குழு, தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புக் குழு என்பனவாகும். ஆண்டு காலப்பகுதியில் அறவீட்டு வழிநடாத்தல் குழு மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பூட்டல் வழிநடாத்தல் குழு ஆகிய இரு புதிய குழுக்கள் செயற்பாட்டிற்கு வந்து குழுக்களின் எண்ணிக்கை மொத்தமாக 07 ஆக அதிகரித்துக் காணப்பட்டது.

## தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி

தலைவர் மற்றும் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி, வங்கியின் உபாய மற்றும் தொழிற்பாட்டுத் தீர்மானம் மேற்கொள்வதில் முறையே உச்சமட்ட வகிபாகங்களை ஆற்றுகின்றனர். தலைவர் மற்றும் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி தலைவருக்கும் சபைக்கும் பொறுக்கூறத்தக்கவராக இருக்கின்ற அதேவேளை, சபை சாத்தியமாக முழுமையான அளவு அதன் கடமைகளை நிறைவேற்றுகின்றது என்பதனை தலைவர் உறுதி செய்கின்றார்.

தலைவருக்கும், பிரத நிறைவேற்று அதிகாரிக்கும் இடையிலான அதிகார வேறாக்கம், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கி வழிகாட்டல்களுக்கு அமைவான சிறந்த நடத்தைகள் என்பவற்றுடன் அணி சேர்ந்துள்ளன. மேலும், வங்கியானது, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மூலம் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவையின் கீழான வழிகாட்டல்களை நிறைவு செய்து இணங்கியொழுகுகின்றது.

தலைவருக்கும், பிரத நிறைவேற்று அதிகாரிக்கும் இடையிலான அதிகாரத்தின் தெளிவான வேறாக்கம், தீர்மானம் மேற்கொள்கின்ற செயன்முறையில் அவர்களது அதிகாரங்களின் எல்லைகள் முரண்படவில்லை என்பதையும், அதிகாரச் சமநிலை காணப்படுகின்றது என்பதையும் உறுதி செய்கின்றது. வங்கியின் உபாயம் மற்றும் இலக்குகளை நிறைவு செய்வதை நோக்கி அவர்கள் பணியாற்றுகின்றனர் என்றும், வங்கியினதும், அதன் பங்குதாரர்களினதும் நலனை நோக்கிப் பணியாற்றுகின்றனர் என்றும் இவ்வேறாக்கம் உறுதி செய்கின்றது.

தற்போதைய வங்கியின் தலைவர் திரு.ஈ.டி.பி. சுசைப்பிள்ளை, நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீன பணிப்பாளர் ஆவதுடன், வங்கியின் உபாயப் பணிப்புரை உரித்தளிக்கப்பட்டுள்ள அதேவேளை, பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ அணி உடனான உதவியுடன், பணிப்பாளர் சபைக்கு ஆக்கபூர்வமாக தலைமைதாங்குகின்றார். 2022 இல் வங்கியின் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி பதவி விலகி 2023 ஜனவரியில் புதிய பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி நியமனத்திற்கு வழிவகுத்தது. பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அஅதிகாரி, பணிப்பாளர் சபையின் உறுப்பினர் அல்ல என்பதுடன், அமைச்சின் இறுதி அனுமதியின் அடிப்படையினால் சபையினால் நியமிக்கப்படுபவர். இவர் தலைவருக்கும், பணிப்பாளர் சபைக்கும் பொறுப்புக் கூறத்தக்கவரும் பதிலளிக்கத்தக்கவருமாவார்.

# கூட்டுறவு ஆளுகை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை


ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE


මගේ අංකය
எனது இல.
My No.
BAN/ 01/C/HDFC/CG/22/20

මගේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
23 May 2023

தலைவர்
இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

2022 டிசம்பர் 31 இல் மத்திய வங்கி மூலம் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை இணங்குவித்தல் தேவைப்படுத்தல் மீது இலங்கை வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் உண்மையைக் கண்டறிதல் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகைப் பணிப்புரையின் இணங்குவித்தல் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதற்கு, பணிப்பாளர் சபையின் ஆளுகை அறிக்கை தொடர்பில் தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கைக்கான பின்னிணைப்பு ஒன்றில் கணக்கீடு செய்யப்பட்ட நடைமுறைகளை நான் செயலாற்றியுள்ளேன். எனது ஈடுபாடானது, இணங்கிய நடைமுறைகள் ஈடுபாட்டிற்கு ஏற்புடைய தொடர்புடைய சேவைகள் மீதான இலங்கை நியமத்தில் 4400 (ளுடுளுசுளு 4400) குறித்துரைக்கப்பட்ட கோட்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது. இந்த நடைமுறைகள், நிறுவன ஆளுகைப் பணிப்புரையின் இணங்குவித்தல் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு பிரத்தியேகமாக உங்களுக்கு உதவுவதற்காக செயலாற்றப்பட்டன.

நான் கண்டறிந்தவைகளை இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பு - 01 இல் அறிக்கையிடுகின்றேன்.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் அல்லது மீளாய்வு ஈடுபாடுகள் மீதான இலங்கை நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஒன்றை அல்லது மீளாய்வு ஒன்றை மேற்குறித்த நடைமுறைகள் உருவாக்குவதில்லை என்ற காரணத்தினால், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகைப் பணிப்புரைகளுடனான இணங்குவித்தல் பற்றி ஏதேனும் உத்தரவாதத்தை நான் வெளிப்படுத்துவதில்லை.


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அல்லது மீளாய்வு ஈடுபாடுகள் மீதான இலங்கை நியமங்களுக்கு அமைவாக, மேலதிக நடைமுறைகளை நான் செயலாற்றி இருந்தால் அல்லது ஆளுகை பற்றி கணக்காய்வு ஒன்றை அல்லது மீளாய்வை நடத்தியிருந்தால் உங்களுக்கு அறிக்கையிடப்படக்கூடிய வேறு விடயங்கள் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம்.

எனது அறிக்கையானது, இவ்வறிக்கையின் முதலாம் பந்தியில் விபரிக்கப்பட்ட நோக்கங்களுக்காகவும், உங்களது தகவலுக்காகவும் பிரத்தியேகமானது என்பதுடன், ஏதேனும் வேறு நோக்கங்களுக்காக அல்லது ஏதேனும் வேறு தரப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கானவை அல்ல.

இவ்வறிக்கையானது. மேலே குறித்துரைக்கப்பட்ட விடயங்களுடன் மாத்திரம் தொடர்புபடுவதுடன், ஒட்டுமொத்தமாக கருத்திற் கொள்ளப்படும் இலங்கை எச்டீஎப்சி வங்கியின் எவையேனும் நிதியியல் கூற்றுகளுக்காக நீடிக்காது.



டப்ளியூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

# கூட்டுறவு ஆளுகை

## பிரிவு ஒன்று

## இணக்க மீளாய்வு

இலங்கை மத்திய வங்கி, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம், இலங்கையின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்பவற்றுடன் தொடர்புடைய, கூட்டுறவு ஆளுகைக் கட்டமைப்பு தொடர்பான ர்னுகுஊ வங்கியின் 2022 ஆம் நிதியாண்டுக்கான இணக்க நிலைமை கீழே வரையறுக்கப்பட்டுள்ளது.

## பிரிவு ஒன்று (2023 மே 23 ஆம் திகதியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் இணைப்பு 1)

உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான, இலங்கை மத்திய வங்கியின் கூட்டுறவு ஆளுகை வழிகாட்டிகளுடனான இணக்கம்

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(1) | சபையின் பொறுப்புகள் | |
| 3(1)(ை) | வங்கியின் பாதுகாப்பு மற்றும் வலுத்தன்மையை சபை பலப்படுத்தியுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பின்பற்றப்பட்டுள்ள நடைமுறைகள் - | |
| | a) வங்கியின் உபாயநுட்ப இலக்குகள் மற்றும் கூட்டுறவுப் பெறுமதிகளுக்கான சபையின் அங்கீகாரம்.<br><br>வங்கி அதனுடைய உபாய இலக்குகளையும், கூட்டுறவுப் பெறுமதிகளையும் வங்கி முழுவதும் அறிவித்ததா. | இணங்கி நடக்கப்பட்டது<br>2021 - 2025 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான சபை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுத் திட்டத்தில் உபாயநுட்ப இலக்குகளும், பெறுமதிகளும் கூட்டிணைக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டன.<br><br>வருடாந்தம் வங்கி, வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கையில், உபாய நுட்ப இலக்குகள் கிளைகளுக்கும் தலைமைக் காரியாலய அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டத. கூட்டுறவுப் பெறுமதிகள் ர்னுகுஊ யின் நாளாந்த நடவடிக்கைகளுக்காக பணியாட்கள், அடிக்கடி அணுகுகின்ற இணைய முகப்பில் உள்ளடக்கப்பட்டள்ளது. |
| | b) வங்கியின் ஒட்டுமொத்த உபாயநுட்பத்திற்கான சபை அங்கீகாரம்<br><br>வங்கியின் ஒட்டுமொத்த உபாய நுட்பம், ஒட்டுமொத்த இடர் கொள்கை, இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகள் என்பவற்றை உள்ளடக்குவதுடன், அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>ஒட்டுமொத்த வர்த்தக உபாய நுட்பம், குறைந்த பட்சம் அடுத்த 3 வருடங்களுக்கான அளவிடக்கூடிய இலக்குகளைக் கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது<br>2021 - 2025 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான ஒட்டுமொத்த உபாய நுட்பக் கொள்கையை உள்ளடக்கிய சபையின் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுத் திட்டம் உள்ளது. உபாயநுட்பத் திடடம் பிரதேச செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம் |
| | c) சபையினால் அடையாளம் காணக்கூடிய இடர்களைக் கையாளுவதில் உள்ள பொருத்தமான முறைகள் விவேகமாக இருப்பதுடன், அவை, கிரமமாக அமுல்படுத்தப்பட்டுள்ளன. | இணங்கி நடக்கப்பட்டது<br>இடர் முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு என்பன உருவாக்கப்பட்டன.<br><br>இடர் கொள்கை குழுக்களினால் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு முதன்மையான இடர்களை அமுல்படுத்தவும், மேற்பார்வை செய்யவும், முகாமைத்துவம் செய்யவும், ஆளுகைக் கட்டமைப்பை உருவாக்குகிறது. |
| | d) வைப்பாளர்கள், கடன்தாரர்கள், பங்குதாரர்கள், கடன் பெறுநர்கள் உள்ளடங்கலாக, அனைத்து பங்குதாரர்களுடனும் இருக்கக்கூடிய தொடர்பாடல் கொள்கை, சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. | இணங்கி நடக்கப்பட்டது<br>சபையின் அங்கீகரிக்கப்பட்ட தொடர்பாடல் கொள்கை ஒன்று உள்ளது. |
| | e) வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறை மற்றும் முகாமைத்துவத் தகவல் முறை ஆகியவற்றின் போதுமான தன்மையையும், நேர்மைத் தன்மையையும் சபை மீளாய்வு செய்தது. | இணங்கி நடக்கப்பட்டது<br>உள்ளகக் கணக்காய்வு, காலாந்தர அறிக்கைகளை கணக்காய்வுக் குழுவும் சபையும் மீளாய்வு செய்தது. இவ்வறிக்கை உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளையும், முகாமைத்துவ தகவல் முறையையும் மற்றும் கண்டறிதல்களை நிவர்த்தி செய்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் விளக்குகிறது. |

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| | f) இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதலில் வரையறை செய்யப்பட்டவாறு சபை முக்கிய முகாமைத்துவ ஆட்கள் என்ற தகுதிக்குள் இருக்க வேண்டியவர்களை இனங்கண்டுள்ளது. அவற்றில் (i) கணிசமான அளவு செல்வாக்குச் செலுத்தக் கூடிய கொள்கை (ii) நேரடியான நடவடிக்கைகள் மற்றும் (iii) வர்த்தக நடவடிக்கைகள், கோட்பாடுகள், இடர் முகாமைத்துவம் என்பவற்றின் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்குகிறது. | இணங்கி நடக்கப்பட்டது<br>இலங்கை கணக்கியல் நியமங்களில் வரையறை செய்யப்பட்டவாறு, சபை, முக்கிய முகாமைத்துவ ஆட்களை இனங்கண்டு, அவர்களுக்கு உரிய தர நிலைகளை வழங்கியது. |
| | g) வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் தொடர்பான விவகாரங்களை சபை மேற்பார்வை செய்துள்ளதுடன், அவை, சபைக் கொள்கையோடு ஒருசீராக அமைந்துள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது<br>செயற்திறன் அறிக்கைகள் சபை மட்டத்தில் கவனத்திற் கொள்ளப்பட்டதோடு, தேவையான மேம்படுத்தல்களுக்காக, காலத்திற்குக் காலம் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. |
| | h) சபை, அதன் உறுப்பினர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் அதிகார எல்லைகளையும், முக்கியமான பொறுப்புகளையும் வரையறுத்துள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது<br>கூட்டுத்தாபனத்தின் நிர்வாகமும், முகாமைத்துவமும் ர்னுகுஊ சட்டத்திற்கு அமைய பணிப்பாளர் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன.<br><br>முக்கிய முகாமைத்துவ ஆட்களின் பிரதான பொறுப்புகள், அவர்களின் தொழில் விபரணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்களின் பொறுப்புகள் கையளிப்பு அதிகார வரம்புகளின் கீழ் வரையறை செய்யப்பட்டுள்ளன. |
| | i) சபை காலத்திற்குக் காலம் சபையின் பணிப்பாளர்களின் சொந்த ஆளுகை நடைமுறைகளின் வினைத்திறனை காலாந்தர அடிப்படையில் மதிப்பீடு செய்யும். அவற்றுடன் பின்வரும் விடயங்களும் உள்ளடக்கப்படும். (i) பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் தெரிவு, பெயர் குறித்துரைப்பு மற்றும் நியமனம் (ii) அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் (iii) பலவீனங்களைத் தீர்மானித்தலும் தேவையான இடங்களில் மாற்றங்களை மேற்கொள்ளுதலும். | இணங்கி நடக்கப்பட்டது<br>சபை சுயமதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது. அது, சபை பணிப்பாளர்களின் சொந்த ஆளுமை நடைமுறைகளின் மதிப்பீட்டையும் உள்ளடக்கும். சபையின் செயற்திறன் பற்றிய சுயமதிப்பீடு அதன் சொந்த சொந்த ஆளுகை நடைமுறைகளை வருடாந்தம் மதிப்பிடு செய்வத்றகான நடத்தப்படும். 2022 ஆம் ஆண்டுக்கான சுயமதிப்பீடு 2022 ஜனவரியில் இல் நடத்தப்படும். அத்தடன், அதன் சாராம்சம் ஒன்று மீளாய்வுக்காகவும், பலவீனங்களை ஆராயவும் தேவையான பரிந்துரைகளை மேற்கொள்ளவும் 2023 ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்படும். முக்கிய முகாமைத்துவ ஆட்கள் உட்பட பணியாட்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான கொள்கை ஏற்கப்பட்டது. |
| | j) முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்காக சபை ஒரு பின்னுறு திட்டத்தைக் கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது<br>அங்கீகரிக்கப்பட்ட பின்னுறு திட்டம் ஒன்று சபையிடம் உள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கான பின்னுறு திட்டத்தை சபை 2022 செப்டம்பர் 28 ஆம் திகதி அங்கீகரித்தது. |
| | k) சபையின் கொள்கைகளை மீளாய்வு செய்யவும், தொடர்பாடல் வரிசைகளை ஸ்தாபிக்கவும், கூட்டுறவு இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை மேற்பார்வை செய்யவும் முக்கிய முகாமைத்துவ ஆட்களுடன் சபை கிரமான கூட்டங்களை நடத்தி வருகிறது. | இணங்கி நடக்கப்பட்டது<br>முக்கிய முகாமைத்துவ ஆட்கள் உபாயநூட்பம், கொள்கை நிறைவேற்றம் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய ஏனைய விடயங்கள் தொடர்பில் சபைக் கூட்டங்கள், சபை உப-குழுக் கூட்டங்கள். முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் என்பவற்றில் பங்குபற்றுவர். |
| | l) ஒழுங்குபடுத்தல் சூழலை விளங்கிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளையும், செயன் முறைகளையும் சபை மேற்கொண்டுள்ளது. மேலும், ஒழுங்குபடுத்துநர்களுடன் வங்கி பேணி வரும் உறவுகளையும் சபை மேற்பார்வை செய்கிறது. | இணங்கி நடக்கப்பட்டது<br>ஒழுங்குபடுத்தல் சூழலை விளங்கிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளையும், செயன் முறைகளையும் சபை மேற்கொண்டுள்ளது. மேலும், ஒழுங்குபடுத்துநர்களுடன் வங்கி பேணி வரும் உறவுகளையும் சபை மேற்பார்வை செய்கிறது. |
| | m) வெளியகக் கணக்காய்வாளர்களைப் பணிக்கு அமர்த்தவும், மேற்பார்வை செய்யவும் சபை ஒரு நடைமுறையை கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது<br>இலங்கை அரசியலமைப்பு மற்றும் ர்னுகுஊ சட்டத்திற்கு அமைய, ர்னுகுஊ யின் உரிமை 51மூ க்கு மேல் அரசினால் உரிமை கொள்ளப்படுவதனால், கணக்காய்வாளர் நாயகம் வெளியகக் கணக்காய்வாளராகக் கடமையாற்றுவார். |

# கூட்டுறவு ஆளுகை

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(1)(ii) | சபை வங்கியின் தலைவரையும், பிரதம நிறைவேற்று அதிகாரியையும் நியமித்துள்ளது.<br><br>தலைவர் மற்றும் பிநிஅ ஆகியோரின் பணிகளும், பொறுப்புகளும் வழிகாட்டி 3(5) க்கு அமைவாக இருக்கும். | இணங்கி நடக்கப்பட்டது<br><br>அதிகாரத்தைச் சமப்படுத்துவதற்காக ர்னுகுஊ சட்டம் தலைவர் மற்றும் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் தகுதிகளை தனித்தனியாகப் பிரித்துள்ளது. தலைவர், ர்னுகுஊ சட்டத்திற்கு அமைவாகவும், பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சபையினாலும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பணிகளும், பெறுப்புக்களும் ர்னுகுஊ சட்டத்தின் கீழ் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. சபை 2020 ஜனவரி 29 ஆம் திகதி சபைப் பட்டயத்தை உருவாக்கியது. |
| 3(1)(iii) | சராசரி மாத இடைவெளிகளுடன், ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் 12 கூட்டங்களை சபை கிரமமாக நடத்தியுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது<br>சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடைபெறும் அதேவேளை, சேவை அடிப்படையில் விசேட கூட்டங்களும் நடைபெறும்.<br><br>2022 ஆம் ஆண்டில் 16 கூட்டங்கள் நடைபெற்றன. சபைக் கூட்டங்களுக்கான சமுகமளித்தல் விபரம் கூட்ட எண்ணிக்கைகளுடன் வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன. |
| 3(1)(iv) | வர்த்தக ஊக்குவிப்பு மற்றும் வங்கியின் இடர் முகாமைத்துவத்தை முகாமை செய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய அத்தகைய விடயங்களையும், முன்மொழிவுகளையும் கிரமமான சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல்களில் உள்ளடக்குவதற்கு அனைத்து பணிப்பாளர்களுக்கும் வாய்ப்பளிக்கும் நடைமுறை ஒன்றை சபை கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது<br>நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்குமாறு தலைவர், செயலாளரை அறிவுறுத்தியுள்ளார். அத்துடன், தலைவர் மற்றும் செயலாளருடன் கலந்துரையாடிய பின்னர், அனைத்து பணிப்பாளர்களும் தமது விடயங்களை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்க சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. |
| 3(1)(v) | கூட்டங்களில் சமுகமளிக்க வாய்ப்பளிக்கும் வகையில் அனைத்து பணிப்பாளர்களுக்கும் கிரமமான சபைக் கூட்டத்திற்கு குறைந்த பட்சம் 7 நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளன. | இணங்கி நடக்கப்பட்டது<br>கூட்ட அறிவித்தல், நிகழ்ச்சி நிரல் மற்றும் கூட்டங்களுக்கான சபை ஆவணங்கள் என்பன குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. |
| 3(1)(vi) | 12 மாத காலத்தில் நடைபெற்ற கூட்டங்களில் அடுத்தடுத்த அல்லது உடனடுத்து வரும் மூன்று கூட்டங்களில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு கூட்டங்களுக்குச் சமுகமளிக்காத பணிப்பாளர்கள் மீது தேவைப்படுத்தப்பட்ட நடவடிக்கையை சபை மேற்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், பதில் பணிப்பாளர் ஒருவர் கூட்டங்களில் சமுகமளிப்பது பங்குபற்றாத பணிப்பாளரின் சமுகமாக ஏற்றுக் கொள்ளப்படும். | இணங்கி நடக்கப்பட்டது<br>2022 வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளவாறு, தேவைப்படுத்தப்பட்ட கூட்டங்களில் அனைத்துப் பணிப்பாளர்களும் பங்குபற்றியுள்ளனர். |
| 3(1)(vii) | கம்பனியின் செயலாளர் ஒருவரை சபை நியமித்துள்ளது. அவர், 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரிவு 43 இன் ஏற்பாடுகளைத் திருப்திப்படுத்தியுள்ளார். இதற்கமைய, சபை மற்றும் பங்குதாரர் கூட்டங்களுக்கு செயலாளர் சார்ந்த சேவைகளை வழங்குவதும், நியதிச் சட்டங்கள் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளின் கீழ் உள்ள ஏனைய பணிகளைப் பூர்த்தி செய்வதும் அவரது முதன்மைப் பொறுப்புகளாகும். | இணங்கி நடக்கப்பட்டது<br>வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கி வழிகாட்டலுக்கு அமைய சட்டத்தரணி ஒருவர் செயலாளராக இருப்பதுடன், மேலதிக தகுதிகளை (டுடீடீ மற்றும் சாட்டட் செயலாளர்) கொண்டுள்ளார்.<br><br>நியதிச் சட்டங்கள் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளின் கீழ், குறித்துரைக்கப்பட்ட பணிகளையும் சபையின் செயலாளர்சார் சேவைகளையும் வழங்க அவர் பொறுப்புடையவர். |
| 3(1)(viii) | கம்பனி செயலாளரின் அறிவுரைகளையும், சேவைகளையும் பெற பணிப்பாளர்கள் அனைவருக்கும் செயன்முறை ஒன்று உள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது<br>செயலாளரின் அறிவுரைகளையும், சேவைகளையும் அனைத்துப் பணிப்பாளர்களும் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியும். |
| 3(1)(ix) | கம்பனியின் செயலாளர் சபைக் கூட்டக் குறிப்புகளைப் பேணி வருவார். அத்துடன், இக்குறிப்புகளை மேற்பார்வையிடக் கூடிய செயன்முறை ஒன்று பணிப்பாளர்களுக்கு உள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது<br>அனைத்து அறிக்கைகளும், கம்பனி செயலாளரிடம் உள்ளது. அத்துடன், கடந்தகால சபை ஆவணங்களையும், கூட்டக் குறிப்புகளையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். |

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(1)(x) | சபைக் கூட்டக் குறிப்புகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கும்.<br>a) சபை அதன் விவாதங்களில் பயன்படுத்திய தரவுகள் மற்றும் தகவலின் சாராம்சம்<br>b) சபையினால் கருத்திற் கொள்ளப்பட்ட விடயங்கள்<br>c) சபை தனது கடமைகளை கவனத்துடனும் விவேகத்துடனும் நடத்துகின்றதா என்பதை விளக்குகின்ற நிகழ்வுகளைக் கண்டறியும் கலந்துரையாடல்கள் மற்றும் விவாதத்திற்குரிய அல்லது கருத்து வேறுபாட்டிற்குரிய விடயங்கள்.<br>d) சபையின் உபாயநுட்பங்கள் மற்றும் கொள்கைகளுடன் இணங்கி நடப்பதை குறிப்பிடுகின்ற விடயங்களும், பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கி நடக்கப்படும் விடயங்களும்.<br>e) வங்கி எதிர்கொண்ட இடர்கள் பற்றிய புரிதல்களும், ஏற்றுக்கொள்ளப்பட்ட இடர் முகாமைத்துவ வழிமுறைகளின் கண்ணோட்டமும். மற்றும்<br>f) சபையின் தீர்மானங்களும் முடிவுகளும். | இணங்கி நடக்கப்பட்டது<br>பின்வரும் விடயங்கள் போன்ற தேவையான தகவல்கள் சபைக் கூட்டக் குறிப்பில் தரப்பட்டுள்ளன.<br>i. குறிப்பான விடயதானங்கள் மீது எடுக்கப்பட்ட வர்த்தகத் தீர்மானங்கள்.<br>ii. குறிப்பிட்ட விடயதானங்கள் மீது சபை மேற்கொண்ட முடிவுகள்<br>iii. சபை உப குழுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள்<br>iv. விடயங்கள் மற்றும் செயற்திறன் மீளாய்வு பற்றிய கொள்கைத் தீர்மானங்கள்.<br>v. சபையின் உபாய நுட்பங்கள், கொள்கைகள், என்பவற்றுடன் இணங்கி நடந்த விடயங்கள் குறித்துக் காட்டப்பட்டள்ளதுடன், இயைபான சட்டங்கள்,ஒழுங்கு வதிகளுடனான ஒழுகுதலும் குறிப்பிடப்பட்டள்ளன. |
| 3(1)(xi) | பொருத்தமான சூழ்நிலைகளில், நியாயமான வேண்டுகோளுக்கு அமைய வங்கியின் செலவில் தொழில்முறை ரீதியான சுயாதீன அறிவுரைகளை பணிப்பாளர்கள் பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் உள்ளன. | இணங்கி நடக்கப்பட்டது<br>தேவை அடிப்படையில் சுயாதீன தொழில்சார் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள சபைக்கு சுதந்திரம் உள்ளது. |
| 3(1)(xii) | அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தவிர்க்க அல்லது அக்கறைகளுக்கிடையிலான முரண்பாடுகள் இருப்பதாக தோன்றுமிடத்து, அவற்றைத் தீர்மானிக்க, அறிக்கையிட, சமரசம் செய்ய மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடைமுறை ஒன்று உள்ளது.<br><br>பணிப்பாளர் ஒருவருக்கு கணிசமான அளவு அக்கறை உடைய அல்லது அக்கறை இருக்கின்ற விடயம் தொடர்பில் அல்லது அவருடைய அல்லது அவளுடைய நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அக்கறை உள்ளவிடத்து அவ்விடயம் தொடர்பான ஏதேனும் சபைத் தீர்மானம் மீது வாக்களிப்பதில் இருந்து பணிப்பாளர் விலகியிருக்கின்றாரா என்பதை பரீட்சித்தல்.<br><br>சபைக் கூட்டத்தின் பொருத்தமான நிகழ்ச்சி நிரல் விடயத்திற்கான கூட்ட நடப்பெண்ணில் அவர் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளரா என்பதை அவதானித்தல். | பகுதியளவில் இணங்கி நடக்கப்பட்டது<br>தொடாபுபட் டதிறத்தவருடனான கொடுக்கல் வாங்கல் கொள்கை மீளாய்வுக்காக ஊனுகுடு உடைய தேவைப்பாடுகளுக்கு அமைய அடுத்து வரும் கீபுஊ கூட்டத்தில் மீளாய்வு செய்யப்படும். |
| 3(1)(xiii) | வங்கியின் அதிகாரம் மற்றும் திசை என்பன அதன் அதிகாரத்தின் கீழ் உறுதி உள்ளது என்பதை இனங்காண்பதற்கான தீர்மானத்திற்காக விசேடமாக ஒதுக்கப்பட்ட ஒரு விதிமுறையான விடயங்களைக் கொண்ட நிகழ்ச்சி நிரல் ஒன்று உள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது<br>ஆரம்பத்தில் 26.07.2013 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகார வரை சட்டம் ஒன்று உள்ளது. அதன் பின்பு, இச்சட்டம் மீளாய்வு செய்யப்பட்டு, 2020 ஆம் ஆண்டு சபை பட்டயத்தில் உள்ளடக்கப்பட்டது. |
| 3(1)(xiv) | வங்கி அதன் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்ய முடியாதவிடத்து அல்லது அவ்வாறான சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு உள்ள போது அல்லது வங்குரோத்து நிலையை அடையும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கும் போது அல்லது வைப்பாளர்கள் ஏனைய கடன்தாரர்கள் கொடுப்பனவுகளை நிறுத்துகின்ற போது வங்கி அது தொடர்பாக ஏதேனும் தீர்மானம் அல்லது நடவடிக்கை எடுக்க முன்னர் அத்தகைய நடைமுறைகளை இனங்காண அவசியம் உள்ளவிடத்து, வங்கி மேற்பார்வை தொடர்பான பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். | இணங்கி நடக்கப்பட்டது.<br>வங்கி வங்குரோத்து நிலையை அடையும் என்ற சந்தேகத்தை எழுப்பக்கூடிய எந்தவொரு சூழ்நிலையும் ஏற்படவில்லை. வங்கியின் நிலையை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த நிதிக் கூற்றுகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. |
| 3(1)(xv) | நாணய சபையினால் தேவைப்படுத்தப்பட்ட மட்டங்களில் சபை, வங்கியின் மூலதனத்தைக் கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>மூலதன போதுமான விகிதங்கள் வங்கியினால் பூர்த்தி செய்யப்பட்டன. வங்கி, அதன் குறைந்தபட்ச மூலதன மட்டமான ரூபா 5 பில்லியனைக் கொண்டுள்ளது. எனினும், 2017 ஒக்டோபரில், 2017 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் உள்ள வழிகாட்டிகளுக்கு அமைய, வங்கி, 31.12.2020 இல், குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடான ரூபா 7.5 பில்லியனைப் பூர்த்தி செய்ய வேண்டும். எனினும், இது, 2023 இறுதி வரை நீடிக்கப்பட்டது. |

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(1)(xvi) | இவ்வழிகாட்டிகளின் கீழ், வழிகாட்டி 3 க்கு அமைய, சபை, வங்கியின் வருடாந்தக் கூட்டுறவு ஆளுகை அறிக்கையில் வழிகாட்டி 3 தொடர்பான இணக்கம் பற்றி எடுத்துக் கூறும். | இணங்கி நடக்கப்பட்டது.<br>இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டியின் தேவைப்பாட்டிற்கு அமைய, வருடாந்த அறிக்கை இணக்கத் தேவைப்பாட்டை உள்ளடக்கிய கூட்டுறவு ஆளுகை அறிக்கையைக் கொண்டுள்ளது. |
| 3(1)(xvii) | சபை ஒவ்வொரு பணிப்பாளரையும் வருடாந்தம் சுயமதிப்பீடு செய்யும் திட்டம் ஒன்றைக் கொண்டுள்ளது. அத்தகைய மதிப்பீடுகளின் பதிவுகளை பேணிப் பாதுகாத்து வருகிறது. | இணங்கி நடக்கப்பட்டது.<br>2023 ஜனவரி மாதம் சுயமதிப்பீடு மேற்கொள்ளப்படும். வங்கி பணிப்பாளர்களை சுய மதிப்பீடு செய்யும் திட்டம் ஒன்றைக் கொண்டுள்ளதுடன், சபையின் செயலாளர் அனைத்து பணிப்பாளர்களிடமிருந்தும் வருடாந்தம் மதிப்பீட்டுப் படிவங்களைப் பெற்றுக்கொள்வார். |
| **3(2)** | **சபை உள்ளடக்கம்** | |
| 3(2)(i) | சபை 7 பேருக்குக் குறையாத, 13 பேருக்கு மேற்படாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>31.12.2022 இல் உள்ளவாறு சபை, 9 பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது. |
| 3(2)(ii) | a) பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியை வகிக்கும் பணிப்பாளர் தவிர, ஏனைய பணிப்பாளர்களின் மொத்த சேவைக் காலம் 9 வருடங்களுக்கு மேற்படலாகாது. | இணங்கி நடக்கப்பட்டது.<br>2022 இறுதியில் உள்ளவாறு எந்தவொரு பணிப்பாளரும் 9 வருடகால சேவைகளை விஞ்சவில்லை. |
| | b) எவரேனும் பணிப்பாளர் ஒருவர், 9 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் சேவையாற்றி இருப்பின், இடைக்கால விதிகள் பின்பற்றப்பட்டனவா என்பதைப் பரீட்சித்தல். | இணங்கி நடக்கப்பட்டது.<br>இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாட்டிற்கு அமைய, எந்தவொரு பணிப்பாளரும் 9 வருடங்களுக்கும் அதிகமாக சேவையாற்றவில்லை. |
| 3(2)(iii) | பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட நிர்வாகப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை, சபை பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக்கு அதிகரிக்கப்படல் ஆகாது. | இணங்கி நடக்கப்பட்டது.<br>சபையில் எந்தவொரு நிறைவேற்றுப் பணிப்பாளரும் இல்லை. |
| 3(2)(iv) | சபை குறைந்தபட்சம் மூன்று சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்களை அல்லது மொத்தப் பணிப்பாளர்களில் மூன்றில் ஒரு பகுதியில் எது அதிகமானதோ அதனைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் பின்வரும் சூழ்நிலைகளில் சுயாதீனமானவர்களா என்பதை பரீட்சித்தல். | இணங்கி நடக்கப்பட்டது<br>31.12.2022 இல் உள்ளவாறு, சபை 9 பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. நடப்பு வருடத்தின் போதான வழிகாட்டிகளுக்க அமைய சபை 8 நிர்வாகம் சாராத பணிப்பாளர்களையும், சுயாதீன பணிப்பாளர்களையும் உள்ளடக்கியள்ளது. |
| | a) வங்கியின் பங்குரிமைகளில் 1மு க்கு மேற்பட்ட நேரடி அல்லது மறைமுகப் பங்குகளைக் கொண்டிருத்தல். | எழவில்லை. |
| | b) அவர் அல்லது அவள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதை உடனடுத்த இரண்டு வருட காலப்பகுதியின் போது அல்லது தற்போது இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்பட்ட வழிகாட்டி 3(7) இல் உள்ளவாறு வங்கியின் ஏதேனும் வர்த்தகப் பரிவர்த்தனைகளில் வங்கியுடைய ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் 10மு க்கு அதிகமாகக் கொண்டிருத்தல். | எழவில்லை. |
| | c) பணிப்பாளராக நியமிக்கப்பட்டதை உடனடுத்த இரண்டு வருட காலப் பகுதியின் போது, வங்கியினால் தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருத்தல். | எழவில்லை. |
| | d) பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி, முக்கிய முகாமைத்துவ ஆட்களில் ஒருவர், வங்கியின் அல்லது ஏனைய வங்கியினுடைய முக்கியமான பங்குதாரர் போன்ற பதவிகளில் நெருங்கிய உறவினர் ஒருவர் இருத்தல் (இங்கு குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக “நெருங்கிய உறவினர்” என்பது வாழ்க்கைத்துணை அல்லது நிதி ரீதியாக தங்கியிருக்கும் பிள்ளை எனப் பொருள்படும்). | எழவில்லை. |
| | e) வங்கியின் ஒரு குறிப்பான பங்குதாரரைப் பிரதிநிதித்துவப்படுத்துதல். | எழவில்லை. |

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| | f) அவர் அல்லது அவள் கம்பனி அல்லது வர்த்தக நிறுவனம் ஒன்றில் ஒரு பணியாளாக அல்லது ஒரு பணிப்பாளராக அல்லது முக்கியமான பங்குதாரராக இருந்து, அந்தக் கம்பனி அல்லது நிறுவனம்,<br>I. இந்த வழிகாட்டிகளின் 3(7) இல் வரையறை செய்யப்பட்டவாறு, வங்கியுடன் தற்போது பரிவர்த்தனை ஒன்று இருந்து அது வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் 10 வீதத்திற்கு அதிகமாக உள்ள போது அல்லது,<br>II. வங்கியின் பணிப்பாளர்களில் எவரேனும் ஒருவர் பணி புரிகின்றவிடத்து அல்லது பணிப்பாளர்களாக இருக்கின்றவிடத்து அல்லது முக்கிய பங்குதாரர்களாக இருக்கின்றவிடத்து அல்லது,<br>III. வழிகாட்டி 3(7) இல் வரையறை செய்யப்பட்டவாறு வங்கியின் ஏனைய பணிப்பாளர்களில் எவரேனும் ஒருவர் பரிவர்த்தனை ஒன்றை மேற்கொண்டு அது வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் 10 வீதத்திற்கு அதிகமாக இருக்கின்ற விடத்து | எழுவில்லை. |
| 3(2)(v) | சுயாதீன பணிப்பாளர் ஒருவரை பிரதிநிதித்துவப்படுத்த பதில் பணிப்பாளர் ஒருவரை நியமிக்கும் போது, அவ்வாறு நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சுயாதீன பணிப்பாளருக்கு பிரயோகிக்கக்கூடிய தகுதிகளைப் பூர்த்தி செய்கிறாரா என்பதைப் பரீட்சித்தல். | எழுவில்லை.<br>அத்தகை பணிப்பாளர் எவரும் நியமிக்கப்படவில்லை. |
| 3(2)(vi) | சுயாதீன பணிப்பாளர்களை நியமிக்கும் செயன்முறை ஒன்றை வங்கி கொண்டுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது<br>சபையின் நியமனங்கள்அனைத்தும் ர்னுகுஊ சட்டத்தற்கு அமைவாக மேற்கொள்ள்பபட்டது. |
| 3(2)(vii) | வங்கியின் குறித்துரைக்கப்பட்ட நடப்பு எண், பணிப்பாளர்களின் 50மூ க்கு மேற்பட்டவர்களை உள்ளடக்கும். அத்துடன், இந்த நடப்பு எண்ணில் 50மூ க்கு மேற்பட்டவர்கள் நிர்வாகம் சாராத பணிப்பாளர்களை உள்ளடக்க வேண்டும். | இணங்கி நடக்கப்பட்டது<br>வங்கியின் அனைத்துப் பணிப்பாளர்களும், நிர்வாகம் சாராதவர்கள். நிர்வாகம் சாராத பணிப்பாளர்களின் சுய விபரங்கள் ர்னுகுஊ வங்கியின் வருடாந்த அறிக்கையில் விரிவாக தரப்பட்டுள்ளன. |
| 3(2)(viii) | வங்கி, அதன் வருடாந்தக் கூட்டுறவு ஆளுகை அறிக்கையில் தலைவர், நிறைவேற்று அதிகாரிகள், நிர்வாகப் பணிப்பாளர்கள், நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் மற்றும் சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக, பணிப்பாளர்களின் வகை அடிப்படையில் சபை உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும். | இணங்கி நடக்கப்பட்டது<br>சபை உள்ளடக்கம் மற்றும் அதன் விபரங்கள் 2022 வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. |
| 3(2)(ix) | புதிய பணிப்பாளர்களை நியமித்தல் தொடர்பான நடைமுறை | ஊழஅிடநைன றவா<br>இணங்கி நடக்கப்பட்டது<br>சபைக்கான நியமனங்கள் 7ஆம் இலக்க 1997 ஆம் ஆண்டின் HDFC சட்டத்தின் பிரிவுகள் 3(1)(a). டீ மற்றும் ன மற்றும் 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் பிரிவு 4க்கு அமைவாக மேற்கொள்ள்பபட்டது. மேலும், சபை பட்டயமும் இங்கு பொருத்தமுடையதாகும். |
| 3(2)(x) | இடைவரவான வெற்றிடத்தை நிரப்புவதற்கான அனைத்துப் பணிப்பாளர்களின் நியமனங்களும், அவர்களின் நியமனத்தின் பின்னர் வருகின்ற முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் தெரிவுக்கு அமைவாக இருக்கும். | எழுவில்லை.<br>அத்தகைய ஒரு சூழ்நிலை எழுவில்லை |
| 3(2)(xi) | பணிப்பாளர் ஒருவர் ராஜினாமாச் செய்தால் அல்லது அவர் தனது பதவியில் இருந்து அகற்றப்பட்டால், சபை :<br>a) அத்தகைய பணிப்பாளரின் ராஜினாமா அல்லது அகற்றலை அத்தகைய நீக்குதல் அல்லது ராஜினாமா செய்தமைக்கான காரணங்களை பொருத்தமான பணிப்பாளரின் வங்கியுடனான முரண்பாட்டுடன் தொடர்புபட்ட தகவல்கள் ஏதேனும் இருப்பின் அது உள்ளடங்கலாக ஆயின், அதற்கு மாத்திரம் வரையறுக்கப்படாத காரணங்களை அறிவிக்கும். அத்துடன்,<br>b) பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டிய ஏதேனும் விடயங்கள் உள்ளனவா அல்லவா என்பதை உறுதிப்படுத்திய கூற்று ஒன்றை வழங்கும். | இணங்கி நடக்கப்பட்டது.<br>இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திற்கு பொது அறிவித்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. |

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(2)(xii) | பணிப்பாளர் ஒருவர் அல்லது வங்கி ஒன்றின் பணியாளர் இன்னுமொரு வங்கியின் பணிப்பாளராக நியமிக்கபட்டுள்ளரா, தெரிவு செய்யப்பட்டுள்ளாரா அல்லது பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ளாரா என்பதை இனங்காண செயன்முறை ஒன்று உள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது.<br>ஆண்டு தோறும் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகுதியான மற்றும் முறையான பிரகடனங்களின் அடிப்படையில், பணிப்பாளர் ஒருவர் வேறு ஒரு வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளாரா, தெரிவு செய்யப்பட்டுள்ளாரா அல்லது பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ளரா என்பதை இனங்காண செயன்முறை ஒன்று உள்ளது. மேலும், இலங்கை மத்திய வங்கி பணிப்பாளர்களின் தகுதி மற்றும் தகுதி உடைமைகளை மதிப்பீடு செய்யும். |
| **3(3)** | **பணிப்பாளர்களின் தகுதி மற்றும் தகுதி உடைமைகளை மதிப்பீடு செய்வதற்கான அளவு கோல்கள்** | |
| 3(3)(i) | பணிப்பாளராகக் கடமையாற்றும் ஒருவரின் வயது 70 வருடங்களை விட அதிகரிக்கவில்லை என்பதைப் பரீட்சித்தல். | இணங்கி நடக்கப்பட்டது.<br>70 வருடங்களுக்கு மேற்பட்ட எந்தவொரு பணிப்பாளரும் இல்லை. |
| | யு) வுாந வசயளெவைழையெட ?சழஎளைளைழெள ாயளந டிநநெ உழஅிடநைன றவை. | எழவில்லை<br>அத்தகைய சூழ்நிலை ஒன்று தோன்றவில்லை. |
| 3(3)(ii) | நபர் ஒருவர் வங்கியின் இணைக் கம்பனிகள் அல்லது துணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 க்கு மேற்பட்ட கம்பனிகள் / நிறுவனங்கள் / முயச்சியான்மைகள் என்பவற்றில் பணிப்பாளராக இருத்தல். | இணங்கி நடக்கப்பட்டது.<br>பணிப்பாளர்கள் வழங்கிய பிரகடனங்களில் உள்ளவாறு, எந்தவொரு பணிப்பாளரும் 20 க்கு மேற்பட்ட கம்பனிகளில் பணிப்பாளர் தகுதிகளைக் கொண்டிருக்கவில்லை. |
| 3(3)(iii) | இலங்கையில் உள்ள உரிமம் அளிக்கப்பட்ட வங்கி ஒன்றிலிருந்து விலகியதில் இருந்து 06 மாத காலப்பகுதி முடிவடைய முன்பு, இலங்கையில் செயற்படும் உரிமம் அளிக்கப்பட்ட வங்கி ஒன்றின் பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி, இலங்கையில் செயற்படும் இன்னுமொரு உரிமம் அளிக்கப்பட்ட வங்கியில் பணிப்பாளராக அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதைப் பரீட்சித்தல். | கம்பனியின் செயலாளர் இத்தேவைப்பாட்டை மேற்பாவை செய்வதுடன், வேறு வங்கியில் இருந்து எந்தவொரு பணிப்பாளரோ அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரியோ ஆண்டுக் காலப்பகுதியின் போது நியமிக்கப்படவில்லை. |
| **3(4)** | **சபையினால் கையளிக்கப்பட்ட முகாமைத்துவப் பணிகள்** | |
| 3(4)(i) | கையளிப்பு ஏற்பாடுகள் சபையினால் அங்கீகரிக்கபட்டுள்ளன. | இணங்கி நடக்கப்பட்டது. |
| 3(4)(ii) | வழிகாட்டி 3(1)(i) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய சூழ்நிலைகளில் கையளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் சபை பொறுப்பேற்றுள்ளது. | இணங்கி நடக்கப்பட்டது.<br>HDFC சட்டத்திற்கு அமைவாக கையளிப்பு அதிகாரம் தயாரிக்கப்பட்டது. மேலும், HDFC சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட திருத்தங்களும் கருத்திற் கொள்ள்ப்பட்துடன், இவ் ஆவணங்த்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் காலத்திற்கு காலம் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படம் ஒழுங்கு விதிகளுக்கும் வழிகாட்டிகளுக்கும் உட்பட்டதாகும். |
| 3(4)(iii) | நடைமுறையில் உள்ள கையளிப்பு செயன்முறை வங்கியின் தேவைகளுக்கு பொருத்தமாக உள்ளது என்பதை உறுதிப்படுத்த, சபை அதனை மீளாய்வு செய்யும். | இணங்கி நடக்கப்பட்டது.<br>கையளிப்பு அதிகாரங்களை சபை காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்வதன் மூலம் அவை வங்கியின் தேவைகளுக்குபொத்தமாக உள்ளது என்பதை உறுதிப்படுத்தும். |
| **3(5)** | **தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி** | |
| 3(5)(i) | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் வகி பங்குகள் வெவ்வேறாக இருப்பதுடன் ஒரே நபரினால் பணிகள் ஆற்றப்பட மாட்டாது. | இணங்கி நடக்கப்பட்டது.<br>HDFC சட்டம், தலைவர் மற்றும் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் தகுதி நிலைகளை வெவ்வேறாக குறித்துக்காட்டுகிறது. தலைவர் மற்றும் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் பணிகள் இரண்டு நபர்களினால் புரியப்படல் வேண்டும். |
| 3(5)(ii) | தலைவர் நிர்வாகம் சாராத பணிப்பாளராவார். தலைவர் சுயாதீனப் பணிப்பாளராக இல்லாதவிடத்து, பொருத்தமாக ஆவணப்படுத்தப்பட்ட குறிப்பு விதிகளின் படி சுயாதீனப் பணிப்பாளர் ஒருவர் சிரேட் பணிப்பாளராக சபை குறித்துரைப்பதைப் பரீட்சித்தல். | இணங்கி நடக்கப்பட்டது.<br>தலைவர் ஒரு நிர்வாகம் சாராத சுயாதீன பணிப்பாளர் ஆவார். தலைவர், சுயாதீனபணிப்பாளராகஇல்லாதவிடத்து, சபை, சுயாதீன பணிப்பாளர் ஒருவரை பொருத்தமான குறிப்பு விதிகளுடன் சிரேஷ்ட பணிப்பாளராக நியமிக்குமா என்பதை பரீட்சித்தல்.<br><br>சிரேஷ்ட பணிப்பாளரின் தகுதிநிலை வங்கியின் வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. |

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(5)(iii) | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சபை உறுப்பினர்களிடையே ஏதேனும் உறவு (நிதி, வர்த்தக, குடும்ப, ஏனைய முக்கிய / பொருத்தமான உறவுகள்) இருப்பின் அதனையும், உறவு முறையின் தன்மையையும் கூட்டுறவு ஆளுகை அறிக்கையில் இனங்காணவும், வெளிப்படுத்தவும் செயன்முறை ஒன்றை சபை கொண்டுள்ளது. அது, வருடாந்த அறிக்கைகளின் ஒரு பகுதியாக அமையும். | இணங்கி நடக்கப்பட்டது.<br>பிரகடனங்களுக்கு அமைவாக, அத்தகைய உறவுகளை இனங்காண முடியும். அத்துடன், அவ்வெளிப்படுத்தல்கள் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.<br><br>பிரகடனத்தலகுறிப்பிட்டவாறு தலைவர் மற்றும் பொது முகாமையாளர் மற்றும் சபை உறுப்பினர்களிடையெ வேறு எந்தவிதமான தொடர்புகளோ வர்த்தக வியாபார உறவுகளொ இல்லை. |
| 3(5)(iv) | சபை பின்வரும் சந்தர்ப்பங்களில் சுயமதிப்பீட்டு அறிக்கையைக் கொண்டிருக்கும். தலைவர்,<br>a) சபைக்குத் தலைமைத்துவத்தை வழங்கும் போது,<br>b) சபை வினைத்திறனாகப் பணியாற்றுவதுடன், தனது கடமைகளைப் பூர்த்தி செய்கின்றது என்பதை உறுதிப்படுத்தல். மற்றும்,<br>c) முக்கியமான அனைத்து மற்றும் பொருத்தமான விடயங்கள், சபையினால் உரிய நேரத்தில் கலந்துரையாடப்பட்டன என்பதை உறுதிப்படுத்துதல். | இணங்கி நடக்கப்பட்டது.<br>சபை சுயமதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது.<br>தலைவர் சபைக்குத் தலைமைத்துவத்தை வழங்குவதுடன், சபையின் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் வினைத்திறனாக செயற்படுகிறது என்பதை உறுதிப்படுத்துதல். |
| 3(5)(v) | தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறையான நிகழ்ச்சி நிரல், கம்பனியின் செயலாளரினால் பகிர்ந்தளிக்கப்பட்டன. | இணங்கி நடக்கப்பட்டது.<br>தலைவரினால் நிகழ்ச்சி நிரல் செயலாளருடன் வாய்மூலமாக கலந்தாராயப்பட்டு, கூட்டத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டது. |
| 3(5)(vi) | சபைக் கூட்டங்களில் எழுகின்ற விடயங்கள் பற்றி உரிய நேரத்திலான சமர்ப்பனங்கள் ஊடாக அனைத்து பணிப்பாளர்களும் முறையாக தெளிவுபடுத்தப் பட்டார்கள் என்பதை தலைவர் உறுதிப்படுத்துதல். | இணங்கி நடக்கப்பட்டது.<br>சபைக் கூட்டங்களில் எழும் விடயங்கள் மீது அனைத்துப் பணிப்பாளர்களும் முறையாகத் தெளிவுபடுத்தப்பட்டனர் என்பதை தலைவர் உறுதிப்படுத்தினார். நிகழ்ச்சி நிரலும், சபை ஆவணங்களும், போதுமான கால நேரத்தை வழங்கி, பணிப்பாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. கடந்த மாத சபைக் கூட்டக் குறிப்புகள், சபை உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், திருத்தங்களுக்காக அல்லது அங்கீகாரத்திற்காக அடுத்து வரும் சபைக் கூட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. |
| 3(5)(vii) | சபை விவகாரங்கள் மீது முழுமையான மற்றும் துடிப்பான பங்களிப்பை அனைத்துப் பணிப்பாளர்களும் வழங்குவதை ஊக்குவிக்கும் வகையில், சுயமதிப்பீட்டு செயன்முறை ஒன்றை சபை கொண்டுள்ளதுடன், வங்கியின் சிறந்த நலனுக்காக தலைவர் தலைமைத்துவத்தை மேற்கொண்டு செயற்படுவார். | இணங்கி நடக்கப்பட்டது.<br>சபை சுயமதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது. |
| 3(5)(viii) | சபை, சுயமதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது. அச்செயன்முறை, நிர்வாகம் சாராத பணிப்பாளர்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்யும். | இணங்கி நடக்கப்பட்டது.<br>சபை சுயமதிப்பீட்டுச் செயன்முறையைக் கொண்டுள்ளது. |
| 3(5)(ix) | முக்கிய முகாமைத்துவ ஆட்களின் நேரடியான தலையீட்டைக் கொண்டுள்ள விடயங்கள் அல்லது வேறு ஏதேனும் நிர்வாகக் கடமைகள் எதுவாக இருப்பினும், அவற்றில் தலைவர் ஈடுபடுவார். | இணங்கி நடக்கப்பட்டது.<br>முக்கிய முகாமைத்துவ ஆட்களின் நேரடியான தலையீட்டைக் கொண்டுள்ள விடயங்கள் அல்லது வேறு ஏதேனும் நிர்வாகக் கடமைகள் எதுவாக இருப்பினும், அவற்றில் தலைவர் ஈடுபடமாட்டார். |
| 3(5)(x) | பங்குதாரர்களுடன் வினைத்திறனான தொடர்பாடலைப் பேணுவதற்குரிய செயன்முறை ஒன்றுள்ளது. அத்துடன், பங்குதாரர்களின் கருத்துக்கள் சபைக்குத் தெரிவிக்கப்படும். | இணங்கி நடக்கப்பட்டது.<br>பங்குதாரர்களின் விடயங்களை ஆராய்வதற்கான இடமாக வருடாந்தப் பொதுக் கூட்டம் கருதப்படுகிறது. |
| 3(5)(xi) | வங்கியின் நாளாந்த செயற்பாடுகள் மற்றும் வர்த்தக விடயங்களை முகாமைத்துவம் செய்யும் தலைமை நிர்வாக உயர் அதிகாரி, பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார். | இணங்கி நடக்கப்பட்டது.<br>HDFC சட்டத்திற்கு அமைய, வங்கியின் செயற்பாடுகளின் நாளாந்த முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக, பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி இருக்கின்றார். |

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| **3(6)** | **சபை நியமிக்கப்பட்ட குழுக்கள்** | |
| 3(6)(i) | இந்த வழிகாட்டிகளின் கீழ் உள்ள, வழிகாட்டிகள் 3(6)(ii)இ 3(6) (iii)இ 3(6) (iv) மற்றும் 3(6) (v) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு, வங்கி குறைந்தபட்சம் நான்கு சபைக் குழுக்களை ஸ்தாபித்துள்ளது.<br><br>ஒவ்வொரு சபைக் குழுவின் அறிக்கையும் நேரடியாக சபைக்கு முகவரி இடப்பட்டுள்ளது என்பதை பரீட்சித்தல்.<br><br>சபை அதன் வருடாந்த அறிக்கையில் ஒவ்வொரு குழுவினுடைய கடமைகள், வகிபாகங்கள் மற்றும் செயல்களை அறிக்கையிடும். | இணங்கி நடக்கப்பட்டது.<br>இந்த வழிகாட்டிகளின் கீழ் உள்ள வழிகாட்டிகள் 3(6) (ii), 3(6) (iii), 3(6) (ை) மற்றும் 3(6) (v) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு, வங்கி பின்வரும் ஐந்து குழுக்களை ஸ்தாபித்துள்ளது. அவை சபைக்கு நேரடியாக அறிக்கையிடும்.<br><br>i) சபை கணக்காய்வுக் குழு<br>ii) சபை மனிதவள மற்றும் சம்பளக் குழு<br>iii) சபை தெரிவுக்குழு<br>iv) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு<br>v) சபை தொடர்புடைய திறத்தவருடனான பரிவர்த்தனைக் குழு<br><br>குழுக்களின் கூட்ட அறிக்கைகள், சபைக்கு நேரடியாகச் சமர்ப்பிக்கப்படுவதுடன், ஒவ்வொரு குழுவினது அறிக்கையும் வருடாந்த அறிக்கையில் காட்டப்படும். |
| **3(6)(ii)** | **கணக்காய்வுக் குழு** | |
| | a) குழுவின் தலைவர் நிருவாகம் சாராத பணிப்பாளராக இருப்பதோடு, அவர், தேவையான தகுதிகளையும் அனுபவங்களையும் கொண்டுள்ளார். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>சபை கணக்காய்வுக் குழுவின் தலைவராக சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளரை நியமித்துள்ளது. (சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா) அத்துடன், இப்பணிப்பாளர், தனது சுய விபரங்களின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வகையில் தேவையான தகுதிகளைக் கொண்டுள்ளார். |
| | b) குழுவின் சகல உறுப்பினர்களும் நிர்வாகம் சாராத பணிப்பாளர்களாவர். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>அனைத்துப் பணிப்பாளர்களும் நிர்வாகம் சாராதவர்கள். |
| | c) குழு பின்வரும் விடயங்களுடன் தொடர்புபட்ட பரிந்துரைகளை வழங்கியது.<br><br>i) பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக கணக்காய்வுச் சேவைகளுக்காக வெளியகக் கணக்காய்வாளரை நியமித்தல்.<br>ii) காலத்திற்குக் காலம், இலங்கை மத்திய வங்கியினால் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்படும் வழிகாட்டிகளை அமுல்படுத்துதல்<br>iii) பொருத்தமான கணக்கியல் நியமங்களைப் பிரயோகித்தல்<br>iv) கணக்காய்வாளரின் சேவைக்காலம், கணக்காய்வுக் கட்டணம், மற்றும் ஏதேனும் ராஜினாமா அல்லது நீக்கம், இவை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.<br><br>கணக்காய்வுப் பங்காளரின் சேவைகள் ஐந்து வருடத்திற்கு மேல் இருத்தலாகாது, அத்துடன், கணக்காய்வுப் பங்காளரின் முன்னைய சேவைக்காலம் பூர்த்தி செய்யப்பட்ட திகதியில் இருந்து 3 வருடம் பூர்த்தியாக முன்னர் சேவையில் அமர்த்தலாகாது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிச் சட்டத்தின் பிரிவு 26(2) க்கு அமைவாக, கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர் ஆவார்.<br><br>இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் கணக்காய்வாளர்களுக்கான வழிகாட்டிகளின் அமுல்படுத்துகையுடன் தொடர்புடைய விடயங்கள் மீது குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளது.<br><br>பொருத்தமற்றது.<br>நாட்டின் அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, கணக்காய்வாளர் நாயகம், வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர் ஆவார். ஆகவே, வெளியகக் கணக்காய்வாளர்களின் சேவைகளைப் பெறுவது தொடர்பில் வங்கிக்கு எவ்வித பங்கும் கிடையாது.<br><br>2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம், கணக்காய்வுக் கட்டணம் கணக்காய்வாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். இச்சட்டத்தின் பிரிவு 18(1) மற்றும் 18(2) க்கு அமைய கணக்காய்வாளர் நாயகம், பொருத்தமான சபைகளுக்காக மேற்கொள்ளப்படும் கணக்காய்வுக்கு, கட்டணம் ஒன்றை அறவிடல் வேண்டும். மேலும், கணக்காய்வாளர் நாயகம், நிதிக்குப் பொறுப்பான அமைச்சரின் கீழ் வருகின்ற செயலாளர் மற்றும் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு பொருத்தமான அமைச்சரின் கீழ் வருகின்ற செயலாளர் ஆகியோரின் இணக்கத்தடன் தீர்மானித்தல் வேண்டும். |
| | d) கணக்காய்வு ளுடுயுரளு இற்கு அமைவாக நடத்தப்பட்டது என்பதையும், கணக்காய்வாளர்களின் சுயாதீனத் தன்மை தொடர்பாகவும் வெளியகக் கணக்காய்வாளர்களிடம் இருந்து பிரதிநிதித்துவங்களைப் பெற்றுக்கொள்ளல். | பொருத்தமற்றது.<br>ஏனெனில், கணக்காய்வாளர் நாயகத்தின் சுயாதீனத் தன்மையும், வினைத்திறனும், நாட்டின் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கிறது. |

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| | e) பொருத்தமான ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, கணக்காய்வு அல்லாத சேவைகளை வழங்குவதற்கு, வெளியகக் கணக்காய்வாளரின் சேவை தொடர்பாக குழு கொள்கை ஒன்றை அமுல்படுத்துதல். | பொருத்தமற்றது.<br>கணக்காய்வாளர் நாயகம், வங்கியின் கணக்காய்வாளர் நாயகமாக இருப்பதனால் இவ்விடயம் எழவில்லை. |
| | f) SLAuS இற்கு அமைவாக கணக்காய்வு ஆரம்பிக்கப்பட முன்னர், வெளியகக் கணக்காய்வாளருடன் கணக்காய்வின் இயல்பு மற்றும் எல்லை என்பனவற்றை குழு ஆராய்ந்து முடிவு செய்தல். | பொருத்தமற்றது.<br>1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 இன் உப பிரிவுகள் (3) மற்றும் (4) என்பன கணக்காய்வின் எல்லைகளைத் தீர்மானிப்பதற்கு கணக்காய்வாளருக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகிறது. இச்சட்டத்தின்கீழ் கணக்காய்வின் அளவு மற்றும் எல்லையைத் தீர்மானிக்க முடியும். மேலும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சடத்தின பகுதி 2 பிரிவு 3(1) உம் கணக்காய்வு நிறுவனங்கின் தொடாபுபட்ட கணக்காய்வு எல்லையைத் தீர்மானிக்கிறது. |
| | g) வங்கியின் நிதிக் கூற்றுக்கள், வருடாந்த அறிக்கை, கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தலுக்காகத் தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகள் என்பவற்றின் நேர்மைத் திறனை மேற்பார்வை செய்வதற்கு வங்கியின் நிதித் தகவலை மீளாய்வு செய்யும் செயன் முறையை குழு கொண்டிருத்தல். அத்துடன், பின்வரும் விடயங்களை பிரதம நிதி அதிகாரியிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கான செயன்முறை ஒன்றும் உள்ளது.<br>i) முக்கியமான தீர்ப்புத் துறைகள்,<br>ii) கணக்கியல் கொள்கைள் மற்றும் நடைமுறைகளில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்கள்,<br>iii) நிறுவன தொடர்ச்சி ஊகம், மற்றும்<br>iv) பொருத்தமான கணக்கியல் நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்கி நடத்தல். மற்றும்,<br>v) வருடாந்த நிதிக் கூற்றுக்களில் இருந்து எழுகின்ற முக்கியமான சீர்படுத்தல்கள் தொடர்பான விடயங்கள். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும் நிதித் தகவல்களையும், வருடாந்த நிதிக் கூற்றுக்களையும் குழு மீளாய்வு செய்யும். சபை கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பிரத நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகியோர் பங்குபற்றுவதனால், இவ்விடயங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| | h) கணக்காய்வு தொடர்பான நிர்வாக முகாமைத்துவம் இல்லாத சந்தர்ப்பங்களில் ஏதேனும் விடயங்கள் தொடர்பாக குழு வெளியகக் கணக்காய்வாளர்களைக் கொண்டிருத்தல். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி, வங்கியில் இருப்பதால், குழு கிரமமாக அவர்களை சந்திக்கும். அத்துடன், அழைப்பின் பேரில் கணக்காய்வாளரின் பிரதிநிதி சபை கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் சமூகமளித்திருப்பார். |
| | i) கணக்காய்வாளர் நாயகத்தின் முகாமைத்துவக் கடிதத்தையும், அதற்குரிய முகாமைத்துவப் பதிலையும் குழு மீளாய்வு செய்தல். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>கணக்காய்வுக் குழு வெளியக கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதத்தை வருடாந்தம் மீளாய்வு செய்வதுடன் 2021 ஆம் ஆண்டுக்கான 154(6) இக் கீழான கணக்காய்வு அறிக்கையையம் மீளாய்வு செய்தள்ளது. |
| | j) வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பணி தொடர்பில் குழு பின்வரும் படிமுறைகளை மேற்கொள்ளல். | |
| | I. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் எல்லை, பணிகள் மற்றும் வளங்களின் போதுமான தன்மையை மீளாய்வு செய்தல். அத்துடன், அதன் பணியை மேற்கொள்ளத் தேவையான அதிகாரம் அத்திணைக்களத்திற்கு உள்ளது என்பது பற்றி திருப்தியுறல். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>9.11.2022 ஆம் திகதியன்று கணக்காய்வுக்குழு உள்ளக கணக்காய்வுத் திட்டதை மீளாய்வு செய்துள்ளது. |
| | II. உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்தல், அத்துடன், தேவையான இடங்களில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பரிந்துரைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தமையை உறுதிப்படுத்தல். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>குழு உளளக கணக்காய்வுத் திட்டதை மீளாய்வு செய்ததுடன், உள்ளக கணக்காய்வு நடபடிகளின் பெறுபெறுகள் மேம்படுத்தலுக்காக பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என உறுதிப்படுத்துகிறது. |
| | III. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேட்ட பணியாட்களின் செயற்திறன் மதிப்பீட்டை மீளாய்வு செய்தல். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>கணக்காய்வுக்குழு 9.11.2022 இல் நடைபெற்ற கூடடத்தில் CIA உடைய மதிப்பீட்டை மீளாய்வு செய்தது. |
| | IV. உள்ளகக் கணக்காய்வுப் பணிக்காக, வெளியக சேவை வழங்குநர்கள், தலைவர், சிரேட்ட பணியாட்கள் தொடர்பான ஏதேனும் நியமனம் அல்லது முடிவுறுத்தலைப் பரிந்துரை செய்தல். | |

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| | V. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் உட்பட உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரே்ட பணியாட்களின் ராஜினாமாக்களை குழு மதிப்பீடு செய்துள்ளது என்பதைப் பரீட்சித்தலும், சிரே்ட உறுப்பினர்கள் மற்றும் வெளியக சேவை வழங்குநர்களின் ராஜினாமாக்களுக்கான காரணங்களைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் அளித்தலும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது<br>IAD யின் தலைவர் (CIA) நியமனம் கணக்காய்வுக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. அத்தகைய சூழ்நிலை சூழ்நிலை எழவில்லை. |
| | VI. உள்ளகக் கணக்காய்வுப் பணி சுயாதீனமானது என்பதைப் பரீட்சித்தல். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் சுயாதீனமாக இருப்பதுடன், உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம், சபை கணக்காய்வுக் குழுவுக்கு நேரடியாக அறிக்கையிடும். |
| | k) உள்ளக விசாரணைகளின் பிரதான கண்டறிதல்களை குழு கவனத்திற் கொண்டுள்ளதா என்பதையும், அதற்குரிய முகாமைத்துவப் பதில்கள் அளிக்கப்பட்டனவா என்பதையும் தீர்மானித்தலுக்கான கூட்டக் குறிப்புகள். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>பிரதான உள்ளக் கணக்காய்வுக் கண்டறிதல்களும் முகாமைத்துவப் பதில்களும், கணக்காய்வுக் குழுவினால் கலந்தாலோசிக்கப்பட்டு, தேவையான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| | l) நிர்வாகப் பணிப்பாளர்களின் சமூகம் இன்றி, வெளியகக் கணக்காய்வாளர்களுடன் குழு குறைந்தபட்சம் இரண்டு கூட்டங்களை நடத்தியுள்ளதா? | சபையில் நிர்வாகப் பணிப்பாளர்கள் இன்மையால் இது பொருத்தமற்றது. அனைத்துக் குழு உறுப்பினர்களும் நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள். |
| | m) குழுவின் குறிப்பு விதிகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.<br>i) அதன் குறிப்பு விதி எல்லைகளுக்குள் ஏதேனும் விடயங்களை விசாரணை செய்வதற்கான வெளிப்படையான அதிகாரம்<br>ii) அவ்வாறு மேற்கொள்வதற்குத் தேவையான வளங்கள்<br>iii) தகவல்களுக்கான முழுமையான அணுகல்<br><br>வெளியக தொழில்முறை அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகாரமும், தேவையான இடங்களில் பொருத்தமான அனுபவத்தைக் கொண்டுள்ள வெளியாட்களை அழைத்தலும். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>கணக்காய்வுக் குழுவின் குறிப்பு விதி இவ் அனைத்து விடயங்களையும் உள்வாங்குகிறது. இறுதி மீளாய்வுத் திகதி 10 பெப்ரவரி 2023 ஆகும். |
| | n) குழு குறைந்தபட்சம் நான்கு தடவைகள் சந்தித்து கூட்டக் குறிப்புகளைப் பேணுதல். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>2022 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது, 4 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றதுடன், கூட்டக் குறிப்புகளும் பேணப்பட்டன. |
| | o) சபை, அதன் வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டிய விடயங்கள்<br>i) கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கை தொடர்பான விபரங்கள்<br>ii) வருடத்தின் போது நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை. மற்றும்,<br><br>அத்தகைய கூட்டங்களில் பங்குபற்றிய ஒவ்வொரு தனிப்பட்ட பணிப்பாளரினதும் வருகை தொடர்பான விபரங்கள். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>2022 வருடாந்த அறிக்கையின் கணக்காய்வுக்குழு அறிக்கையில் இந்த விபரங்கள் தரப்பட்டுள்ளன. கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள்:<br><br>கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கை தொடர்பான விபரங்கள் வருடத்தின் போது நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை. மற்றும்,<br><br>அத்தகைய கூட்டங்களில் பங்குபற்றிய ஒவ்வொரு தனிப்பட்ட பணிப்பாளரினதும் வருகை தொடர்பான விபரங்கள். |
| | p) குழுவின் செயலாளர், கம்பனி செயலாளராக அல்லது உள்ளகக் கணக்காய்வுப் பணியின் தலைவராவார். | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தலைவர், கணக்காய்வுக் குழுவின் செயலாளராகச் செயற்பட்டதுடன் கூட்டக்குறிப்புகளையும் பேணி வருகிறார். |
| | q) பின்வரும் விடயங்களை இடித்துரைப்பான் கொள்கை உள்ளடக்கியுள்ளது என்பதைப் பரீட்சித்தல்.<br>i) நிதி அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடு அல்லது ஏனைய விடயங்களில் முறைகேடுகள்<br>ii) அத்தகைய விடயங்கள் தொடர்பாக நியாயமான மற்றும் சுதந்திரமான விசாரணை நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கான முறையான ஏற்பாடுகளை குழு உறுதிப்படுத்தல். அத்துடன்,<br>iii) பொருத்தமான பின்தொடர் நடவடிக்கை. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>இடித்துரைப்புக் கொள்கை - 2017 - 13.10.2017 இல் (08/53/ர்சு/2017) ஏற்கப்பட்டது. அத்துடன், இந்தக் கொள்கை 21.10.2019 இல் திருத்தப்பட்டது.<br><br>இந்தத் தேவைப்பாட்டை எளிதாக்கும் வகையில், இடித்துரைப்பு தகவல்களைப் பெற்றுக்கொள்ள பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், ஒரு அலுவலராகப் பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ளார். இக்கொள்கை மீளாய்வு செய்வதற்காக அடுத்த கணக்காய்வுக்குழுக் கூட்டம் ஜூன் 2023 இல் நடைபெறும். |

| பிரிவு | கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாடு | இணக்க மட்டம் |
|---|---|---|
| 3(6)(iii) | பின்வரும் விதிகள் மனிதவள மற்றும் சம்பளக் குழு தொடர்பில் பிரயோகிக்கப்படுமா? | |
| | a) குறிப்பு விதிகள் மற்றும் கூட்டக் குறிப்புகளை மீளாய்வு செய்வதன் மூலம், வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் ஊதியங்களை (சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகள்) தீர்மானிக்க குழு கொள்கை ஒன்றை அமுல்படுத்தியது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>நிதியமைச்சினால் உருவாக்கப்பட்ட வழிகாட்டிகளின் அடிப்படையில், பணிப்பாளர்களின் ஊதியங்கள் தீர்மானிக்கப்படும். பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் ஊதியங்கள் கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் மனித வளங்கள் / சம்பளக் குழுவினால் தீர்மானிக்கப்படும். |
| | b) பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோரின் இலக்குகளும், அடைவு எல்லைகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர்கள், நிர்வாகம் சாராதவர்களாக இருப்பதன் காரணமாக, நிர்வாகப் பணிப்பாளர்கள் போன்று தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் தலையிட மாட்டார்கள். முக்கிய முகாமைத்துவ ஆட்கள், வரவு - செலவு அடைவு எல்லைகளுக்குப் பொறுப்பாவர். எனினும், முக்கிய முகாமைத்துவ ஆட்களின் இலக்குகளும், அடைவு எல்லைகளும் ஆவணப்படுத்தப்பட்டன. திணைக்கள மற்றுமு் கிளை வாரியான முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் குறித்துரைக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து முக்கிய முகாமைத்துவ ஆட்களும் அதற்குபொறுப்பாவர். |
| | c) குறித்துரைக்கப்பட்ட மற்றும் அடைவு எல்லைகளுக்கு எதிராக பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் செயற்திறன் மதிப்பீடுகளை, காலாந்தர அடிப்படையில் குழு கவனத்திற் கொண்டுள்ளது. இவை ஊதியங்கள், அணுகூலங்கள் மற்றும் ஏனைய செயற்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் என்பனவற்றைப் புதுப்பிக்க அடிப்படையாகக் கொள்ளப்படும். | இணங்கி நடக்கப்பட்டள்ளது.<br>குறித்துரைக்கப்பட் டஅடைவு எல்லைகளுக்க எதிராக முக்கிய முகாமைத்துவ ஆட்களும் பிரதம நிறைவேற்று அதிகாரிகயும் செயற்பட்டுள்ளாரான என்பதை ஒவ்வொரு வருட அரம்பத்தின் போதும் மதிப்பிடு செய்ய வேண்டும். |
| | d) குறிப்பு விதிகள் பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்பான விடயங்களை கூட்டக் குறிப்புகளை மீளாய்வு செய்வதன் மூலம் கலந்தாலோசிக்கும் சந்தர்ப்பங்களில் குழுக் கூட்டங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரி சமூகமளிக்க மாட்டார் எனக் குறிப்பிடுகிறது. | இணங்கி நடக்கப்பட்டுள்ளது.<br>மனித வள குழுவின் குறிப்பு விதி, இத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்கிறது. பிரதம நிறைவெற்ற அதிகாரி / பொ துமுகாமையாளர் அவர்கள் தொடாபான விடயங்கள் ஆராயப்படாத சூழ்நிலைகள் தவிர ஏனைய அனைத்துக் கூட்டங்களிலும் பதிலளிப்பு செய்வார். |
| 3(6)(iv) | தெரிவுக் குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையனவா? | |
மேலும், பிரதம நிறைவேற்று அதிகாரியும், நிறுவன முகாமைத்துவமும், இடர் ஏற்புப் பணிப்புரையினை நிர்ணயித்து, இடர்நேர்வுக் கட்டுப்பாடுகளை மேற்பார்வை செய்தவற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளன. வங்கியின் வழமையான இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகள் மீது இடர்நேர்வு பிரதம முகாமையாளர் அதிகாரத்தை கொண்டிருந்து, தொடர்புடைய இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கையினை நிர்ணயிக்கின்ற அதேவேளை, முறையான கண்காணித்தலையும், வழிமுறையையும் உறுதிசெய்து, அதேபோன்று சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கும், சபைக்கும் அறிக்கையிடுகின்றார்.



## சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு (BIRMC)

இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்கான தொணியினை சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு நிர்ணயிக்கின்ற அதேவேளை, இடர்நேர்வு விழிப்புணர்வு பற்றிய கலாசாரத்தினை ஊக்குவிக்கின்றது. குழு, முகாமைத்துவக் குழுக்களின் செயல்திறன் வாய்ந்த தன்மையுடன் சேர்த்து, மாதந்தோறும் இடர்நேர்வுகளைக் கணிப்பிடுகிறது. சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு (டீஜசுஆஊ) பல தொழிற்பாடுகளைச் செயலாற்றுகின்றது.

- இடர்நேர்வுகள் ஏற்றுக்கொள்ள முடியாத மட்டத்திற்கு உயர்வடைவதற்கு முன்னர் இடர்நேர்வு தணிப்பிற்கான துரிதமான பரிகார வழிமுறைகளை எடுத்தல்.
- வங்கிக் கொள்கைகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றுக்கு இசைவாக தணிப்பு வழிமுறைகளை எடுத்தல்.
- இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு அனைத்து கட்டாய ஒழுங்கு விதிகள் மற்றும் உள்ளகக் கொள்கைகள் என்பவற்றுடன் வங்கி இணங்குவித்தலை உறுதிசெய்தல்.

இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கும், அவற்றைத் தணிப்பதற்கும் காலாண்டுதோறும் குழு சந்திக்கின்றது: இதற்கு மேலதிகமாக, குழு, தொழிற் தொடர்ச்சித் திட்டங்களை இற்றைப்படுத்துகின்றது. பணிப்பாளர் சபைக்கு கிரமமாக அறிக்கையிடுகின்ற நிறைவேற்றுத் தரமல்லாத உறுப்பினர்களை குழு உள்ளடக்குகின்றது.

## கணக்காய்வுக் குழுவும் உள்ளகக் கணக்காய்வும்

சபைக் கணக்காய்வுக் குழுவானது, இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் உடனான வங்கியின் இணங்குவித்தலைக் கண்காணிப்பதுடன், உள்ளகக் கணக்காய்வின் உதவியினைப் பெற்றுக்கொள்கின்றது. திட்டமிடப்பட்ட மற்றும் தேவைக்கேற்றவாறு உள்ளகக் கணக்காய்வு வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டுப்பாடுகளின் நடைமுறைகளை மீளாய்கின்றது. உள்ளகக் கணக்காய்வு, சபைக் கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடுகின்றது.

## முகாமைத்துவக் குழுக்கள்

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு உதவுவதற்கும், விசேடத்துவம்மிக்க இடர்நேர்வுகள் பற்றி கவனம் செலுத்தவதற்கும் வங்கி பல்வேறு நிறைவேற்று முகாமைத்துவ துணைக்குழுக்களை செயற்பாட்டில் கொண்டுள்ளது.

முகாமைத்துவ மட்டக் குழுக்கள் பின்வருமாறு:

- நிறுவன முகாமைத்துவம்
- சொத்து மற்றும் பொறுப்புக் குழு
- கொடுகடன் குழு
- தகவல் தொழில்நுட்ப வழிநடாத்தல் குழு
- தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புக் காத்தல் குழு
- அறவீட்டு வழிநடாத்தல் குழு
- சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் குழு

- நிறுவன முகாமைத்துவக் குழு, வங்கியின் ஒட்டு மொத்த தொழில் உபாயத்தினை நிர்ணயிப்பதன் மூலம் சரியான நடவடிக்கை மீது வங்கியினை இடம்பெறச்செய்து வங்கியின் உபாயக் குறிக்கோள்கள், அதன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் அளவுருக்களுக்குள் அடையப்பெறுகின்றன என்பதனை உறுதிசெய்வதற்கு உபாய நடைமுறைப்படுத்தலைக் கண்காணிக்கின்றது.
- சொத்து மற்றும் பொறுப்புக் குழு - ஆரோக்கியமான திரவத்தன்மை மட்டங்களைப் பேணுகின்ற அதேவேளை, ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்படுத்தல்களை நிறைவு செய்வதற்கு இக்குழு சொத்துக்களையும், பொறுப்புகளையும் கிரமமாகக் கண்காணித்து முகாமை செய்கின்றது.
- கொடுகடன் குழு - மீளாயப்படுகின்ற கடன்கள் ஒழுங்கு முறைப்படுத்தல் தரநியமங்களை, வங்கியின் கடன் வழங்கல் கொள்கைகளை நிறைவு செய்கின்றன என்றும், வங்கியின் கொடுகடன் இடர்நேர்வு ஏற்புடன் பொருந்துகின்ற அதேவேளை, இடர்நேர்வினைத் தணித்தல், கடன் பெறுநரின் கடன் புள்ளி, கடந்தகால கொடுப்பனவு வரலாறு, நிலுவையாக இருக்கும் படுகடன்கள் மற்றும் தவணை தவறுகின்ற கடன்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை நிர்ணயித்தல், நடப்பு திரவத்தன்மை போன்ற காரணிகளை மதிப்பீடு செய்கின்றது.
- தகவல் தொழில்நுட்ப வழிநடாத்தல் குழு - இணையப் பாதுகாப்பு தொடர்புபட்ட இடர்நேர்வுகளை முகாமை செய்வதுடன் கொள்கைகள் மற்றும் கருத்துக்கள் நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வை செய்கின்றது.
- தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புக் குழு - கொள்கைகள், நடைமுறைகள், ஒழுங்குவிதிகள், அவசியமான இற்றைப்படுத்தல்களை தொடர்புபடுத்துகின்ற, அதன் பொறுப்பின் கீழுள்ள, அதனையொத்த ஆவணங்கள் என்பவற்றை குழு கண்காணிப்பதுடன், அவற்றை இற்றை வரையானதாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்து, தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு ஆய்வுகள் மற்றும் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை மதிப்பிடுவதுடன், குறைந்தது ஆண்டுக்கொருதடவை பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகின்றது.
- அறவீட்டு வழிநடாத்தல் குழு - வங்கியின் அறவீட்டுத் திட்டத்தைத் தயாரித்தல், பரிசோதித்தல், இற்றைப்படுத்தல் என்பவற்றுக்கும் வங்கியின் உபாயத்துடன் அறவீட்டுத் திட்டத்தினை ஒருங்கிணைத்தல், தொழிற்தீர்மானத்தை மேற்கொள்ளல், இடர்நேர்வு முகாமைத்துவம், அழுத்தப் பரிசோதனை, மூலதன மற்றும் நிதியிடல் மதிப்பீடுகள் என்பவற்றுக்கும் இக்குழு பொறுப்புடையதாகும்.
- சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் குழு - வங்கியின் இலக்குகளையும், குறிக்கோள்களையும் எய்துவதற்கு, வங்கிக்கான செயல்திறன்வாய்ந்த சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் திட்டங்களை உருவாக்கி, நடைமுறைப்படுத்துவதில் வழிகாட்டலையும், நிபுணத்துவத்தையும் வழங்குகின்றது.

## இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவு (RMD)

பிரதம இடர்நேர்வு அதிகாரியின் தலைமையின் கீழ் வருகின்ற இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவானது, இடர்நேர்வு மேற்பார்வை, கட்டமைப்பு உருவாக்கம், கொள்கை மற்றும் முறையியல்களை வகுத்தல் அத்துடன், முக்கிய இடர்நேர்வு பிரச்சினைகள் பற்றிய சுயாதீன கண்காணிப்பு பற்றி அறிக்கையிடுதல் என்பவற்றை செயலாற்றுவதற்கு சபை மட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு துணையளிக்கன்றது. அவை ஒன்றாக இணைந்து பாதுகாப்பின் இரண்டாம் நிலையினை அமைக்கின்றன.

இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவானது, இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகளை நாளாந்தம் முகாமை செய்கின்ற சுயாதீனப் பிரிவொன்றாகும். வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினுள் இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவு கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவு பொறுப்பாகவுள்ள இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையானது, வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைக்குள் கூட்டிணைக்கப்பட வேண்டும்.

## மூன்று நிலைப் பாதுகாப்பு

வங்கியின் உள்ளகப் பாதுகாப்பு மாதிரியாக, இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையொன்றுக்கான மூன்று அடுக்கு பாதுகாப்பு மாதிரியினை நாம் பணிக்கமர்த்தியுள்ளோம். இம்மாதிரி வங்கியின் இடர்நேர்வுகளுக்கு முன்மதிமிக்க, செயல்திறன்வாய்ந்த, இடர்நேர்வு பொறுப்புக்கூறத்தக்க முகாமைத்துவத்தைக் கொண்டு சேர்க்கின்றது.

| முதலாம் நிலை பாதுகாப்பு<br><br>முகாமைத்துவம் /தொழிற்பாடுகள் | இரண்டாம் நிலை பாதுகாப்பு<br><br>இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இனங்குவித்தல் | மூன்றாம் நிலை பாதுகாப்பு<br><br>உள்ளகக் கணக்காய்வு |
|---|---|---|
| முதலாம் நிலை பாதுகாப்பானது, வங்கியிலுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாடுகளுடன் தொடர்புடையது. பொதுவாக, நிகழ்நேர கவனம் செலுத்தலைக் கொண்டது. இது பரிசோதனைகளும், நிலுவைகளும் செயல்திறன் வாய்ந்த விதத்தில் பணியாற்றுவதை எடுத்துக்காட்டுவதற்கான ஆளுகை மற்றும் இணங்குவித்தல் ஏற்பாடுகள் பற்றிய மீளாய்வினை நோக்காகக் கொண்டது | பாதுகாப்பின் இரண்டாவது நிலையானது, இடர்நேர்வு மேற்பார்வை மீது மையப்படுத்தியிருப்பதுடன், பாதுகாப்புச் செயற்பாடுகளின் முதலாம் நிலை மீளாய்வுக்கு பொறுப்பாணை அளிக்கப்பட்டதுடன் கூடிய நிகழ்நேர செயற்பாட்டின் சில மட்டத்தினை ஈடுபடுத்துகின்றது.<br><br>இவ்வடுக்கு, இடர்நேர்வு முகாமைத்துவம், தொழில்நுட்ப மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், இணங்குவித்தல், அத்துடன் பாதுகாப்பு போன்ற துறைகளின் பணியினை உள்ளடக்குகின்றது.<br><br>ஆளுகை மற்றும் இணங்குவித்தல் ஏற்பாடுகளின் செயல்திறன் வாய்ந்த தன்மையினை உறுதி செய்வதற்கும் நடவடிக்கை மேம்படுத்தல்களை இனங்காண்பதையும் இது நோக்காகக் கொள்கின்றது. | பாதுகாப்பின் மூன்றாம் நிலையானது, முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை இடர்நேர்வு முகாமைத்துவ அணுகுமுறை இரண்டினதும் போதுமையினையும் செயல்திறன் வாய்ந்த தன்மையினையும் மதிப்பிடுகின்ற சுயாதீன உத்தரவாதத்தை ஈடுபடுத்துகின்றது.<br><br>ஆளுகை மற்றும் இணங்குவித்தல் செயல்திறன்வாய்ந்த தன்மையினை சுயாதீனமாக உறுதிப்படுத்துவதற்கும் மேம்படுத்தல்களை பரிந்துரைப்பதற்கும் உள்ளகக் கணக்காய்வாளரினால் இது மேற்கொள்ளப்படுகின்றது. |

## கொள்கைக் கட்டமைப்பு

பின்வரும் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்புபட்ட கொள்கைகளை வங்கி ஏற்றுக்கொண்டுள்ளது.

- ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு
- இடர் ஏற்பு கட்டமைப்பு
- கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை
- திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை
- வட்டி வீத இடர்நேர்வுக் கொள்கை
- தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை
- அழுத்தப் பரிசோதனைக் கொள்கை
- கடன் மீளாய்வுப் பொறிமுறைக் கொள்கை

இக்கொள்கைகள், ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படுகின்றன. வங்கியின் இடர்நேர்வுகளை இனங்கண்டு, பகுப்பாய்வு செய்தல், முறையான இடர்நேர்வு வரையறைகளை ஸ்தாபித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் என்பன மீது வங்கி கவனம் செலுத்தவதற்கு இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் வங்கியில் இயலச்செய்கின்றன. மேலும், இடர்நேர்வுகளைக் கண்காணிக்கும் அத்துடன், கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதனை உறுதிசெய்யும் நோக்கத்திற்காகவும் இவை பணியாற்றுகின்றன. வெளிவாரி உற்பத்தி மற்றும் சேவையிலுள்ள மாற்றங்களையும் பிரதிபலிப்பதற்கு அவற்றை ஏற்றவாறு ஆக்குவதற்கு வங்கி கொள்கைகளைக் கிரமமாக மீளாய்வு செய்கிறது.

## இடர்நேர்வு ஏற்பும் கண்காணித்தலும்

வங்கியானது விருப்பத்துடன் எற்றுக்கொள்ளக்கூடிய இடர்நேர்வு மட்டத்தின் அடிப்படையில், சபை அனுமதித்த இடர்நேர்வு ஏற்பு கட்டமைப்பொன்றின் ஊடாக ஒவ்வொரு இடர்நேர்வு வகை முழுவதும் வரையறைகளைப் பின்பற்றுகின்றது. வங்கியின் உறுதிப்பாட்டின் சிறந்த நலனுக்காக வெளிவாரிச் சூழல் மற்றும் வங்கி உபாயம் என்பவற்றைக் கருத்திற் கொண்டதன் பின்னர் இவ்வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இடர்நேர்வின் வகை மற்றும் சிறந்த நடத்தை என்பவற்றை கரிசனையில் கொண்டு, இடர்நேர்வுகளை அளவிடுவதற்கு பொருத்தமான முறைகளை வங்கி பயன்படுத்துகின்றது. வங்கியினால் வரைவிலக்கணம் செய்யப்பட்ட அடிப்படை அளவுகளை அடிப்படையாக கொண்டு இடர்நேர்வுகள் கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றன.

சபை - ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, சபையின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளை நிறுவுதல் அல்லது மதிப்பாய்வு செய்வதன் மூலம், வங்கியின் இடர் ஏற்பை அமைத்து மதிப்பாய்வு செய்வதோடு, வங்கி இடர் கண்காணிப்பு எல்லைகள் தொழில்துறையின் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப இருப்பதை உறுதி செய்கிறது. சகிப்பு மட்டங்களை தாண்டுகின்ற அனைத்து இடர்நேர்வுகளும் இடர்நேர்வுப் பிரிவினால் மீளாய்வு செய்யப்படுகின்றன.

## முக்கிய இடர்நேர்வுகளும் குறிகாட்டிகளும்

நிதியியல் பணி வழங்குநர் என்ற வகையில், வங்கி எதிர்கொள்கின்ற இடர்நேர்வுகள் நாம் பணியளிக்கின்ற குறைந்த வருமான வகுப்பினர் மற்றும் நடுத்தர வகுப்பாயினர் கணிசமான எண்ணிக்கையில் காணப்படுவதன் காரணமாக, கொடுகடன் தொடர்புபட்ட கடன் அளவுகளிலிருந்து பிரதானமாக தோற்றம் பெறுகின்றன. மேலும், சந்தை திரவத்தன்மை அத்துடன், சந்தை முதலீடுகள் என்பவற்றில் தாக்கம் எற்படுத்துகின்ற இடர்நேர்வுகளை வங்கி எதிர்கொள்கின்றது: ஆகையினால், அது, திரவத்தன்மை மற்றும் சந்தை இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்து தணிக்கின்றது. மேலும், மக்கள், தொழில்நுட்பம் மற்றும் சட்டம் அத்துடன் இணங்குவித்தல் தொடர்புடைய வங்கி எதிர்கொள்கின்ற தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கு மேலதிகமாக, மூலதனம் தொடர்பட்ட இடர்நேர்வுகள் மீளாய்வு செய்யப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றன.

# இடர்நேர்வு முகாமைத்துவம்

| துறை | நோக்கெல்லை |
|---|---|
| மூலதன இடர்நேர்வு | • உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை பற்றிய மீளாய்வு<br>• வரையறைகளுடன் ஒப்பிட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன போதுமை நிலை மற்றும் போக்குகள், ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் ஆலோசனை/உள்ளக வரையறைகள் அடங்கலாக ஒட்டுமொத்த இடர்நேர்வு வரையறை முறைமை<br>• முக்கிய இடர்நேர்வுகள் பற்றிய அழுத்தப் பரிசோதனை மற்றும் முதன்மை ஒட்டுமொத்த கடனளவு அறிக்கைகள் அத்துடன் தோற்றம் பெறுகின்ற உபாயம் மற்றும் ஒட்டுமொத்த தொழில் இடர்நேர்வுப் பகுப்பாய்வு |
| கொடுகடன் இடர்நேர்வு | • கொடுகடனுக்கு முந்திய இடர்நேர்வு முகாமைத்துவம்<br>• ரூ. 1.5 மில்லியனுக்கு மேல் அனைத்து கடன்களுக்குமான உள்ளக கடன் இடர்நேர்வு தரப்படுத்தல்<br>• கொடுகடன் இடர்நேர்வு கொள்கைகள் மற்றும் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் பற்றிய அதிகார ஒப்படைப்பு மீளாய்வு<br>• அலுவலர் பயிற்சி மற்றும் அறிவு பகிர்தல் வகுப்புகள்<br>• கொடுகடன் நிருவாக பிரிவின் கீழ் பகிர்ந்தளிப்பு மத்தியமயப்படுத்தல்<br>• கொடுகடனுக்கு பிந்திய இடர்நேர்வு முகாமைத்துவம்<br>• கடன் மீளாய்வுப் பொறிமுறை<br>• இடர்நேர்வு தரப்படுத்தல் மாதிரிகளை செல்லுபடியாக்குதல்<br>• இடர்நேர்வு ஏற்பு வரையறை கண்காணித்தல்<br>• கண்காணிப்புப் பட்டியல் மீளாய்வு<br>• இடர்நேர்வு அடிப்படையிலமைந்த விலையிடல் பொறிமுறையினை நடைமுறைப்படுத்தல் |
| சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு (வட்டி வீதங்கள்) | • திரவத்தன்மை மற்றும் சந்தை இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல்<br>• திரவத்தன்மை மற்றும் திறைசேரிச் சந்தைப் பகுப்பாய்வு மீதான அறிக்கைகள்<br>• திறைசேரி பின்னரங்கு அலுவலகம் மற்றும் ஏதேனும் வரையறைகளை மீளாய்தல்<br>• சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு மூலமான பரிந்துரைகளை மீளாய்தல்<br>• பாசல் III தேவைப்படுத்தல்களின் மீது திரவத்தன்மை இடர்நேர்வு கண்காணித்தல் |
| தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் (தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வுகள், மக்கள் இடர்நேர்வு சட்டம் மற்றும் இணங்குவித்தல் இடர்நேர்வு) | • தொழிற் தொடர்ச்சித் திட்டம், மேற்கொள்ளப்பட்ட அனர்த்த மீட்பு பயிற்சிகள் மீதான அறிக்கைகள்<br>• தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளை மீளாய்தல் மற்றும் இற்றைப்படுத்தல்<br>• முக்கிய இடர்நேர்வு குறிகாட்டிகளின் அறிக்கைகளைக் கண்காணித்தல்<br>• உள்ளக இழப்பு நிகழ்வு மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வுகள் மக்கள் இடர்நேர்வு சட்டம் மற்றும் இணங்குவித்தல் இடர்நேர்வு என்பவற்றின் வெளிவாரி நிகழ்வு கண்காணித்தலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வை பகுப்பாய்வு செய்தல். |

## மூலதன இடர்நேர்வு முகாமைத்துவம்

ஆண்டு காலப்பகுதியில் பாசல் IIIIII மூலதனக் கூட்டமைப்பின் மீளாய்வுச் செயன்முறையுடன் அணிசேர்கின்ற எமது உள்ளக மூலதன மதிப்பீட்டுச் செயன்முறையினை நாம் வலுப்படுத்தினோம். மூலதனப் போதுமை விகிதத்தை மதிப்பிடுவதன் வாயிலாக மூலதன போதுமை பற்றிய தொடர்புடைய மற்றும் கிரமமான கண்காணித்தலை நாம் பிரயோகித்த அதேவேளை, அதிகாரி நிரல்களுக்கு அதனை அறிக்கையிட்டோம்.

## வங்கியின் மூலதன நிலை

ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாகவும், ஆர்வலர் நலன்களைப் பாதுகாப்பதிலும் வங்கியானது, ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்றது. வைப்பாளர்களின் நிதியங்களுக்கு பாதுகாப்பினை வழங்குகின்றபோது, பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றபோது மற்றும் தொழில் விரிவாக்க குறிக்கோள்களை திருப்தி செயகின்றபோது இது மிக முக்கியமானதாகின்றது.

வங்கி அதன் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனக் காப்பு எல்லையினை நிறைவு செய்வதில் ரூ. 456 மில்லியன் இடைவெளியினைக் கொண்டுள்ளது. எனினும், 2022 இல் இலாப மட்டங்களின் அதிகரிப்பு காரணமாக 2021 இன் ரூ. 6,635 மில்லியனுடன் ஒப்பிடுகையில், அதன் மைய மூலதன பெறுமதியை ரூ. 25 மில்லியனால் சிறிதளவு அதிகரித்து, வேண்டப்பட்ட குறைந்தபட்ச மட்டத்தினை அடைவதில் உள்ள இடைவெளியினைக் குறைத்துள்ளது. 2022 இல் மூலதனப் போதுமை விகிதத்தினை நாம் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு நன்கு மேல் பேணியுள்ளோம்.

2019 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளுக்கு அமைவாகவும், மூலதனத் தேவைப்பாடுகள் மீதான பாசல் III அடிப்படையில் அமைந்த பணிப்புரைகளுக்கான மாற்றங்களின் அடிப்படையிலும், மூலதனக் காப்பு தாங்கு மட்டம் மற்றும் மொத்த அடுக்கு 1 உடன் சேர்த்து 8.50மூ கொண்ட காப்பு தாங்கு மட்டம் உள்ளடங்கலாக 7மூ பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலம் உருவாக்கப்படும் 12.50% குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தலை பேணுவதற்கு சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கு கட்டாயமாகபட்டுள்ளது.

| | அலகு | 2022 | 2021 | 2020 |
|---|---|---|---|---|
| பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதன விகிதம் % | % | 25.54% | 21.51% | 19.33% |
| பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதன விகித ரூ. மில். | ரூ. மில். | 6,210 | 6,185 | 4973 |
| அடுக்கு 1 மூலதனம் % | % | 26.56% | 22.38% | 20.20% |
| அடுக்கு 1 மூலதனம் ரூ. மில். | ரூ. மில். | 6,460 | 6435 | 5822 |
| மொத்த மூலதனம் % | % | 27.61% | 23.02% | 20.67% |
| மொத்த மூலதனம் ரூ. மில். | ரூ. மில். | 6,715 | 6619 | 5977 |

2022 மூலதன விகிதங்களின் அடிப்படையில் 2021 உடன் ஒப்பிடுகையில், பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதனம் மேம்பட்டுள்ளதுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், அடுக்கு 1 மூலதனம் மேம்பட்டுள்ளது. அத்துடன், 2021 உடன் ஒப்பிடுகையில் மொத்த மூலதனம் மேம்பட்டுள்ளது.

## அழுத்தப் பரிசோதனை

வெளிவாரிச் சூழலில் இருந்து தோன்றுகின்ற பாதகமான நிலமைகள் காரணமாக, எதிர்பாராத தாக்கங்கள் உள்ளதா என்பதனை மதிப்பிடுவதற்கு அதன் இயலுமையை அழுத்தப் பரிசோதனை இயலச்செய்கின்றது. உறுதியாக தொழிற்படுதற்கான அதன் இயலுமை மீது ஏதேனும் முக்கிய தாக்கத்தினைக் கொண்டுள்ள அனைத்து இடர்நேர்வுகள் மீதும், வங்கி அழுத்தப் பரிசோதனையை நடாத்துகின்றது. அழுத்தப் பரிசோதனைகள், மூலதனப் போதுமையை மதிப்பிடுவதற்கான உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையுடன் அணி சேர்ந்துள்ளது.


மூதலீடுகளுக்கு தாக்கம் செலுத்துகின்ற நிதியியல் சாதனங்கள் மாறுதல் போன்ற பல்வேறு காரணிகளில் இருந்து தோன்றுகின்ற தாக்க மட்டத்தை உணர்வுப் பகுப்பாய்வு அளவிடுகின்றது. கொடுகடன், திரவத்தன்மை, வட்டியுடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் போன்ற வங்கிக்கு உணர்திறன்மிக்க நோக்குகளை மதிப்பிடுவதற்கு, சொத்துப் பட்டியலுக்கு குறிப்பான பரிசோதனைகளுடன் சேர்த்து அதன் அனைத்து முக்கிய இடர்நேர்வு வகைகள் மீதும் வங்கி காலாண்டு அழுத்தப் பரிசோதனைகளை நடாத்துகின்றது. கிரமமான அழுத்தப் பரிசோதனைகளின் காரணமாக, அடிப்படை அளவு மட்டத்தை உறுதியான மட்டத்திற்கு வங்கி ஒழுங்குபடுத்த முடிவதுடன், இடர்நேர்வு சகிப்பு மட்டங்களை ஆரோக்கியமான இடர்நேர்வு ஏற்பொன்றிற்குள் குறைக்கின்றது.

## கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம்

கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு வாடிக்கையாளர் அல்லது நிதியியல் சாதன இணைத்தரப்பு இயலாமையின் அடிப்படையில் வங்கிக்கு ஏற்படும் சாத்தியமான நிதியியல் இழப்புகளை கொடுகடன் நேர்வுகள் உள்ளடக்குகின்றன. குறைந்த வருமான மற்றும் நடுத்தர வருமான வாடிக்கையாளர் குழுக்களின் பாரிய திரட்சி காரணமாக, கொடுகடன் இடர்நேர்வுக்கு கணிசமான அளவில் வங்கி உள்ளாகின்றது. கடன் முகாமைத்துவச் செயன்முறையின் அனைத்து முக்கிய நிலைகளிலும் இடர்நேர்வு கட்டுப்பாடுகள் பிரயோகிக்கப்படுவதுடன், நாம் அனுமதிக்கின்ற கொடுகடன் துறைகளுடன் நாம் ஈர்க்கக்கூடிய இடர்நேர்வு அளவை முகாமை செய்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்பு பின்பற்றப்படுகின்றது. கடன் அனுமதி மற்றும் சொத்துத் தர மதிப்பீடுகளின் இறுதி மேற்பார்வையினை இடர்நேர்வு அலுவலர் கொண்டுள்ளார். கொடுகடன் இடர்நேர்வைக் குறைத்து, கட்டுப்படுத்தி, முகாமை செய்வதற்கு வங்கி பின்வரும் முறைகளை ஏற்றுக்கொண்டுள்ளது.


மேற்குறிப்பிட்டவற்றுக்குப் புறம்பாக, வங்கியானது, அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் தெளிவாக வரைவிலக்கனம் செய்யப்பட்ட, இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினைப் பேணுகின்றது. கொடுகடன் இடர்நேர்வு உள்ளடங்கலாக, இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான வங்கியின் கட்டமைப்பு, கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றை இது நிர்ணயிக்கின்றது. இடர்நேர்வுப் பிரிவானது, கருவிகள் தொகுதியினைப் பேணுவதுடன், வேண்டப்பட்டவாறு, கட்டுப்படுத்துவதற்கும், தணிப்பதற்கும் கொடுகடன் அளவுகளை மாதாந்தம் மதிப்பிடுகின்றது. சொத்துப்பட்டியல் முகாமைத்துவம், குறைநிரப்பு கடன்களை அனுமதித்தல் மற்றும் வழங்குவதற்கான அடிப்படையினை நிர்ணயிக்கின்ற வாடிக்கையாளர் மீள் கொடுப்பனவு விதங்கள், இடர்நேர்வு அடிப்படையில் அமைந்த விலையிடல் மற்றும் குறிப்பான வாடிக்கையாளர் வகுப்பில் இருந்து தோன்றக்கூடிய இடர்நேர்வுகளை செயழிலக்கச் செய்கின்ற பரந்துபட்ட கிளை வலயமைப்பு என்பவற்றை ஏனைய வழிமுறைகள் உள்ளடக்குகின்றன.

ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்பானது, ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்தையும், கொடுகடன் நிருவாகத்தையும் எமது இடர்நேர்வு அலுவலர் முகாமை செய்வதனை உள்ளடக்குகின்றது. கொடுகடன் இடர்நேர்வானது, இடர்நேர்வுக்கு உள்ளாகும் முதன்மைத் துறையாக இருந்து வருவதனால், கொடுகடன் நிருவகதித்தலும், இடர்நேர்வு முகாமைத்துவமும் கொடுகடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு இணைந்து பணியாற்றுகின்றன.



## அனுமதி மட்டங்களும் மத்தியமயப்படுத்தப்பட்ட பகிர்ந்தளிப்புகளும்

கொடுகடன் அனுமதிக்கப்படும் போது, கொடுகடன் அனுமதிச் செயன்முறையுடன் சேர்த்து பல மட்டங்களில் உள்ள ஆளணிக்கு வரையறைகள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன. கொடுகடன் குழுவிற்கு விதிக்கப்பட்டுள்ள அனுமதி வரையறைக்கு அதிகமான நிதியங்களை சபை அனுமதிப்பதுடன், கொடுகடன் அடிப்படை அளவு குறிப்பாக ரூ. 5 மில்லியன் ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் அது பல்வேறு மட்டங்களில் மீளாய்வு செய்யப்படுகின்றன.




கொடுகடன் பகிர்ந்தளிப்புகள் கொடுகடன் நிருவாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு, அனுமதிக்கப்பட்ட நோக்கத்திற்காக கடன் பெறுனரால் நிதியங்கள் நேரடியாகப் பெற்றுக்கொள்ளப்படுவதை உறுதிசெய்வதற்கு அனைத்து பகிர்ந்தளிப்புகளும் மத்திய மயப்படுத்தப்படுகின்றது.

## ஒப்புதல்களும் அடிப்படை அளவுகளும்

கடன் அனுமதியும், முகாமைத்துவ செயன்முறையும் ஒப்புதல்களின் மூன்று மட்டங்களைக் கொண்டுள்ளன (அதிகாரமளித்தல் மட்டங்கள்)




## பிணை உறுதிகளை முகாமை செய்தல்

பிணை உறுதி பெறுமதியும், அதன் முகாமைத்துவமும், கொடுகடன் இடர்நேர்வுகளை முறையடிப்பதிலும், பாரிய மட்டத்திற்கு முகாமை செய்வதிலும் முக்கிய பங்காற்றுகின்றன. இது, சொத்து தரத்தினை உறுதி செய்கின்ற அதேவேளை, செயலாற்றமற்ற கடன்களை அறவிடுகின்ற போது ஏதேனும் இடர்நேர்வுகளை அல்லது ஊறுகளை பிணைய உறுதி அடிப்படையிலான சொத்துக்கள் தோற்றுவிப்பதில்லை என உறுதி செய்கின்றன.

விலைமதிப்பீட்டுப் பரிசோதனை நிலையங்கள் :

- உள்ளக விலை மதிப்பீடு - அடுக்கு 1 பங்குரிமை மூலதனத்தின் 0.1% கீழ் கடன்களுக்கான பிணை உறுதிகள் உள்ளக விலை மதிப்பீட்டு அலுவலர்களால் விலைமதிப்பீடு செய்யப்படுகின்றன.
- வெளிவாரி விலை மதிப்பீடு - அடுக்கு 1 பங்குரிமை மூலதனத்தின் 0.1% மேற்பட்ட கடன்களுக்கான பிணை உறுதிகள் வெளிவாரி விலைமதிப்பீட்டு அலுவலர்களால் விலை மதிப்பீடு செய்யப்படுகின்றன.

## உள்ளகக் கடன் தரப்படுத்தல் மாதிரி

கடன் பெறுனர்களுக்கான கடன் தரப்படுத்தல்கள், வங்கியினால் நடாத்தப்படுகின்ற கணிசமான உரிய வழிப்புக் கவனத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், பொதுவான நியதிகள் அல்லது நிதியியல் கடப்பாடு தொடர்பில் கடன் பெறுனரின் கடன் நம்பகத்தன்மை எண்கணிய மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டது. கடன் தரப்படுத்தலானது, மீள் கொடுப்பனவைத் தீர்மானிக்கின்ற கடன் மற்றும் வட்டி வீதத்திற்கு கடன் பெறுனர் அனுமதிக்கப்பட்டுள்ளாரா என்பதனை நிர்ணயிக்கின்றது.

தனிப்பட்ட இடர்நேர்வு தொகுப்பின் அடிப்படையில், கடன் வழங்குவதற்கு முன்னர் சில்லறை (தனிப்பட்ட) நிறுவன வாடிக்கையாளர்களுக்கு கடன் தரப்படுத்தலை நாம் குறித்தொதுக்குகின்றோம். தரப்படுத்தல் மதீப்பீட்டினை நிறைவு செய்தவுடன் வாடிக்கையாளருக்கு தொடர்புடைய கடன் குறியீடுகள் வழங்கப்படும்.

## இரு-வழி இடர்நேர்வு தரப்படுத்தல் மாதிரி தானியக்கம் செய்யப்பட்ட கடன் அனுமதி செயன்முறை

தரப்படுத்தல் மாதிரியானது, கடன் பெறுனரின் மீள் கொடுப்பனவு இயலுமையில் இருந்து தோன்றக்கூடிய இழப்புகளை எதிர்வு கூறுவதற்கான புள்ளி விபரவியல் எண்ணப்பாங்குகளை அடிப்படையாகக் கொண்டது. தவணை தவறும் சாத்தியம், தவணைதவறுகின்ற போது அறவிடப்பட்ட வேண்டிய பிணையுறுதிப் பெறுமதி மற்றும் தவணை தவறுவதில் இழக்கும் தொகை என்பவற்றையும் இது கருத்தில் கொள்கின்றது. மாதிரி மூலம் பெற்றுக்கொள்ளப்படாத தவணை தவறும் சாத்தியம் மற்றும் தவணை தவறுவதில் இழக்கும் தொகை என்பவற்றுக்கான கரிசனைகளை ஒன்றிணைக்கின்ற புள்ளி அட்டையாகவும் இது காணப்படுகின்றது.

## முறையான கொடுகடன் நிருவாகம் ஊடாக கொடுகடன் இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்தல்

- இடர்நேர்வுப் பிரிவையும், கொடுகடன் நிருவாகத்தையும் ஒன்றுசேர்க்கின்ற ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு
- கொடுகடன் இடர்நேர்வு தரப்படுத்தல் மாதிரிகள்
- அனுமதி மட்டங்கள் மற்றும் மத்தியமயப்படுத்தப்பட்ட பகிர்ந்தளிப்புகள்.
- பிணை உறுதி முகாமைத்துவம்
- தகைமைபெற்ற மற்றும் அனுபவம்பெற்ற கடன் மீளாய்வு அலுவலர்களுடன் கூடிய கடன் மீளாய்வுத் தொழிற்பாடு
- தானியக்கம் செய்யப்பட்ட கடன் அனுமதிச் செயன்முறை
- ஒப்புதல்கள் மற்றும் அடிப்படை அளவுகள்.
- நிதிச்சொத்துப் பட்டியல் முகாமைத்துவம்

## கடன் மீளாய்வுகள்

எச்டீஎப்சி வங்கியானது, ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் உள்ளகக் கொள்கைகள் என்பவற்றுக்கு இசைவாக, கொடுகடன் அனுமதி நடைமுறைகள் காணப்படுவதை உறுதி செய்வதற்கு கடன் மீளாய்வுகளை நடாத்துகின்றது. வங்கி, கடன் நிதிச் சொத்துச் பட்டியல் தரத்தின் சீர்குலைவுகளை மதிப்பிடுவதுடன், கொடுகடன் ஒப்புதல் செயல்திறன் வாய்ந்த தன்மை மீது பின்னூட்டலைச் சேகரிக்கின்றது. முக்கிய கடன் தொகைகளுக்காக ஒப்புதலின் மூன்று மாதத்தினுள் அல்லது கொடுகடன் தரம் சீர்குலைவினை தகவல்கள் எடுத்துக்காட்டுகின்ற போது மீளாய்வுகள் நடாத்தப்படுகின்றன.

## தகைமைபெற்ற மற்றும் சுயாதீன கடன் மீளாய்வு அலுவலர்கள்

வங்கியின் கடன் மீளாய்வு அலுவலர்கள், கொடுகடன் வசதிகளை மதிப்பிடுவதிலும், வங்கியின் கடன் கொள்கைகளுக்கு அமைவான கடன் வழங்கல் நடத்தைகளிலும் ஆற்றல்வாய்ந்த தொழில்நுட்ப அறிவினைக் கொண்டுள்ளனர். கடன் வழங்கல் செயற்பாடுகளுடன் இணைந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி அவர்கள் முறையான அறிவினைப் பெற்றுள்ளதுடன், தொடர்ச்சியான கொடுகடன் பகுப்பாய்விற்கும் ஏதேனும் சிவப்புப் பட்டியல்களை செயல்திறன் வாய்ந்த விதத்தில் இனங்காண்பதற்கும் பொறுப்பினை ஏற்கின்றனர்.

மேலும், கடன் அலுவலர்களின் சுயாதீனம் பற்றி வங்கி உறுதியளித்துள்ளதுடன், எவையேனும் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும், கடன் மீளாய்வில் ஈடுபடுகின்ற அலுவலர்கள் கடன் அனுமதிச் செயன்முறையில் பங்கேற்பதில்லை என்றும் முக்கிய கடன்களின் மீளாய்வுச் செயன்முறையுடன் இணைந்துள்ள எவர் மூலமும் தகாத செல்வாக்கிற்கு உட்படுவதில்லை என்றும் முகாமைத்துவம் வழமையாக உறுதிசெய்கின்றது.

பின்வரும் பல முக்கிய கொடுகடன் காரணிகளை கடன் மீளாய்வுகள் உள்ளடக்குகின்றன:

- கொடுகடன் தரம்
- கொடுகடன் மற்றும் பிணை உறுதி ஆவணங்களின் போதுமான தன்மை
- முறையான உரிமை பிணைப்பு ஆவணங்கள்
- அனுமதிச் செயன்முறை
- கடன் உடன்படிக்கைகளைக் கடைப்பிடித்தல்
- உள்ளகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அத்துடன் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடனான இணங்குவித்தல்.
- கடன் அலுவலர்களால் குறித்தொகுக்கப்பட்ட கடன்களின் செம்மையும் உரிய கால விதமும்.
- நிதிச் சொத்துப்பட்டியல் தரமும் நிதிச்சொத்துப் பட்டியல் தரத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளும்.

பூரணப்படுத்துவதன் மீது குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு கண்டறியப்பட்டவைகளை மீளாய்வு அலுவலர்கள் கிளை முகாமையாளர்களுடன் கலந்துரையாடி வழிமுறைகளை ஆலோசிக்கின்றனர். பரிகார வழிமுறைகள், விரைவாகவும், செயல்திறன்வாய்ந்த விதத்திலும் பிரயோகிக்கப்படவில்லையாயின் பின்னர் அது அபிவிருத்திகள் பற்றி உயர் முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தப்படும்.

## வருடாந்த கொடுகடன் மீளாய்வுகள்

நாம் ஆண்டு தோறும் அத்துடன், தனிப்பட்ட கடன் அளவுகளின் இடர்நேர்வுடன் அணி சேர்ந்துள்ளன என்ற விதத்திலும் கடன்களை மீளாய்வு செய்து வருகின்றோம். பொருத்தமான அதிகார மட்டங்கள் ஊடாக விதிவிலக்குகளை நாம் அனுமதிக்கின்றோம்.

வருடாந்த மீளாய்வு உள்ளடக்குவன:

- நிறுவன நிதிக் கூற்றுகளின் முழுமையான மீளாய்வு
- உடன்படிக்கை இணங்குவித்தலுக்கான முழுமையான மதிப்பீடு
- தளத்திலான மீளாய்வுகள்

## அறவீட்டு வழிமுறைகள்

தவணை தவறிய கொடுப்பனவுகளுடன் கூடிய வாடிக்கையாளர்களிடம் இருந்து கடன் மீள் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு வங்கி பல முறைகளைப் பயன்படுத்துகின்றது. முதலாவது படிமுறையாக, கடன் பெறுனர்களுக்கு வங்கி ஞாபகமூட்டல் கடிதங்களை அனுப்புவதுடன், கடனை மீள அட்டவணைப்படுத்துவதற்கான கோரிக்கைகளுக்கு இடமளிக்கின்றது. கடுமையான மீள்கொடுப்பனவு இன்னல்களுடன் கூடிய வாடிக்கையாளர்களுக்காக இது மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், படுகடன் கொடுப்பனவுகளை அறவிடுவதன் மீது வன்புறுத்தலின்றி கொடுப்பனவுகளை ஊக்குவிப்பதற்கு தொடர்புடைய ஆளணி தனிப்பட்ட ரீதியான அழைப்புகளை மேற்கொள்கின்றது.

## கடப்பாட்டாளர் இடர்நேர்வுக் கட்டுப்பாடு

மேலும், கடப்பாளர்களுடன் இணைந்த இடர்நேர்வுமிக்க கடன் அளவுகளைக் கட்டுப்படுத்துவதில் டீடீ உயர்வான கடன் தரப்படுத்தலுடன் கூடிய நிதி நிறுவனங்கள் குறைவாக தவணை தவறுதல் நிகழுவதனை உறுதி செய்கின்றவையாக கருத்தில் கொள்ளப்படுகின்றன.

| கொடுகடன் மற்றும் கடன் நிதிச்சொத்துப் பட்டியல் இடர்நேர்வு | அடிப்படை அளவு 2022 | 2022 | அடிப்படை அளவு 2021 | 2021 |
|---|---|---|---|---|
| செயற்பாடற்ற கடன் விகிதம் (ஊ.சே.நி நீங்கலாக) | 12% | 20.9% | 12% | 18.8% |
| கடன் இழப்பு/ செயற்பாடற்ற கடன் மூலதனம் (தவிர) | 50% | 69.3% | 50% | 64.7% |
| உத்தரவாதக் கடன்களின் திரட்சி (சேத இழப்பு உள்ளடக்கம்) | 50% | 19.4% | 50% | 20.6% |
| சேதநட்டப் பாதுகாப்பு | 30% | 34.3% | 30% | 33.5% |

## சந்தை இடர்நேர்வு

வங்கியானது, வட்டி வீதங்கள், பங்கு விலைகள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள் மற்றும் கொடுகடன் பரம்பல் என்பவற்றில் மாற்றத்தில் இருந்து உருவாகின்ற இடர்நேர்வுக்குள்ளாகின்ற சந்தை இடர்நேர்வைக் கருத்திற்கொள்கின்றது. ஏற்றுக்கொள்ளத்தக்க அளவுருகளுக்கு அமைவாக, அதன் வருமானம் மற்றும் நிதியியல் சாதனங்களின் பெறுமதி என்பவற்றுக்கான அத்தகைய மாற்றங்களின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு வங்கி முன்னெச்சரிக்கைகளையும் இடர்நேர்வு தணிப்பு வழிமுறைகளையும் எடுக்கின்றது. சந்தை இடர்நேர்வுகளை மேற்பார்வை செய்து, கட்டுப்பாடுகளைப் பிரயோகிப்பதன் மூலம், வங்கி கடன் தீர்க்கும் ஆற்றலையும் உறுதிசெய்கின்றது.

# இடர்நேர்வு முகாமைத்துவம்

சந்தை இடர்நேர்வுக்குள்ளாகின்ற வங்கியின் சொத்துகளானவை, காசு மற்றும் காசுக்குச் சமமனவை, வங்கியில் உள்ள இருப்புகள், கடன் கழிக்கப்பட்ட செலவில் கடன்கள் மற்றும் முற்பணங்கள், கடன் கழிக்கப்பட்ட செலவில் கடன்கள் மற்றும் முற்பணங்கள், கடன் கழிக்கப்பட்ட செலவில் படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள் மற்றும் வேறு சொத்துக்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

| குறிகாட்டிகள் | அடிப்படை அளவு | 2022 | 2021 |
|---|---|---|---|
| வட்டி உணர்வுத்தன்மை விகிதம் (ISR) | 40% | 81.1% | - |
| கடன் விகிதத்திற்கான நிலையான வைப்புகள் | 100% | 102.90% | 101.51% |
| வட்டி வருமானத்திற்கான வட்டிச் செலவு (%) | 70% | 67.60% | 53.97% |
| மொத்த சொத்துக்களுக்கான கடன்பெறுதல் | 10% | 6.20% | 7.64% |

## வட்டி வீத இடர்நேர்வு

வங்கியானது அதன் ஒட்டுமொத்த சந்தை இடர்நேர்வின் பாகமாக வட்டி வீத இடர்நேர்வைக் கருத்தில் கொள்கின்றது. வட்டி வீதங்களில் எதிர்பாராத சாதகமான மாற்றங்கள் ஊடாக தேறிய வட்டி வருமானம் மீது வட்டி வீத இடர்நேர்வு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. பல்வேறு சூழ்நிலைகளுக்கு எதிராக வட்டி வீதங்களில் மாற்றங்களுக்கான அதன் நிதியியல் சொத்துகளில் அதன் உணர்வுத் தன்மையினை வங்கி மதிப்பிடுகின்றது.

2022 இல் கொள்கை வட்டி வீதங்களில் கணிசமான உயர்வு காரணமாக வாடிக்கையாளர் கடன் பெறுதல்கள் மீதான வட்டி வீதம் அதிகரித்தது. கடன் மீள்கொடுப்பனவுகளுக்கான வாடிக்கையாளர்களின் இயலுமைகளுக்கு இவ் அதிகரிப்பு அச்சுறுத்தலைத் தோற்றுவித்தது. மேலும், வைப்பு வீதங்கள் அதிகரிப்பானது, வங்கியுடனான இருப்புக்கள் மீதான வங்கி வட்டி வருமானத்தை அதிகரிப்பதில் சாதகமாக பங்காற்றியது. மேலும், உயர்வான வீதங்கள் ஆண்டு காலப்பகுதியில் வங்கியின் வட்டிச் செலவுகள் அதிகரிப்பதற்கு நிர்ப்பந்தித்து, இது, சவால்மிக்க நிலைமையினை ஏற்படுத்தியுள்ளன.

## திரவத்தன்மை இடர்நேர்வு

திரவத்தன்மை இடர்நேர்வானது, அதன் குறுகிய கால அல்லது உடனடி நிதியியல் கடப்பாடுகளை எதிர்பாராத இழப்புகள் ஏற்படாது நிறைவேற்றுவதற்கான வங்கியின் இயலான்மையினை உள்ளடக்குகின்றது. நிதியியல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு வங்கி போதியளவு நிதியங்களை அல்லது முன்மதிமிக்க நிதியியல் மூலங்களின் இணைப்பினைக் கொண்டிராத போது, திரவத்தன்மை இடர்நேர்வு நிகழ்கின்றது. அத்தகைய முக்கிய குறிகாட்டிகளை அளவிடுவதன் வாயிலாக, ஆரோக்கியமான திரவத்தன்மை மட்டங்களுக்குள் அது தொழிற்படுகின்றது என்றும், தொடர்புடைய அடிப்படை அளவுகளுடனான இணங்குவித்தலைப் பேணுகின்றது என்றும் வங்கி உறுதிசெய்கின்றது.

## திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம்

இடர்நேர்வுப் பிரிவு ஊடாக தொடர்புடைய திரவத்தன்மை தொடர்புப்பட்ட கொள்கைகளை வங்கி மீளாய்வு செய்து, இற்றைப்படுத்துகின்றது. அபிவிருத்திகளை இற்றைவரையானதாக உறுதிசெய்வதற்கு, திரவத்தன்மை இடர்நேர்வு அறிக்கையை பிரிவு பகுப்பாய்வு செய்கின்றது. சொத்து மற்றும் பொறுப்புக்கள் குழுவும், மூதலீட்டு குழுவும் அறிந்த தீர்மானங்களை எடுப்பதற்காக அறிக்கை தகவல்களை மீளாய்வு செய்கின்றன. மேலும், திரவத்தன்மை இடர்நேர்வு விகிதங்களுக்கான பாசல் ஐஐஐ தேவைப்படுத்தல்களுக்கு இசைவாக, வங்கி திரவத்தன்மை தொடர்புபட்ட இடர்நேர்வுகளை கண்காணிக்கின்றது. நிதியிடலைப் பெற்றுக்கொள்வதற்கான பிணை உறுதியாக, சொத்துக்கள் கிடைக்கப்பெறாதவை என்ற ரீதியிலானவைக்கு மேலதிகமாக, அதன் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் வங்கி மதிப்பிடுவதுடன், அதன் திரவத்தன்மை விகிதங்களைக் கண்காணித்து, முதிர்ச்சி பொருத்தமின்மைகளைக் கணிப்பிடுகின்றது. மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில், முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வினை வங்கி நடாத்தியது.

வாடிக்கையாளர் வைப்புகள், சந்தை வைப்புகள் மற்றும் அவசரகால வைப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற பன்முகப்படுத்தப்பட்ட நிதியியல் தளமொன்றினை வங்கி பேணுகின்றது. எச்டிஎப்சி வங்கியானது, நாணயம் மற்றும் முதிர்ச்சி என்பவற்றில் உயர் திரவத்தன்மை சொத்து அடிப்படையிலமைந்த பல்வகை நிதிச் சொத்துப்பட்டியலையும் கொண்டுள்ளது. அதன் திரவத்தன்மை நிலை பற்றி அழுத்தப் பரிசோதனையையும் வங்கி மேற்கொள்கின்றது.

## திரவத்தன்மை விகிதங்கள்

கடந்த பல ஆண்டுகளாக வங்கியின் திரவத்தன்மை விகிதங்களின் பல்வேறு வேறுபாடுகள் காணப்பட்டன. முக்கிய வேறுபாடுகள் திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தில் காணப்படுகின்றது. ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக திரவத்தன்மை விகிதங்களைக் கண்காணித்தலானது, அதன் திரவத்தன்மை இடைவெளிகளை கிரமமாக மதிப்பிடுவற்கு வங்கி இயலச் செய்கின்றது.

திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தினை ஒழுங்குமுறைப்படுத்துனர் நிர்ணயிப்பதுடன், 30 நாட்களுக்கு மேல் குறுகிய கால திரவத்தன்மை தாக்குப்பிடிக்கும் தன்மையினை ஊக்குவிக்கின்றது: திரவத்தன்மையினை அதிகரிப்பதற்கு வங்கி பயன்படுத்தக் கூடிய உயர்தர திரவச் சொத்துக்களின் தன்மையினை இது எடுத்துக்காட்டுகின்றது. அழுத்தமிகு சூழ்நிலையின் அடிப்படையில் உண்மையான மற்றும் அவசரகால இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை இரண்டிலிருந்து மொத்த தேறிய காசுப் பாய்ச்சலுக்கு எதிராக இது அளவிடப்படுகின்றது.

வங்கியின் திரவத்தன்மை உள்ளடக்க விகிதம், குறைந்தபட்ச தொகையினை விஞ்சி, குறுகிய கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் அது போதுமான திரவத்தன்மை மூலங்களைக் கொண்டிருப்பதை உறுதி செய்கின்றது.

| குறிகாட்டிகள் | அடிப்படை அளவு | 2022 | 2021 |
|---|---|---|---|
| நிலையான வைப்பு திரட்சி விகிதம் | 40% | 7.30% | 17.1% |
| மொத்த சொத்துகளுக்கான முதலீடுகள் | 35% | 27.50% | 29.71% |
| நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்து விகிதம் | 20% | 31.1% | 31.0% |
| திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் | 100% | 334.4% | 156% |
| தேறிய நிலையான நிதியிடல் விகிதம் | 90% | 199% | 122% |
| வைப்புகளுக்கான கடன்கள் விகிதம் | 80% | 88.92% | 87.37 |

## திரவத்தன்மை ஒதுக்குகள்

வங்கியின் திரவத்தன்மைச் சொத்துக்கள் (காசு மற்றும் காசுக்கு சமமானவை, குறுகியகால வைப்புகள் மற்றும் திரவத்தன்மைப் படுகடன் பிணையங்கள்) உறுதியாகக் காணப்படுவதுடன், ஏதேனும் உடனடி நிதியளித்தல் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதற்குப் பெற்றுக் கொள்ளப்படக் கூடியதாகும்.

## எஞ்சியிருக்கின்ற ஒப்பந்த முதிர்ச்சிகள் அடிப்படையில் நிதியியல் பொறுப்புகள்

வங்கியின் பெறுதி அல்லாத நிதியப் பொறுப்புகள், முதிர்ச்சி நியதிகளில் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 3 மாதங்களுக்கு குறைவு | 3-12 மாதங்கள் | 1-3 ஆண்டுகள் | 3-5 ஆண்டுகள் | 5 ஆண்டுகளுக்கு மேல் |
|---|---|---|---|---|---|
| நிதியல்லாத மொத்தப் பொறுப்புக்கள் (ரூ. மில்.) | 17,605 | 20,836 | 8,369 | 5,830 | 3,967 |

## அவசரகால பொறுப்புகள்

கோரிக்கைப் பொறுப்புகள் மீதான வங்கியின் அவசரகாலப் பொறுப்புகள் ரூபா 4.60 மில்லியனாக இருந்த அதேவேளை, அவசரகால பொறுப்புகளின் ரூபா 650 மில். கொண்ட மொத்தத் தொகையுடைய 3-12 மாதங்கள் பொறுப்புகளுக்காக ரூபா 645.42 மில். அறிக்கையிடப்பட்டது.

## தொழிற்பாட்டு இடர்நேர்வுகள்

தொழிற்பாட்டு இடர்நேர்வுகள், மனித மூலதனம் அடிப்படையில் அமைந்த இடர் நேர்வுக்குள்ளாகும் தன்மை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு தொடர்புபட்ட இடர்நேர்வுகள், அத்துடன், சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்காமைகள் போன்ற வெளிவாரி இடர்நேர்வுகள் என்பவற்றுடன் தொடர்புடைய உள்ளக மற்றும் வெளிவாரி பாதகமான சூழ்நிலைகளுக்கான இடர்நேர்வுக்குள்ளாதல் மீது கவனம் செலுத்துகின்றது.

வங்கியானது, அதன் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பல இடர்நேர்வுகள் மீது கவனம் செலுத்துகின்றது.

- மக்கள் இடர் நேர்வு
- தகவல் தொழில்நுட்ப முறைமை இடர்நேர்வு
- சட்டம் மற்றும் இணங்குவித்தல் இடர்நேர்வுகள்

வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வுக் குழு தொழிற்பாட்டு இடர் நேர்வுகளுக்குப் பொறுப்பைக் கொண்டிருப்பதுடன், அத்தகைய இடர்நேர்வுகளைத் தீர்ப்பதற்குக் கட்டுப்பாடுகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துகின்றது.

## மக்கள் இடர்நேர்வு

மனித நடவடிக்கைகளுடன் இணைந்த இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையாக வங்கி மக்கள் இடர்நேர்வைக் கருதுகின்றது. அத்தகைய இடர்நேர்வுகளில் இருந்து காப்பதற்கு வங்கி பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றுகின்றது.

## மக்கள் இடர்நேர்வுகளை முகாமை செய்தல்

வலுவான ஊழியர் அணியினை உறுதி செய்வதற்கும், தகைமையுடைய அணியினைக் கவருவதற்கும், தக்க வைப்பதற்குமான இடைவெளிகளை மதிப்பீடு செய்வதற்கும், வங்கியின் மனிதவள மற்றும் ஊதியக்குழு அவசியமான பரிந்துரைகளை வழங்குகின்றது. அறிவு இடைவெளிகளை நிரப்புவதற்கும், ஊதியங்களை வழங்குவதற்கும் சிறந்த செயலாற்றுகையினை ஊக்குவிப்பதற்கான நன்மைகளுக்கும் வங்கி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்தும் மீள வலுவூட்டுகின்றது. உயர் இயலளவு மிக்க தொழில்சார் அணியினை உருவாக்குவதற்கு பணிப்பாளர் சபை வழிகாட்டலையும், ஆதரவு நடவடிக்கைகளையும் வழங்குகின்றது.

- தகைமைபெற்ற மற்றும் அர்ப்பணிப்பு மிக்க தொழிற்படையினை உறுதி செய்வதற்கு முனைப்பான வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- வங்கித் தொழில் மற்றும் ஏனைய தொழிற்பாட்டுத் துறைகளில் தகைமையும், அனுபவமும் பெற்ற தொழில்சார் நிபுணர்கள்
- எதிர்கால முகாமைத்துவ பகிபாகங்கள் ஊடாக கம்பனிக்கு தகைமை பெற்ற தொழில்சார் நிபுணர்கள் தலைமை வகிப்பதற்கு பதவி உரிமைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவப் பயிலுனர் நிகழ்ச்சித் திட்டம்.
- வங்கித்தொழில், இணங்குவித்தல், இடர்நேர்வு மற்றும் ஏனைய துறைகளில் காணப்படும் இடைவெளிகளைத் தீர்க்கின்ற பயிற்சி மற்றும் அபிவிருத்தி
- இடர்நேர்வுக்குள்ளாதலைத் தவிர்ப்பதிலும், குறைப்பதிலும், ஒழுங்குவிதிகள் மற்றும் உள்ளகக் கொள்கைகளுடன் ஊழியர் இணங்குவித்தலை உறுதி செய்வதற்கு சிறந்த நடத்தைக்கோவை மற்றும் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.
- ஊழியர்களின் நல்வாழ்வினை உறுதி செய்கின்ற (உரிய கால ஊதியங்கள் மற்றும் நிதியியல் வளர்ச்சிகான நன்மைகள்) சாதகமான பணிச்சூழலை வழங்குதல்
- ஊழியர்களின் அர்ப்பணிப்பினையும், தொழில்சார் வளர்ச்சியையும் உறுதி செய்வதற்கு கடின உழைப்புக்கு வெகுமதியளித்து அங்கீகரிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்
- பணி - வாழ்க்கை சமநிலைக்கு இடமளிப்பதற்கு நெகிழ்வுமிக்க பணியாற்றும் நேரங்கள்
- ஊழியர் புரள்வு 4.98% இல் குறைவாகக் காணப்படுகின்றது.

வங்கியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உரிமைக் கொள்கைகள் வங்கியின் உபாயப் பாதையினையும், தீர்மானம் மேற்கொள்ளலையும் பேணுவதற்கு உதவுகின்றன. செயற்திறன்வாய்ந்த செயலாற்றத்திற்காக பொருத்தமானவர்களை இனங்காண்பதை ஆட்சேர்ப்புக் கொள்கை உறுதி செய்கின்றது. வங்கியினுள் முக்கிய பதவிகளை அடையாளப்படுத்துவதையும், தலைமைத்துவ மாறுதல் அடைதலுக்காகத் தயாராகுவதில் ஆற்றல் விருத்திக்கான தொனியினை நிர்ணயிப்பதையும், பதவி உரிமைக் கொள்கை வசதிப்படுத்துகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக, வங்கி அதன் தொழிற்சங்கங்களுடன் சுமுகமான உறவுகளைப் பேணுகின்றது.

வங்கியானது, உள்ளக மற்றும் வெளிவாரி ஆட்சேர்ப்பு நடைமுறைகள் ஊடாக வேண்டப்படுகின்றவாறு, வெற்றிடங்களை நிரப்புவதற்கு (முகாமைத்துவம் அல்லாத மற்றும் முகாமைத்துவ) பதவியணியிலுள்ள இடைவெளிகளை மீளாய்வு செய்து, அவசியமான நடவடிக்கைகளை எடுக்கின்றது.

## புரள்வு அச்சுறுத்தல்

முக்கிய தொழிற்பாடுகளில் உள்ள ஊழியர்கள் திடீரென வெளியேறுவதன் காரணமாக, புரள்வு மக்கள் இடர்நேர்வுகளுக்கு சில அளவு உட்படும் தன்மையினைக் கொண்டுள்ளது. 2020 இல் அறிக்கையிடப்பட்ட 2.57மூ உடன் ஒப்பிடுகையில், ஆண்டின் போது 4.98மூ ஆக புரள்வு அதிகரித்துள்ளது.

| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| புரள்வு | 3.75% | 4.22% | 2.49% | 2.57% | 4.98% |

இச்சதவீதத்திற்கு மத்தியில் ஊழியர் தக்க வைத்தலை வங்கி ஆரோக்கியமான மட்டத்தில் பேணியுள்ளது. எவ்வாறிருப்பினும், ஊழியர் கரிசனைகளைப் பரிசீலனையில் கொள்வதன் மூலம் சாத்தியமான புரள்வு மட்டங்களைக் குறைப்பதற்கு பல வழிமுறைகளை வங்கி பின்பற்றுகின்றது. அவர்களின் தேவையினை அடிப்படையாகக் கொண்டு பணியாற்றும்

# இடர்நேர்வு முகாமைத்துவம்

மணித்தியாலங்களை ஊக்குவிப்பதற்கு வங்கி நெகிழ்வுமிக்க பணியாற்றும் நேரங்களை வழங்குகின்றது. மேலும், ஊழியர்களுக்கு சமமான பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படுவதுடன், ஊழியர்களுக்கு கடன்கள், உறுப்புரிமை மீளளிப்புகள் மற்றும் பாராட்டுக் கொடுப்பனவுகள் ஊடாக கல்விசார் ஆதரவினையும் பெற்றுக்கொள்கின்றனர். பதவி உயர்வுகள் ஊடாக, ஊழியர்கள் தொழில் முன்னேற்ற வாய்புகளையும் பெறுகின்றனர்.

மனித மூலதனத்தில் இருந்து தோன்றுகின்ற எவையேனும் இடர் நேர்வுகளைக் குறைப்பதில் வங்கியானது. தகவல் தெரிவிப்பவர் தகவல்களைப் பெற்றுக்கொள்கின்ற அலுவலராக நியமிக்கப்பட்ட பிரதம உள்ளகக் கணக்காய்வாளருடன் முறையான தகவல் தெரிவித்தல் கொள்கையினையும் பேணுகின்றது.

| குறிகாட்டிகள் | அடிப்படை அளவு | 2022 | 2021 |
|---|---|---|---|
| தேறிய வட்டி வருமானம் மீது பதிவழிப்பு % | 10% | 1.90% | 2.7% |
| கொடுகடன் சேவைநாடி புரள்வு | 15% | 13.5% | 18.1% |
| ஐந்தொகையில் வளாச்சி % | 10% | 1.7% | 3.5% |
| ஆளொருவருக்கான இலாபம் (ரூபா) மில். | 1% | 0.36 | 1.13 |

## தகவல் தொழில்நுட்ப இடர் நேர்வுகள்

தகவல் தொழில்நுட்ப இடர் நேர்வுகள், பல்வேறு நோக்குகளில் இருந்தும் தூண்டப்படுகின்றன. பயன்பாட்டில் அதிகரித்த நிதியத் தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் தீர்வுகள் மூலம் இணைய அச்சுறுத்தலுக்கு உள்ளாதல் அதிகரித்துள்ளது. தரவுகள் இழத்தல், பல்வேறு நோக்கங்களுக்காகவும், தரவுகளைத் திருடுதல் மற்றும் இரகசியமான தகவல்களுக்கு அதிகாரமளிக்கப்படாத பெறுவழி போன்றவற்றை அத்தகைய இடர் நேர்வுகள் உள்ளடக்குகின்றன. பௌதீக தரவு சேமிப்பகங்கள் உள்ளடங்கலாக வன்பொருளில் ஏற்படும் இடையூறுகள் காரணமாக, அத்தகைய இடர் நேர்வுகள் நிகழக்கூடும். இதன் மூலம் ஏற்படுவது யாதெனில், வங்கியின் நம்பகத்தன்மையும், அதன் நற்பெயரும் இழக்கப்படுவதாகும். மறுபுறத்தில், வங்கி அதன் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் போட்டிமிக்க இயக்கவாற்றலை நிறைவு செய்தல் என்பவற்றில் இருந்து வங்கியை முடக்குகின்ற பிந்திய மற்றும் முக்கிய தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் காரணமாக இடர் நேர்வுகள் ஏற்படுகின்றன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைப் பின்பற்றுவதில் தாமதம், அதிகரித்த இணைய வழி கொடுக்கல் வாங்கல்களுக்கான கேள்வியிலும், தேவையிலும் சடுதியான மாறுதல்களுக்கு இடமளிப்பதற்கு முடியாமை மற்றொரு பாகமாகும். போட்டியாளர்களிடமிருந்து வருகின்ற புதிய தொழில்நுட்பத் தீர்வுகளுடன், வாடிக்கையாளரைத் தக்க வைப்பதை உறுதி செய்வதற்கு டிஜிட்டல் தொழில்நுட்பங்களைத் துரிதமாகப் பின்பற்றும் சவாலினை வங்கி எதிர்கொள்கின்றது.

தகவல் தொழில்நுட்ப இடர் நேர்வுகளை முகாமை செய்வதற்கு வங்கி பின்வருவனவற்றை மேற்கொள்கின்றது:

- இலங்கை மத்திய வங்கி தள நிலைப் பாதுகாப்பு நியமங்களுக்கு இசைவாக தொழில் நுட்ப உட்கட்டமைப்பு பற்றிய கணக்காய்வு
- தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி பரிந்துரைகளை ஒருங்கிணைத்தல்
- மாதாந்த உள்ளக தகவல் தொழில்நுட்ப மீளாய்வுகள்
- தொலைவில் இருந்து பாதுகாப்பு தொடர்புகை
- கிரமமான இணைப் பாதுகாப்பு இற்றைப்படுத்தல்களும் பந்திய பாதுகாப்புப் பதிப்புகளும்
- இணையப் பாதுகாப்பு மீதான காலமுறையான தகவல் தொழில்நுட்பப் பயிற்சியும், வங்கியின் முறைமைகளைப் பயன்படுத்துதலும்

## இணையப் பாதுகாப்பு

பாதுகாப்பு இடர் நேர்வுகளைக் குறைப்பதில், மத்திய வங்கியின் தகவல் பாதுகாப்பு உபாயத்தை (தளநிலைப் பாதுகாப்பு நியமம்) வங்கி பின்பற்றுகின்றது. பாதுகாப்பு ஆளுகை, இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல், ஊழியர்களைப் பயிற்றுவித்தல், இணையப் பாதுகாப்பு இடர் நேர்வுகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல் என்பன மூலம் இடர்நேர்வு முகாமை செய்யப்படுகின்றமையினை கட்டமைப்பு உள்ளடக்குகின்றது. வழிகாட்டல்களைப் பின்பற்றுவதில் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் முன்னேற்றத்தை, தகவல் தொழில்நுட்ப வழிநடாத்தல் குழு மதிப்பீடு செய்கின்றது.

ஆண்டு காலப்பகுதியில் இடர் நேர்வு நிகழ்வுகள் எதுவும் இடம்பெறவில்லை. 2022 ஆம் ஆண்டுக்காக வங்கி, இடர்நேர்வு தொடர்புபட்ட அறிக்கைகளை இலங்கை நிதியியல் துறை கணனி பாதுகாப்பு நிகழ்வுப் பதிலிறுத்தல் அணிக்குச் (குஐஎளுஜசுவு) சமர்ப்பித்தது.

2022 இல் தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு தொடர்புடைய செயற்பாடுகள் :

- தளநிலைப் பாதுகாப்பு நியமன நடைமுறைப்படுத்தல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.
- முழுமையாக தொழிற்பாட்டு அனர்த்த மீட்பு முறைமையினை உருவாக்குதல் முன்னெடுக்கப்படுகின்றது.
- மூன்று (3) இணையவழி வகுப்புக்களும் 10 மின்னஞ்சல் அடிப்படையில் அமைந்த வகுப்புக்களும் நடத்தப்பட்டன.
- 2022 இல் ரூபா 8 மில்லியன் இணையப் பாதுகாப்புத் தீர்வுகளை நடைமுறைப்படுத்தல்

## சட்ட மற்றும் இணங்குவித்தல் இடர்நேர்வு

சட்ட ரீதியான இடர் நேர்வுகள், சட்டங்களுடனும், ஒழுங்கு விதிகளுடனும் இணங்காத நிகழ்வுகளில் இடர்நேர்வுக்குள்ளாவதை தொடர்புபடுத்துகின்றது. அத்தகைய மீறுகைகள், தண்டப்பணங்கள். நற்பெயர்சார் இடர் நேர்வுகளை ஏற்படுத்தக்கூடியதுடன், வங்கியின் வருவாய்க்குத் தடங்கல் ஏற்படுத்தலாம். இணங்காமைக்காக ஆண்டின் போது வங்கிக்கு ஏதேனும் கட்டணங்கள் அல்லது தண்டப்பணங்கள் விதிக்கப்படவில்லை.

## இடர்நேர்வு பற்றிய கண்ணோட்டம்

வங்கி அதன் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதன் மீது தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகிறது. எனினும், நாட்டின் பொருளாதார தளம்பல் முன்னோக்கிச் செல்வதில் கரிசனையாக அமையலாம்.

- அரசாங்க படுகடன் மற்றும் புதிய வரிக்கட்டமைப்பு காரணமாக நிதியியல் நிறுவனங்களின் திரவத்தன்மை, கடன்தீர் ஆற்றல் மற்றும் ஐந்தொகை மீதான தாக்கம்
- குறைவடைந்த வருமான மட்டங்கள் மற்றும் பணவீக்க அழுத்தம் ஊடாக அதிகரித்த கொடுகடன் இடர்நேர்வுக்கு உள்ளாதல்
- பேரண்டப் பொருளாதார இடையூறுகள் மற்றும் வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களின் மீள் கொடுப்பனவு இயலளவு என்பன காரணமாக உயர்வான செயலாற்றமற்ற கடன்கள்
- படுகடன் மறுசீரமைப்பு மற்றும் சாத்தியமான, தட்டையான விளைவு வளையி காரணமாக அரசாங்க பிணையங்களுடன் கூடிய கரிசனைகள்
- சந்தை வட்டி வீதங்கள் மற்றும் பண்ட விலைகளின் உயர்வான தளம்பல்
- எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் முறிவடைதல்
- வெளிநாட்டுச் செலாவணி பற்றாக்குறை காரணமாக, பாதகமான பேரண்டப் பொருளாதார அமைப்பு

# நிதியியில் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் அறிக்கை

## பொறுப்புடைமை

2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரையின் 3(8)(ii)(ஆ) பிரிவுக்கு அமைவாக, நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய இவ்வறிக்கையினை பணிப்பாளர் சபை சமர்ப்பிக்கின்றது.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியில் (வங்கி), போதுமான மற்றும் செயற்திறன் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை செயற்படுத்தப்படுவதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். அத்தகைய போதுமான மற்றும் செயற்திறன் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாடுகளைக் கருத்திற் கொள்கையில், முகாமை செய்யப்படும் அடிப்படையில் இடர்நேர்வுடன் கூடிய சமநிலைப்படுத்தப்பட்ட கைமாறினை வங்கித் தொழில் வர்த்தகம் வேண்டுகின்றது. ஆகையினால், வங்கியின் இடநேர்வு ஏற்பை விட்டுக்கொடுக்கின்ற வரையறைகள் மற்றும் குறிகாட்டிகளில் இருந்து ஏதேனும் மாறுபாடுகளை எடுத்துக்காட்டும் விதத்தில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் முதன்மையாக வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதை வங்கி அங்கீகரிக்கின்றது.

இந்நோக்கில், உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமையானது. நிதியியல் தகவல்கள் பற்றிய அல்லது பதிவுகள் பற்றிய முக்கிய பிறள்கூற்றுக்கு எதிராக அல்லது நிதியியல் இழப்புகள் அல்லது மோசடிக்கு எதிராக நியாயமான ஆனால், முழுமையற்ற உத்தரவாதத்தை மாத்திரமே வழங்கக்கூடியது.

வங்கி எதிர்கொள்கின்ற முக்கிய இடர்நேர்வுகளை இனங்காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமை செய்தலுக்காக தொடர்ச்சியான செயன்முறையை வங்கி நிறுவியுள்ளது. இச் செயன்முறையானது, தொழில் சூழலுக்கு அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டலுக்கான மாற்றங்களுடன் இசைந்து செல்வதற்கு நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமையினை மேம்படுத்துவதையும் உள்ளடக்குகின்றது. இச்செயன்முறை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான வங்கிகளின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டல்களுக்கு இசைவாக சபையினால் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றது. வழிகாட்டலில் தரப்பட்டவாறு, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பீடு செய்வதற்கான கணக்கீட்டுக் கோட்பாடுகளைக் கவனத்திற் கொண்டு நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டை சபை மதிப்பீடு செய்துள்ளது.

நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஆற்றல் வாய்ந்தது என்றும், நிதியியில் அறிக்கையிடல் பற்றிய நம்பகத்தன்மை தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்குப் போதுமானது என்றும் அத்துடன், வெளிவாரி நோக்கங்களுக்காக நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்புடைய கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கும், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கும் அமைவாக காணப்படுகின்றது என்றும் சபை அபிப்பிராயப்படுகின்றது.

இடர்நேர்வுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சபையின் கொள்கைகள், நடைமுறைகளைச் செயற்படுத்துவதில் சபைக்கு முகாமைத்துவம் உதவுகின்றது. எதிர்கொள்கின்ற இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செய்வதிலும் அவ்விடர்நேர்வுக் காரணிகளை தணித்துக் கட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்து, தொழிற்படுத்தி, கண்காணிப்பது முகாமைத்துவத்தின் கடமையாகும்.

நிதியியல் அறிக்கையிடல் தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமை மற்றும் நேர்மை பற்றி மீளாய்வு செய்வதில் தாபிக்கப்பட்டுள்ள முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- வங்கியின் நாளாந்த தொழிற்பாடுகளின் செயற்திறன் வாய்ந்த தன்மையை உறுதி செய்வதிலும், வங்கியின் தொழிற்பாடுகள், நிறுவனக் குறிக்கோள்கள், உபாயங்கள், வருடாந்த வரவு செலவுத் திட்டம், அதேபோன்று, அனுமதிக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் தொழில் பணிப்புரைகள் என்பவற்றுக்கு இசைவாகக் காணப்படுகின்றதையும் உறுதி செய்வதில் வங்கிக்கு உதவுவதற்கு சபை மூலம் சபைத் துணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. சபையின் துணைக் குழுக்களாவன:
  - சபையின் கணக்காய்வுக் குழு
  - ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு
  - நியமன மற்றும் ஊதியக்குழு

- கணக்காய்வுச் செயன்முறையின் போது, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது, கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடனான இணங்குவித்தலையும், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் செயற்திறன் வாய்ந்த தன்மையினையும் தொடர்ச்சியான அடிப்படையில் உறுதிப்படுத்துகின்றது. சபையின் கணக்காய்வுக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட இடர் நேர்வு அடிப்படையில் அமைந்த வருடாந்தக் கணக்காய்வுத் திட்டத்தின் மூலம் இயக்கப்படும் தகவல் முறைமை, கணக்காய்வுகள் உள்ளடங்கலாக அனைத்துக் கிளைகள் மற்றும் பிரிவுகள் மீதும் கணக்காய்வு நடத்தப்படுகின்றது. கணக்காய்வுக் குழுவானது, உள்ளகக் கணக்காய்வு ஒப்படைகள் மற்றும் கிளைக் கணக்காய்வுப் பிரச்சினைகள் பற்றிக் கண்டறிந்தவைகளை மீளாய்வு செய்கின்றது. அனுதிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டம் மற்றும் அதற்கு அவசியமான மேம்படுத்தல்களின் உள்ளடக்கத்தின் நோக்கெல்லை மற்றும் பொதுமை பற்றியும் குழு மீளாய்வு செய்தது. அத்துடன், ஏதேனும் திருப்திகரமற்ற கணக்காய்வுகள் மீதான விரிவான கலந்துரையாடல்கள், இவ்விடயங்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைத் திட்டங்களை மீளாய்வு செய்தல், நடைமுறைப்படுத்தும் நிலைமைகள் என்பனவும் வங்கியின் அனைத்து விவகாரங்களையும் மேம்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டன.
- வங்கியின் சபைக் கணக்காய்வுக் குழுவானது, வெளிவாரி கணக்காய்வாளர், ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகள், சபைத் துணைக்குழுக்கள். முகாமைத்துவம் மூலம் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகளையும் மீளாய்வு செய்வதுடன், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் பற்றிய போதுமையினையும், செயற்திறன் வாய்ந்த தன்மையையையும் மதிப்பீடு செய்கின்றது. குழுவானது, இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தரம் மீது குறிப்பான கவனம் செலுத்துதலுடன், உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளையும் மீளாய்வு செய்கின்றது. சபை கணக்காய்வுக் குழுவின் கூட்டக் குறிப்புகள், காலாந்தர அடிப்படையில் வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படுகின்றன. வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்கள் 188 ஆம் பக்கத்தில் “சபைக் கணக்காய்வுக்குழு அறிக்கை”யில் தரப்பட்டுள்ளன.
- நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பீடு செய்வதில், வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் முக்கிய கணக்கீட்டு மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுடன், அனைத்து நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பனவும் இணையப் பெற்றுள்ளன என்பதனை வங்கியின் இனங்காணப்பட்ட அலுவலர்கள் ஒப்பிடுகின்றனர். இவை, தொடர்ச்சியான அடிப்படையில் வடிவமைத்தல் மற்றும் செயற்திறன் பற்றிய பொருத்தப்பாட்டிற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அவதானிக்கப்பட்டுப் பரிசோதிக்கப்படுகின்றன. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு காலப்பகுதியில், நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பில் வெளிவாரி கணக்காய்வாளர்கள் மூலம் ஆக்கப்பட்ட கருத்துக்கள், பரிந்துரைகள் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறைகள் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மேலும் வலுப்படுத்துவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படும்.
- இனங்காணல், அளவிடுதல், வகைப்படுத்தல், வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு செயன்முறைகள் மீது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRS) முன்னேற்றகரமான மேம்பாடுகளை உள்ளடக்குகின்ற இலங்கைக் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை, செயன்முறைகளை மேலும் வலுப்படுத்துகின்றமை கடன்கள் மற்றும் முற்பணங்கள் சேத இழப்பு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நிதியியல் கூற்று வெளிப்படுத்தல்கள் தொடர்பில் இடம்பெறும்.

# நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் அறிக்கை

- 2018 இல் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - இநிஅநி 9 (நிதியியல் சாதனங்கள்) தேவைப்படுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கு சபை அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. கணக்கீட்டு நியமங்களுக்கு இசைவாக செயற்திறன் வாய்ந்த முகாமைத்துவம், செல்லுபடியாக்கல் மற்றும் இணங்குவித்தல் என்பவற்றுக்குத் தேவையான முகாமைத்துவத் தகவல் முறைமைகள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றைச் சூழவுள்ள செயன்முறைகளையும், கட்டுப்பாடுகளையும் சபை தொடர்ச்சியாக வலுப்படுத்தும்.

## உறுதிப்படுத்தல்

மேற்குறித்த செயன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு, வெளிவாரி நோக்கங்களுக்கான நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பில், நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கு வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும், இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தல்களுக்கு அமைவாகவும் செய்யப்பட்டுள்ளது என்றும் சபை உறுதிப்படுத்துகின்றது.

## வெளிவாரி கணக்காய்வாளர்கள் மூலமான கூற்று பற்றிய மீளாய்வு

கணக்காய்வாளர் தலைமை அதிபதியான வெளிவாரி கணக்காய்வாளர் 2022 டிசம்பர் 31 ஆன்று முடிவுற்ற ஆண்டுக்கான வங்கியின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய மேற்குறித்த பணிப்பாளர்களின் கூற்றை மீளாய்வு செய்துள்ளதுடன், வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் செயற்திறன் பற்றிய மீளாய்வில் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயன்முறை பற்றி அவர்களின் புரிந்துகொள்ளலுடன் கூற்று முரண்படுகின்றது என நம்புவதற்கான காரணங்கள் எதுவும் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிட்டுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று பற்றிய அவரின் சுயாதீன உத்தரவாத அறிக்கை இவ்வாண்டறிக்கையின் 179 - 180 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

சபையின் உத்தரவுக்கு அமைய,



சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா
தலைவர் - கணக்காய்வுக் குழு
2023 மே 18ஆந் திகதி



திரு. நிஷாமன் கருணாபால
பிநிஅ / பொது முகாமையாளர்
2023 மே 18ஆந் திகதி

# உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை


ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE


මගේ අංකය
எனது இல.
My No. BAN/ 01/C/HDFC/IC/22/27

ඔබගේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 23 May 2023

தலைவர்
இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உத்தரவாத அறிக்கை

### அறிமுகம்

இவ்வறிக்கையானது, 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடந்த ஆண்டிற்குரிய இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் நிதி அறிக்கையிடல் ('கூற்று") மீதான உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பாக உத்தரவாத அறிக்கையைத் தருகிறது.

### முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் வழிகாட்டல் இல. 12 இன் 3(8)(ஜை)(ஆ) இற்கிணங்க, வெளியிடப்பட்ட 'உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பாக, வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டல்களுக்கு" இணங்க, கூற்றினைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருக்கும்.

எனது பொறுப்பும் இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமம் ளுடுளுயுறு 3050 (திருத்தப்பட்ட) மீதான எனது பொறுப்பும் இணங்குவித்தலும்

கூற்றானது, தயாரிக்கப்பட்ட ஆவணங்களால் அல்லது பணிப்பாளர்கள் சார்பாக ஆதரிக்கப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதுடன், வங்கியின் நிதி அறிக்கையிடலுக்கான உள்ளகக் கட்டுப்பாடு மீதான முறைமையை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றிய முறைமை சரியாகப் பிரதிபலிக்கப்படுகின்றதா என்பதையும் மதிப்பீடு செய்வது எனது பொறுப்பாகும்.

நான் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட, இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமம் (SLSAE) 3050 - உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பான வங்கிகளுக்கான உத்தரவாத அறிக்கைக்கிணங்க எனது ஈடுபாட்டை நான் மேற்கொண்டுள்ளேன். அனைத்து முக்கிய நோக்குகளிலும் உள்ளகக் கட்டுப்பாட்டுக் கூற்றை முகாமைத்துவம் தயாரித்துள்ளதா என்பது பற்றிய வரையறுக்கப்பட்ட உத்தரவாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடைமுறைகளை நான் திட்டமிட்டுச் செயலாற்றுவதை இந்நியமம் வேண்டுகின்றது. இவ் ஈடுபாட்டு நோக்கத்திற்காக ஏதேனும் அறிக்கைகளை இற்றைப்படுத்தவதற்கு அல்லது மீள வழங்குவதற்கு நான் பொறுப்புடையவரோ அன்றில் நான் நிதியியல் தகவல்களின் கணக்காய்வு அல்லது மீளாய்வை செயலாற்றியோ இருக்கவில்லை.

### செயலாற்றப்பட்ட பணி தொடர்பான சுருக்கம்

கூற்றானது, பணிப்பாளர்களால் அல்லது பணிப்பாளர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணத்தினால் துணையளிக்கப்பட்டுள்ளதா, அத்துடன், வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றியுள்ள செயன்முறை பொருத்தமானவாறு பிரதிபலிக்கப்படுகின்றதா என்பதனை மதிப்பிடுவதற்கு எனது ஈடுபாட்டை நடாத்தியுள்ளேன்.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் முதன்மையாக வங்கி ஊழியர்களின் விசாரணைகள் மற்றும் பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயல்முறையின் மாதிரி அடிப்படையிலான ஆவணங்களின் இருப்பு ஆகியவற்றுக்கு வரையறுக்கப்பட்டன.


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

# உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை

இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமமானது, SLSAE (3050) கூற்றுக்கள் சகல இடர்கள் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்குகின்றனவா அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டுச் செயன்முறைகளின் வினைத்திறன் தொடர்பான அபிப்பிராயமொன்றைக் கட்டியெழுப்ப வேண்டுமா என்பது பற்றிக் கருத்திற்கொள்ளுமாறு என்னைத் தேவைப்படுத்தவில்லை. இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமமானது SLSAE (3050) ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு குறிப்பிடத்தக்க பிரச்சினைக்கும் உண்மையில் தீர்வைக் கொண்டு வருவதற்கான முக்கிய உள்ளகக் கட்டுபாட்டு அம்சம் பற்றி செயன்முறைகளில் விபரிக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றிக் கருத்திற்கொள்ளுமாறு என்னைத் தேவைப்படுத்தவுமில்லை.

என்னுடைய தீர்ப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள், வங்கியின் தன்மை தொடர்பாக என்னுடைய புரிதல், தயாரிக்கப்பட்ட கூற்று, தொடர்பாக உள்ள நிகழ்வு அல்லது பரிவர்த்தனையுடன் தொடர்புபடுகிறது. என்னுடைய முடிவுக்கு அடிப்படையாக இருக்கக்கூடிய என்னால் பெறப்பட்ட சான்றுகள் போதுமானதும், பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

## முடிவுரை

செயலாற்றப்பட்ட செயன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூற்றானது, வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுபாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்வதற்காக பணிப்பாளர் சபை பின்பற்றிய செயன்முறை தொடர்பான எனது புரிதலின்படி, எத்தகைய முரண்பாடுகளையும் தோற்றுவிக்கும் எந்தவொரு விடயமும் என்னால் அவதானிக்கப்படவில்லை.



ஒப்பம்
டப்ளியூ. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# சபையின் துணைக்குழு அறிக்கைகள்

## சபை மனிதவள மற்றும் ஊதியக்குழு

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் மனிதவள மற்றும் ஊதியங்கள் குழு, 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிப்புரைகளின் (3)(6) ஆம் பிரிவு (திருத்தப்பட்டவாறான) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்ட நியதிகளுக்கு அமைய, நாணய சபைக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை மூலம் வழங்கப்பட்ட "இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிறுவன ஆளுகை" என்பவற்றுக்கு இணங்க உருவாக்கப்பட்டதாகும். குழுவின் உள்ளமைப்பும், நோக்கெல்லையும் சொல்லப்பட்ட பணிப்புரை மற்றும் விசாரணை நியதிகளின் ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாகக் காணப்படுகின்றன.

### உள்ளமைப்பும் கூட்டங்களும்

மனித வளங்கள் ஊதியக் குழு எச்டீஎப்சீ வங்கியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளது. குழு பின்வருவோரை உள்ளடக்குகிறது.



### குழுவின் தலைவர்

1. திரு. பீ.ஏ. லயனல் - (நிறைவேற்றுத்தரமற்ற, சுயாதீனப் பணிப்பாளர்)
2. திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க (நிறைவேற்றுத்தரமற்ற, சுயாதீனப் பணிப்பாளர்)
   (2023.02.27 அன்று சபையிலிருந்து பதவி விலகினார்)

### ஏனைய உறுப்பினர்கள்

3. சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜெயமஹா - (நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர்)
4. கலாநிதி பீ.ஏ. கிருஷாந்த - (நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீனப் பணிப்பாளர்)

பணிப்பாளர்களின் சுருக்க முகக்குறிப்பு 58-60 பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

### குழுவின் செயலாளர்

குழுவின் செயலாளர் திருமதி மனோரி நாரங்கொட - கம்பனி செயலாளர்

### ஆய்வெல்லை

மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவின் ஆய்வெல்லை (TOR), சபையினால் 2017 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தற்போதைய தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு, அதனைத் தொடர்ந்து மேலும் மீளாய்வு செய்து திருத்தப்பட்டது.

மனித வளங்கள் மற்றும் ஊதியக்குழு இணங்கிய ஆய்வெல்லையினுள் தொழிற்படுவதுடன், பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மைக்கு அர்ப்பணித்துள்ளதுடன், ஊதியக் கட்டமைப்புகள் சமத்துவமிக்கதும், தொழிற்துறை, வங்கியின் செயலாற்றம் என்பவற்றுக்கு அணிசேர்ந்தவையுமாகக் காணப்படுவதை உறுதி செய்கிறது.

மனித வளங்கள் மற்றும் ஊதியக்குழுவின் ஆய்வெல்லை வருடாந்தம் ஆய்வு செய்யப்படுகிறது.

### குழுவின் கூட்டங்கள்

ஆய்வுக்குட்பட்ட ஆண்டு காலப்பகுதியில், குழு நான்கு (04) தடவைகள் கூடியுள்ளது. பின்வரும் பணிப்பாளர்கள், குழுவில் பணியாற்றுகின்றனர்/ பணியாற்றினர். மற்றும், கூட்டங்களுக்கான சமூகமளித்தல் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| | கலந்துகொண்ட / கலந்துகொள்ள தகுதியானவர்கள் |
|---|---|
| 1. திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க | 4/4 |
| 2. சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா | 4/4 |
| 3. திரு. பீ.ஏ. லயனல் | 4/4 |
| 4. கலாநிதி பீ.ஏ. கிருஷாந்த (2022.08.24 இலிருந்து குழுவில் நியமனம்) | 2/2 |
| 5. திரு. பீ.ஏ.எஸ்.ஏ. குமார (2022.03.02 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 1/1 |
| 6. திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாபா பத்திரண (2022.04.28 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 2/2 |
| 7. திரு. ஆர்.பீ.ஏ. விமலவீர (2022.11.14 இல் நியமிக்கப்பட்டு 2022.11.28 இல் இராஜினாமாச் செய்தார்) | 0/0 |

### அழைப்பின் பேரில் கிரமமாக சமூகமளிப்போர்

பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி, வங்கியின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கும் பொறுப்புடையவராவார் என்பதுடன், பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் தொடர்புடைய கருமங்கள் கலந்துரையாடப்படுகின்ற போது தவிர, குழுவின் அனைத்துக் கூட்டங்களிலும் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி பிரசன்னமாகியிருக்க வேண்டும்.

### கொள்கை

மனித வளங்கள் மற்றும் ஊதியக்குழு, பிரதானமாக மனித வளம் மற்றும் ஊதியக் கொள்கைகளை வெளியிடுவதற்குப் பொறுப்பாக இருப்பதுடன், அது, வங்கியின் செயற்திறன் மிக்க மனிதவள முகாமைத்துவத்திற்கான உபாயங்களையும் வகுக்கின்றது.

அதற்கமைய, மனிதவளங்கள் மற்றும் ஊதியக்குழு பின்வருவனவற்றுக்கு பொறுப்புடையதாகும்:

1. வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணி தொடர்பில் ஊதியக் கொள்கையினை நிர்ணயித்தல். (சம்பளங்கள், கொடுப்பனவுகள், வேறு நிதியியல் கொடுப்பனவுகள்)
2. குழு, பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணி என்பவற்றுக்கான இலக்குகளையும், அடைவுகளையும் நிர்ணயித்தல் வேண்டும்.
3. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் அடைவுகளுக்கு எதிராக, பிரதம நிறைவேற்று அலுவலரினதும், முக்கிய நிறைவேற்று ஆளணியினதும் செயலாற்றுகையினை காலமுறையாக மதிப்பீடு செய்து, ஊதியம், நன்மைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் செயலாற்றுகை அடிப்படையிலான ஊக்கத் தொகைகள் என்பவற்றுக்கான அடிப்படையினை நிர்ணயிக்க வேண்டும்.
4. பதவித் தலைப்புகளை மாற்றுதல்
5. வங்கி ஊழியர்களின் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சி, வெளிநாட்டுக் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளுதல்,

6. அலுவலர் சேவை நீடிப்பு
7. ஒழுக்காற்று விடயங்கள் மீது தீர்மானங்களை எடுத்தல் அல்லது மேன்முறையீடுகளைத் தீர்மானித்தல். (வங்கியின் ஒழுக்காற்றுக் கோவையின் கீழ் வேண்டப்படுமெனில்)
8. ஊழியர்களின் துயர்கள் பற்றிய ஏதேனும் மேன்முறையீடு
9. முகாமைத்துவ அதிகார மட்டத்தைத் தாண்டுகின்ற அனைத்து ஊழியர் தொடர்புடைய விடயங்கள் (சபையின் அதிகாரத்தின் கீழ் உரித்தளிக்கப்பட்ட குறிப்பான விடயங்கள் தவிர)
10. குழுவிற்குப் பொருத்தமான ஆய்வெல்லையினைப் பின்பற்றுதல் மற்றும் அவற்றை மீளாய்தல் / திருத்துதல்

## சபைக்கான பரிந்துரைகள்

குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் தொடர்பில் குறிப்பாக, பின்வருவன தொடர்பில் ஆய்வு செய்து சபைக்கு தொடர்புடைய பரிந்துரைகளை மேற்கொள்ளல்.

1. இலங்கையின் வங்கி ஊழியர் சங்கத்துடன் வங்கியின் கூட்டு உடன்படிக்கை
2. வங்கிக்கான நிறுவனசார் கட்டமைப்பு
3. அவசியமான பதவியணி ஆட்சேர்ப்புகள், பதவியணி ஆட்சேர்ப்புத் திட்டம்
4. புதிய பதவிகள் அல்லது வெற்றிடங்கள், பதவிக்கமர்த்தல், பதவியணி, பதவியணி வரவு செலவுத் திட்டம் என்பவற்றை உருவாக்குதல்.
5. அனைத்து மனித விடயங்கள் தொடர்பிலும், தொடர்புடைய கொள்கைகள்
6. ஒழுக்காற்று விடயங்கள் மீது தீர்மானங்களை மேற்கொள்ளல் அல்லது மேன்முறையீடுகளைத் தீர்மானித்தல் தொடர்பில் சபைக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளல். (வங்கியின் ஒழுங்காற்றுக் கோவையின் கீழ் வேண்டுடப்படுமெனில்)
7. முகாமைத்துவம் மற்றும் மனித வள அதிகாரக் குழு மட்டங்களைத் தாண்டிய ஊழியர் தொடர்புடைய அனைத்து விடயங்களும்

மீளாய்வுக்கு உட்படுகின்ற காலப்பகுதியில் குழு அதற்கு குறித்துரைக்கப்பட்ட தொடர்புடைய பொறுப்புகளை மேற்கொள்வதற்கு அவசியமான வழிமுறைகளை எடுத்ததுடன், அலுவலர்கள் தொடர்பில் பல முக்கிய கொள்கைகளைப் பரிந்துரைப்பதில் வெற்றி கண்டது.

## 2022 இல் நடவடிக்கைகள் பற்றிய தொகுப்பு

வங்கியின் திருத்தப்பட்ட ஒழுக்காற்றுக் கோவை மற்றும் ஆட்சேர்ப்புக் கொள்கையினை குழு சபையின் அனுமதிக்காக பரிந்துரை செய்தது.

ஆண்டின் போது வெற்றிடமான சில முக்கிய முகாமைத்துவ ஆளணிப் பதவிகளை நிரப்புவதற்கு பலரின் தகைமைகள், அனுபவம் மற்றும் பொருத்தப்பாட்டினைப் பரிசீலிப்பதற்கு குழு மேலும் அழைக்கப்பட்டதுடன், வங்கியின் உபாயப் பணிப்புரைக்கு அமைவாகவும், ஆதரவளிப்பதற்கும், வங்கியின் பல முக்கிய முகாமைத்துவ ஆளணியின் நியமனங்கள், நீடிப்புகள் மற்றும் வகிபாகம்/பதவி மாற்றங்கள் தொடர்பில் பரிந்துரை செய்தது.


சபையிலிருந்து அவர்கள் விலகும் வரை குழுவை வழிநடத்திய திரு. அத்துல குமார மற்றும் திரு. மாப்பா பத்திரண ஆகியோர் மூலம் வழங்கப்பட்ட பங்களிப்புக்காக சபை அதன் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## தொழில் அறிக்கை

2022 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு வங்கியின் தொழில் அறிக்கையின் பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

| | 2022 டிசம்பர் 31 இல் மொத்தம் | |
|---|---|---|
| வகை | ஆண் | பெண் |
| கூட்டுறவு முகாமைத்துவம் | **05** | **05** |
| பிரதான/சிரேஷ்ட முகாமைத்துவம் | **08** | **14** |
| பிராந்திய முகாமையாளர்கள் | **05** | **01** |
| நிர்வாக ஊழியர்கள் | **127** | **151** |
| நிர்வாகம் சாராத ஊழியர்கள் (செயலாளர்கள், வங்கி உதவியாளர்கள், பொது நோக்கத் தொழிலாளர்கள், அலுவலக உதவியாளர்கள், சாரதிகள், வர்த்தக ஊக்குவிப்பு உதவியாளர்கள், இளநிலை வணிக ஊக்குவிப்பு உதவியாளர்கள், வணிக ஊக்குவிப்பு பயிற்சியாளர்கள், பாம்டாப் உதவியாளர்கள்) | **220** | **52** |
| மொத்தம் | **365** | **223** |

2022 இல் பாலினம் அடிப்படையில் பணியாளர்கள்





(தொழிற்படையில் பெண்கள் 38மூ மற்றும் ஆண்கள் 62%)

## 2022 டிசம்பர் 31 இல் வயது கலவை

| வயது | ஆண் | பெண் |
|---|---|---|
| 30க்குக் கீழ் | 81 | 21 |
| 30 - 50 | 241 | 140 |
| 50க்கு மேல் | 43 | 62 |
| மொத்தம் | 365 | 223 |

2022 இல் பணியாளர் வயது கலவை




## முடிவுரை

புதிய மனிதவள உபாயங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் மனிதவளக் கொள்கையை வலுப்படுத்தல் மீது வங்கி தொடர்ந்தம் கவனம் செலுத்தும்.



பீ.ஏ.லால்
தலைவர்
மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு

# சபையின் துணைக்குழு அறிக்கைகள்

## சபையின் நியமனக் குழு

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் (எச்டீஎப்சீ வங்கி) நியமனக் குழு, 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிப்புரைகளின் (3)(6) ஆம் பிரிவு (திருத்தப்பட்டவாறான) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்ட நியதிகளுக்கு அமைய, நாணய சபைக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை மூலம் வழங்கப்பட்ட "இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிறுவன ஆளுகை" என்பவற்றுக்கு இணங்க உருவாக்கப்பட்டதாகும். குழுவின் உள்ளமைப்பும், நோக்கெல்லையும், சொல்லப்பட்ட பணிப்புரை மற்றும் விசாரணை நியதிகளின் ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாகக் காணப்படுகின்றன.

### உள்ளமைப்பும் கூட்டங்களும்

நியமனக் குழு எச்டீஎப்சீ வங்கியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளது. குழு பின்வருவோரை உள்ளடக்குகிறது.



### குழுவின் தலைவர்

1. திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)
2. திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)

   (2023.02.27 அன்று சபையிலிருந்து பதவி விலகினார்)

### ஏனைய உறுப்பினர்கள்

3. திரு. டப்ளியூ.எம். ஆனந்த (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)
4. திரு. ஆர். சூரியாராச்சி (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)

பணிப்பாளர்களின் சுருக்க முகக்குறிப்பு 58 - 60 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

### குழுவின் செயலாளர்

குழுவின் செயலாளர் திருமதி மனோரி நாரங்கொட - கம்பனி செயலாளர்

### ஆய்வெல்லை

நியமனக் குழுவின் ஆய்வெல்லை 2009 ஆம் ஆண்டு சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தற்போதைய தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு, அதனைத் தொடர்ந்து மேலும் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்பட்டது.

ஆய்வெல்லை வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது.

### குழுவின் கூட்டங்கள்

ஆய்வுக்குட்பட்ட ஆண்டு காலப்பகுதியில், குழு நான்கு (04) தடவைகள் கூடியுள்ளது. பின்வரும் பணிப்பாளர்கள், குழுவில் பணியாற்றுகின்றனர்/ பணியாற்றினர். மேலும், கூட்டங்களுக்கான சமூகமளித்தல் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| | கலந்துகொண்ட / கலந்துகொள்ள தகுதியானவர்கள் |
|---|---|
| 1. திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க | 4/4 |
| 2. திரு. டப்ளியூ.எம். ஆனந்த | 4/4 |
| 3. திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி (2022.08.24 இலிருந்து குழுவில் நியமனம்) | 2/2 |
| 4. திரு. ஆர். சூரியாராச்சி (2022.08.24 இலிருந்து குழுவில் நியமனம்) | 1/1 |
| 5. திரு. பீ.ஏ.எஸ்.ஏ. குமார (2022.03.02 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 1/1 |
| 6. திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாபா பத்திரண (2022.04.28 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 2/2 |
| 7. திரு. ஆர்.பீ.ஏ. விமலவீர (2022.11.14 இல் நியமிக்கப்பட்டு 2022.11.28 இல் இராஜினாமாச் செய்தார்) | 0/0 |

### குழுவின் பொறுப்புகள்

நியமனக் குழு பிரதானமாக பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ உறுப்பினர்களுக்கான தொடர்புடைய கொள்கைகளை வகுப்பதற்கும், பின்வருவனவற்றுக்கும் பொறுப்புடையவர்களாவர்.

1. வங்கியின் புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணி ஆகியோரைத் தெரிவு செய்வதற்கு / நியமிப்பதற்கு நடைமுறையினை அமுல்படுத்தல்.
2. சபையின் பொறுப்புக்களை ஒட்டுமொத்தமாக நிறைவேற்றுவதை நோக்கி, சம்பந்தப்பட்ட பணிப்பாளரினால் செய்யப்பட்ட செயலாற்றுகை மற்றும் பங்களிப்பைக் கவனத்திற் கொண்டு, நடைமுறையிலுள்ள பணிப்பாளர்களை மீளத் தெரிவு செய்வதற்கு பரிந்துரைகளை மேற்கொள்ளல்.
3. பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவப் பதவிகளுக்கு நியமிப்பதற்கு அல்லது பதவி உயர்த்துவதற்கு கருத்திற் கொள்ளப்படுவதற்கான தகைமைகளுக்குத் தேவையான தகைமைகள், அனுபவம் மற்றும் முக்கிய அடைவுகள் போன்ற பொருத்தமான பிரமாணத்தை ஏற்றுக்கொள்ளல்.
4. பணிப்புரை மூன்றில் (3) தரப்பட்டுள்ள பிரமாணத்தில் குறித்துரைக்கப்பட்டவாறும், நியதிச் சட்டங்களில் எடுத்துரைக்கப்பட்டவாறும், பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணி பதவி வகிப்பதற்குப் பொருத்தமான மற்றும் முறையான ஆட்கள் என்பதனை உறுதி செய்வதற்கு பொருத்தமான முறைமையினை ஏற்றுக்கொள்ளல்.
5. ஓய்வு பெறும் பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணிக்காக மேலதிக / புதிய நிபுணத்துவம் மற்றும் பதவி உரிமை ஏற்பாடுகளின் தேவைப்பாடுகளைப் (காலத்திற்குக் காலம்) பரிந்துரைத்தல்.

மீளாய்வுக் காலப்பகுதியின் போது குழு, மேலே தரப்பட்டுள்ளவாறு நியமனக் குழுவின் பொறுப்பாணைக்கு அமைவாக, அவசியமான முயற்சிகளை எடுத்துள்ளது.


## 2022 இல் நடவடிக்கைகளின் தொகுப்பு

ஆய்வுக்குட்பட்ட ஆண்டுக் காலப்பகுதியில், வங்கியின் பணிப்பாளர் சபைக்கு பல அபேட்சகர்களின் பொருத்தப்பாட்டினைப் பரிசீலித்து, நான்கு பணிப்பாளர்களின் நியமனத்தை குழு பரிந்துரைத்துள்ளது. வங்கியின் பணிப்பாளர்கள் நியமனத்தையும், பதவி தொடர்தலையும் மேலும் மீளாய்வு செய்து பரிந்துரை வழங்கியது. இச்செயன்முறையில், குழு ஏதேனும் ஏற்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தல்களுக்கு இசைவாக சபையின் இடைவெளிகள் மற்றும் தேவைகளுக்கு நேரடியாக பணிப்பாளர்களின் தகைமைகள். அனுபவம், கீர்த்திகள் மற்றும் தகுதிகளை மதிப்பீடு செய்தது. குழு, சபையின் ஒட்டுமொத்த உள்ளமைப்பு பற்றி ஆழமாகக் கருத்திற் கொண்டதுடன், சபை மீதான நிபுணத்துவம் மற்றும் அனுபவம் என்ற நியதிகளில் பொருத்தமான சமநிலையினை நிர்ணயித்தது.

வங்கியின் தொடர்ச்சியான பணிப்பாளர்களின் பொருத்தப்பாட்டினையும், நடத்தையினையும் மதிப்பீடு செய்ததுடன், பணிப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சாத்தியக்கூற்றுக்களும், பிரகடனங்களும், ஒழுங்குவிதிகளால் வேண்டப்பட்டவாறு அனுமதிக்காக ஒழுங்குமுறைப்படுத்துநருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

ஆய்வுக்குட்பட்ட ஆண்டு காலப்பகுதியில், வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணி பற்றி குழு மேலும் கலந்துரையாடியதுடன், நியமனங்கள் தொடர்பில் பரிந்துரைகளையும் செய்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் அவர்கள் பதவி விலகும் வரை வழங்கிய பெறுமதி மிக்க பங்களிப்புக்காக, இக்குழு திரு பீ.ஏ.எஸ்.அத்துல குமார, திரு. எம். பி.டீ.யூ.கே.மாப்பா பத்திரண, திரு. டி.எம்.ஏ.கே. தசநாயக்க, கலாநிதி எஸ்.என்.மொராயஸ், திரு. ஆர்.பீ.ஏ. விமலவீர ஆகியோருக்கு அதன் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றது.



பீ.எம்.கே.ஹெட்டியாராச்சி
தலைவர்
நியமனக் குழு

# சபையின் துணைக்குழு அறிக்கைகள்

## சபையின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக்குழு

2016 ஜனவரி 01 தொடக்கம் கட்டாய இணங்குவித்தலை வேண்டிய கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய விதிகளுடன் இணங்குவித்தலை உறுதி செய்யும் விதத்தில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின் 9 ஆம் பிரிவில் உள்ளடங்கிய ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, 2014 ஜூன் மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், பணிப்பாளர் சபை, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு ஒன்றை அமைத்தது. குழுவின் உள்ளமைப்பும், நோக்கெல்லையும் சொல்லப்பட்ட விதிகளுக்கு இணங்கிக் காணப்படுகின்றன.

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவின் ஆய்வெல்லை, பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டு, ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படுகின்றது.

குழுவின் முதன்மைக் குறிக்கோளானது, தொடர்புடைய தரப்பினர்கள் வங்கியின் வேறு பங்காளர்களுக்கும், உருவாக்குநர்களுக்கும் இசைவாக நடத்தப்படுகின்றனர் என்பதை உறுதி செய்யும் பொருட்டு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மீதான பட்டியலிடல் விதிகளுக்கு இணங்க, வங்கியின் தொடர்புடைய தரப்பினர்களுடனான அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் மதிப்பீடு செய்வதும், பரிசீலிப்பதுமாகும்.

### உள்ளமைப்பும் கூட்டங்களும்

குழுவானது, நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களையும், சுயாதீன நிறைவேற்றுத்தர பணிப்பாளர்களையும் ஒன்றிணைத்து உள்ளடக்க வேண்டும். ஒரு சுயாதீன நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர், குழுவின் தலைவராக நியமிக்கப்பட வேண்டும். "சுயாதீனம்" என்பதை வரைவிலக்கணம் செய்வதற்கான பிரமாணம் பட்டியலிடல் விதிகளின் 7.10.4 விதியில் குறித்துரைக்கப்பட்டவாறான அதேபிரமாணமாகும். (கொழும்பு பங்குப் பரிவர்த்தனை பட்டியலிடல் விதி - 9.2.2)

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் குழு எச்டீஎப்சீ வங்கியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகின்றது. குழு பின்வருவோரை உள்ளடக்கி இருந்தது.



### குழுவின் தலைவர்

1. திரு. டப்ளியூ.எம். ஆனந்த (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)
2. திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)
   (2023.02.27 அன்று சபையிலிருந்து பதவி விலகினார்)

### ஏனைய உறுப்பினர்கள்

3. சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)
4. திரு. ஆர். சூரியாராச்சி (நிறைவேற்று அல்லாத, சுயாதீனமற்ற பணிப்பாளர்)

டீசனைக ிசழகடைநள ழக வாந வுசைநஉவழசள யசந பளைநெ ழடெ ியெபநள 58 - 60.

அழைக்கப்படுவோர்: பிரதம நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர் மற்றும் இணங்குவித்தல் அலுவலர்.

### குழுவின் செயலாளர்

குழுவின் செயலாளர் திருமதி மனோரி நாரங்கொட - கம்பனி செயலாளர்

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கண்காணித்தல் குழுவானது, வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்துநர்களால் (பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, மத்திய வங்கி) காலத்திற்குக் காலம், குறித்துரைக்கப்படுகின்றவாறு, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிப்பதற்குப் பொறுப்புடையதாகும்.

### தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களுக்கான வங்கியின் கொள்கையும் ஆய்வெல்லையும்

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் குழு, சபையின் அனுமதியுடன் தொடர்புடைய தரப்பினர் கொள்கையையும், தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களைச் சீரமைப்பதற்கான ஆய்வெல்லையையும் ஏற்றுக்கொண்டதுடன், வங்கி, தொடர்புடைய தரப்பினர்களுக்கு ஏதேனும் சார்பான உபசரிப்பினை வழங்குதில்லை என்பதை உறுதி செய்வதற்கு தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மீது கைக்கெட்டிய தூர கோட்பாடுகளைப் பிரயோகிக்கின்றது. மேலும், தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களைக் கையாள்வதில், வங்கி பின்பற்ற வேண்டிய நடைமுறையினை இது எடுத்துரைக்கிறது. தேவையின் அடிப்படையில் ஏற்கனவே காணப்படுகின்ற கொள்கையினையும், ஆய்வெல்லையினையும் குழு மீளாய்வு செய்ய வேண்டியதுடன், தேவையின் அடிப்படையில் தொடர்புடைய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் குழுவின் ஆய்வெல்லை ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படுகின்றது.

### குழுவின் கூட்டங்கள்

குழு தொடர்புடைய ஆண்டில் நான்கு (4) தடவைகள் கூடியுள்ளது. பின்வரும் பணிப்பாளர்கள், குழுவில் பணியாற்றுவதுடன் /பணியாற்றியதுடன், கூட்டத்தில் சமூகமளித்தமை கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.


| | கலந்துகொண்ட / கலந்துகொள்ள தகுதியானவர்கள் |
|---|---|
| 1. திருமதி ஆர்.எம்.ஆர்.டப்ளியூ. மஞ்சநாயக்க | 4/4 |
| 2. சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா | 4/4 |
| 3. திரு. டப்ளியூ.எம். ஆனந்த | 4/4 |
| 4. திரு. ஆர். சூரியாராச்சி (2022.08.24 இலிருந்து குழுவில் நியமனம்) | 1/0 |
| 5. திரு. டீ.எம்.ஏ.கே.தசநாயக்க (2022.06.13 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 2/1 |
| 6. திரு. எல்.ஈ. சுசந்த சில்வா (24.08.2022 இல் குழுவின் மறுசீரமைப்பு) | 3/3 |

## அழைப்பின் பேரில் கிரமமாக சமூகமளிப்போர்

வங்கியின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கும் பொது முகாமையாளா / பிரதம நிறைவேற்று அலுவலர் பொறுப்புடையவராவார். தொடர்புடைய விடயங்கள் கலந்துரையாடப்படுகின்ற போது தவிர, குழுவின் அனைத்துக் கூட்டங்களிலும் பிரதம நிறைவேற்று அலுவலர் பிரசன்னமாய் இருக்க வேண்டும்.

## நோக்கெல்லையும் கடமைப்பொறுப்பும்

- நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் எச்டீஎப்சீ வங்கியின் ஒழுங்குமுறைப்படுதல் பணிப்புரைகள் என்பன மூலம், குறித்துரைக்கப்பட்டவாறு தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து தோன்றக் கூடிய ஏதேனும் ஆர்வ முரண்பாட்டை நிருவகிப்பதற்கு குழு பொறுப்புடையதாகும்.
- வங்கியின் ஈடுபாடு, வங்கியின் சிறந்த நலனுக்கான விதத்தில் நடத்தப்படுவதையும், பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர்கள், முக்கிய முகாமைத்துவம் அல்லது கணிசமான பங்குதாரர்கள், அவர்களின் நன்மைக்காக தமது பதவியில் இருந்து அனுகூலம் பெறுவதைத் தடுப்பதையும் உறுதி செய்தல்.
- அதற்கமைய, குழுவானது, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் கைக்கெட்டிய தூரத்தில் இடம்பெறுவதற்கும், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாகக் காணப்படுவதற்கும் பொறுப்புடையதாகும்.
- எச்டீஎப்சி வங்கியின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை வரைவிலக்கணம் செய்வதற்கு, தொடர்புடைய தரப்பினர் கொள்கை மற்றும் அதன் ஆய்வெல்லை என்பவற்றை குழு ஏற்றுக்கொண்டுள்ளது. தொடர்புடைய தரப்பினர், கொடுக்கல் வாங்கல்களைக் கையாள்கின்ற போது, தொடர்புடைய தரப்பினர்களுக்கு சாதகமான உபசரணை காணப்படவில்லை என்பதனை குழு உறுதி செய்வதுடன், ஏதேனும் அக்கறை முரண்பாட்டைத் தவிர்க்கின்றது.
- மேலும், நிதியாண்டுக் காலப்பகுதியில் மீளாய்வு செய்யப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கருத்துக்களை /அவதானிப்புக்களை பணிப்பாளர் சபைக்கு அறிவித்துள்ளது.
- மேற்குறித்தவற்றுக்கு மேலதிகமாக, குழுவின் பொறுப்பாணையானது, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடும் விதிகளின் 9ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு, ஆண்டறிக்கையில் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீது பொருத்தமான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதில் சபைக்கு ஆலோசனை வழங்குவதை உள்ளடக்குகின்றது.
- மேலும், தொடர்புடைய தரப்பினர், கொடுக்கல் வாங்கல் மீதான தொடர்புடைய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், வழங்குவதற்கும் கண்காணித்தல் முறைமைகள் செயற்பாட்டில் உள்ளன. முக்கிய முகாமைத்துவ ஆளணி, பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் பற்றிய தகவல்களை, வங்கி தரவு சேகரிப்பு முறைமையினுள் உள்ளடக்குவதையும், அத்தகைய தகவல்களின் செம்மையினையும் இது உள்ளடக்குகின்றது.



டப்ளியூ.எம்.ஆனந்த
தலைவர்
தொடர்புடைய தரப்பு பரிவர்த்தனை மீளாய்வுக் குழு

# சபையின் துணைக்குழு அறிக்கைகள்

## சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் "பட்டியலிடல் விதிகள்" மற்றும் இலங்கை மத்திய வங்கியின் "நிறுவன ஆளுகைப் பணிப்புரைகள்" என்பவற்றுடன் இணங்கியொழுகுவதற்கும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்பன இணைந்து வழங்கிய "நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைகள் கோவை" உடன் இணங்கியொழுகுவதற்கும், 2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற நிதியாண்டுக்கான இவ்வறிக்கையினை கணக்காய்வுக் குழு சமர்ப்பிக்கின்றது.

குழு, நான்கு (04) நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீன பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது.



### குழுவின் தலைவர்

1. சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)

2. திரு. எல்.ஈ. சுசந்த சில்வா (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்) (2023.02.20 அன்று சபையிலிருந்து பதவி விலகினார்)

### ஏனைய உறுப்பினர்கள்

3. திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)
4. திரு. பீ.ஏ. லயனல் (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)

### கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற நிதியாண்டுக் காலப்பகுதியில் நான்கு கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன. கூட்டத்தில் குழு உறுப்பினர்களின் சமூகமளித்தல், ஆண்டறிக்கையின் நிறுவன ஆளுகை பிரிவில் தரப்பட்டுள்ளது. பிரதம உள்ளகக் கணக்காய்வாளரும், பிரதம நிதி அலுவலரும் கிரமமான அடிப்படையில் கூட்டங்களில் சமூகமளித்திருந்தனர். பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், குழுவின் செயலாளராகக் கடமையாற்றினார். பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் ஏனைய அலுவலர்கள் தேவையின் அடிப்படையில் கூட்டங்களில் சமூகமளிப்பதற்கு அழைக்கப்பட்டனர்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பிரதிநிதி (வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளர்) சபை கணக்காய்வுக் குழுவின் அழைப்பின் பேரில் சபை கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் சமூகமளித்துள்ளார்.

### ஆண்டின் போது செயலாற்றப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு

மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் போது சபை, பின்வரும் முக்கிய செயற்பாடுகளில் ஈடுபட்டது.

- நிதியியல் அறிக்கையிடல்

முக்கிய நிதியியல் அறிக்கையிடல் பிரச்சினைகள், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் மாற்றங்கள், ஏதேனும் வேறு நிதியியல் அறிக்கையிடலுடன் தொடர்புடைய கரிசனைகள் என்பவற்றைக் கண்காணிப்பதன் மூலம், வருடாந்த மற்றும் இடைக்காலக் கூற்றுக்கள், நிதியியல் செயலாற்றுகையுடன் தொடர்புடைய ஏதேனும் வேறு முறைசார் அறிவிப்புகள் உள்ளடங்கலாக நியதியியல் கூற்றுக்களின் உண்மைத் தன்மையினை உறுதி செய்தது.

- உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் இணங்குவித்தல் தேவைப்படுத்தல்கள்

வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளும், இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளும், இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கும், வங்கி எதிர்கொள்கின்ற அனைத்து முக்கிய இடர் நேர்வுகளையும் இனங்கண்டு முகாமை செய்வதற்கும், நடைமுறைகள் போதுமானவையாகக் காணப்படுவதை உறுதி செய்து குழுவினால் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. குழுவானது, கடடாயத் தேவைப்படுத்தல்கள் மற்றும் அத்தகைய தேவைப்படுத்தல்களை நிறைவு செய்வதை உறுதிப்படுத்துவதற்கான முறைமைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றுடனான இணங்குவித்தலையும் மேற்பார்வை செய்தது.

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவப் பின்னணியில் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள், மூலவளங்கள் என்பவற்றின் போதுமான தன்மையினை குழு மீளாய்வு செய்தது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, அதன் கணக்காய்வு நடவடிக்கைகளில் சுயாதீனமாக இருப்பதை குழு உறுதி செய்தது. உள்ளகக் கணக்காய்வுக் கட்டுப்பாட்டை குழு மீளாய்வு செய்து, மதிப்பீடு செய்து அனுமதித்தது. நியதிச் சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு உள்ளகக் கணக்காய்வு பிரதானி பற்றிய கணிப்பீடு மீளாய்வு செய்யப்பட்டது. 2022 இல் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம், வெளிப்பிரதேச கிளைக் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு எரிபொருள் நெருக்கடி பாதிப்பினை ஏற்படுத்தின.

- வெளிவாரி கணக்காய்வும் ஏனைய நியதிச்சட்டக் கணக்காய்வுகளும்

வங்கியின் வெளிவாரி கணக்காய்வானது, நாட்டின் அரசியலமைப்புக்கு அமைய, கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்றது. வெளிவாரி கணக்காய்வாளர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி மூலம் நடத்தப்பட்ட நியதிச்சட்டப் பரீட்சிப்புக்கள் என்பவற்றில் கண்டறிந்தவைகளை குழு மீளாய்வு செய்து, மீறல்கள், மோசடிகள், பிழைகள் என்பவற்றை இல்லாதொழிப்பதற்கு முனைப்பான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நிறுவன முகாமைத்துவத்துடன் ஒருங்கிணைத்தது. நியதிச்சட்டப் பரீட்சிப்பு அறிக்கை - 2021 இல் இலங்கை மத்திய வங்கியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் அறிக்கையின் 154(6) இல் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் பற்றி 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முகாமைத்துவத்தினால் எழுப்பப்பட வேண்டிய சீராக்க வழிமுறைகள் பற்றி சபைக் கணக்காய்வுக் குழு பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

### உள்ளக நிதியியல் கட்டுப்பாடுகள், கணக்கீட்டு நடைமுறைகள் மற்றும் வங்கி நிதியியல் கூற்றுக்கள்

வங்கியின் உத்தரவாதம் வழங்குநர்களின் பணியின் அடிப்படையில், வங்கியின் உள்ளக நிதியியல் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் கணக்கீட்டு நடத்தைகள், நம்பமுடியாத ஆண்டு நிதியியல் கூற்றுக்களுக்கான அடிப்படை ஒன்றினை வழங்குகின்றன என்பதனை எடுத்துக்காட்டுகின்ற குழுவின் கவனத்திற்கு எதுவும் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. வங்கியின் வருடாந்த நிதியியல் கூற்றுக்கள், கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்பவற்றுடன் அனைத்து முக்கிய விடயங்கள் தொடர்பிலும் இணங்கிக் காணப்படுகின்றன என குழு திருப்தியடைவதுடன், சபையின் அனுமதிக்காக நிதியியல் கூற்றுக்களைப் பரிந்துரை செய்தது.



சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா
தலைவர்
சபையின் கணக்காய்வுக் குழு
2023 மே 18ஆந் திகதி

# சபையின் துணைக்குழு அறிக்கைகள்

# குழுவின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை

## உள்ளமைப்பும் கூட்டங்களும்

குழு, முதன்மையாக இடர்நேர்வு முகாமைத்துவ முன்முயற்சிகளுக்குப் பொறுப்பாவதுடன், தொடர்புடைய அதிகாரம் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உள்ளமைப்பு, பணி நோக்கெல்லை மற்றும் குழு நடவடிக்கை முறைகள் என்பன இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கு இணங்க பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் ஆய்வெல்லையின் அடிப்படையில் அமைந்திருந்தன.

குழுவின் தலைவர் உள்ளடங்கலாக நான்கு (04) நிறைவேற்றுத் தரமற்ற, சுயாதீனப் பணிப்பாளர்கள் அடங்கிய ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவை சபை நியமித்தது. குழு பின்வருவோரை உள்ளடக்கியிருந்தது.



### குழுவின் தலைவர்

1. திரு. பீ.ஏ. லயனல் (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)

### ஏனைய உறுப்பினர்கள்

2. சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)
3. திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)
4. கலாநிதி பீ.ஏ. கிருஷாந்த (நிறைவேற்று அல்லாத, சுயாதீனப் பணிப்பாளர்)

### முகாமைத்துவப் பங்கேற்பாளர்கள்

5. பிரதம நிறைவேற்று அதிகாரி
6. இடர் அதிகாரி
7. இணக்க அதிகாரி

### அழைப்பின் பேரில் கிரமமாக சமூகமளிப்போர்

8. பிரதம செயற்பாட்டு அதிகாரி
9. பிரதம நிதித்துறை அதிகாரி
10. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
11. பதில் பொது முகாமையாளர் - திறைசேரி மற்றும் சந்தைப்படுத்தல்

பணிப்பாளர்களின் முகக்குறிப்புகள் 58 - 60 பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## குழுவின் செயலாளர்

குழுவின் செயலாளர் திருமதி மனோரி நாரங்கொட - கம்பனி செயலாளர்

## ஆய்வெல்லை

2008 இல் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் ஆய்வெல்லையானது, தற்போதைய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக மேலும் மீளாய்வு செய்யப்பட்டு அதனைத் தொடர்ந்து திருத்தப்பட்டது.

ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் ஆய்வெல்லை ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படுகிறது.

## குழுவின் கூட்டங்கள்

குழுவானது, குறிப்பதற்காக வருடத்தில் ஐந்து முறை (05) கூடியது. பின்வரும் பணிப்பாளர்கள் குழுவில் பணியாற்றுகின்றனர்/பணியாற்றினர் மற்றும் கூட்டங்களில் சமூகமளித்தமை கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| | கலந்துகொண்ட / கலந்துகொள்ள தகுதியானவர்கள் |
|---|---|
| 1. திரு. பீ.ஏ. லயனல் (2022.08.24 இலிருந்து குழுவில் நியமனம்) | 2/2 |
| 2. சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா | 5/5 |
| 3. திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி (2022.08.24 இலிருந்து குழுவில் நியமனம்) | 2/2 |
| 4. கலாநிதி பீ.ஏ. கிருஷாந்த (2022.08.24 இலிருந்து குழுவில் நியமனம்) | 2/2 |
| 5. திரு. எல்.ஈ. சுசந்த சில்வா (2022.08.24 இலிருந்து குழுவில் நியமனம்) | 3/3 |
| 6. திரு. பீ.ஏ.எஸ்.ஏ. குமார (2022.03.02 தொடக்கம் சபையிலிருந்து இராஜினாமா செய்தார்) | 0/0 |
| 7. கலாநிதி எஸ்.என்.மொராயஸ் (2022.06.29 தொடக்கம் சபையிலிருந்து பதவி விலகியுள்ளார்) | 2/2 |

## சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் முதன்மைப் பொறுப்புகள்

குழுவின் முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு:

1. குழு முக்கிய முகாமைத்துவ ஆளணியுடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும் என்பதுடன், குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட கட்டமைப்பிற்குள்ளும், குழுவிற்கு ஒதுக்கப்பட்ட தொடர்புடைய பொறுப்புகளுக்கு இணங்கவும், சபை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முடிவுகளை எடுத்தல் வேண்டும்.
2. குழுவானது, பொருத்தமான நேர்வு நேர்வுக் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல்கள் ஊடாக, வங்கியின் அனைத்து நேர்வுநேர்வுகளையும் (கொடுகடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாட்டு மற்றும் மூலோபாய இடர்நேர்வு போன்றவை) மாதாந்த அடிப்படையில் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

3. குழுவானது, குறிப்பான நேர்வுநேர்வுகளை நிவர்த்தி செய்வதற்கும், குழுவால் குறிப்பிடப்பட்டுள்ள அளவுசார் மற்றும் பண்புசார் இடர்நேர்வு வரம்புகளுக்குள் அவ் நேர்வுநேர்வுகளை நிர்வகிப்பதற்கும், கொடுகடன் குழு மற்றும் சொத்து - பொறுப்புக் குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களினதும் போதுமையையும், செயல்திறனையும் மீளாய்வு செய்யவேண்டும்.
4. அத்தகைய நேர்வுகள், குழுவால் தீர்மானிக்கப்பட்ட முன்மதிமிக்க நிலைகளுக்கு அப்பாற்பட்ட அளவில் இருக்குமிடத்து, வங்கியின் கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தேவைப்படுத்தல்கள், வழிகாட்டுதல்கள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு வழங்கப்பட்ட சுற்றறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட நேர்வுகளின் விளைவுகளைத் தணிப்பதற்கு குழு உடனடி சீராக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
5. இற்றைப்படுத்தப்பட்ட தொழில் தொடர்ச்சித் திட்டங்கள் உட்பட முகாமை செய்வதற்கும், தணிப்பதற்கும் நேர்வுகளின் அனைத்து அம்சங்களையும் மதிப்பிடுவதற்கு குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறை குழு கூடுதல் வேண்டும்.
6. குழு, சபை பொதிகள் ஊடாக (இ-கூட்ட முறைமையின் பாகமாக பகுதியாக நிறுவப்பட்டவாறு) சரியான நேரத்தில் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
7. குறிப்பிட்ட நேர்வுகளை அடையாளம் காணத்தவறியதற்குப் பொறுப்பான அதிகாரிகளைப் பொறுப்பேற்கச் செய்து, குழுவால் பரிந்துரைக்கப்பட்ட அத்துடன்/அல்லது மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் வழிகாட்டுதலின்படி, உடனடி திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குக் குழு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
8. குழுவானது, இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து, சபையின் கருத்துக்கள், ஒப்புதல் மற்றும்/அல்லது குறிப்பான பணிப்புரைகளைக் கோரி, சபைக்கு பரிந்துரைகளை வழங்கி, ஒவ்வொரு கூட்டத்தின் ஒரு வாரத்திற்குள் குழுவுக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.
9. வணிக நடவடிக்கைகளின் அனைத்துப் பகுதிகளிலும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் ஆகியவற்றுடன் வங்கியின் இணங்குவித்தலை மதிப்பிடுவதற்கான இணங்குவித்தல் பிரிவொன்றை குழு நிறுவுதல் வேண்டும். முக்கிய முகாமைத்துவ ஆளணியிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரத்தியேகமான இணங்குவித்தல் அலுவலர், இணங்குவித்தல் தொழிற்பாட்டை நடாத்தி, காலமுறையாக குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.
10. இணங்குவித்தல் தொடர்பான விடயங்கள் தொடர்பில், அதன் மேற்பார்வைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு சபைக்கு உதவுகிறது. அதற்கமைய, வங்கியின் பல்வேறு இணங்குவித்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நேர்வுகளுக்குப் பதிலளிப்பதற்குத் தேவைப்படும் இணங்குவித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அமுலாக்குவது குறித்து குழு மீளாய்வு செய்கிறது.
11. ஒன்றில் குழுவின் கவனத்திற்குக் குறிப்பாக ஆற்றுப்படுத்தப்படும் அல்லது சபை கண்டறிந்தவை மூலம் குழுவின் கவனத்திற்கு வரும், வங்கிக்கு முறைமைசார்ந்த இடர்நேர்வுகளாகக் காணப்படுகின்றவற்றை தொடர்ச்சியாகக் கண்டறிந்தவைகளை இல்லாதொழிக்கும் அல்லது வெளிவரும் இடர்நேர்வுகளை முகாமை செய்வதற்கான தெளிவான குறிக்கோளுடன் மீளாய்வு செய்தல் மற்றும் சபையின் ஏதேனும் துணைக் குழுவின் நடவடிக்கைக்காகவும் அனுப்புதல்.
12. வங்கிகள் தொடர்பான இடர்நேர்வுகளைத் தணிக்கும் நடவடிக்கைகளின் நேர்வுக்குட்படுதல் குறித்து முகாமைத்துவத்திற்கும் சபை துணைக் குழுக்களுக்கும் வழிகாட்டுதல்.

## 2022 இல் நடவடிக்கைகள்

### ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவம்

1. 2022.01.01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் முன்மொழியப்பட்ட கடன் தரப்படுத்தல் முறைமையையும், ஒவ்வொரு தரப்படுத்தல் வகை மீதும் இடர்நேர்வு ஏற்பு வரையறைகளையும் நடைமுறைப்படுத்தல்.
2. ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு குழு அனுமதியளித்தது.
3. வங்கியின் தற்போதைய உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறைக்கு (ஐஊயுபீ) விரிவான சீரக்கங்கள் செய்யப்பட்டன.
4. பேரண்டப் பொருளாதார மாற்றங்கள், கண்காணிப்புக் காரணிகளை உள்ளடக்கிய நிறுவனத்தின் ஒட்டுமொத்த முக்கிய இடர்நேர்வு வழிமுறைகளின் அமைப்பினை மீளாய்தல்.
5. வங்கித்தொழில் நலன் சாத்தியமான, எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதற்காக பேரண்டப் பொருளாதார மாற்றங்கள் பற்றிய தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் கண்காணித்தல்
6. தொடர்ச்சியான அழுத்தப் பரிசோதனை மற்றும் வேறு இடர்நேர்வு மாதிரிகள் ஊடாக பல்வேறு இடர்நேர்வு சூழ்நிலைகளையும் மீளாய்தல்.
7. கடன் மீள்பரிசீலனைப் பொறிமுறைக்கான புதிய கடன் மீளாய்வுத் தொகுதி உருவாக்கம்.
8. கொடுப்பனவுகள் பிரிவிற்கான இணையவழிக் கொடுப்பனவுச் செயன்முறையை அறிமுகப்படுத்துதல்

### சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் சுருக்கம்

சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, வங்கியின் வலுவான இடர்நேர்வுக் கலாசாரத்தை உருவாக்குவதற்காக தொடர்புடைய இடர்நேர்வு மதிப்பீடுகள், கண்காணிப்பு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை நிறுவியுள்ளது. வங்கியின் உள்ளக இடர்நேர்வுக் கொள்கை வழிகாட்டுதல்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வைத் தேவைகளுக்கு இணங்க தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

அத்தகைய கரிசனைகளை நிவர்த்தி செய்யவதற்கு, வங்கி எடுத்த நடவடிக்கைகளுடன் சேர்த்து பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டிய, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் மற்றும் நாணய சபையினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது மேற்பார்வைக் குறைபாடுகள் அல்லது வங்கியின் இடர்நேர்வு அல்லது இலங்கை மத்திய வங்கி வழிகாட்டுதல்களுக்கு இணங்காத முகாமைத்துவத்தில் ஏதேனும் குறைபாடுகள் இல்லை என்பதை குழு உறுதிப்படுத்துகின்றது.



பீ.ஏ.லயன்ல்
தலைவர்
ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு

# பணிப்பாளர்களின் அறிக்கை

எச்டீஎப்சீ வங்கியின் பணிப்பாளர்கள் சபை, 2022 ஆம் ஆண்டின் நிதியாண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட காலத்திற்கான கணக்காய்வாளர் அறிக்கை ஆகியவற்றுடன், தனது பங்குதாரர்களுக்கு வருடாந்த அறிக்கையை மிகுந்த மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றது.

## 01. பொதுவானவை

- எச்டீஎப்சீ என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு பகிரங்க பட்டியல்படுத்தப்பட்ட உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கியாகும். 2019 டிசம்பர் 10 ஆம் திகதி வரை வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் கீழ் செயல்பட்டு, அதன் பின்னர் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- ஏற்கனவே குறிப்பிட்டது போல, வருடாந்த அறிக்கை 2022 நிதியாண்டை (ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை) உள்ளடக்கியது, மேலும், நியதிச் சட்ட, ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் நடைமுறையில் உள்ள சிறந்த கணக்கியல் நடைமுறைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.
- மேலும், இந்த வருடாந்த அறிக்கை, 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் (திருத்தங்கள்), 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் (பொருந்தும் இடத்தில்), 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் பட்டியல்படுத்தப்பட்ட விதிகள் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளது.
- பங்குதாரர்கள் மற்றும் வங்கியின் சிறந்த ஆர்வத்தை உறுதிப்படுத்துகின்ற அனைத்து தேவையான மற்றும் முக்கியமான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதுடன், பொருத்தமான நிதிக் கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டிருப்பதோடு, அவை சபையினால் அங்கீரிக்கப்பட்டுள்ளன.

## 02. முதன்மைச் செயற்பாடுகள்

- வங்கியின் ஆணையில் எந்தவொரு மாற்றமுமின்றி வீடமைப்பு மற்றும் வீடமைப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்குவதை வங்கியின் முதன்மை வர்த்தகமாகக் கொண்டுள்ளது. மேலும், வங்கிச் சட்டத்தின் அட்டவணை (ஸை) இல் தரப்பட்டுள்ள வர்த்தக செயற்பாடுகளில் வங்கி ஈடுபடுகிறது. மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருட காலப்பகுதியின் போது முதன்மை செயற்பாடுகளின் தன்மையில் எவ்விதமான முக்கிய மாற்றங்களும் ஏற்படவில்லை.

## 03. வர்த்தக மீளாய்வு

- வங்கியின் நோக்கு மற்றும் பணி நோக்கு பற்றிய கூற்றுக்கள் ஆண்டறிக்கையின் 4 - 5 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.
- தலைவரின் செய்தி (50 முதல் 51 வரையிலான பக்கங்கள்) மற்றும் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு (52 ஆம் பக்கம் முதல் 55 ஆம் பக்கம் வரை) என்பன ஒட்டுமொத்த நிதி நிலைமை, செயலாற்றல், விவகாரங்களின் நிலைமை, மீளாய்வு காலப்பகுதியில் வங்கியில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் என்பன பற்றிக் கலந்துரையாடுகின்றன.
- 2022 ஆம் நிதியாண்டின் செயற்பாட்டு மீளாய்வு மற்றும் செயற்பாட்டு முடிவுகள் பக்கம் 209 இல் இருந்து வருமான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகள் பணிப்பாளர்கள் குழுவின் வருடாந்த அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

## 04. எதிர்கால முன்னேற்றங்கள்

- வங்கியின் எதிர்கால முன்னேற்றங்கள், மேற்கூறிய எச்டீஎப்சீ சட்டம் மற்றும் வீடமைப்பு அபிவிருத்திக்கான அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானங்களுடன் இணங்கியதாக இருக்கும். மேலதிக விவரங்களுக்கு, தயவுசெய்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள தலைவரின் செய்தி மற்றும் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வைப் பார்க்கவும்.

## 05. நிதி அறிக்கைகள்

- நிதிக் கூற்றுக்கள், இலங்கை கணக்கியல் நியமங்கள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையின் இன்றியமையாத பாகமாகும்.

வங்கியின் நிதிக்கூற்றுக்கள் இந்த ஆண்டறிக்கையின் 209 முதல் 266 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

## 06. விசேட கணக்கீட்டுக் கொள்கைகள்

- மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் பின்பற்றப்பட்ட விசேட கணக்கீட்டுக் கொள்கைகள், ஆண்டறிக்கையின் 213 முதல் 221 ஆம் பக்கம் வரையில் தரப்பட்டுள்ளன. பங்குரிமை மாற்றங்களில் ஏற்பட்ட தாக்கம், வருடாந்த அறிக்கையில் 211வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## 07. கணக்காய்வாளர்களின் அறிக்கை

- எச்டீஎப்சீ வங்கியின் கணக்காய்வாளராகிய இலங்கைக் கணக்காய்வாளர் நாயகம் அவர்கள் மீளாய்வுக்குரிய ஆண்டில் எச்டீஎப்சீ வங்கியின் நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்துள்ளதுடன், குறித்த கணக்காய்வாளரின் அறிக்கையானது ஆண்டறிக்கையின் 201 முதல் 208 வரையிலான பக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 08. நிறுவனத் தொடர்ச்சி

- எச்டீஎப்சீ வங்கியானது, எதிர்வு கூறக்கூடிய எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகளைத் தொடர்வதற்குப் போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என மீளாய்வு செய்து திருப்தியடைந்துள்ளது. ஆகவே, நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நிறுவனத் தொடர்ச்சி அடிப்படை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 09. வருமானம்

- 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் வருமானமானது, ரூபா 8,878 மில்லியன்களாகும். வருமானத்தின் பகுப்பாய்வு ஒன்று நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள் 1 தொடக்கம் 2 மற்றும் 5 தொடக்கம் 7 வரை தரப்பட்டுள்ளன.

## 10. இலாபமும் ஒதுக்கீடும்

- 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் வருமானத்திற்கு முன்னரான இலாபம், வரி மற்றும் நிதிச் சேவைகள் மீதான வரி என்பன ரூபா 612 மில்லியனாகும். அத்துடன், 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபமானது ரூபா 326 மில்லியன்களாகும்.

| 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2021 | 2022 |
|---|---|---|
| | ரூபா மில். | ரூபா மில். |
| நிதிச் சேவைகள் மீதான வரி | 320 | **309** |
| வரிக்கான ஏற்பாடு | 331 | **(23)** |
| வரிக்குப் பின்னரான சாதாரண நடவடிக்கைகள் மீதான இலாபம் | 547 | **326** |
| தக்க வைக்கப்பட்ட இலாபம் (திரண்ட நட்டங்கள்) மு.கொ.செ | 4,266 | **4,730** |
| ஒதுக்கீட்டிற்குள்ள இலாபம் | 547 | **326** |
| முன்மொழியப்பட்ட ஆரம்ப மற்றும் இறுதிப் பங்குலாபத்திற்கான ஒதுக்கம் | - | **-** |
| ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம் | 82 | **49** |
| முன்கொண்டு செல்லப்பட்ட தக்க வைக்கப்பட்ட இலாபம் | 4,730 | **5,007** |

## 11. ஒதுக்கங்கள்

- 2022 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு மொத்த ஒதுக்கங்கள் ரூபா 5,754 மில்லியன்களாகும். இது தொடர்பான விபரங்கள் நிதி நிலைமைக் கூற்றின் 34 தொடக்கம் 36 வரையான குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

## 12. நியதிச் சட்டரீதியான கொடுப்பனவுகள்

- அவர்களின் அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வகையில், அரசாங்கம் மற்றும் ஊழியர்கள் தொடர்பான சட்ட ரீதியான கொடுப்பனவுகளும் உரிய திகதிக்கு முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் திருப்தியடைகின்றனர்.

## 13. வரிக்கான ஏற்பாடு

- 2022 ஆம் ஆண்டிற்கான வருமான வரி 24மூ - முதல் 6 மாதங்களுக்கும், 30% - இரண்டாவது ஆறு மாதங்களுக்கும், வங்கியின் செயல்பாடுகளில் இருந்து எழும் வரிக்குட்பட்ட வருமானத்தின் மீது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இது, வருடாந்த அறிக்கையின் 226வது பக்கத்திலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 13 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 14. பங்குலாபம்

- வங்கியின் குறைந்தபட்ச மூலதனத்தை 7.5 பில்லியன் ரூபா வரை அதிகரிப்பதற்கான ஒழுங்குமுறைத் தேவையைக் கருத்திற் கொண்டு, 2022 ஆம் நிதியாண்டில் பங்குலாபம் வழங்கப்பட மாட்டாது.

## 15. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், இறையிலி சொத்துக்கள் மற்றும் மென்பொருட்கள்

- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான மூலதனச் செலவு ரூபா 386 மில்லியனாகும். இது தொடர்பான விபரங்கள் 232 முதல் 235 வரையான பக்கங்களில் உள்ள நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு 19 மற்றும் 20 களில் தரப்பட்டுள்ளன.

## 16. இறையிலி சொத்துக்களின் சந்தைப் பெறுமதி

- இறையிலி சொத்துக்களின் சந்தைப் பெறுமதி தொடர்பான விபரங்கள் 233 முதல் 236 வரையான பக்கங்களிலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 19.2 மற்றும் 22 என்பனவற்றில் தரப்பட்டுள்ளன.

## 17. நிதி நிலைமைக் கூற்றுத் திகதியின் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள்

- நிதிக் கூற்றுக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்களை தேவைப்படுத்துகின்ற எவ்விதமான முக்கிய நிகழ்வுகளும் நிதிநிலைக் கூற்று திகதியின் பின்னர் இடம்பெறவில்லை.

## 18. வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்

- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று, வங்கியின் வெளிப்படுத்தப்பட்ட மூலதனம் ரூபா 962 மில்லியன்களாவதுடன், இது 64,710,520 சாதாரண பங்குகளைக் கொண்டுள்ளது.

## 19. பங்குகள் தொடர்பான தகவல்களும், தொகுதிக்கடன்களும்

- பங்குகள் மற்றும் தொகுதிக்கடன்கள் தொடர்பான விபரங்கள், இவ்வறிக்கையின் 268 முதல் 270 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## 20. சகல பங்குதாரர்களையும் நியாயமாக நடத்துதல்

- ஆரம்பத்தில் வழங்கப்பட்ட நியதிகளுக்கு அமைவாக, சகல பங்குதாரர்களும் நியாயமாக நடத்தப்பட்டுள்ளனர்.

## 21. பணிப்பாளர்கள் சபை

பணிப்பாளர்கள் சபையின் முழுமையான அட்டவணையையும், அவர்களின் தகுதிகள் மற்றும் அனுபவங்கள் பற்றிய விபரங்களையும் 56 முதல் 60 வரையான பக்கங்களில் உள்ள பொருத்தமான அத்தியாயத்தில் பார்க்கவும்.

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களும், இராஜினாமாக்களும்.

| இல. | பெயர் | மீளாய்வுக் காலப் பகுதியிலான நியமனங்கள் தி/மா/வ | மீளாய்வுக் காலப் பகுதியிலான இராஜினாமாக்கள் தி/மா/வ | மீளாய்வுக் காலப் பகுதியிலான ஓய்வுகள் தி/மா/வ |
|---|---|---|---|---|
| 01. | திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி | 28/04/2022 | - | - |
| 02. | கலாநிதி பீ.ஏ. கிருஷ்ணந்த | 30/06/2022 | - | - |
| 03. | திரு. ஆர். சூரியாராச்சி | 30/06/2022 | - | - |
| 04. | திரு. ஆர்.பீ.ஏ. விமலவீர | 14/11/2022 | 28/11/2022 | - |
| 05. | திரு. பீ.ஏ.எஸ்.ஏ. குமார | - | 02/03/2022 | - |
| 06. | திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாபா பத்திரண | - | 28/04/2022 | - |
| 07. | திரு. டீ.எம்.ஏ.கே. தசநாயக்க | - | 13.06.2022 | - |
| 08. | கலாநிதி எஸ்.என். மொராயஸ் | - | - | 29.06.2022 |

## 22. சபை உப குழுக்கள்

- இலங்கை மத்திய வங்கி, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையம் ஆகியவற்றின் கூட்டுறவு ஆளுகை வழிகாட்டல்களில் கூறப்பட்டவாறு, குறித்த உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி உப குழுக்களினது உறுப்பாண்மை, கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் செயலாற்றல்கள் என்பன, ஆண்டறிக்கையின் 181 முதல் 190 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## 23. பணிப்பாளர் கூட்டங்கள்

- 181 தொடக்கம் 190 வரையான பக்கங்களிலுள்ள சபை மற்றும் சபை உப குழுக்களின் கூட்டங்களுக்கான சமூகமளிப்பு பகுதியைப் பார்க்க.

## 24. நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புகள்

- எச்டீஎப்சீ வங்கியின் விவகாரங்களின் உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கும் வகையில், வங்கியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பணிப்பாளர்கள் பொறுப்பாகவிருப்பர். பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையின் இன்றியமையாத பாகமாகிய 198வது பக்கத்திலுள்ள நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளரின் பொறுப்புக் கூற்றினைத் தயவு செய்து பார்க்கவும்.

## 25. பணிப்பாளரின் அக்கறை

- பங்குதாரர்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய ஒப்பந்தம் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தம் ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அக்கறை ஒன்று இல்லை என்பதை பணிப்பாளர்கள் வெளிப்படுத்தியமைக்கு மேலதிகமாக, பணிப்பாளர்களின் அக்கறை பற்றி வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தேவையான பிரகடனங்கள் 263 மற்றும் 264 வது பக்கங்களில் தரப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் தமக்கு அக்கறையுள்ள கலந்துரையாடல்களில் அல்லது அங்கீகாரம் அளிக்கும் செயன்முறையில் பங்குபற்றுவதில் அல்லது அத்தகைய விடயங்கள் அல்லது ஒப்பந்தங்களுக்கு வாக்களிப்பதில் இருந்து தவிர்த்திருக்கின்றனர்.
- பணிப்பாளர்கள் தமக்கு அக்கறையுள்ள ஏதேனும் வியடங்களில் (ஏதேனும் இருப்பின்) வாக்களிப்பதில் இருந்து தவிர்த்திருந்தனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான வெளிப்படுத்தல்களை மேற்கொண்டிருந்தனர்.

## 26. பங்காண்மை மீதான பணிப்பாளர்களின் அக்கறை

- பணிப்பாளர்களின் பங்காண்மைகள் பின்வருமாறு:

| | 31/12/2022 | 01/01/2022 |
|---|---|---|
| திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க 27.02.2023 தொடக்கம் சபையிலிருந்து விலகினார் | இல்லை | இல்லை |
| திரு. எல்.ஈ. சுசந்த சில்வா 20.02.2023 தொடக்கம் சபையிலிருந்து விலகினார் | 1,000 | 1000 |
| சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா | 1,000 | 1000 |
| திரு. டப்ளியூ.எம். ஆனந்த | இல்லை | இல்லை |
| திரு. பீ.ஏ. லயனல் | 2,000 | 2000 |
| திரு. டீ.எம்.எம்.எம். விஜயரத்ன | இல்லை | இல்லை |
| திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி | இல்லை | இல்லை |
| கலாநிதி பீ.ஏ. கிரிஷாந்த | 1000 | இல்லை |
| திரு. ஆர். சூரியாராச்சி | இல்லை | இல்லை |
| மொத்தம் | 5,000 | 1,000 |

## 27. தொகுதிக்கடன்கள் மீதான பணிப்பாளர்களின் அக்கறைகள்

- பணிப்பாளர்கள் கொண்டுள்ள தனிப்பட்ட தொகுதிக்கடன்களின் விபரங்கள் பின்வருமாறு:

| 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2022 | |
|---|---|---|
| | தொகுதிக் கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
| திருமதி ஆர். எம். ஆர். டப்ளியூ. மஞ்சநாயக்க 27.02.2023 தொடக்கம் சபையிலிருந்து விலகினார் | இல்லை | இல்லை |
| திரு. எல்.ஈ. சுசந்த சில்வா 20.02.2023 தொடக்கம் சபையிலிருந்து விலகினார் | இல்லை | இல்லை |
| சிரேஷ்ட பேராசிரியர் ஏ. ஜயமஹா | இல்லை | இல்லை |
| திரு. டப்ளியூ.எம். ஆனந்த | இல்லை | இல்லை |
| திரு. பீ.ஏ. லயனல் | இல்லை | இல்லை |
| திரு. டீ.எம்.எம்.எம். விஜயரத்ன | இல்லை | இல்லை |
| திரு. பீ.எம்.கே. ஹெட்டியாராச்சி | இல்லை | இல்லை |
| கலாநிதி பீ.ஏ. கிரிஷாந்த | இல்லை | இல்லை |
| திரு. ஆர். சூரியாராச்சி | இல்லை | இல்லை |
| மொத்தம் | இல்லை | இல்லை |

## 28. தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள்

- தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் மீதான இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டிகள் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் விதிகளுடன் மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் வங்கி இணங்கி நடந்துள்ளது என்பதை சபை பிரகடனப்படுத்த விரும்புகிறது. தொடர்புடைய முக்கியமான திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகளின் விபரங்கள் வருடாந்த அறிக்கையின் 263 மற்றும் 264 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## 29. பணிப்பாளர்களின் ஊதியம்

- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளர்களின் ஊதியமானது, 225 ஆம் பக்கத்திலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான 11 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளது.

## 30. சூழல் பாதுகாப்பு

- பணிப்பாளர் சபையின் அறிவுக்கெட்டிய வகையில், வங்கியானது பொருத்தமான சுற்றாடல் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கி நடந்துள்ளது. அத்துடன், வங்கி சுற்றாடலுக்குத் தீங்கு அல்லது அபாத்தை ஏற்படுத்தும் எவ்விதமான செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை.

## 31. இடர் முகாமைத்துவமும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளும்

- மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது, வங்கியின் இடர் தீர்மானங்களும் மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (IRMC) மற்றும் சபை ஆகியன, இடர் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய, பொருத்தமான முன்னெடுப்புகளை மேற்கொண்டன. 167 தொடக்கம் 176 வரையான பக்கங்களில் இடர் மதிப்பீட்டு அறிக்கையைப் பார்க்கலாம்.

- மேலும், மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது, சபை கணக்காய்வுக் குழு (BAC), உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறையை கிரமமாக மீளாய்வு செய்தது. ஐசுஆஇ மற்றும் டீயுஇ என்பன, தமது கூட்டக் குறிப்புகளை சபைக்கு நேரடியாக சமர்ப்பிக்கும்.
- 188வது பக்கத்திலுள்ள சபை கணக்காய்வுக் குழு அறிக்கையையும், 179 தொடக்கம் 180 வரையுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையையும் தயவு செய்து பார்க்க.

## 32. கூட்டுறவு ஆளுகை

- ஊரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டல்களை 4,400 (SLSRS) இன் கீழ் கணக்காய்வாளர்களால் வழங்கப்பட்ட "உண்மை கண்டறிதல்கள் அறிக்கை" களுடன் கூடிய 124 முதல் 166 வரையிலான பக்கங்களிலுள்ள கூட்டுநிறுவன ஆளுகை அறிக்கையைத் தயவு செய்து பார்க்கவும்.

## 33. ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குதல்

- இடர் முகாமைத்துவ ஒழுங்கு விதியை (IRMC), ஆளும் சட்டங்கள் தொடர்பான வங்கியின் இணக்க அந்தஸ்தை வங்கியின் இணக்க அதிகாரி நேரடியாக ஐசுஆஇ க்கு அறிக்கையிடுவார். பணிப்பாளர்கள் தமது சிறந்த அறிவுக்கெட்டிய வகையில், எந்தவொரு அதிகார வரம்பிலும், நேரடி அல்லது மறைமுகமாக சட்டங்கள் அல்லது விதிமுறைகளை மீறவில்லை என்பதையும், வங்கியின் முக்கியமான நிதி விளைவை ஏற்படுத்தக்கூடிய பணிப்பாளர்களின் முகாமைத்துவதை தலையிட்டுள்ள எவ்விதமான முறைகேடுகளும் இல்லை என்பதையும் வெளிப்படுத்த வங்கி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.
- 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ர்னுகுஊ சட்டம் (திருத்தங்கள்), 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம், வங்கிச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி வழங்கிய வழிகாட்டல்கள் மற்றும் தீர்மானங்கள், 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயச் சட்டம், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் தராதரங்கள் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பண மோசடி தடுப்புச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குவதற்கான சமவாயச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டம், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் பட்டியல்படுத்துவதற்கான விதிகள் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனைகள் ஆணைக்குழுச் சட்டம், 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகை சட்டம், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டம், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் மற்றும் அத்தகைய நியதிச் சட்டங்களுக்கான திருத்தங்கள் உள்ளடங்கலாக, வங்கிக்கு ஏற்புடைய நிதிச் சட்ட ஏற்பாடுகளில் இருந்து எழுகின்ற ஒழுங்குபடுத்தல் மற்றும் விவேகமான ஏற்பாடுகள் அனைத்துடனும் இணங்கி நடந்துள்ளது.

## 34. கணக்காய்வாளர்களின் நியமனம்

- 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ர்னுகுஊ சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறும், இலங்கை அரசியலமைப்புக்கு அமைவாகவும், வங்கியின் கணக்காய்வாளராக தொடர்ந்தும் கணக்காய்வாளர் நாயகமே இருப்பார்.

## 35. கணக்காய்வாளர் ஊதியமும் வங்கியுடன் உள்ள ஒப்பந்தத்தின் மீதான அக்கறையும்

- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டில் வங்கியினால் கணக்காய்வாளர்களுக்கு ரூபா 2.6 மில்லியன் கணக்காய்வுக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வாளருக்கு வங்கியுடன் எந்தவிதமான உறவுகளோ அல்லது வங்கியுடனான ஒப்பந்தத்தில் எவ்விதமான அக்கறையும் கிடையாது.
- பணிப்பாளர்களின் அறிவுக்கு எட்டிய வகையில், மேலே வெளிப்படுத்தப்பட்டவைக்கு மேலதிகமாக, கணக்காய்வாளர்களுக்கு வங்கியுடன் எவ்விதமான உறவுகளோ அல்லது அக்கறையோ கிடையாது.

## 36. கணக்காய்வுக் குழு


- இந்த ஆண்டறிக்கையின் 188 ஆம் பக்கத்தில் கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்கமும், அவர்களது அறிக்கையும் தரப்பட்டுள்ளன.

## 37. கூட்ட அறிவிப்பு

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் ("ர்னுகுஊ வங்கி") முப்பத்தியெட்டாவது (38வது) வருடாந்தப் பொதுக் கூட்டம் 2023 ஜூன் இருபத்தி எட்டு (28) புதன்கிழமையன்று இல. 100, இலங்கை மன்ற மாவத்தை, சுதந்திர சதுக்கம், கொழும்பு 7 என்ற முகவரியிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் (நியூ விங் கேட்போர் கூடத்தில்) காலை 10.00 மணிக்கு நடைபெறவிருக்கிறது. வருடாந்த அறிக்கையின் பக்கம் 274 இல் கொடுக்கப்பட்ட கூட்டத்தின் அறிவிப்பு.

பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கிணங்க கையொப்பமிடப்பட்டுள்ளது.

சபையின் சார்பாகவும், ஆதரவாகவும்.



மனோரி நாரங்கொட
கம்பனி செயலாளர்

2023 மே 24 ஆந் திகதி

# பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகியோரின் பொறுப்புடைமைக் அறிக்கை

2022 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான, இலங்கை எச்டீஎப்சி வங்கியின் நிதியியல் கூற்றுகள், பின்வரும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

i. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS/LKAS)

ii. 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள்

iii. 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிச் சட்டம் மற்றும் 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டம் (திருத்தம்) அத்துடன், 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டம்

iv. 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம்

v. இலங்கை மத்திய வங்கி மூலம் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள்,

vi. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகள்

vii. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட கணக்கீடு மீதான மாற்றுப் பரிகாரக் கூற்றுக்கள்

viii. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

ix. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள்

x. COVID-19 தாக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் /வழிகாட்டல்கள்

xi. இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு இணைந்து வழங்கிய நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவை (2017)

வங்கியின் கணக்கீட்டுக் கொள்கைகள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணங்குவித்தலுடன் இணங்கியொழுகுவதுடன், வங்கியினால் ஒத்திசைவாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

உயர்ந்தளவான தீர்ப்பு மற்றும் சிக்கல் வாய்ந்த தன்மையினை ஈடுபடுத்துகின்ற முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும், மதிப்பீடுகளும் சபையின் கணக்காய்வுக் குழுவுடனும், வெளிவாரி கணக்காய்வாளர்களுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளன. அனைத்து முக்கிய விடயங்களும், நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் வாயிலாக வெளிப்பத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதியியல் கூற்றுகள், 2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான வங்கியின் நிதியியல் நிலைமை, இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல்கள் பற்றிய உண்மையான அத்துடன் நியாயமான நோக்கு ஒன்றினைத் தருகின்றது என எமது அறிவுக்கு எட்டியவரையில் நாம் உறுதிப்படுத்துகின்றோம். வரவிருக்கும் எதிர்காலத்தில், அதன் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு வங்கி போதுமான வளங்களைக் கொண்டுள்ளது என்றும், அதற்கேற்ப, நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில் தொடர்ந்து இணங்கும் எண்ணக்கரு பின்பற்றப்பட்டது என்றும் நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

நிதியியல் கூற்றுக்களின் உண்மையான தன்மை மற்றும் புறநிலை என்பவற்றுக்கான பொறுப்பினை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். நிதியியல் கூற்றுக்களுடன் தொடர்புடைய மதிப்பீடுகளும், தீர்மானங்களும், நிதியியல் கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினைப் பிரதிபலிக்கும் விதத்திலும், கொடுக்கல் வாங்கல்களின் வடிவம் மற்றும் நோக்கு என்பவற்றை எடுத்துக் காட்டுவதற்கும் வங்கியின் விவகாரங்களில் நிலைமை நியாயமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதற்கும் நியாயமான அத்துடன் முன்மதிமிக்க அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. இதனை உறுதி செய்வதற்கு, வங்கியானது, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை நடைமுறைப்படுத்துவதிலும், சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவும், மோசடி, அதேபோன்று, வேறு முறைகேடுகளைத் தடுப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் முறையான மற்றும் போதுமான கவனத்தினை எடுத்துள்ளது. இவை தொடர்ச்சியான அடிப்படையில் மீளாராயப்பட்டு, மதிப்பிடப்பட்டு, இற்றைப்படுத்தப்படுகின்றன. கம்பனியின் தாபிக்கப்பட்ட கொள்ககளும், நடைமுறைகளும் ஒத்திசைவாகப் பின்பற்றப்படுகின்றது என்பதற்கு நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதற்கு வங்கியின் உள்ளகக் கணக்காய்வாளர் காலமுறையான கணக்காய்வுகளை நடத்தியுள்ளார். எவ்வாறாயினும், ஏதேனும் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டு முறைமையினால் வழங்கப்படும் உத்தரவாதத்தை நிர்ணயிப்பதில் உட்பொதிந்த மட்டுப்பாடுகள் காணப்படுகின்றமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.


வங்கியின் நிதியியல் கூற்றுக்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டன. அவர்கள் மூலம் வழங்கப்பட்ட அறிக்கை, இவ்வறிக்கையின் 201-208 ஆம் பக்கங்களில் கிடைக்கப் பெறுகின்றன. அத்தகைய சேவைகளை வழங்குதல், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை மீறுவதில்லை அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுயாதீனத்தினை வலுவிழக்கச் செய்வது என்பதனை உறுதி செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வு மற்றும் கணக்காய்வல்லாத சேவைகள் சபைக் கணக்காய்வுக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளன.

சபையின் கணக்காய்வுக் குழுவானது. அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும், கணக்கேடுகளில் செம்மையாகவும், முழுமையாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதையும், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் அத்துடன் வெளிப்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகளும் உறுதி செய்யப்பட்டுள்ளன என்பதற்கும் நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதற்கு நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் வாய்ந்த தன்மை உள்ளடங்கலாக, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளில் போதுமான தன்மை, அத்துடன், செயற்திறன் வாய்ந்த தன்மை என்பவற்றை மீளாய்வு செய்கிறது. சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 188 ஆம் பக்கத்தில் கிடைக்கப் பெறுகின்றது. முழுமையான சுயாதீனத்தினை உறுதி செய்வதற்கு வெளிவாரி கணக்காய்வாளர்களும், உள்ளகக் கணக்காய்வாளர்களும் ஏதேனும் முக்கிய விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு சபை கணக்காய்வுக்குழு உறுப்பினர்களுக்கு முழுமையான மற்றும் தங்குதடையற்ற பெறுவழியினைக் கொண்டிருக்கின்றனர்.

பணிப்பாளர் சபையும், வங்கியின் முகாமைத்துவமும் நிதியியல் கூற்றுக்கள் பற்றிய நேர்மைக்கும், புறநிலைக்குமான பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றன.

எமது அறிவுக்கு எட்டிய வரையில் பின்வருவனவற்றை நாம் உறுதிப்படுத்துகின்றோம்:

- வங்கி, அனைத்து ஏற்புடைய சட்டங்களுடன், விதிகளுடன், ஒழுங்குவிதிகளுடன், வழிகாட்டல்களுடன் இணங்கியொழுகியுள்ளது.
- முக்கிய இணங்காமைகள் எதுவும் காணப்படவில்லை.
- நிதியியல் கூற்றுக்களின் 37வது குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர, வங்கிக்கு எதிராக வங்கிக்கு முக்கிய வழக்காடல்கள் காணப்படவில்லை.
- அறிக்கையிடும் திகதியன்று உள்ளவாறான வங்கி மூலமான அனைத்து வரிகள், தீர்வைகள், அறவீடுகள் மற்றும் நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் அத்துடன் கம்பனியின் ஊழியர்களின் சார்பில் அல்லது தொடர்பில் செலுத்தத்தக்க அனைத்துப் பங்களிப்புகள், அறவீடுகள் மற்றும் வரிகள் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன அல்லது தொடர்புடையவிடத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.



அநுர ஹெட்டியாராச்சி
பிரதம நிதித்துறை அதிகாரி



நிஷாமன் கருணாபால
பிநிஅ/பொது முகாமையாளர்

2023 மே 29ஆந் திகதி





நிதி

# அறிக்கைகள்

நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புகள் மீதான கூற்று - 200
ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கை - 2021 இல் இலங்கையின் எச்டீஎப்சீ வங்கியின் பணிப்பாளர் சபையின் சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை - 201
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 203
இலாப அல்லது நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானம் - 211
நிதிநிலைமைக் கூற்று - 212
பங்குரிமை மாற்றம் பற்றிய கூற்று - 213
காசுப் பாய்ச்சல் கூற்று - 214
கணக்கியல் கொள்கைகள் - 215
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 225

# நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புகள் மீதான கூற்று

1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க எச்டீஎப்சீ சட்டம் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டம்) மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, வங்கியின் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய பணிப்பாளர்களின் பொறுப்பு கீழே தரப்பட்டுள்ள கூற்றில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான வெளிவாரி கணக்காய்வாளரின் பொறுப்புகள், கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவிலும், நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கவும், அவற்றைப் பொதுக் கூட்டம் ஒன்றில் சமர்ப்பிக்கவும் பணிப்பாளர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர். நிதிக் கூற்றுக்கள், 2022 டிசபர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்குரிமை மாற்றம் தொடர்பான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பனவற்றையும், அவை தொடர்பான குறிப்புகளையும் உள்ளடக்கியுள்ளது.

வங்கியின் நிதிக் கூற்றுக்கள், பின்வரும் விடயங்கள் தொடர்பாக, உண்மையானதும், நியாயமானதுமான பார்வையைத் தருகிறது.

(அ) 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி விவகாரங்கள் பற்றிய நிலைமை.

மற்றும்,

(ஆ) முடிவடைந்த நிதி வருடத்திற்கான வங்கியின் இலாபம் அல்லது நட்டம்

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில், பணிப்பாளர்கள் பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்துமாறு தேவைப்படுத்தப்பட்டனர்.

(அ) பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டதுடன், அவை, ஒருசீராகப் பயன்படுத்தப்பட்டன. ஏதேனும் முக்கியமான விலகல்கள் இருப்பின், அவை வெளிப்படுத்தப்பட்டு விளக்கப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) தீர்ப்புகளும், மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், அவை நியாயமானதும், விவேகமானதுமாகும். மற்றும்,

(இ) பொருத்தமான வகையில், அனைத்து இயைபான கணக்கியல் தரங்களும் இணங்கி பின்பற்றப்பட்டுள்ளன.

வங்கிக்கு, அதன் தொழிற்பாட்டைத் தொடர்ச்சியாக நடத்துவதற்குத் தேவையான போதுமான வளங்கள் இருப்பதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துமாறு தேவைப்படுத்தப் பட்டுள்ளதுடன், இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில், நிறுவனத் தொடர்ச்சிக் கொள்கையைப் பயன்படுத்தி, அதனை நியாயப்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

மேலும், வங்கி, வெளிப்படுத்துவதற்கு நியாயமான துல்லியத்துடன், வங்கி நிலைமையை வெளிப்படுத்தப் போதுமான கணக்கியல் பதிவுகளைப் பேணுகிறது என்பதையும் உறுதிப்படுத்தும் பொறுப்பு பணிப்பாளர்களுக்கு உள்ளது.

இந்த அறிக்கையில் தயாரிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள், 2012 ஆம் ஆண்டின் ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்த இலங்கையின் புதிய கணக்கியல் நியமங்களுக்கு (SLFRS) அமைவாகவும், அடிப்படையான கணக்குப் புத்தகங்களுடன் இணங்கக் கூடிய வகையிலும், மற்றும் இலங்கையின் கணக்கியல் நிமயங்களின் தேவைப்பாடுகள், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கணக்காய்வு நியம சட்டம், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அவற்றின் திருத்தங்கள், இலங்கையில் உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் கூட்டுறவு ஆளுகை மீது (காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டி, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் பட்டியல்படுத்தும் விதிகள், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் (CA Sri Lanka) மற்றும் இலங்கை பிணயங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC) ஆகியவற்றினால் இணைந்து வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைக் கோவை என்பவற்றுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக, உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில், பின்பற்றப்பட வேண்டிய இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வடிவத்திற்கு அமைவாகவும் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன

பணிப்பாளார் சபை, வருடம் பூராகவும், வங்கியினால் எதிர்கொள்ளப்படுகின்ற முக்கியமான இடர்களை இனங்காணவும், பதிவு செய்யவும், மதிப்பீடு செய்யவும், முகாமைத்துவம் செய்யவும், வினைத்திறனான மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், இக்கட்டுப்பாடுகள் பணிப்பாளர் சபையினால் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

உள்ளகக் கட்டுப்பாடுகள், வங்கியின் வணிகத்தை ஒழுங்கான முறையில் நடத்தத் தேவைப்படுகின்ற மற்றும் அதனுடைய சொத்துக்களைப் பாதுகாக்க, மோசடிகளைத் தடை செய்ய, கண்டுபிடிக்க மற்றும் ஏனைய ஒழுங்கீனங்களைக் கண்டுபிடிக்க, மேலும், இயன்றளவில் அதனுடைய பதிவுகளைத் துல்லியமாகவும், நம்பகமான அடிப்படையிலும் பாதுகாப்பதற்கு, உள்ளக மீளாய்வுகள், உள்ளகக் கணக்காய்வு மற்றும் நிதி முறைமை தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் நடத்தப்பட்ட அத்தகைய மீளாய்வுகளின் பெறுபேறுகள், வருடாந்த அறிக்கையில் “உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று” என்ற தலைப்பின் கீழ் 177 - 178 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன. “உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர் கூற்றின் மீதான வெளிவாரி கணக்காய்வாளரின் உறுதிப்பாட்டு அறிக்கை” 179 தொடக்கம் 180 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

வங்கி, முறையான கணக்குப் புத்தகங்களைப் பேணுகிறது என்பதையும், கிரமமான கூட்டங்களில் சபையினாலும், சபைக் கணக்காய்வுக் குழு ஊடாகவும், நிதி அறிக்கையிடும் முறைமை மீளாய்வு செய்யப்படுவதை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை பணிப்பாளர் சபை மேற்கொண்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்ட குழுவினுடைய அறிக்கை, வருடாந்த அறிக்கையின் 188 வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது. சபை கணக்காய்வுக் குழுவினுடைய மீளாய்வு மற்றும் பரிந்துரையை அடுத்து, பணிப்பாளர் சபை இடைக்கால நிதிக் கூற்றுக்களை வெளியிட முன்னர் அவற்றுக்கு அங்கீகாரம் அளிக்கின்றன.


இவ்வாண்டறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் நேர்த்தியானது எனவும், நிதிக் கூற்றுக்களின் புறநிலைத் தன்மை தொடர்பில் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பணிப்பாளர்கள், நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொறுப்பைக் கொண்டவர்களாக இருப்பதுடன், இலங்கையின் கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளராகச் செயற்படுவதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான மீளாய்வுகள், சோதனைகள் என்பன மீது, தமது சுயாதீன கணக்காய்வுக் கருத்தை வெளிப்படுத்துவதற்குரிய ஒவ்வொரு நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளார்.

வங்கியின் நிதிக் கூற்றுக்கள், வங்கியின் பிரதம நிதி அதிகாரி மற்றும் பிநிஅ/பொது முகாமையாளர், கணக்குகள் தயாரிப்பதற்குப் பொறுப்புடைய அதிகாரிகள் ஆகியோரினால் நிறுவன சட்டத்தின் பிரிவு 150(1) மற்றும் 151 க்கு அமைவாக சான்றுபடுத்தப்பட்டுள்ளது. வங்கியின் நிதிக் கூற்றுக்கள் இரண்டு பணிப்பாளர்களினால் கையொப்பமிடப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள், தமது சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கைக்கு அமைவாக, நிதிநிலைக் கூற்றுத் தயாரிக்கப்பட்ட திகதியன்று இருந்தவாறு வங்கிக்கு வரவேண்டிய மற்றும் வங்கிக்குச் செலுத்த வேண்டிய அனைத்து நியதிச்சட்ட ரீதியான கொடுப்பனவுகள் தொடர்பிலும் அவை செலுத்தப்பட்டது என்ற அடிப்படையில் திருப்தியடைகின்றனர்.

பணிப்பாளர்கள் தமது பார்வையில் இக்கூற்றில் குறித்துரைக்கப்பட்ட வகையில் தமது பொறுப்புக்களைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதுகின்றனர்.

சபையின் கட்டளைப்படி,



மனோரி நாரங்கொட
கம்பனி செயலாளர்
2023 மே 24
கொழும்பு

# ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கை - 2022 இல் இலங்கையின் எச்டீஎப்சீ வங்கியின் பணிப்பாளர் சபையின் சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை

Ernst & Young
Chartered Accountants
201 De Saram Place
P.O. Box 101
Colombo 10
Sri Lanka

Tel : +94 11 2463500
Fax Gen : +94 11 2697369
Tax : +94 11 5578180
eysl@lk.ey.com
ey.com

## அறிமுகமும் ஈடுபாட்டின் எல்லையும்

இலங்கையின் எச்டீஎப்சீ வங்கியின் முகாமைத்துவம் (வங்கி), 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கையில் (அறிக்கை) உள்ள, பின்வரும் விடயங்கள் பற்றி உறுதிப்பாடு ஒன்றை வழங்குமாறு எம்மை அமர்த்தியது.

- இவ்வறிக்கையின் 83 - 89 வரையான பக்கங்களில் உள்ள நிதி மூலதன முகாமைத்துவம் மீதான தகவல்கள் பற்றிய நியாயமான உறுதிப்பாடு.
- இவ் அறிக்கையின் 83 - 89 வரையான பக்கங்களில் சமர்ப்பிக்கப்பட்ட ஐகுசுளு அறக்கட்டளை / சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடும் பேரவை (IIRC) மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்பு (<IR> கட்டமைப்பு) ஆகியவற்றுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட மூலதனம் தொடர்பான முகாமைத்துவம் (நிதி மூலதனம் அல்லாத), பங்குதாரர்களின் ஈடுபாடு, வணிக மாதிரி, மூலோபாயம், நிறுவன கண்ணோட்டம் மற்றும் வெளிவாரி சூழலியல் தோற்றப்பாடு போன்ற தகவல்கள் பற்றிய வரையறுக்கப்பட்ட உறுதிப்பாடு.

## எமது பணிக்கான அடிப்படையும் உறுதிப்பாட்டின் மட்டமும்

இலங்கையின் உறுதிப்பாடு, ஈடுபாடு (SLSAE 3000) (திருத்தப்பட்ட) "கணக்காய்வு அல்லது வரலாற்று நிதித் தகவல்கள் அல்லாத உறுதிப்பாட்டு ஈடுபாடுகள்" மீதான இலங்கையின் தராதரத்திற்கு அமைவாக எமது செயற்பாடு நியாயமானதும், வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டையும் அளிக்கிறது.

இந்த வரையறுக்கப்பட்ட உறுதிப்பாடு, ஈடுபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்ட மூலதன முகாமைத்துவத் தகுதி ஐகுசுளு அறக்கட்டளை / சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடும் பேரவை (IIRC) மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடும் கட்டமைப்பு (<IR> கட்டமைப்பு) என்பனவற்றில் தரப்பட்ட வழிகாட்டி எண்ணக்கருக்கள் மற்றும் உள்ளடக்கக் கூறுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது.

எமது ஈடுபாடு வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டையும், நியாயமான உறுதிப்பாட்டையும் அளிக்கின்து. ளுடுளுயுறு 3000 க்கு (புதுப்பிக்கப்பட்ட) அமைவாக நடத்தப்பட்ட நியாயமான உறுதிப்பாட்டுடன், ஈடுபாட்டின் எல்லை பொருளளவில் வரையறுக்கப்பட்ட உறுதி ஈடுபாட்டுடன் குறைந்தளவில் உள்ளது. மேலும், இதனைத் தொடர்ந்து ஒரு நியாயமான உறுதி ஈடுபாட்டில் இனங்காணக்கூடிய அனைத்து முக்கியமான விடயங்களையும் பற்றி எமக்கு அறிவதற்கான வாய்ப்பு ஒன்று இல்லை.

## அறிக்கைக்கான வங்கியின் பொறுப்பு தொடர்பான முகாமைத்துவம்

இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் கூற்றுக்களைத் தயாரிக்கவும், சமர்ப்பிக்கவும், சுய பிரகடனத்தை மேற்கொள்ளவும், வங்கியின் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பு உள்ளது. அத்துடன், ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடும் கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடும் செயன்முறையை ஆதரிக்கத் தேவையான போதுமான பதிவுகளையும் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் பேணும் பொறுப்பும் முகாமைத்துவத்திடம் உள்ளது,

## ஏர்னஸ்ட் அன்ட் யங் உடைய பொறுப்புகள்

ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடும் கட்டமைப்பில் (<IR> கட்டமைப்பு) தரப்பட்டுள்ள வழிகாட்டி கோட்பாடுகள் மற்றும் உள்ளடக்கக் கூறுகளுக்கு அமைவாக, இவ் அறிக்கை தயாரிக்கப்படவில்லை என்பதை நம்புவதற்கு ஏதேனும் விடயம் எமக்குக் கிடைத்துள்ளதா என்பது பற்றி முடிவு ஒன்றை வெளிப்படுத்துவதே எமது பொறுப்பாகும்.

இக்குறிப்பிட்ட அறிக்கையானது, 2023 பெப்ரவரி 23 ஆம் திகதியிடப்பட்ட எமது ஈடுபாட்டுக் கடிதத்திற்கு அமைவாக, வங்கிக்காகவே தயாரிக்கப்பட்டது. நாம் வங்கி தவிர்ந்த வேறு எவரேனும் ஆள் தொடர்பில் இவ்வறிக்கையில் உள்ள ஏதேனும் விடயங்கள் மீது எந்தவொரு பொறுப்பு அனுமானத்தையும் நாம் ஏற்க மாட்டோம். எமது நோக்கம், இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டதற்கு அமைவாக மாத்திரமே உள்ளது, எமது ஈடுபாட்டை நடத்துகையில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளிப்படுத்தப்பட்ட தொழில்முறை ரீதியான கணக்காளர்களுக்கான ஒழுக்க நெறிக் கோட்பாட்டின் சுயாதீன தேவைப்பாடுகளுக்கு அமைவாக உள்ளது.

Partners: H M A Jayesinghe FCA FCMA, R N de Saram ACA FCMA, Ms. N A De Silva FCA, W R H De Silva FCA ACMA, Ms. Y A De Silva FCA, Ms. K R M Fernando FCA ACMA, N Y R L Fernando ACA, W K B S P Fernando FCA FCMA, Ms. L K H L Fonseka FCA, D N Gamage ACA ACMA, A P A Gunasekera FCA FCMA, A Herath FCA, D K Hulangamuwa FCA FCMA LLB (London), Ms. G G S Manatunga FCA, A A J R Perera ACA ACMA, Ms. P V K N Sajeewani FCA, N M Sulaiman ACA ACMA, B E Wijesuriya FCA FCMA, C A Yalagala ACA ACMA

Principals: W S J De Silva BSc (Hons)-MIS MSc-IT, G B Goudian ACMA, D L B Karunathilaka ACMA, Ms. P S Paranavitane ACA ACMA LLB (Colombo), T P M Ruberu FCMA FCCA

A member firm of Ernst & Young Global Limited

# ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கை - 2022 இல் இலங்கையின் எச்டீஎப்சீ வங்கியின் பணிப்பாளர் சபையின் சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை

நிதிக்கூற்று தொடர்பான கணக்காய்வுகளையும், மீளாய்வுகளையும் மேற்கொள்ளும் கணக்காய்வு நிறுவனங்களின் தரத்தைக் கட்டுப்படுத்தும் தரக்கட்டுப்பாடு தொடர்பான சர்வதேச தராதரம் மற்றும் ஏனைய உறுதிப்பாடு மற்றும் தொடர்புபட்ட சேவை ஈடுபாடுகள் என்பனவற்றைப் பிரயோகித்திருப்பதுடன், நெறிமுறையான தேவைப்பாடுகள், தொழில்முறைத் தராதரங்கள் மற்றும் பொருத்தமான சட்ட ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் போன்ற நடபடி முறைகளையும், ஆவணப்படுத்தல் தொடர்பான கொள்கைகள் உள்ளடங்கலாக விரிவான தரக்கட்டுப்பாட்டு முறைமை ஒன்றைப் பேணுகிறது.

## முக்கியமான உறுதிப்பாட்டு நடபடி முறைமைகள்

எமது உறுதிப்பாட்டு முடிவுகளை ஆதரிப்பதற்கு, போதுமான சான்றுகளை வழங்குவற்கு, அவசியமான தகவல்களையும் விளக்கங்களையும் பெறுவதற்கு நாம் திட்டமிட்டு, எமது நடபடி முறைகளை நிறைவேற்றியுள்ளோம். நாம் அத்தகைய ஏனைய நடைமுறைகளை தேவையான சூழ்நிலைகளில் அவசியம் எனக் கருதும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தியுள்ளோம்.

முக்கியமான உறுதிப்படுத்தல் நடைமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்

- ஒருங்கிணைந்த அறிக்கையிடல் கட்டமைப்பில் தரப்பட்டுள்ள வழிகாட்டிக் கோட்பாடுகள் மற்றும் உள்ளடக்கக் கூறுகளுக்கு எதிராக ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கையின் உள்ளடக்கத்தை ஒப்பிட்டுப் பார்ப்போம்.
- ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள், நிதி மூலதனக் கூறு பற்றிய தகவல் என்பன கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் இருந்து முறையாகப் பெறப்பட்டவையா என்பது பரீட்சிக்கப்பட்டது.
- ஒருங்கிணைந்த அறிக்கைக்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகள், ஆளுகைக் கட்டமைப்பு, அறிக்கையிடும் செயன்முறை என்பனவற்றைப் புரிந்து கொள்வதற்கு, முக்கியமான முகாமைத்துவ ஆட்கள் மற்றும் பொருத்தமான பணியாட்களுடன் நேர்காணல்கள் இடம்பெற்றன.
- பங்குதாரர்களுக்கு முக்கியமான விடயங்கள் எவை என்பதைத் தீர்மானித்தல், நிறுவனம் எவ்வாறு பெறுமதியை உருவாக்குகிறது, வெளிப்புறச் சூழல், மூலோபாயம், உறுப்பினர்களுக்கு முதலிடம் வழங்குவதற்கான அணுகுமுறைகள், ஆளுகை மற்றும் அறிக்கையிடல் என்பன உள்ளடங்கலாக, பொருத்தமான உள்ளகக் கொள்கைகளும், நடபடி முறைகளும் எவ்வாறு விருத்தி செய்யப்பட்டன என்பது பற்றிய விளக்கம் ஒன்று பெறப்பட்டது.
- நிறுவனத்தின் மூலோபாயம் பற்றிய விபரம் மற்றும் நிறுவனம் பெறுமதியை எவ்வாறு உருவாக்குகிறது, பங்குதாரர்களுக்கு முக்கியமான விடயங்கள் எவை, முகாமைத்துவம் ஒருங்கிணைந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் அவர்களுடைய புரிதல்களைத் துல்லியமாக வெளிப்படுத்துகிறதா என்பது பற்றிய விளக்கம் ஒன்று பெறப்பட்டது.
- ஒருங்கிணைந்த அறிக்கையின் உள்ளடக்கத்துடன், நிதியாண்டின் போது பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் கூட்டக் குறிப்புகள் ஒத்துப்போகிறதா என்பதை உறுதிப்படுத்தினோம்.
- இனங்காணப்பட்ட முக்கியமான அணுகுமுறைகளுக்கு எதிராக, ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட தரம்சார் மற்றும் அளவுசார் வெளிப்படுதல்களுடன் தொடர்புடைய துணைச் சான்றிதழ் பரீட்சிக்கப்பட்டது.
- உறுதி ஈடுபாட்டின் போது எம்மால் பெற்றுக்கொள்ளப்பட்ட முழுமையான அறிவுடன் ஒருசீராக ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கை முழுமையாக அமைந்துள்ளதா என்பதைப் பார்ப்பதற்கு அறிக்கைகள் முழுமையாக வாசிக்கப்பட்டன.

எமது நடபடி முறைகளின் இயல்புகளையும், அளவையும் தீர்மானிக்கையில், முகாமைத்துவத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறனை நாம் கருத்திற் கொண்ட போதிலும், எமது உறுதி ஈடுபாடு உள்ளகக் கட்டுப்பாடுகள் மீது உறுதிப்பாட்டைத் தரும் வகையில் வடிவமைக்கப்படவில்லை. எமது நடபடி முறைகள் மொத்த அளவைப் பரீட்சிப்பதையோ அல்லது தகவல் தொழில்நுட்ப முறைமைக்குள் வரும் தகவல்களைக் கணக்கிடவோ எந்தவொரு பரீட்சிக்கப்படும் கட்டுப்பாடுகளையும் அதனைச் செயற்படுத்தும் நடபடி முறைகளையும் உள்ளடக்கவில்லை.

## வரையறைகளும் கருத்திற் கொள்ளப்பட்ட விடயங்களும்


சமூக, இயற்கை, புலமைசார் மற்றும் புலமைச்சார் மூலதன முகாமைத்துவத் தரவு / தகவல் என்பன அவற்றின் தன்மை, தீர்மானம் எடுப்பதிலும், அத்தகைய தரவுகளைக் கணிப்பிடுவதிலும், மதிப்பிடுவதிலும் பயன்படுத்தப்பட்ட முறைமைகள் காரணமாக உள்ளார்ந்த மட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது.

மேலும், இவ்வறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்பார்க்கப்படும் தகவல்கள் பற்றிய அனுமானங்கள் மற்றும் அடைவு மட்டங்கள் பற்றி நாம் எந்த உறுதிப்பாடையும் வழங்கவில்லை.

## முடிவுரை

எமது நடபடி முறைகள், பெறப்பட்ட சான்றுகள் என்பவற்றின் அடிப்படையில் நாம் பின்வரும் முடிவுரைகளை வழங்குகின்றோம்.

- இவ்வறிக்கையின் 83 - 89வது பக்கங்களில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் செயற்திறன் தொடர்பான தகவல்கள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் இருந்து முறையாகப் பெறப்பட்டவையாகும்..
- பங்குதாரர்களின் ஈடுபாடு, வணிக மாதிரி, நிறுவனம் தொடர்பான பார்வை, வெளிப்புறச் சூழல் மற்றும் தோற்றப்பாடு தொடர்பாக இவ்வறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படவில்லை என நாம் நம்புவதற்கு எவ்விடயங்களும் இல்லை. அனைத்து முக்கியமான விடயங்கள் தொடர்பிலும், ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கையிடல் நடபடி முறைகளும், கொள்கைகளும் IFRS அறக்கட்டளை / சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடும் பேரவை (IIRC), ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடும் கட்டமைப்பு (<IR> குசயஅநறழசம) என்பவற்றுக்கு அமைவாக உள்ளது.



கொழும்பு

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை


ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE


මගේ අංකය
எனது இல.
My No. BAN/01/C/HDFC/1/22/28

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 22 May 2023

தலைவர்
இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் வாசகத்தின் படியிலான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் ("வங்கி") 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்குரிமையில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உட்பட முக்கிய கணக்கியல் கொள்கைகள் உள்ளடங்கலாக, நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பிரகாரம், எனது வழிகாட்டலுக்கு அமைய கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்தின்படி, ஒன்று சேர்க்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு, வங்கியின் நிதிநிலை பற்றிய உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருவதுடன், அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயற்திறன் மற்றும் காசுப் பாய்ச்சல்கள், இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக உள்ளன.


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க (SLAuSs) நான் கணக்காய்வினை மேற்கொண்டுள்ளேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழ், எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விளக்கப்பட்டுள்ளன. என்னால் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள், எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமையப் போதுமானதும், பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

## 1.3 முக்கிய கணக்காய்வு விடயங்கள்

முக்கிய கணக்காய்வு விடயங்கள் என்பது, ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதியின் போது, வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்வுக்கு மிக முக்கியமாக அமைந்த மற்றும் எனது தொழில்முறை ரீதியான தீர்ப்பை வழங்குவதற்கு அடிப்படையாக அமைந்தவையாகும். இவ்விடயங்கள், வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுச் சூழலில் முழுமையாகக் கருத்திற் கொள்ளப்பட்டதுடன், அவற்றின் மீதிருந்து என்னுடைய கணக்காய்வு அபிப்பிராயம் உருவாகியது. அத்துடன், இவ்விடயங்கள் தொடர்பில் நான் பிரத்தியேகமான அபிப்பிராயம் ஒன்றையும் வழங்கவில்லை.

| முக்கிய கணக்காய்வு விடயம் | முக்கிய கணக்காய்வு விடயம் எவ்வாறு கணக்காய்வினால் நிவர்த்தி செய்யப்பட்டது |
|---|---|
| **பதிவழிப்புச் செலவில் எடுத்துச் செல்லப்பட்ட நிதிச் சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக் கொடுப்பனவுகள் - கடன்களும் முற்பணங்களும்**<br><br>பதிவழிப்புச் செலவில் எடுத்துச் செல்லப்பட்ட நிதிச் சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக் கொடுப்பனவு - கடன்களும் முற்பணங்களும் குறிப்புகள் 3.டீ மற்றும் 3.ஊ யில் விபரிக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு அமைவாக முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டு குறிப்பு 17 இல் உள்ளவாறு அமைந்துள்ளது.<br><br>குழப்பகரமான கணிப்பீடுகள், தீர்ப்புகளின் அளவு, அனுமானங்களின் முக்கியத்துவம் மற்றும் அத்தகைய நிதிச் சொத்துக்களில் இருந்து பெறப்பட்ட, முகாமைத்துவம் எதிர்பார்க்கின்ற எதிர்கால காசுப் பாய்ச்சல்களை மதிப்பிடுவதுடன், தொடர்புபட்ட மதிப்பீட்டு அளவின் நிச்சயமற்ற தன்மை என்பன காரணமாக, இந்த முக்கியமான கணக்காய்வு விடயம் வலுக்குறைப்புக்கான ஏற்பாடு அறிக்கையிடப்பட்டுள்ளது. | பதிவழிப்புச் செலவில் எடுத்துச் செல்லப்பட்ட நிதிச் சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பீட்டுக் கொடுப்பனவின் போதுமான தன்மையைப் பூர்த்தி செய்கையில் - கடன்களும் முற்பணங்களும், எனது கணக்காய்வு நடபடி முறைகளில் பின்வரும் முக்கிய நடபடி முறைகளை உள்ளடக்குகின்றன.<br><br>எனது அறிக்கை, அது, வழங்கப்பட்ட திகதி வரை உள்ள சிறந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, கணக்கியல் கொள்கைகளுடனான சந்தைப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கான பதில்களை உள்ளடக்கிய, வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக் கொடுப்பனவுக் கணிப்பீடுகள் மற்றும் அடிப்படையான முறைமை என்பனவற்றுக்கு அமைவாக நான் மதிப்பீடு செய்துள்ளேன்.<br><br>• நான், உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுக்குறைப்பு மதிப்பீட்டுக்கு மேலாகக் கணிப்பிட்டுள்ளேன். இது, மேற்பார்வைக்கான அளவை மதிப்பீடு செய்தல், எதிர்பார்க்கப்பட்ட கடன் கொடுப்பனவுக் கொள்கைகளின் மீளாய்வு மற்றும் அங்கீகாரம் மற்றும் சபை மற்றும் முகாமைத்துவத்தின் நடபடி முறைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. |

| முக்கிய கணக்காய்வு விடயம் | முக்கிய கணக்காய்வு விடயம் எவ்வாறு கணக்காய்வினால் நிவர்த்தி செய்யப்பட்டது |
|---|---|
| முகாமைத்துவத்தினால் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக் கொடுப்பனவுகளை மதிப்பீடு செய்கையில், பயன்படுத்தப்பட்ட முக்கியமான தீர்ப்பு, மதிப்பீடுகள், அனுமானங்கள் என்பன கீழே தரப்பட்டவைகளில் உள்ளடங்குகின்றன.<br><br>• முகாமைத்துவம், தற்போதைய பொருளாதார சுருக்கத்தைக் கூட்டிணைத்துள்ளது.<br>• முன்னோக்கிய பார்வையுடனான தகவல்களைக் கூட்டிணைக்கையில், அத்தகைய எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சல்கள், தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்கால வெளிவாரி காரணிகள், பலதரப்பட்ட பொருளாதார சூழ்நிலைகள் அத்தகைய ஒவ்வொரு சூழ்நிலைகளுக்கும் நிகழ்தகவு அடிப்படையில் தீர்மானிக்கப்படும் விடயங்கள் என்பனவற்றைப் பிரதிபலிக்கின்றன. | • வங்கியினுடைய மூல ஆவணங்கள் மற்றும் கணக்கியல் பதிவுகளில் உள்ள விபரங்களுடன் உடன்பட்டதன் மூலம், நான் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக் கணிப்பீட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட, அடிப்படையான தரவுகளை முழுமையாகவும், துல்லியமாகவும் பரீட்சித்துள்ளேன்.<br>• மேலே தரப்பட்டுள்ளவைகளுக்கு மேலதிகமாக, கீழே தரப்பட்ட நடபடி முறைகளும் பின்பற்றப்பட்டுள்ளன.<br><br>**எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்காக, கடன்களும் முற்பணங்களும் தனிப்பட்ட அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.**<br><br>- கடன் தர மதிப்பீடுகளின் நியாயத்தன்மையை நான் பதிவு செய்துள்ளேன்.<br>- அடிப்படையான, தனிப்பட்ட, எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக் கணக்கீடுகளின் கணித துல்லியத் தன்மையை நான் பரீட்சித்துள்ளேன்.<br>- நான், எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்கு பயன்படுத்தப்பட்ட முக்கிய உள்ளீடுகளின் நியாயத் தன்மையை மதிப்பீடு செய்துள்ளேன். இங்கு, தற்போதைய பொருளாதார சுருக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய கணிப்பீடுகள் கைத்தொழில் துறைகளின் மேலெழுந்த இடர்கள், கடன் சலுகைக் காலம், மற்றும் பிணையங்களை மீளப் பெறுவதற்கான வழக்கு நடவடிக்கைகளின் நிலைமை என்பவற்றுடன் தொடர்புடைய காசுப் பாய்ச்சல், எதிர்வுகூறல்களின் பெறுமதிக் காலம் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. நிதிச் சொத்துக்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு ஒரு கூட்டான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. |

| முக்கிய கணக்காய்வு விடயம் | முக்கிய கணக்காய்வு விடயம் எவ்வாறு கணக்காய்வினால் நிவர்த்தி செய்யப்பட்டது |
|---|---|
| | **எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கியமான உள்ளீடுகளையும், கணிப்பீடுகளையும் நான் கணிப்பிட்டேன்.**<br>• முகாமைத்துவம், எதிர்கால காசுப் பாய்ச்சல்களை மதிப்பிடுகையில், பயன்படுத்தப்பட்ட தீர்ப்புகள், அனுமானங்கள், மதிப்பீடுகள் என்பன அடிப்படையான முறைமையைப் பயன்படுத்தியுள்ளனவா என்பதையும், அவை, நியாயமானதா என்பதையும் மதிப்பீடு செய்தேன். எனது ஆய்வு இருக்கக்கூடிய சந்தைத் தரவு, கருத்திற் கொள்ளப்பட்ட பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் அத்தகைய ஒவ்வொரு சூழ்நிலைகளும் ஏற்படக்கூடிய நிகழ்தகவு என்பனவற்றின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட முன்னோக்கிய தகவல்களின் நியாயத்தன்மையின் மதிப்பீடும் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br>• குறிப்புகள் 3.B, 3.C.vi, 8 மற்றும் 17 என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் வெளிப்பாடுகளோடு தொடர்புபட்ட விடயங்களின் போதுமான தன்மையை மதிப்பீடு செய்துள்ளேன். |

## 1.4 வங்கியின் 2022 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

வங்கியின் 2022 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள், அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், நிதிக் கூற்றுக்களையும், என்னுடைய கணக்காய்வு அறிக்கையையும் அது உள்ளடக்காது. இந்தக் கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர், அவ்விடயங்கள் உள்ளடக்கப்படும் என நான் எதிர்பார்க்கின்றேன். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புடையது.

நிதிக்கூற்றுக்கள் மீதான என்னுடைய அபிப்பிராயம், ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன், அவற்றின் மீது எந்தவிதமான உத்தரவாத முடிவுகளையும் நான் வெளிப்படுத்த மாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னுடைய கணக்காய்வுடன் தொடர்புபடுகையில், மேலே கூறப்பட்ட ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுகின்ற போது, அவற்றை வாசிப்பதற்கு நான் பொறுப்புடையவனாகின்றேன். மற்றும் அவ்வாறு வாசிக்கப்படும் போது, அத்தகைய ஏனைய தகவல், நிதிக் கூற்றுக்களுடன் பொருளளவில் முரண்படுகின்தா என்பதை அல்லது கணக்காய்வு தொடர்பான என்னுடைய அறிவு அல்லது வேறு வகையில் பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை நான் கருத்திற் கொள்வேன்.

நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை நான் வாசிக்கையில், முக்கியமான பிறள் கூற்றுக்கள் காணப்படுகின்றன என நான் முடிவு செய்வேனாயின், அவற்றைச் சீர்திருத்துவதற்காக, இவ்விடயங்கள் பற்றி ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு அறிக்கையிடுமாறு நான் தேவைப்படுத்தப்பட்டுள்ளேன்.

முக்கியமான மேலதிக திருத்தப்படாத பிறள் கூற்றுக்கள் இருக்குமாயின், அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பாராளுமன்றத்திற்கான என்னுடைய அறிக்கையில் உள்ளடக்கப்படுவதுடன், உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் விவாதத்திற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் ஆளுகைக்குப் பொறுப்பானவர்களின் பொறுப்பு

இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக, உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருப்பதுடன், அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டை முகாமைத்துவம் தீர்மானித்தல், நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் அவை மோசடி அல்லது பிழை காரணமாக, முக்கியமான பிறழ் கூற்றுக்களில் இருந்து தவிர்க்கப்பட்டுள்ளது என்பதைத் தீர்மானிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில், முகாமைத்துவம், வங்கியின் தொடர்ந்து செல்லும் தகைமை, வெளிப்படுத்தல், ஏற்புடைய இடங்களில் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு என்பவற்றை மதிப்பீடு செய்வதற்குப் பொறுப்புடையதாகும். மேலும், முகாமைத்துவம், வங்கியைக் கலைப்பதற்கோ அல்லது செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கோ அல்லது மேற்கொள்வதைத் தவிர வேறு வழிகள் இல்லை போன்ற சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் கணக்கியல் நோக்கங்களுக்காக தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவைப் பயன்படுத்த வேண்டும்.

ஆளுகைக்குப் பொறுப்பானவர்கள், வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்யும் கடப்பாட்டை உடையவர்கள்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16(1) க்கு அமைவாக, வங்கியின வருடாந்த மற்றும் காலாந்தர நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு, வங்கி அனைத்து அதன் வருமான, செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றுடன் தொடர்புடைய முறையான புத்தகங்களையும், பதிவுகளையும் பேண வேண்டும் எனத் தேவைப்படுத்துகிறது.

## 1.6 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாகக் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக எழுகின்ற முக்கியமான பிறழ் கூற்றில் இருந்து, நிதிக் கூற்றுக்கள் முழுமையாகத் தவிர்க்கப்பட்டுள்ளதா என்பது பற்றி நியாயமான உத்தரவாதம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதும், அத்துடன், எனது கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குவதும் எனது இலக்காகும். நியாயமான உத்தரவாதம் என்பது, உயர்மட்ட அடிப்படையிலான உத்தரவாதமாக அமையும். எனினும், இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக நடத்தப்பட்ட கணக்காய்வு, எப்போதும் ஒரு முக்கியமான பிறழ் கூற்றைக் கண்டுபிடிக்கும் என்ற உத்தரவாதத்தை வழங்க முடியாது. மோசடி அல்லது தவறினது தனிப்பட்ட அல்லது ஒட்டுமொத்த செல்வாக்குக் காரணமாக, அளவு ரீதியான, தவறான அறிக்கையிடல் ஏற்படக் கூடியதுடன், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார ரீதியான தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் என நியாயமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் நடுநிலையானதாகவும், துல்லியமாகவும், இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக, நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய முக்கியமான பிறழ் கூற்று தொடர்பான இடர்களை அடையாளங் காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல், அத்தகைய இடர்களுக்குப் பதிலளிக்கின்ற கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்தலும், நிறைவேற்றுதலும் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமைந்த, போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடி காரணமாக எழுகின்ற ஒரு முக்கியமான பிறழ்கூற்றைக் கண்டறியாமல் விடுவது, தவறு காரணமாக எழுகின்ற பிறழ் கூற்றைவிட அபாயகரமானதாகும். ஏனெனில், மோசடி, கூட்டு சதி, மோசடி, வேண்டுமென்றே மேற்கொள்ளும் செய்யாமைகள், பிழையான பிரதிநிதித்துவங்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக அமையலாம்.
- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் தயாரிப்பதற்காக வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வொன்று பெறப்பட்ட போதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் பற்றிய கருத்தொன்றை வெளியிட உத்தேசிக்கவில்லை.
- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு முன்மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்தல்.
- பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலும், கணக்கியல் தொடர்பாக நிறுன தொடர்ச்சி அடிப்படையை முகாமைத்துவம் பயன்படுத்தியதன் பொருத்தப்பாட்டின் மீது வங்கியின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு மீது குறிப்பிடத்தக்களவு சந்தேகம் எழக்கூடிய நிலைமைகள் அல்லது அத்தகைய சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய தொடர்புபட்ட சம்பவங்களில் ஒரு முக்கியமான நிச்சயமற்ற தன்மை நிலவுகிறதா என்பது பற்றி முடிவு செய்தல். முக்கியமான, நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு என்னுடைய கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும், அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமற்றவையாக இருப்பின், என்னுடைய அபிப்பிராயத்தை மெருகூட்ட வேண்டும். என்னுடைய முடிவுகள், எனது கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட்ட திகதி வரை, பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் ஏற்படுகின்ற சூழ்நிலைகள் அல்லது நிலைமைகள், நிறுவன தொடர்ச்சிக் கொள்கையை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம் வங்கியைப் பாதிக்கலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பீடு செய்தல், அத்துடன், நிதிக் கூற்றுக்கள் நியாயமான சமர்ப்பணத்தை அடையக்கூடிய வகையில், அடிப்படையான பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளைப் பிரதிபலிக்கின்றதா என்பதைத் தீர்மானித்தல்.

என்னுடைய கணக்காய்வின் போது, என்னால் கண்டறியப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான ஏதேனும் முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கலாக, ஏனைய விடயங்களுடன் முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்களை ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (a) வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின்படி, நான் கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களையும், விளக்கங்களையும் பெற்றுக்கொண்டதுடன், எனது கணக்காய்வில் இருந்து தோன்றுகின்ற வகையில் வங்கியினால் முறையான கணக்கியல் பதிவுகள் பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின்படி சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின்படி கடந்த வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் அனைத்துப் பரிந்துரைகளும் உள்ளடங்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளினடிப்படையில், முக்கியமான விடயங்களுக்கு வரையறுக்கப்படுவதினுள் பின்வரும் வெளிப்படுத்தலை மேற்கொள்ளக் கூடிய எதுவும் எனது அவதானிப்புக்குட்படவில்லை:

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(d) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், குறித்ததொரு எழுத்துமூலமான சட்டமொன்றுக்கு அல்லது வங்கியின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்ட வேறேதேனும் பொது அல்லது விசேட கட்டளைகளுடன் இணங்காது செயற்பட்டுள்ளது என வெளிப்படுத்துதல்:

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(f) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, வங்கி, ஏதேனும் ஏற்புடைய எழுத்துமூலமான சட்டத்திற்கு மற்றும் பொது மற்றும் வங்கியை ஆளுகின்ற அமைப்பினால் வழங்கப்பட்ட விசேட வழிகாட்டிகளுடன் இணங்கி நடக்கவில்லை எனக் கூறுவதற்கு,

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(g) வாசகத்தின் பிரகாரம், வங்கி அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை எனக் கூறுவதற்கு,

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(h) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், வங்கியின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் மற்றும் பயனுள்ள விதத்திலும் உரிய காலவெல்லையினுள் குறித்த சட்டதிட்டங்களுக்கமைவாக, கொள்வனவு செய்து பயன்படுத்தப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை எனக் கூறுவதற்கு

ஒப்பம்



டப்ளியூ. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

# இலாப அல்லது நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானம்

| 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான விபரம் | குறிப்புகள் | 2022 ரூபா | 2021 ரூபா |
|---|---|---|---|
| மொத்த வருமானம் | 1 | **8,877,659,343** | 7,004,064,498 |
| வட்டி வருமானம் | 2 | **8,425,317,129** | 6,612,492,042 |
| வட்டி செலவுகள் | 3 | **(5,679,311,145)** | (3,555,954,803) |
| தேறிய வட்டி வருமானம் | 4 | **2,746,005,984** | 3,056,537,238 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 5 | **352,692,495** | 342,560,962 |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | | **352,692,495** | 342,560,962 |
| இலாப அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கருவிகளில் இருந்து பெறப்பட்ட தேறிய (நட்டம்) | 6 | **-** | - |
| ஏனைய தொழிற்படு வருமானம் (தேறிய) | 7 | **99,649,720** | 49,011,494 |
| மொத்த தொழிற்படு வருமானம் | | **3,198,348,199** | 3,448,109,695 |
| கழி: பெறுமதி குறைப்புச் செலவுகள் | 8 | **320,306,328** | 296,222,866 |
| நிகர தொழிற்படு வருமானம் | | **2,878,041,871** | 3,151,886,829 |
| கழி: தொழிற்பாட்டுச் செலவுகள் | | | |
| ஆளணிச் செலவுகள் | 9 | **1,544,203,623** | 1,387,303,919 |
| தேய்மானமும் பதிவழிப்புச் செலவுகளும் | 10 | **185,446,473** | 161,698,215 |
| ஏனைய செலவுகள் | 11 | **536,426,959** | 404,338,232 |
| மொத்த தொழிற்பாட்டு செலவுகள் | | **2,266,077,055** | 1,953,340,366 |
| நிதிச் சேவைகள் மீதான வரிக்கு முன்னரான தொழிற்படு இலாபம் | | **611,964,816** | 1,198,546,463 |
| கழி: நிதிச் சேவைகள் மீதான வரி | 12 | **309,231,115** | 320,225,506 |
| வருமான வரிக்கு முன்னரான இலாபம் | | **302,733,702** | 878,320,957 |
| கழி: வருமான வரி செலவுகள்/(மீள் திரும்பிய) | 13 | **(23,591,698)** | 331,033,614 |
| வருடத்திற்கான இலாபம் | | **326,325,400** | 547,287,343 |
| இலாபங்கள் மீதான ஒரு பங்கிற்குரிய வருமானங்கள் | | | |
| ஒரு சாதாரண பங்கிற்குரிய அடிப்படை வருமானம் ரூ. | 14.1 | **5.04** | 8.46 |
| ஒரு சாதாரண பங்கிற்குரிய நீர்த்த வருமானம் | 14.2 | **5.04** | 8.46 |

| 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான விபரம் | குறிப்புகள் | 2022 ரூபா | 2021 ரூபா |
|---|---|---|---|
| வருடத்திற்கான இலாபம் | | **326,325,400** | 547,287,343 |
| வருமானக் கூற்றில் மறுவகுப்பாக்கம் செய்யப்படாத விடயங்கள் | | | |
| பணிக்குப் பின்னரான அனுகூலக் கடப்பாடுகளின் மீள் மதிப்பீடு | 29.1 | **42,922,250** | 62,139,268 |
| கழி: வருமானக் கூற்றுக்கள் மறுவகுப்பாக்கம் செய்யப்படாத விடயங்களுடன் தொடர்புடைய வரிச் செலவு | 23 | **(6,356,568)** | (21,745,733) |
| மொத்தம் | | **36,565,682** | 40,393,535 |
| வருடத்திற்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி | | **36,565,682** | 40,393,535 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | **362,891,082** | 587,680,878 |
| மொத்தம் | | **362,891,082** | 587,680,878 |

பக்கங்கள் 209 தொடக்கம் 266 வரையான வங்கியின் நிதிக் கூற்றுக்களின் ஒரு பாகமாக அமைகின்ற தொடர்புபட்ட குறிப்புகளுடன் சேர்த்து நிதிக் கூற்றுக்கள் வாசிக்கப்படல் வேண்டும்.

# நிதிநிலைமைக் கூற்று

| 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான விபரம் | குறிப்புகள் | 2022 ரூபா | 2021 ரூபா |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 15 | **339,730,442** | 258,595,867 |
| வங்கியில் உள்ள இருப்புகள் | 16 | **29,572,589** | 8,138,459,719 |
| பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் | | | |
| - கடன்களும் முற்பணங்களும் | 17 | **42,629,818,803** | 41,836,921,951 |
| - கடன் அல்லது ஏனைய கருவிகள் | 18 | **17,150,937,475** | 10,570,350,749 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 19 | **242,996,260** | 224,033,796 |
| அருவச் சொத்துக்கள் | 20 | **143,203,631** | 125,024,298 |
| சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை | 21 | **367,323,891** | 386,744,906 |
| முதலீட்டு ஆதனங்கள் | 22 | **1,164,500,000** | 1,065,000,000 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள் | 23 | **409,230,375** | 126,047,737 |
| ஏனைய சொத்துக்கள் | 24 | **404,744,337** | 232,412,031 |
| மொத்த சொத்துக்கள் | | **62,882,057,803** | 62,963,591,055 |
| பொறுப்புக்கள் | | | |
| வங்கிக்கு நிலுவையாக உள்ள | 25 | **1,053,087,537** | 2,103,172,867 |
| பதிவழிப்புச் செலவில் நிதிப் பொறுப்புக்கள் | | | |
| - வைப்பாளர்களுக்கு நிலுவையாக உள்ளவை | 26 (a) | **50,245,156,635** | 49,813,326,205 |
| - ஏனைய பெறுநர்களுக்கு நிலுவையாக உள்ளவை | 26 (b) | **1,376,777,708** | 1,282,597,452 |
| வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள் | 27 | **1,423,965,999** | 1,422,978,101 |
| குத்தகைப் பொறுப்பு | 28 | **379,693,095** | 388,627,838 |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | 29 | **846,978,305** | 771,616,051 |
| நடைமுறை வரி பொறுப்புகள் | 30 | **346,515,000** | 316,138,779 |
| ஏனைய பொறுப்புகள் | 31 | **212,226,449** | 230,367,762 |
| மொத்தப் பொறுப்புகள் | | **55,884,400,728** | 56,328,825,053 |
| கடன் மூலதனம் | | | |
| நிரந்தர முறி | 32 | **281,250,000** | 281,249,999 |
| பங்குரிமை | | | |
| குறித்துரைக்கப்பட்ட மூலதனம் அல்லது ஒதுக்கப்பட்ட மூலதனம் | 33 | **962,092,936** | 962,092,936 |
| நியதிச்சட்ட ரீதியான ஒதுக்க நிதி | 34 | **288,689,120** | 272,372,850 |
| தக்கவைக்கப்பட்ட வருமானங்கள் | 35 | **5,007,867,633** | 4,730,491,044 |
| ஏனைய ஒதுக்குகள் | 36 | **457,757,386** | 388,559,169 |
| மொத்த பங்குதாரர்களின் பங்குரிமை | | **6,716,407,076** | 6,353,515,999 |
| கட்டுப்பாடு செலுத்தாத வட்டிகள் | | **-** | - |
| மொத்த பங்குரிமை | | **6,716,407,076** | 6,353,515,999 |
| மொத்த பங்குரிமையும் பொறுப்புக்களும் | | **62,882,057,803** | 62,963,591,055 |
| ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள் ரூபா | | **103.79** | 98.18 |
| தற்செயலான பொறுப்புகளும் கடப்பாடுகளும் | 37 | **204,944,084** | 650,024,574 |
| பதிவுக் குறிப்பு தகவல் | | | |
| பணியாட்களின் எண்ணிக்கை | | **588** | 614 |
| கிளைகளின் எண்ணிக்கை | | **39** | 39 |

பக்கங்கள் 213 தொடக்கம் 266 வரையான தரப்பட்ட முக்கியமான கணக்கியல் கொள்கைகளும், குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பாகமாக அமையும். இந்த நிதிக் கூற்றுக்கள், இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு (LKAS/SLFRS) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

அநுர ஹெட்டியாராச்சி
பிரதம நிதி அதிகாரி

நிஷாமன் கருணாபால
பிநிஅ/பொது முகாமையாளர்

பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்ட நிதிக் கூற்றுக்களின் தயாரிப்புக்கும், சமர்ப்பணத்திற்கும் பணிப்பளர்கள் சபை பொறுப்பாகும்.

டீ.சூசைப்பிள்ளை
தலைவர்
2023 மே 17
கொழும்பு

சிரேஷ்ட பேராசிரியர் ஏ.ஜயமஹா
பணிப்பாளர்

மனோரி நாரங்கொட
கம்பனி செயலாளர்

# பங்குரிமை மாற்றம் தொடர்பான கூற்று

| 2022.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வங்கி விபரம் | குறிப்பு | வாக்குரிமைப் பங்குகளின் எண்ணிக்கை | குறித்து ரைக்கப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய விரிவான வருமன ஒதுக்கம் | தக்க வைக்கப்பட்ட வருமானங்கள் | ஏனைய ஒதுக்குகள் | மொத்தம் | கட்டுப்பாடு செலுத்தாத வட்டி | மொத்தப் பங்குரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.01.2021 இல் மீதி | | 64,710,520 | 962,092,936 | 245,008,483 | (122,981,558) | 4,281,474,429 | 416,418,461 | 5,782,012,751 | - | 5,782,012,751 |
| வருடத்தற்கான இலாபம்/ (நட்டம்) | 35 | - | - | - | - | 547,287,343 | - | 547,287,343 | - | 547,287,343 |
| ஏனைய விரிவான வருமானம் (தேறிய வரி) | 30 | - | - | - | 40,393,535 | - | - | 40,393,535 | - | 40,393,535 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | - | - | 40,393,535 | 547,287,343 | - | 587,680,878 | - | 587,680,878 |
| காலப்பகுதியின் போது ஒதுக்கங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் | 33-36 | - | - | 27,364,367 | - | (82,093,102) | 54,728,734 | - | - | - |
| செலுத்தப்பட்ட பங்குலாபம் | | - | - | - | - | (16,177,630) | - | (16,177,630) | - | (16,177,630) |
| பங்குரிமைதாரர்களுடன் மேற்கொண்ட மொத்த பரிவர்த்தனைகள் | | - | - | 27,364,367 | - | (98,270,732) | 54,728,734 | (16,177,630) | - | (16,177,630) |
| 31.12.2021 இல் மீதி | | 64,710,520 | 962,092,936 | 272,372,850 | (82,588,024) | 4,730,491,041 | 471,147,196 | 6,353,515,999 | - | 6,353,515,999 |

| வங்கி விபரம் | குறிப்பு | வாக்குரிமைப் பங்குகளின் எண்ணிக்கை | குறித்து ரைக்கப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய விரிவான வருமன ஒதுக்கம் | தக்க வைக்கப்பட்ட வருமானங்கள் | ஏனைய ஒதுக்குகள் | மொத்தம் | கட்டுப்பாடு செலுத்தாத வட்டி | மொத்தப் பங்குரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.01.2022 இல் மீதி | 34-36 | 64,710,520 | 962,092,936 | 272,372,850 | (82,588,024) | 4,730,491,041 | 471,147,196 | 6,353,515,999 | - | 6,353,515,999 |
| வருடத்தற்கான இலாபம்/ (நட்டம்) | 35 | - | - | - | - | 326,325,395 | - | 326,325,395 | - | 326,325,395 |
| ஏனைய விரிவான வருமானம் (தேறிய வரி) | 30 | - | - | - | 36,565,682 | - | - | 36,565,682 | - | 36,565,682 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | - | - | - | 36,565,682 | 326,325,395 | - | 362,891,077 | - | 362,891,077 |
| காலப்பகுதியின் போது ஒதுக்கங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் | 34-36 | - | - | 16,316,270 | - | (48,948,810) | 32,632,540 | - | - | - |
| செலுத்தப்பட்ட பங்குலாபம் | | - | - | - | - | - | - | - | - | - |
| பங்குரிமைதாரர்களுடன் மேற்கொண்ட மொத்த பரிவர்த்தனைகள் | | - | - | 16,316,270 | - | (48,948,810) | 32,632,540 | - | - | - |
| 31.12.2022 இல் மீதி | | 64,710,520 | 962,092,936 | 288,689,120 | (46,022,341) | 5,007,867,625 | 503,779,736 | 6,716,407,076 | - | 6,716,407,076 |

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான விபரம் | குறிப்புகள் | வங்கி 2022 ரூபா | வங்கி 2021 ரூபா |
|---|---|---|---|
| தொழிற்படு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்கள் | | | |
| பெறப்பட்ட வட்டி | 02,16,17,18 | **8,858,215,441** | 6,270,222,555 |
| செலுத்தப்பட்ட வட்டி | 03,26,27,28 | **(4,866,917,564)** | (3,206,698,392) |
| பெறப்பட்ட தேறிய தரகு | 05 | **251,023,606** | 280,116,080 |
| வர்த்தக வருமானம் | | **-** | - |
| பணியாட்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் | 09,30 | **(1,402,773,233)** | (1,181,322,213) |
| நிதிச் சேவைகள் மீதான VAT மற்றும் SSCL | 12,30 | **(406,210,543)** | (253,468,106) |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து பெறப்பட்டவை | 05 | **80,603,906** | 60,887,869 |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மீது செலுத்தப்பட்டவை | 11,31 | **(513,252,403)** | (378,480,929) |
| தொழிற்படு சொத்துக்கள் பொறுப்புக்களில் மாற்றங்கள் ஏற்பட முன்னரான தொழிற்படு இலாபம் | | **2,000,689,212** | 1,591,256,863 |
| தொழிற்படு சொத்துக்களின் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி: | | | |
| இலங்கை மத்திய வங்கியுடனான மீதிகள் | | **-** | - |
| பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - கடன்களும் முற்பணங்களும் | 17 | **(408,539,666)** | (887,575,175) |
| ஏனைய சொத்துக்கள் | 24 | **(172,332,305)** | (71,587,777) |
| | | **(580,871,971)** | (959,162,952) |
| தொழிற்படு பொறுப்புகளின் அதிகரிப்பு/(வீழ்ச்சி) | | | |
| பதிவழிப்புச் செலவில் நிதிப் பொறுப்புக்கள் - வைப்பாளர்களுக்கான நிலுவை | 26 | **(334,501,291)** | 1,556,491,601 |
| பதிவழிப்புச் செலவில் நிதிப் பொறுப்புக்கள் - கடன் பிணையதாரர்களுடனான நிலுவை | 27 | **-** | - |
| பதிவழிப்புச் செலவில் நிதிப் பொறுப்புக்கள் - ஏனைய கடன் பெறுநர்களுக்கான நிலுவை | 26 | **(1,008,735,287)** | (537,506,898) |
| ஏனைய பொறுப்புக்கள் | 31 | **(17,352,285)** | (34,549,268) |
| | | **(1,360,588,863)** | 984,435,435 |
| வருமான வரிக்கு முன்னரான தொழிற்படு நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட தேறிய காசு | | **59,228,377** | 1,616,529,346 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 13,30 | **(202,702,538)** | (504,562,810) |
| தொழிற்படு நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசு (பயன்படுத்தப்பட்ட) | | **(143,474,160)** | 1,111,966,535 |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல் | | | |
| ஆதனம், பொறி, உபகரணங்கள் கொள்வனவு / அருவச் சொத்துக்கள் | 19,20 | **(144,487,463)** | (93,978,176) |
| ஆதனம், பொறி, உபகரணங்களில் இருந்து பெறப்பட்ட வருவாய்கள் / அருவச் சொத்துக்கள் | 19,20 | **503,667** | 898,678 |
| முதலீடுகளில் இருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்கள் | 16,17,19 | **377,542,551** | (1,058,732,442) |
| முதலீடுகளில் இருந்து பெறப்பட்ட பங்குலாபங்கள் | 05 | **240,000** | 240,000 |
| ஏனையவை | | **-** | - |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து பெறப்பட்ட தேறிய காசு (பயன்படுத்தப்பட்ட) | | **233,798,751** | (1,151,571,941) |
| நிதிச் செயற்பாடுகளில் இருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்கள் | | | |
| சாதாரண பங்கு மூலதனம் வழங்கப்பட்டதிலிருந்து பெறப்பட்ட தேறிய வருவாய்கள் | | **-** | - |
| வழங்கப்பட்ட ஏனைய பங்குரிமைக் கருவிகளிலிருந்து பெறப்பட்ட தேறிய வருவாய்கள் | | **-** | - |
| துணைநிலைக் கடன் மீள் கொடுப்பனவு | | **-** | - |
| துணைநிலைக் கடன்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி | | **-** | - |
| கட்டுப்பாடற்ற வட்டிக்கு செலுத்தப்பட்ட பங்குலாபங்கள் | | **-** | - |
| பங்குரிமைக் கருவிதாரர்களுக்கு செலுத்தப்பட்ட பங்குலாங்கள் | 31 | **(9,190,015)** | (7,687,911) |
| தாய்க் கம்பனியின் பங்குதாராகளுக்கு செலுத்தப்பட்ட பங்குலாபங்கள் | | **-** | - |
| ஏனையவை | | **-** | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (பயன்படுத்தப்பட்ட) | | **(9,190,015)** | (7,687,911) |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் உள்ள தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | | **81,134,576** | (47,293,316) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் இருந்த காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | **258,595,866** | 305,889,183 |
| காலப்பகுதி முடிவிலிருந்து காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | **339,730,442** | 258,595,867 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் மீள் இணக்கம் | | | |
| கையிலுள்ள காசு | | **170,215,596** | 149,324,091 |
| வங்கியிலுள்ள காசு | | **169,514,847** | 109,271,776 |
| | | **339,730,442** | 258,595,867 |

# கணக்கியல் கொள்கைகள்

## 1. கூட்டுறவுத் தகவல்கள்

### அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கையின் ர்னுகுஊ வங்கியானது, 1956 ஆண்டின் தேசிய வீடமைப்புச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் 1984 ஆம் ஆண்டு கட்டட அமைப்பாகக் கூட்டிணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ், கூட்டுத்தாபனமாக மாற்றியமைக்கப்பட்டு, 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட, 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தின் கீழ் விசேட வங்கி அந்தஸ்தைப் பெற்றதுடன், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் அட்டவணை ளை இன் கீழ் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களின் கீழ் சகல செயற்பாடுகளையும் பிரயோகிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. ர்னுகுஊ வங்கியின் தலைமை அலுவலகமானது, இலங்கை, கொழும்பு 02 இலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் செயலகத்தில் அமைந்துள்ளது.

## 2. தயாரிப்பின் அடிப்படை

### 2.(a) இணக்கக் கூற்று

நிதி நிலைமைக் கூற்று, வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்குரிமை மாற்றக் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வகுக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குமாறு தேவையான இடங்களிலெல்லாம் வரலாற்றுக் கிரய அடிப்படை மற்றும் நியாயப் பெறுமதி கணக்கியல் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள், இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட, இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அனைத்து குறித்துரைக்கப்பட்ட வர்த்தக முயற்சியாண்மைகளும் பயன்படுத்தப்பட வேண்டுமென்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட நியமங்களுக்கு அமைவாக, ஒப்பீட்டுத் தொகைகள் மீள எடுத்துக் கூப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் பட்டியற்படுத்தப்படும் விதிகளினால் வேண்டப்பட்டவாறு, பொருத்தமான வெளிப்பாடுகளையும் வழங்குகின்றன.

### 2.(b) செயற்பாட்டு மற்றும் தயாரிப்பு நாணயம

வங்கி செயற்படும் முதன்மைப் பொருளாதாரச் சூழலின் நாணயமாகிய இலங்கை ரூபாவிலேயே வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. “நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலுக்கான” இல.1 - இலங்கைக் கணக்கீட்டு நியமத்தினால் (டுமுயுளு) அனுமதித்தபடி சுட்டிக்காட்டப்பட்ட இடங்களைத் தவிர, ஏனைய இடங்களிலெல்லாம் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதித் தகவல்கள் கிட்டிய ரூபாய்களுக்கு வட்டமாக்கப்பட்டுள்ளது.

### 2.(c) நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டம், அதன் திருத்தங்களுக்கான ஏற்பாடுகள் மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், வங்கியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும், சமர்ப்பிப்பதற்குமான பொறுப்பு, பணிப்பாளர் சபையினைச் சார்ந்ததாகும்.

“நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு” மற்றும் “நிதி நிலைமைக் கூற்றில்” வழங்கப்பட்டுள்ள தெளிவுபடுத்தல்களில் கூறப்பட்டவாறு, பணிப்பாளர் சபையானது, அவர்களது பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றன.

### 2.(d) கணக்குகளின் வடிவமும் முன்னைய ஆண்டுத் தொகைகளும்

இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கியினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் ஆகியவற்றினால் பரிந்துரைக்கப்பட்டவாறு, சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்குகளின் வடிவமானது, “நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலுக்கான” இல.1 - இலங்கைக் கணக்கீட்டு நியமத்தினால் (டுமுயுளு) அனுமதிக்கப்பட்டவாறான முன்னைய நிதியாண்டுகளுடன் இணங்குகின்றன.

### 2.(e) நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

வங்கியின் நிதி நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்ட வங்கியின் சொத்துக்களும், பொறுப்புக்களும், அவற்றின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுவதுடன், அவற்றின் சார்புத் திரவத்தன்மை மற்றும் முதிர்ச்சி அமைப்பின் ஒழுங்குமுறையின் அடிப்படையில் பட்டியற்படுத்தப்படும். வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சி அமைப்பின் பகுப்பாய்வு, முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வு அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிதிச் சொத்துக்களும், நிதிப் பொறுப்புக்களும் ஈடு கட்டப்படுவதுடன், அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடு கட்டுவதற்கு சட்ட ரீதியாக அமுல்படுத்தக்கூடிய உரிமை ஒன்று உள்ள போது, அத்துடன், நிகர அடிப்படையில் சமரசம் செய்வதற்கு மன எண்ணம் ஒன்று இருப்பின் அல்லது சொத்துக்களை மெய்யாக்குவதற்கும், பொறுப்புக்களை அதேநேரத்தில் தீர்த்துக் கட்டப்படுவதற்கும் சாத்தியம் உள்ள இடத்தில் மாத்திரமே நிகர தொகை நிதிநிலைக் கூற்றில் அறிக்கையிடப்படும். ஏதேனும் கணக்கியல் நியமம் ஒன்று அல்லது வியாக்கியானம் ஒன்று அனுமதிக்கின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரமே வருமானம் மற்றும் செலவுகள் வருமானக் கூற்றில் தீர்த்துக் கட்டப்படுவதுடன், அவை, வங்கியின் கணக்கியல் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

### 2.(f) பொருண்மை மற்றும் திரட்டுதல்

ஒத்த பொருட்களையுடைய ஒவ்வொரு பொருள் வகுதியும், நிதிக் கூற்றுக்களில் தனியாகச் சமர்ப்பிக்கப்படும். அவை முக்கியமானவையல்லவென “நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலுக்கான” இல.1 (டுமுயுளு) இலங்கைக் கணக்கீட்டு நியமத்தினால் அனுமதிக்கப்பட்டாலொழிய, ஒத்த தன்மையற்ற பொருட்கள் மற்றும் செயற்பாடுகள் தனியாகச் சமர்ப்பிக்கப்படும்.

### 2.(g) ஒப்பீட்டுத் தகவல்கள்

சிறந்த சமர்ப்பித்தலுக்காகவும், நடப்பு வருடத்தின் சமர்ப்பணத்துடன் இணங்கிச் செல்வதற்காகவும், தேவையான போது, ஒப்பீட்டுத் தகவல் மீள் வகுப்பாக்கம் செய்யப்படும்.

## 3. விசேடமான கணக்கீட்டுத் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள

### 3.(a) நிறுவனத் தொடர்ச்சி

தொடர்ந்து செல்லும் நிறுவனம் என்ற வகையில், முகாமைத்துவம் தொடர்ந்து செல்வதற்கான தகைமை ஒன்றை மதிப்பீடு செய்துள்ளதுடன், எதிர்வு கூறக்கூடிய எதிர்காலத்தில் அதன் வர்த்தகத்தைத் தொடர்வதற்கு, வளங்கள் உள்ளன எனத் திருப்தியடைகிறது. மேலும், தொடர்ந்து செல்லும் நிறுவனம் என்ற வகையில், தொடர்ந்து செல்வதற்கான வங்கியின் தகைமை மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தை எழுப்பக்கூடிய எவ்வித முக்கியமான நிச்சயமற்ற தன்மைகளையும் முகாமைத்துவம் அறியவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்கள் தொடர்ச்சியாக நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 3.(b) சொத்துக்களை மதிப்பீடு செய்தல்

## 3.(b.i) வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும்

வாடிக்கையாளர்களுக்கான கடன்களும், முற்பணங்களும், நிதி நிலைமைக் கூற்றில் எதிர்கால உத்தேச கடன் நட்டங்களுக்கான தேறிய வலுக்குறைப்பாகக் காட்டப்பட்டுள்ளன.

### சேத நட்டங்களுக்கான ஏற்பாடுகள்

### நிதிச் சொத்துக்கள் மீதான எதிர்பார்த்த கடன் நட்டங்கள் (ECL)

கம்பனியானது, ஆயுட்கால நுஊடு மற்றும் 12 - மாத நுஊடு ஆகிய இரண்டையும் பயன்படுத்தி, நட்டக்கொடுப்பனவினை அளவிடுகின்றது. நுஊடு இனை மதிப்பிடுகையில், கம்பனியானது, ஆரம்ப அங்கீகாரம் முதல், நிதிச் சொத்தின் கடன் அபாயமானது, குறிப்பிட்டளவு அதிகரித்துள்ளதாவெனத் தீர்மானிக்கும். இதற்காக கம்பனியானது முறையற்ற செலவு அல்லது முயற்சியின்றிக் கிடைக்கும் நியாயமான மற்றும் ஆதரவளிக்கும் பொருத்தமான தகவல்களைக் கருத்திற் கொண்டுள்ளது. இதில் வங்கியின் வரலாற்று ரீதியான அனுபவம், அறிவிக்கப்பட்ட கடன் மதிப்பீடு மற்றும் முன்னோக்கிப் பார்க்கின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்ட அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான தகவல்களும், பகுப்பாய்வுகளும் உள்ளடங்கும்

### சாத்தியமான சேத நட்டத்திற்கான ஏற்பாடு

"நிதிக் கருவிகள் மீதான இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இல. 09: (SLFRS) வங்கிகளின் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரித்தலும், அளவிடுதலும் என்பதன் பிரகாரம் வாடிக்கையாளர்களுக்கான சகல கடன்களினதும், முற்பணங்களினதும் தொடர்ச்சியானதொரு மீளாய்வின் அடிப்படையில் சாத்தியமான சேத நட்டங்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். அவசியமான கடன்களின் நியாய விலையைக் கணிப்பிடுவதற்காக பின்வரும் விலைமதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1. கூட்டுச் சேத முறை
2. தனிப்பட்ட சேத முறை

### கூட்டுச் சேதத்திற்கான ஏற்பாடுகள்

சாத்தியமான கடன் நட்டங்களுக்கான கூட்டுச் சேதத்திற்கான ஏற்பாடுகள் நிதிக் கருவிகள் மீதான இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இல. 09: வங்கிகளின் நிதிக் கூற்றுக்களில் நிதிக் கருவிகளை அங்கீகரித்தலும், அளவிடுதலும் என்பதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வங்கியானது, தனிப்பட்ட சேதங்கள் முக்கியமல்லாத பட்சத்தில், சுழலும் வீத முறையில் கூட்டுச் சேதத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்கின்றது. அத்துடன், கைத்தொழில் மாறிகளைக் கருத்திற் கொள்கையில், சீராக்கப்பட்ட நட்டத்தை வழங்கத் தவறிய (டுபுனு) விகிதம் கருத்திற் கொள்ளப்படும்.

### தனிப்பட்ட சேதத்திற்கான ஏற்பாடுகள்

### விற்பனைக்கான கைக்கொள்ளப்பட்ட ஆதனங்கள்

ர்னுகுஊ வங்கியில் அடைமானம் வைக்கப்பட்ட சொத்துக்களுக்கு, நியாயமான காலப்பகுதியினுள் வாடிக்கையாளர்கள் செலுத்தத் தவறினால் ஏலமிடப்படும். அத்தகைய ஏலத்தில் விற்கப்படாத சொத்துக்கள் கைக்கொள்ளப்பட்ட சொத்துக்களாகக் கருதப்படுவதுடன், அவை கடன்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் அறிக்கையிடப்படும். அத்தகைய ஆதனங்களின் நிதிப் பாய்ச்சலுடன், நியாயமான உத்தரவாதத்தில், எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடுகள் தனிப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

### 36 மாத காலப்பகுதிக்கு மேலாக நிலுவையாக உள்ள ரூபா 8 மில்லியனைத் தாண்டிய உத்தரவாதக் கடன்களும் கடன்களும்

36 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் இருந்த அனைத்து உத்தரவாதக் கடன்களும் உள்ளடங்கலாக ஈடு, காசு மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான கடன்கள் நீங்கலாக, ஏனைய கடன்களுக்காக எதிர்கால காசு மீட்பின் நியாயமான உத்தரவாதத்துடன், ரூபா. 8 மில்லியனுக்கு மேற்பட்டவைக்கு தனித்த சேதம் மேற்கொள்ளப்பட்டது.

## 3.(b.ii) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

இவை சொத்துக்களை அவற்றின் பயன்படுத்தக்கூடிய நிலைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான ஏனைய செலவுகளுடன் கிரயத்தைச் சேர்த்துப் பதிவு செய்யப்படுவதுடன், இலங்கைக் கணக்கீட்டு நியம இல.16 இன் பிரகாரம் 3 வருடங்களுக்கு மேற்படாத அண்மைய மதிப்பீட்டு அறிக்கையைப் பயன்படுத்தி நியாயப் பெறுமதி விபரங்கள் தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### அங்கீகாரத்திற்கான அடிப்படை

குறிப்பிட்ட சொத்துக்களுடன் இணைந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள், வங்கிக்குள் வருவதற்கான சாத்தியம் இருக்கின்ற போதும், அச்சொத்தின் உண்மையான கிரயம் மதிப்பிடப்படக்கூடியதாக உள்ள போது மாத்திரமே, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படும்.

### அளவீட்டின் அடிப்படை

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், கிரயத்திலிருந்து திரண்ட தேய்மானத்தைக் கழிக்க வரும் தொகையில் காட்டப்படும். அது கீழே குறிப்பிட்ட அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படும்.

### தேய்மானக் கொள்கை

பல்வேறுபட்ட சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தின் மீது நேர்கோட்டு முறையில் பின்வரும் வீதங்களில் தேய்மானத்திற்கான ஏற்பாடு செய்யப்படும்.

| சொத்துக்களின் வகை | % ஆண்டொன்றிற்கு |
|---|---|
| கட்டடங்கள் | 6 2/3 |
| அலுவலக உபகரணம் | 12.50 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10.00 |
| மோட்டார் வாகனங்களும் சைக்கிளும் | 20.00 |
| பொறியும் இயந்திரமும் | 25.00 |
| கருவிகளும் உபகரணங்களும் | 12.50 |

மொத்த வருடாந்த தேய்மானமானது, சொத்துக்களை பயன்படுத்திய வருடத்திற்கு வழங்கப்படுவதுடன், சொத்துக்களை அகற்றிய வருடத்திற்கு எவ்விதமான தேய்மான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. பல்வேறு வகையிலான சொத்துக்களின் பயன்படுத்திய திகதியிலிருந்து தேய்மானத்தைக் கணிப்பீடு செய்வதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களைக் கருத்திற்கொண்டு, வங்கியானது டுமுயுளு 16 இன் 55வது பிரிவிலிருந்து விலகிச் சென்றுள்ளது.

## 3.B.iii) அருவச் சொத்துக்கள்

வங்கியினது அருவச் சொத்துக்களில் கொள்வனவு செய்யப்பட்ட கணணி மென்பொருட்களின் பெறுமதியும் உள்ளடங்குகிறது.

### அங்கீகாரத்திற்கான அடிப்படை

அருவச் சொத்தொன்று அதன் கிரயத்தை உண்மையாகவே அளவீடு செய்ய முடியுமான பட்சத்தில் மற்றும் வங்கிக்கு அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் வங்கிக்குக் கிடைக்கும் போது மாத்திரமே அடையாளங் காணப்படும்.

### அளவீட்டின் அடிப்படை

தனியாகக் கையகப்படுத்தப்பட்ட அருவச் சொத்துக்கள், கிரயத்தில் ஆரம்ப அங்கீகாரத்தில் அளவிடப்படும். ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து, அருவச் சொத்துக்கள், கிரயத்திலிருந்து எந்தவொரு திரண்ட பதிவழிப்பு நிதி மற்றும் எந்தவொரு திரண்ட சேத நட்டங்களும் இருப்பின் அவை கழிக்கப்பட்டு முன்னோக்கி எடுத்துச் செல்லப்படும்.

### பயனுள்ள பொருளாதார ஆயுட்காலமும் பதிவழிப்பும்

அருவச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலமானது, ஒன்றில் வரையறுக்கப்பட்டதாக அல்லது வரையறுக்கப்படாததாக மதிப்பிடப்படும். வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள், பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தின் மீது பதிவழிப்புச் செய்யப்படும். பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் பதிவழிப்புக் காலம் மற்றும் பதிவழிப்பு முறையானது குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் அல்லது சொத்துடன் உட்பொதிக்கப்பட்டுள்ள எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட நுகர்வுப் பாணி என்பன பதிவழிப்புக் காலம் அல்லது முறையை மாற்றுவதன் மூலம் பொருத்தமானவாறு கணக்குகளில் காட்டப்படுவதுடன் அவை கணக்கியல் மதிப்பீடுகளிலான மாற்றங்களாகக் கருதப்படும். வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் மீதான பதிவழிப்புச் செலவானது, வருமானக் கூற்றில் அருவச் சொத்துக்களின் செயற்பாட்டுடன் செலவு வகுதியில் காட்டப்படும்.

### அங்கீகாரமற்றதாக்கப்படுதல்

அருவச் சொத்துக்கள் அகற்றப்படுகையில் அல்லது அதன் பாவனையில் எதிர்காலப் பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத சந்தரப்பத்தில் அங்கீகாரமற்றதாக்கப்படும். சொத்துக்களை மீள அங்கீகாரமற்றதாக்கப்படுவதனால் எழும் ஏதேனும் வருவாய் அல்லது நட்டமானது (தேறிய அகற்றல் நடவடிக்கை மற்றும் சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகை ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடாகக் கணிப்பிடப்படும்) "ஏனைய செயற்பாட்டு வருமானமாக" சொத்து அங்கீகாரமற்றதாக்கப்படுகின்ற வருடத்தில் உள்ள வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

வங்கியானது, வரையறுக்கப்படாத பயனுள்ள ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை.

| சொத்தின் வகை | மூ ஆண்டொன்றிற்கு |
|---|---|
| கணணி மென்பொருள்- வெளிநாட்டு | 25.00 |
| கணணி மென்பொருள்- உள்நாட்டு | 25.00 |
| பிரதானச் செயலி மென்பொருள் | 10.00 |

## 3.B.iv) முதலீட்டு ஆதனங்கள்

முதலீட்டு ஆதனங்கள் தற்போதைய சந்தைப் பெறுமதியில் பதியப்படுவதுடன், கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் சந்தைப் பெறுமதிகளுக்கிடையிலான வித்தியாசமானது, வருமானக் கூற்றில் ஏனைய வருமானமாக சமர்ப்பிக்கப்பட்டு அது நிதி நிலைமையின் கீழ் வகைப்படுத்தப்படும்.

## 3.C) நிதிச் சொத்துக்கள்

## 3.C.i) அங்கீகாரமும் அளவீடும்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படாத ஒரு சொத்துக்காகவும், அச்சொத்தை கையகப்படுத்தலுடன் நேரடியாகத் தொடர்புடைய பரிவர்த்தனைச் செலவுக்காகவும் நிதிச் சொத்து ஒன்று ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும்.

கடன்களும் முற்பணங்களும், அவை தோன்றிய திகதியில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன், இது, பொதுவாக வழங்கப்பட்ட கடன் தொகையாக இருப்பதுடன், அதனை அடுத்த அளவீடானது, பதிவழிப்புச் செலவில் மேற்கொள்ளப்படும்.

நிதிச் சொத்து ஒன்றின் பதிவழிப்புச் செலவு என்பது, ஆரம்ப அங்கீகாரத்தின் போது மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்தில் இருந்து முதன்மையான மீள் கொடுப்பனவுகளைக் கழித்து வினைத்திறனான வட்டி முறையைப் பயன்படுத்தி ஆரம்ப அங்கீகாரத் தொகை, முதிர்வுத் தொகை என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு இருப்பின் அத்திரண்ட பதிவழிப்பை கூட்டி அல்லது கழித்து அத்துடன் சேதத்திற்கான ஏதேனும் தொகை இருப்பின் அதனையும் கழித்து வருகின்ற தொகை ஆகும்.

குறிப்பிட்ட கருவி ஒன்றுக்கான ஒப்பந்தம் சார் ஏற்பாடுகளுக்கு வங்கி திறத்தவராக வருகின்ற திகதியன்று அனைத்து ஏனைய நிதிச் சொத்துக்களும் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படும்.

## 3.C.ii) வகைப்படுத்தல்கள்

ஆரம்ப அங்கீகரித்தலில், வங்கியானது பின்வரும் வகுதிகளுக்கு நிதிச் சொத்துக்களை வகைப்படுத்தும்:

- பதிவழிப்புச் செலவில் அளவிடப்படுபவை
- ஏனைய விரிவான வருமானம் மூலமான நியாயப் பெறுமதி (குஏழுஊஐ)
- இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதி (குஏவீடு)

தொடர்ந்து வரும் நிதிச் சொத்துக்களுக்கான அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளன.

### பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்

பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஆனால், குஏவீடு இல் குறித்துரைக்கப் படாவிட்டால் நிதிச் சொத்தானது கடன் பதிவழிப்புச் செலவில் அளவிடப்படும்:

- சொத்தினை நிறுத்தி வைத்திருந்து ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களைச் சேகரிக்கும் நோக்கம் இருக்கும் போது, சொத்தானது வியாபார மாதிரியினுள் வைக்கப்படும் (குறிப்பு 5.3.2.3.இல் விளக்கப்பட்டுள்ளது): மற்றும்
- நிதிச் சொத்து ஒன்றின் ஒப்பந்தம் சார் நியதிகள் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் நிதிப் பாய்ச்சலுக்குத் தருகின்ற விடயங்கள் முற்றாக முதன்மைக் கொடுப்பனவுகளாக அல்லது நிலையாக உள்ள முதன்மைக் கொடுப்பனவின் வட்டியாக அமைகின்ற போது,

## ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்

பின்வரும் நிலைமைகளைப் பூர்த்தி செய்து ஆனால் குஏவீடு இல் குறித்துரைக்கப்படாத போது மாத்திரமே கடன் கருவி ஒன்று FVOCI இல் அளவிடப்படும்:

- சொத்தினை நிறுத்தி வைத்திருந்து ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களைச் சேகரிக்கும் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்யும் நோக்கத்திலிருக்கும் வியாபார மாதிரியின் நோக்கம் அடையப்பட்டால்: அத்துடன்,
- நிதிச் சொத்து ஒன்றின் ஒப்பந்தம் சார் நியதிகள் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் நிதிப் பாய்ச்சலுக்குத் தருகின்ற விடயங்கள் முற்றாக முதன்மைக் கொடுப்பனவுகளாக அல்லது நிலையாக உள்ள முதன்மைக் கொடுப்பனவின் வட்டியாக அமைகின்ற போது,

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத பங்குரிமை முதலீடு ஒன்றின் மீதான ஆரம்ப அங்கீகரிப்பின் மீது வங்கி ஏனைய விரிவான வருமானத்தில் அதற்கு ஏற்படும் உடனடுத்த மாற்றங்களை நியாயப் பெறுமதியில் மீளப் பெறாத வகையில் சமர்ப்பிக்கும் தெரிவை மேற்கொள்ளலாம். இத்தெரிவானது, ஒவ்வொரு முதலீட்டின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும்.

## இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்

பதிவழிப்புச் செலவு அல்லது குஏழுஊஐ இல் வகுப்பாக்கம் செய்யப்படாத அனைத்து நிதிச் சொத்துக்களும் குஏவீடு இல் அளவிடப்படும்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம் மூலமாக கட்டாயமாக நியாயப் பெறுமதியில் மதிக்கப்படும்

- வர்த்தகத்திற்காக வைத்திருக்கும் போது, அல்லது,
- ஒரு நியாயப் பெறுமதி அடிப்படையில் உள்ளக ரீதியாக முகாமைத்துவம் செய்யப்பட்டு, மதிப்பிடப்பட்டு, அறிக்கையிடப்படுகின்ற போது. அல்லது,
- வேறு வகையில் எழுகின்ற கணக்கியல் பொருத்தப்பாடு ஒன்று இன்மையைக் கணிசமான அளவு குறைக்கின்ற அல்லது குறித்துரைத்தலை அகற்றுகின்ற போது, அல்லது,
- ஒப்பந்தத்தின் கீழ் அவசியமான காசுப் பாய்ச்சலை குறிப்பிடத்தளவு மாற்றியமைக்கும் உட்பொதிக்கப்பட்ட வழித்தோன்றலைக் கொண்டுள்ளது.

## இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள்

இதனைவிட, ஆரம்ப அங்கீகாரத்தின் மீது வங்கியானது, பதிவழிப்புச் செலவில் அல்லது FVOCI இல் அல்லது FVTPL இல் அளவிடப்பட வேண்டிய தேவைப்பாடுகளை வேறு வகையில் பூர்த்தி செய்கின்ற போது, அத்துடன் அவ்வாறு மேற்கொள்கையில் வேறு வகையில் எழுகின்ற கணக்கியல் பொருத்தப்பாடு இன்மையை நீக்குகின்ற அல்லது கணிசமான அளவு குறைக்கின்ற போது மாத்திரமே நிதிச் சொத்து ஒன்றினை மீளப் பெறாத வகையில் குறித்துரைக்கலாம்.

அறிக்கையிடும் திகதியில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் வங்கி ஆரம்ப அங்கீகாரத்தின் மீது எவ்விதமான நிதிச் சொத்தையும் குறித்துரைக்கவில்லை.

## வியாபார மாதிரி மதிப்பீடு

சொத்தொன்றினை முதலீட்டு வகை மட்டத்தில் வைத்திருக்கும் போது, வங்கியானது ஒரு வர்த்தக மாதிரி நோக்கத்திற்கான மதிப்பீடொன்றினை மேற்கொள்ளும். ஏனெனில், வர்த்தகம் எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படுகிறது என்பதையும், முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்ட தகவல்களையும் சிறந்த வகையில் பிரதிபலிக்கும். கருத்திற் கொள்ளப்பட்ட தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

- குறிப்பிடப்பட்ட கொள்கைகளும், கோப்புமுறையின் (Portfolio) இலக்குகளும், அத்தகைய கொள்கைகளும் செயற்பாடுகளும் நடைமுறையில் உள்ளன. விசேடமாக, முகாமைத்துவத்தின் உபாய நுட்பம், அத்தகைய சொத்துக்களுக்கு நிதியிடுகின்ற பொறுப்புகளின் காலப்பகுதிக்கு நிதிச் சொத்துக்களின் காலப்பகுதி பொருந்துகிறதா அல்லது சொத்துக்களின் விற்பனை ஊடாக நிதிப் பாய்ச்சல்கள் உணரப்படுகின்றனவா என்பதையும், குறிப்பான வட்டி வீத விபரம் ஒன்றைப் பேணும் வகையிலும், பெறப்படுகின்ற ஒப்பந்தம்சார் வட்டி வருவாய் மீது கவனம் செலுத்தும்.
- போட்போலியோவின் செயற்திறன் எவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டது மற்றும் வங்கியின் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்பட்டது.
- வர்த்தக மாதிரியின் செயலாற்றலைப் பாதிக்கும் இடர்கள் (மற்றும் வர்த்தக மாதிரியினுள் வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள்) மற்றும் அத்தகைய இடர்கள் எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படுகின்றன என்பது,
- வர்த்தகத்தின் முகாமையாளர்களுக்கு எவ்வாறு நட்டஈடு வழங்கப்படுகின்றன என்பது, உதாரணமாக, நட்டஈடு முகாமைத்துவம் செய்யப்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதியில் அமைந்ததா அல்லது சேகரிக்கப்பட்ட ஒப்பந்தம் சார் நிதிப் பாய்ச்சல்கள் மீது அமைந்ததா? மற்றும்,
- முன்னைய காலப்பகுதியிலான அதிர்வெண், அளவு மற்றும் விற்பனை நேரம், அத்தகைய விற்பனைக்கான காரணங்கள் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை மீதான அதன் எதிர்பார்ப்பு. எவ்வாறாயினும், விற்பனை நடவடிக்கை தொடர்பான தகவல்கள் தனியாகக் கருத்திற் கொள்ளப்படவில்லை. மாறாக, வங்கியின் குறிப்பிடப்பட்ட இலக்கு அடையப்பட்ட நிதிச் சொத்துக்களை எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்பட்டது என்பதும் மற்றும் நிதிப் பாய்ச்சல்கள் எவ்வாறு உணரப்பட்டன என்பதையும் அடிப்படையாகக் கொண்ட ஒட்டு மொத்த மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும்.

## ஒப்பந்தம் சார் நிதிப் பாய்ச்சல்கள் முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை சார்ந்ததா என்பதற்கான மதிப்பீடுகள்

இம்மதிப்பீட்டின் நோக்கத்திற்காக "முதன்மையானது" என்பது, நிதிச் சொத்தினது ஆரம்ப அங்கீகாரத்தின் போது அதன் நியாய விலையில் வரையறை செய்யப்பட்டது. "வட்டி" என்பது, பணத்தின் நேரப் பெறுமதி மற்றும் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான நிலுவையாகவுள்ள பிரதான தொகையுடன் சம்பந்தப்பட்ட கடன் இடர் மற்றும் ஏனைய கடன் இடர்கள் மற்றும் செலவுகள் அத்துடன் இலாப எல்லை போன்றவற்றைக் குறிப்பிடும்.

ஒப்பந்தம் சார் நிதிப் பாய்ச்சல்கள் தனியாக முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளா என்பதை மதிப்பீடு செய்கையில், வங்கி கருவியின் ஒப்பந்தம்சார் நியதிகளையும் கருத்திற் கொள்கின்றது. இதில் நேரத்தை மாற்றக் கூடிய ஒப்பந்தம் சார் நியதியொன்றை நிதிச் சொத்து கொண்டுள்ளதா அல்லது ஒப்பந்தம்சார் நிதிப் பாய்ச்சல்களின் தொகை இந்நிபந்தனையைப் பூர்த்தி செய்யவில்லையா என்பதை மதிப்பீடு செய்வதை இது உள்ளடக்குகின்றது.

மதிப்பீட்டினை மேற்கொள்வதில் வங்கியானது,

- காசுப் பாய்ச்சல்களின் கால நேரத்தையும், தொகையையும் மாற்றுகின்ற இடைநேர் விளைவான நிகழ்வுகள். மற்றும்,
- அந்நிய அம்சங்கள்
- முற்பண மற்றும் நீடிப்பு நிபந்தனைகள்
- குறிடப்பட்ட சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சலுக்கான வங்கியின் கோரிக்கை வரையறுக்கும் நிபந்தனை, மற்றும்,
- பணத்தின் நேரப் பெறுமதியின் பிரதிபயனை மெருகூட்டுகின்ற அம்சங்கள் - என்பவற்றைக் கருத்திற்கொள்ளும்.

வங்கியானது, கால ரீதியான மீள்வகுக்கப்பட்ட திகதிகளில் வட்டி வீதத்தை மாற்றுவதற்கு உத்தேசித்துள்ள நீண்ட கால, நிலையான வீத வட்டியினை முதலீடு செய்யும் போட்போலியோவை வங்கி வைத்துள்ளது. இந்த மீள்வகுத்தல் உரிமைகள் திருத்தியமைக்கும் நேரத்தின் போதான சந்தை விலைக்கு வரையறுக்கப்பட்டதாகவிருக்கும். கடன்பட்டோர் திருத்தியமைக்கப்பட்ட வட்டி வீதத்தை ஏற்றுக் கொள்வதற்கோ அல்லது கடனை தண்டப் பணமின்றி மீட்டுக் கொள்வதற்கோ வழிவகுக்கும் தெரிவு உள்ளது. வங்கியானது, இக்கடன்களின் ஒப்பந்தம் சார் காசுப் பாய்ச்சல்களை வெறுமனே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவாகத் தீர்மானித்துள்ளது. ஏனெனில், பணம், கடன் இடர், ஏனைய அடிப்படைக் கடன் இடர்கள் மற்றும் நிலுவையாக உள்ள முதன்மைக் கொடுப்பனவுடன் தொடர்புடைய செலவுகள் என்பவற்றின் காலப் பெறுமதியை கருத்திற் கொள்கின்ற வகையில் வட்டி விகித தெரிவு மாறுபடும்.

## 3.C.iii) மீள்வகைப்படுத்தல்

- அரிய சந்தர்ப்பங்களில் ஆரம்ப அங்கீகாரத்திலே கடன்கள் மற்றும் பெறுவனவுகளுக்கான வரைவிலக்கணங்களைப் பூர்த்தி செய்துள்ள நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் இலாப நட்ட வகுதியினூடாக நியாய விலையில் மற்றொரு வகுதிக்கு மீள்வகைப்படுத்தப்படும்.

- ஏற்புடைய கொள்கைகள்

  வங்கியானது அதன் வர்த்தக இலக்குகளை முகாமைத்துவம் செய்யும் அரிதான சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்துக்கள் அவற்றின் ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து மீள்வகைப்படுத்தப்படவில்லை.

  ளுடுகுசுளு 9 இனால் அனுமதிக்கப்படாமையால், நிதிச் பொறுப்புக்கள் அவ்வாறு மீள்வகைப்படுத்தப்படவில்லை.

- நிதிச் சொத்துக்களை மீள்வகைப்படுத்தும் நேரம்

  வர்த்தக மாதிரியில் மாற்றத்தைத் தொடர்ந்து, வங்கியானது அடுத்த அறிக்கையிடல் காலப்பகுதியின் (மீள்வகைப்படுத்தல் திகதி) முதலாவது நாள் தொடக்கம், வருங்காலத்தில் பாதிக்கப்பட்ட சகல சொத்துக்களையும் வங்கியானது மீள்வகைப்படுத்தியது. முன்னைய காலப்பகுதியில் மீள்கூறப்படவில்லை.

### நிதிச் சொத்துக்களை மீள்வகைப்படுத்தும் அளவீடு

#### இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயப் பெறுமதியில் நிதிக் கருவிகளை மீள்வகைப்படுத்தல்

- ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதிக்கு மீள் வகுப்பாக்கத் திகதிக்குரிய நியாயப் பெறுமதி

  புதிய மொத்த எடுத்துச் செல்லும் தொகையாக அமையும். நுஜசு ஆனது, புதிய மொத்த கொண்டு வரும் தொகையை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது. நியாயப் பெறுமதியில் அதனைத் தொடர்ந்து வந்த மாற்றங்கள் முஊஐ இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- பதிவழிப்புச் செலவுகளுக்கு

  மீள் வகுப்பாக் திகதியில் உள்ள நியாயப் பெறுமதி, முன்னோக்கி எடுத்துச் செல்லப்படும் புதிய தொகையாகும். நுஜசு ஆனது புதிய மொத்த கொண்டு வரும் தொகையை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது. நியாயப் பெறுமதியில் அதனைத் தொடர்ந்து வந்த மாற்றங்கள் முஊஐ இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

#### “ஏனைய விரிவான வருமானம் மூலமான நியாய பெறுமதியில்” நிதிக் கருவிகளை மீள்வகைப்படுத்தல்

- இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதிக்கு

  மீள்வகைப்படுத்தல் திகதியில் இலாப நட்டத்திற்கு முஊஐ இனது திரண்ட மீதியானது மீள்வகைப்படுத்தப்பட்டது.

- பதிவழிப்புச் செலவுகளுக்கு

  நிதிக் கூற்றுக்கள் நியாய விலையில் மீள்வகைப்படுத்தப்பட்டன. முஊஐ இனது திரண்ட மீதியானது அகற்றப்பட்டு மீள்வகைப்படுத்தப்பட்ட நியாயப் பெறுமதியைச் சீராக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சீராக்கப்பட்ட தொகையானது பதிவழிப்புச் செலவாக வரும்.

  ஆரம்ப அங்கீகாரத்தில் தீர்மானிக்கப்பட்ட நுஜசு மற்றும் மொத்த கொண்டு செல்லும் தொகை என்பன மீள் வகுப்பாக்கம் காரணமாக சீராக்கப்படவில்லை.

#### “பதிவழிப்புச் செலவில்” நிதிக் கருவிகளை மீள்வகைப்படுத்தல்

- ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாய பெறுமதிக்கு

  முஊஐ இல் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வித்தியாசம் இருப்பின், அதனுடன் நியாயப் பெறுமதிக்கு சொத்து மீள் மதிப்பிடப்படும். ஆரம்ப அங்கீகாரத்தில் தீர்மானிக்கப்பட்ட நுஜசு மீள்வகைப்படுத்தலின் விளைவாக சீராக்கப்படவில்லை.

- இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதிக்கு

  மீள்வகைப்படுத்தல் திகதிக்கான நியாயப் பெறுமதியானது, புதிய கொண்டுவரும் தொகையாக அமையும். பதிவழிப்புச் செலவு மற்றும் நியாயப் பெறுமதிக்கு இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படும்.

## 3.C.iv) நிதிச் சொத்துக்களை அங்கீகாரமற்றதாக்குதல்

சொத்துக்களில் இருந்து பெற வேண்டிய காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்தம் சார் உரிமை காலாவதியாகியுள்ள போது அல்லது வங்கி அதன் நிதிச் சொத்துக்களின் காசுப் பாய்ச்சலைப் பெறுகின்ற ஒப்பந்தம் சார் உரிமையை கைமாற்றியுள்ள போது நிதிச் சொத்துக்கள் அங்கீகாரமற்றதாக்கப்படும். அத்துடன், பின்வரும் இரண்டில் ஒன்று நிகழும்.

- கணிசமான சகல இடர்களும் உரித்தினது வெகுமதிகளும் கைமாற்றப்பட்டுள்ளன:

அல்லது,

- வங்கியானது இடர்கள் மற்றும் வெகுமதிகளை ஒன்றில் வைத்துக் கொண்டு அல்லது கைமாற்றியுள்ளது. ஆனால், நிதிச் சொத்தினைக் கட்டுப்பாட்டினை தக்க வைத்திருக்கவில்லை.

## 3.C.v) நியாயப் பெறுமதி அளவீடு

நியாயப் பெறுமதி என்பது, முதன்மையான அளவீட்டுத் திகதியன்று சந்தைப் பங்குபற்றுநர்களுக்கு இடையில் உள்ள ஒழுங்குமுறையான பரிவர்த்தனை ஒன்றின் பொறுப்பினைக் கைமாற்றுதல் அல்லது சொத்து ஒன்றினை விற்றுப் பெறுகின்ற விலையாக அமையும். அல்லது, அது அவ்வாறு இல்லாத போது, அன்றைய திகதியில் வங்கி மிக அனுகூலமான சந்தையை அணுகுகின்ற போது இருக்கின்ற விலையாகும். பொறுப்பு ஒன்றின் நியாயப் பெறுமதி, அதன் செயற்திறன் அற்ற இடரைப் பிரதிபலிக்கும்.

கிடைக்கும் போது, வங்கியானது அக்கருவிக்கான இயக்கபூர்வமான சந்தையில் கருவியினது நியாய விலையை அளவிடுகின்றது. சொத்து அல்லது பொறுப்பொன்றினது கொடுக்கல் வாங்கலானது, விலையிடல் தகவல்களை தொடர்ந்திருத்தல் அடிப்படையில் வழங்குவதற்குப் போதிய அதிர்வெண் மற்றும் அளவில் நடைபெறும் போது சந்தையானது இயக்கபூர்வமானதாகக் கருதப்படும்.

இயக்கபூர்வமான சந்தையில் குறிப்பிடப்பட்ட விலையொன்று இல்லாத போது வங்கியானது, பொருத்தமான, அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை அதிகரிக்கக்கூடிய மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்துவதுடன், அவதானிக்கப்படாத உள்ளீடுகளின் பயன்பாட்டைக் குறைக்கும். பரிவர்த்தனை ஒன்றை விலையிடுகையில், சந்தை பங்குபற்றுநர்களால் கருத்திற் கொள்ளப்படுகின்ற அனைத்துக் காரணிகளையும் தெரிவு செய்து மதிப்பீட்டு நுட்பம் கருத்திற் கொள்ளும்.

ஆரம்ப அங்கீகாரத்தின் போது, நிதிக் கருவியொன்றின் நியாயப் பெறுமதிக்கு உரிய சிறந்த சான்று வழமையாக பரிவர்த்தனை விலையாக அமையும். அதாவது, நியாயப் பெறுமதியின் வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட பிரதிபயனாகும். பரிவர்த்தனை விலையில் இருந்து ஆரம்ப அங்கீகாரத்தின் போதான நியாயப் பெறுமதி வேறுபடுகிறது என வங்கி தீர்மானித்தால், அத்துடன், நியாயப் பெறுமதியானது, அதேமாதிரியான சொத்து அல்லது பொறுப்பு ஒன்றுக்கான இயக்கபூர்வமான சந்தையில் விலை குறிப்பிடப்பட்டமைக்கான சான்று ஒன்று இல்லாத போது, அல்லது, அவதானிக்கக்கத்தக்க சந்தைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளை மாத்திரம் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு நுட்பத்தின் அடிப்படையில் உள்ள போது, நிதிக் கருவியானது, ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன், ஆரம்ப அங்கீகாரத்தின் போது உள்ள நியாயப் பெறுமதிக்கும், பரிவர்த்தனை விலைக்கும் இடையிலான வேறுபாடு சீராக்கலுக்காக ஒத்திவைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து, இவ்வேறுபாடானது, கருவியின் ஆயுட்காலம் மீது முறையான அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படும். ஆயின், குறப்பிட்ட மதிப்பீடானது, அவதானிக்கப்பட்ட சந்தைத் தரவுகளினால் முழுமையாக ஆதரவளிக்கப்படுகின்ற போது, அல்லது பரிவர்த்தனை பூர்த்தி செய்யப்பட்ட போது அங்கீரிக்கப்படும்.

சொத்து அல்லது பொறுப்பு ஒன்று நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட சொத்து ஒன்று அல்லது பொறுப்பு ஒன்று பேரம் பேசப்பட்ட விலையையும், கேட்கப்பட்ட விலையையும் கொண்டிருக்கும் போது, வங்கியானது, சொத்துக்களையும், நீண்டகால நிலைமைகளையும், பொறுப்புகளையும் பேரம் பேசப்பட்ட விலையிலும் குறுகியகால நிலைமைகளை கேட்கப்பட்ட விலையிலும் அளவிடும்.

சந்தை இடர்களை வெளிப்படுத்திய நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் போட்போலியோக்கள் மற்றும் கடன் அல்லது சந்தை இடரில் ஏதேனும் ஒன்றுக்கு தேறிய வெளிப்பாட்டின் அடிப்படையில் வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட கடன் இடர் என்பன ஒரு குறிப்பிட்ட இடர் வெளிப்பாட்டிற்காக ஒரு தேறிய நீண்டகால நிலைமையை (அல்லது ஒரு தேறிய குறுங்கால நிலைமைக்கு செலுத்தப்பட்ட அல்லது கைமாற்றப்பட்ட) விற்பனை செய்து பெறுகின்ற விலையின் அடிப்படையில் அளவிடப்படும். அத்தகைய போட்போலியோ மட்டத்திலான சீராக்கங்கள் போட்போலியோவின் ஒவ்வொரு தனித்த கருவிகளுக்குமான ஒப்பீட்டளவிலான இடர் சீராக்கலின் அடிப்படையில் தனித்தனியான சொத்துக்களுக்கும், பொறுப்புக்களுக்கும் ஒதுக்கப்படும்.

கோரப்படும் வைப்பான நியாயப் பெறுமதியானது, கோரப்படுவதன் மீது செலுத்த வேண்டிய தொகையை விடக் குறைவாக இருக்காது, அது, அத்தொகை எத்திகதியில் செலுத்தப்பட வேண்டும் என வேண்டப்படுகிறதோ அந்த முதல் திகதியில் இருந்து தள்ளுபடி செய்யப்படும்.

அத்தகைய மாற்றங்கள் ஏற்பட்ட, அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு, வங்கி, நியாயப் பெறுமதி பதவணி மட்டங்களுக்கு இடையிலான பரிவர்த்தனைகளை அங்கீகரிக்கும்.

## 3.C.vi) சேதத்தை அடையாளங்காணுதலும் அளவிடுதலும்

### ஏற்புடைய கொள்கை

### நிதிச் சொத்துக்களின் சேதங்களை அங்கீகரித்தல்

வங்கியானது எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான நட்டக் கொடுப்பனவுகளை (ECL) குஏவீடு இல் அளவிடாது பின்வரும் நிதிக் கருவிகளை அங்கீகரித்துள்ளது:

- கடன் கருவிகளாகிய நிதிச் சொத்துக்கள்
- கிடைக்க வேண்டிய குத்தகைகள்
- வெளியிடப்பட்ட நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள் மற்றும்,
- வழங்கப்பட்ட கடன் பொறுப்புக்கள்.

பங்கு மூலதன முதலீடுகள் மீதான சேத நட்டங்கள் அங்கீகரிக்கப்படவில்லை.

பின்வருவன தவிர்ந்த 12 மாத ECL இல் கணிக்கப்பட்டவற்றிற்கு வங்கியானது ஆயுட்கால ECL இற்குச் சமமான தொகை நட்டக் கொடுப்பனவுகளை அளவிடுகின்றது:

- அறிக்கையிடல் திகதியில் குறைந்த கடன் அபாயத்தை நிர்ணயிப்பதற்கு கடன் முதலீட்டுப் பிணையங்களை நிர்ணயித்தல்: மற்றும்,
- அவற்றின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து ஏனைய நிதிக் கருவிகளிலிருந்தான (பெறவேண்டிய குத்தகை தவிர்ந்த) கடன் அபாயமானது கணிசமானளவு அதிகரிக்கவில்லை.

உலகளாவிய ரீதியில் விளங்கிக் கொள்ளப்பட்ட "முதலீட்டுத் தரம்" என்ற வரைவிலக்கணத்திற்கு சமமான தமது கடன் இடர் மதிப்பிடப்பட்டுள்ள போது, வங்கியானது, ஒரு கடன் இடர் குறைந்த கடன் இடர் உள்ளதாகக் கருதும். அறிக்கையிடல் திகதிக்கு 12 மாதங்களின் பின்னர் செலுத்தத் தவறும் சாத்தியமுள்ள நிகழ்வுகளால் ECL இன் ஒரு ECL இன் 12 மாத முதலீடாகும்.

### நிதிநிலைமைக் கூற்றில் நுஊடு க்கான கொடுப்பனவை சமர்ப்பித்தல்

நுஊடு இற்கான நட்டக் கொடுப்பனவுகள் நிதிநிலைமைக்கான கூற்றுக்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

- நிதிச் சொத்துக்கள், சொத்துக்களின் மொத்த கொண்டு வரும் செலவின் கழிப்பனவாக பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் அளவிடப்படும்:
- கடன் பொறுப்புக்களும், நிதி உத்தரவாத ஒப்பந்தங்களும் பொதுவாக, ஏற்பாடொன்றாக அமையும்.
- ஒரு வரையப்பட்ட மற்றும் வரையப்படாத கூறு ஒன்றினை நிதிக் கருவியொன்று, கணக்கீட்டுக் கொள்கைகள், நிதி அறிக்கைகள் கொண்டிருக்கும் பட்சத்தில், அத்துடன், அந்த வரையப்பட்ட கூறுகளில் இருந்து கடன் பொறுப்புக் கூறிற்கான ECL ஐ வங்கி தனியாக அடையாளங்காண முடியாத போது, வங்கியானது இரண்டு கூறுகளுக்கும் ஒரு இணைந்த நட்டக் கொடுப்பனவினைச் சமர்ப்பிக்கின்றது. இணைந்த தொகையானது, வரையப்பட்ட கூறில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட மொத்தத் தொகையிலிருந்து கழிக்கப்பட்டதாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வரையப்பட்ட கூறின் மொத்த எடுத்துச் செல்லும் தொகைகளின் மீதான ஏதேனும் மிகையான நட்டக் கொடுப்பனவு ஏற்பாடு ஒன்றாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மற்றும்,
- FVOCI இல் அளவிடப்படும் கடன் கருவிகள்: நிதி நிலைமைக் கூற்றில் நட்டக் கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்படவில்லை. ஏனெனில், இந்தச் சொத்துக்களின் கீழ் கொண்டு வரும் தொகையானது, அதன் நியாயப் பெறுமதியில் உள்ளது. எவ்வாறாயினும். நட்டக் கொடுப்பனவானது, வெளிப்படுத்தப்படுவதுடன் அது நியாய விலை ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்படும்.

## நிதிச் சொத்துக்களைத் திருத்துதல்

நிதிச் சொத்து ஒன்றின் நியதிகள் திருத்தப்படின், வங்கியானது, திருத்தப்பட்ட சொத்துக்களின் காசுப் பாய்ச்சல்கள் கணிசமான அளவு வேறுபடுகிறதா என்பதை மதிப்பீடு செய்யும்.

காசுப் பாய்ச்சல்கள் கணிசமான அளவு வேறுபடுமாயின், ஆரம்ப நிதிச் சொத்தில் இருந்து வருகின்ற காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்தம்சார் உரிமைகள் காலாவதியானதாகக் கருதப்படும். இத்தகைய சூழலில், ஆரம்பச் சொத்து அங்கீகாரமற்றதாக்கப்படுவதோடு, புதிய நிதிச் சொத்து ஒன்று நியாயப் பெறுமதியில் ஏதேனும் தகுதியான பரிவர்த்தனைச் செலவுகள் இருப்பின் அவற்றையும் சேர்த்து அங்கீகரிக்கப்படும். திருத்துதலின் ஒரு பகுதியாக ஏதேனும் கட்டணங்கள் பெறப்பட்டிருப்பின் அவை பின்வரும் வகையில் கணக்குக் காட்டப்படும்.

- புதிய சொத்து ஒன்றின் நியாயப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு, கருத்திற் கொள்ளப்பட்ட கட்டணங்கள் மற்றும் அச்சொத்தின் ஆரம்ப அளவீட்டின் போது உள்ளடக்கப்பட்ட தகுதியான பரிவர்த்தனைச் செலவுகளின் மீளப் பெற்றுக் கொள்ளலைப் பிரதிநிதித்துவபடுத்துப்படுகின்ற கட்டணங்களும், மற்றும்,
- அங்கீகாரமற்றதாக்குதலின் மீதான ஆதாயம் அல்லது நட்டம் என்ற வகையில், ஏனைய கட்டணங்கள், இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்படும்.

கடன் பெறுநர் சிக்கலான நிதி நிலைமையில் இருக்கின்ற போது, காசுப் பாய்ச்சல்கள் திருத்தப்பட்டால், அத்தகைய திருத்தங்களின் இலக்கானது, வழமையாக, கணிசமான அளவு மாறுபட்ட நியதிகளுடன் புதிய தொற்று ஒன்று உருவாகுவதை விட ஆரம்ப ஒப்பந்தம் சார் நியதிகளின் அடிப்படையில் மீளப் பெற்றுக்கொள்வதை அதிகரிப்பதாக அமையும். வங்கியானது, காசுப் பாய்ச்சல்களை மன்னிக்கின்ற வகையில், விளைவுகளை ஏற்படத்தக்கூடியவாறு நிதிச் சொத்து ஒன்றைத் திருத்த திட்டமிடுகின்ற போது, வங்கி முதலாவதாக குறிப்பிட்ட சொத்தின் ஒரு பாகம் அத்தகைய திருத்தம் ஏற்பட முன்பு, இல்லாமல் ஆக்கப்பட முடியுமா என்பதைக் கருத்திற் கொள்ளும். (கீழே உள்ள இல்லாமல் ஆக்குதலுக்கான கொள்கையைப் பார்க்க) இத்தகைய அணுகுமுறை அளவீட்டு மதிப்பீட்டின் பெறுபேறுகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், அத்தகைய சூழலில் வழமையாக அங்கீகாரமற்றதாக்குதலுக்கான அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்படவில்லை எனப் பொருள்படும்.

நிதிச் சொத்து ஒன்றின் திருத்தமானது, பதிவழிப்புச் செலவில் அளவிடப்படும் போது அல்லது குஏழுஊஐ நிதிச் சொத்து ஒன்றின் அங்கீகாரமற்றதாக்குகின்ற விளைவை ஏற்படுத்தாத போது, வங்கியானது, குறிப்பிட்ட சொத்தின் ஆரம்ப வினைத்திறன் வட்டி விகிதத்தைப் பயன்படுத்தி, நிதிச் சொத்து ஒன்றின் கொண்டு செல்லும் தொகையை மீளக் கணிப்பிடுவதுடன், அதனால் அடைகின்ற சீர்படுத்தலை இலாப அல்லது நட்டத்தில் திருத்தத்தின் மூலம் எழுந்த ஆதாயம் அல்லது நட்டமாக அங்கீகரிக்கும். மிதக்கும் வீதத்திலான நிதிச் சொத்துக்களுக்காக திருத்தத்தினால் ஏற்படும் ஆதாயம் அல்லது நட்டத்தை மதிப்பிடுவதற்கு, ஆரம்ப வினைத்திறன் வட்டி வீதம் பயன்படுத்தப்படுவதோடு, அது, திருத்தம் மேற்கொள்ளப்பட்ட போது உள்ள நடப்பு சந்தை நியதிகளைப் பிரதிபலிக்கும் வகையில் சீராக்கப்படும். உறப்பட்ட ஏதேனும் கட்டணங்கள் அல்லது செலவுகள் மற்றும் திருத்தப்பட்ட நிதிச் சொத்தின் கொண்டு செல்லும் தொகையைச் சீராக்க பெறப்பட்ட திருத்தக் கட்டணங்கள் என்பன திருத்தப்பட்ட நிதிச் சொத்து ஒன்றின் எஞ்சிய காலப்பகுதி மீது பதிவழிப்புச் செய்யப்படும்.

கடன் பெறுநரின் சிக்கலான நிதி நிலைமை காரணமாக, அத்தகைய திருத்தம் மேற்கொள்ளப்பட்டால், அதனால் பெறப்பட்ட ஆதாயம் அல்லது நட்டம் சேத நட்டங்களுடன் சமர்ப்பிக்கப்படும். வேறு சந்தர்ப்பங்களில், வினைத்திறன் வட்டி வீத முறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்ட ஒரு வட்டி வருமானமாகச் சமர்ப்பிக்கப்படும்.

## நிதிச் சொத்துக்களை இல்லாமல் ஆக்குதல்

வங்கியானது, கடன் அல்லது பாதுகாப்பு ஒன்றைச் சேகரிக்க முடியாது எனத் தீர்மானிக்கும் போது, கடன் அல்லது ஒரு முதலீட்டுப் பாதுகாப்பை சேத நட்டங்களுக்கான தொடர்புபட்ட கொடுப்பனவுகளுடன் இல்லாமல் ஆக்கும். இத்தகைய தீர்மானம் ஒன்று, கடன் பெறுநர் ஒருவர் அல்லது வழங்குநர் ஒருவர், தனது கடப்பாட்டை இனிமேலும் பூர்த்தி செய்ய முடியாது அல்லது அப்பிணையத்தில் இருந்து வருகின்ற வருவாய்கள் முழுமையான வெளிப்பாட்டை மீளச் செலுத்தப் போதுமானதாக அல்லாத போது போன்ற கடன் பெறுநரின் நிதி நிலைமையில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன என்ற தகவல்கள் கருத்திற் கொள்ளப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும். சிறிய அளவிலான மீதியைக் கொண்ட தரப்படுத்தப்பட்ட கடன்களுக்கான இல்லாமல் ஆக்கும் தீர்மானங்கள் பொதுவாக தயாரிப்பு சார் கடந்தகால நிலுவை அந்தஸ்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

## 3.D) நிதிப் பொறுப்புக்கள

## 3.D.i) நிதிப் பொறுப்புக்களை அங்கீகரித்தலும் அளவிடுதலும்

### ஏற்புடைய கொள்கை

ஆரம்ப அங்கீகாரத்தில் வங்கியானது, ஏனைய நிதி உத்தரவாதங்கள் மற்றும் கடன் பொறுப்புக்கள் தவிர்ந்த நிதிப் பொறுப்புக்களை பின்வரும் வகுதிகளாக வகைப்படுத்துகின்றது:

- பதிவழிப்புச் செலவில் நிதிப் பொறுப்புக்கள். மற்றும்,
- இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிப் பொறுப்புகள்.

### நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தலும் அதனையடுத்த அளவீடுகளும்

நிதிப் பொறுப்புக்களின் அடுத்து வரும் அளவீடு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

- பதிவழிப்புச் செலவில் நிதிப் பொறுப்புகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத வங்கியினால் வழங்கப்பட்ட நிதிப் பொறுப்புக்கள், ஏதேனும் தள்ளுபடி அல்லது கையேற்பு மீதான கட்டுப்பணம் மற்றும் நுஐசு இன் இன்றியமையாத பாகமாக அமைகின்ற கட்டணங்கள் மற்றும் செலவுகளையும் கருத்திற் கொண்டு, நேரடியாக ஏற்பட்ட பரிவர்த்தனைச் செலவுகளையும் கூட்டி அங்கீகரிக்கப்படும். ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் இந்த நிதிப் பொறுப்புக்கள் வினைத்திறன் வாய்ந்த வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அளவிடப்படும். சேமிப்பு வைப்புக்கள், நடைமுறை வைப்புக்கள், நிலையான/கால வைப்புக்கள், அழைப்பு வைப்புக்கள், வைப்பு மற்றும் தொகுதிக்கடன் சான்றிதழ்கள் என்பன உள்ளடங்கலாக வைப்புப் பொறுப்புக்கள் நிதிப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்டு பதிவழிப்பு செலவில் அளவிடப்படும்.

EIR பதிவழிப்பு வருமானக் கூற்றில் “வட்டிச் செலவாக” உள்ளடக்கப்படும். நுஐசு பதிவழிப்புச் செய்முறையினூடாக பொறுப்புக்கள் அங்கீகாரமற்றதாக்கப்படும் போது, வருவாய்களும், நட்டங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

- இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாய பெறுமதியில் நிதிப் பொறுப்புக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாய பெறுமதியில் உள்ள நிதிப் பொறுப்புக்கள், இடர் முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வழித்தோன்றல் பொறுப்புக்களையும் உள்ளடக்கும்.

## 3.D.ii) நிதிப் பொறுப்புகளை அங்கீகாரமற்றதாக்குதல்

நிதிப் பொறுப்புகளின் ஒப்பந்தம்சார் கடப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகும் போது வங்கி அதனை அங்கீகாரமற்றதாக்கும்.

## 3.D.iii) வங்கிகள், வாடிக்கையாளர்கள், வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் மற்றும் ஏனைய பெறப்பட்ட கடன்களுக்கு நிலுவையாக உள்ளவை

வங்கி, எதிர் திறத்தவர்களுடன் ஒழுங்குபடுத்தல்களுக்கான ஒப்பந்தம்சார் ஏற்பாடுகளுடன் ஈடுபடுகையில், நிதிப் பொறுப்புகள் அங்கீகரிக்கப்படும். இது, பொதுவாக, வர்த்தகத் திகதியன்று நடைபெறுவதுடன், ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும். இப்பெறுமதியானது, சாதாரணமாக உறப்பட்ட நேரடியான பரிவர்த்தனைச் செலவுகளின் தேறிய பெறப்பட்ட பிரதிபயனாக அமையும். பெறப்பட்ட வருவாய்கள், நேரடியாக ஏற்பட்ட பரிவர்த்தனைச் செலவுகள் மற்றும் குறிப்பிட்ட கருவியின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுள் காலம் மீதான குறைக்கப்பட்ட தொகை என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைப் பதிவழிப்பு செய்வதற்காக பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி, பதிவழிப்புச் செலவில் நிதிப் பொறுப்புகள் மீதான தொடர்ந்து வரும் அளவீடு மேற்கொள்ளப்படும்.

## 3.D.iv) ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வுகளால் எழும் தற்போதைய சட்ட மற்றும் ஆக்கபூர்வமான கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கு பொருளாதார நன்மைகளின் வெளிப்பாடொன்று சாத்தியப்படும் சந்தர்ப்பத்தில் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுவதுடன், கடப்பாட்டுத் தொகையில் நம்பகமான மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

## 3.D.v) விற்பனையும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளும்

முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட விலையில் (“repos”), மீள்கொள்வனவு செய்யப்படும் கடப்பாட்டின் நிபந்தனைக்கு உட்பட்டு, பிணையங்கள் விற்பனை செய்யப்படுமாயின், அவை நிதி நிலைமைக் கூற்றில் தொடர்ந்து இருப்பதோடு, பெறப்பட்ட பிரதிபயன் தொடர்பில் பொறுப்பு ஒன்று பதிவு செய்யப்படும்.

விற்பனை செய்வதற்கான (“reverse repos”) பொறுப்பில் கொள்வனவு செய்யப்படும் பிணையங்கள், நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படாததுடன், அதற்காகச் செலுத்தப்பட்ட பிரதிபயன் “பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - வங்கிகளுக்கான மற்றும் வங்கிகளிடமிருந்து பெற வேண்டிய கடன்கள் மற்றும் பெறுவனவுகள்”, “பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - வாடிக்கையாளர்களுக்கான மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து பெற வேண்டிய கடன்கள் மற்றும் பெறுவனவுகள்” இதில் எது பொருத்தமானதோ அங்கு பதிவு செய்யப்படும். விற்பனை மற்றும் மீள் கொள்வனவு என்பனவற்றுக்கு இடையிலான வேறுபாடு, வட்டியாகக் கருதப்பட்டு, வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான உடன்படிக்கையின் ஆயுட்காலம் மீது அங்கீகரிக்கப்படும்.

## 3.E) ஓய்வூதிய நன்மைகள்

### ஓய்வூதிய நன்மைகள்

வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள், ஏற்பாடுகள் வங்கியில் இணையும் ஊழியர்களுக்கு காலத்திற்குக் காலம் வழங்கப்படும். 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக் கொடைச் சட்டத்தின் கீழ் ஓய்வூதியப் பணிக் கொடைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியைப் பூர்த்தி செய்த விசேட பணியாட்களுக்காக ஊடீநுரு வின் கூட்டு உடன்படிக்கைக்கு அமைவாக, விசேட பணிக்கொடைக்கான ஏற்பாடு காப்பீட்டுக் கணிப்பீட்டு மதிப்பீட்டின் அடிப்படையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும். இது, நிதிநிலைமைக் கூற்றின் ஏனைய பொறுப்புகள் என்பதன் கீழ் வகைப்படுத்தப்படும்.

### ஓய்வூதிய நலன்கள் - வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

#### ஊழியர் சேமலாப நிதியம்

வங்கி மற்றும் ஊழியர்கள் ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளங்களில் முறையே 12% மற்றும் 8% வீதங்களில் இலங்கை மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படும் ஊழியர் சேமலாப நிதிக்குப் பங்களிப்புச் செய்கின்றனர்.

#### ஊழியர் நம்பிக்கை நிதியம்

வங்கியானது ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தில் 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையினால் முகாமை செய்யப்படும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது.

## 3.F) ஏனைய பொறுப்புக்கள்

கட்டணங்கள், செலவுகள் மற்றும் பணிக்கொடைக்கு / ஓய்வூதியத்திற்கு மற்றும் ஏனைய ஏற்பாடுகளுக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் ஏனைய பொறுப்புக்களில் உள்ளடங்கும். இந்தப் பொறுப்புக்கள், நிதி நிலைமைக் கூற்றினது திகதிக்கு செலுத்த எதிர்பார்க்கப்படும் தொகைகளாகப் பதிவு செய்யப்படும் பொறுப்புக்களாகும்.

## 3.G) வருவாயை அங்கீகரித்தல்

### கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வருமானம்

வருமானம் வினைத்திறன் வாய்ந்த வட்டி வீத முறையைப் பயன்படுத்தி சகல கடன்களுக்கும் அட்டுறு அடிப்படையில் வட்டி வருமானமானது அங்கீகரிக்கப்படும்.

### காலம் கடந்த வட்டி வருமானம்

ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் தவிர்ந்த, ஏனைய கடன்களுக்கு காலம் கடந்த கடன் தவணைப் பணத்தினது நிலுவையாகவுள்ள வட்டியானது காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்படும்.

## 3.H) செலவுகள்

### வைப்புக்கள், கடன்கள் மீதான வட்டி

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) இல. 39 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக கடன்கள், பயனுள்ள வட்டி வீத முறையில் அங்கீகரிக்கப்படுவதுடன், வருமானக் கூற்றிற்கு அறவிடப்படும்.

### ஏனைய செலவுகள்

செயற்பாடுகள் மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்கள் என்பனவற்றை செயற்றிறன் வாய்ந்த முறையில் பராமரிப்பதற்காக செயற்பாட்டிற்காக உறப்படும் சகல செலவுகளும் குறிப்பிட்ட வருடத்திற்காக இலாபம் அல்லது நட்டத்தைப் பெறுகின்ற வருமானக் கூற்றில் அறவிடப்பட்டு அட்டுறு முறையில் அங்கீகரிக்கப்படும்.

## 3.I) வரி விதிப்புக்கள்

வருமான வரிச் செலவு நடப்பு வருடத்தின் வரியின் தேறிய தொகையையும், பிற்போடப்பட்ட வரியையும் உள்ளடக்கும். பங்குரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புபடுகின்ற அளவிற்கு தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் வருமான வரி செலவுகள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். பங்குரிமையுடன் நேரடியாகத் தொடர்புபடுபவை பங்குரிமையில் அங்கீகரிக்கப்படும்.

### நடப்பு வரி

நடப்பு வரிச் சொத்துக்களும், வரி பொறுப்புகளும் நடப்பு வருடத்திலும், கடந்த வருடங்களிலும் வரி விதிப்பு அதிகார சபைகளுக்குச் செலுத்த வேண்டிய அல்லது அச்சபைகளில் இருந்து மீளப் பெற எதிர்பார்க்கின்ற தொகைகளை உள்ளடக்கும். வரி வீதங்களைக் கணிப்பிடுவதற்கு, நிதி நிலைமைக் கூற்றுத் திகதியன்று இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவு இயற்றப்பட்ட வரி விதிப்பு வீதங்கள் மற்றும் வரி சட்டங்கள் என்பன பயன்படுத்தப்படும். அதன்படி, வரி விதிப்பிற்கான ஏற்பாடானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரி சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கமைவாக வரிவிதிப்பு நோக்கங்களுக்காகச் சீராக்கப்பட்ட, ஆண்டிற்கான இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும். இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இல.12 "வருமான வரிகள்" வேண்டப்பட்டவாறு குறிப்பு வரி செலவின் முக்கியமான பாகங்கள், பயனுள்ள வட்டி வீதங்கள் மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் செலவுகள் ஆகியவற்றுக்கு இடையிலான மீள் இணக்கம் என்பவற்றையும் உள்ளடக்குகிறது.

### ஒத்திவைக்கப்பட்ட வரி

ஒத்தி வைக்கப்பட்ட வரி, பொறுப்பு முறையின் மீது வழங்கப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களில் அவை அங்கீகரிக்கப்பட்டுள்ள போது, அதிலிருந்து வருகின்ற காலப்பகுதியில் இருந்து வருமான வரி நோக்கங்களுக்காக அவை அனுமதிக்கப்படுகின்ற போது, வரி விளைவுக்காக ஏற்படும் நேரங்களிலான வித்தியாசம் வரி விதிப்புக்கான நடப்பு விகிதத்தில் ஒத்தி வைக்கப்பட்ட வரி ஏற்பாடாக உள்ளடக்கப்படும்.

### நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி

ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளும், வருமான வரியும் செலுத்தப்படுவதற்கு முன்னரான கணக்கியல் இலாபம் நிதிச் சேவைகள் மீது பெறுமதி சேர்க்கப்பட்ட வரியைக் கணிப்பிடுவதற்கான அடிப்படையாக அமைவதுடன், இது, குறித்துரைக்கப்பட்ட விகிதங்களின் மீது கணிப்பிடப்பட்ட தேய்மானத்திற்காக சீராக்கப்படும். பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கான தொகை நிதிக் கூற்றுக்களில் தரப்பட்ட காலப்பகுதிக்கான இலாபத்தைத் தீர்மானிப்பதில் அறவிடப்படும்.

## 3.J) காசுப் பாய்ச்சல் கூற்று

நிதிப் பாய்ச்சல் கூற்றானது, "காசுப் பாய்ச்சல் கூற்றினை" தயாரிப்பது தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் (டுமுயுளு) இல.7 "நேரடி முறையைப்" பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில், செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான மொத்தக் காசுப் பெறுகைகளும், காசுக் கொடுப்பனவுகளும், முதலீட்டு நடவடிக்கைகளும், நிதிச் செயற்பாட்டு நடவடிக்கைகளும் அங்கீகரக்கப்பட்டுள்ளன. காசின் அறிந்த தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய மற்றும் பெறுமதியில் காசும் காசையொத்தவையும் குறுகிய கால, அதிக திரவத்தன்மை வாய்ந்த பெறுமதி மாறக்கூடிய முக்கியமற்ற இடர் அபாயத்தைக் கொண்டிருக்க வேண்டுமெனும் நிபந்தனையுடன் கூடிய முதலீடுகளை உள்ளடக்குகின்றன.

## 3.K) நியதிச்சட்ட ரீதியான ஒதுக்க நிதியம்

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களின் கீழ், சகல பங்கீடுகளுக்கும் முன்னர், வரிக்குப் பின்னரான தேறிய இலாபத்தில் 5மூ ஆனது சட்டபூர்வ ஒதுக்க நிதியத்திற்கு மாற்றப்படும்.

## 3.L) பொது ஒதுக்க நிதி

ர்னுகுஊ வங்கி சட்டத்தின்படி பங்கிலாப பங்கீட்டுக்கு முன்னர், வரிக்குப் பின்னரான தேறிய இலாபத்தில் 10மூ ஆனது, பொது ஒதுக்க நிதியத்திற்கு மாற்றப்படும்.

## 3.M) சாதாரண பங்குகள் மீதான பங்கிலாபம்

சாதாரண பங்குகள் மீதான பங்கிலாபமானது, ஒரு பொறுப்பாக அங்கீகரிக்கப்படுவதுடன், அவை ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படும் போது, பங்குரிமையில் இருந்து கழிக்கப்படும். வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் அங்கீகாரத்திற்காக நிதிநிலைமைக் கூற்றில் பணிப்பாளர்களால் பரிந்துரைக்கப்பட்ட சாதாரண பங்குகள் மீதான பங்குலாபங்கள் நிதிக் கூற்றுகளில் பிரத்தியேகமாக வெளிப்படுத்தப்படும்.

## 3.N) பங்கொன்றிற்கான ஆதாயம்

